சாதக அலங்காரம்



SARASVATI MAHAL • சரசுவதி மகால் • நூலகம் • தஞ்சாவூர் • தமிழ்நாடு

T.16450

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 428

சாதக அலங்காரம்

சோதிட சாத்திரம்
செய்யுள், தொகுப்புரை, விளக்கத்துடன்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்
கலைமாமணி
இயற்றமிழ் ஆராய்ச்சிக் கலைஞர், தமிழக வரலாற்று அறிஞர்
கரந்தைப் பேராசிரியர் **சி. கோவிந்தராசனார்**

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்

2007

விலை ரூ. 160 - 00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சாதக அலங்காரம்
பதிப்பாசிரியர்	: சி. கோவிந்தராசனார்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	: 428
மொழி	: தமிழ்
பதிப்பு	: மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: சூலை, 2007
தாள்	: 14. 2 கி. கி. சேஷசாயி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 648
படிகள்	: 1000
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	: ராப்பர் கட்டு
பொருள்	: சோதிடம்
விலை	: ரூ. 160/-

வெளியீட்டாளர் முகவுரை

தூரிகை மகால் நூலகம் தன்னிகரற்ற சுவடி நிறுவனம் ஆகும். பன்மொழி வளர்ச்சிக்கும் பதிப்பியல் மேம்பாட்டுக்கும் இந்நிறுவனத்தின் பங்களிப்பு, தனித்துக் குறிப்பிடத்தக்க நிலையில் அமைந்துள்ளது. சுவடிகளின் அடிப்படையில் இந்நூலகத்தால் பதிப்பிக்கப் பெறும் பல்துறை நூல்களும் பயனுரு படைப்புகளாகத் திகழ்ந்து வருகின்றன.

'ஆய கலைகள் அறுபத்து நான்கனுள்' ஒன்றாக ஆன்றோரால் கொள்ளப்படுவது சோதிடக் கலையாகும். அக்கலையினைப் பொருளாகக்கொண்டு பொலிவதே இங்கு பதிப்பிக்கப் பெற்றுள்ள '**சாதக அலங்காரம்**' என்னும் இந்நூலாகும்.

சோதிடவியல் என்னும் துறை சார்ந்த இந்நூல் அத்துறையில் ஈடுபாடுடைய அன்பர்களுக்கு நல்விருந்தாக அமைவதோடு, அத்துறை தொடர்பான ஆய்வுச் சிந்தனை யோர்க்கும் நல்ல களனாக அமையும் படைப்பாகும்.

நூலின் மூலம் செய்யுள் வடிவில் அமைந்திருப்பதால், பாடல் தரும் பொருளைத் தொகுப்புரையாகவும், விளக்கவுரையாகவும், கருத்துரையுடனும் கூறப் பட்டிருப்பதுடன் ஏற்ற செய்யுள்களுக்கு அருஞ்சொற் பொருளும் தரப்பட்டுள்ளது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர்(பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினியில் வெளிவர கணினி பிரிவில் பணிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ந. முத்துக்கருப்பன், எம். ஏ.,
மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ.)
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
8-7-2007

முகவுரை

உலகில் பலகோடி சீவராசிகள் தோன்றி இயங்குகின்றன. அவற்றுள், ஆறறிவு படைத்த மானுடப் பிறப்பே சிறந்ததாக விளங்குகின்றது. மானுடரின் வாழ்க்கையில் நிகழும் அனைத்துச் செய்திகளையும் அறியும்படி அமைந்ததே சோதிடக்கலையாகும். இக்கலை, கணக்கிடும் கால நுட்பங்களினாலேயே உருவாக்கப் பட்டுள்ளது.

மானுட சீவன் தாயின் கருவுருவில் இருந்து வளர்ந்து, நிறைமாத நாளில் பூவுலகத்திற்கு வரும் காலத்தினை அறிந்து, அக்காலத்திற்குரிய நாழிகையில், அன்று சூரியன் சென்று நிலவும் இராசியினையே பிறப்பின் தோற்றத்திற்குரிய இலக்கினமாக அமைத்துக் கணிப்பிடப் பெறுகின்றது. இதுவே சோதிடக்கலைக்குரிய இராசி மண்டலத்தில் சீவனின் விதியினை அறிந்து கொள்ளுதற்குரிய முதலிடமாகும். இராசி மண்டலத்தினைப் பண்டைய பேரறிஞர்கள் பன்னிரண்டு இராசிகளாக வகுத்துக் காட்டியுள்ளார்கள். பன்னிரண்டு இராசிகளில் சீவன் பிறக்கும் இலக்கினம் முதலாக, ஒன்பது கிரகங்களையும் இருபத்தேழு நட்சத்திரங்களையும் அளவிட்டு அறிமுகப்படுத்தியுள்ளனர். இவற்றின் அமைப்புடன் கால இயக்கங்களில் தோன்றித்தொடரும் தெசாபுத்திகளையும் கொண்டு, நூலறிவு, அனுபவத்திறன், வாக்கு வளம் ஆகியவற்றால், சீவனின் வாழ்க்கையில் நிகழும் அனைத்துப் பலன்களையும் சோதிடர்கள் திட்டமாக அறிந்து கணக்கிட்டு பலன் கூறுவது நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

இவ்வகையில், நாட்டில் காலக்கணக்கறிந்த பெரும்புலவர்களால் கணித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சோதிட நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் பலவுள்ளன. அவற்றின் தெளிவான சோதிட நூலே சாதக அலங்காரமென்னும் இந்நூலாகும்.

இந்நூலின் மூலமான சுவடியினை ஓலைகளில் பிரதி செய்த வல்லுநர்கள், நூலில் செய்யுள் வடிவில் கூறப்பட்டுள்ள சோதிட விளக்கங்களுள் தெளிவானதும் நேர்முகமான கிரகபலன்களைக் கூறுவதுமான செய்யுட்களை மட்டும் கண்டறிந்து தொகுத்துள்ளனர். அம்முறையில் அமைந்துள்ளதும் செய்யுள் வடிவில் உள்ளதுமான சாதக அலங்காரச் சுவடியே, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திலுள்ள சுவடியாகும்.

இந்நூலில் சொல்லப்பட்டுள்ள சோதிட அமைப்பினை அறிமுகம் செய்யலாகும் நூலாசிரியர் கீரனூர் நடராசன் என்பவராவர். நூலின் தோற்றப்பகுதியில், ஆசிரியர் விநாயகர் துதிமுதலாக அவையடக்கச் செய்யுளும் கூறியுள்ள பாயிரப்பகுதி குறிப்பிடத்தக்கதாகும். தொடர்ந்து, ஒருவரின் வாழ்க்கையில் அமைந்த சுற்றம், மனைவி, மக்கள், பெற்றோர், சீவனம், வாழ்நாள், லாப நட்டங்கள், யோகங்கள் ஆகியவற்றைப் பொதுவிதியான் கூறும் பாவகப் பலன்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

நூலின் மூலம், செய்யுள் வடிவில் அமைந்திருப்பதால், பாடல் தரும் பொருளைத் தொகுப்புரையாகவும், விளக்கவுரையாகவும் கருத்துரையுடனும் கூறப்பட்டிருப்ப துடன் ஏற்ற செய்யுள்களுக்கு அருஞ்சொற்பொருளும்

தரப்பட்டுள்ளது. முக்கியமான இடங்களில் கிரகங்களின் இராசி அமைப்பினை எவ்வாறு கண்டு பலன் காணவேண்டும் என்ற நுட்பமும் கூறப்பட்டுள்ளது. கிரகங்களின் பொதுவான விபரங்கள் அனைத்தும் உரை விளக்கப் பகுதிகளில் கூறப்பட்டுள்ளன. சென்ன கால இராசி முதல் பன்னிரண்டு இராசிகளிலும் அமைந்த கிரகங்களின் நிலைகளைக்கொண்டு அறியும் பலன்கள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை யெல்லாம் நன்கு படித்தறிந்து அனுபவத்துடன் சிந்தித்து, நிகழ்வுகளைப் பக்குவமாக எடுத்துக் கூறுவதே சோதிடக்கலையாகும்.

கிரக நட்சத்திரங்களாலும் தெசாபுத்தி நிமித்தமாகவும் மக்களுக்கு வினைப்பயனாக வரும் நன்மை தீமைகளை அறியலாகும். தீமையானவற்றுக்குப் பரிகாரம் செய்தல், சாந்தி செய்தல் என்பது அவரவர் மனத்தால் கொள்ளும் நம்பிக்கையேயாகும். மனிதன் சான்றோர்கள் கூறியுள்ள நீதிநெறிமுறைகளைப் பின்பற்றி வாழாமல், ஆணவத்தாலும் கோபத்தாலும் துன்பங்களை ஆக்கிக்கொண்ட மனிதன் தன்னை உணர்ந்து தூய நெறியில் வாழ்வதே பரிகாரங்களில் சிறந்த பலனைத்தரும் பக்குவமாகும். முழுமுதற் கடவுளாகிய விநாயகப்பெருமானை நாளும் மனத்தூய்மையுடன் வழிபட எல்லாத் துன்பங்களும் குறையுமென்பது உண்மையாகும். தெய்வ நம்பிக்கையுடன் செய்யும் காரியங்களைச் சிந்தித்து நன்மை தீமை உணர்ந்து நல்லனவற்றைச் செய்தலும் பேசுதலும் வாழ்க்கையில் கிரகங்கள் சாந்திபெறுவதற்குரிய உபாயமாகும். தனக்குத்தானே நிலைமையை உணர்ந்து எத்தகைய செலவுமின்றி நல்ல வழியில் செயல்படுவதே குற்றங்களும் நட்டங்களும் நேராமல் இருப்பதற்குரிய நிகழ்ச்சியாகும். இதனைச் செய்யாமல் காலத்தினையும்

கைப்பொருளையும் செலவிடுவதால் கிரகதோஷங்கள் நீங்காது. தன்னம்பிக்கையும் உறுதியும் உண்டானால் தெய்வ பாதுகாப்புத்தானே அமையும். பெருமைக்கும் சிறுமைக்கும் தத்தமது கருமமே காரணமாகும் என்னும் கருத்துரை கவனிக்கத்தக்கது.

சாதக அலங்காரமென்னும் இந்நூலினைப் படித்தறிந்து மனிதப் பிறப்புக்குரிய பல்வேறுபட்ட செய்திகளையும் யாவரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்கு இச்சோதிட சாத்திரம் எளிமையானதும் தெளிவானதுமாகும். நூல், பல காலங்களில் நவீன முறையில்அச்சானதால் சில குறைகள் அமைந்ததாயினும், சோதிடச் செய்திகள் முழுமையாகவே இடம் பெற்றுள்ளன.

நன்றியுரை

சாதக அலங்காரமென்னும் இந்நூல் அச்சாவதற்கு அனுமதியளித்தருளிய, முன்னாள் நூலக இயக்குநரும் தஞ்சை மாவட்ட ஆட்சியாளருமாகிய திரு. முனைவர் மூ. இராசாராம் இ. ஆ. ப., அவர்கட்கும், இந்நாள் மாவட்ட ஆட்சியாளரும் நூலக இயக்குநருமான திரு. சி. கோசலராமன், இ. ஆ. ப., அவர்கட்கும், நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்கட்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்கட்கும், எனது கையெழுத்து நூல் முழுவதையும் நுண்ணாய்வு செய்தளித்துள்ள அறிஞர். திரு. தேதியூர் கிருஷ்ணமூர்த்தி சாத்திரிகள் அவர்கட்கும், பலகாலும் முயன்று அச்சியற்றியுள்ள தஞ்சை சன் ஆப்செட் அச்சக நிறுவனத்தார் அவர்கட்கும் எனது அன்பார்ந்த நன்றியுரித்தாகும்.

நூலாசிரியர் வரலாறு

சாதக அலங்காரமென்னும் இந்நூலினை எழுதிய ஆசிரியர், கீரனூர் நடராசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தமிழிலும் வடமொழியிலும் புலவராக இருந்துள்ளார். தமிழில் விருத்தச் செய்யுள்களை சோதிடத்திற்கு ஏற்ப எழுதும் திறனுடையவர் என்பதனை, நூலினைக்கொண்டு அறியமுடிகின்றது. இவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றினை முழுமையாக அறிதற்குரிய சான்றுகள் இல்லை. ஆயினும், சைவ சமயத்தவராகவும், சைவாகம நெறி முறைகளை நன்கு கற்றவராகவும், சிவ தீட்சை பெற்றவராகவும், சோதிட நூல்களைக் கற்றவராகவும் இருந்துள்ளதனை நூலின் பாயிரச் செய்யுள்களால் அறிய முடிகின்றது. இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தருமபுரத்தைச் சார்ந்த கீரமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவரென்பதைக் குறிப்பாக அறியலாகும். இவர் வாழ்ந்திருந்த காலம், இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு மேற்பட்டதாகும்.

கரந்தைப் பேராசிரியர் **சி. கோவிந்தராசனார்.**

சாதகாலங்கார நூல் தரும் பொருள் அட்டவணை

பொருள்	பக்கம்
விநாயகர் முதலான தெய்வங்களின் காப்புரையும் வணக்கமும், குரு வணக்கமும்	1
நூலின் வரலாறு, பாயிரம் அவையடக்கம் ஆசிரியர் வரலாறு	9
சாதகம் 12 இராசிகளின் பொதுப் பலன்கள்	28
சீவனின் பிறப்பியல், குழந்தையின் பிறப்பு பற்றிய செய்திகள்	49
இராசிகளின் வடிவம் நிறம் முதலியன	57
கிரகங்களின் சாதி, கதிர், தெய்வநிலை முதலியன	61
கிரகங்களைப் பற்றிய அனைத்து வகைத் தகுதி, நிலை விளக்கம்	64
மூலத்திரிகோணம், இலக்கின நிச்சயம் கணிக்கும் முறை முதலியன	82
குழந்தை பிறந்த மனை, சூழல் பிறசெய்திகள்	89
சோதிடம் கணிக்கவும் சொல்லவும் விதி முறைகள்	101
இராசிகளில் கிரகங்களின் தகுதி, பார்வை	105
நட்சத்திரங்களின் வடிவம், இராசிகளின் வடிவம் முதலியன	111
பாலாரிட்டம், பிற அரிட்ட விபரங்கள்	117
27 நட்சத்திர பலன்கள்	134
பிறந்த நட்சத்திர பலன்கள்	165
இராசிகளில் சந்திரன் நின்ற பலன்கள்	182

பொருள்	பக்கம்
சனி கிரகம் 12 இராசிகளில் நின்ற பலன்	194
சந்திரனைக் கிரகங்கள் பார்த்த பலன்	197
இராசிகளில் கிரகபாத அங்கிச சேர்க்கை	205
லக்கின ராசியைக் கொண்டு ஆயுள் முதலியன அறியும் வகை	218
சந்திரா ராசிப் பலன்கள்	233
முக்குணவேளையில் பிறந்த பலன்	237
கிரக உச்ச நீச்ச ராசிப் பலன்கள்	240
கிரக மாலிகா யோகங்கள் பல - விளக்கம்	245
தீமையான யோகங்கள் - விளக்கம்	286
சென்ன லக்கினப் பலன்கள் - பலவகை	291
குழந்தை கொடிசுற்றிப் பிறத்தல், தந்தை, பிற வகையான சென்னம்	312
சென்ன கால தெசா புத்தியில் உபகிரகங்களின் பலன்கள்	316
இரண்டாமிடம் கண் பற்றிய விபரங்கள்	321
இரண்டாமிடம் வாக்கு, யோகம் - பலன்கள்	335
செல்வம் பற்றிய யோக விபரங்கள்	348
புதையல் கிடைக்கும் யோகம், பிற யோகங்கள்	358
மூன்றாமிடம் தரும் பல வகைப் பலன்கள்	371
நான்காமிடம் மனை, தாய் - பலவகைப் பலன்கள்	381
ஐந்தாமிடம் - புதல்வர், பூர்வ புண்ணியம் - பிற	418
ஆறாமிடம், பகை, நோய், அலி, பிற அறிதல்	448
ஏழாமிடம், மனைவி பற்றிய விபரங்கள்	457

பொருள்	பக்கம்
களத்திர தோஷங்கள் - பலன்கள்	481
எட்டாமிடம் - ஆயுள், நோய் - பிற பலன்கள்	493
12 - இராசிக்குப் பலன்கள் - நன்மை தீமைகள் வாழும் கால அளவு, கண்டம் அறிதல்	529
ஒன்பதாமிடம் - பாக்கியம், தந்தை, சுபகாரியம் முதலியன	558
பத்தாமிடம், கர்ம பலன்கள் முதலியன - விளக்கம்	574
பதினோராமிடம் - தொழில்,லாபம், ஆதாயம்	586
பன்னிரண்டமிடம் - விரையம், சுகபோகம், தாழ்வு மறதி, அறிதல்	590
பெண்கள் சாதகம்- வடிவம், குணம், ஞானி பெண் அழகி, போகி, பாவி முதலியன அறிதல்	604
அரசி, அடிமை, இசை, நாட்டியம் கைத்தொழில் கலைகளறிபவள்	617
குணம், தகுதி, உயர்வு, கற்புடையவள்	618

சாதக அலங்காரம்

காப்புரை

விநாயகர் வணக்கம்

நீருலவு மிப்புவியில் நரர்சனன காலையினில்
நின்றநவ கிரகத்தான் (நிகழ்பலா பலன்கள்)
ஏருலவும் வடமொழியைச் செந்தமிழ்ச் சாதக நூல்
எனத்தமியேனுரைக்கவெழில் வேதமுனிவன்
பாருலகில் குருகுலப் பாரதக்கதையை வழுத்தப்
பயிலும்வட கிரிமிசையில் பரிந்துமருப் பதனால்
சீருலவ வரைந்தருளும் தெய்வவா ரணத்தின்
செழுங்கமலத் தாளிணையைச் சிர(ந்தனில்)த்தில் வைப்பாம். /

தொகுப்புரை:

அளவிடற்கு அரிதான நீரால் நிறைந்து விளங்கும் கடலால் சூழப்பட்ட இந்த மண்ணுலகத்தில் தோன்றும் மானுடரின் ஜனனம் என்னும் பிறப்புக் காலத்தில், ஜென்ம லக்கினராசி முதலாகக் கணிப்பிடுகின்ற பன்னிரண்டு இராசிகளில் அக்கால நிலையில் நின்ற நவகிரகங்களால் நிகழ்த்தப்படுகின்ற, நன்மை தீமை யோகம் முதலாகிய பலாபலன்களை எழுச்சியுடன் நிலவும் வடமொழியிலான சோதிட நூலினை, தமிழில் சாதக நூல் என்ற பெயரில், நான் உரையோடு கூடிய நூலாகச்செய்ய, அழகிய வேதவியாசர் பரந்த இவ்வுலகத்தில் குருகுலத்தாரின் பாரதக்கதையைச் சொல்ல, பரவி உயர்ந்துள்ள மேருமலையின் மீது விருப்புடன் தனது கொம்பொன்றினைக் கொண்டு, சிறப்பெலாம் நிகழ எழுதியருளும், தெய்வீகம் நிறைந்த யானைமுகக் கடவுளின், வளமையான தாமரை மலரைப்போன்ற பாதங்களைத் தலைமீது வைத்து வணங்கிப் போற்றுவாம்.

அருஞ்சொற்பொருள்

நீர் உலவு-நீரால் நிறைந்து பரந்துள்ள கடல், நரர்-மானுடர், சனனகாலை-பிறந்த காலம், நவகிரகம்-ஒன்பது

கிரகங்கள். அவை: சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகியவை. வடமொழி-சமஸ்கிருதம், சாதக நூல்-சாதக அலங்காரம் என்னும் நூல், பாருலகில்-பரந்துள்ள இவ்வுலகத்தில், குருகுலப் பாரதக்கதையை-குருகுலத்தில் தோன்றிய பாண்டவர்கள் துரியோதனாதியர் கதையை, வழுத்த-நிறைவாக எடுத்துச் சொல்ல, பயிலும்-நிலையாகத்தங்கும், வடகிரி - வடபால் உள்ள மேருமலையில், பரிந்து-விருப்பமுடன், மருப்பு-தந்தமெனும் கொம்பு, வாரணம்-(தெய்வீகத்தால் சிறந்த) யானை, விநாயகப் பெருமான்.

கருத்துரை:

நூலாசிரியர் கூறும் கடவுள் - விநாயகர் வணக்கம்

விளக்கவுரை:

கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞன், தான் எழுதத்தொடங்கிய நூல் எத்தகைய குறைகளுமில்லாமல் நிறைவு பெறுவதற்குத் தான் வணங்கும் தெய்வத்தை முதலாவதாகப் போற்றி வணங்குதல் நூல் மரபாகும். இதுவே, காப்புரை என்னும் பெயரால் நூலின் முதற்செய்யுளாகவும் அமையும். இந்நூலாசிரியர் யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானைப் போற்றி வணங்கிக் காப்புரை செய்கின்றார் என்பதாம்.

ஆடவல்லான், சிவகாமசுந்தரி, சத்திக்கணபதி முருகன் ஆகிய தெய்வங்கள்-வணக்கம்

வைத்தபல பூதபே(வே)தங்க ளேழு வகையின்
மன்னுமியிர்க்குயிராய்மணியொளிகளிலங்கும்
பைத்தலைவாளரவரசன்வியாக்கிர மாமுனியும்
பணியநடம் புரியுமலர் (பரமன்) பங்கயத்தாள்தொழுதே
கைத்திகிரி நெடுமால்தந் தருள்விரிஞ்சன் மகவான்
கருணையுற வணங்குசிவ காமசவுந் தரிசொல்
சத்திக்கண பதிக்கிளையோ னமரர்(உறு)சிறை மீட்டருளும்.
சண்முகவே லாயுதன்பொற் சரணமலர் தொழுவாம். 2

தொகுப்புரை:

உண்மை அறிந்த சான்றோர்களால் இன்னின்ன தன்மையுடையவை இவை, என்று குறித்துச் சொல்லப்பட்டதான, உலகில் அமைந்த பல்வேறுபட்ட பூதங்களின் வேறுபாடுகளாகும். ஏழுவகைப்பிறப்பின், நிலைபெற்றுத் தொடரும் மானுட உயிர்களுக்கு உயிராய், இரத்தினங்களின் ஒளிகள் சேர்ந்து ஒளிரும் பசிய தலையையுடைய பாம்புகளுக்கு அரசனான ஆதிசேடனின் தலையுடன் கூடிய பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத மாமுனிவன் ஆகியோர் நேரில்கண்டு மகிழ்வுடன் வணங்க, அம்பலத்தில் ஆனந்த நடனம் செய்யும் நடராசப் பெருமானின் மலர்களில் சிறந்த தாமரையினைப் போன்ற தாள்களைத் தொழுதே, கையில் சக்கராயுதத்தை உடைய திருமால், அவரது உந்திக்கமலத்திலிருந்து தோன்றிய பிரமன், தேவேந்திரன் ஆகியோர் கருணையைப் பெறுவதற்கு வணங்கும் தில்லைச் சிவகாமசுந்தரி (அம்மை குறித்துச் சொன்ன) சக்திக்கணபதி எனும் பெயருடைய விநாயகர், கணபதிக்கு இளையோனாகிய முருகன் என்ற பெயரோடு, தேவர்களைச் சிறை மீட்டு அருள்செய்ததனால், சண்முகவேலாயுதன் என்ற சிறப்புப்பெயரினையும் பெற்றவன் ஆகியோரின் பொன்போன்ற, (மேன்மையுடன் அடியார்கள் சரணம் புகத்தரும்) தாமரை மலர் போன்ற திருப்பாதங்களையும் தொழுவோம்.

அருஞ்சொற்பொருள்

வைத்த-சான்றோர், உலக இயற்கையின் பாகுபாட்டினை உணர்ந்து எழுதிவைத்த நூல்கள், பலபூதம்-இடையில்லாமல் பெருக்கமுடன் இணைந்து நிறைந்து மண்ணுலகும் விண்ணுலகுமாகி, இவற்றில் நிலவும் எல்லாவகையான உயிர்களுமாகி, இவை அனைத்தும் செயல்படுவதற்குரிய ஆற்றல்களாகிய பல பூதங்கள்.

இவற்றுள், மூலமானவை ஐந்து பூதங்கள்: அவை நீர், நெருப்பு, காற்று, நிலம், வானம் என்பனவாம். இவற்றின் அங்கங்களாகவே பிரிந்து செயல்படுவன பலவகைப் பூதபேதங்களாகும்.

எழுவகை-உலகில் தோன்றியுள்ள சீவராசிகள் ஏழுவகைப் பிறப்புடையவை. அவை, தேவர், மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்ந்துசெல்வன. நீரில் நீந்துவன, புல், பூண்டு முதலியனவாம்.

மன்னும் உயிர்க்கு-உலகில் நிலைத்துத் தொடரும் மானிடவுயிர்க்கு, நடம்-நாட்டியம், நடனம், பங்கயம்-தாமரை, திகிரி-சக்கராயுதம், நெடுமால்-உலகை அளப்பதற்குப் பேருரு எடுத்த திருமால், விரிஞ்சன்-பிரமன், மகவான்-இந்திரன், சிவகாம சவுந்தரி-உமாதேவி, சக்திக்கணபதி-சிதம்பரம் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள விநாயகரின் சிறப்புப் பெயர், அமரர்-தேவவுலகத்தவர், தேவர்கள்.

கருத்துரை:

உலக மானுட உயிர்கட்கு உயிராய் விளங்கும் தில்லை அம்பலத்தில் எழுந்தருளி ஆனந்த நடனம் புரியும் நடராசப்பெருமானை வணங்குகின்றேன். சிவகாம சுந்தரி, திருமால், பிரமன், இந்திரன், விநாயகர், முருகப்பெருமான் ஆகிய தெய்வங்களையும் வணங்குகிறேன் என்பதாம்.

விளக்கவுரை:

எழுவகைப் பிறப்பும் அவ்வவற்றின் வகையும் (1) தேவர், (2) மக்கள் (3) விலங்கு (4) பறவைகள் (5) ஊர்வன (6) நீர்வாழ்வன (7) தாவரங்கள் இவற்றின் பிறப்பு (யோனி) பேதங்கள் எண்பத்து நான்கு நூறாயிரம். அவையாவன:

தேவர்	-	பதினான்கு நூறாயிரம்
மக்கள்	-	ஒன்பது நூறாயிரம்
விலங்கு	-	பத்து நூறாயிரம்

பறவை	-	பத்து நூறாயிரம்
ஊர்வன	-	பதினோரு நூறாயிரம்
நீர்வாழ்வன	-	பத்து நூறாயிரம் (நீந்துவன)
தாவரம்	-	இருபத்து நூறாயிரம் (அபிதான சிந்தாமணி)

சமயக்குரவர் வணக்கம்

உம்பர்தொழும் கனகசபை பார்வதிநா தர்தாமும்
நன்றென்னுந் தில்லைமூ வாயிரத்தி லொருவன்
அம்புயல்வா விகள்சூழ்கஞ்சனூ ராதிபன்
அருள்சுரந்து பொழிகருணை யாண்ட கோவய்யன்
நம்பியின்மெய் யடியார்கள் பஞ்சமல மகற்றி
ஞாதுறுஞா னம்நேய நாட்டமுற வருளி
செம்பதுமைத் தாளுதவும் பரன்தரும புரத்தில்
திருஞான சம்பந்தன் திருவடியுந் தொழுவாம். 3

தொகுப்புரை:

தேவர்கள் தொழுகின்ற தில்லையம்பதியிலுள்ள பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள உமாதேவியின் தலைவரால் நன்மை உண்டாகும் என்னும் நம்பிக்கையுடன் தில்லை என்னும் சிதம்பரத்தில் வாழ்கின்ற அந்தணர்களாகிய தீட்சிதர்கள் மூவாயிரவரில் ஒருவராகவும், அழகிய நீர்நிலைகள் சூழ்ந்த கஞ்சனூர் என்னும் சிற்றூரின் தலைவராகவும், தெய்வ அருள் சுரந்து வழங்கும் கருணையினை அனுபவிப்பவருமாகிய கோவய்யன் என்பவரையும்,

தம்மை உறுதியாக நம்பினோராகிய மெய்யடியார்களின், ஐந்து இந்திரியங்களினால் உண்டாகும் தீமைகளை நீக்கி, தன்னை உணர்தலால் அறியப்பெறும் ஞானமானது பக்தி நெறியில் தொண்டாற்றுதலால் அருள்செய்து, செம்மையான தெய்வத்திருமேனிகளின் தாளினை விரும்பிப்பணியும் தருமபுரத்தில் வாழ்பவருமாகிய திருஞானசம்பந்த தேசிகரின் திருவடிகளையும் தொழுவோம்.

அருஞ்சொற்பொருள்

உம்பர்-தேவர், கனகசபை-சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலம் என்னும் ஞானசபை, பார்வதிநாதர்-உமாதேவியின் தலைவர், மூவாயிரவர்-தில்லை நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்யும் தொண்டினையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டு வாழும் மூவாயிரம் தீட்சிதர்க ளாகும் அந்தணர்கள், புயல்-ஆகுபெயரால் நீர் என்பதாகும். வாவி-குளங்கள், கஞ்சனூர்-கஞ்சனூர் என்னும் சிற்றூர். நம்பின்-நம்பிக்கையின், நட்பின், பஞ்சமலம்-ஐந்து வகைப்படும் பெரும் பாவங்கள், செம்பதுமை-சிறந்த திருமேனிகள்.

கருத்துரை:

தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரையும், அவருள் ஒருவராகக் கஞ்சனூரில் வாழ்ந்த கோவய்யரையும், தருமபுரம் திருஞான சம்பந்த தேசிகரையும் தொழுவோம் என்பதாம்.

விளக்கவுரை:

தீட்சிதர் மூவாயிரம்-தில்லையம்பதியில், பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்யும் தொண்டினையே தங்களின் வாழ்க்கையாகக் கொண்டு, தொன்றுதொட்டு மூவாயிரவர் என்னும் எண்ணிக்கையுடன் குறிக்கப்பெறும் பஞ்ச ஆசாரங்களில் சிறந்த அந்தணர்கள்.

கஞ்சனூர்-சோழநாட்டில், மயிலாடுதுறைக்கு மேற்கே உள்ளதோர் சிற்றூர்.

தருமபுரம்-சோழநாட்டிலுள்ள சைவசமய மடங்களிலொன்று உள்ள ஊர். சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த தில்லைவாழ் அந்தணருள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியாருக்கு உபதேசம் செய்தருளிய மறைஞான சம்பந்த மூர்த்திகள் வாழ்ந்திருந்த மடாலயமே தருமபுர ஆதினமாகும். இத்தலத்திற்கு எழுந்தருளிய

திருஞானசம்பந்தர், தமது பதிகத்தினை யாழ்முறி என்னும் பண்ணில் பாடியுள்ளார். இச்சிவத்தலம் திருமயிலாடுதுறைக்குக் கிழக்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

குருவணக்கம்

வாதமுதற் பலசமைய வகைநூலாகமங்கள்
மன்னுசிவ சமயசாத் திரவுண்மை பலவும்
தாமுமிக வுணர்ந்தடியார் பரிபாக மறிந்து
தயவுடனேதிருநோக்கார் சஞ்சிதங்க ளகற்றி
ஏமவிதிப் படிசமய போதமுத லுரைத்தே
ஓரெழுத்தி லஞ்செழுத்தி னுண்மையு மெய்யுயிரும்
பூமலியுஞ் சேவடிகாட்டி யருள்பொன்னார்
புகழ்ஞானப் பிரகாசன்பொன்னடியைப் பணிவாம். 4

தொகுப்புரை:

நிலைபெற்ற சிவத்தை முழுமுதற்கடவுளாகக் கொண்ட மார்க்கம் இரண்டனுள், அகமார்க்க சமயத்தின் பிரிவாகிய வாமம், பாசுபதம், பைரவம், கபாலிகம், மாவிரதம் முதலான பல சமயங்களின் வகையிலான சமய நூல்களில் உருவான ஆகமங்கள் அனைத்தினையும் தாம் தெளிவாக உணர்ந்து, சமய நெறியினைத் தெளிவாக அறியவிரும்பும் மாணாக்கரின், மனப்பக்குவ நிலையினைக் கண்டறிந்து, அதன்பின் தயவுடன் அருள் பார்வை செய்து, அவர்களது அனுபவத்தில் சென்றது போக நின்ற கருமம் ஆகிய சஞ்சிதத்தினைப் போக்கிச் (ஐயங்களை நீக்கி) சைவ சமய நெறிமுறைகளைப் பாதுகாத்து நடத்தும் முறைமையினையும், சமயபேதங்களின் தத்துவக் கோட்பாட்டினையும் உணர்த்தி உபதேசம் செய்து, ஓரெழுத்து என்னும் பிரணவத்தோடு ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சர வெழுத்துக்கள், கிரமமாக மாறி மாறி நின்று பலன்கள் தரும் உண்மையுடன், உடம்பில் நின்றியங்கும் உயிரின் இயல்புண்மையினையும் உணர்த்தி, மங்கலம் பொருந்திய மலர்கள் நிறைந்ததாக

விளங்கும் தனது செவ்விய பாதங்களை மாணாக்கர்கட்குக் காட்டி அருள் செய்து, சைவ சமய குருநாதராகப் புகழ்நிறுவிய ஞானப்பிரகாச சுவாமிகளின் பொன்போன்ற திருவடிகளைப் பணிவாம் என்பதாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஆகமம்-சமய நெறிகளைப் பாகுபாட்டுடன் விளக்கும் நூல், மன்னுதல்-என்றும் குறைவுபடாது நிலை பெறுதல், பரிபாகம்-பல்வேறுபட்ட பக்குவ நிலைகள், தயவு-அன்பு செய்தல், ஏமவிதி-பாதுகாக்கும் நெறிமுறைகள், ஓரெழுத்து-பிரணவமாகும். ஓம் என்னும் எழுத்து, ஐந்தெழுத்து-நமசிவாய-என்னும் ஐந்தெழுத்துக்கள் கூடிய மந்திரம், மெய்யுயிர்-உடம்போடு கூடிய உயிர்நிலை, சேவடி-செவ்விய திருவடிகள்.

கருத்துரை:

நூலாசிரியர், தனது ஞானாசிரியராகிய குருநாதரின் மேன்மைகளைக் கூறுமுகத்தான் வணக்கமும் கூறுகின்றார்.

விளக்கவுரை:

சிவ சமய சாத்திர உண்மையினைப் புலப்படுத்தும் நெறிமுறைகள் பலவாகும். அவற்றுள், அகச்சமயம் சைவத்தினோடு ஆறாகும். சைவாகமங்கள் இருபத்து எட்டாகும். இவை சதாசிவ மூர்த்தியின் சத்தியோ ஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங்களிலிருந்தும் தோன்றியவை என்பர். இவற்றை இரு பிரிவாகக் காண்பர்.

1-10 ஆகமங்கள் சிவாகமங்கள் (சிவபேத-ஆகமங்கள்) எனப்படும்.

11-28 வரை 15 ஆகமங்கள் ருத்ரபேத ஆகமங்கள் எனப்படும். இவை அங்கங்களுடன் அமைந்தவைகளாகும்.

அவையாவன:

1. காமிகாகமம்-அங்கம் 11
2. யோகஜம்-அங்-5
3. சிந்தியம்-அங்-6
4. காரணம்-அங்-7
5. அசிதம்-அங்-4
6. தீப்தம்-அங்-9
7. சூட்சுமம்-அங்-1
8. சகஸ்ரம்-அங்-10
9. அஞ்சுமான்(அம்சுமான்) அங்-12
10. கப்ரபேதம்-அங்-1
11. விஜயம்-அங்-8
12. நிட்சுவாசம்-அங்-8

இவை 12ம் சிவாகமங்கள்

13. சுயம்பு(ஸ்வயம்புவ) அங்கம் 3
14. ஆக்நேயம்(அநில)-அங்-1
15. வீரம்-அங்-13
16. ரௌரவம்-அங்-6
17. மகுடம்-அங்-2
18. விமலம்-அங்-16
19. சந்திரஞானம்-அங்-14
20. (முக)பிம்பம்-அங்-15
21. புரோத்கீதம்-அங்-16
22. இலளிதம்-அங்-3
23. சித்தம்-அங்-4
24. சந்தானம்-அங்-7
25. சர்வோத்தமம்-அங்.-5
26. பாரமேஸ்வரம்-அங்-7
27. கிரணம்-அங்-9
28. வாதுள(ல)ம்-அங்-12

இவை 15ம் ருத்ரபேத ஆகமங்கள்

நூலின் வரலாறு

வடமொழியில் நூல் செய்தவர்கள்

ஆதவன் புங்கவன் வியாசர் பராசர் அத்திரி
ரோமசன் வசிட்டன் அணிமாசிதானும்
போதபவுலகன் யவனன் செவனன் மனு பிருகு
புகழ் சௌனகனாங்கீரன் காசிய கார்க்கியரும்
ஓதிய நாரதர் முதலீரொன்பதின்மர் கூடி
உரைசெய்த நான்கி(லில)க்கத் தைம்பதினாயிரமாம்
நீதிபெருஞ் சோதிடத்தில் தெரிந்தெழுந்தவண்மை
நிறைந்தபொரு ளதனைக் கருத்தில் நினைந்துதானே. 5

தொகுப்புரை:

1. சூரியன் 2 பிரம்மதேவன் 3 வேதவியாசர் 4 பராசரர் 5 அத்திரி 6 உரோமசன் 7 வசிட்டன் இவ்வரிசையில் வந்த

8 மரீசியுடன் 9 ஞானவானான பவுலகன் (பௌருகுதஸன்) 10 யவ னன் 11 சியவனன் 12 மனு 13 பிருகு, புகழ்பெற்ற 14 சௌனகன் 15 அங்கிரஸ் 16 காசிபர் 17 கார்க்கியர் சிறப்பாகச் சொல்லப்பட்ட நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரமாகும். நீதி உரையில் பெரிய சோதிட சாத்திரத்தில், ஆராய்ந்து தெளிந்து வெளிப்படுத்திய உண்மை நிறைந்த கிரகங்களின் பலன்களாகும் பொருள் பாகுபாட்டினை மனத்தில் நினைந்து மதிப்போமானோம்.

அருஞ்சொற்பொருள்

ஆதவன்-சூரியன், புங்கவன்-ப்ரம்மதேவன், வேதவியாசன்-வேதங்களை வகுத்த வியாச முனிவன். புகழ்சௌனகன்-சகல வேத ஆகம சாத்திரங்களையும் நிறைவாகக் கற்றுணர்ந்த வல்லமையால் புகழ்பெற்ற சௌனகன். ஓதிய-சிறப்பாகச் சொல்லப்பட்ட, ஈரொன்பதின்மர்-பதினெட்டுப்பேர் சோதிட சாத்திரங்களைத் தோற்றுவித்தவர்கள். நீதிபெரும்-இன்னதற்கு இது பலன் என்ற மெய்ம்மையில் பெரியதான கருத்தில் எண்ணத்தில்.

கருத்துரை:

சோதிட சாத்திரங்களை உண்டாக்கிய பதினெட்டு ஆசிரியர்களால் சொல்லப்பட்ட கிரக நியதிகளை ஆராய்ந்து, உண்மையறிந்து நிறைவான பலன்களைக் கண்டு, இந்நூலின் வழியாக மக்களுக்கு உணர்க்க நினைத்தேன்.

விளக்கவுரை:

சாதக அலங்காரம் என்னும் இந்நூலினை எழுதிய ஆசிரியர், சூரியன் முதல் நாரதர் வரை பதினெட்டுப் பேர்கள் எழுதி வைத்த கிரகநிலைகளால் காணும், நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் பலாபலன்களையும் படித்து ஆராய்ந்து, அவற்றில் தாம் கண்ட சாரமாகவுள்ள சேர்திட முறைமைகளை மக்களுக்கு உணர்த்துவதற்கு நூலின் வழித்துணிபு கொண்டார் என்பதாகும்.

பதினெண்மர் செய்த சோதிட சாத்திரங்கள் சமஸ்கிருத மொழியில் சொல்லப்பட்டிருப்பதால் அவற்றையெல்லாம் ஆசிரியர் தாம் வடமொழியாகிய சமஸ்கிருதமும் கற்றவராதலின் நன்றாகக் கற்றுத் தெளிந்து, தமிழ்மக்களுக்குத் தமிழ் மொழியில் அவற்றின் சார்பு நூலாக இந்நூலினைச் " சாதக அலங்காரம் " என்னும் பெயரால் எழுதியளித்துள்ளார் என்பதும் அறியப்பெறுவதாகும்.

இதுவுமது

தானசபத சீல லோகித கோத்திரத்தின்
தமிழ்வதிட்டைக் குடிமேவுஞ் சாமசமுத்திரமாம்
மானபரன் திருமாலையங்கார் துணைவன் மேவும்
மறைமுனியா ராவமுதன் வரமெனு நாரணையன்
தேனுலவும் பொழில்(வேதன்) வெதிரிவனப் பரமானந்தன்
திருவருள் பெற்றிடுஞ் சச்சிதானந்த சிவயோகி
ஞானபரன் தருகீழமூதூர் மேவும்
நாரணையர் இவர்மூவர் நவின்ற வடமொழியின் 6

தொகுப்புரை:

1. தானம் பெறுதற்குரிய மேன்மையும், அதற்கமைந்த மந்திரசெபதவங்களும் பெற்ற சீலராகவும், லோகித கோத்திரம் உடையவரும், தமிழ்நாட்டில் வதிட்டையர் குலத்தோன்றலும், சாம வேதத்தினை நிறைவாக ஓதும் வேதக்கடல் போன்றவருமான மேலான திருமலை அய்யங்கார் என்பவரும்

2. அவருக்குத் துணையாகப் பிறந்தவரும் வேதங்களில் வல்லமுனிவரைப் போன்றவருமாகிய ஆராவமுது என்னும் சான்றோரின் வரத்தால் பிறந்த நாராயணன் என்பவரும், இமயமலைச் சாரலில் உள்ள பதரிவனத்தின் தலைவனாகிய நாராயணப்பெருமாளின் திருவருள்பெற்ற

3. தேன்நிலவிய மலர்கள் நிறைந்த பதரிகாசிரமத்திலுறையும் பரமானந்தனென்பவரின்

திருவருளைப் பெற்றிடும் சச்சிதானந்த சிவயோகியெனும் ஞானவான் தந்தருளியவரும் கீழ மு(த்)தூரில் வாழ்பவருமாகிய நாராயணையர் என்பவரும் ஆகிய

இவர்கள் மூவரும் சொல்லிய வடமொழியிலான சோதிட சாத்திரங்களை:-

அருஞ்சொற்பொருள்

தானம்-பெறுவதற்குரிய அறம், அறப்பொருள் செபம்-மானசீகத்துடன் ஒரு நிலையிலிருந்து தெய்வ மந்திரத்தினை உச்சரித்து ஆன்ம சக்தி பெறும் வழிபாடு. தவம்-ஒரே நினைவும் நிலையும் பெற்றவராகக் குறிக்கோளுடன், தன்னை உணரும் உத்தியுடன், தெய்வமொன்றினைச் சிந்தித்துப் பயன்பெறும் நிலை. சீலம்-குலத்திற்கமைந்த பழக்க வழக்கப் பண்பாட்டினில் சிறந்திருக்கும் ஒழுக்கம். வதிட்டைக்குடி-வதிட்டையர் குடியில் தோன்றியவர். சாம சமுத்திரம்-சாமவேதத்தில் கடலைப் போன்றவர். சிவயோகி-சிவமொன்றே முழுமுதல் கடவுளெனும் மார்க்கத்தில் யோக சித்தி பெற்ற மகான். ஞானபரன்தரு-ஞானத்தால் உயர்ந்தவன் தந்தருளிய

நூல் வழியும் - அமைப்பும்

மொழிகருதி ஆகமசாத்திரங்களும் சோதிடத்தின்
முறைகணித பலபாகம் முழுவதும் காவியமும்
ஒழியாத சமயசாத்திர நல்தருக்க விதியும்
உணருமத்தியார்ச்சுன வேதியனுரைத்தருளும்
பழியாத பல்பாகம் சாதகத்தின் கவிகையும்
பயிலாரூடம் நவநீதம் பாக்கநாதாசிகமும்
அழியாத அட்டவயிச்சரிய விதிப்படியோடு
அலங்கார சாதகத்தின் அடைவும் ஓர்ந்தே. 7

தொகுப்புரை:

சொல்லப்பட்ட வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றின் வழியே அமைந்த சோதிடக்கலைக்குரிய

முறையான கணிப்பும், பலவகை அமைப்புக்களும், ஆகிய முழுவதும், அவற்றிற்கு விளக்கந்தரும் காவியங்களும், உலக வழக்கிலிருந்தும் நீங்காத சமய சாத்திரங்கள், நல்ல தருக்க விதிமுறைகள், ஆகியவற்றுடன் கற்று உணரத்தக்க மத்தியார்ச்சுன வேதியருரைத்திட்ட குறையில்லாத இராசித் தலங்கள் அவற்றின் பலபாகங்கள், சாதகத்தில் கிரகங்களின் கணிப்பில்காணும் கவிப்புகள் ஆகியவற்றால் உணர்ந்துரைக்கும் ஆரூடம், நவநீத சாத்திரம், பார்க்கவாசிகம் முதலான நூல்கள் கூறும் ஆயுள் நிலை, செல்வங்கள் சேரும் காலம், பாக்கியம் ஆகியவற்றோடு சிந்தனை செய்து, இந்த அலங்கார சாதகத்தினை எந்தப் பாகுபாட்டுடன் முறைப் படுத்தி எழுதவேண்டும் என்னும் திட்டத்தினையும் கருத்தில் அறிக.

அருஞ்சொற்பொருள்

சுருதி-நாத ஒலியுடன் பயிலும் வேதங்கள், முறை கணிதம்-சோதிட பலாபலன்களை அறிவதற்குக் கணிக்கும் வழிமுறைகள், தருக்க நூல்கள்-சந்தேகம் நீங்குவதற்கு ஞாயங்கள் வழி வினா விடையாகக் கூறப்பட்ட அறிவியல் நூல்கள். கவிகை-இராசிகளில் நிற்கும் கிரகங்களின் கதிர் நேர்பு. ஆரூடம்-நட்டம் முட்டுப்பாடு ஆகியவற்றை மானசீகக் கணிப்பினால் உணர்ந்து உரைக்கும் சோதிடவகை, நவநீதம், பார்க்கவாசிகம்-வடமொழியிலுள்ள சோதிட நூல்கள் . அட்ட ஐசுவரியம்-கருவிலே திருவுடைமை, கல்வி, மிகுசெல்வம், வாகனங்கள். மனை-மனைவி, மக்கள், சுற்றம், புகழ் முதலியன. அடைவு-சோதிட நூலிற்குரிய கணிப்பில், முறைமைகளை வரிசைப்படுத்தி, பல்வேறுபட்ட நிலைகளில் ஒன்றுக்கொன்று தொடர் நிலையில் அடைவாக எழுதும் விதிமுறை.

கருத்துரை:

சமய சாத்திரங்கள் தருக்கநூல்கள் ஆரூடமுறைமை ஆகியவற்றோடு பிற நூல்களையும் கற்றுணர்ந்த சாதக அலங்காரமென்னும் பெயரிலமைந்த நூலினை, எந்த எந்தப் பாகுபாட்டமைப்பில் எழுத வேண்டும்மென்பதைத் திட்டப்படுத்தி என்பதாம்.

விளக்கவுரை:

சாதகக் கணிப்புகள் அமைந்ததாகப் புதிதாக நூலொன்றினை உருவாக்குவதாயின், ஆசிரியரின் வடமொழியிலும், தமிழிலும் அமைந்த முன்னோர் நூல்களின் முறை வழிகளைக் கற்றுத் தேர்ந்து தான் எந்த முறையில் (நூல்களின் முறைவழிகளைக்கற்றுத்தேர்ந்து தான் எந்த முறையில்) நூலினை எழுதவேண்டும் என்பதை முன்னதாகவே மதிப்பீடு செய்து மனத்தில் நூலின் முழுவமைப்பினை உருவாக்கிக் கொள்ளுதல் தேர்ந்து தெளிந்த திறனாகும். இம் முறையிலேயே இந்நூலாசிரியர், தாம் கற்றுணர்ந்த நூல்கள் அனைத்தினையும் புலப்படுத்துவதுடன், தான் எழுதவிருக்கும் சாதகநூலின் அசைவுமுறையினை மனத்தில் உருவாக்கம் செய்து கொண்ட சிறப்பினையும் கூறுகின்றார்.

தருக்க நூல்கள்:

சந்தேகமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு, உரிய தக்க பதிலை ஞாயங்களின் வழியேதெளிவாக எடுத்துரைத்து நிறைவு காட்டும் பதில் ஆகியவை பலவழித்துறைகளில் அமைந்துள்ள நூல்கள். அட்ட வயிச்சரியம்-இரண்டு சொற்களாகவுள்ள இதனை, அரிட்டம், ஐசுவரியம் என்றும் பிரித்துக் காட்டலாகும். ஆயினும் சுவடியில் அட்ட வயிச்சரியம் என்றே வழக்குச்சொல்லால் குறிக்கப்பட்டிருத்தலினால், வயிச்சரியம் என்பதனைத் திருத்தி அட்டவைசுவரியம் என்று கொள்ளப்பட்டது.

கருவிலே திருவுடைமை-சாதகன் பிறப்பதற்கு முன்னர்த் தாயின் கருவிலே உள்ளபோதே, வாரிசாகப் பெறுவதற்குரிய அந்தஸ்து, செல்வம் ஆகியவற்றைப் பெற்றவனாக இருக்கும் நற்பேறு.

அறிந்த நூல்களும், கிரக வணக்கமும்

ஓராசாரம்சாராடபதி (சாராவளி) பாராசரியம்
உயரும்சந்தானதீபிகை பிருகசாதகமும்
சீராரும்சருவார்த்தம் பெறுசிந்தாமணியும்
செப்பிய கேரளம்சம்புநாதம்முதல்தெரிந்தே
பேராரும்பாவங்கள் தோறும்ஆரும்பலனைப்பிரித்து
பிறை கதிர்செவ்வாய்புந்தி பிருகு சனிஅரசன்
கூராரும்வாளெயிற்றம்முதல்வோரைத் தொழுதே
கூறுகிறேன்அவரருள்நான்கொண்டுதானே. 8

தொகுப்புரை:

ஓராசாரம், சாராவளி, பாராசரியம், உயர்ந்த சந்தானதீபிகை, பிருகச்சாதகம் ஆகிய நூல்களுடன், சிறப்பமைந்த சருவார்த்த சிந்தாமணி மலையாள நாட்டில் சொல்லப்பட்ட கேரள சோதிடம் (தேவகேரளம் எனும் நூல்) சம்புநாதம் ஆகியவற்றையும் தெரிந்து, அவற்றில் பெருமை பொருந்திய பன்னிரெண்டு இராசிகளின் இடப்பலன்களோடு பொருந்திய பலாபலன்களைப் பிரித்தறிந்து கொண்டு, சந்திரன் முதலான ஒன்பது கிரகங்களையும் தொழுதே (ஒன்பது கோள்களின்) சாதக நூலாசிரியர்கள் அனைவரின் அருளை நான்கொண்டு எழுதலுற்றேன்.

அருஞ்சொற்பொருள்

சர்வார்த்தம் பெறு-சோதிடக்கலைக்குரிய அடிப் படையான செய்திகள் அனைத்தினையும் பெற்றுள்ள நூல். சிந்தாமணி-சோதிட கிரக சிந்தாமணியென்னும் வருஷாதி நூல். செப்பிய கேரளம்-மலையாள நாட்டார் அந்நாட்டவர்க்கென்று சொல்லிய கேரள சோதிடம், ஆரும்-பொருந்திய, பிறை-சந்திரன். கதிர்-சூரியன்.

புந்தி-புதன். பிருகு-குரு. அரசன்-சுக்கிரன். கூறான -உடலில் இருபகுதியாக அமைந்த. வாளெயிற்றும்-கூரிய பற்களை உடைய ராகு கேது என்னும் பாம்புகள். ஏயிறு-பற்கள்.

கருத்துரை:

முன்னோர்கள் எழுதிவைத்த ஓராசாரம் முதலான நூல்களையும், கேரளநாட்டுச் சோதிட முறைமையினையும் (தேவகேரளம் எனும் நூலையும்) படித்தறிந்து, அவற்றால் கூறப்பெறும் கிரக பலாபலன்களைப் பிரித்தறிந்து கொண்டு, ஒன்பது கிரகங்களையும் தொழுது, சாதக நூலாசிரியர்கள் அனைவரின் (அந்த ஒன்பது கோள்களின்) அருளை நான் பெற்ற நிலையில் இந்நூலினைக் கூறுகின்றேன் என்பதாகும்.

விளக்கவுரை:

ஆசிரியர் இப்பாடலில் மேலும் சில சாதக நூல்களைக் குறிப்பிடுகின்றார். சாதகக் கலை அளவிடற்கரிய கடலைப் போன்றது. அதனைப் பல்வேறு அனுபவங்களின் பலனாகக் கண்டு பெரியோர்கள் எழுதிவைத்துள்ளனர். அவற்றையெல்லாம் ஆசிரியர் படித்தறிந்து, அவற்றுள் மக்களுக்கு எளிதாகவுணர்த்தும் முறைகளைத் திட்டமிட்டு எழுதும் நோக்கினைக் கூறியுள்ளார்.

பாடலில், கேரளம் என்று குறிக்கப்படுவது, தேவகேரளம் எனும் நூலாகும். அதனையும் ஆசிரியர் படித்தறிந்துள்ளார் என்பது புலப்படுத்தப்படுகிறது.

சோதிடம் அறிந்து மக்களுக்குப் பயன்படுத்தும் அறிஞர்கள், நவகிரகங்களைப் போற்றி வணங்கும் வழிபாடு உடையவர்கள் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

நூல் நுதலிய பொருள் வகை

கொண்டுதமிழ் சாதகத்தின் அலங்கார மெனப்பேர்
குறித்தரிட்டஞ் சுபம்ராச யோகமு மங்கிசையும்
மண்டியநட்பு ஆட்சி உச்சம்பகை நீசம்பலன்கள்
மருவும்திரேக் காணம் உடன்மூலத்திரிகோணம்

கண்டிடும் வேளை குணங்கள் ஓரை மகாதசையும்
காலச்சக்கர முதல் அங்கிசையாம் சக்கரமும்
மின்டியலக்கின முதலாய்ப் பன்னிரு பாவகத்தில்
விரித்த பலனை வெரிந்து விளம்பலுற்றாம். 9

தொகுப்புரை:

தமிழில் எழுதுவதைக் கொண்டு, நூலிற்குச் சாதகத்தின் அலங்கார (சாதக அலங்காரம் என) மெனப் பேர்குறித்து, மக்களுக்கு உண்டாகும் கெடுதிகள் சுபங்கள் மேலான யோகங்கள், இராசிகளில் சேர்ந்துள்ள கிரகங்களின் நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் ஆகியவற்றால் பொருந்திய திரேக்காணச் சக்கரம், மூலத்திரிகோணம், அளவிட்டுக் காணக்கூடிய வேளையும் அதற்கமைந்த குணங்கள், காலத்தின் நுட்பமாகும். ஓரைக்காலம், சாதகர்க்கு நிகழும் மகாதசைகள் பிறப்பாகிய உதய காலத்திற்குரிய இராசிநிலைச்சக்கரம், கிரகங்களின் அங்கிசைகள் காணும் அம்ச சக்கரம், திரேக்காணம், லக்கினம் முதலாகவுள்ள பன்னிரண்டு இராசிகளில் நிற்கும் கிரகங்களின் அம்சங்கள் ஆகியவற்றால் உணர்த்தும் பலன்களையும் ஆராய்ந்து சொல்லுகிறேன்.

அருஞ்சொற்பொருள்

அரிட்டம்-கெடுதிகள். ராசயோகம்-இராசரீகமான சுபயோகங்கள். மூலத்திரிகோணம்-லக்கினத்திற்கு 5, 9 ஆம் இராசி இடங்கள். வேளை-கிழமைகளில் பகல் இரவு தொடர்ந்து 3 ¾ நாழிகை (1 ½ மணி) அளவினதாகத் தொடரும் கால நிலைகள். ஓரை-நாளுக்குரிய 60 நாழிகையில், 2½ நாழிகை (1 மணி) அளவினதாகக் கணிக்கும் காலநுட்பம். சக்கரம்-பன்னிரண்டு அங்கமாக வரைந்து கொள்ளும் இராசி சக்கரம். (மேடம் முதல் மீனம் வரை) விளம்புதல்-எடுத்துச்சொல்லுதல்.

கருத்துரை:

தமிழில் சாதகநூல் சொல்லுதற்கு உரியதான, இராசி சக்கரம் முதலானவற்றைக் கணித்து கிரகநிலைகளை அறிந்து,

வேளை, ஓரை முதலான கால நிலைகளையும் கண்டு, பலன்களைத் தேர்ந்து சாதகாலங்காரமெனப் பெயரிடப்பெற்ற இச்சாதகநூலிற் சொல்லுகிறேன் என்பதாம்.

விளக்கவுரை:

ஒரு சீவனின் பிறந்த நாளில் குறிப்பிட்ட காலத்தினைக் கொண்டு அன்றைய சூரிய உதயாதி நாழிகை முதலாக சூரிய சஞ்சார இராசிகளுக்குரிய கால நாழிகை அளவுகளை முறையாகக் கணக்கிட்டுப் பிறந்தகால அளவில் உட்பட்ட இராசியினைத் திட்டப்படுத்தி அதுவே சனன லக்கினமாகக் குறிப்பது சோதிட இராசிசக்கர அமைப்பின் முதல் கட்டமாகும்.

பின்னர் அன்றைய நாளில் பன்னிரண்டு இராசிகளிலும் ஒன்பது கிரகங்களும் நிற்கும் இராசியிடங்கள் அறிந்து இராசிகளில் குறித்து நிறைவு செய்யும் போது அன்றைய நிலையில் அமைந்த நட்சத்திரபாகத்தில் இருக்கும் சந்திரனின் இராசியினையும் குறித்த பின்னரே பிற அம்சம் திரேக்காணம் முதலான நட்சத்திரபாகக் கிரகநிலை மண்டலங்களையும் துல்யமாகக் கணக்கிட்டுக் காணல் வேண்டும்.

அவையடக்கம்

உற்றதொகை நான்கிலக்கத் தைம்பதினாயிரமென்
றுரைத்த வடமொழி வெற்பினொரு கடுகளவு
பெற்றிடு மங்கிசை நூற்றிலொரு பங்கின் பொருளைப்
பேருலகில் சாதக நூலெனப் பெயரும் நினைந்து
வெற்றிநெறி செந்தமிழை உணர்ந்தருளும் பெரியோர்
வீற்றிருக்கும் சபைதனில்யான் விளம்பியபுன்தமிழை
குற்றமுரையார் கருணைபுரிவர் அறியாத
குதலைமொழி ஏழையன் இருஞ் சொல்குறித்த தென்றே. 10

தொகுப்புரை:

சாதகப் பலன் கூறும் வழிமுறைகளின் கூடிய தொகை 4,50,000- என்று அளவிட்டுக் கூறும் சமஸ்கிருத மொழியிலான சோதிடக்கலை நூல்களாம் அள்விடமுடியாத

பெரிய மலையிலிருந்து ஒரு கடுகளவானதை நூறுபங்கு செய்து, அதில் ஒரு சிறுபங்கான சோதிட முறைகளைத் தமிழில் சாதக அலங்காரம் என்றே பெயரிட்டு உரைக்கின்றேன்.

சோதிடக்கலையில் வெற்றி நெறியில் உயர்ந்துள்ளவரும், செந்தமிழை நிறைவாகக் கற்றுத் தேர்ந்த பெரியோர்களும் வீற்றிருக்கும் இந்த சபையில் உரைக்கின்றேன்.

நான் கூறியுள்ள குற்றமான தமிழ்ச்சொற்களைச் சான்றோர்கள் யாவரும் கேட்டு, இது யாரும் அறியாத பச்சிளங் குழந்தையின் மழலைச் சொற்களால் கூறிய எளியவனுடையது என்று மதிப்பிடுவாராயினும்,

மிகப்பெரியதும் கடியதுமான சோதிடம் பற்றிய சொற்களைக் குறித்தது இந்தத் தமிழ் சோதிட நூல் என்றதனால் குற்றம் கூறாமல், கருணை செய்வார்கள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

உற்றதொகை-கூடிய தொகை, வெற்பு-அளவிட முடியாத அளவிலுள்ள பெரியமலை, பொருளை-சோதிடப் பலன்களாகும் பொருளை. சபை-ஆசிரியன் நூலை அரங்கேற்றம் செய்த மகாசபை. விளம்பிய-சொல்லிய. குதலை மொழி-மழலைச் சொல். குறித்தது-சோதிடம் குறித்தது என்பதனால்.

விளக்கவுரை:

இப்பாடலால் வட மொழியிலுள்ள சோதிடம் கூறும் சுலோகங்கள் 4,50,000 என்பது புலப்படுத்தப் பெறுகிறது. கடுகளவு-மிகச்சிறிய அளவு. பேருலகில்-பெரிய தமிழ் நாட்டில். வெற்றி நெறி-வெற்றிநெறியில் சோதிடக் கலையில் வல்லவராகவுள்ள சான்றோர்கள் என்று பொருள் விரிவாகும். அறியாத குதலைமொழி-ஒன்றும் அறியாத மழலைச் சொற்கள். நூலாசிரியர் தாம் எழுதிய சாதக அலங்காரம்

என்னும் தமிழ் நூலினை, சிறந்த சோதிடர்களும், செந்தமிழில் வல்ல புலவர்களும் வீற்றிருந்த சபையில் அரங்கேற்றியுள்ளார் என்பது இப்பாடலால் அறியப் பெறுவதாகும்.

நூலை அரங்கேற்றும்பொழுது, நூலாசிரியன் அவையோர்க்குக் கூறும் அவை அடக்கம் இப்பாடல் குறிக்கின்றது.

சாதகமென்பது இன்னதெனல்

குரித்திடும்சாதகமென்பது அவரவர் தம்வினையின்
குணங்களறிந்தயன்விதித்த கொள்கையுளதன்றோ!
மரித்து மவரவர் தமக்குவரும் பலபாவகத்தின்
வகையறிந்து பெரியோர்கள்வழுத்திய சொல்லதனை
பிரித்தறிந்து, சுபம்வருமென்றும்புத்ர போகங்கள்
பின்னசுபம் வரிலதற்குப் (வருமதற்கும்)பிரீதியென்கொலென்று
நெரித்தருமசாத்திரத்தின் விதிசாந்தி செய்தே
நிற்றந்த சுபம் (சுகம்) பெறுவதற்கே நிகழ்த்தியது சாதகமே. //

தொகுப்புரை:

குறித்துச் சொல்லப்பட்ட சாதகப் பலன்களென்பது, மானுடப்பிறப்பில் அவரவர் செய்த நல்வினை தீவினை ஆகிய இருவினையின் குணங்களறிந்து பிரமன் அவரவர்க்கு விதித்த விதியென்னும் கொள்கை உண்டென்பதனை உணர்ந்து கொண்டு, அதன் வலிமையை உணராது விரும்பியபடி செயல்படும் மக்களுக்கு சோதிடக் கணிப்பினால் காணும் பல இராசிகளின் வகையினை அறிந்தும், சோதிடத்தில் தேர்ந்த பெரியோர்கள் நூல்களில் திட்டமாகச் சொல்லும் வழிமுறைகளைப் பாகுபடுத்தி அறிந்தும், அதனால், சுப நிகழ்ச்சிகளாகிய புத்ரர் போகங்களாகிய மேன்மைகள் வரும் என்பதனைச் சொல்வதுடன், அடுத்துக் கிரகநிலைகள் தசா புத்திகள் ஆகியவற்றால் தீமைகளும் நட்டங்களும் நிகழும் என்ற மாறான பலன்களையும் அறிந்து கொண்டு, என்னவாறான தீமைகள் நிகழும் அல்லது தருவனவாகும் என்பதையும் அறிந்து, அவை தணிவதற்கும் நீங்குவதற்கும் பிராயச்சித்தச்

சாத்திரங்கள் கூறியுள்ள நெறிகளின்படியே கிரகங்களுக்குச் சாந்திகள் செய்து தீமைகள் நீங்கும் உபாயத்தினைக் கூறி, மக்கள் நிறைந்த சுகங்களைப் பெறுவதற்கென்றே, அறிஞர்கள் சாதகநூல் செய்தளித்துள்ளனர்.

அருஞ்சொற்பொருள்

சாதகம்-பிறப்பினைப் பற்றிய விளக்கங்களுடன், வாழ்க்கையில் நடைமுறையில் நிகழும் நன்மை தீமைகளையும் யோகங்களையும் கிரகநிலைகளால் கணக்கிட்டறிந்து சொல்லுமுறையுடன் அனுகூலமானதைச் சொல்லும் முறைமை. அவரவர்-ஒவ்வொருவரின். வினையின் குணங்கள்-நல்வினையால் நன்மைகளும் தீவினையால் கெடுதிகளும் வரும் செயல்கள். அயன்-உயிர்களைப் படைத்து அவற்றின் வாழ்க்கையை அளவிட்டு இயங்கவிடும் செயலுடைய பிரமன். மறுத்தும்-மேலும். பலபாவகத்தின்-மேடம் முதலாகப் பன்னிரண்டு ராசிகளாக அளவிடப்பட்டுள்ள பாகுபாட்டின். அசுபம்-தீமைகள். ப்ரீதி-விரும்பத்தக்கது. விதி-விதிப்பு. கூறப்பட்டுள்ள முறைமை. (சாந்தி கருமங்கள்) சாந்தி-கிரகங்களின் கொடுமையினைத் தணிவுசெய்யும் உபாயம்.

கருத்துரை:

சாதகமென்பது, மக்களுக்கு வரும் நன்மை தீமைகளை அறிந்து கூறும் அறிவியலாகும். தீமைகள் வருவதறிந்து அதனைத் தணிவிக்கும் சாந்திகளையும் சோதிடச் சாத்திரப் பிராயச்சித்தப்பகுதிகள் உணர்த்தும்.

சாதக பலன் கூறும் முறைமை

சாதகத்தின் பலன்வழுத்தும் முறைமைகேள்மடவார்
தமக்குமணப் பொருத்தமேதான் பார்க்கு மந்தப்
போதுதசப் பொருத்தங்கள் பார்க்குமுன்னர், ரச்சுப்
பொருத்தம் பார்ப்பதுபோலு, முகூர்த்தங்கள் தமக்கே

ஓதியசக்கரம்தீட்டிப்பிராணன்வேளை
உணர்வதற்குமுன்விதித்தஉடுவுணர்தல்போலும்
நீதியுடன்பலபாகம்பார்ப்பதற்குமுன்னே
நிறைசீவன்தனையறிந்துநிகழ்த்துநெறிசாதகமே. 12

தொகுப்புரை:

சாதகத்தினைக் கொண்டு மக்களுக்குரிய பலவகைப்பலன்களை எடுத்துச் சொல்லும் முறைமையைக் கேளுங்கள். பெண்களுக்குரிய திருமணப்பொருத்தங்களாகும். பத்துவகைப் பொருத்தங்களைப் பார்ப்பதற்கு முன்னதாக, மிகவும் முக்கியமாகிய மாங்கல்யப் பொருத்தமென்னும் நிறைந்த மாங்கல்ய பாக்கியத்தினைக் கண்டறியும் ரச்சுப் பொருத்தத்தினை சோதிடன் முன்னதாகப் பார்ப்பது போலும்.

திருமணம் நிகழ்த்துவதற்குரிய நாளுடன் கூடிய முகூர்த்த காலத்தினை, ஆண் பெண் இருவரின் நட்சத்திரங்களை, நூலில் சொல்லப்பட்ட முறையில் சக்கரம் வரைந்து, பொருத்தம் பார்த்து, அதனால் காணும் பிராணன்நிலை, வேளை இவற்றைத் திட்டமாக அறிவதற்கு முன்னர், அக்காலத்தில் உதித்துள்ள நட்சத்திரத்தினைக் காண்பது போன்றும்.

நேர்மையுடன் சோதிடன் பலன்கள் பல காண்பதற்குரியதாகப் பலபாகங்களையும் ஆராய்ந்து பார்ப்பதற்கு முன்னர், ஆண் பெண் இருவரின் ஆயுள் பாகத்தினைத் திட்டமாக அறிந்து

சோதிடப்பலன்களை முழுமையாக ஆராய்ந்து அறிந்து சொல்லவேண்டிய செய்திகளை முறையாகச் சொல்லுதல் வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

வழுத்தும்-திட்டமாக எடுத்துக் கூறும். பிராணன்-சீவன்நிலை. தீட்டி-வரைந்து. வேளை-நல்ல

நேரம். உடு-நட்சத்திரம். நிறை சீவன்-நிறைந்த ஆயுள் பாகம். நிகழ்த்து நெறி-சொல்லும் வழி முறை.

கருத்துரை:

சோதிடம் பார்த்துச்சொல்லும் நெறி முறைகளை இப்பாடல் உணர்த்துகின்றது. (பாடலில் அறிவிக்கப்படும் பகுதிகட்கு விளக்கங்கள்)

பத்து வகையான திருமணப் பொருத்தங்கள்:

தினப்பொருத்தம்	கணப்பொருத்தம்
மாகேந்திரப்பொருத்தம்	பெண்தீர்க்கப்பொருத்தம்
யோனிப்பொருத்தம்	இராசிப்பொருத்தம்
இராசி அதிபதிப்பொருத்தம்	வசியப்பொருத்தம்
ரச்சுப் பொருத்தம்	நாடிப்பொருத்தம்

இவற்றின் விபரங்களும் இன்ன பிற பொருத்தங்கள் பற்றியும் பிரயோகபாரிசாதம், சாதகசந்திரிகை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன.

சோதிட மாணவர்க்குரிய பண்புகள்

சாதக வாரிதியதனில் சிறுதிவலை அளவும்
சாற்றும் பலபாகமுறுந் தமிழைப் பரன் சொல் பனுவல்,
ஓதியசொற் பலவறிந்து பகர்வதற்கே உரிய
உத்தமசற் குணம் பொறுமை அறிவு நீதி
ஈதல் பலகலைத்தெரிவோர் பெரியோர்தம்மை
எரிர்த்து வாதுரையாமல் இணக்கமுடையனுமாய்ச்
சீதநிறை மதிபோலும் அமுதமிகு வார்த்தை
செறிந்திடு மாணாக்கனுக்கே செப்பலாமே. 13

தொகுப்புரை:

சாதகம் என்னும் பெருங்கடலில், சிறிய துளி அளவாகச் சொல்லப்படும் பலபாகங்களைப் பெற்ற தமிழ் நூல் களையும், சிவபெருமான் நந்திதேவருக்கு உபதேசித்தருளிய சாத்திரங்கள் உரைக்கும் பலபாகங்களையும் அறிந்து சொல்லுவதற்குப் பயிலும் மாணவன், பொருந்திய மேலான

நல்லகுணம், பொறுமை, அறிவு, நேர்மை, வழங்கும் தன்மை, ஆகியவற்றோடு பலகலைகளிலும் வல்லவராக விளங்கும் பெரியோர்களிடம், அவர்களது கேள்விகட்கு, எதிர்ப்பாக வாதிட்டு அகங்காரத்துடன் பதில் கூறாமல், அடக்கம் உடையவனாக, குளிர்ச்சி நிறைந்த முழு நிலவைப்போன்று, பயனுடைய தன்மையான வார்த்தைகளால் பதில் கூறுபவனாக அடக்கமுடன் இருப்பது சோதிடக்கலையில் தேர்ச்சிபெறுவதற்குரிய மாணாக்கனுக்கே உரிய பண்பாடாகும் என்பதைச் சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்

வாரிதி-பெருங்கடல், திவலை-சிறிய நீர்த்துளி, உறுதமிழ்-பொருந்திய தமிழ்ச் சொற்கள். பரன்-சிவபெருமான். பனுவல்-பல்வேறுபட்ட நுட்பங்களை விளக்கும் நூல். சற்குணம்-மேலானகுணம். நீதி-நடுவு நிலைமை. ஈதல்-தான் கற்ற கல்வித் திறனைத் தக்காருக்கு வழங்கும் தகைமை. இணக்கம்-ஒப்புதலாக ஏற்கும் தன்மை. சீதம்-குளிர்ச்சி. மதி-முழுநிலவு. அமுத வார்த்தை-பயனுடைய சொல்.

கருத்துரை:

சோதிடத்தில் அனுபவம் பெறவிரும்பும் மாணாக்கர்க்குரிய நற்பண்புகள் இதனால் கூறப்பட்டது.

விளக்கவுரை:

ஒருவன் சோதிட நூல்களைக் கற்பதனால் மட்டும் நிறைவு பெற்றவனாகக் கருதவியலாது. கிரகங்களால் காணும் பலன்களை அவ்வப்போது ஆராய்ந்து காணும் பலதிறப்பட்ட சாதகங்களால் பெறும் பட்டறிவோடு, நுட்பங்களைத் திட்டமாக அறியும் பயிற்சியோடு, கல்வி கேள்விகளிலும் சோதிடக் கலையிலும் வல்லவராக விளங்கும் சான்றோர்கள் கேட்கும் பலவகையான கேள்விகளையும், பொறுமையாகக்

கேட்டு, வெறுப்புணர்வால் எதிர்த்து வாதாடாமல், அவர்கள் வாயிலாகப் பெறும் பயனை எண்ணி அடக்கமுடன் தான் அறிந்தவற்றை அவர்களிடம் கூறித் தெளிவு பெறும் நற்பண்புகளைப் பெற்றவனாக மாணவர்கள் இருத்தல் வேண்டும்.

சோதிடம் சொல்லும் முறைமை

செப்பியதோர் பலபாகம் பகர்வதற்கே தேசத்தில்
இரவி வீழ்முச்சாய்கை என்னவென்னத் (தெரிந்து)
தப்பறவே நீ(க)ண்டருளும் சரபிண்டத் தொகையின்
தகைமைபெறக் கருதிய இலக்கினங்கள் தமையறிந்தே
ஒப்புடன் லெக்கின சந்து கண்ட காலை
உயர்கடிகா லக்கின சுத்தி உணர்வும் கண்டு
விப்பிரர் சோதிடவல்லோர் சரணம் போற்றி
விளம்பினர்க்குப் பலபாகம் விளம்புந் தானே. 14

தொகுப்புரை:

சோதிட நூல்களில் சொல்லப்பட்ட பலவகைப் பாகங்களையும் அவ்வவற்றிற்குரிய பலன்களையும் முறையாகக் கற்று அனுபவப்படுத்திக் கொண்ட நிலையில், ஒரு மானுட சீவனின் பிறப்புக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு விரிவாகச் சோதிடப்பலன்களைச் சொல்லுவதற்கு, சீவன் தோன்றிய பிரதேசத்தில் சூரியனது உதயம், அத்தமனம், நிழல் அளவுகள் கடந்து சென்ற நேரம் ஆகியவற்றைக் குற்றமில்லாமல் கண்டு, அதிலிருந்து லக்னம் காணப்படவேண்டும். கிடைத்த லக்னத்தின் முடிவும் அடுத்துவரும் லக்கினத்தின் தொடக்கமும் சந்திக்கும் நிலை காணப்பட்டால் உயர்ந்த அளவின் (கடிகாரத்தின்) வாயிலாக லக்னத்தைப் பிழையறக் காணவேண்டும். பின்னர்ச் சந்திர லக்னம் முதலாக அமைந்த கிரகங்களோடு கூடிய இராசி நுட்பமாகிய திரேக்கண மண்டலத்தையும், தசாபுத்தியினையும் அளவிடுவதோடு, கிரக பார்வைகள், கிரக நிலைகள் ஆகியவற்றையும் கணிப்பிட்டு, இன்னதற்கு இன்ன பலன் வரும் அல்லது, தரும் என்பதனைத்

தசாபுத்திகளால் அறிந்து லக்கினம் முதலாக அமைந்த பன்னிரண்டு பாகங்களின் தொகுப்பினைக் கொண்டு தெளிவுகொண்ட நிலையில், சோதிடத்தில் வல்ல ஆசான்களின் பாதங்களை மானசீகமாகப் போற்றி வணங்கி, தனக்குரிய காலபலன்களை அறியவந்துள்ளவருக்குச் சோதிடம் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

அருஞ்சொற்பொருள்

பலபாகம்-பலவகை நோக்கில் காணும் பலாபலன்கள். தேசத்தில்-பிறந்த நாட்டில், அல்லது பிரதேசத்தில். விழுச்சாய்கை-சூரியஉதயக்கதிர்சாய்கை. சரபிண்டம்-ஜீவனது சனனகாலம் வரை சூரியன் காலம் எவ்வளவு என்று கணக்கிடுதல். விப்பிரர்-மேலானவர். சரணம்-பாதங்கள். விளம்புதல்-எடுத்துச்சொல்லுதல்.

கருத்துரை:

சோதிடம் கூறுபவன், சீவனின் பிறப்புக்காலம் (லக்னகாலம்) முதலாகத் தொடரும் வகை முறைகளில் விதிப்படியே பல பாகவங்களையும் பலன்களையும் கணித்தறிந்து திட்டப்படுத்திய நிலையில் கூறவேண்டும் என்பதாம்.

நூலின் காலமும், ஆசிரியர் வரலாறும்

விளம்பியதோர் சகாத்த மாயிரத் தறுநூற்றின்மேல்
எண்பத்தேழு விசுவாவசு வருடந் தன்னில்
களங்கமில்லா வடமொழியைத் தெளிந்து தேர்ந்து
காசினியில் செந்தமிழ்ச் சாதக நூலென்ன
வளங்குலவும் பருவூர் கீரனூர் வாழும்
வள்ளல் சேவடி நாதன் வரவாய் வந்தோன்
உளங்களி கூர்ந்தருள்ஞானயோக நடராசன்
உரைத்தனனிப்பொருளுணர்ந்தோர்க்குண்மைதானே. 15

தொகுப்புரை:

சொல்லப்பட்ட (கடந்துசென்ற) சகாப்தம் ஆயிரத்து அறுநூற்று எண்பத்தேழாம் ஆண்டுக்குரிய விசுவாவசு

வருடத்தில், குற்றமில்லாத சமஸ்கிருதமொழியைத் தெளிவாகக் கற்றுத்தேர்ந்து, உலகத்தில் செந்தமிழில், சாதக அலங்காரம் என்ற பெயரில் நூல் செய்துள்ளேன.

வளங்களெல்லாம் சூழ்ந்துள்ள புருவூரைச் சார்ந்த கீரனூர் என்னும் ஊரில் வாழ்கின்ற, வள்ளல் சேவடிநாதன் அருளிய வரத்தின் பயனாகப் பிறந்தவனும் ஞானயோகத்தில் சிறந்து விளங்குபவனும்

நடராசன் என்னும் பெயருடைய நான் இந்த நூலினை உரைத்துள்ளேன். இந்த நூலின் பொருளை உணர்ந்தவர்கட்கு, சோதிடத்தால் அறியப்படும் வாழ்வியல் உண்மைகள் புலப்படும்.

அருஞ்சொற்பொருள்

விளம்பிய-சொல்லிய. சகாத்தம்-சாலிவாகன சகாப்தம். விசுவாவசு-பிரபவ முதலாகத் தொடரும் தமிழ் வருடங்கள் அறுபதில் முப்பத்தொன்பதாவது வருடம். காசினி-உலகம்.

கருத்துரை:

தமிழகத்தில் பருவூரைச் சார்ந்த கீரனூரில் வாழ்ந்த வள்ளல் சேவடிநாதன் திருவருட்பயனாகத் தோன்றிய நடராசன் என்னும் பெயருடையவர் இச்சாதகாலங்காரம் நூலை இயற்றியவர் என்பதாம்.

விளக்கவுரை:

சகாப்தம்-சாலியவாகன சகாப்தம் என்பதாம். இந்தச் சகாப்தத்தின் தொடர்ச்சியாண்டில்-1687இல், சாதக அலங்காரம் என்னும் இந்தச் சோதிட நூல் எழுதப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் ஞானயோகத்தில் வல்ல நடராசன் என்பவர் என்பது பாடலில் குறிக்கப்படுகிறது. ஞான நூல்களைக் கற்றும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்து தேர்ந்த

நிலையில் யோகப் பயிற்சியும் பெற்றவராக நடராசன் விளங்கியுள்ளார் என்பது பெயருக்கு முன்னருள்ள சிறப்பினால் அறியலாகும். இந்நூலாசிரியர் இந்த நூலினை உருவாக்கிய காலம் கி. பி. ஆண்டில் 1765 ஆகும்.

நூல் முதல் அதிகாரம்
சாதகப் பொது இலக்கணம்
முதலாமிடம் -லக்கினம்
(பிறப்பு-பலன்)

சீர்பெறு சன்மலக்கினத்ததிபர்
சேர்ந்தினி திருந்திடு மந்தப்
பேர்தரு சுபங்கள் மெய்நிறம் மச்சம் (மஞ்சம்)
பெறும்பே றுநிதி பகர்லக்கினமும்
ஏர்பெறும் உபாங்கம் மரு சிந்தித்துளகிலேசம்
இலட்சண(ம்) கீர்த்தி மூர்த்திகளும்
பார்பெறு தீர்க்க வயதுடன்செல்வம்
பகர்தனுத்தானம்என்றுரைக்கும்.. 16

தொகுப்புரை:

சிறப்புப் பொருந்திய (சன்மலக்கினம், அந்த இராசிக்குரிய கிரகம், அந்த கிரகம் சேர்ந்துள்ள இராசி இடம் ஆகியவற்றை ஒரு சேரப்பார்த்து) சன்ம லக்கினத்தால் அறியப்பெறும் சுபங்களாவன, சாதகரின் உடல் (தேகம்), அவரது நிறம், தேகத்திலுள்ள மச்சங்கள், அவரால் பெறுதற்குரியமேன்மை, நிலைத்த செல்வம், (ஆகியவற்றைச் சிறப்பாகச் சொல்லுகின்ற இந்த சென்ன லக்னத்தின் சார்ந்த பலன்களாக) உடலிலுள்ள குற்றங்கள், மனத்திலுள்ள விருப்பம், வருத்தம், ஆகியவற்றுடன் அங்கத்தின் அழகு, (அடையாளங்கள்) பெறும் புகழ், உரிய தெய்வங்கள் முதலானவற்றையும் தனுத்தானம் என்னும் சென்மலக்கினம் உரைக்கும்.

அருஞ்சொற்பொருள்

அதிபர்-லக்கின ராசிக்கு உரியகிரகம், சுபங்கள்-நல்ல குறிப்புச் செய்திகள். மெய்-சரீரம் (உடல்).

ஏர்பெறும்-அழகுபெறும். உபாங்கம்-(உப+அங்கம்) உடல் சார்ந்த பகுதி. மரு-குற்றம். கிலேசம்-மனக்கவலை. இலட்சணம்-அங்கலட்சணம். வாழ்க்கை நிலை. கீர்த்தி-நல்லபெயர். மூர்த்திகள்-அவர் வணங்கும் தெய்வங்கள். (மச்சம் என்ற இடத்தில், மஞ்சம் என்ற பாடம் உள்ளது.)

கருத்துரை:

பிறந்த கால நேரங்களைக் கொண்டு, இராசிச் சக்கரத்தின் முதலிடமாகக் கணிக்கப்படும் லக்கினம் தனுத்தானம் எனப்படும். அதனைக்கொண்டு, சாதகரின் பிறப்பு முதலாக எல்லாவகையான நிலைமைகளையும் கூறலாகும்.

பிறந்த நாளில் குழந்தை தாயின் கர்ப்பத்தானத்திலிருந்து பூமியில் தோன்றிய நேரத்தினைக் கொண்டு, சோதிடன், சூரியனின் அன்றைய இராசி சஞ்சார காலத்தில் கணிப்பிட்டு, இராசி சக்கரத்தில் லக்கின இடமெனும் முதல் பாவமாகக் குறித்திட்ட இராசியைக் கொண்டு, சாதகரின் பிறப்பு பற்றிய விபரங்களுடன் குறிப்பாகவும் பொதுவாகவும், பிறந்த குழந்தையின் ஆயுள், உடல் அழகு அமைப்பு மன நிலை அடையக்கூடிய நலன்கள், துயரங்கள், புகழ், ஆகியவற்றைக் கூறலாகும். இந்த தனு(லக்கின) பாவத்தைக் கொண்டுதான் பிற பதினொரு பாவங்களின் நிலையும் பலாபலன்களையும் அறியலாகும்.

இரண்டாம் இடம்

(வித்தை, புத்தி, வாகனம், குடும்பம், கண்கள்-பலன்)

உலகத்திலும்சலபாக்கியம்தனம்குடும்பம்
ஒளிருசார்நேத்திரம்வித்தை
திரைப்பெருஞ்செல்வம்உடம்புதலைவர்க்குச்(உடன்-புகல்வானுக்குச்)
சத்தியம்கொள்வினைமற்றும்

விரைத்தெழுகமண(ன)ம் புத்தி உத்தியோகம்
மேம்பட்ட விரும்பு செம்பொன்னும்
நிரைத்(றைந்)திடும் நவரத்தினம் இரண்டிடத்தால்
நிலைமைகண்டு உரைசெய்யும் நின்றே. 17

தொகுப்புரை:

சொல்லப்படும் எல்லா நலனும் பொருந்திய வாழ்க்கை, மிகுந்த செல்வம், குடும்பம், பார்வை பொருந்திய கண்கள், கற்கும் கல்வித்துறை, திரண்ட மூலதனமான செல்வம், உண்மையான சொல், செயல், தான் பெறும் கருமங்கள்-செயல்கள் (வியாபாரம்)

இவைகளுடன் எழுச்சிமிகு உணர்வுகள், புத்திநிலை, பதவி, வாழ்க்கையில் உயர்வுபெற விரும்பும் பொன் பொருள், ஆபரணங்களில் வரிசைப்படுத்திப் பொன்னில் பதித்து அணியும் நவரத்தினம், ஆகியவற்றை லக்கினத்திற்கு இரண்டாமிடத்தால், முறைப்படி ஆராய்ந்து அறிந்து எடுத்து நன்றாகச் சொல்லும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

சவுபாக்கியம்-(சௌபாக்கியம்) எல்லா நலமும் கூடிய சுகவாழ்வு. நேத்திரம்-கண்கள். வித்தை-கல்வி. தொழில், கலைத்துறைகள். கமனம்-உணர்வின் செயலாகும் சேர்க்கை, புத்தி-அறிவு நிலை. நிரைத்திடுதல்-வரிசையாக முறைப்படுத்திப் பொன்னில் பதிவித்தல். நவரத்தினம்-மாணிக்கம், முத்து, பவழம், பச்சை(மரகதம்), புஷ்பராகம், வைரம், நீலம், கோமேதகம், வைடூரியம் ஆகியவை.

கருத்துரை:

இலக்கினத்திற்கு இரண்டாம் இடம் என்னும் இராசி வீட்டினைக்கொண்டு அறியும் பலன்களில்

சிறப்புடையன-வித்தை, புத்தி, குடும்பம், கண்கள், பதவி ஆகியவைகளாம்:

இரண்டாம் இடத்தால் சாதகன் பெறும் அறிவு நிலை, கல்வித்துறைகள், தொழில், ஆகியவற்றைச் சிறப்பாகச் சொல்லுவார். மற்றும் இரண்டாம் இடம் குடும்பத்தானம் என்றும் பேசப்படுதலால் குடும்பத்தினைப் பற்றியும், இராசி நாதனின் நிலை, பிற கிரகங்களின் பார்வை, கிரக மண்டலம் 12-ல், இராசிக்குரியவன் பெற்ற இடம் ஆகியவற்றைக்கொண்டு கூறுவதோடு, வாழ்க்கைக்கு முதல் அங்கமாகக் கூறப்பெறும் கண்களைப் பற்றியும் இரண்டாம் இடத்தால் கூறப்படுவதால், இந்த இரண்டாமிடத்தை நேத்திரத்தானம் என்றும் கூறுவர்.

இரண்டாமிடம் நேத்திரத் தானமாகக் குறிப்பது சிறப்பானதாகும்.

மூன்றாம்-இடம்

(தைரியத்தானம், சகோதரத்தானம் - பலன்)

நின்றிடு மூன்றாமிடத்தினிற் நிறைவரன
நிருபரால் உரைசெய்யும்பலன்கள்
வென்றிகொள் போகம்அடிமையாள் சரணம்
வீரியம் சத்துவம் துணைவர்
பெண்டிராதி இனிய காது(நோய்) கர்ணபூஷணம்
புசித்திடும் கலங்கள்
துன்றுவிக்கிரமம் சேவகர் விருத்தி
சூழ்பல தைரியம் சொல்லே. 18

தொகுப்புரை:

இராசிசக்கரத்தில் மூன்றாவது இடத்தில் நிற்கும் இந்த இராசிக்கு உரியவரான கிரகத்தினால் சொல்லக் கூடிய பலன்கள்.

சாதகர்க்கு சிறப்பினைத் தருதற்குரிய அனுபோகங்கள், ஏவினது செய்யும் ஊழியர், தன்னிடம் வந்து சேரும்

செயல்கள், ஆண்மை, மன உறுதிப்பாடு, இளைய சகோதரர் அல்லது நட்பாளர், பெண்கள் ஆண்கள் ஆகியோரின் நோயற்ற காது, காதில் ஏற்படும் நோய், காதுக்குரிய அணிகலன்கள், உணவு உண்பதற்குரிய பாத்திரம், மிருந்த வீரம், பதவியின் உயர்வு.

இவைகளோடு கூடிய பல துணிவான செயல்கள் ஆகியவற்றைச் சொல்வாயாக.

அருஞ்சொற்பொருள்

உரைசெய்யும்-எடுத்துச்சொல்லும் பலன்கள். நிறைவரான-உரியகிரகமாகிய, போகம்-அனுபவித்தற்கு அமைந்த பொருள்கள். வீரியம்-ஆண்மை, துணிவான செயல். சரணம்-தன்னிடம் தானே வந்தடையும் பொருள். மக்கள். (சலனம்-இடம்மாறிச்செல்லுதல்) சத்துவம் -நிலையான செய்கை. செயல்திறமை. பெண்டிராதி-பெண் முதலாக, இனிய காது-நன்றாகக் கேட்கும் காது. (நோய்-காது பற்றிய நோய்) துன்றுதல்-மேலும் வருதல், கர்ணம் -காது. பூஷணம்-அணியும் நகைகள்.

கருத்துரை:

மூன்றாமிடத்தைக்கொண்டும் அந்த ராசிக்குரிய கிரகத்தினைக்கொண்டும், சகோதரங்கள், இன்ப வாழ்க்கை-விபரங்கள், காதுநிலை, காதணி, வீரம் உத்தியோக உயர்வு முதலானவற்றைச் சொல்லலாம்.

விளக்கவுரை:

பாடலில் முதல் அடியினை, மூன்றாம் இடத்து நிறைவரான திருபரால்-என்று முறைப்படுத்திக் கொள்க. அடிமையான்-நிலையாகப் பணி செய்யும் ஆன். சரணம்-என்பது அடைக்கலம் என்று பொருளும் தருதலால், தன்னிடம் ஆதரவு தேடிவரும் மக்கள் என்றும் கொள்ளலாம். ர-ல எழுத்துக்களை வேறுபாடின்றிச் சொல்வதுண்டு. எனவே

சலனம்-தற்காலிக இடமாற்றம் இடம் மாறிச் செல்லுதல் என்றும் பொருள் கொள்ளலாகும். பொதுவாக மூன்றாம் இடம் தைரியஸ்தானம் என்ற குறிப்புடனேயே அனைத்துப் பிற பலன்களையும் சொல்லக்கூடியதாக இருப்பதைக் கொண்டு, நோயில்லாத காது என்பதைக்கொண்டு காதுக்கு வரும் நோய் என்பதையும், புசித்திடும் கலங்கள் என்பதால்-சாப்பிடும் உணவு வகைகள் என்பதையும் கூறலாகும். சேவகா விருத்தி என்பதற்கு அரசாங்க உத்தியோகத்தில் உயர்ந்த பதவியினைப் பெறுதல் என்பது விளக்கமாகும். சூழ் பல தைரியம்-வாழ்க்கையில் அவ்வப்போது வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்பச்சாதகர் பெறும் துணிவான தைரியமான செயல்கள் என்று கொள்ளலாம். சத்துவம்-என்பதைக் கொண்டு, உடம்பின் திடகாத்திரம், சிறந்த முறையில் செயல்படும் உணர்வு என்பதும் பொருந்தும். கர்ணம்-காது. பூஷணம்-அணியும் நகைகள், ஆணாயின் கடுக்கன் வகை, பெண்ணாயின் தோடு முதலியன.

மூன்றாம் இடம், தைரியங்கள், கனிஷ்ட சகோதரம் அகியவற்றையே சிறப்பாக உணர்த்தும்.

நான்காம் இடம்
(மாதுர்ஸ்தானம் - பலன்)

சொல்லியவித்தை வாகனம்சுபங்கள்
சூழ்வியாபாரம்மனையும்
வெல்லும்மேம்பாடும், சவுக்கியம்அன்னை
விரும்புநல்லுறவுமுறையாரும்
நல்லிடம்சேமம்பங்குபால்பூமி
நவில்பசுநிரைகள்மித்திரமும்
வல்லதோர்தேவதானம்இப்பலனே(னெல்லாம்)
வழுத்தும்நான்காமிடங்கொண்டே. 19

தொகுப்புரை:

சொல்லப்பட்ட கல்வித்துறைகளின் தகுதிகள், ஏறிச்செல்லும் வாகன சுபம், செய்யும் சுபகாரியங்கள், தனக்குப் பொருந்திய வியாபாரம், மனையின் தரம், பலன்

தரும் மேலான முயற்சிகள், உடல் நலம், தாய் நலம், விரும்புகின்ற நல்ல உறவினர்கள், முறைமைக்குரிய சுற்றத்தார்கள், தனக்கமைந்த சேர்த்துப் பாதுகாக்கும் செல்வம், உரிமையையும் இலாபத்தையும் பெறும் பங்கு, பால் பாக்கியம், நில புலன்கள் பெருகும் உயர்வு, மங்கலமானவை என்று சொல்லுகின்ற பசுக்கள், நல்லவை செய்யும் சினேகிதர்களும், தெய்வங்களுக்கு செய்யும் தகுதியான கட்டளைகளும் திருப்பணிகளும், ஆகிய இவ்வகையான நல்ல பலன்களை நான்காம் இடத்தைக் கொண்டு சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்

சொல்லிய-முன்னே இரண்டாமிடத்தால் சொல்லப் பட்ட வாகனம்-தனக்குச் சொந்தமாக ஏறிச்செல்லும் வாகனம், வியாபாரம்-எந்தச் சரக்கினைக்கொண்ட வியாபாரம். மனை-குடியிருக்கும் வீட்டின் தகுதி. மேம்பாடு-உயர்வான அந்தஸ்து. அன்னை-பெற்ற தாயினைப்பற்றிய விபரம். நல்லுறவு-நெருங்கிய உறவினர். முறையார்-முறைமைக்கு உரியவரானவர். பூமி-எந்த அளவில் நில புலன்களைப் பெறுவார் அல்லது பெற்றுள்ளார். தேவதானம்-தெய்வங்களுக்குச் செய்யும் தர்மக்கட்டளைகள், வழுத்தும்-மாற்றப்படாத சொல், திட்டமாகச் சொல்லுதல், சேமம்-பாதுகாப்பான அமைப்புகள். நிரை-மந்தை, கூட்டம் . மித்திரம் -அவ்வப் போது நல்ல காரியமாகச் சேரும் சினேகிதம், உதவிகள். வாகனம்-குதிரை, வண்டி, யந்திரவண்டிகள் முதலிய வாகனங்கள். மனை-மச்சுவீடு, கூரை வீடு, சொந்த வீடு, குடியிருப்பு வீடு முதலியன. மேம்பாடு-உயர்வு தரும் முன்னேற்றங்கள். அன்னை-பெற்ற தாய். நல்லுறவு-தனக்கு நன்மைகளைச் செய்யும் உறவினர், நெருங்கிய உறவு. பசுநிரை-பசுக்கூட்டம், பல பசுக்கள். மித்திரர்-முன்னேற்றத்திற்கு உதவும் நண்பர்கள்.

கருத்துரை:

நான்காம் இடத்தினைக்கொண்டு சிறப்பாக, தாயைப்பற்றியும், சுபயோகங்களைப் பற்றியும், அவற்றிற்கான வீடு, தொழில், வருமானம், சேமிப்பு, பாதுகாக்கும் பொருள்கள், சிறப்பாகவும் மங்கலமமமமமமமாகவும் சொல்லப்படும். பசுக்கள், உதவும் அன்பர்கள் ஆகியவற்றைக் கூறலாகும்.

விளக்கவுரை:

நான்காமிடம் கேந்திரத்தானமென்று சொல்லப் படுவதோடு சுபஸ்தானம் என்றும் கூறப்படுகிறது. நான்காம் இராசி, அதிபதி, அங்கிசம், பார்வைகள், நிலைமை ஆகியவற்றைக் கொண்டு சாதகரின் சுபகாரியங்களையும் சுபவாழ்க்கையின் அமைப்புகளையும், தாயைப் பற்றியும் கூறப்பெறும்.

நான்காமிடம் கேந்திரமாகக் கொள்ளுவதால், அதைக்கொண்டும், அதில் நிற்கும் கிரகங்களைக் கொண்டும், அந்த இராசிக்குரிய கிரகத்தினைக் கொண்டும், கிரகங்களின் பார்வை பெற்றால் அதன் நன்மை தீமைகளைக் கண்டும் பலன்கள் சொல்லுவார்கள்.

நான்காம் இடம் சுபங்களை அறிந்து கூறுவதற்கான இடமாகும். மாத்ருஸ்தானம் என்று சிறப்பித்துக் கூறப்படுவதுமாகும்.

ஐந்தாம் - இடம்
(பூர்வ புண்ணிய பலன்)

கொண்டதோர் மாமன் பிதா பெறும் புதல்வர்
கூறு பூர்வம் செய்புண்ணியமும்
தண்டமிழ் வாணர்புகழ் பிரபந்தம்
தரித்திடும் கெர்ப்பம் மந்திரங்கள்
மிண்டிய வித்தை விதாரணம் புத்தி
விளம்புமிப் பலனெல்லாம் அறிந்து
கொண்டுரைத்திடு அஞ்சாமிடங்கொண்டு
கற்றுணர்ந்து அருளும் மாதவரே. 20

தொகுப்புரை:

முற்பிறவியில் செய்த தவத்தின் பயனாக இந்தப் பிறவியில் சோதிட நூல்களை நன்றாகக் கற்று, பலன் கூறும் முறைமைகளை அனுபவத்தாலும் உணர்ந்து அறிந்து சோதிடரானவரே.

இலக்கினத்திற்கு ஐந்தாம் இடத்தால், நெருங்கிய சுற்றமான தாய்மாமன், தகப்பன், பெறும் பிள்ளைகள், முன்னர் செய்துள்ள புண்ணியத்தோடு

தமிழ்ப் புலவர்கள் புகழ்ந்துரைக்கும் பிரபந்த நூல்களால் பெறும் பாராட்டுரைகள், பெற்றிடும் மேன்மைகள், திடகாத்திரம், அறிந்துள்ள (அறியக்கூடிய) மந்திரங்கள், கற்றுள்ள அல்லது கற்கும் கலைத்துறைகள், சாமர்த்தியம், புத்திசாலித்தனம்.

என்று சொல்லப்பட்ட பலன்களை, ஐந்தாம் இடத்தைக்கொண்டு சாதகர்க்கு அன்புடன் கூறுவீராக.

அருஞ்சொற்பொருள்

பிதா-தகப்பனார். கூறு பூர்வம்-அறிந்து சொல்லும் முன்னை ஜென்மம், பூர்வ புண்ணியம். பிரபந்தம்-சிறு இலக்கிய நூல். மிண்டிய-பலவாறாகக் கற்ற. விதாரணம்-(விதரணம்) சாமர்த்திய செயல்கள். தமிழ்வாணர்-தமிழில் பாடல்களால் நூல் செய்யும் திறமை பெற்ற புலவர். அருளும்-அன்புடன் விளக்கமாகக் கூறும்.

கருத்துரை:

பூர்வ புண்ணியத்தானமெனும் திட்டத்தோடு, மாமன், மக்கள், கல்வித்திறன், சாதுர்யங்கள், ஆகியவற்றுடன் முற்பிறவி பற்றியும் ஐந்தாம் இடத்தால் கூறலாகும் என்பர்.

விளக்கவுரை:

ஐந்தாம் இடத்தினால் சோதிடர் கிரகபலன்களையும் திசாபுத்திகளின் நிலைமைகளையும் கண்டு தெளிவு கண்டு,

பூர்வ புண்ணியத்தின் தகுதியினையும் ஒப்பாக வைத்துச் சிந்தித்துச் சாதகர்க்கு வரும் நற்பலன்களை அளவறிந்து சொல்லலாகும்.

ஐந்தாம் இடத்தால் பலன்களை விபரமாகச் சோதிடர் அறிந்து கூறுவதற்கு, இலக்கினம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றுடன் பலனறிந்து தேர்ந்து தெளிவான முறையில் பலன் கூறுதல் மரபாகுமென்று சான்றோர் கூறுவர்.

திரிகோணத்தானம் எனப்படும் கபத்தானமாகிய ஐந்தாம் பாவகத்தால் பூர்வ புண்ணியத்தில் பெறும் நற்பயன்களாகிய பாக்கியங்கள் சிறப்பாகக் கருதப்பெறும்.

ஆறாம் - இடம்
(பகை - பலன்)

மாதுகேள்வியாதி சத்துருபீடை மற்றும்
ஆயுதங்களால் விரணம்
ஓதிய ஞாதியால் வருந்துன்பம் உயுத்தம்
மெய்வதை பொன்தண்டம்
பேதமாங்கள்ளர்பின்மடந்தையரால்
பிறங்கு பாம்பாலும் நோயுளது
நீதிசேர் பிரதானிக்கம் சிறையினில்
செப்பு மாறாமிடம் நிலைக்குரித்தே. 21

தொகுப்புரை:

பெண்ணே கேட்பாயாக, சாதகர்க்கு உண்டாகும் நோய், பகை, நலிவுகள், மற்றும் ஆயுதங்களால் வரும் பெரும்புண், பங்காளிகளால் உண்டாகும் வழக்குத்துன்பம், கொடிய சண்டை, உடம்பில் உள்ள நலிவுநோய், பெருந்தொகை கட்டவேண்டிய தண்டனையான வீண்செலவுகள், மாறான சிந்தனையுடைய கள்வரால் திருடு போதல், பெண் சேர்க்கைகளால் ஏற்படும் பொருள் நஷ்டம், விடப்பாம்பு கடிப்பதால் ஏற்படும் நோய், நீதிமன்றத் தீர்ப்பால் வரும் சிறைவாசம், ஆகிய பலன்களை ஆறாவது இடத்தின் நிலைமையினை ஆராய்ந்து சொல்லுவர் என்றவாறு.

அருஞ்சொற்பொருள்

மாது-பெண். சத்துரு-மறைமுகமான பகைவர். பீடை-எதிர்பாராமல் ஏற்படும் தாழ்வு நிலைகள். விரணம்-ஆறாத காயங்கள். உயுத்தம்-(யுத்தம்) மானவுணர்வாலும் வீம்பாலும் உண்டாகும் சண்டை. மெய்வாதை-சரீரத்திலுள்ள (உடலில் உண்டாகும்) துன்பங்கள். பெருகு பாம்பு-இனப்பெருக்கமுள்ள விடப்பாம்பு. பிரதானிக்கம்-நீதிமன்றத் தீர்ப்பு. நிலைக்கு உரித்து-இடத்திற்கு உரிய பலன்களாகும்.

கருத்துரை:

ஆறாம் இடத்தின் பலன்களாக, நோய், பகை, தாழ்வு, ஆயுதத்தால் பெரும்புண், தாயாதிகளால் வரும் வழக்கு, ஏற்படும் சண்டைகள், உடலில் தொடரும் நோய், தண்டனைக்குச் செலுத்தும் தண்டப்பொருள், பலவகையில் திருடு போதல், பெண்களால் நட்டமும், துன்பமும், விஷக்கடியால் உபாதைகள், நீதிமன்றத் தீர்ப்பால் சிறைவாசம்-ஆகியவை கூறுவதாகும்.

விளக்கவுரை:

பாடலில், வியாதி, மெய்வாதை, நோய் என்று மூன்று இடங்களில் கூறப்படுகிறது. வியாதி என்பதற்கு வரும் நோய்களின் தன்மை என்றும், மெய்வாதை என்பதற்கு உடலில் தொடர்ந்து வருத்தும் வாத பித்த சிலேத்துமத்தால் வரும் துன்பந்தரும் உபாதைகள் என்றும், பாம்பாலும் நோயுளது-என்பதற்கு பாம்பு முதலான விஷமுள்ள சீவராசிகள் தீண்டுவதால் உடலில் தோன்றும் சரும அல்லது சரீர நோய்களும் வருவதாகும் என்றும் கொள்ளலாம்.

மடந்தையால்-என்பதற்குப் பெண் சேர்க்கையால் சாதகன் பெறும் நோய்கள், பொருள் நட்டங்கள், அவமானம் என்றும் கூறலாம்.

பிரதானிக்கம் என்பதற்குக் குற்றவாளி என்று அரசாங்கம் நீதிமன்றத்தில் செய்யும் தீர்ப்பின்படி சாதகன் பெறவிருக்கும் சிறைத்தண்டனை.

பீடை என்பதால், அற்ப செயல்களும், தரித்திரத்தைத் தரும் தாழ்வுகளும் சொல்லலாம். ஆறாமிடத்தால், பகை, நோய்கள், கடன், தண்டனை ஆகியவை கூறப்பெறுதல் சிறப்புடையனவாகும்.

ஏழாம் - இடம்
(களத்திர பலன்)

குறித்திடுங் கமனமணமடந்தையர்க்கும்
குமரர்கள் தமக்கும் நல்லின்பம்
நிறுத்தரில் விபகாரம்தமர்கூட்டம்
நேமியோருறவு சன்மானம்
பிரித்தறிதல் வியாபாரம் மணம்புரிநாள்
பின்மனையாள் வியமடைதல்
மரிகயல் விழியா யேழிடங்கொண்டு
வழுத்துவர் மறைமொழிப் புரவோர். 22

தொகுப்புரை:

மான், கெண்டை மீன் ஆகியவற்றின் விழிகளைப் போன்ற அழகிய விழிகளை உடைய பெண்ணே!

ஏழாம் பாவகமென்னும் இடத்தைக் கொண்டு, மணப்பருவமுள்ள பெண், ஆண் ஆகிய மக்களுக்கும் (சாதகர்க்கும்) திருமணம் நடக்கும் காலத்தினையும் அதனால் பெறும் நல்ல இன்பநிகழ்ச்சிகளையும் கூறலாகும்.

இவற்றோடு, சாதித்துப் பேசுபவராகிய சுற்றத்தாரின் விபகாரம், புதிய சுற்றத்தார்கள், நல்லவர் நட்புறவு, பெறும் சன்மானங்கள்.

இத்தகைய பலன்களிலிருந்தும் பிரித்துக்காணும் வியாபாரம் இன்னதென்பது, திருமணம் செய்யும் நாள், மனைவி காலமாகும் காலம் ஆகியவற்றைச் சொல்லவேண்டியதை அளவிட்டுச் சொல்லும் சோதிடப்புலவர் அறிந்து கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

கமனம்-பருவத்திற்கான சேர்க்கை. குமாரர்-திருமணப் பருவம் வந்த ஆண் பிள்ளை, நிறுத்தர்-சாதித்துப்பேசுபவர், விபகாரம்-தேவையாக்கிய வழக்கு. தமர்-தனக்குச் சொந்தமானவர். நேமியோர்-உயர்ந்தவர், பெரியோர். சன்மானம்-அன்பளிப்பு, வரிசையாக வரும் பொருள்கள். பிறித்து அறிதல்-சோதிடர் பாகுபடுத்தி அறிவது. மறி கயல் விழியாய்-மறியென்னும் புள்ளிமான், கயல்மீன் ஆகியவற்றஇன் மிரட்சி பொருந்திய அழகிய கண்களைப் போன்ற அழகிய கண்களைப் பெற்ற பெண்ணே!

கருத்துரை:

ஏழாமிடத்தால், திருமணம் கூடும் காலம், பெண் அல்லது ஆண் உள்ள திக்கு, தகுதி, உறவு, அந்நியம், இல்லற நல்லின்பம், சுற்றத்தாரில் சிறு விவகாரம், மனைவியின் வாழ்க்கை ஆகியவற்றை அறியலாகும்.

விளக்கவுரை:

குறித்திடும் கமனம் என்பதால் சுற்றத்தாராலும் பிறராலும் குறித்துச் சொல்லப்படும்.

பருவகால நிகழ்ச்சிகள், நிறுத்தரில் விபகாரம் என்பது சுபகாரியங்களினிடையே வலிந்த புத்தியுடைய சுற்றத்தாரில் விளையும் குழப்பம் தரும் பேச்சுகள், உரிமை விபகாரம். மறை மொழிப் புலவர் என்பது, சோதிடர்களுக்கு உரிய பண்பாடானதகுதியினைக் குறிப்பதாகும்.

ஏழாம் இடம், திருமணகாலம், பெண், ஆண் தகுதிகள், வாழ்க்கை, குடும்பநலன் ஆகியவற்றைச் சிறப்பாக உணர்த்தும் இடமாகும்.

எட்டாம் - இடம்

(ஆயுள் - பலன்)

புலவுறும் படையால் வாதை சேர்யுத்தம்
பொருப்பின் மேலேறி வீழ்தல்
நிலைபெறும் வியாதி விக்கினம் கிலேசம்
நிறைபல துன்பமோடிரணம்

செலவினால் நஷ்டாப கரணம் விழுக்காடு
செறிபகை மரணம் இத்தனையும்
உலகினிலுயர்ந்தோர் அட்டமபலன் கொண்டு
உரைசெய்வார் உண்மை பெற்றிடவே. 23

தொகுப்புரை:

உலகில் உயர்ந்தோராகக் கருதப்பெறும் காலக்கணக்கராகிய சோதிடப்புலவர், சாதகனின் எட்டாமிடத்திற்கான பலன்களை அறிந்து கொண்டு,

ஆயுதங்களால் துன்பம், அதனைச் சார்ந்து வரும் சண்டை, உயர்ந்த மலைமேல் ஏறி நின்று விழுந்திடும் அபாயம் அல்லது இறப்பு, நிலைத்துச் சரீரத்திலுள்ள கொடிய நோய், அங்கத்தில் ஏற்படும் குறைவு, சூழ்நிலைகளால் வரும் கவலை, இல்லாத நிறைந்த பலவகைத் துன்பங்களோடு,

ஆறாத பெரும் புண், மருத்துவம், சண்டை, முதலான செலவுகளால் வரும் நஷ்டங்கள் சேர்ந்தாற்போல் வருதல், பாகப்பிரிவினை (ஏமாற்றம்) தீராத பகை, இறப்பு-இத்தனையும் சாதகர் உண்மை நிலைகளை அறிந்து கொள்ளுவதற்கு விபரமாக எடுத்துச்சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

படை-வாள், வேல் போன்ற ஆயுதங்கள். வாதை-நீங்காது தொல்லைதரும் துன்பம், பொருப்பு-உயர்ந்தமலை, நிலம்பெறு - வலிமை பெற்ற. விக்கினம்-மனக்குறைபாடு, இடர்ப்பாடு அங்கத்தில் சிதைவு, கிலேசம்-மாறாத மனக்கவலை. இரணம்-ஆறாத பெரிய புண். நஷ்டாபரணம்-(நஷ்டம்+ஆவரணம்) நஷ்டங்கள் சேர்ந்து இருத்தல். விழுக்காடு-பங்கு விகிதம். சேரின் பகை-சேர்ந்தால் பகையாகும் நிலை. அட்டமம்-எட்டாம் இடம். உண்மை பெற்றிட-சாதகம் கேட்போன், தனக்குரிய உண்மையான காலபலன்களை அறிந்து கொள்க.

கருத்துரை:

எட்டாம் இடத்தின் பலன்களாக, ஆயுதங்களால் தாக்கப்படுதல், அதனால் ஆறாத புண், நீங்காத பகை,

ரடர்ந்த நஷ்டங்கள் முதலானவற்றோடு மரணத்தையும் ுந்து கூறுவர் என்பதாம்.

ாக்கவுரை:

ு புலவுறும் படை-புலால் நாற்றம் பொருந்திய ஆயுதம். ந்தை-விடாதவலி. நிலம் பெறுதலென்பது, நிலைத்து ்தல் என்பதாம். மனக்கவலைகள் கிலேசம் என்று ாக்கப்பட்டது. நஷ்டாபரணம் என்று கூறப்பெறுவதைக் ரண்டு, நஷ்டம்+ஆவரணம் என்று திருத்தமாக்கி, டங்கள் பொருத்தமாகத் தொடர்ந்திருத்தல் என்று பொருள் லாம். அட்டமம்-எட்டாம் இடம். உண்மை-நடக்கும் ைமை நிகழ்ச்சிகள்.

ட எட்டாம் இடம் சிறப்பாக ஆயுளைப்பற்றிய ாலயினை ஆண் பெண் இருவருக்கும் புலப்படுத்தும் பதாம்.

ஒன்பதாம் - இடம்
(பாக்கியங்கள் - பலன்)

பெற்றிடுந்தந்தை மகம்பயில் தருமம்
பெருமை சேர் பாக்கியம் மடங்கள்
உற்றதோர் பரம(பாவ)புண்ணியம் குளமும் (குணமாம்)
உயர்திருப்பணி உபதேசம்
வெற்றிசேர் நீர்க்காவணம் புகழ்கூபம்
விரும்பிய செல்வம் ஈதெல்லாம்
கற்றறிந்தோர் ஒன்பதாமிடம் கொண்டு
கருணை பெற மொழிந்திடுவார். 24

ாகுப்புரை:

ஜ சோதிட நூல்களைக் கற்றறிந்தோராகிய சோதிடர், கனைப் பெற்றிடும் தகப்பன், யாகாதிகிரியைகளால் ்திடும் தருமங்கள், பெருமைப்படத்தக்க தாக தன்னைச் ்ந்த செல்வ அனுபோகங்கள், அமைந்ததாகிய ர்ட்சத்தினைத் தருவதற்குரிய புண்ணியச் செயல்களாக, ங்கள் அமைத்தல், உயர்வான தெய்வத்திருப்பணிகள், ாறோர் இருந்து மக்களுக்கு நீதி நெறிமுறைகளை நாளும்

உபதேசிப்பதற்காகச் செய்த சபை, வெற்றி சேர்ந்த தண்ணீர்ப்பந்தல், புகழைத்தரும் கிணறு, ஊருணி, துரவு, ஆகியவை இவ்வாறான நல்ல அறச்செயல்களுக்குத் தான் விரும்பிய செல்வம் ஆகிய இவற்றையெல்லாம் ஒன்பதாம் இடத்தினைக் கொண்டு அன்பினோடு சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

மகம்-யாகம். மடங்கள்-துறவிகளுக்குரியதாக அமைக்கப்பட்ட இல்லம். பரமம்-மோட்சம். குளம்-ஊர்மக்களின் உபயோகத்திற்குரியதாக உருவாக்கி வைக்கும் குளம். உபதேசம்-குருவினிடம் உபதேசம் பெறுதல். உபதேசம் செய்வதற்குரிய நியதிகளைச் செய்தல். நீர்க்காவணம்-தண்ணீர் வழங்கும் பந்தலிடம். அறநீர்ச்சாலை. கூபம்-கிணறு. தண்ணீர்த் துரவு.

கருத்துரை:

சாதகனின் தந்தையின் மேன்மை, செய்யும் தர்மங்கள், திருப்பணிகள் ஆகிய புண்ணியமான நல்ல செயல்களை ஒன்பதாம் இடத்தால் சொல்லலாம்.

விளக்கவுரை:

பாக்கியத்தானம் என்னும் ஒன்பதாம் இடத்தால், சேர்த்த அல்லது உரிமையில் வந்த பெரும் செல்வம். அதனைக்கொண்டு சாதகன் செய்யும் மேலான தர்மங்கள், திருப்பணிகள் புண்ணியச் செயல்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லுவர். புண்யச் செயல்களுக்குக் குறிப்பிடும் ஒன்பதாமிடம் பாவச்செயலையும் கூறுவதாகவே கொள்ளவேண்டும். பெருமை சேர் பாக்கியம் என்பதனால், புகழ்சேர்க்கும் பாக்கியமான செயல்கள் என்று அறியப்பெறும். விரும்பிய செல்வமாவது, சாதகன் விரும்பும் மாடு, மனை, மக்கள், முதலான பலவகைச் செல்வங்கள் என்றும் கூறலாம். ஒன்பதாம் இடப்பலன்கள் பெரும்பாலும் உயர்வாகவே காணப்படும். சோதிடர் அதனை உணர்ந்து, அன்போடு, சாதகன் மனம் கருணைபெறுமாறு

சொல்லுவார்கள் என்றும் பொருள் காண்பது சோதிட நுட்பத்தின் திறனாகும்.

ஒன்பதாம்இடம் சுபகிரஹங்களுடன் இல்லாமல் அசுப கிரஹங்களுடன் இருக்க நேரிட்டால் அல்லது ஒன்பதாம் இடம் அசுபரால் பார்க்கப்பட்டால் அல்லது ஒன்பதாம் இடத்தின் கிரகம் அசுபருடன் சேர்ந்து அசுபத்தானத்தில் இருக்கநேரிட்டால் அல்லது ஒன்பதாம் இடத்தின் அதிபதி நீசம் பெற்றால், மேலே கூறப்பட்ட பலன்களுக்கு மாறான பலன் சொல்லலாகும். நல்லனவற்றைக் கூறும் பாக்யஸ்தானம்-மாறான பலன் கூறும் நிலையும் ஏற்படும் என்பதான கருத்தும் உற்றதோர் பாவ புண்ணியம் என்பதால் கூறலாயிற்று சுவடியில் "பாவ புண்ணியம்" என்றே இருப்பதால் இவ்வாறு கூறலாயிற்று.

பத்தாம் இடம்

(கன்மம் சீவனம் - பலன்)

மொழிந்திடும் பாவபுண்ணியம் புவியாளல்
முயன்று பட்டணங்கள்தாபித்தல்
பொழிந்திடும் சவுரியம் கருணையிற்கலந்த
பூசனைஞானிசெய்கீர்த்தி
ஒழிந்திடும் இனிய தேவதாபத்தி
உயர்பிறதாரமாம்சரண்
இழிந்திடும் இரவு, கற்பம், ஊண், புடவை(சுவை)
இவை பத்தாமிடப்பலனென்னே! 25

தொகுப்புரை:

சொல்லப்படுவதாகும் பலவகையான பாபபுண்ணியச் செயல்கள் ஊராட்சி செய்தல், முயற்சியால், மக்கள் வாழ்வதற்குரிய இடங்களை உண்டாக்கி வைத்தல், தொடர்ந்துவரும் நல்ல அனுபவங்கள், அன்போடு கூடிய தெய்வ வழிபாடுகள், ஞானம் பெற்ற துறவிகட்குச் செய்யும் உதவிகளால் பெறும் புகழ், தனது பாபங்கள் ஒழிந்திடுவதற்குரியதாகும் நல்லதான தெய்வபக்தி, (காட்சிக்கு உயர்ந்ததால் பிறவாறு சேர்ந்தவளிடம் நிலையாக இருத்தலால் கழிந்திடும் இராத்திரிகள், பூசும் சமய

அடையாளங்கள், சாப்பிடும் உணவு வகைகள் ஆடைகள் ஆகிய இவைகள் பத்தாவது இடத்தின் பலன்கள் என்று சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

மொழிந்திடும்-எடுத்துச்சொல்லும். புவியாள-அரசின் பெற்ற பதவியினால் ஊராட்சியும் நாடாட்சியும் செய்தல், பட்டணங்கள்-மக்களுக்கான வசதிகளுள்ள ஊரை அமைத்தல், இடத்தினை உருவாக்குதல், குடியிருப்புகள் உண்டாக்கி வைத்தல், பூசனை-தெய்வங்களுக்குச் செய்யும் பூசைகள். ஞானி செய் கீர்த்தி-ஞானிகளுக்கு உதவி செய்வதால் வரும் புகழ், இனிய-மனத்திற்கு இனிய, நல்ல. உயர்-உயர்ந்த பிற மற்றுமுள்ள தர்ம கர்ம சம்பந்தத்தால் ஏற்படும் ராசயோகம். கற்பம்-திருநீறு, திருச்சனம், திருச்சாந்து முதலிய சமய சின்னங்கள். ஊன்-விரும்பிச் சாப்பிடும் உணவு வகை (சுவை-அரும்சுவைகள்) புடவை-விருப்பமாக அணிந்து கொள்ளும் ஆடை வகைகள்.

கருத்துரை:

பத்தாம் இடத்தால், சாதகன் செய்த அல்லது செய்யும் பாவ புண்ணியம், புதிய மனைகள், இடங்கள், புகழான செயல்கள், ராசயோகம் ஆகியவற்றைக் கூறலாகும்.

விளக்கவுரை:

புவியாள்வன் என்று பாடலில் குறிக்கப் பெறுதலைக்கொண்டு, அரச பதவி பெற்ற ஆட்சி செய்வான் என்று காலத்திற்கு ஏற்ற வகையில் பலன் சொல்லப்படும். பட்டணங்கள் தாபித்தல் என்பதனால், புதிய குடியிருப்புகளை உண்டாக்குவான் என்ற அளவில் கூறலாகும்.

பத்தாம் இடத்தில் சாதகர் தம் வாழ்வில் மேற்கொள்ளுதற்குரிய தொழில்கள் பற்றியறியலாகும்.

பதினோராம் - இடம்
(ஆதாயம், இலாபம் பலன்)

எண்ணு மூத்தவர், சேவித்திடும் பேர்கள்
இளங்கொடி மனைவி, பொன், வித்தை
மின்னிய லாபம், பயிர் பரி வேழம்
விளங்கு நல்லறிவு, தண்டிகையும்
உன்னிய மனத்தில் துக்கமும் தீரும்
உத்திரீகங்கள் சேர் இவ்வகையும்
பன்னிய பதினோராம் இடங்கொண்டு
பரிந்தருள் புரியும் பாவலரே. 26

தொகுப்புரை:

பதினோராம் இடத்தைக் கொண்டு எண்ணிக்கையாகச் சொல்லும் மூத்த சகோதரங்கள், தன்னை மதித்துப் பணிபவர்கள், அழகிய இளைய மனைவி, பெறும் பொன் பொருள், பயன்தரும் அறிவுக்கலைகள், எதிர் பாராத நிலையில் வரும் லாபம், அதிக பயிர் மகசூல், குதிரை, யானை முதலான வாகனங்கள், மேன்மேலும் விளங்கும் நல்ல அறிவு, அமர்ந்து செல்லும் வாகனங்கள், மனத்தில் வருத்தமாக நினைத்தது தீரும் நல்ல பயன் தரும் உபாயங்கள், சேர்ந்த இந்த வகையான ஆதாயந்தரும் பலன்களை-சோதிடத்தில் புலமை பெற்றவர் விருப்பமுடன் விளங்கச் சொல்லுவர்.

அருஞ்சொற்பொருள்

எண்ணு-எண்ணப்படும். இளங்கொடி-இளமையும் கொடி போன்ற வடிவும் பெற்றவள். வித்தை-பேரும் பொருளும் தரும் கலைகள். பயிர்-விளையும் பயிரில் அதிக மகசூல். மின்னிய-உடனாகக் கிடைக்கும். விளங்கு நல்லறிவு-மதிப்பு தரும் அறிவான செயல்கள். உத்தரீகங்கள்-யூகமான திட்டங்கள். பன்னிய-கூடியதான. பாவலர்-சோதிடப்புலவர்.

கருத்துரை:

பதினோராம் இடத்தின் பலன்களாக, மூத்த சகோதரங்கள், அழகிய மனைவி, இலாபமான வருவாய்கள், உயர்ந்த மதிப்பு, உயர் வாகனங்கள் நிறைவேறும் ஆசைகள் ஆகியவற்றைக் குறிப்பாகக் கூறலாகும்.

விளக்கவுரை:

பதினோராம் இடத்தை, ஆதாய விபரங்களை அறிந்து கூறும் இராசி என்று கூறப்பெறுகின்றது. எனவே, பதினோராம் இடத்தையும் இராசிநாதனையும் மையமாகக் கொண்டு, 1, 4, 5, 7, 9-ஆம் இடங்களின் தன்மைகளையும் பலன்களையும் அறிந்து சொல்லுவர் என்பதாகும். விளங்கு நல்லறிவு என்பதால், பிறரால் பாராட்டபெறும் அறிவான செயல்கள் என்பது புலனாகும். மனத்தில் திட்டமிட்ட செயல்கள் ஆதாயத்துடன் அமைவதற்கான உத்தியான நெறிமுறைகளையே உத்தி+ரீகங்கள் எனப்பட்டது. இச்சொல் தற்சமனான சம்ஸ்கிருதச்சொல், பன்னிய என்பது சோதிடர் ஆராய்ந்த என்ற பொருளில் வந்துள்ளது.

பதினோராம் இடப்பலன்கள், பெரும்பான்மையும் பலன்களாகவே கூறக் கூடியதாக இருக்கும்.

பன்னிரண்டாம் - இடம்
(சயனம், விரையம்)

பாவுமந்நிய தேசத்திலுத்தியோகம்
பணச்செலவுகளுடன் போகம்
மேவியசயனம்சவுக்கியம்விபாதம்
விளைந்திடும்தொழில்புரிகன்மம்
ஆவதோர்தானம்புண்ணியம்தியாகம்
அருள்மகம்சார்வதாம்விரத்தி
சேவலங்கொடியோனருளினாற்பெரியோர்
செப்புவர்துவாதசபலனே. 27

தொகுப்புரை:

பிறந்து வளர்ந்த தேசத்தை விட்டுஅந்நிய தேசத்தில் உத்தியோகம் பெறுதல், பணச்செலவுகளுடன் பெண்போகம் சயனம் சரீரநலம் காணல், இவற்றின் காரணமாகப் பெருகிய பாவச்செயல்கள், வளர்த்த தொழிலில் கர்மபலனான நட்டம், தானம் புண்ணியம் கருதியும், யாகங்கள் பாவங்கள் தீருமென்றும் எண்ணிச் செய்வதால் வரும் பலவகை விரயங்கள், இவற்றால் வரும் விரக்தியான வெறுப்புணர்ச்சிகள் ஆகியவற்றை முருகன் அருளைக்கொண்டு, பன்னிரண்டாம் இடத்தின் பலன்களைச் சோதிடம் கற்ற பெரியோர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பரவுதல்-நல்ல வாழ்க்கை அமையுமென்று எண்ணுதல், போகம் - பெண் போகங்கள், சயனம்-உறக்கசுகம். விபாதம்- மேலான பாதகம். பாவச்செயல்கள். கன்மம்-வினையால் விளையும் தீமை. மகம்-யாகம். விரக்தி-வாழ்க்கையில் வெறுப்பு. சேவலங்கொடியோன்-சேவல் கொடியை உடைய முருகப்பெருமான். செப்புவர்-எடுத்துக் கூறுவர். துவாதசம்-பன்னிரண்டு.

கருத்துரை:

பன்னிரண்டாம் இடத்தின் பலன்களாக, அந்நிய தேசத்தில் உத்தியோகம் பெறல் - எண்ணுதல், வீணான வகைகளில் அதிக செலவுகள், கன்ம வினையால் வரும் கஷ்ட நஷ்டங்கள், பெண் போக சயனசுகம் - சுகமின்மை, தானதர்ம யாகம் முதலியன செய்தால் துன்பங்கள் தீருமென்று வீண் விரையஞ்செய்தல் ஆகிய பலன்கள் சொல்லப்படும்.

விளக்கவுரை:

பன்னிரண்டாம் இடத்தினைக் கொண்டு பொதுவாக சயனசுகம், விரையங்கள் என்பனவற்றைச் சொல்வ தானாலும், இராசி இராசிக்குரிய கிரகம் அதனது நிலைமை, பார்வைகள் ஆகியவற்றுடன் 4, 9-ஆம் இடத்தைக் கொண்டு அறியும் பலன்களின் அளவினையும் கொண்டு ஆராய்ந்து பலாபலன்களைச் சொல்லுதல் நுட்பமாகும்.

இராசிகள் கிரகங்கள் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் பரிபாகநுட்பங்களைத் தொடரும் பாடல்களால் நூலாசிரியர் விளக்கம் செய்கின்றார். பன்னிரண்டாம் இடத்தால்-சயன நிலைகளையும், விரைய வழிகளையும் சொல்லுவார்கள்.

குறிப்பு:

பாவகங்கள் என்னும் இராசி இடங்களால் அறியப்பெறுவது என்ன? லக்கினம் முதலான இராசி இடங்களைக் கொண்டு அவ்வவற்றிற்குரிய பொதுவான பலன்களையே கூறுவர். அப்போது பலன்களையும் நடப்பது நடக்கக் கூடியது என்னும் பொதுவான பலன்களாகவே சொல்லப்படுகின்றது. எனவே, இனி தொடரும் சோதிட வரன்முறைகளை முழுமையாக ஒப்பிட்டுக் கணித்துத் திட்டப்படுத்திக் கொண்ட அளவில்தான் சோதிட பலன்களை அறிய முடியுமாதலால், பன்னிரண்டு இடங்களை மட்டும் பார்த்து, அதாவது மூன்றாமிடம் ஏழாமிடம் என்ற அளவில் பார்த்து அந்த ஒரு பாவக இடத்தால் திட்டமான பலன்களைக் கூறுதல் நிறைவாகப் பொருந்துவது இல்லை என்பது பெரியோர்களின் வாக்கு. எனவே இனி வரும் சோதிட இலக்கணப் பாகுபாட்டினையும் நன்றாகக் கற்றல் வேண்டும் என்பது குறிப்பாகும்.

சீவனின் பிறப்பியல்

பிறக்கும் பிள்ளை - ஆணா பெண்ணா என்றறிய

பாரின்மந்தன்பரிந்துஒற்றைராசியில்
சேரநிற்கில்ஆண்பிள்ளைஜெனித்திடும்
சீருலாவியசெவ்வாய்இரட்டையில்
பேரவாவொடுநிற்கில்பெண்பிள்ளையே. 28

தொகுப்புரை:

சூரியபுத்திரனாகிய சனியானவன், ஜனன லக்கினத்திற்கு ஒற்றை ராசியில் இருப்பானானால், ஆண் பிள்ளை பிறக்கும். சிறந்த செவ்வாயானவன் லக்கினத்திற்கு இரட்டையான ராசியில் இருப்பானாயின் பெண் பிள்ளை பிறக்கும்.

1. ஒற்றை இராசிகள் (பொது) 1, 3, 5, 7, 9, 11 - ஒற்றை எண்ணுள்ள இராசிகள் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறு இராசிகளாகும்.

2. இரட்டை இராசிகள் (பொது) 2, 4, 6, 8, 10, 12 - இரட்டை எண்ணுள்ள இராசிகள் ரிஷபம் , கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் , மீனம் ஆகிய ஆறு இராசிகளாகும்.

அருஞ்சொற்பொருள்

மந்தன் -சனி, பரிந்து-விரும்பி, ஜெனித்திடும்-பிறக்கும். இரட்டையில்-இரட்டையாக எண்ணப்படும் இராசியில் (பாரில்-உலகில், பூமியில். பார்க்கவன்-சூரியன், மந்தன்-மைந்தன்).

கருத்துரை:

சனி கிரகம், இலக்கனத்திற்கு ஒற்றை இராசியில் இருந்தால் ஆண் பிள்ளை பிறக்கும். செவ்வாய் கிரகம் இலக்கினத்திற்கு இரட்டை எண்ணுள்ள இராசியில் இருந்தால் பெண் பிள்ளையே பிறக்கும்.

விளக்கவுரை:

சூரியன், செவ்வாய், குரு-ஆகிய மூவரும் ஆண் கிரகங்கள்.

சந்திரன், சுக்கிரன், ராகு - ஆகிய மூவரும் பெண் கிரகங்கள்

புதன், சனி, கேது - ஆகிய மூவரும் அலி கிரகங்கள்

ஆண் பெண் அலி கிரகங்களில் ஏதேனும் ஒரு கிரகம் பலத்துடன் இருப்பதாயின் அதனைக் கொண்டும் ஒற்றை இரட்டை ராசிகளின் இடத்தினைக் கொண்டும், அறிவதுடன், ஆண் கிரகம், ஆண் இராசியில் இருந்தால் ஆண் பிள்ளை எனவும், ஆண் கிரகம் பெண் கிரக இராசியில் இருந்தால் பெண் பிள்ளை என்றும், பெண் கிரகம் ஆண் கிரக இராசியில் இருந்தால் ஆண் என்றும் பெண் கிரகம் பெண்கிரக இராசியில் இருந்தால் பெண் பிள்ளை என்றும் நுட்ப முறைகளையும் அறிந்து சொல்லுதல்.

பிறக்கும் பிள்ளை பெண் என்று அறிய

பிள்ளைமதி வெள்ளி சன்மத்து இருக்க அந்த வீடு
பெண்ணாகும் ராசியெனில் பெண்ணாகப் பிறக்கும்
தெள்ளுமொற்றை ராசி பின்னும் ரெட்டை ராசி முன்னும்
திங்கள் ஓரையாயின்(யிர்ப்) பெண்ணே செனிக்கும்ரெட்டை
உள்ளராசிக்குள் ஒற்றை அங்கிசம் பெண்ணாகும்
உயர்பெண்ணாம் கிரகங்கள் உறு சன்மத்திருக்க
வெள்ளி முதல் பெண்கிரகம் பார்க்கில் பெண் பிறக்கும்
இரவி குசன் மால் இரட்டை சேரின் மின்னாம். 29

தொகுப்புரை:

வளர்பிறைச் சந்திரனும் சுக்கிரனனும் இலக்கினத்திலிருந்தால் அந்த லக்கின வீடானது பெண் வீடாக இருந்தால் பெண் பிள்ளையே பிறக்கும்.

ஒற்றை இராசியைப் பின்னாகவும் இரட்டை ராசியை முன்னாகவும் கொண்ட சந்திர ஓரைக் காலமானாலும் பெண் பிள்ளையே பிறக்கும்.

இரட்டை இராசியில் (பெண் கிரகம்) நவாம்சையில் ஒற்றை அங்கிசமாக இருந்தாலும் பெண் பிள்ளையே பிறக்கும்.

பெண் கிரகங்கள் லக்கினத்தில் இருந்தாலும் அதைச் சுக்கிரன் முதலிய பெண் கிரகங்கள் பார்த்தாலும் பெண்ணே பிறக்கும்.

சூரியன் அங்காரகன் (செவ்வாய்) புதன் ஆகிய இம்மூவரும் இரட்டை இராசியாகிய பெண் ராசியிலிருந்தால் பெண் பிள்ளையே பிறக்கும். (இவருள் இருவர் கூடியிருந்தாலும் இந்தப் பலனே தருவதாகும்.)

அருஞ்சொற்பொருள்

பிள்ளைமதி-வளர்பிறைச் சந்திரன், வெள்ளி-சுக்கிரன். ஓரை-வேளை. அங்கிசம்-ராசியை ஒன்பதாகப் பிரித்ததில் ஒரு பகுதி. குசன்-செவ்வாய். புந்தி-புதன், மால். பெண் கிரகங்கள்-சந்திரன், சுக்கிரன், ராகு.

குறிப்பு:

இலக்கினத்தை இடமாக வைத்து மேல் ஒற்றை இரட்டை இராசிகளைக் கணிப்பிட்டு, மேலே பாடலின் உரையாகச் சொல்லப்பட்ட ஐந்து நோக்கினாலும் பார்த்துப் பொருத்தமாக அமைந்ததைக் கொண்டு பெண் பிள்ளை பிறக்கும் என்பதைத் திட்டமாகச் சொல்லக்கூடும்.

பிறப்பது ஆண் பிள்ளை என்றறிய

மின்னுகலை நிறைந்தமதி மேவில் ஆண் பிறக்கும்
விரவும் ஒற்றை முற்பாதி இரட்டையும் பிற்பாதி
என்னில் ஆண்பிள்ளை, என்று உரைத்த ராசி தன்னில்
இரட்டை அங்கிசம் சென்மம் மன்னில் ஆணாம்
மன்னவன்சூரியன் ஒற்றை ராசியிலுறின் ஆணாம்
வரும் புருட ராசிதனில் புருடக்கோள் மருவ
பின்னுமதே சென்மமாய்க் கோள் நோக்க
பிறப்பது ஆண் பிள்ளை என்று பேசலாகுமே. 30

தொகுப்புரை:

இரட்டை ராசியில் வளர்பிறைச் சந்திரன் இருந்தால் ஆண் பிள்ளை பிறக்கும். கலந்து நிற்கும் ஒற்றை ராசியில் முற்பாதி இரட்டையும், பிற்பாதி எண்ணிக்கையில் இரட்டையுமானால் ஆண் பிள்ளை.

இவ்வாறு கண்டு சொன்ன ராசியில் இரட்டைக்குரிய ராசி நவாம்சத்தில் சென்ம லக்கினமாகப் பொருந்தி வந்தால் ஆண் பிள்ளையே ஆகும்.

குருவும் சூரியனும் ஒற்றை ராசியில் கூடி இருந்தாலும் ஆணாகவே பிறக்கும்.

தொடர்ந்து வருகின்ற ஆண் ராசிகளில் ஆண் கிரகங்கள் கூடி நின்றாலும், அந்த ராசியே சென்மலக்கினமாக அதை ஆண் கிரகங்கள் பார்த்தாலும் பிறப்பது ஆண் பிள்ளை என்று சொல்லலாம்.

அருஞ்சொற்பொருள்:

மின்னுகலை-ஒளி வீசுகின்ற வளர்பிறை. மேவில்-பொருந்தி இருந்தால். விரவும்-கலந்து வரும் எண்ணில்-எண்ணிக்கையில். மன்னில்- பொருந்தியதானால், மன்னவன்-குரு. உறின்-சேர்ந்திருப்பின். மருவ-சேர்ந்திருக்க. கோள்-ஆண்கிரகங்கள்.

ஆண் பிள்ளையே பிறக்கும் என்று சோதிடத்தால் கணிப்பிட்டுச் சொல்லப்பட்ட உபாயங்கள் இப்பாடலில் கூறப்பட்டுள்ளன.

வேறுமுறை - தொடர்ச்சி

பேசுந்திரீபுருடக்கோள்இரண்டும்சன்மம்
பிறைநிற்கில்தானபலனபிரித்துப்பார்த்து
நேசமுடன்உறைகிரகப்பலமும்பார்த்து
நிச்சயித்தான்பெண்என்றேநிகழ்த்தவேண்டும்
தேசுவுறுபுருடலக்கினத்தால்ஆணே
சேயிழையிற்பெண்ணாகும்திங்கள்வெய்யோன்
பாசமுடன்பெண்வீட்டில்இருக்கில்பெண்ணாம்
பார்த்திபனாம்புருடமனைப்பற்றிநிற்கில். 31

தொகுப்புரை:

சொல்லப்பெறுகின்ற பெண் கிரகமும் ஆண்கிரகமும் கலந்து சன்மலக்கினத்தில் இருந்தால், அந்த ஸ்தானத்தின் பலத்தை (வலிமையைப்) பாகித்துப் பார்த்து, நட்பாகக் கூடியுள்ள கிரக பலத்தையும் (வலிமையையும்) பார்த்து, ஆராய்ந்து உறுதி செய்து பிறக்கும் பிள்ளை ஆண். பெண் என்பதனைப் பிரித்து ஒன்றைத் திட்டமாகக் கூற வேண்டும்.

பெருமை பொருந்திய சன்மலக்கினம் புருட லக்கினமாயின் ஆணாகவும், பெண் லக்கினமாயின் பெண்ணாகவும் பிறக்கும்.

சந்திரனும் சூரியனும் பெண் வீட்டில் நட்புடன் இருந்தால் பெண் பிள்ளை பிறக்கும். ஆண் ராசியாகிய வீட்டில் சூரியனும் சந்திரனும் நட்புடன் கூடி இருந்தால் ஆண் குழந்தை பிறக்கும்.

அருஞ்சொற்பொருள்:

புருடக்கோள்-ஆண் கிரகம். சன்மம்-சன்ம லக்கினம். நேசம்-நட்பு. தான பலன்(ம்)-கிரகங்களுள் வீட்டின் பலம் (வலிமை). நிச்சயித்தான்-உறுதிசெய்வதால். நிகழ்த்துதல்-எடுத்துக் கூறுதல். தேசு-பெருமை. சிறப்பு. சேயிழையில்-பெண் ராசியில். சேயிழை-பெண். பார்த்திபன்-ஆண் பிள்ளை. பார்த்திபன் என்றால் அரசன் என்பது பொருள். இங்கே குடும்பத்தின் வாரிசாக ஆண் பிறத்தலினால் பார்த்திபன் என்று பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண் பெண் அறிய - கிழமைகள்

பெரிதுளகிழமை பெண்ஆண்அறிந்து
பரிதி உதயம்பார்க்கும்கடிகையின்
துரிதமாய்ஐங்கால்தொகையினில்போக்கி
வருவது ஆண்பெண்வையகந்தனிலே. 32

தொகுப்புரை:

ஞாயிறு முதலாக உள்ள வார நாட்களில், இது பெண் கிழமை என்றும், இது ஆண் கிழமை என்றும் பகுத்தறிந்து, சூரியோதயம் முதலாகப் பார்க்கின்ற நாழிகையை, விரைவாக, ஒன்றேகால் நாழிகை விகிதமாகக் கழித்து பிறந்த நேரம் வரும் இடத்தால், ஆண் பிள்ளை என்றும், பெண் பிள்ளை என்றும் பாகுபடுத்தி அறிந்து, உலகத்தில் பிறப்பது பற்றிச் சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

பெரிதுளகிழமை-ஏழு நாட்கள் கொண்ட வாரத்திற்குரிய கிழமை. பரிதி-சூரியன். கடிகை-பகுத்துக் காணும் நாழிகை. ஐங்கால்-(பெருக்கல்) ஒன்றேகால்.

போக்கி-மாறி மாறிக் கழித்து. வையகந்தனில்-உலகத்தில் பிறப்பது. வருவது-மானிடப் பிறப்பில் பிறப்பது.

கருத்துரை:

ஒரு வாரத்திற்குரிய ஏழு நாட்களில் ஆண், பெண் நாட்களை அறிந்து கணிப்பிற்குரியதும் குழந்தை பிறந்துள்ளதுமாகிய நாள் இன்னநாள் என்பதைக் கொண்டு, அந்நாளில் சூரியோதயம் முதலாக ஒன்றே கால், ஒன்றே கால் நாழிகையாக ஆண் பெண் என்று மாறி மாறிக் கழிக்கும்போது பிறந்த நாழிகையளவில் பொருந்திய நாழிகையைக் கொண்டு, பெண்ணென்று வந்தால் பெண்ணென்றும், ஆண் என்று வந்தால் ஆணென்றும் கணித்துக் கூறவேண்டும். இவ்வாறு கழிக்கும் போது குழந்தை பிறந்த நாள் ஆண் நாளாயின் முதல் ஒன்றே கால் நாழிகைக்கு ஆண் பிள்ளையென்றும், பெண் நாளாயின் முதல் ஒன்றே கால் நாழிகைக்குப் பெண் பிள்ளை என்றும் கணிக்க வேண்டும்.

குறிப்பு:

பிள்ளை பிறந்த நாள் ஆண்கிழமையாயின் அன்றைய சூரியோதயம் முதற்கொண்டு ஒன்றேகால் நாழிகைகளாக எண்ணும்போது முதல் ஒன்றே கால் நாழிகையை ஆண் என்றும் அடுத்தது பெண் என்றும் இவ்வாறு மாறி மாறி எண்ணிக்கை செய்து பிறந்த நாழிகை அளவில் பொருந்திய ஒன்றேகால் நாழிகை எதுவோ அதன்படி ஆண் பெண் அறிந்து கூறுதல் நுட்பமாகும்.

ஆண், பெண் கிழமை (நாட்கள்) அறிதல்

வெள்ளி திங்கள் பெண் நாளாம்
சொல்லிய செவ்வாய் சனி ஞாயிறு வியாழம் ஆண்,
புதன் தனக்கு ஒற்றை அங்கிசம் ஆண் இரட்டை
விதமாம் ஆண் பெண் என்று விளம்பலாமே. 33

தொகுப்புரை:

வெள்ளி திங்கள் ஆகிய கிழமைகள்-பெண் நாட்களாம்.

செவ்வாய், சனி, ஞாயிறு, வியாழன் ஆகிய கிழமைகள்-ஆண் நாட்களாம்.

புதன்கிழமையில் வேளை-ஆண் பெண் என்று எண்ணும்போது ஒற்றை அங்கிசமாக வந்தால் ஆண் நாளாகக் கொள்ளலாம். இரட்டை அங்கிசம் பெற்றால் வேறு விதமாக ஆண் பெண் கலந்த சாயல் பெற்ற நாளென்றும் சொல்லலாம்.

மற்றொரு பாடல்:

வகுத்திடும் வாரம் மதிபுகர் பெண்ணாம்
தொகுத்த சேய்மந்தன் சூரியன் பொன்னும்
பகுத்திடும் ஆணாம், பகர்புதன் அமிசம்
நிகழ்த்து ஒன்று ஆண் பெண்ணாகிடும் இரண்டே.

அருஞ்சொற்பொருள்

மதி-திங்கள். புகர்-வெள்ளிக்கிழமை. சேய்-செவ்வாய்க்கிழமை. மந்தன்-சனிக்கிழமை. இரட்டை அங்கிசம்-ஆண் பெண் கலப்பு அமிசம்.

குறிப்பு:

அலிகிரக நாட்களாகிய புதன், சனி ஆகியவற்றில் புதனைப் பெண் (கிழமை தரும்) கிரகமாகவும். சனியை ஆண் (கிழமை தரும்) கிரகமாகவும் ஆண் பெண் வாரங்கள் அறியும்போது கொள்ள வேண்டுமென்பது பாடலால் பெறும் குறிப்பாகும்.

விளக்கவுரை:

கிழமைகளில், ஆண் பெண் காலம் அறிதற்கு, சூரிய உதயாதி (மணி-6 முதலான) ஒரு பாக வோரைக்கு 1¼ நாழிகையாக (அரை மணி அளவு) ஆண் என்பது தொடக்கமாக, முறையே ஆண் பெண் என்று மாறி மாறி எண்ணி வரும்போது, குழந்தை பிறந்த நாழிகை அளவுக்கு வரும் பாகவோரையில் வரும் இனத்தையே பிறந்தது ஆண்,

அல்லது பெண் என்று கணிப்பர். பிறப்பது ஆண் பெண் என்று காண்பதற்கு நாள், நட்சத்திர நவாம்ச நுட்பத்தினை பாக ஓரை வேளையில் கண்டு சொல்லுவதும் உண்டு என்பர்.

இராசிகளின் வடிவு நிறம் முதலியன அறிதல்

செப்பிய ராசி வடிவுகண்டு உரைக்கின், சிவந்திடும்
தகர்வுரு மேடம், தெரிந்திடு தவளப் பெற்றமே
இடபம், செயம் பெறு மிதுனம் என்பதுவும்
ஒப்பொடு வீணை கை மயிலுட னேஒது தண்டாயுதம்
பச்சை, உரு இருவரும் காம கடகம்
ஞண்டு உருவம் உரைத்த பாதிரிமலர் நிறமாம்.
வெற்படர் சிங்கம் புகைநிறமாம் கன்னி
ஓடமே நடத்தும் மெல்லியல் (அழுக்கு) உரப்பிய
வெள்ளைப்பொன்நிறத்தாள், விரிதுலாம் புருடனாம் கா(ழு)த்தில்
தப்பிலா தார்க்கோல் பஞ்சவர்ணன், கைத்தலத்தில்
வலக்கையில் பிடிப்போன், தங்கிய விருச்சிகம்
கருந்தேளாம் தக்கதேள் கண்டிவைப் புகலவே. 34

தொகுப்புரை:

மேடத்தின் உருவம் செம்மறி ஆட்டைப்போல் இருக்கும். அதன் நிறம் சிவப்பாகும். இடபராசியின் உருவம் வெண்மை நிறமுள்ள காளை மாடாகும். மிதுனத்தின் உருவம் மானிட ஆண் பெண் இரண்டாயிருக்கும், கையில் வீணை மயில் தண்டாயுதம் இவைகளைத் தாங்கியிருக்கும். அதன் நிறம் பச்சையாகும். கடகத்தின் வடிவம் இரு நண்டுருவங்களாகும். அதன் நிறம் பாதிரிப்பூவின் நிறமாகும். சிங்கம் ஆண் சிம்ம வடிவமாகும். அதன் நிறம் புகை போன்ற நிறம். கன்னிராசிக்குரிய வடிவம் பெண் வடிவமாகும். நீரில் ஓடம் செலுத்தும் அதன் நிறம் பங்கிய வெள்ளைப் பொன் நிறமாகும். துலாத்தின் வடிவம் புருட வடிவமாகும் வலது கையில் துலாக்கோல் பிடித்திருக்கும் அதன் நிறம் பஞ்சவர்ணமாகும். விருச்சிகத்தின் வடிவம் கருந்தேள் வடிவமாகும். அதன் நிறம் கறுப்பாகும்.

அருஞ்சொற்பொருள்

செப்பிய-சொல்லப்பட்ட, தகர்-செம்மறி ஆடு. தவளம்-வெண்மை. இடபம்-காளை மாடு. ஒவ்வொரு கை-ஒரே மாதிரியான கைகளில். மயில்-மயில் உருவம். உரு இருவரும் காண-இரு உருவம் எதிர் முகம் காண்பதாக. ஞண்டு-நண்டு. வெற்படர்-மலையில் திரிகின்ற. மடங்கல்-ஆண் சிங்கம். அழுக்கு-மங்கிய. கன்னி-கன்னி ராசி ஓடம் நடத்தும் மெல்லியல் பெண். துலாம்-துலாம் ராசி. தப்பிலா-தப்பு இயலாத. தார்க்கோல்-துலாக்கோல். ஒரு புறம் மட்டும் தட்டு உள்ள எடைக்கோல். விருச்சிகம்-கருந்தேள்.

தொடர்ச்சி

வேய்த்தனு புருடன் குதிரைபோல் அரைக்கீழ்
மின்னிரு தாள்நிறம் பொன்னாம்
ஆயமீன் மகரம் (மகரமானவதனமாம்) ஆலுநல் சுறவின்
ஆன அழுக்கு வெண்ணிறமாம்
ஏயதோர் கும்பம் புருடனாம் சிரத்தில்
எடுப்பதும் குடம் கருநிறத்தோன்
பாய்தலைக் கெண்டை இரண்டுமீன் உருவாம்
பகர்நிறம் அழுக்குறும் சிவப்பே. 35

தொகுப்புரை:

தனுசு இராசியின் வடிவம், அரைக்கீழ் குதிரை போல் இரு தாளிருக்கும். மேல் புருட வடிவம் அதன்நிறம் பொன்னிறமாம்.

மகரத்தின் வடிவம் பெரும் சுறா ஆண் மீனாகும். அதன் நிறம் அழுக்கடைந்த வெண்மை நிறமாகும்.

கும்பத்தின் வடிவம் குடத்தைத் தலையில் ஏந்தியுள்ள புருட வடிவாம். அதன் நிறம் கறுப்பாம்.

மீனத்தின் வடிவம் இணையான இரண்டு கெண்டை மீன்களாம். அதன் நிறம் அழுக்குப் படிந்த சிவப்பாகும்.

அருஞ்சொற்பொருள்:

வேய்த்தனு-மூங்கிலால் ஆன் வில். அரைக்கீழ்-இடுப்பிற்குக் கீழே. மின்னிரு தாள்-நன்றாக விளங்கும்

இரண்டு கால்கள். ஆயமீன்-இராசிக்குப்பொருந்திய மீன். சுறவு-சூறாமீன். ஏய-பொருந்திய. சிரத்தில்-தலையில். பாய்தலை-எதிர் முகமாகப் பாயும் தலையை உடைய. பகர் நிறம்- சொல்லப்படுகின்ற அதன் நிறம். அழுக்கு உறும் சிவப்பே-அழுக்கான சிவப்பு நிறம், செவ்வரக்கு நிறம்.

குறிப்பு:

எண் 34, 35 ஆகிய பாடல்களில், மேடம் முதலான பன்னிரண்டு இராசிகட்கும் உள்ள வடிவங்களுடன் அவ்வவற்றின் நிறங்களும் சொல்லப்பட்டன. இவ்வாறு சொல்லப்பட்டுள்ளதைக் கொண்டு சாதகனின் பிறப்பு லக்கினத்தினைக் கொண்டு அந்த ராசிக்குரிய வடிவம் நிறம் ஆகியவற்றைக் கண்டு சீவனின் தன்மையினை உணரலாகும்.

இராசிகளின் உறவும் விழிப்பும்.

சொல்லு மேடம் தனுமகரம்
துலங்கிய நண்டு தண்டு இடபம்,
வெல்லும் இவர் சந்திரர்க்கு உறவாம்
விழிப்பர் கங்குல் விடியளவும்
சொல்லும் கும்பம் கோல் மீனம்
சிங்கம் பெண் தேள் ஆறுக்கும்
எல்லிப்பொழுதே விழி தெரியும்
இரவிக்கு உறவாம் இனிதாக. 36

தொகுப்புரை:

சொல்லப்படுகின்ற, மேடம், தனுசு, மகரம், கடகம், மிதுனம், இடபம் ஆகிய ஆறு இராசிகளும், இரவுப்பொழுது விடியும் வரைக்கும் சந்திரனுக்கு உறவாயிருந்து விழித்திருக்கும் இராசிகளாம்.

தொடர்ந்து சொல்லப்படும் கும்பம், துலாம், மீனம், சிங்கம், கன்னி, விருச்சிகம் ஆகிய ஆறு இராசிகளும் பகற்காலத்தில் சூரியனுக்கு உறவாயிருக்க நன்றாகக் கண்தெரியும் இராசிகளெனத் தெரியப்பட்டனவாகும்.

அருஞ்சொற்பொருள்:

தனு-தனுசு, துலங்கிய-விளக்கமான. நண்டு-கடக இராசி. தண்டு-மிதுன ராசி. கங்குல்-இரவுக்காலம்.

கோல்-துலாம் ராசி. பெண்-கன்னி ராசி. தேள்-விருச்சிக ராசி. எல்லிப்பொழுது-பகல் பொழுது. இரவி-சூரியன்.

குறிப்பு:

சந்திரனுக்கு ஆறு இராசிகள் இரவில் உறவாய் இருந்து விழித்திருந்தாலும், சூரியனுக்குப் பகலில் உறவாயிருக்க க் கண் தெரிதலும் இராசிகளின் தகுதியினைக் காண்பதற்காகும். ஏனெனில் ஒரு லக்கின இராசியோடு கூடிய மண்டலமாகும். பன்னிரண்டு ராசிகளில் கடகமும் சிம்மமும் முறையான பார்வையுள்ள இராசிகளாகவும், இராசிநாதர்களாகிய சந்திரன், சூரியன் இருவரும் முழுமையான கண் கிரகங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவை என்பதனையே இப்பாடல் உணர்த்துகின்றது.

பிறப்பில் அங்கக்குறை - அறிதல்

இனியசிங்கம் எருது ஆடோடு இரவி உதிக்கில் குருடாம்
கன்னிதண்டு ஞெண்டுக்கும் கங்குல் பொழுதில் கண் இல்லை,
தனுசு மகரம் இராச்செவிடாம், தராசும் தேளும் பகற்செவிடாம்
மனிதன் கும்பம் பகல் முடமாம், மருவு மீனம் இரா முடமாம். 37

தொகுப்புரை:

சிங்கம், இடபம், மேடம் இம்மூன்று ராசிகளுக்கும் சூரியன் உதயமானால் கண் குருடாகும். கன்னி, மிதுனம், கர்க்கடகம் ஆகிய இம்மூன்று ராசிகளுக்கும் இரவில் **கண்** தெரிவது இல்லை. தனுசு, மகரம் இவ்விரண்டிற்கும் இரவில் காது கேளாது. துலாம், விருச்சிகம், இவ்விரண்டிற்கும் பகலில் காது கேளாது. கும்ப ராசி பகலில் முடமாகும். மீன ராசி இரவில் முடமாகும்.

அருஞ்சொற்பொருள்:

எருது-இடபராசி. தண்டு-மிதுனராசி. கங்குல்-இரவுக் காலம். கண் இல்லை-கண் இருந்தும் பார்வை இல்லை. தராசு-துலாம் ராசி. மனிதன் கும்பம்-மனிதவடிவோடு கூடிய கும்பராசி. மருவு மீனம்-ஆண் பெண் மீன்கள் பொருந்திய மீன ராசி.

இராசி ரூபம் முற்றும்.

கிரகங்களின் சாதி, நிறம், கதிர் முதலியன

ஆதவன் புருடக்கோள் அரசனாம் கிரணம் ஐந்துடை யோன்
அம்புலி தவள நிறம் வைசியன் பெண்
அணி கிரணம் எழுமூன்றாம்
ஓதிய குசன் ஆண் சிவந்த மெய்யான் அரசன் உற்றநற்
கிரணம் ஏழளனாம், ஓங்கிய புதன் வயிசியன்
ஒண்டொடி யோன் ஒன்பது கிரணன்,
பீதகன் புருடன் சங்கு நிறத்தோன் பிராமணன்
தச கிரணத்தோன், பிருகு பெண் வெண்மை
அந்தணன் ஈரெண் நற்கிரணமே உடையோன்,
சுதனாம் காரிமைவணன் நபுஸ்தனன் சூத்திரன்
சதுருதியாம் கிரணன், சூழ் கரும் பாம்பு
செம்பாம்பு இரு கோளும் சொல்வர் ஈனக்குலமென்றே. 38

தொகுப்புரை:

சூரியன்-(பவள நிறம்) ஆண் கிரகம், சத்திரிய குலம், ஐந்து கிரணம் (கதிர்) உடையவன்.

சந்திரன்-வெண்மை நிறம், வைசியகுலம், பெண் கிரகம், இருபத்தொரு கிரணம் உடையவன்.

செவ்வாய்-ஆண் கிரகம், செந்நிறம், சத்திரியன், ஏழு கிரணங்கள், உடையவன்.

புதன்-வைசிய குலம், பெண் தன்மையுடையவன், ஒன்பது கிரணங்களை உடையவன்.

குரு-ஆண் கிரகம், சங்கு போன்ற நிறமுடையவன், பிராமணன் பத்துகிரணம் உடையவன்.

சுக்கிரன்-பெண் கிரகம், வெண்மை நிறம், அந்தணன், பதினாறு கிரணம் உ டையவன், சூரியனின் மைந்தனாகிய,

சனி-கறுப்பு நிறம், அலிக்கிரகம், சூத்திரன், நான்கு கிரணம் உடையவன்.

ராகு, கேது - சனி கிரகத்தினைச் சூழ்ந்து வரும் கருமை நிறமுடைய ராகுவும், சிவப்பு நிறமுடைய கேதுவும் ஆகிய இரண்டு குறை கிரகங்களும் தாழ்ந்த குலம் என்று

சொல்லுவார்கள். (இவற்றிற்குரிய கிரணம் சனியைச் சார்ந்ததாகவே கருதப்படும்.)

அருஞ்சொற்பொருள்:

ஆதவன்-சூரியன். அரசன்-சத்திரியன். தவள நிறம்-வெண்மை நிறம். குசன்-பூமி புத்திரனான செவ்வாய் கிரகம். வைசிகன்-வணிகன். அலி-ஆணும் பெண்ணும் கலந்த வடிவம். (ஆண், பெண் தன்மையற்ற) தன்மையும் உள்ள கிரகம். பீதகன்-குரு. பிருகு-அசுர குருவாகிய சுக்கிரன். தசம்-பத்து (எண்) சூதன்-சனி கிரகம். காரி-கருமை நிறம் உடையவன். நபுஸ்தன்-பேடித்தன்மையுடையவன். ஈனன்-தாழ்ந்த சாதியினன். கிரணம்-கதிர்கள், (தாக்கும் தன்மை பெற்ற ஒளிக்கதிர்கள்) ஒண்டொடி-பெண்.

குறிப்பு:

அலி-ஆண்வடிவும் பெண்மைக்குணங்களும் கலந்து பேதித்து நிற்றலாகிய தோற்றம். நபுஸ்தம்-(நபுஞ்சம்) வடிவும் குணமும் ஆணாகக் காணும், பெண் தன்மை மிகுந்திருக்கும். ஆண் தன்மை இல்லாது பேதிக்கும்.

கிரக விரண விசேடம் காணல்

சொல்லிய ரவிக்குச் சிரகமத்தியினில் துலங்கு
கூரிலாமல் மேல்நோக்கும் துய்யகொம்
புளதாம், வெணி பிறையோ சுகம் பெறு
கொம்பிலா மோழை.

வல்ல செவ்வாய்க்குச் சிரநடுமேலாம்
வளர்ந்தெழு கூரிய கொம்பாம்
மாலெனும் புதற்கு சிரத்தொரு புறத்தில்
மருவிய கொம்புளதாகும்.

நல்ல நாள் மறையோன் பீதகன் தனக்கே நயந்த
மத்தியத்து உறு கொம்பாம் நாடு
சுக்கிரர்க்குச் சென்னியின்பக்கம்
நலமுடன் செறிந்திடும் கொம்பாம்.

அல்லல் சேர் காரி இருவகைப் பாம்பு ஆகிடும்
மூவர்கள் தமக்கும், அறுத்திட்ட
மருப்பு(மாறு) பட்டிருந்து கீழ் நோக்குமாகிய
கொம்புளதாமால். 39

தொகுப்புரை:

சொல்லுகின்ற (சிறப்புள்ள) சூரியனுக்குத் தலை நடுவே கூர்மையில்லாமல் விளங்கி மேல் நோக்கியதாக அமைந்த தூய்மையான கொம்பு உண்டு. சந்திரனுக்குக் கொம்பு இல்லையென்று அறிஞர் கூறினர். வல்லமை நிறைந்த செவ்வாய்க்கு தலையின் நடுவே மேல் நோக்கியதாக வளந்தோங்கிக் கூர்மையாக நிற்கும் கொம்புண்டாம். புதனுக்கு தலையின் ஒரு பக்கத்தில் ஒரு கொம்புண்டு. நல்லவனாகிய குருவுக்கு தலையின் மத்தியில் அமைந்த கொம்பு ஒன்று உண்டென்பர். சுக்கிரனுக்குத் தலையின் பக்கவாட்டில் நல்ல அமைப்பில் பொருந்திய கொம்பு ஒன்று உண்டாம். சனிக்கும் இராகு கேதுவாகிய பாம்புகட்கும் அறுக்கப் பட்டதாலான (மாறுபட்ட) அமைப்புடன் கீழாக நோக்கி நிற்பதாகிய கொம்புகள் உண்டென்பர்.

அருஞ்சொற்பொருள்:

சிரசு-தலை. துய்ய-தூய்மையான. வெண் பிறை-நிறைவான சந்திரன். மாலவன்-மஞ்சள் நிளமுள்ள புதன். மருவிய-பொருந்திய. பீதகன்-குரு. சென்னி-தலை. காரி-சனிக்கிரகம். இருவகைப்பாம்பு-ராகு, கேது ஆகிய இருவகைக் குறையுடல் பாம்பு கிரகங்கள்.

தெய்வமான கிரகங்கள்

ஆனவெள்ளி குரு அயனாகுமே வான
இந்து புதன் சுங்கமேந்திய தாமோதரன்
தேனு பானு செவ்வாயும் சிவனதாகும்
சூதனவன் அன்னிய தேவதை மைந்தனே. 40

தொகுப்புரை:

பொருந்திய சுக்கிரனும், குருவும் பிரமனுடைய அம்சமானவர்கள். வானத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரனும் புதனும் சங்கினைக் கையில் ஏந்திய திருமாலின் அம்சமானவர்கள். ஏழு குதிரைகள் பூட்டிய தேரையுடைய சூரியனும் செவ்வாயும் சிவன் அம்சமானவர்கள், சூதன் என்னும் சனி மட்டும் அந்நிய தேவதையாவான்.

குரு சுக்கிரன்	-	பிரமன்
சந்திரன்புதன்	-	திருமால்
சூரியன் செவ்வாய்	-	சிவன்
சனி	-	அந்நிய தேவதை

இதனால் -இன்ன தெய்வாம்சம் உடையது என்பது அறியப்பட்டது.

அருஞ்சொற்பொருள்:

ஆன-பொருந்திய. அயன்-பிரமன். இந்து-சந்திரன். தாமோதரன்-திருமால். (விஷ்ணு) பானு-கதிர்களைஉடைய சூரியன். சூதன்-சனி. அந்நிய தேவதை-பிரமன் திருமால் சிவன் ஆகிய தெய்வங்கள் அல்லாது பிறவாறான தேவதையின் தன்மை-சாஸ்தா(ஐயனார்) என்று சொல்லப்படுகிறது.

குறிப்பு:

பிற சோதிட நூலாசிரியர்கள்,

சூரியன்	- சிவன்	சந்தரன் -	உமாதேவி
செவ்வாய்	- முருகன்	புதன் -	திருமால்
குரு	- பிரமன்	சுக்கிரன்	இந்திராணி
சனி	- இயமன்	இராகு	ம்ருத்யு தேவதை
கேது	- ப்ரம்மன்		

என்று கூறுவதைக்கொண்டு (சோதிட கிரக சிந்தாமணி) சனியின் அம்சத்திற்குரிய தேவதையினை அறியலாகும்.

ஒவ்வொரு கிரகத்திற்கும் அதிதேவதை-பிரத்யதி தேவதைகள் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன:

கிரகம்	அதிதேவதை	பிரத்யதிதேவதை
சூரியன்	அக்னி	சிவன்

சந்திரன்	அப்பு	கௌரீ
செவ்வாய்	ப்ருதிவி	குமாரன்(முருகன்) அல்லது க்ஷேத்ரபாலன்
புதன்	விஷ்ணு	புருஷன்
குரு	இந்திரன்	ப்ரம்மன்
சுக்ரன்	இந்திராணி	இந்திரன்
சனி	ப்ரஜாபதி	யமன்
ராகு	கோடன்	ம்ருத்யு
கேது	ப்ரம்மன்	சித்ரகுப்தன்

இன்ன காலங்களில் இன்ன
கிரகங்களுக்குப் பலம் மிகுதி எனல்

அடல் தக்கணாயனத்தில் அசுபர்க்கே பலமதாகும்
வடக்கினில் பலம் சுபர்கே வளர்பக்கம் தனக்கும் ஈதே
திடமுறு அமரபக்கம் தீயோர்க்கே பலமதாகும்
விடராவு அல்குல்மாதே பலபாகம் விளம்புங்காலே. 41

தொகுப்புரை:

பாம்பின் படம் போன்ற இடையை உடைய பெண்ணே! கிரகங்கள் செய்யும் பலவகைப் பலாபலன்களைப் பிரித்து விளக்கமாகச் சொல்லும்போது, தீமையைச் செய்கின்ற பாபகிரகங்களுக்குத் தட்சிணாயன மாகிய ஆடி மாதம் முதல் ஆறு மாதங்களும் பலம் பெறும் மாதங்களாகும்.

சுபகிரகங்களுக்கு வடக்கு திக்கில் சூரியன் சஞ்சரிக்கும் தை மாதம் முதல் ஆறு மாதங்களாகிய உத்தராயணத்திலும், வளர்பிறையிலும் பலம் பெறும் காலங்களாகும்.

பாபக்கிரகங்களுக்குத் திடமுள்ளதாகிய தேய்பிறை நாட்கள் பலத்தைத் தருவதாகும்.

அருஞ்சொற்பொருள்:

அடல்-வலிமை. அசுபர்-பாபக்கிரகங்கள். வளர்பக்கம்-வளர்பிறை நாட்கள். திடமுறு-திடம் பெற்ற. அமர (அபர) பக்கம்-தேய் பிறை நாட்கள். அல்குல்-பெண்குறியிடம்.

குறிப்பு:

கிரகங்களில் சுபர்க்கும் பாபர்க்கும் வலிமை தரும் காலங்கள் குறிக்கப்பட்டன. அவை, மாதங்களும் பட்சங்களும் ஆகும்.

கிரக வலிமை காலம்-செவ்வாய், சனி, சந்திரனுக்கு-இரவிலும், சூரியன், குரு, சுக்கிரனுக்கு-பகலிலும், புதனுக்கு நாள் முழுவதும் பலம் உண்டாகும்.

இவ்வாறே அந்தந்தக் கிரகங்களுக்குச் சொந்தமான வாரங்களிலும் பாதங்களிலும் வேளை ஓரைகளிலும் பலம் உண்டாகியிருப்பர் என்பதை அறிதற்காகும்.

கிரகங்களுக்கு வலிமை மிகும் காலமறிதல்

பொன்னும் புதனும் உதயத்தில் பொருந்திடின் வலியரே ஆகும்.
மன்னும் சனி சேடன் கரும் பாம்பும் வலியர் அத்தமனமாகில்
மின்னும் கதிரோன் குசன் உச்சம் மேவில் வலிமை மிகவாகும்
துன்னு மதி சுக்கிரன் நீச்சம் சூழ்ந்தால் வலிய ராவாரே. 42

தொகுப்புரை:

குருவும் புதனும் ராசிகளில் பிரவேசிக்கும் போது ஆரம்பகாலத்திலேயே வலிமை பெற்றுப் பலனைக் கொடுப்பவர்கள் ஆவார்கள்.

நிலைபெற்ற சனியும் ராகுவும் (கேதுவும்) இராசிகளில் அஸ்தமனமாகும் காலத்தில் வலிமை உடையவராவார்கள்.

ஒளிதரும் சூரியனுக்கு செவ்வாயும் உச்சமாகில் பலன் கொடுப்பதற்குரிய வலிமை பெற்றவர்கள் ஆவார்கள்.

சந்திரனும் சுக்கிரனும் நீச்சம் பெற்றால் அதற்கமைந்த பலனைத் தருவதற்குரிய வலிமையினைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பொன்-குரு. உதயம்-ராசிகளில் கிரகம் பிரவேசிக்கும் காலம். வலியர்-நன்மை தீமை ஆகிய பலன்களைத்

திட்டமாகச் செயல்படுத்துவதற்கு வலிமை பெறுவர். கரும்பாம்பு-ராகு. நீச்சம்-தன் வலிமை இழந்தவராவர். சேடன்-பாம்பெனும் அங்கம் பெற்றவனாகிய கேது.

குறிப்பு:

ஒரு இராசியில் கிரகம் நிற்கும் காலம்:	
சூரியன், சுக்கிரன், புதன்	மாதம் 1
செவ்வாய்	மாதம் 1½
குருபகவான்	வருடம் 1
சனி	வருடம் 2½
இராகு, கேது தனித்தனி	வருடம் 1½
சந்திரன்	நாள் 2¼

சூரியனுக்கு மேஷமும், செவ்வாய்க்கு மகரமும் உச்ச வீடுகளாகும். சந்திரனுக்கு விருச்சிகமும், சுக்கிரனுக்குக் கன்னியும் நீச்ச வீடுகளாகும்.

இன்னதற்கு இது வலிமை மிகும் என்பது

செய்யும்புதன்தனக்கதிகம்
செவ்வாய்வலிமை, செவ்வாயின்
வெய்யசனியும்வலியதனை
வீடவேஅரசன்மிகவலியாம்
துய்யவரசன்தனில்வெள்ளிவலியன்
அதனிற்சோமன்மிகுவானாம்
பையசசிக்குக்கதிர்வலிது
பானுவிற்பாம்பேவலிதாமே. 43

தொகுப்புரை:

பலன்களை முழுமையாகச் செய்யும் புதன்கிரகத்தைப் பார்க்கிலும் செவ்வாய் கிரகம் வலிமை அதிகம் உடையதாகும். செவ்வாய்க்கிரகத்தைவிட சனி கிரகம் வலிமை உடையதாகும். சனி கிரகத்தைவிடக் குரு கிரகம் மிகவும் வலிமையுடையதாகும். தூய்மையான குரு கிரகத்தைப் பார்க்கிலும் சுக்கிரன் மிகவும்

வலிமையுடையதாகும். அவனைப் பார்க்கிலும் சந்திரன் வலிமை உடையவனாகும். சந்திரனை விட சூரிய கிரகம் வலிமை உடையதாகும். சூரியனைப் பார்க்கிலும் இராகு கேதுக்கள் வலிமை உடையவர்களாவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

புந்தி-புதன் கிரகம். அரசன்-குரு. சோமன்-சந்திரன். சசி-சந்திரன். பைய சசி-குளிர்ச்சியான சந்திரனுக்கு. கதிர்-சூரியன். பானு-சூரியன். பாம்பு-இராகு கேதுக்களாகிய பாம்பின் அங்கமுடைய கிரகங்கள்.

புதனுக்குச்	செவ்வாய் வலியன்
செவ்வாய்க்குச்	சனி வலியன்
குருவுக்குச்	சுக்கிரன் வலியன்
சந்திரனுக்குச்	சூரியன் வலியன்
சூரியனுக்கு	இராகு வலியன்

இவ்வாறு காண்பது பொது விதியாகும்.

புதனும் குருவும்	லக்கினத்திலும்
சுக்கிரனும் சந்திரனும்	நான்காம் இடத்திலும்
சனியும் ராகுவும்	ஏழாம் இடத்திலும்
சூரியன் செவ்வாய்	பத்தாம் இடத்திலும்

சிறப்புடன் வலியராம்.

கிரகங்கள் பலன் பெறும் இடங்கள்

உச்சம்உச்சாங்கிசைநல்லோருடனும்
நல்லோருடன்வீட்டும்
மெச்சும்உறவோருடனும்அவர்வீட்டு
மித்திராங்கிசையிலும்
அச்சமறவேஅவரவருக்கநுகமான
அங்கிசையில்
இச்சையுடனேயுறின்பலனாம்இதனிற்
பிழைத்தக்கால்இலைபலனே. 44

தொகுப்புரை:

உச்ச வீட்டிலும் உச்சனுடைய அங்கிசையிலும், சுபக்கிரகங்களோடும் அவர்களுடைய ஆட்சி வீட்டிலும், நட்புக் கிரகங்களோடும் நட்புக்கிரக வீட்டில் நட்பான அங்கிசையிலும், அச்சமில்லாதபடி அவரவர்கட்கு ஆட்சியிடமாக ஏற்படும். அங்கிசையிலும், விருப்பத்துடன் கிரகங்கள் கூடியிருக்குமாயின் சாதகன் நல்ல பலனை அடைவான். இந்த முறைப்படி கிரகங்கள்அமையாமல் மாறுபட்டு இருந்தால் சாதகனுக்குப் பயன் இல்லை என்பதாகும்.

அருஞ்சொற்பொருள்:

உச்சம்-கிரகங்கள் உச்சம் பெறும் இராசி. அங்கிசை-நட்புறவாக ஒரு ராசியில் கூடியிருத்தல். அநுகம்-இசைந்திருத்தல். அனுகமான அங்கிசையில்-நட்புடன் சேர்ந்திருக்கும் இடத்தில். இச்சையுடன்-விருப்பத்துடன், பகையில்லாத கிரகத்துடன் சேர்ந்திருக்கும் விருப்பத்துடன்.

விளக்கவுரை:

ஒரு கிரகம், தான் உச்சம் பெறும் ராசி இடத்திலும், பிற கிரகம் உச்சம் பெற்றிருக்கும் ராசியில் சேர்ந்திருந்தாலும், சுப கிரகங்களோடு சேர்ந்திருந்தாலும், சுபர்வீட்டில் தான் இருந்தாலும், நட்பு கிரகத்துடன் நட்பு ராசியில் நட்பு அம்சமாக இருந்தாலும், தனக்குரிய ஆட்சி வீட்டிலும், ஆட்சியான அமிசத்திலும் இருந்தாலும் பலமுடைய கிரகமாகக் கருதப்பெறும். இந்த நியதிகளுக்கு மாறான அமிசத்தில் கிரகங்கள் இருந்தால் பலம் இல்லாதவர்களாகக் கருதப்பெறும்.

அநுகமான அங்கிசை என்பதற்கு அந்தந்த கிரகத்திற்கு அனுகூலமான நட்பு ராசி ஆகிய இடங்கள் என்று கொள்ளலாம்.

கிரகங்கள் பலன் தரும் கிரகங்களாக ராசி மண்டலத்தில் அமையும் இடங்களையே இப்பாடல் உணர்த்துகின்றது. ஒன்பது கிரகங்களுக்கும் பன்னிரண்டு ராசிகளில் நட்பு உச்ச ஆட்சி, சமன் இடங்களைப் பாகுபடுத்திக் காண்பது ஒரு வழியாகும்.

இன்ன இடத்தில் இவ்வளவு பலன்பெறும் என்றறிய

உச்சமொன்றே கால், ஒன்று கேந்திரம்
அச்சமும் முக்கால், அதிபதி ஓர்பலனஅ
மெச்சும் நட்புக்கு அரைப்பலன் மிக்க கால்
துச்ச நீசப்பலனெனச் சொல்லுமே. 45

தொகுப்புரை:

கிரகங்களுக்கு, உச்ச ஸ்தானத்தில் ஒன்றே கால் பலனும், கேந்திரஸ்தானத்தில் முழுப்பலனும், பகை ஸ்தானத்தில் முக்கால் பலனும், ஆட்சி ஸ்தானத்தில் முழுப்பலனும், நட்புஸ்தானத்தில் அரைப்பலனும், நீசஸ்தானத்தில் கால் பலனுமாகவே-சோதிட நூல்கள் சொல்லும்.

அருஞ்சொற்பொருள்:

உச்சம்-உச்ச வீடு, கேந்திரம்-நான்காம் இடம் அச்சம்-பகை வீடு. அதிபதி-ராசிக்கு ஆட்சி உடையவர். மெச்சும்-பாராட்டும். மிக்க மிஞ்சியுள்ள. துச்சம்-அற்பம். நீசம்-வலிவிழந்த இடம். கேந்திரமாவது-லக்னத்திற்கு 4, 7, 10 ஆம் இடங்கள் கேந்திரமாகக் கருதப்படும். இந்த வகையான கேந்திரஸ்தானத்தின் பலன் தருகின்ற கிரகங்களின் முறைமையானது, இலக்கினத்திற்கு நாலாம் அதிபதி பலன் தருவன். நான்காமிடத்தினைவிட ஏழாம் அதிபதி (4, 5, 6, 7) பலன் தருவன். ஏழாமிடத்தோனைவிட பத்தாமிடத்தின் அதிபதி பலன் தருவன். என்று காணப்படும். இதில் கிரகங்களின் உச்சம், ஆட்சி, நட்பு, பகை, சமம் ஆகிய நிலைகளையும் அறிவது முறைமை.

கிரகங்கள் வலிமை பெற்றுப் பலன்தரும் காலங்கள்

ஏந்து செவ்வாய் சனி இந்து இராப்பலன்
வேந்தன் ஆதவன் வெள்ளி பகற்பலன்
போந்த புந்திக் கெப்போதும் பலங்களாகப்
கூறுதலாம் (கூந்தல்வேள்) குங்குமக் கொங்கையாய். 46

கிரக பலன்கள் முற்றும்

விளக்கவுரை:

குங்குமச் சாந்தணிந்த கொங்கைகளையுடைய பெண்ணே! பூமிகாரகானென்று பாராட்டப்பெறும் செவ்வாயும் மற்றும் சனி, சந்திரன் இவர்களுக்கு இராக்காலத்தில் பலமாம். குரு, சூரியன், சுக்கிரன் இவர்களுக்குப் பகற்காலத்தில் பலமாம். புதனுக்கு இரவு பகல் எக்காலத்திலும் சஞ்சார பலமாகும்.

இந்து-சந்திரன். வேந்தன்-குரு. வெள்ளி-சுக்கிரன். புத்தி-புதன். எப்போதும்-நாள் முழுவதும். பெலன் என்று பாடமுள்ளதால் பலவான் என்று அறிவதாகும்.

குறிப்பு:

கிரகங்கள் வலிமைபெறும் நட்பு உச்ச ராசிகளில் இருந்து தரும் பலன்களின் தன்மை தெளிவாக நிகழும் காலங்களே இப்பாடலால் குறிக்கப்பெற்றதாகும்.

கிரக வலிமை காலம்:

செவ்வாய், சனி, சந்திரனுக்கு-இரவிலும், சூரியன், குரு, சுக்கிரனுக்கு-பகலிலும், புதன் ஒருவனுக்கு எப்போதும் பலம் உண்டாகும்.

இப்படியே அந்தந்தக் கிரகங்களுக்குச் சொந்தமான வாரங்களிலும், மாதங்களிலும், வேளை ஓரைகளிலும் பலம் உண்டாகும்.

கிரக பலன் - விளக்கவுரை (சுவடியில் உள்ளவாறு)

லக்கினாதிபதி லக்கினத்திலிருக்கப் பலன் வாராதிபதி வாரத்துக்கும் பலம், மாதத்திற்கும் பலன் புதனொருத்தனுக்கும் சுபக்கிரகத்துடனே இருந்தால் சுபனேயாவான். சுபனே சரிபாபருடனே கூடியிருந்தால் பலனே ஆவான். தனுசில் சூரியனிருந்தால் சுபனாம் பலன் தருவான்.

வசனம் முற்றும்.

சுபகிரகம் அசுபகிரகம் இவையெனல்

நிறைமதியும் தமனியனும் நிறைந்த சுபக்கிரகம்
நீள்சுங்கனார் முக்கால் சுபக்கிரகம், புதனோ
குறையும் அரைச்சுபன், தேய்ந்த மதியும் கால்சுபனாம்
கூறுசனி பாம்பு முழுப்பாவிகளே, செவ்வாய்
அறையும் முக்காற் பாவி அரைப் பாவி கதிரவனும்
அணிபாவருடன் கூடும் புதன், பிறை கால் பாவி
இறை, சனி பாம்புடன் கூடின் (சனி) இவர்களைப் போல் பாவி
இந்து அமாவாசியிற் புதனோடிருக்க முக்கால் சுபனே. 47

தொகுப்புரை:

நிறைந்து வளர்ந்து வரும் சந்திரனும், குருவும், முழு சுபக்கிரகங்களாம். சுக்கிரன் முக்கால் சுபக்கிரகம். புதன் அரைப்பங்கு சுபன். தேய்பிறைச்சந்திரன் கால் பங்கு சுபன்.

சனி, ராகு, கேது ஆகியவை முழுமையான பாவிகளாகும். செவ்வாய் முக்கால் பங்கு பாவியாகும். சூரியன் அரைப்பங்கு பாவியாம்.

வரிசையாகச் சொல்லப்பட்ட பாவக்கிரகங்களுடன் கூடும் புதன், வளர்பிறைச் சந்திரன் இருவரும் கால் பங்கு பாவிகளாம்.

குரு, சனி இவர்கள் ராகு கிரகத்துடன் கூடி நின்றால், சனி எப்படி முழுப்பாவியோ அதைப்போலவே முழு பாவிகளாவர்.

சந்திரன் அமாவாசைக் காலத்தில் புதன் கிரகத்துடன் சேர்ந்திருந்தாலும் சம்பந்தப்பட்டாலும் மூன்று பங்காகும். முக்கால் சுபக்கிரகமாகும்.

1=4 பங்கு, ¾=3 பங்கு, ½=2 பங்கு, ¼= 1 பங்கு முழுமைக்கு 4 பங்குகள் என்றாகும்.

அரையளவு சுபக்கிரகமாகப் பலன் தருவான். தேய்ந்த மதி-தேய்பிறைச்சந்திரன். அணி-வரிசையான (அணி என்பதை, பணி என்றும் பாடங்கொண்டு, பணி-பாம்புகளாகிய இராகு கேதுக்கள் என்றும் காணலாகும்) இறை-அரசனான குரு.

குறிப்பு:

இப்பாடலிலும் பிறவிடத்தும் பாம்பு என்று பொதுவாகச் சொல்லப்பெறுதலின் ராகு கேதுவாகிய இரண்டு கிரகங்களையும் அறிதலோடு, கரும்பாம்பு என்று குறிப்பதாயின் அது சிறப்பாக ராகுவினையே குறிக்குமென்று அறிந்து பலன் காணல் பொருத்தமாகும். மற்றும், பிறை என்பதற்கு தேய் பிறைச் சந்திரன் என்றும், இந்து, மதி, சசி என்னும் ஒரு பொருள் குறித்த பல பெயராம் சொற்களுக்கு வளர்பிறைச் சந்திரன் என்றும் பொருள் நோக்கம் கொள்ளல் பலன் காண்பதற்கு ஏற்றதாகும்.

நட்பாகும் கிரகங்கள்

ஆதவனுக் குறவு திங்கள் செவ்வாயுடன் பொன்னும்
அம்புலிக்குப் புதனும் செங்கதிரும் நேசம்,
நீதிசெறி செவ்வாய்க்கு குரு திங்கள் வெய்யோன்
நின்ற புதன் தனக்குச் சுக்கிரன் இரவி நேசம்
ஓதிய பொன்தனக்கு உறவு ஆதவன் திங்கள் செவ்வாய்
உயர்வெள்ளிக் குறவு சனியுடன் புந்தி இருவர்
பூதலம் வாழ்சவுரிக்கே புதனும் சுக்கிரனும்
பொருந்திய நல்லுறவென்றே போற்றிடுவர் புலவர். 48

தொகுப்புரை:

சூரியனுக்கு நட்பாகும் கிரகங்கள் சந்திரன், செவ்வாய், குருவுமாகும். சந்திரனுக்கு நட்பாகும் கிரகங்கள் புதனும்,

சூரியனும் ஆகும். செவ்வாய்க்கு உறவு குரு, சந்திரன், சூரீயன் ஆகும். புதனுக்குச் சூரியன், செவ்வாய், சந்திரன் ஆகிய மூவரும் உறவாவார்கள். குருவுக்கு உறவு, சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகும். சுக்கிரனுக்குச் சனியுடன் புதனுமாகிய இருவர் உறவாகும். சனிக்கு உறவு புதனும் சுக்கிரனும் ஆகிய இருவரும் பொருந்திய நட்பினராவர் என்று சோதிட நூற் புலவர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

ஆதவன்-சூரியன். பொன்-குரு. அம்புலி-சந்திரன். செங்கதிர்-சூரியன். நேசம்-உறவு. நீதிசெறி-நியாயம் நிறைந்த. வெய்யோன்-சூரியன். இரவி-சூரியன். புந்தி-புதன். சவுரி-சனி.

குறிப்பு:

கிரகங்களுக்குரிய நட்பு கிரகங்கள் இவை என்று இப்பாடலில் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் பிறநூல்களில் சொல்லப்பட்டுள்ள நட்பு கிரக முறையினையும் ஒப்பிட்டறியவும். ஆதவன், செங்கதிர், வெய்யோன், இரவி ஆகிய பெயர்கள் சூரியனின் பெயர்களாகும்.

கிரகம்		நட்புக்கிரகங்கள்
சூரியன்	-	சந்திரன், செவ்வாய், குரு
சந்திரன்	-	புதன், சூரியன்
செவ்வாய்	-	குரு, சந்திரன், சூரியன்
புதன்	-	சுக்கிரன், சூரியன்
குரு	-	சூரியன், சந்திரன், செவ்வாய்
சுக்கிரன்	-	சனி, புதன்
சனி	-	புதன், சுக்கிரன்

(சூரியனின் புதல்வனாதலின் இவர் (சனி) சௌரி எனப்படுகிறார்.

சமன் பெறும் கிரகங்கள்

போற்றிய செங்கதிர் தனக்குச் சமன் புந்தியொருவன்
புனிதமதிக் கிணை செவ்வாய் குருசனி சுக்கிரனே
ஏற்ற செவ்வாய்க் கிணை சனி சுக்கிரர் இருவராமே
இனிய புதற்குச் சமனாம் சனி செவ்வாய் அரசன்
நாற்றிசையோன் அரசனுக்கே சமன் சவுரி யொருவன்
நலந்திகழ் சுக்கிரற்கிணை பொன்நவில் செவ்வாய்
தோற்றியிடும் சனிதனக்கே சமனதாக
துய்ய வியாழந்தனையே சொல்லுவாரே. 49

தொகுப்புரை:

உலகமக்களால் போற்றப்பெறும் சூரியனுக்கு புதன், ஒருவனே சமத்துவமுடையவனாம். பரிசுத்தமான சந்திரனுக்குச் செவ்வாய், குரு, சனி, சுக்கிரன் இவர்கள் இணையான சமத்துவமுடையவர்களாவர். தகுதி வாய்ந்த செவ்வாய்க்குச் சனி சுக்கிரன் ஆகிய இருவருமே சமத்துவமுடையவராம். இனிய வாக்குடைய புதனுக்குச் சனி, செவ்வாய், குரு இவர்கள் சமத்துவமுடையவர்கள். நான்கு திசைகளிலுள்ளார் யாவரும் போற்றும் குருவுக்கு நிகரான சமத்துவமுடைவன் சனி ஒருவனேயாவான். நன்மை விளங்குகின்ற சுக்கிரனுக்கு குருவும் சொல்லப்பட்ட செவ்வாயும் ஆகிய இருவரும் இணையான சமத்துவமுடையவராவார்கள். தோற்றத்தோடு கூடிய சனிக்கு நிகர் தூய்மையான குருவை சமனுடைய கிரகமாக மிகுதியும் கற்றறிந்தோர் சொல்லுவார்கள். (சமத்துவம்-சமனான தத்துவம்)

குறிப்பு:

கிரகங்களின் ஒத்த சமன்நிலை சொல்லும் ஆசிரியர் போற்றிய செங்கதிர், புனித மதி, ஏற்ற செவ்வாய், இனிய புதன், நாற்றிசையோன் அரசன், நலம்திகழ் சுக்கிரன், தோற்றிடுஞ் சனி, துய்ய வியாழன்-என்று கிரகங்களை அவ்வவற்றிற்குரிய சிறப்பான அம்சங்களைக்

குறிப்பாகவுணர்த்தி இருப்பது சோதிடங்கற்பாரால் உணரத்தக்கதாகும்.

செங்கதிர்-சூரியன். மதி-நிறை சந்திரன். இணை-ஒத்த தகுதி நிலை. சமன்-சமனான செயலும் பயனும் தருபவன். சவுரி-சனி. பொன்-குரு. வியாழன்-குரு. போற்றிய-உலகத்தாரால் புகழ்ந்து போற்றப்பெறும் சூரியன். புனித-காட்சியாலும் செயலாலும் தூய்மையான மதி. ஏற்ற-எத்தகைய பயனுக்கும் ஏற்புடைய, செவ்வாய். இனிய-சொல், செயல், பயன் ஆகியவற்றில் இனிமையை இயன்ற அளவில் செய்யும் புதன். நாற்றிசையோன்-உலகில் நான்கு திசைகளிலும் உள்ள மக்கள் மனதில் என்றும் நினைந்து போற்றும் குரு. நலம் திகழ-மாதர்க்கு ஏற்புடைய நலனைத்தரும் பாவகத்தோடு விளங்குகின்ற சுக்கிரன்.தோற்றிடும்-அணி வட்டத்தோடு மங்கிய நிறத்துடன் சஞ்சரிக்கும் சனி கிரகம். துய்ய வியாழன்-வடிவிலும் செயலிலும் பார்வையிலும் நேசத்திலும் தூய்மையான குரு.

கிரகங்களின் பகை நிலைகள்

சொல்லிரவிக் குறுபகை சுக்கிரன்சனியோனிருவர்
சோமனுக்குப் பகையில்லை சொல்லவு மெக்காலே
அல்லலறுஞ் செவ்வாய்க்குப் பகைபுந்தி யொருவன்
ஆனபுந்திக் குற்றபகை அம்புலியொன்றாகும்
நல்லவியாழன் தனக்குப் புதன் வெள்ளி பகையாம்
நாடிய சுக்கிரற் கிரவி நவில் திங்கள் பகையே
வல்லசனி தனக்கிரவி திங்களுடன் செவ்வாய்
மட்டுமேபகையென்று வழுத்துவ ரெக்காலும். 50

தொகுப்புரை:

சூரியனுக்குச் சுக்கிரன் சனி ஆகிய இருவரும் உற்ற பகையாகும். சந்திரனுக்கு எக்காலத்திலும் இடத்திலும் பகையில்லை. துன்பமற்ற செவ்வாய்க்குப் புதன் ஒருவனே பகையாவன். புதனுக்கு உற்றபகை சந்திரனேயாகும். நல்லவரான குருவுக்குப் புதனும் சுக்கிரனும் பகைவராவர்.

சுக்கிரனுக்குச் சூரியன், சந்திரன், ஆகிய இருவரும் பகையாவர். வல்லமையுடைய சனிக்குச் சூரியன் சந்திரன் செவ்வாய் இவர்களே பகைவரென்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்:

சொல்லிரவி-சொல்லப்படகின்ற சூரியன். உறுபகை-மிக்க பகை. சோமன்-சந்திரன். எக்காலே-எக்காலத்திலும் இடத்திலும். நல்லவியாழன்- நல்லவனான குருவுக்கு. வெள்ளி-சுக்கிரன். இரவி-சூரியன். வல்ல சனி-வலிமைமிக்க சனி.

கிரகங்களின் ஆட்சி ராசிகள்

காலியிடபங் கோல சுக்கிரற்கே ஆட்சி
கன்னி மிதுனம் கணக்கன் காணியாகும்
கோலிய மீனம் தனுவும் அரசற்கே ஆட்சி
கும்பம் மகரம் மந்தன் குலவுமிசம் ஆட்சி
மேலு மேடம் தேளும் செவ்வாய்க்கு ஆட்சி
வெற்றி செறிசூரியர்க்கே சிங்கமொன்றே ஆட்சி
சேலிலங்கும் கண்ணோய்கள் கடகவீடு
செழுமதியந்தணன் ஆட்சி செரிந்துபாரே. 51

விளக்கவுரை:

கால்களையுடைய இடபராசியும் துலாராசியும் சுக்கிரனுக்கு ஆட்சியிடங்களாகும். கன்னியா ராசியும் மிதுன ராசியும் புதனுக்குரிய உரிமை ஆட்சி இடங்களாகும். மீன ராசியும் தனுசு ராசியும் குருவுக்கு ஆட்சி இடங்களாகும். கும்பம் மகரம்-இரண்டு ராசிகளும் சனி செவ்வாய் செய்கின்ற ஆட்சி வீடுகளாகும். மேட ராசியும் விருச்சிக ராசியும் செவ்வாய்க்கு ஆட்சியிடங்களாகும். சூரியனுக்குச் சிங்க ராசி ஒன்றே ஆட்சி இடமாகும். கடக ராசி செழுமையுடைய சந்திரனுடைய ஆட்சிவீடாகும்.

அசையும் கெண்டை மீன்களைப் போன்ற அழகிய கண்களை உடைய பெண்ணே! இவ்வாறான கிரகங்களின் ஆட்சி வீடுகளை (இராசிகளை) ஆராய்ந்து அறிந்து கொள்வாயாக- என்பர்.

கிரக ஆட்சி இடங்கள்:

சூரியனுக்கு	-	சிங்கராசி
சந்திரனுக்கு	-	கடகராசி
செவ்வாய்க்கு	-	மேடம், விருச்சிகம்
புதனுக்கு	-	கன்னி, மிதுனம்
குருவுக்கு	-	மீனம், தனுசு
சனிக்கு	-	மகரம், கும்பம்

கிரகங்களின் உச்ச ராசிகள்

உச்சமெனநவக்கிரக மிருக்கும்உண்மையதாம்
உணர்ந்தரியும்படிமேடத்துறையும்வெய்யோன்
மெச்சுமிடபத்தில்சந்திரன்மகரச்செவ்வாய்
விரவியதோர்கன்னிதனில்மேவியநற்புதனாம்
அச்சமறகடகத்தில்அரசனும்வந்திருக்க
அணிமீனராசிதனில்அமர்ந்திடும்சுக்கிரனும்
வச்சிரமாம்துலாமதனில்காரியெனும்கோளும்
வந்திருந்தால்உச்சமெனவேவழுத்தலாமே. 52

தொகுப்புரை:

ஒன்பது கிரகங்களும் பன்னிரண்டு ராசிகளில் எந்தெந்த ராசிகளில் எந்தெந்த கிரகங்கள் உச்சமாக இருப்பார்கள் என்பதை ஆராய்ந்து அறிவோமாயின்.

மேடராசியில் சூரியனும், இடபத்தில் சந்திரனும், மகரத்தில் செவ்வாயும், கன்னியில் புதனும், கடகத்தில் குருவும், மீனத்தில் சுக்கிரனும், துலாத்தில் சனியும் இருந்தால் உச்சனென்று சொல்லலாகும்.

உச்சம்-இடத்தாலும் தகுதியாலும் கிரகங்கள் செயலும் ஆற்றலும் மிகுந்து நிற்கும் நிலை. மேவிய-சென்றடைந்த. அரசன்-குரு. வச்சிரமாம். துலாம்-வலிமையான துலா ராசி.

காரி-சனி. கோள்-கிரகம். வழுத்தலாம்-சொல்லலாகும்.

மேடத்து உறையும் சூரியன், மெச்சும் இடபத்தில் சந்திரன், கன்னிதனில் மேவிய நற்புதன், அச்சமற கடகத்தில் குரு, அணி மீனராசி சுக்கிரன், வச்சிரமாம் துலாம் சனி, இவ்வாறு ராசி கிரகம் ஆகியவற்றை ஆசிரியர் சிறப்பித்துள்ளது அவ்வவற்றின் சிறப்பினையும், நுட்பத்தினையும் அறிந்து கொள்ளுவதற்கே ஆகும்.

கிரகங்கள் உச்சனாக (ஆகி) இருந்து பலன்களைத் தரும் ராசி இடங்களைச் சொன் ன அளவில், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கிரகங்களுக்குரிய உச்சஸ்தானங்களே சொல்லப்பட்டுள்ளன.

வலிமையுடன் பலன்களைத் தருவதும் செய்வதுமாகிய ராகு கேது ஆகிய இரண்டு பாம்பாகும். கிரகங்களின் உச்ச ஸ்தானங்கள் சொல்லப்படவில்லை. அதனை முறையே பிற நூல்களைக் கொண்டு கூறுவோமானால், இராகுவிற்கு-கும்ப ராசியும், கேதுவிற்கு விருச்சிக ராசியும் உச்சமாகும். ஸ்தானங்களாகும். மற்றும்,

தூமனுக்கும், தூம கேதுவுக்கும்-சிங்கமும், இந்திரனுக்கு-விருச்சிகம், தனுசும், பரிவேடத்துக்கு-மிதுனமும் நுட்பத்திற்கு-கும்பமும் உச்சமாகும் ராசிகளாகும்.

இன்ன கிரகத்திற்கு இன்னதேசம் உரியது என்பதன் விளக்கம்

பாரெலாம்சசிகதிரோனிருவர்க்கு மாகும்
பனிவரை கேகயத்தின்நடுபாம்புசனி நாடாம்
ஏருலவும் கேகயந்தொட்டுஎழில்விந்த மட்டும்
இந்த சுதன் பூமியென்றே இயம்புவர் நல்லோர்கள்
கார்செரியும் விந்தமுதல் கௌதமை மட்டாகக்
கனகனுக்காம் கிருஷ்ணைவரைக் காப்பிடனாடாமே
சீருலவு கிருண்ணைமுத லிலங்கை வரை யந்தச்
செவ்வாயின் தேயமென்றே செப்புவர் நல்லோரே. 53

தொகுப்புரை:

உலகம் முழுவதும் சந்திரன் சூரியன் இருவர்க்கும் உரிய நாடாகும். இந்தியாவில்இமயமலைக்கும் கேகயநாட்டிற்கும் இடையிலுள்ள நாடுகள் இராகு கேது சனி இவர்களுடைய நாடாகும். ஆழகு பொருந்திய கேகய தேசத்திலிருந்து பொலிவோடு நிற்கும் விந்திய மலை வரைக்கும் புதனுடைய தேசங்களாகும். மேகங்கள் நிறைந்த விந்தியமலை முதலாக கௌதமை ஆறுவரைக்கும் குருவுக்குரிய தேசங்களாகும். கௌதமையிலிருந்து கிருஷ்ணை ஆறு வரைக்கும் சுக்கிரனுக்குரிய தேசங்களாகும். சிறப்பமைந்தகிருஷ்ணா ஆறு முதலாக இலங்கைத் தீவுநாடு வரைக்கும் செவ்வாயின் தேசங்களாகும் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பார் எலாம்-உலகம் முழுவதும். பனிவரை-பனி தங்கியுள்ள இமயமலை. பாம்பு-இராகு, கேது. ஏருலவும்-அழகு நிரம்பியுள்ள. இந்து சுதன்-புதன். கார்-மழை மேகம். கௌதமை-கௌதமை என்னும் ஆறு. கனகன்-குரு. கிருஷ்ணை-கிருஷ்ணா நதி.

விளக்கம்:

உலகம் முழுவதுக்கும் சோதிட சாத்திரம் பொருந்துவ தாயினும் சிறப்பாகப் பாரத தேசத்திற்கு வடக்கு எல்லையாகவுள்ள இமயமலைக்கும், தெற்கே உள்ள இலங்கைத்தீவுக்கும் இடைப்பட்ட தேசங்களில் இன்னதேசம் இன்ன கிரகத்தின் ஆதிக்கம் உள்ள நாடாகும் என்பது இதனால் பாகுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இதில் மைய அடையாளமாக விந்தியமலை குறிக்கப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில், விந்திய மலைக்கு வடக்கே உள்ள சிந்துநதி, கங்கை நதி, இமயமலை ஆகியவற்றிற்கு இடையே உள்ள சமவெளிப்பிரதேசம். ஆரியாவர்த்தம் (ஆரிய நாடு)

என்றும், விந்திய மலைக்குத் தெற்கே இலங்கை உள்பட உள்ள தீபகற்ப நாடு திராவிட நாடு என்றும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்ப் பாகுபடுத்தியுள்ளனர். இந்தப் பெரும் பிரிவைக்கொண்டும் கிரகங்களின் ஆட்சி நாடுகளைக் கணிப்பிட்டுச் சாதகனின் பிறப்பிடத் தன்மையினை லக்கின பாவகத்துடன் காணுவது முன்னையோர் மரபாகும்.

1. சூரியன் சந்திரன் இரு கிரகங்களுக்கும் உலகமெல்லாம் உரிமை ஆதிக்கம் செல்லும்

2. சனி, ராகு, கேது ஆகிய மூவருக்கும் இமயமலை முதல் கேகய நாடு வரையில்

3. புதனுக்கு-கேகய நாடு முதல் விந்தமலை வரையில்

1. குருவுக்கு-விந்த மலை முதல் கௌதமி ஆறு வரையில்

2. சுக்கிரனுக்கு-கௌதமி ஆறு முதல் கிருஷ்ணா ஆறுவரையில்

3. செவ்வாய்க்கு-கிருஷ்ணா ஆறு முதல் இலங்கை வரையில் சொந்தமாகும் தேசங்களாகும்.

பஞ்ச பூத கிரகங்கள்

கண்ட பஞ்ச பூதமாய் நின்றவாறு காசினியெல்லாம்
செவ்வாயே பிருதிவி யாகும்
மிண்டிய சுக்கிரன்தான் அப்பான பூதம்
மேலான அக்கினியே குருவதாகும்
கொண்டிருந்த வாயுவே புந்தியாகும், குலவிய
நன்னுதல் மாதே கூறக்கேள் நீ
கொண்டலுளும் ஆகாயமான பூதம்
கோதுற்ற சனியென்றே குறித்தார் மேலோர். 54

விளக்கவுரை:

விளங்குகின்ற நல்ல நெற்றியையுடைய பெண்ணே, கிரகங்களுக்குரிய பஞ்சபூதத் தன்மையினைக் கூறுகின்றேன்.

நீ கேட்பாயாக! உலகில் காணப்பெறும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பாகுபாட்டுடனமைந்த ஐந்து பூதமெனும் சக்திகளுள் எந்தெந்தக் கிரகம் எந்தெந்தப் பூதமயமானது என்பதனைக் கூறுவோமாயின், செவ்வாய் கிரகம், பிருதிவி எனும் பூமியாவான், சுக்கிரன் அப்பு என்னும் நீராவான், குரு தேயு எனும் நெருப்பாவான். புதன் வாயு என்னும் காற்றாவான், குற்றம் பொருந்திய சனி மேகங்கள் பொருந்திய ஆகாயம் என்னும் வானாவான் என்று கற்றறிந்த மேலோர்கள் திட்டமாகக் குறிப்பிட்டனர்.

அருஞ்சொற்பொருள்:

பஞ்சபூதம்-நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்) பிருதிவி-பூமியாகிய நிலம். மிண்டிய-கூடிய. அப்பு-நீர். அக்கினி-நெருப்பு. வாயு-காற்று. புந்தி-புதன். கொண்டல்-மழைமேகம். கோதுற்ற-குற்றம் பொருந்திய. குறித்தார்-திட்டமாகச் சொன்னார்கள்.

மூலத்திரிகோணம்

குலவிய மூலத் திரிகோணங்கள் என்றே
கூறுதல் சிங்கம் சூரியருக்கே ஆகும்
நிலவு தனக்கே இடபம், செவ்வாய்க்கு மேடம்
நின்ற புத்தி தனக்கே கன்னி, குரு, வில்லாகும்
இவகிய வெள்ளிக்குக்கோல், சனிக்குக்கும்பம்
இவர் தமக்குத் தானவிய பாக்கியம்
நாலஞ்சு நலமாகும் மற்றதிப ருச்ச வீட்டோர்
நல்லுறவு பகையும் மற்றோர் நவிலுங்காலே.

தொகுப்புரை:

கிரகங்களுக்குரிய மூலத்திரிகோணத்தைச் சொல்லுவோமானால், சூரியனுக்கு-சிங்கராசியும், சந்திரனுக்கு-இடபராசியும், செவ்வாய்க்கு-மேட ராசியும். புதனுக்கு-கன்னிராசியும். குருவுக்கு-தனுசு ராசியும். சுக்கிரனுக்கு-துலாம் ராசியும் சனிக்கு-கும்ப ராசியும் ஆகும்.

கிரகத்தின் மூலத்தலைமையிடமான மூலத்திரிகோண ராசிக்கு நாலாம் ராசி ஐந்தாம் ராசி நலம் காண்பதாகும். மற்ற இராசிக்குரியவன் உச்ச வீட்டோர் சேரின் பகையும் சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்:

குலவிய-தங்கிய. மூலத்திரிகோணம்-கிரகங்களின் தலைமையான இடத்திலிருந்து காணும் ஐந்தாவது ராசியிடம். சிங்கம்-சிம்மராசி. நிலவு-சந்திரன். இடபம்-இடபராசி. புந்தி-புதன். வில்-தனுசு ராசி. வெள்ளிக்கு-சுக்கிரனுக்கு. கோல்-துலாம் ராசி. சனிக்கு கும்பம்-சனிக்கு கும்பராசி. சனிக்குரிய மூலத்திரிகோணராசி மகரம் என்று கூறுவது உண்டு.

சுவடியில் உள்ள செய்திகள்:

சூரியனுக்கு மூலத்திரிகோணம் சிங்கத்தில் இருபது நாள். இந்தப்படி நவக்கிரகங்களுக்குக் கண்டுகொள்க.

இப்பால் குண சுத்தியறிவது.

சூரியனுக்கு சிங்கத்தில் முதல் 20 நாள் மூலத்திரிகோணம்

சந்திரனுக்கு இடபத்தில் பின் 27 நாள் மூலத்திரிகோணம்.

செவ்வாய் மேடத்தில் முதல் 12 நாள் மூலத்திரிகோணம்.

புதனுக்கு கன்னியில் பின் 5 நாள் மூலத்திரிகோணம்.

குருவுக்கு தனுசில் முதல் 10 நாள் மூலத்திரிகோணம்

சுக்கிரனுக்கு துலாத்தில் முதல் 15 நாள் மூலத்திரிகோணம்

சனிக்கு கும்பத்தில் முதல் 20 நாள் மூலத்திரிகோணம்

30 பாகையை நாளாகக் கொண்டு மீதி நாட்கள் ஆட்சி நாட்கள் என்று கொள்ளுவர். பிற ஆசிரியர்கள் இம்முறையில் மாற்றமாகவும் கூறுவர்.

சூரியன் சுக்ரன், சனி, குரு இவர்கள் விஷயத்தில் முதல் இருபது நாட்கள் முறையே-சிங்கம், துலாம், கும்பம், தனுசில் மூலத்திரிகோணமாகும் என சாதக பாரிஜாதம் நூல் கூறுகிறது.

இலக்கின நிச்சயம் காணல்

உதயாதி கடிகைதனை முந்நான்கில் ஈந்தே
உற்ற சேடந்தன்னை ஆடாதி எண்ணிச்
சிதையாமல் பார்க்க லக்கினமாகும் அந்தத்
திரிகோணம் ஆனாலும் ஆகும் இன்னம்
முதல்காணும் லக்கினத்துக் கேழாம் தானம்
முதற்கொண்டு திரிகோணந் தானுமாகும்
மதயானை இருமருப்பு கனகவெற்பு பூவன்
சமூகம் போலும் முலை வஞ்சியரே கேளாய்! 56

தொகுப்புரை:

மதங்கொண்ட யானையின் இரண்டு தந்தங்களையும், பொன் மலையையும் பூவன் வாழைப்பூ மொட்டையும் போன்ற தனபாரங்களை உடைய அழகிய பெண்ணே கேட்பாயாக!

சீவன் பிறந்த அன்றைய, சூரிய உதயமுதல் ஜனனம் வரைக்கும் ஏற்பட்ட கடிகையை நாழிகையைப் பன்னிரண்டு பாகத்தால் வகுத்து மீதமாகும் எண்ணை மேடம் முதலாகச் சூரிய சஞ்சார கடிகைப்படி முறையாக எண்ணும்போது ஜனன காலக் கடிகை (நாழிகை) பொருந்தும் ராசியிடமே ஜனன கால லக்கினமாகும்.

அல்லது அதற்குத் திரிகோணராசியாகிய 5, 9, ஆம் ராசிகள் ஜனன கால லக்கினம் ஆனாலும் ஆகும். மற்றும் முதலில் சூரிய இராசி சஞ்சாரப்படி எண்ணிக்கண்ட லக்கினராசிக்கு ஏழாகும் ராசியிடம் முதற்கொண்டு 5, 9 ஆக எண்ணிக்காணும் திரிகோணராசியாகவும் ஜனன லக்கினம் அமையும்.

அருஞ்சொற்பொருள்:

உதயாதி-சூரிய உதயாதி நாழிகை. கடிகை-நாழிகை. முந்நான்கு-3 × 4=பன்னிரண்டு (ராசிகள்). சேடம்-மிச்சம். ஆடாதி-ஆடு, ஆதி, மேடம் முதலான ராசிகள். இன்னம்-மேலும். தானம்-ராசி, இடம். மருப்பு-தந்தங்கள். சமுகம்-மொட்டு. வஞ்சியர்-கொடி போன்ற அழகுத் தோற்றமுடைய பெண்கள்.

விளக்கக்குறிப்பு:

மானிடப்பிறப்பிற்குச் சாதகம் கணிப்பதற்கு. தாயின் நிறைவான கர்ப்பத்திலிருந்து சிசுவின் சிரசு பூலோகம் காணும் அளவில் குறிக்கப்படும் மணி நிமிடம் அதற்கான நாழிகை, விநாடி ஆகியவை மூலமானதாகும். பிறக்கும்போது, தவறில்லாமல் குறிக்கப்படும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்த மாத நாளுக்குரிய இராசியில் சூரியனின் இருப்பு காலத்தினைக் கொண்டு, பிறந்த நாழிகை வரையில் தொடர்ந்து எண்ணிக் காண்பதுவே லக்கின நிச்சயமாக அமையும் ராசியாகும்.

பிரசவ காலத்தில் அல்லது சூழ்நிலையில் ஏற்படும் மாறுபாடுகளால் பிறந்த நேரத்தில் திட்டம் இல்லாதிருந்தால், லக்கின நிச்சயம் செய்வதற்குச் சோதிட நூலாசிரியர்கள் பல வழிகளை நிர்ணயம் செய்துள்ளனர். பிறந்த நேரமாகக் குறிப்பிட்ட நேரத்தில் அன்றைய நட்சத்திரத்தின் பாகத்தில் நின்ற சந்திரனைக் கொண்டு சந்திரா லக்கினம் ராசி சக்கரத்தில் குறிக்கலாம்.

1. எனவே, சந்திரன் நின்ற லக்கினம் அதாவது சந்திராலக்கின ராசியாதிபதி கிரகம் எந்த ராசியிடத்தில் இருக்கின்றானோ அந்த ராசி கிரகத்திற்கு 1, 4, 5, 7, 9, 10 ஆகிய வீடுகளில் ஒன்று, குறிப்பிட்ட ஜனன காலத்திற்கு வந்தால் அது இலக்கின நிச்சய ராசியாகும். அல்லது 7வது வீட்டிலாவது, அந்த 7க்கு ஒன்பதாவது வீட்டிலாவது பொருந்துமாயின் அதனை ஜனன லக்கினமாகக் கொள்ளலாம்.

2. சந்திரா லக்கினம் மட்டும் குறிக்கப்பட்ட ராசி மண்டலத்தில் 1, 3, 4, 5, 7, 10 ஆகிய இடங்களில், சந்திரன் நின்ற வீட்டுக்குடையவன் ஏதாவதொன்றில் நின்றால் அதுவே ஜனன லக்கினமாகலாம்.

3. 1, 3, 4, 5, 7, 10 ஆகியவற்றில் எந்த வீட்டில் சந்திரன் நின்ற இராசிக்குடையவன் இருக்கின்றானோ அதுவே லக்கின நிச்சயமென்றும் சொல்லலாம்.

இதில், அன்றைய நாளுக்குரிய ஆண் பெண் கால நிர்ணயத்தினையும் ஒத்துப் பார்த்து, குறிப்பிட்ட பிறப்பு நேரத்திற்கு வரும் (ஆண், பெண்) பிறப்பினைக்கொண்டும் ஜனன கால லக்கினத்தினை நிச்சயித்துக் கொள்வது சிறப்பாகும்.

சந்திராலக்கினத்தினைக் கொண்டு அறியும் பலாபலன்களில் முக்கியமானவை பொருந்தி வருமானால்,

சொல்லப்பட்ட நேரத்திற்கு, சூரிய காலங்களை இராசிகளுக்குக் கொண்டு வரும்போது பொருந்தும் இராசி ஜனன லக்கினமாவதை திட்டப்படுத்தலாகும்.

பொதுவாக, நுட்பமாகவும், திட்பமாகவும் அனுசரித்து ஜனன காலத்தினை நிர்ணயம் செய்வது முறைமையாகும்.

இலக்கினக் கணிப்பில் ஓரையாலறிவது

வஞ்சிநீ தந்த லக்கின முற்பாதி
மார்த்தாண்டன் ஓரையின் பாதி மதி ஓரை
மிஞ்சி நின்ற இரட்டைக்கு முன் திங்கள் ஓரை
மீய்ந்திடு பிற்பாதிக்கு வெய்யோன் ஓரை
செஞ்சொல்மதி ஓரையே கண்டு காண்கின்
சேயிழையே பிறக்குமெனச் செப்பலாமே
கஞ்சமலர் நண்புஇரவி ஓரையதே ஆகில்
காளையே பிறந்தான் எனவே கருதவேண்டும். 57

தொகுப்புரை:

வஞ்சிக்கொடி போன்ற பெண்ணே! நீ தந்த லக்கின நிச்சயத்தைக் கொண்டு அறிவது. லக்கின பாகத்திற்கமைந்த ஓரையின் முன்பாதி சூரியன் ஓரையும், பின் பாதி சந்திரன் ஓரையுமாகும்.

பெண் ராசி லக்கினத்தில் முன்பாதி சந்திரன் ஓரையும், மிகுந்திருக்கும் பின் பாதிக்குச் சூரியன் ஓரையும் ஆகும்.

சந்திரன் ஓரையில் காண்பதாயின், பெண் பிறந்ததெனச் சொல்லலாகும். தாமரையை மலர்விக்கும் நண்புடைய சூரியன் ஓரையானால் ஆண் பிள்ளையே பிறந்ததாகும் என்று சொல்லலாகும்.

ஒரு நாளுக்குரிய பகல் இரவுக்காலங்களில் தொடரும் ஓரைக் காலத்தினை அளவிட்டு அறியும் முறைமை முன்னர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

பிரதி செய்த ஆசிரியர் வசனம்.

இன்னும் லக்கின சந்தை அறியும்படி, பிரதிக்கிரகம் நின்றதைக் கண்டு லக்கின நிச்சயம் பண்ணவும்.

அருஞ்சொற்பொருள்:

வஞ்சி-வஞ்சிக்கொடிபோன்ற பெண். மார்த்தாண்டன்-சூரியன். மதி-சந்திரன். வெய்யோன்-சூரியன் செஞ்சொல் மதி-செம்மையான நல்ல சொற்களை வழங்கும் சந்திரன். கண்டு காண்கின்-முற்பாதி பின்பாதி கண்டு பிறக்கும் பிள்ளை ஆணா, பெண்ணா என்று காண்பதாயின் கஞ்ச மலர்-தாமரை மலர். இரவி-சூரியன். காளை-ஆண் பிள்ளை.

இராசியில் சூரிய சாயை காலச் சங்கியை
சூரியன் விழிச்சாயை அறியும்படி

வேண்டிய மேடம் நாலேகால் என்றோதும் மேன்மை
இலங்கைக்கு அகசு மிகும் சோளநாட்டில்
ஈண்டியதோர் சாயை ரெண்டுங் கூட்டிக்கண்ட
இலக்கம் மாமதுரை, ஏழில் காஞ்சி, (காசி)

நீண்ட திக்கும் வேங்கலூர் தனக்கும் சாயை நின்றது
பார்த்தால் குறைந்து நிற்கும், மேடம்
மாண்ததகை சேர் விழிச்சாயை கண்டால் சென்மமான
லக்குண சுத்தி அறிந்துசெப்பும்!

தொகுப்புரை:

கணித்துக்கண்ட லக்கின ராசி சரிதானா என்பதை இலங்கை முதலாக வடக்கே அமைந்த நாடுகளின் பேரூர்களில் காணும் சூரியோதய சாயையின் துல்யமான அளவினைக் கொண்டு ராசிகளுக்கு இடத்தின் பாகையறிந்து ஒப்பிட்டு அறியும் உபாயம் இப்பாடல் தருகின்றது.

இணைத்துப் பழமையுடன் விரும்பப்பட்ட இலங்கை நாட்டில் மேட ராசிக்கு சூரியன் இருப்பு நாலேகால் நாழிகை என்று சொல்லப்படும். இலங்கையைவிட சோழநாட்டிடங்களில் சூரியோதய பகற்பொழுது மிகுவதாகும். இது, அவச்சாயை பாதசாயை என்கிற இரண்டையும் கூட்டிக்கொண்ட தொகையாகும். மதுரை, காஞ்சிபுரம், ஆகிய ஊர் இடங்களுடன் தொலை தூரத்திலுள்ள பெங்கலூர், காசி இவைகளுக்குச் சாயை நின்ற அளவைப் பார்த்தால் மேட ராசிக்குக் குறைந்திருக்கும். சிறப்பான அளவும் பொருந்திச் சேர்ந்த சூரிய உதயமாகும். மேட விழிப்புச்சாயை எந்த ராசியில் பொருத்தமானதோ அதைக் கண்டால், அது முதலாக லக்கின சுத்தியான இடம் எது என்பதனை அறிந்து சொல்வாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

மேடம்-மேட ராசி. நாலே கால்-நான்கே கால் நாழிகை. அகசு-பகல் தோற்றம். சோளநாடு-சோழநாடு. ஈண்டிய-தொகுப்பாகக் கண்ட. சாயை-சூரியகதிர்காணும் கதிரொளி. ரெண்டும்-இரண்டும் . இலக்கம்-எண். மாமதுரை-பெரிய மதுரைப் பெருநகரம். எழில் காஞ்சி-அழகுள்ள காஞ்சிபுரம். நீண்ட-தொலைவு நீண்ட வேங்கலூர்-பெங்கலூர். லக்கின சுத்தி-லக்கினம் இதுவேயாகும் என்னும் நிச்சயம்.

குறிப்பு:

நாளுக்குரிய கால அளவாகிய 60 நாழிகையில் அடங்குவதாகும். மேட ராசியின் கால அளவினை கணக்கிட்டு அறிதற்கு அவச்சாயை பாதச்சாயை இரண்டும் கூட்டிக் கண்ட தொகையைக் குறிப்பிட்டுள்ளார்.

நாள் ஒன்றுக்கு	-	60 நாழிகை 24 மணி
நாழிகை ஒன்றுக்கு	-	24 நிமிடம்
விநாடி ஒன்றுக்கு	-	24 செகண்ட்
மணி ஒன்றுக்கு	-	2½ நாழிகை
நிமிடம் ஒன்றுக்கு	-	2½ விநாடி

தக்ககதிர் ஈழமுதல் வெய்யோன் சாயை
சாற்றுதற்குக் காலவகைத் தகவு காணின்
அக்கமுறும் மேடராசி நாலே காலாம், அழகெருது
ஆகும்மேற்கால், ஐந்தேகால்மிதுனமது ஆகுமேதான்
கக்கடகம் ஐந்தரையாம் கால்குறையாம் சிம்மம்
கன்னி, கோல் ஐந்தைந்தாம், கருந்தேள் கால் மேல்
தக்கவில் ஐந்தரையாம் தாவு சுறா ஐந்தேகால் தானுகும்பம்
மிக்கவே நாலேமுக்கால் மீனமது நாலே காலாம்.

சுவடிப்பிரதி ஆசிரியர் குறிப்பு-வசனம்

மேடம், ரிஷபம், கன்னி, தனுசு, நாலுக்கும், முன் அரை நாழிகையும், மிதுனம், சிங்கம், துலாம், கும்பம், இது நாலுக்கும் நடுமத்தியிலே அரை நாழிகையும், கற்கடகம், விருச்சிகம், மகரம், மீனம் இது நாலுக்கும் கடைசியிலே அரை நாழிகையும் இப்படி லக்கினத்தியாச்சியம் தள்ளி லக்கின பலன் அறியவும்.

சீவன் பிறந்த மனை, திக்கு, அடையாளம்

சேய் உதிக்கும் மனை இருக்கும் திசை மகரம் சிங்கம்
சென்ம லக்கினமாகில் தெற்கு மூலை
ஆயிருக்கும் கன்னி தனு சேல் மிதுனம் வடக்கதாகும்
அமைப்புடனே இடபமே மேற்கதாகும்

வேய் உதிக்கும் தோளணங்கே கும்பம் மேடம்
விருச்சிகம் கோல் நண்டு பார்வேந்தன் திக்காம்
ஏய் உதிக்கும் தேய்பிறைக்குள் நெய் தீபத்திலில்லை
இரவுவளர் பிறைக்குள் நெய் நிறைந்திருக்குந்தானே.

தொகுப்புரை:

மூங்கில் போல் தோன்றும் தோள்களை உடைய பெண்ணே! மகரமும், சிங்கமும் சென்மலக்கினமாக இருந்தால் அந்தப் பிள்ளை பிறந்த வீடு தெற்கு மூலையில் இருக்கும். கன்னி, தனுசு, மீனம், மிதுனம் ஆகியவற்றி லொன்று லக்கினமாக இருந்தால், பிறந்த மனை வடக்கு திக்குகில் இருப்பதாகும். பொருத்தமுடையதான இடபத்திற்கு மேற்கு திசையாகும். கும்பம், மேடம், விருச்சிகம், துலாம், கடகம் ஆகிய ராசிகளிலொன்று லக்கினமானால் சூரியன், இந்திரன் திசையாகும் கிழக்கு ஆகும். பொருந்திய வடிவில் உதிக்கும் தேய்பிறை நாட்களில் பிள்ளை பிறந்தால் அங்கிருந்த தீபத்தில் எண்ணெய் குறைவு இல்லை என்பது ஆகும். வளர் பிரை நாட்களானால் தீபத்தில் எண்ணெய நிறைந்திருப்பது அடையாளமாகும்.

அருஞ்சொற்பொருள்:

சேய்-குழந்தை. மனை-பிறந்த வீடு, சேல்-மீனம், வேய்-மூங்கில். கோல்-தரா,. துலாம். நண்டு-கற்கடகம். பார்வேந்தன் இந்திரன்-உலகத்திற்கு சீவ ஒளி தரும் அரசனான சூரியன். தீபம்-விளக்கு. பிறைக்குள்-வளர்பிறை நாட்களுக்குள் பிள்ளை பிறந்தால்.

குறிப்பு விளக்கம்:

பாடலில் சேய் உதிக்கும் மனை இருக்கும் திசை மகரம் சிங்கம் சென்மலக்கினமாகில் தெற்கு மூலை என்ற படி குழந்தை பிறந்த மனை இருக்கும் திசை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதனை விபரப்படுத்தி அறிய வேண்டும். ஒன்று, தெருவிற்குத் தெற்கு மூலை என்பதைக் கொண்டு தெற்கு பாகம் என்று காணலாம். இதில்

நுட்பமானது, குழந்தை பிறந்த மனை இருக்கும் திசை என்பதால், ஊரின் தெற்கு மூலையிலுள்ள அல்லது பாகத்திலுள்ள மனை என்றும் கொள்ளலாம். மற்றும் மனை என்பதைக் கொண்டு வீட்டின் தென்பாகத்தில் குழந்தை பிறந்துள்ளது என்பதும் அறியப்பெறுவதாகும். இவ்வாறே மற்றைய லக்கின ராசிகளுக்கும் திசை காண்பது சிறப்புடையதாகும்.

பிறந்த இடத்தில் தீபத்தரங்கள்

நிறைந்த திரலக்கினமே ஆதியானால்
நீண்டிருக்கும் குறைந்திருக்கும் மந்தமாகில்
பிறந்தருளும் லக்கினமே சரமேல் தீபம்
புறம்பாகும் மந்திர உபயம் பெரிதுள்ளாகும்
அறைந்தசனி அங்கிசம் வீடாகில் அதில் காரி
அம்புலியைப் பார்க்க இருளகமேயாகும்
சிறந்த மதிக்கும் சேய்க்கும் அங்கிசம் வீடாகில்
செய்யசனி பார்க்கிலோ சேர்வன் புலத்தெருவை.

தொகுப்புரை:

நிறைந்த ஸ்திர ராசியே ஜனனராசியானால், பிரசவ அறையில் தீபம் நிறைவாக அமைந்திருக்கும், ஜனன ராசியில் மந்த கிரகங்களிருந்தால் விளக்கு வெளிச்சம் குறைந்ததாக இருக்கும். பிறந்துள்ள லக்கின ராசியானது சரராசியானால் பிரசவ அறையின் பக்கப்புறமாக தீப வெளிச்சம் இருந்திருக்கும். மற்றும் சுகப்பிரசவமாவதற்காக வேண்டுதலை செய்த மந்திர காணிக்கைகள் அறையின் உள்ளே இருப்பதாகும். சொல்லப்பட்ட சனி ஜனன லக்கினத்திலிருந்து சந்திரனைப் பார்க்க பிரசவித்துள்ள அறை அப்போது தீபமில்லாமல் இருளான இடமாக இருக்கும். உயர்ந்த சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் சேர்ந்த இடம் ஜனன லக்கினமானால் அவர்களைச் சனி பார்ப்பதாக அமைந்திருந்தால் பிரசவித்த இடம் புலைத்தெருவைச் சார்ந்ததாக இருக்கும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

ஸ்திரம்-நிலைப்பான இடம், சரம்-சஞ்சார இடம், ஆதி-முதல் லக்கினம் அதாவது ஜனன காலத்திற்குரிய ராசி. மேல்தீபம்-அறையில் மேலான இடத்தில் தீபம் இருந்திருக்கும். புறம்பாகம்-அறைக்கு வெளியிடமாகும். மந்திர உபயம்-மந்திர காணிக்கை. காரி-சனி. அம்புலி-சந்திரன். இருளகம்-இருளாகவுள்ள வீட்டறை. சோய்-செவ்வாய். அங்கிசம்-இணைந்த சேர்க்கை. புலத் தெரு-புலையர் வாழ்கின்ற தெரு.

குறிப்பு:

இப்பாடலில்-குழந்தை பிரசவமான அறையில் குழந்தை பிறக்கும் நேரத்தில் இருந்த விளக்கு வெளிச்சங்களின் தரங்கள் கூறப்பட்டுள்ளன. சுகப்பிரசவம் ஆகவேண்டி பெரியோர் செய்து கொண்ட வேண்டு தலைக் காணிக்கைகள் அறையின் ஒரு பக்கம் இருந்தது குறிப்பிடப்படுவதற்குரிய லக்கின கிரக அங்கிசங்கள் பார்வை ஆகியவை கூறப்பட்டுள்ளன. குழந்தை வழியிடையே அல்லது தாழ்ந்தோரின் தெருவைச் சார்ந்த இடத்தில் பிறந்துள்ளது என்பதனை அறிவதற்குரியதான சனியின் பார்வை ஆதிக்கம் கூறப்பட்டுள்ளது. அறிந்து கூறுவதற்கான சாதனங்களாகும்.

செனன விபரம், இருந்தவர், குழந்தை நிறம் -அறிய

தெரிவைக்குத் துன்பமில்லை, லக்கினத்து ஆதிக்கே
தீயவனே அந்தமெனில் தேன்மொழிக்குத் துன்பம்
மருவிய லக்கினம் முதல் மதியவன் இருக்கு மட்டும்
எண்ணி இருந்தவர் மடவார் இருப்பர் மருவியேதாம்
சருவிய நற்சுபர்காணில் தான்தோன்றும் விரைவில்
சனி குசன் பார்த்திடில் சஞ்சலம் வந்துற்றிடுமே
பெருமையுடன் இருந்த கோள் நிறம் குழவிதனக்கே
பெறுமென்றே பெரியோர்கள் உரைப்பார்கள் பெறவே.

தொகுப்புரை:

எந்த லக்கினத்தில் குழந்தை உதயமானதோ அந்த உதயகாலத்தில் உதயராசியில் சுபகிரகம் இருந்தால் தாய் துன்பமில்லாமல் பிரசவிப்பாள்.

தீய கிரகம் இருந்தால் தாய் துன்பப்பட்டு பிரசவிப்பாள்.

லக்கினராசி முதலா, சந்திரன் இருக்கும் ராசி வரையில் எத்தனை கிரகங்கள் ராசிகளில் உள்ளார்களோ, அத்தனை எண்ணிக்கையில் பிரசவத்தின்போது பெண்கள் சமீபமாகச் சார்ந்து இருந்திருப்பார்கள்.

உதய லக்கினத்தை சுபரான கிரகங்கள் பார்த்தால் சுப பிரசவம் சீக்கிரத்தில் ஏற்படும்.

சனியாவது, செவ்வாயாவது உதயலக்கினத்ததைப் பார்த்தால் மிகவும் கவலைப்படும் அளவில் தாய்க்குத் துன்பம் உண்டாகிப் பிரசவமாகும்.

இலக்கினத்தில் இருந்த கிரகம், அல்லது கிரகங்களின் நிறம் அடையாளம் ஆகியவை குழந்தை பெற்றிருக்கும்.

இதனை யாவரும் அறியவே சோதிடத்தில் வல்ல பெரியோர்கள் சொன்னார்கள்.

அருஞ்சொற்பொருள்:

தெரிவை-பிரசவிக்கும் தாய். ஆதிக்கே-லக்கின உதய காலத்தே. தீயவன்-கெட்ட கிரகம் (பாவியர்) தேன்மொழி-தாய். மதியவன்-சந்திரனவன். மடவார்-பெண்கள். சருவிய-பகையின்றிபழகிய. சுபர்-சுபகிரகங்கள். தான் தோன்றும்-தானே சுபபிரசவமாகும். குசன்-செவ்வாய், சஞ்சலம்-கவலைக்கிடமான துன்பம். கோள்-கிரகம். குழவி-பிறக்கும் குழந்தை பெறவே-யாவரும் அறந்து கொள்ளவே.

இப்பாடலில் குழந்தை பிறக்கும் போது, தாயின் நிலை, அப்பொழுது ஏற்படும் சுபபிரசவம், துன்பமான பிரசவம்.

பிரசவம் பார்த்த பெண்கள் உதவியான பெண்கள். குழந்தையினி நிறம், மரு அடையாளங்கள் ஆகியவை விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

கிரக நிறங்கள்:

சூரியன்-சிவப்பு. சந்திரன்-வெள்ளை. செவ்வாய்-வெளிர்சிகப்பு. புதன்-பச்சை. குரு-மஞ்சள். சுக்கிரன்-வெண்மை. சனி-கருமை. ராகு-வெளிர்கருமை. கேது-வெளிர்சிகப்பு.

இவ்வாறாக கிரகங்களுக்குரிய நிறங்களை அறிந்து பிறக்கும் குழந்தையின் நிறத்தினைக் குறித்தும் சார் ந்தும் சொல்லுதல் நயப்புடையதாகும்.

பிரசவ காலத்தில் - இருந்தவர், கண்டவர்

தான்அருகே இருந்த மடவார்பருவம் கூரின்
சனி இருந்து கண்டக்கால் தலைநரைத்த கருப்பி
ஈனம்இலா குசன்இருந்து காணின்முதுவயதே
இசையும்நிறம் சிவப்பாக இருப்பள்அமங்கலையாம்
நாளில்மென்குரு வெள்ளிசசி இருந்து கண்டால்
காலநாரி சுமங்கலிவாலை, நற்புதன்மத்திமையாம்
மானில மேல்பாம்பு இருந்தால்அரசாறமடந்தை
மகவுநூரேதரித்து வந்திடும்கண்டீரே. 62

தொகுப்புரை:

தாய் பிரசவிக்கும் காலத்தில், அருகே இருந்த பெண்களின் அடையாளம் பருவம் ஆகியவற்றைக் கூறுவோமாயின்

சனி லக்கினத்தில் இருந்தாலும் பார்த்தாலும் தலை நரைத்துப்போனகருப்பி இருப்பாள்.

செவ்வாய் இருந்தாலும் பார்த்தாலும் சிவந்த நிறம், வயது முதிர்ந்தவள் விதவை அருகில் இருப்பாள்.

குரு,சுக்கிரன், சந்திரன் இவர்கள் லக்கினத்தில் இருந்தாலும் பார்த்தாலும் அப்போது இருந்தவள் சுமங்கிலி வாலிபப் பருவமுள்ளவளாவாள்.

நல்ல புதன் இருந்தாலும் பார்த்தாலும் நடுத்தரமான வயதும் நிறமும் உள்ளவள் இருப்பாள்.

இராகு, கேது இருவரில் ஒருவர் லக்கினத்தில் இருந்தாலும் பார்த்தாலும் அனாசாரமுடைய பெண் இருப்பாள், பிள்ளையும் மாலை போட்டுக்கொண்டதாக (கொடி சுற்றல்) பிறக்கும்.

இதனைக் கண்டு அறிவீர்களாக. ஜனன லக்கினம்-விதியாகும். சந்திராலக்கினம்-நட்பு நியதிகட் காகும். எனவே பாடலில் கண்டுள்ள கிரக முறைகளைக் கொண்டு பலன் காணும்போது இவ்விரண்டு உதய ராசிகளையும் அவற்றில் இருந்த அல்லது பார்த்த கிரகங் களையும் பார்த்துத் திட்டமிட்டுப் பலன் காண்பது நற்பயன் தரும்.

குறிப்பு:

பிரசவம் நிகழும் காலத்தில் இடத்தில் இருந்த பெண்களை சோதிட முறையால் கண்டு கூறுவதற்கு உரியதான இப்பாடலில், சோதிட ராசிக்குக் கண் போன்ற சூரியனை வைத்துப் பலன் தரவில்லை. ஆனாலும், சூரியன் லக்கின பாகங்களில் இருந்தாலும் பார்த்தாலும் அரசாங்க உத்தியோகத்தினர் அருகில் இருப்பார் என்று சொல்லலாம். அது சந்திரபார்வை பெற்றால் பெண் என்று காணலாம்.

அருஞ்சொற்பொருள்:

மடவார்-பெண்கள். பருவம்-வளர்ச்சிப்பருவம், வயது, ஈனம் இலா குசன்-நீச்சம் பெறாத செவ்வாய். சிவப்பாம்-ஓரளவு சிவந்த மேனி என்று கொள்ள வேண்டும். அமங்கலை-கணவனை இழந்தவள். நாளில்-பிரசவித்த நாள்-பொழுதில். சசி-சந்திரன். கால நாரி-அக்காலத்தில்

அங்கிருந்த பெண். வாலை-வலிய பருவப்பெண். மாநில மேல்-ஜனன கால ராசி இடத்தில். நூர்-குடல்கொடி, தொப்புழிக்கொடி.

பெற்றதாயின் பருவநிலை, வீட்டின் தரம் - அறிய

கண்டு மொழி மாதாவின் பருவம் கூறின் கரி
கதிர் குரு மூவர் கண்டால் விருத்தையாகும்
மண்டு வெள்ளி சேய் பார்க்கில் வயது மத்திமமாம்,
மதி புதனும் கண்டக்கால் வாலையாவாள்,
மிண்டு முடவன் இருந்தால் வீடுபுராதனம் சேய்
மேவில் வெந்து கட்டினதோர் வீடேயாகும்
பண்டு சசி பார்க்கில் வீடு புதியதாகும்
பரிதிக்கு மரம் திரண்ட பதியெனச் சொல்லுவாயே. 63

தொகுப்புரை:

குழந்தையைப் பெற்ற தாயின் பருவ வயதினைச் சொல்லுமிடத்து

ஜனன லக்கினத்தை சனி, சூரியன், சந்திரன் ஆகிய மூவர் பார்த்தால் தாய் வயதானவளாக இருப்பாள். திடகாத்திரமும் லெட்சுமீகரமும் இனியமொழியும் உடையவள்.

சுக்கிரன், செவ்வாய் இவர்கள் பார்த்தால் மத்திம வயதும் பாக்கியமும் உடைவளாக இருப்பாள்.

ஜனன லக்கினத்தை சந்திரனும், புதனும் பார்த்தால் தாய் வாலிபபருவமும் லெட்சணமும் உடையவளாக இருப்பாள்.

சனி ஜனன லக்கினத்தில் இருந்தால், தாய் பிரசவித்த வீடு புராதனமானதாகும்.

செவ்வாய் இருந்தால் தீயினால் பட்டு திருத்தப்பட்ட கட்டிடமாகும். (செங்கல் ஓடு வீடு எனலாம்)

சந்திரன் மட்டில் பார்த்தால் அந்த வீடு புதிதாகக் கட்டிய வீடாகும்.

சூரியன் பார்த்தாலும் இருந்தாலும் மரங்களால் கட்டப்பட்ட இடம் என்று சொல்லுவாயாக. (கூரை வீடு என்றும், மரங்கள் சூழ்ந்த தோப்பினுள் இருப்பிடம் என்றும் கூறலாம்.)

அருஞ்சொற்பொருள்:

கண்டு மொழி-கற்கண்டைப் போன்ற இனிய சொல்லை உடைய. மாதா-தாய். காரி-சனி. விருத்தை-வயதானவள். சேய்-செவ்வாய். மத்திபம்-30-40 வயதுக்குட்பட்ட மத்திம வயதானவள். வாலை-பருவ மங்கை. முடவன்-சனி. புராதனம்-பரம்பரையாக வரும் பழைய வீடு. சசி-சந்திரன். பரிதி-சூரியன் . பதி-வசிக்கும் இடம்.

சந்திரப்பார்வை வளர்பிறைச் சந்திரனாயின் நூதனமான அழகிய வீடு எனலாம்.

சனி ஆட்சியோ உச்சமோ பெற்ற இடமாக ஜனன லக்கினம் சனியோடு இருந்தால் வலிமை மிகுந்த வீடு எனலாம்.

தாய் வாழும் வீடும், விரும்பும் சுவையும்

சொல்லும் புதன் பார்த்திருந்தால் சித்திர வீடாகும்
சுக்கிரன் பார்த்திருந்தால் சுசி வீடாகும்
வல் அரசன் இருந்து கண்டால் கெட்டி அகமாகும்
மின்னனையார் விரும்பு சுவை வெய்யவனே உரைப்பாம்
நல்ல மதிக்கு உப்பாகும், சேய் துவர்ப்பை நாடும்
நாலுவகைச் சுவை புதனே, நல்கி வைப்பான்
வல்லவராம் குரு மகரம், வெள்ளி, புளிப்பாகும்
அணிகாரி கசப்பு லக்கினத்திசையில் சிரசே. 64

தொகுப்புரை:

வாக்காதிபதி என்று சொல்லப்படும் புதன் பார்த்தாலும் ஜனன லக்கினத்தில் இருந்தாலும் பிரசவ காலத்தில் தாய் இருந்த வீடு சித்திர அலங்கார வீடாகும்.

சுக்கிரன் பார்த்தாலும் இருந்தாலும் சுகமான சாதனங்களோடு கூடிய வீடாகும்.

குரு இருந்தாலும் பார்த்தாலும் நல்ல முறையில் வலிமையானதாகக் கட்டப்பட்ட வீடாகும்.

அருஞ்சொற்பொருள்:

சொல்லும் புதன்-வாக்களிக்கும் புதன். சித்திரவீடு-நவ நாகரீகமான வீடு. சுசி-தூய சுகி. வசிப்பதற்குரிய நல்ல சாதனங்கள் உள்ள வீடு. அரசன்-குரு. கெட்டி-காரை இட்டும் பூசியும் கெட்டியாகக் கட்டப்பட்ட வீடு. விரும்பு சுவை-கற்பிணியாகிய தாய் அதிகம் விரும்பும் சுவைப் பொருள். நல்கி-கொடுத்து. மதுரம்-இனிப்பு. அணிகாரி - சேர்ந்துள்ள மகரம் கும்பம் ஆகிய ராசிகளுக்கு உரிய சனி. லக்கினத்திசையில் சிரசே-பிரசவிக்கும் காலத்தில் எந்தத் திசையில் தாய் தலைவைத்துச் சயனித்திருந்தது என்பதறிதற்காகும் லக்கினதிசை. மற்றும் பிரசவிக்கும் தாய் விரும்பிய சுவைகளை அறிந்து சொல்லுவதாயின்.

சூரியனுக்கு உரைப்பாகும். சந்திரனுக்கு உவர்ப்பாகும். செவ்வாய்க்கு துவர்ப்பை மிகவும் விரும்புவாள். புதனுக்கு திதிப்பு. உரைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய நான்கு வகைச் சுவைகளையும் விரும்புவாள். குருவுக்கு இனிப்பை அதிகம் விரும்புவாள். சுக்கிரனுக்கு புளிப்பை மிகுதியாக விரும்புவாள். சனிக்கு கசப்பை விரும்புபவளாக இருப்பாள். தாய் வீற்றிருக்கும் சயன நிலையில், தலையை குழந்தை ஜனன லக்கின திசைப்பக்கம் வைத்திருப்பாள்.

இராசிகட்கு திக்குகள்:- ஒரு வகை.

மேடம் இடபம்-கிழக்கு	துலாம், விருச்சிகம்-மேற்கு
மிதுனம்-தென்கிழக்கு	தனுசு-வடமேற்கு
கடகம், சிம்மம்-தெற்கு	மகரம், கும்பம்-வடக்கு
கன்னி-தென்மேற்கு	மீனம்-வடகிழக்கு

துல்யமான முறை-வகை

சிம்மம்-நடுநிலை
கடகம்-தென்கிழக்கு
மேடம், விருச்சிகம்-தெற்கு
மிதுனம், கன்னி-வடகிழக்கு
தனுசு, மீனம்-வடக்கு
ரிஷபம், துலாம்-கிழக்கு
மகரம், கும்பம்-மேற்கு
ராகுவுக்கு-தென்மேற்கு
கேதுவுக்கு-வடமேற்கு
என்றறியவும்.

தீபங்கள் நிலையும், சனனமாகும் மனை இடமும்

சரராசியில் சுக்கன் இருக்க விளக்கையும்
திங்களைப் பார்க்கில் தீர்க்கமுறும் தீபமுறை
மருவும் லக்கினத்திற்கு இருபாலும் நாலு மோதும்
தசந்தான் இருந்தாருடனே கூடியிருப்பார்
இரவி புந்தி கேந்திரத்தில் இருக்கில் கிழக்காம்
இராணியன் கேந்திரத்தில் இருந்திடில் வடக்காகும்
அரவு செவ்வாய் சனி சன்மத்தில் உரின் தெற்காகும்
அணி உபயச் சாயல் காரிக்கு அகம் மேற்குவாசல். 65

தொகுப்புரை:

சரராசியில் உதயமாக சுக்கிரன் இருந்தால் பிரசவிக்கும் இடத்தில் தீபங்கள் அசைந்ததாக இருக்கும்.

திரராசியாகி சந்திரனைப் பார்ப்பதாயின் நல்ல முறையில் தீபங்கள் ஒளியுடன் இருக்கும்

லக்கினத்திற்கு இரண்டு பக்கமும் நான்கு, பத்து வீடுகளளவில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர்கள் வீட்டில் கூடியிருப்பார்கள்.

சூரியன், புதன் கேந்திரத்தில் இருந்தால் அந்த வீட்டின் கிழக்கு வாசலில் சனனமாகும்.

குரு கேந்திரத்தில் இருந்தால் வடக்கு வாசல் பக்கம் சனனமாகும்.

இராகு, கேது, செவ்வாய், சனி கேந்திர மேறி இருந்தால் வீட்டிற்குத் தெற்குவாசல் பக்கம் சனனமாகும். தொடர்ந்த

உபயராசியில் சனி இருப்பானாயின் தெற்கு வாசல் பக்கம் என்று அறியவும்.

அருஞ்சொற்பொருள்:

சுக்கன்-சுக்கிரன், தீர்க்கமுறும்-தெளிவான ஒளியுடன் விளக்கு எரியும். தசந்தான்-பத்தாமிடம்தான். இரவி-சூரியன். இரணியன்-குரு. அரவு-ராகு, கேது. சாயல்-தொடர்ந்த இடம்.

பிள்ளைப்பேறு பரிகாரம் பார்த்தவர்

வாசக மூன்று ஆறுபதினொன்றில் பாவர் வந்திருக்க
சனி பத்தாம் மனையில் நிற்க
நீச மடந்தையும் இருந்து புரிவள் பரிகாரம்
நின்ற சனியே சுபர்மனை தேடின் நல்லோர் காணின்
ஆசுற தொழில் செய் சாதி
நாரியரும் இருப்பாளென சுருதி அறிந்தோர் முன்னும்
தேசுமறவளந் தமுத சுவைகள் மேவும்
திங்கள் போல் முகமயிலே செப்பலாமே. 66

தொகுப்புரை:

அழகுடன் அறம் வளரும் அமுத சுவைகள் பொருந்திய சந்திரனைப் போன்ற முகத்தை உடைய மயிலின் சாயலை உடைய பெண்ணே!

சொல்லப்படும், மூன்று ஆறு பதினொன்று ஆகிய இடங்களில் பாவகிரகங்கள் சேர்ந்திருக்க , சனி பத்தாம் வீட்டில் சேர்ந்திருக்க நீச்சப்பெண் இருந்து பரிகாரம் செய்வள்.

அவ்வாறு நின்ற சனியே சுபகிரகங்களின் வீட்டில் சேரினும் சுபகிரகங்கள் பார்த்தாலும் தகுதிபெறாத ஈனத்தொழில் செய்யும் சாதி உடையவள் பேறுகாலப் பரிகாரம் செய்வாள் என்று முன்னைய வேதங்கள் நன்கறிந்தோர் கூறுவர்.

அருஞ்சொற்பொருள்:

வாசகம்-பழை சோதிட நூல்களில் சொல்லப்பட்ட சொல். பாவர்-பாவகிரகங்கள். மனையில்-இராசி இடத்தில்,

வீட்டில். நீச்ச மடந்தை கீழ்சாதிப்பெண். பரிகாரம்-பிள்ளைப்பேறு பார்க்கும் மருத்துவ உதவிகள். ஆசுற-தாழ்ச்சியுள். நாரி-பெண். சுருதி-வேதங்கள். தேசு-அழகு. இக்கவியால், குழந்தை பிறக்கும் காலத்தில் பிள்ளைப்பேறு பார்த்துப் பரிகாரம் செய்த மருத்துவச்சி இன்னவாறு இருக்க வேண்டும் என்பது சொல்லப்பட்டது.

சுருதி-எழுத்தில் பார்த்துப் படித்தறிய முடியாத-காதுகளால் மட்டுமே கேட்டுப் பயிலப்படும் வேதங்கள் என்பதே பொருள்.

சோதிடம் சொல்ல - கணிப்பு நெறிமுறைகள்

செப்பியதோர்பலபாகம்பகரவேண்டில்
செங்கதிரோன்முதல்நவகோள்சேர்பீடங்கள்தெரிந்தே
ஒப்புடனேகணித்தநவக்கிரகபுடங்கள்கண்டே
உயர்தூமன்முதல்ஐவர்குளிகனாதிநால்வர்
தப்பறவேஎண்ணிலக்கினமுமாகச்சாத்திடும்
பத்தொன்பதெனதகும்புடங்கள்வரைந்தே,
இப்புவியில்உரைத்தார்க்கேபலபாகம்ஏற்கவே
எனச்சுருதிமொழிப்புலவர்இயம்பினாரே. 67

தொகுப்புரை:

ஒரு சாதகப்பலனைப் பார்த்துச் சொல்ல வேண்டுமானால்

சூரியன்முதலானநவகிரகங்கள்இராசிசக்கரத்தில்உள்ள இடங்களைத் தெரிந்து கொண்டபின்னர்,

அவற்றிற்கு ஒப்பாகக் கணிப்பிட்ட நவகிரக ஸ்புடங்களையும்கண்டபின்னர், உயர்வானதூமன்முதலாக ஐவரையும், குளிகன் முதலான நால்வரையும், தப்பிதம் ஏற்படாமல் எண்ணிக்கை செய்து, லக்கினம் முதலாகச் சொல்லப்படும்இடங்கள்பத்தொன்பதாகும்பொருத்தமான தாகும்ஸ்புடங்களைஎழுதிக்கொண்டு,

இவ்வாறாக கணக்கிட்டு வரைந்து கொண்டு, கிரக நிலைகளையும் ஸ்புடங்களால் கண்ட இடங்களையும்

பார்த்து ஆராய்ந்து திட்டப்படுத்தியபின்னரே, சாதகம் கேட்பவருக்கு, அவர் ஏற்கும் படியான சரியான பலாபலன்களைச் சொல்ல வேண்டும்.

இந்த அறிவுரையை, சோதிட சாத்திரங்களை உணர்ந்த புலவர்கள் குறிப்பாகச் சொல்லியுள்ளார்கள்.

அருஞ்சொற்பொருள்:

நவகோள்-ஒன்பது கிரகங்கள். புடங்கள்-கணக்கிட்டுக் குறிக்கும் இடங்கள். தப்பறவே-தப்பு இல்லாமல். பல பாகம்-பலன் சொல்லுதற்குரிய இராசியாதி தசவர்க்கம் தசாங்கிதவர்க்கம் முதலிய பாகங்களை. ஏற்கவே-கேட்பவர் ஏற்றுக்கொள்ளும் பலன்களை. கருதி-வேதங்கள். தூமன் முதல் ஐவர்-தூமன், விதிபாதன், பரிவேடன், இந்திரதனு, தூமகேது.

கிரக ஸ்புடங்களுக்கு - நித்திய சஞ்சார அளவுகள்

கிரகம்	பாகை	கலை	விகலை
சூரியன்	0	59	8
சந்திரன்	13	10	35
செவ்வாய்	0	31	26
புதன்	4	5	33
குரு	0	4	59
சுக்கிரன்	1	36	8
சனி	0	2	0
இராகு	0	3	11
கேது	0	6	41

இதற்கு விகிதாம்சம்

விதர்ப்பரை	60க்கு	தர்ப்பரை - 1
தர்ப்பரை	60க்கு	விகலை - 1
விகலை	60க்கு	கலை - 1
கலை	60க்கு	பாகை - 1
பாகை	60க்கு	இராசி - 1

இவ்வாறான கிரகங்களின் நித்திய கதிகளை ஒரே இனமாக, அதாவது விகலையாக ஆக்கிக்கொண்டு, உதயாதி ஜனன காலம் வரையில் கழித்த நாழிகை விநாடிகளை, ஒரே இனமாக விநாடியாக்கி, ஒன்றுக் கொன்று பெருக்கின், பெருக்குத்தொகை விதர்ப்பரைகளாகும்.

இதை மேலினமாக மாற்றிக் கண்ட ராசி பாகை கலைகளை கிரகஸ்புடஞ் செய்கையில் அந்தந்தக் கிரகங்களின் ஸ்புடங்களில் லக்கினத் துருவஸ்புடம் கூட்டுவதற்கு முன் கூட்டியறியலாகும்.

கிரகராசி பாவகமறிந்து பலன் கூறுதல்

இயம்பு, சென்மமனைநவாங்கிசை பங்கு ஐந்தில்
இது உதிக்கில் நவகிரகம் இருந்தபடி சரியே.
நயம்பெறும்அங்கிசையில் உதித்தானாகில்
நவக்கிரகம் இருந்த நட்சத்திர பாதம் அறிந்தே
செயம்பெறவே நின்றமனை வீடு, அடுத்த வீட்டில்
செறிந்திருக்கும் விபரமெல்லாம் தெரிந்து எண்ணிக்கண்டே
பயன்பெறும் சொல் பலபாகம் லக்கினமே முதலாய்
பன்னிரண்டு வீட்டிற்கும் பலனே காண்பாய். 68

தொகுப்புரை:

ஜென்ம லக்கின வீடானது நவாங்கிசத்தில் ஐந்தாவது பங்கில் உதிக்குமானால், நவகிரகங்கள் இருக்கும் ராசிகள் சரியானதாகும்.

இது தவிர, மற்ற நயந்தரும் பங்கில் லக்கினம் உதித்ததானால், நவகிரகங்களிருக்கும் நட்சத்திரம் பாத மறிந்து அவைகள் இருக்கும் வீடு, முன் (பின்) அடுத்த வீடு இவைகளில் சேர்ந்திருக்கும் கிரக விபரங்களை எல்லாம் பார்த்து, பலன் காணுவதற்குரிய பல பாகங்களை, லக்கினம் முதலாக உள்ள பன்னிரண்டு வீட்டிற்கும் அறிந்து, பலன் சொல்லுக என்பதாம். என்பதைக் குறிக்கும் அம்ச சக்கரம்.

நட்சத்திரங்கள் ராசிகளில் எந்த நுட்பத்தில் எந்த பலனை துல்யமாகக் காட்டும் என்பதறிவிக்கும் திரேக்கண கணிப்பு.

இவற்றால் அறியப் பெறும் ஒப்பீட்டுக் கணிப்பான பலாபலன்களே முக்காலத்திற்குமுரிய நடப்புகளை ஓரளவு முறைமையாகக் காண்பதற்குரிய சோதிட விதிப்புகளாகும். இந்த பாடலில் குறிக்கப்படும். விதிகளுடன் முன்னைய (66, 67) இரண்டு பாடல்களிலும் காட்டப்பெறும் சோதிட முறைகளையும் கண்டு சேர்த்துக்காண நல்ல பலன்களைத் துல்லியமாகச் சொல்லுவதற்குரிய சாதனங்கள் அமையும்.

அருஞ்சொற்பொருள்:

சென்ம வீடு-ஜனன கால லக்கின ராசி வீடு. சரியே-இராசி சக்கரஸ்புடம் சரியானதாகும். நயம்பெறும்-கிரகங்கள் பலம் பெறும் (சொந்த வீடு) நட்சத்திரபாதம்-நட்சத்திரத்திற்கான காலப்பங்கு, அது நான்கு கால்களைக் கொண்டு கணக்கிடப்படும். இதனை, இரண்டாம் காலில், மூன்றாம் காலில் என்று குறிப்பது வழக்கம். செயம் பெறவே-நன்மை பெறவே. செறிந்திருக்கும்-சேர்ந்து கூடி இருக்கும்.

குறிப்பு:

சோதிடம் பார்த்துப் பலன் கூறுவதற்குரிய ஆதாரக் கணிப்பு வடிவச் சக்கரங்கள் மூன்றாகும். அவை இராசி, அம்சம், திரேக்காணம் என்பது வழக்கு.

1. ஜனன இலக்கினம் சந்திராலக்கினம் முதலான பன்னிரண்டு ராசிகள் சக்கரம். இராசிகளில் அந்த நாளில் ஜனன காலத்தில் இருந்த கிரகங்கள்

2. அந்த அந்த கிரகங்கள் எந்த நிலையில் எந்த நட்சத்திர பாதத்தில் என்ன அம்சத்தில் நிற்கின்றன என்பனவற்றைக் கண்டு பலன் காணவும்.

கிரகங்களின் தகுதி - செயல்

உறைசெறி கிரகநட்பு ஆட்சிஉச்சங்கள்
உறுபகைநீசமும்சமும்,
நிறைபெரு மனையும்பார்வையும்தொழிலும்
நிகழ்த்துகாரகமும்மாரகமும்
உறவுறு மரபும்நிறமும்மெய்வடிவும்
வலிசெறி பலங்கள்துர்பலமும்
புறவற தேர்ந்து கண்டிடும்புலவர்
நின்றருள்பலன்கள்சித்திக்கும். 69

தொகுப்புரை:

இராசிகளில் தங்கும் சஞ்சார விதிப்புடைய ஒன்பது கிரகங்களின், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், சமன் இவைகளுடன்,

அவர்களுக்கு உரிய இராசி வீடுகளும், அவர்களது பார்வை இடங்களும், தொழிலும், அவர்கள் பலன்களைச் செய்வோனாக அமையும் காரகமும், மாரகனாகும் செயலும், தொடர்ந்து வரும் முறைமைகளையும், அவர்களது நிறமும், தேக வடிவம், வலிமை பெற்று அவர்கள் செய்யும் நற்பலன்களும் கொடிய பலன்களும்.

எதையும் நீக்காமல் மறைக்காமல், ஆராய்ந்து தெளிவுகண்டிடும் சோதிடப்புலமை பெற்ற அறிஞர் திட்டமாகச் சொல்லும் பலாபலன்கள் அப்படியே நடப்பதாகும்.

அருஞ்சொற்பொருள்:

உறைசெறி-தங்கிநிற்கும்,உறுபகை-ஏற்படும் பகை. நீச்சம்-வலிமை இழத்தல், பாபியாதல். நிறை பெறு மனை-உரிமையுடைய இராசி. தொழில்-செயல்கள். காரகம்-செயலுக்குக் காரணகர்த்தாவாக இருப்பது. உறவுறு

மருபு-தொடர்புள்ள வழிமுறை. மெய்-சரீரம். பலங்கள்-நல்லபலன்கள். துர்பலன்-ஆதாத, கொடுமையான பலன். புறவற-தள்ளி மறைத்தல் இல்லாமல். நின்றருள்-உண்மையை திட மனத்துடன் இருந்து சொல்லும். புலவர்-சோதிடத்தில் வல்லமை பெற்றவர். சித்திக்கும்-பலிதமாகும். நடைபெறுவதாகும்.

இராசியில் கிரகங்களின் தகுதிகள் விளக்கம்

1. மேடராசி: புதன், சுக்கிரனுக்கு-நட்பும், செவ்வாய்க்கு-ஆட்சியும், சூரியனுக்கு-உச்சமும், சனிக்கு-நீச்சமும், சந்திரன், குரு, ராகு, கேதுக்களுக்கு- பகையும் ஆகும்.

2. இடபராசி: செவ்வாய், புதன், குரு, சனிக்கு-நட்பும், சுக்கிரனுக்கு-ஆட்சியும், சந்திரனுக்கு-உச்சமும், இராகு, கேதுக்களுக்கு-நீச்சமும், சூரியனுக்கு-பகையும் ஆகும்.

3. மிதுனராசி: சந்திரன், குரு, சுக்கிரன், செவ்வாய், இராகு, கேதுக்களுக்கு-நட்பும், புதனுக்கு-ஆட்சியும், சூரியனுக்கு-பகையும், பரிவேடத்திற்கு-உச்சமும், இந்திர தனுவிற்கு-நீச்சமும் ஆகும்.

4. கடகராசி: புதனுக்கு-நட்பும், சந்திரனுக்கு ஆட்சியும், குருவுக்கு-உச்சமும், செவ்வாய்க்கு-நீச்சமும், சூரியன் சுக்கிரன், சனி, இராகு, கேதுக்களுக்கு-பகையும் ஆகும்.

5. சிம்ம ராசி: குருவுக்கு-நட்பும், சூரியனுக்கு-ஆட்சியும், தூமனுக்கு-உச்சமும், சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், சனி, ராகு, கேதுக்களுக்கு-பகையும் ஆகும்.

6. கன்னிராசி: சந்திரன், செவ்வாய், குரு, சனி, ராகு, கேதுக்களுக்கு-நட்பும், புதனுக்கு-ஆட்சியும், உச்சமும், சுக்கிரனுக்கு-நீச்சமும், சூரியனுக்கு-பகையும் ஆகும்.

7. துலாம் ராசி: செவ்வாய், புதன், குரு, இராகு, கேதுக்களுக்கு-நட்பும், சுக்கிரனுக்கு-ஆட்சியும்,

கிரகங்களின் - நட்பு, ஆட்சி, உச்சம், நீச்சம், பகை - அறிய

	மே	இட	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன	கிரகநட்பு
சூரியன்	உ	ப	ந	ப	ஆ	ப	நீ	ப	ந	ப	ந	ந	குரு
சந்திரன்	ந	உ	ந	ஆ	ப	ந	ந	நீ	ந	ப	ப	ந	புத-குரு
செவ்	ஆ	ந	ந	நீ	ப	ந	ந	ஆ	ப	உ	ப	ப	புத-சுக்
புதன்	ந	ந	ஆ	ந	ப	ஆஉ	ந	ந	ந	ந	ந	நீ	சந்-செவ் கு,
சுக்-சனி குரு	ந	ந	ந	உ	ந	ந	ந	ப	ஆ	நீ	ந	ஆ	சூ-சந்
சுக்	ந	ஆ	ந	ப	ப	நீ	ஆ	ந	ந	ந	ந	உ	பு-சுக் செவ்-பு
													கு-சனி
சனி	நீ	ந	ந	ந	ப	ந	உ	ப	ந	ஆ	ஆ	ந	பு-கு, சுக்
ராகு	ப	நீ	ந	ப	ப	ந	உ	உ	ந	ந	ப	ந	

ஆ -ஆட்சி, உ - உச்சம், ந - நட்பு, நீ - நீச்சம், ப - பகை.

சனிக்கு-உச்சமும்,சூரியனுக்கு-நீச்சமும், சந்திரனுக்கு-பகையும் ஆகும்.

8. விருச்சிக ராசி: புதன், சுக்கிரனுக்கு நட்பும், செவ்வாய்க்கு ஆட்சியும், சந்திரனுக்கு-நீச்சமும், சூரியன் குரு, சனிக்கு-பகையும், இராகு கேதுக்களுக்கு-உச்சமும் ஆகும்

9. தனுசு ராசி: சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி, இராகு, கேதுக்களுக்கு-நட்டும், குருவுக்கு-ஆட்சியும், செவ்வாய்க்கு-பகையும் ஆகும்

10. மகர ராசி: புதன், சுக்கிரன், இராகு, கேதுக்களுக்கு-நட்பும், சனிக்கு-ஆட்சியும், செவ்வாய்க்கு-உச்சமும், குருவுக்கு-நீச்சமும், சூரியன், சந்திரனுக்கு-பகையும் ஆகும்.

11. கும்பராசி: சூரியன், புதன், குரு, சுக்கிரனுக்கு-நட்பும், சனிக்கு-ஆட்சியும், சந்திரன், செவ்வாய், இராகு, கேதுக்களுக்கு பகையும், தூமகேதுவுக்கு உச்சமும், தூமனுக்கு-நீச்சமும் ஆகும்.

12. மீனராசி: சூரியன், சந்திரன், சனி, இராகு, கேதுக்களுக்கு-நட்பும், குருவுக்கு-ஆட்சியும், சுக்கிரனுக்கு-உச்சமும், புதனுக்கு-நீச்சமும், செவ்வாய்க்கு-பகையும் ஆகும்.

கிரகங்களின் பார்வை - அளவுகள்

1. சூரியன்	3-10 ஆம் இடம் - ¼ பார்வை
சந்திரன்	5-9 ஆம் இடம் - ½ பார்வை
புதன்	4-3 ஆம் இடம் - ¾ பார்வை
சுக்கிரன்	7 ஆம் இடம் - முழுபார்வை
2. குரு	8 ஆம் இடம் -¼ பார்வை
	7ஆம் இடம் -½ பார்வை
	3-10 ஆம் இடம் - ¾ பார்வை
	4-5-9 ஆம் இடம் முழு பார்வை

3. சனி	5-9 ஆம் இடம் - ¼ பார்வை
	4-8 ஆம் இடம் - ½ பார்வை
	7 ஆம் இடம் - ¾ பார்வை
	3-10 ஆம் இடம் முழு பார்வை
4. செவ்வாய்	3-10 ஆம் இடம் - ½ பார்வை
	5-7-9 ஆம் இடம் - ¾ பார்வை
	4-8 ஆம் இடம் முழு பார்வை
5. ராகு, கேது	3-4-6-8 ஆம் இடம் - ½ பார்வை
	2-10 ஆம் இடம் - ¾ பார்வை
	5-7-9 ஆம் இடம் முழு பார்வை

சூரியனின், சந்திரனின் பார்வைகளின் - நுட்பம்

1. சூரியனின் பார்வை - பாகுபாடு:

சூரியனின் நின்ற நாளுக்கு முன் மூன்று நாட்களும், பின் மூன்று நாட்களும் குருட்டு நாட்களாகும்.

அதற்கு, முன்னான்கு நாட்களும், பின் நான்கு நாட்களும், ஒரு கண் பார்வை பெறும் நாட்களாம்.

மற்றைய நாட்கள் இரு கண் பார்வை பெறும் நாடகளாம்.

2. சந்திரனின் பார்வை - பாகுபாடுகள் (நாட்கள்):

ஞாயிற்றுக் கிழமை முதல் அன்றைய வரையில் சென்ற கிழமைகளை மூன்றால் பெருக்கி வந்த தொகையை, அசுவினி முதலாகக் கழித்து, மீதியாக நின்ற நட்சத்திரத்தில், ஒன்பது நட்சத்திரம் சந்திரனுக்கு ஒரு கண் பார்வையுடைய நாளென்றும்,

அதற்குமேல் பன்னிரண்டு நட்சத்திரம் இரு கண் பார்வையுடைய நாளென்றும்.

அதற்குமேல் ஆறு நட்சத்திரம் குருட்டு நாட்களென்றும் கொள்ளப்பெறும்.

கிரகங்களின் சுபம், பாவம் - கணக்கு

பூரண சந்திரன், குரு	முழுச்சுபர்
சுக்கிரன்	முக்கால் சுபர்
புதன்	அரைச்சுபர்
தேய்பிறைச் சந்திரன்	கால் சுபர்
சந்திரன் அமாவாசையில் புதனோடு கூடின்	முக்கால் சுபர்
சனி, ராகு	முழுப் பாவர்
செவ்வாய்	முக்கால்பாபர்
சூரியன்	அரைப்பாவர்
இராகு, கேதுவோடு கூடிய புதனும் சந்திரனும்	கால் பாவர்
இராகுவோடு கூடிய குரு	முழுப் பாவியாம்

இந்த அளவைகள் - பொதுவானவைகளாகும்.

கிரகங்களின் - நட்பு, ஆட்சி, நீச்ச பலன் - அளவு. உச்சம் 1¼ , கேந்திரம் -1, ஆட்சி - ¾, நட்பு - ½, நீச்சம் - ¼ பலம் பெறும்.

காரணமான - கிரகம்

சூரியன்	- பிதுர்க்காரகன், சரீரகாரகன்
சந்திரன்	- மாதுர்காரகன்
செவ்வாய்	- சகோதரகாரகன்
புதன்	- கல்வி, வித்தை காரகன்
குரு	- புத்திரகாரகன்
சுக்கிரன்	- களத்திர காரகன், வாகன காரகன்
சனி	- ஆயுள் காரகன்
இராகு	- பிதாமகன் (பாட்டன்) காரகன், யோக போக காரகன்
கேது	- மாதாமகர் (பாட்டி) காரகன், ஞான மோட்ச காரகன்

திசை	போதகன்	வேதகன்	பாசகன்	காரகன்
சூரியதிசைக்கு	செவ்வாய்	சுக்கிரன்	சனி	குரு
சந்திர திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சுக்கிரன்	சனி
செவ்வாய் திசைக்கு	சந்திரன்	புதன்	சூரியன்	சனி
புதன் திசைக்கு	குரு	செவ்வாய்	சந்திரன்	சுக்கிரன்
குரு திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சனி	சந்திரன்
சுக்கிரன் திசைக்கு	குரு	சனி	புதன்	சூரியன்
சனி திசைக்கு	சந்திரன்	செவ்வாய்	சுக்கிரன்	குரு
இராகு கேதுக்களுக்கு இவை இல்லையாம்				

விளக்க வெண்பா

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனாம், வேறுபண்ணி
தட்டுவிப்பான் வேதனாம் -தேறுபலன், கூட்டுவிப்பான் பாசகனும்
கோலமகா திசைக்கே, ஈட்டுப்பொருள் காரகன் ஈவான்.

27 நட்சத்திரங்களின் தொகையும் வடிவும்

அசுவதி-6 நட்சத்திரம் வடிவம்-குதிரைத்தலை
பரணி-3 நட்சத்திரம் அடுப்பு-வடிவம் போல்
கார்த்திகை-6நட்சத்திரம் கற்றை-வடிவம்
ரோகிணி-12 நட்சத்திரம் ஊற்றால்-வடிவம்
மிருகசீரிடம்-3 நட்சத்திரம் தேங்காய் முக்கண் வடிவம்
திருவாதிரை-1 நட்சத்திரம் இராசமணி வடிவம்
புனர்பூசம்-6 நட்சத்திரம் கடைவீதி வடிவம்
பூசம்-4 நட்சத்திரம் புடலம் பூ வடிவம்
ஆயில்யம்-4 நட்சத்திரம் அம்மி வடிவம்
மகம்-4 நட்சத்திரம் நுகத்தடி வடிவம்
பூரம், உத்திரம்-4 நட்சத்திரம் கட்டில் கால் வடிவம்
அத்தம்-4 நட்சத்திரம் கைத்தாளம் வடிவம்
சித்திரை-1 நட்சத்திரம் புலிக்கண் வடிவம்
சுவாதி-1 நட்சத்திரம் தீபம் வடிவம்
விசாகம்-6 நட்சத்திரம் சுளகு வடிவம்
அனுடம்-4 நட்சத்திரம் முடப்பனை வடிவம்

கேட்டை-4 நட்சத்திரம் ஈட்டி வடிவம்
மூலம்-4 நட்சத்திரம் பொற்காளம் வடிவம்
பூராடம், உத்திராடம்4நட்சத்திரம் கட்டில் கால் வடிவம்
திருவோணம்-3 நட்சத்திரம் முழக்கோல் வடிவம்
அவிட்டம்-பல நட்சத்திரம் தவிட்டுக் கூட்டம்
சதையம்-4 நட்சத்திரம் பூங்கொத்து வடிவம்
பூரட்டாதி, உத்திரட்டாதி-4 நட்சத்திரம் கட்டில்கால் வடிவம்
ரேவதி-4 நட்சத்திரம் ஓடம் வடிவம்

இராசிகளின் வடிவமைப்பு

கிரகங்கள் சூரியன் முதலாக ஒன்பதாகும். நட்சத்திரங்ள் அசுவினி முதலாக இருபத்தேழாகும்.

நட்சத்திரங்கள் 27னையும், பன்னிரண்டு ராசிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ராசியிலும் இரண்டேகால் நட்சத்திரம் அடங்கும். அந்த இரண்டேகால் நட்சத்திரங்களில் காணப்படும் ஒளி இமைப்புடன் கூடிய புள்ளிகளை, ஒன்றோடொன்று கோடிட்டு இணைத்துப் பார்த்தால் அது ஒரு வடிவமாகத் தோன்றும். இப்படியே பன்னிரண்டு ராசிகளிலும் அடங்கிய நட்சத்திரப் புள்ளிகளை இணைத்துப் பார்த்தால் வேறுவேறான பன்னிரண்டு வடிவங்கள் ஏற்படும். வடிவங்களைக் கொண்டே இராசிகள் பன்னிரண்டிற்கும் பெயர் அமைத்துள்ளனர். 1. மேடம் - ஆடு வடிவம். 2. இடபம்-எருது வடிவம். 3. மிதுனம்-பெண் ஆண் வடிவம். 4. கடகம்- நண்டு வடிவம். 5. சிம்மம்- சிங்க வடிவம். 6. கன்னி-பருவப்பெண் வடிவம் 7. துலாம் - தராசு வடிவம் 8. விருச்சிகம்-தேள் வடிவம். 9. தனுசு-வில் வடிவம். 10. மகரம்-முதலை வடிவம் 11. கும்பம்-குட வடிவம். 12-மீனம்-இரட்டை மீன்கள் வடிவம்.

இவ்வாறான பன்னிரண்டு ராசிகளும் சேர்ந்த இடப்பரப்பின் தோற்றம் வட்டமாக இருக்கும். அதுவே, கிரக நட்சத்திர மண்டலமாகும். இதில் சூரியனும் சந்திரனும் பிற கிரகங்களும் கால அளவுகளில் சஞ்சாரம் செய்கிறார்கள். சந்திரன் மேடம் முதலாக இரண்டேகால் நட்சத்திர அளவாகப்

பன்னிரண்டு ராசிகளிலும் செல்லுதல் கணக்கிடப் படுகின்றது. கிரகங்கள் தனித்து இயங்குவன, நட்சத்திரங்கள் பல சேர்ந்த வடிவங்களாகும்.

பாலாரிட்டம்

லக்கினந் தேள், மூன்று ஆறில் பாவர் எல்லாம் நிற்க
மண்ணில் உடனே மரணம், லக்கினத்தில்
திக்கெனச் செவ்வாய் நிற்க, எட்டில் ஆறில்
சேயுடனே சனி கூடில் மரணம், சென்மத்
துக்காறு எட்டில் சசி நிற்கப் பாவர் நோக்கில்
துலங்கிய நாலாண்டு என்று கொள்வார் நல்லோர்
மிக்க செவ்வாய் சனி மதி இரவி எட்டில்
மேலில் அற்பாயுசு என விளம்புமாதோ. /

தொகுப்புரை:

இலக்கினம், விருச்சிகம் மூன்று, ஆறாம் இடங்களில் பாவகிரகங்கள் நின்றால், சிசு மண்ணுலகத்திற்குப் பிறந்தவுடனேயே மரிக்கும்.

லக்கினத்தில் செவ்வாய் இருந்தாலும், எட்டாமிடத்தில் ஆறாம் இடத்தில் சனியுடன் கூடி இருந்தாலும் சிசு மரணமாகும்.

சென்ம லக்கினத்திற்கு ஆறு எட்டாம் இடங்களில் சந்திரன் நிற்க சந்திரனைப் பாப கிரகங்கள் பார்த்தால் குழந்தை பிறந்து வளர்ந்தது நாலாண்டு மட்டுமாகும்.

வலிமையான செவ்வாயானவன் சனி, சந்திரன், சூரியன் இவர்களுடன் எட்டாமிடத்தில் இருந்தால், பாலனுக்கு அற்ப ஆயுசு ஆகும் என்று பெரியோர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

தேள்-விருச்சிக ராசி. பாவர் எல்லாம் நிற்க-பாபக் கிரகங்கள் கலந்து நிற்க. சசி-சந்திரன். துலங்கிய-வளர்ந்திருந்தது. மிக்க-வலிமைமிக்க. இரவி-சூரியன். அற்பாயுசு-மிகவும் குறைந்த வயது.

குறிப்பு:

பாடல் நான்காம் அடியில், மிக்க செவ்வாய் சனி, சந்திரன், சூரியன் இவர்களோடு எட்டாமிடத்தில் இருந்தால்-என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு கிரகத்தோடு ஒரே ராசியில் மூன்று கிரகங்கள் சேர்ந்து இருப்பது ஒரு சில காலநிலையிலேயே அமையும். எனவே, ஒன்றோ, இரண்டோ, மூன்றோ கூடி இருக்கும் பாகமறிந்து பலன் காணலாகும்.

மகப்பேறு பற்றிய பலாபலன் - தொடர்ச்சி

தேயும் மதிலக்கின கேந்திரத்தில் எட்டில்
சேய்முதல் பாவரைக் கூடின் மரிக்கும் சன்மத்தில்
ஏயும் சசிக்கு இருபாலும் பாவர் நிற்கில்
எட்டு ஏழு நாலில் தீக்கோள் நிற்குமாகில்
தாய் உடன் சாமென்று உரைப்பர், சுபக்கோள் நோக்கில்
தையலும் சீவிப்பாள் எனச் சாத்தலாகும்,
மாய கதிர் பாக்கியத்தில் சுபர் நோக்கிலாவிடில்,
சுபர் மதியுடன் கூடில் அரிட்டமாமே. 2

தொகுப்புரை:

தேய்பிறைச் சந்திரன் லக்கினத்தில், கேந்திரத்தில், எட்டாம் இடத்தில் இவற்றில் ஒன்றில், செவ்வாய்முதலான பாபகிரகங்களோடு கூடி இருந்தால் குழந்தை பிறந்தவுடன் இறக்கும்.

சன்மத்திலுள்ள சந்திரனுக்கு இரண்டு பக்க ராசிகளிலும் பாபகிரகங்கள் இருந்தாலும், எட்டு ஏழு நான்கு ஆகிய இடங்களில் பாபகிரகங்கள் இருந்தாலும் குழந்தை பிறந்தவுடன் தாயும் சேயும் சாவார்களென்று சொல்லுவார்கள்.

ஆனால், சுபகிரகங்கள் ஜீவிதபார்வை சந்திரனுக்கு ஏற்பட்டிருந்தால் தாய்க்கும் சேய்க்கும் தீங்கு இல்லை எனச் சொல்லலாம்.

சூரியன் பாக்கியஸ்தானத்தில் இருக்கவும், சுபகிரகங்களின் பார்வையைப் பெறாமல் இருந்தாலும்,

சந்திரன் சுபகிரகங்களோடு சேர்ந்து இருந்தாலும் குழந்தைக்குக் கெடுதி வருமென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

தேயும் மதி-தேய் பிறைச் சந்திரன். லக்கின கேந்திரத்தில்-லக்கினமாகிய கேந்திரஸ்தானத்தில், லக்கினத்தில் அல்லது லக்கினத்திற்கு கேந்திரஸ்தானத்தில். ஏயும் சசி-அன்றைய நட்சத்திரக்காலில் ராசியில் இருக்கும் சந்திரன். தீக்கோள்-பாபக்கிரகங்கள். தையல்-தாய். சாத்தலாம்-சொல்லலாம். சுபர் மதியுடன் கூடில்-சுபகிரகங்கள், சந்திரனுடன் கூடியிருந்தால். அரிட்டம்-கெடுதிகள், ஆபத்தான நிகழ்ச்சிகள்.

குழந்தை பிறந்த கிழமை பலன்

ஆயசித்திரையில் திங்கள், அணிகுசன் உத்திராடம்
ஞாயிறு பரணி, கேட்டை நற்குரு வாரம் ஆகும்
ஏயநற் புதன் அவிட்டம், ரேவதி சனியேயாகும்
தூய பூராடம் வெள்ளி, இதில் சென்மம் துயரம் செய்யும். 3

தொகுப்புரை:

சித்திரை நட்சத்திரம் சேர்ந்த திங்கள் கிழமையிலும், உத்திராடம் சேர்ந்த செவ்வாய்க்கிழமையிலும், பரணி சேர்ந்த ஞாயிற்றுக்கிழமையிலும், கேட்டை சேர்ந்த வியாழக் கிழமையிலும், அவிட்டம் சேர்ந்த புதன் கிழமையிலும், ரேவதி நட்சத்திரம் சேர்ந்த சனிக்கிழமையிலும், பூராட நட்சத்திரம் சேர்ந்த வெள்ளிக்கிழமையிலும், சனனம் ஏற்பட்டால் தாய்க்கும் குழந்தைக்கும் மிகுந்த துன்பம் தருவதாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஆய-அமைந்த, திங்கள்-திங்கள்கிழமை, குருவாரம்-வியாழக்கிழமை, தூய-தூய்மையான, சென்மம்-ஜனனம்.

குறிப்பு:

இன்ன நட்சத்திரம் கூடிய இன்ன கிழமையில் குழந்தை பிறந்தால், சென்மம் துயரம் செய்யும் என்பது பாடம். சென்மம் என்பது பிறப்பாகும். பிறந்த நாள் நட்சத்திரம் இவ்வாறாக அமைந்திருந்தால், மிகவும் கஷ்டமான பிரசவமென்றும், பிறந்த குழந்தைக்கு சரீர துன்பங்கள் உண்டாகியிருக்கும் அல்லது உண்டாகும் என்றும் சொல்லப்படும்.

ஒரு குழந்தை பிறந்த நாள் நட்சத்திரத்தினால், அந்த நாளில் குழந்தை பிறந்த நேரத்தினைக் கொண்டு ஜன்ம லக்கினத்தையும் சந்திரன் நின்ற ராசியாகிய சந்திர லக்கினத்தினையும் கணிப்பது இயல்பு. அவ்வாறமைந்த விதி,மதி இரண்டுடன் பிற பாவங்களில் நின்ற கிரகங்களையும், குறிப்பாக 4, 6, 8, 12ல் நின்ற கிரகங்களில் தன்மைகளையும் கொண்டு நட்சத்திர நாள் பலனுடன் சேர்த்துப் பார்த்து இன்னவாறான துயரம் செய்யும் என்பதனையும் சோதிடர் உணர்ந்து சொல்லுவர்.

பிறந்த காலப் பாவகப் பலன்கள்

செய்யும்அட்டமத்தில்பாபர்நிற்கிறதெனில்நாளேழெட்டு
அய்யஅதாம், பிழைத்திருந்தால், அவனுடையகண்ணுக்கு ஊனம்,
மெய்யில்லக்கினத்தில்செவ்வாய்நிற்கினும்வியம்ஆறுஎட்டில்
பையவேகாரிசெவ்வாய்பற்றின்மெய்க்கரிட்டம்பண்ணும். 4

தொகுப்புரை:

பிறந்த லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் பாப கிரகங்கள் நிற்பதானால் குழந்தை பிறந்த நாளிலிருந்து ஏழு அல்லது எட்டு நாட்கள் அக்குழந்தைக்கு பாலாரிட்டமான கெடுதி நாட்களாகும்-சந்தேகந்தான். பிழைத்திருந்தால்அந்த குழந்தைக்கு கண் ஊனமாகும்.

லக்கினத்தில் செவ்வாய் நின்றாலும், பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் சனி, செவ்வாய் இவர்கள் சேர்ந்து இருந்தாலும் குழந்தையின் தேகத்திற்கு அரிட்டமான கெடுதிகள் குறைபாடுகள் நேரிடும் என்றறியவும்.

அருஞ்சொற்பொருள்:

செய்யும்-கெடுதி செய்யும், பாபர்-செவ்வாய், சனி, ராகு, கேது. ஆகிய பாப கிரகங்கள். நாள் ஏழு எட்டு-நாள் ஏழு அல்லது எட்டு. அய்யமாம்-பிழைத்திருப்பது சந்தேகந்தான். ஊனம்-குறைவு, பின்னமாதல், வியம்-விரையஸ்தானமான பன்னிரண்டாம் இடம் ராசி, பற்றின்-தங்கி இருந்தால். மெய்-சரீரம்.

குறிப்பு:

பாலாரிட்டம் என்பது என்ன? அதனால் உண்டாகும் செயல்கள் அல்லது பாதிப்புகள் என்ன? என்பது பற்றிய விபரங்களுக்கு முன்னதாக அறிய வேண்டிய கிரக ராசி நிலைகளை இப்பாடல் உணர்த்துகின்றது. இப்பாடல் தரும் குறிப்பு பாலாரிட்டம் அறிவதற்குரிய தொடக்கமான சோதிட குறிப்பு என்றே கொண்டு தொடரும் பாடலால் ஆசிரியர் உணர்த்தும் முறைகளையும் பார்த்து அனுசரித்துப் பலன் காண்பார்கள்.

அரிட்டம் நேரும் - காலங்கள்

பண்ணும் சன்மமுடன் ஏழில் பாவர் இருக்கப் பாவர்கள் தாம்
அண்ண மதியமுடன் கூட அண்ணிதாக வரும் அரிட்டம்
எண்ணும் தேய்பிறை வியத்தில் ஏழில் ரண்டில் பாவர்களும்
நண்ணில் அரிட்டம், கேந்திரத்தில் உறவோர் இருக்க உய்வாரே. 5

தொகுப்புரை:

சன்மத்திலும் ஏழாம் இடத்திலும் பாபகிரகங்கள் இருந்தாலும், பாவகிரகங்கள் சந்திரனுடன் கூடி இருந்தாலும் சீக்கிரத்தில் அரிட்டம் உண்டாகும்.

தேய்பிறைச் சந்திரன் பன்னிரண்டு, ஏழு, இரண்டு ஆகிய ராசியிடங்களில் பாபகிரகங்களோடு பொருந்தியிருந்தால் அரிட்டமாகும். ஆனால், கேந்திரத்தில் சுபகிரகமான நட்புக் கிரகங்கள் இருந்தால் உயிர் பிழைப்பார் என்றறியவும்.

அருஞ்சொற்பொருள்:

பண்ணும்-நன்மை தீமைகளைச் செய்யும், ஏழில்-ஏழாம் இடபராசியில், அண்ணிதாக-சமீபகாலத்தில், நண்ணும்-சேர்ந்திருக்கும், உறவோர்-சந்திரனுக்கு நட்பான கிரகங்கள்.

இப்பாடலில், மூன்றாம் வரியில் தேய்பிறை வியத்தில் ஏழில் இரண்டில் பாவர்களுடன் நண்ணில் என்றுள்ளது. தீய பலன்களைக் காண்பதற்கு லக்கினம், ஆறு, எட்டு, பன்னரண்டாம் ராசி இடங்களே சோதிட வழக்கில் கண்டு பலாபலன் கூறுவதற்குப் பொதுவான இலக்குகளாகத் தோன்றும். சுபஸ்தானங்களாகக் காணும். ஏழு, இரண்டாம் இடங்கள் மாரகஸ்தானங்களாகக் கூறப்பட்டுள்ளதால் அரிட்டம் உரிய இடங்கள் ஆகின்றன. 3 மிடமும் 8 மிடமும் ஆயுள் ஸ்தானம் என்பர். அவற்றிற்கு 12ம் இடம் மாரகஸ்தானங்கள் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, 2ம் இடமும் 7ம் இடமும் மாரகஸ்தானமாதலின் அவ்விடங்களில் தேய்பிறைச் சந்திரன் இருப்பின் அரிட்டமே. தேய்பிறைச் சந்திரன் சுபர் ஆகிறதில்லை. தேய்பிறைச் சந்திரன் பாவராயிருக்கப் பிறபாபக்கிரகங்களும் கூடினால் அரிட்டமே. ஆனால், அவ ற்றிலொன்றில் தேய்பிறைச் சந்திரன் பாப கிரகங்களோடு கூடி இருந்தாலும், பன்னிரண்டில் இருந்தாலும் அரிட்டம் தருவதாகும். தேய்பிறைச் சந்திரன் 12ல் இருக்க 7, 2ஆம் இடங்களில் பாபகிரகங்கள் சேர்ந்திருந்தாலும் அரிட்டம் தரும்.

குரு பார்வையின் - பலன்

உய்யும் இரவி சனி செவ்வாய் உறுப்புக் குறைந்த மதி நான்கும்
மெய்யாம் வியம் பாக்கியம் எட்டில் மேவிக்கூடி இருந்திடவே
பைய்ய இருந்த பதியெல்லாம் பண்பாய் அரசன் பாரானேல்
அய்ய அருட்டம், பொன் நோக்கமானால் இருப்பன் அவனியிலே. 6

தொகுப்புரை:

சூரியன், சனி, செவ்வாய், தேய்பிறைச் சந்திரன் ஆகிய கிரகங்கள் லக்கினத்திற்குப் பன்னிரண்டு ஒன்பதும் எட்டு ஆகிய இடங்களில் சேர்ந்த நிலையில் (கூடிய நிலையிலோ) இருப்பினும், அந்த இடங்களை குரு பாராமல் இருந்தால் அரிட்டமேயாகும். குரு பார்ப்பதானால் தோஷம் இல்லை. நீண்ட நாள் உலகத்தில் வாழ்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

உய்யும் இரவி-குறைவில்லாத சூரியன். உறுப்புக் குறைந்த மதி-தேய்ந்து வரும் சந்திரன். வியம்-விரயத்தானம். 12 ஆம் இடம். பாக்கியம்-ஒன்பதாம் இடம். மேவிக் கூடில்-ராசியில் நின்று கூடினால், அரசன்-குருபகவான். பொன்-குரு, இருப்பன்-நீண்ட ஆயுளோடு இருப்பான். அவனி-உலகம்.

பிறந்த குழந்தைக்கு பாலாரிட்டம் என்னும் பாலப் பருவத்தில் ஆயுளுக்கு ஆபத்தான நோய் முதலான கெடுதிகள் ஏறுபடுவது என்பதும் இல்லை என்பதும் கண்டு சொல்லுவதற்கு, லக்கினம் முதலாகவுள்ள ராசி பாவக இடங்களில் முக்கியமாக 12, 8, 6 ஆம் இடங்களும், மத்திமமாக 2, 7, 11 ஆம் இடங்களும் இதுவரையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றில் பாபகிரகங்கள், முறையே செவ்வாய், சனி, ராகு கேது தேய்பிறைச் சந்திரன் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. சுபகிரகங்கள் என குரு, சுக்கிரன், குறைவில்லாத சந்திரன், புதன் ஆகிய கிரகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தீய இடங்களில் பாபகிரகம் இருந்தாலும் சேர்ந்திருந்தாலும், பார்வையானாலும் அரிட்டம் ஆகுமென்று காண்பதாயினும், குருவின் தீட்சண்யப் பார்வை அந்த ராசிகளில் ஏற்பட்டால் அரிட்டம் இல்லை, ஆயுள்

பலம் பெறும் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது அறியத்தக்கதாகும்.

அரிட்டம் ஆகும் கால வகை

அவனி மீது எட்டு அஞ்சு ஒன்றில் ஆனவியத்தில் பாக்கியத்தில்
தவனன் செவ்வாய் சனி மதியம் தாமும் கூடி நின்றாலும்
கவனமுடனே தனித்தனியே கருதுமிடத்தில் நின்றாலும்
எவனும் பிறக்கில் இப்பாரில் இராமல் அரிட்டம் எய்து மன்றோ! 7

தொகுப்புரை:

இந்த உலகத்தில் பிறக்கும் குழந்தையின் சாதகக் கணிப்பில் எட்டு, ஐந்து, ஜென்மலக்கினம், பன்னிரண்டாம் இடம். பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடம் ஆகிய இவ்விடங்களில், சூரியன், செவ்வாய், சனி குறைவுள்ள சந்திரன் இவர்கள் கூடி இருந்தாலும், அந்த வீடுகளில் தனித்தனியே குற்றம் தரும் நிலையில் இருந்தாலும், அப்போது பிறக்கும் குழந்தை அரிட்டம் என்னும் கெடுதியினை அடைந்தே தீரும்.

அருஞ்சொற்பொருள்:

அவனி-உலகம். வியம்-விரையஸ்தானம். 12ல் தவனன்-சூரியன். மதியம்-குறையுள்ள சந்திரன். கவனமுடன்-திட்டமுடன். கருதுமிடம்-அன்றைய இராசி இடம். பாரில்-உலகத்தில், எய்தும்-வந்தே தீரும்.

குறிப்பு:

பாலருக்கு பிறக்கும் போது, பிறந்தவுடன் அதன் பின்னர் என்ற காலவகையில் ஏற்படும் கடுமையான தீங்காகும் அரிட்டம் என்னும் தீய பலனை அறிவதற்கு, பல நோக்கில் கிரகங்கள் ஜனன காலத்தில் உள்ள இடம், தன்மை, பார்வை, தகுதிகள் ஆகியவற்றைக் கண்டு ஒப்பிட்டு ஆராய்ந்து அரிட்டத்தின் நிலையைக் காண்பதற்கே பல வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய மார்க்கங்களில்

இவ்வாறு அரிட்டம் ஏற்படும் என்னும் திட்டவட்டமான பலனைக் குறிக்கவே இப்பாடல் விளக்கம் தருகின்றது.

பாலகன், ரோகி, மூர்க்கன் ஆவான்

எண்ணிய லக்கினாதிபதி பெலமற லக்கினத்தில்
ஒண்ணிய பாபரொடு உற்றிட ரோகி யாவான்
திண்ணமாம் இவர்கள் தானும் திரிகோண கேந்திரத்தில்
நண்ணிடில் மூர்க்கனாவன் நறைமலர்க் குழலின் மாதே! 8

தொகுப்புரை:

மணம் பொருந்திய மலர்கள் சூடிய கூந்தலை உடைய மான்போன்ற பெண்ணே!

ஜன்மத்தின் அதிபதி (சந்திர லக்கினத்தின் ராசியாதிபதி) பலமில்லாமல் ஜன்ம லக்கினத்தில் சேர் ந்திருக்கவும் அந்த கிரகத்தோடு பாபகிரகமும் கூடி இருக்கப் பிறந்தவன் ரோகியாவான்.

திண்ணமாக இந்த கிரகங்கள் தானும், திரிகோண கேந்திர ஸ்தானத்தில் சேர்ந்தால், அல்லது இருந்தால் சாதகன் மூர்க்கனாக வளர்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

எண்ணிய-எண்ணி அறியப்படும் இடம். பெலம் அற-வலிமை நீங்க, வலிமை இல்லாமல், ஒண்ணிய-சேர்ந்து தங்கிய, உற்றிட-சேர்ந்திருக்க, ரோகி-நோயாளி, திண்ணமாம்-திட்டமாக, திரிகோண கேந்திரத்தில்-15 , 9ஆம் இடங்களாகும். திரிகோண ராசியில். நண்ணிடில்- சேர்ந்திடில், நறை-மணம், குழல்-கூந்தல்.

குறிப்பு:

எண்ணிய லக்கினாதிபதி பெலமற -லக்கினத்தில் பிறந்த குழந்தையின் ஜனன காலம் அறிந்து காணப்பட்ட லக்கினத்தின் அதிபதி-பலமில்லாமல் லக்கினத்திலேயே இருப்பின், ஒண்ணிய-சேர்ந்து தங்கிய பலமற்ற-லக்கினாதிபதி பாபகிரகங்களோடு சேர்ந்திருந்தால் ஜாதகன்

நோயாளியாவான். பலமற்ற லக்கினாதிபதி-பாபகிரகங்கள் ஆகியோர் ஜன்மலக்கினத்திற்கு திரிகோண கேந்திரங்களில் இருப்பின் (5-9 திரிகோணங்கள், 1-4, 7-10 கேந்திரங்கள்) ஜாதகன் மூர்க்கனாவான்.

பிறந்த நட்சத்திர பாகத்தால்- நடப்பது

மானே கேள் குதிரை மூலம் மகம் முதற் காலும் பின்னும்
மான ரேவதியும் கேட்டை ஆயிலியம் பிற்காலும்
தான நாழிகை ஓர் நாலின் முன்னிரண்டு கால் தாய் தந்தை
ஊனமில் துணைவர் மூன்றில், நாலினில் சேய்க்கரிட்டம். 9

தொகுப்புரை:

பெண்ணே கேட்பாயாக! அசுவினி, மூலம், மகம் ஆகிய நட்சத்திரங்களின் முதல் பாதத்திலும், ரேவதி, கேட்டை, ஆயில்யம் ஆகிய நட்சத்திரங்களின் கடைப் பாகத்திலும் - உண்டாகும் நான்கு நாழிகை அளவில் குழந்தை சென்னமானால்.

முதல் நாழிகையில் தாய்க்கும், இரண்டாவது நாழிகையில் தந்தைக்கும், மூன்றாவது நாழிகையில் சகோதரர்களுக்கும், நான்காவது நாழிகையில் குழந்தைக்கும் அரிட்டம் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்:

குதிரை-அசுவினி நட்சத்திரம். தானு-திட்டமான. துணைவர்-சகோதரர்கள், சேய்-பிறக்கும் குழந்தை.

குறிப்பு:

அசுவினி. மூலம், மகம்-முதற்காலும். ரேவதி, கேட்டை, ஆயில்யம்-பிற்காலும் குழந்தை பிறந்த நாழிகையிலிருந்து நான்கு நாழிகை அளவில் பொருந்தி இருந்தால் மேலே சொல்லப்பட்ட அரிட்ட நட்சத்திர

காலாம்ச நாழிகையோடு ஒத்துப்பார்த்து அறிந்து ஏற்ற அளவில் பலன் காண்பது பொருந்தும் எனலாம்.

பகை ராசிகளால் - நிகழ்வது

உறும்சென்மலக்கினாதிபதிஉடன்சோமன்உறைவீட்டாதி
பெறும்பகையாயேகூடின்பிறக்கும்சேய்பிழைத்திடாது
குறும்சென்மலக்கினாதிபதிகுளிகனும்சனியும்கூடில்
அறைந்திடாய்கள்ளரால்அடிபட்டேமடிவர்என்றே. 10

தொகுப்புரை:

லக்கினாதிபதியுடன் சந்திரனும் இருக்கின்ற ராசி வீட்டுக்குடையவன், பெறும் பகையான கிரகங்களுடன் கூடி நின்றால், பிறக்கும் பிள்ளை பிழைக்காது. சென்ம லக்கினாதிபதியுடன் குளிகனும் சனியும் கூடி இருந்தால் கள்ளரால் அடிபட்டு இறப்பார்கள் என்றே சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்:

உறும்-அமைந்துள்ள, சோமன்-சந்திரன், உறை வீட்டாதி-இருக்கின்ற வீட்டுக்கு உடையவன். குளிகன்-சார்பு கிரகம். கள்ளர்-திருடர்.

குறிப்பு:

இந்த பாடல் தரும் சோதிடக் குறிப்பால் குழந்தை பிறந்த லக்கினஸ்தானத்தை முதன்மையாகக் கொண்டு சந்திரனின் அங்கிசையினையும் கண்டு, சந்திரன் நின்ற ராசியதிபதி பகைவனாகி, பகை கிரக ராசியில் இருந்தால், அபாயமான அரிட்டம் நேரிடும் என்பது சொல்லப்பட்டது.

சென்மலக்கினாதிபதி-சோமன் உறை வீட்டதிபதி என்பதை முன்னர் பாடல் 8ல் வரும் முதல் அடிக்கு கொண்ட சாதகப் பொருள் பாங்கு ஒப்பிட்டதாக அமைவதாகும்.

எனவே, பாலாரிட்ட கணிப்புக்கும், ஜென்ம லக்கினமும் சந்திராலக்கினமும் முக்கியமாக அமைந்திருப்பது குறிப்பிடப்பெறுவதாகும்.

நட்சத்திரம் திதி ராசி அந்தத்தின் - பலன்

அன்று அவன் உதித்த நட்சத்திரம் திதி ராசி அந்தம்
ஒன்றிடில் உடனே துஞ்சும் உற்ற பொன் நோக்கில் எட்டே நாள்
வென்றிகொள் வெள்ளி நோக்க விரவுநாள் மூன்று, பொன் காண்
இன்றியே பாவர் நோக்கில் அத்தை நாள் நலிந்து போமே. //

சென்ன காலத்தில் ஏற்பட்டுள்ள நட்சத்திரம், திதி, ராசி, லக்கினம் இவைகள் கடைசி அந்தமா க அமைந்து சேர்ந்து இருந்தால் குழந்தை பிறந்தவுடன் இறக்கும்.

இவ்வாறு அமைந்திருந்தும் குருவின் பார்வை ஏற்பட்டதாக இருந்தால் எட்டே நாள் இருக்கும். சுக்கிரனது பார்வை ஏற்பட்டிருந்தால் மூன்று நாள் இருக்கும்.

குருவின் பார்வை இல்லாமல், பாபகிரகங்களின் பார்வை ஏற்பட்டிருந்தால் பிறந்த நாளிலேயே குழந்தை இறந்து போகும்.

அருஞ்சொற்பொருள்:

அந்தம்-கடைசி பகுதி, காலம், நலிந்த பிற்பகுதி, ஒன்றிடில்-சேர்ந்து இருந்தால், துஞ்சும்-இறக்கும். பொன்-குரு. எட்டே நாள்-எட்டு நாட்களே வாழும். வெள்ளி-சுக்கிரன். விரவு நாள்-தொடர்ந்த நாள். அத்தை நாள்-அன்றைய நாள். குழந்தை பிறந்த அன்று. நலிந்துபோம்-குழந்தை மிகவும் நலிவடைந்து போகும். லக்னசந்தியில் பிறக்கும் குழந்தை பிழைப்பது கடினம் என்பது கருத்து.

ஆயுள் காலம் அறிதல்

நலிவு சேர் அட்டமாதி லக்கினத்தாதி கூடி
வலிய கேந்திரத்தில் நிற்க, மருவி எட்டினில் ஆறோனும்
பொலிவு ஒருவர் நிற்கில் பூமிசை இருந்த பாலன்
ஒலிசெரு வருஷமெட்டுக் குள்ளவன் உயிர்க்கு அரிட்டம். 12

தொகுப்புரை:

ஆயுளுக்கு நலிவைச் சேர்க்கும் எட்டாம் இடத்துக்கு அதிபதி, லக்கினத்துடன் கூடி, வலிய கேந்திரத்தில் நிற்கவும்.,

அந்த எட்டாமிடத்தில் ஆறுக்கு உடையவன் வலிமை பெறவும், அவனுடன் (பாப கிரகம்) ஒரு கிரகம் சேர்ந்து நின்றால்,

பூமியில் பிறந்து வளர்ந்துவந்த குழந்தை வயது எட்டளவில் வாழும் காலத்தில் உயிர்க்கு அரிட்ட தோஷம் ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்:

நலிவு-நோய், ஆபத்து முதலியன. மருவி-சேர்ந்து. பொலிவுற-விளக்கமாக, ஒலிசெரு-நல்ல முறையில் இருந்த. ஆறோனும்-ஆறாம் இடத்துக்குரிய அதிபதியும்

அரிட்டம் சேர்க்கும் விசேட இடங்கள்

உள்ள லக்கினம் எட்டு ஆதி இருவர் லக்கினத்துள் நிற்க
மெல்லவே எட்டில் புகுந்து மேவிய(ட) காரி தானும்
தெள்ளும் அட்டம சென்மங்கள் இரண்டையும் செறிந்து நோக்க
பிள்ளை மெய்க்கு அரிட்டம் என்று பேசினார் பெருமையாரே. 13

தொகுப்புரை:

சன்ம லக்கினாதிபதி எட்டாமதிபதி ஆகிய இருவரும், சென்ம லக்கினத்தில் இருக்க, சந்திரன் எட்டில் இருக்க, சனி எட்டாம் இடத்தினையும் லக்கினத்தினையும் தொடர்ந்து பார்க்கவும். அல்லது எட்டாமிடத்தில் இருக்கவும் பிறந்த பிள்ளையின் உடலுக்கு தீங்கு நேருமென்று பெருமை பெற்ற சோதிடர்கள் சொன்னார்கள்.

அருஞ்சொற்பொருள்:

உள்ள இலக்கினம்-சன்ம லக்கினம் லக்கினத்தில்-

அரிட்டம் காணல் - தொடர்ச்சி

பெருமை செறி தேள் சென்மமதாய் பெரும்பாவர் முன்றிலும்
இருமை பின் ஆறில் நல்லோர் இருக்கில் அரிட்டமாம் இரவி ஒன்று
உரிமையுடன் ஒன்பதில் இருக்க, ஒருவர் கூடி பாராரேல்
அருமையுடன் உதித்திடும் அச்சேய்க்கு அரிட்டம் என்றே அறைவாரே. 14

தொகுப்புரை:

சாதகனுக்கு சென்மலக்கினம் விருச்சிகமாக இருந்து, அதற்கு முன்பக்கம் மூன்று வீடுகளில் பாபகிரகங்கள் இருக்கவும், பின்பக்கம் ஆறு வீடுகளுக்குள் சுபகிரகங்கள் இருக்கவும் பிறந்த குழந்தைக்கு அரிட்டம் நேரும்.

சூரியன் ஒன்பதாம் இடத்தில் அல்லது லக்னத்தில் 1ல் இருக்க, சுபகிரகங்கள் சூரியனுடன் சேராமலும் பார்க்காமலும் இருந்தால் அருமையாகப் பிறந்த அந்த குழந்தைக்கு அரிட்டம் உண்டு என்றே கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

செறி-நன்றாகச் சேர்ந்த. தேள்-விருச்சிக ராசி. பெரும் பாவர்-சனி, ராகு, கேது. இருமை-இரண்டாவதான. ஒருவர்-சுபகிரகம் ஒருவராகிலும்.

3மிடம்ஆயுள் ஸ்தானம் என்பதும் 6மிடம் நோய் அறிவிக்கும் ரோகஸ்தானம் என்பதும் சொல்லப்படுகிறது. 3 மிடத்தில் பாபகிரஹங்களும், 6மிடத்தில் சுப காரியங்களும் இருப்பின் பிறந்த குழந்தைக்கு அரிட்டம் உண்டு என்றும் பொருள் காணலாம்.

அரிட்டம் காணல் -தொடர்ச்சி

அறையும் தகர் தேள் சென்ம மதாய், அட்டமத்திலுறை சனியை
நிறையும் சுபர்கள் பார்வை இன்றி நிற்கில் அரிட்டம் சென்மத்தில்
இறையாம் கரிய பாம்பிருக்க ஏழில் சோமன் இருந்திடவும்
நிறையாய்க் கதிர் செவ்வாய் கூடில் நாள் ஈரைந்தில் நலிந்திடுமே. 15

தொகுப்புரை:

மேடம், விருச்சிகம், இவற்றில் ஒன்று சன்மமாக இருக்கவும். அதற்கு எட்டாவது வீட்டில் இருக்கின்ற சனியை, சுபகிரகங்கள் பாராமல் இருந்தால் அரிட்டமாகும். சென்ம லக்கினத்தில் (சனியும்) தன் ஆதிக்கத்துடன் ராகு இருக்க, அதற்கு, ஏழாம் இடத்தில் சந்திரன் இருந்தாலும், சூரியனும்,

செவ்வாயும் சேர்ந்து இருந்தாலும் பிறந்த பத்து நாளில் அந்த குழந்தை நலிந்து மரிக்கும்.

அருஞ்சொற்பொருள்:

அறையும்-சொல்லப்படும். தகர்-மேடராசி. தேள்-விருச்சிகராசி. இறையாம்-தலைமையாகும். கரிய பாம்பு-ராகு. சோமன்-சந்திரன். நறையாய்- வெண்மை யானதாகத் தோன்றும் சூரியன். ஈரைந்து-பத்துநாள்.

அரிட்டம் செய்யும் - ராகு கேது

இறுமாந்துறும் மதிக்கு ஒருபால் யாவரேனுமுற மற்றொரு புறத்தில்
கரைவாழ்அரவம் எதிர்த்து மதிக்கலைமேல் நடக்கும் தடமாக
நிறைவான சசிவாள் அரவு இரண்டு நில்லார் அண்டி அந்நேரம்.
(உறு கேந்திரத்தை சுபர் பாராதொழியின் குழவிக்கு உறும் அரிட்டம்)

இப்பாடலில் ஓரடி மிகுதியாக எழுதப்பட்டுள்ளது. ஆயினும் அரிட்டம் காண்பதற்கு ஆன பகுதியினைக் கொண்டு பலன் காண வேண்டியுள்ளது.

தொகுப்புரை:

செருக்குடன் தனது ராசியில் அல்லது உச்ச ராசியில் இருக்கும். சந்திரனுக்கு ஒரு பக்கம் உள்ள இடங்களில் எந்த கிரகமாவது இருக்கவும், மற்றொரு பக்கத்தில் இராகு சந்திரனுக்குப் பகையாகி எதிர்த்து சந்திரன் கலைக்கு மேலாக சஞ்சாரமாக நடக்கும் காலத்திலும், பூரண சந்திரனும் ராகு கேதுவும் நில்லாமல் மாறிவரும் காலம் அமைந்தாலும், அந்தக்காலத்தில் கேந்திரஸ்தானத்தை சுப கிரகங்கள் பாராமல் இருந்தாலும் குழந்தைக்கு அரிட்டம் உண்டாகும். மீனம், விருச்சிகம் ஆகிய ராசிகளுக்கு ஏழில் பாபகிரகங்கள் இருந்தால் குழந்தைக்கு நோய் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஒரு பால்-ஒரு பக்கம். அரவம்-ராகு. மதிக்கலை மேல்-சந்திரனின் கலைக்கு மேலாக, நிறைவான சசி-பூரண சந்திரன். வாள் அரவு-கொடிய ராகு. மீன் கரைக்கு-மீனராசிக்கு. தேளும்-விருச்சிகமும். பிணியாம்-கொடிய நோய் உண்டாகும்.

தாய் சேய் அரிட்டம் - அறிய

பிணி ஆறு ஏழில் பாவருமாய் பெருஞ் சென்மத்தில் இரவி உற
துணியாம் எட்டாம் இடத்தில் கேந்திரத்தில் பாவர் சூழ்ந்திருக்க
அணியார் குழவியுடன் தாய்க்கும் அரிட்டம் செவ்வாய் சனிக்கு ஒன்பான்
மணியார் மதியம் பொன்பாராதிருக்க அரிட்டம் பாலருக்கே. 17

தொகுப்புரை:

ஆறாமிடம் ஏழாமிடம் இவற்றில் செவ்வாய், சனி, ராகு, கேது, சூரியன் ஆகிய பாபகிரகங்களில் யாரேனும் இருக்கவும், ஜென்ம ராசியில் சூரியனும் எட்டாம் இடத்திலும் கேந்திரத்திலும் பாபகிரகங்களுக்கும் சூழ்ந்து இருக்கக்கூடிய நிலையில் பிறக்கும் குழந்தைக்கும் தாய்க்கும் கெடுதி உண்டாகும்.

செவ்வாய, சனிக்கு ஒன்பதாம் இடத்தோன் நல்ல சந்திரன் ஆகியோரை குரு பார்க்காமல் இருந்தால் அரிட்டம் பாலருக்கு மட்டும் என்றாகும்.

அருஞ்சொற்பொருள்:

பிணி ஆறில்-ரோகஸ்தானம் காணும் ஆறாம் இடம். பெருஞ் சென்மம்-ராசி சக்கரத்தில் முதல் பெரும் ஜென்ம லக்கினம், துணியாம்-நிச்சயமாகத் சொல்லப்படும். அணியார்-அழகுள்ள. குழவி-குழந்தை. சிசு, ஒன்பான்-ஒன்பதாம் இடத்ததிபன். மணியார்-துலக்கம் பொருந்திய. மதியம்-சந்திரன். பொன் - குரு.

பாடலில் மூன்றாவது வரியில், செவ்வாய் சனி கோணம் என்பதாகவும் கருத முடிகின்றது. கோணமென்பது திரிகோண ராசிகள் என்பதாகும். அதுவே ஒன்பதாம் இடமாகும். அதனையே இப்பாடலில் சனிக்கு ஒன்பான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பாடலால் அறியப்படும் அரிட்டமுறை இரண்டாகும். ஒன்று தாய்க்கும் சேய்க்கும் சேர்ந்து வரும் அரிட்டம் மற்றொன்று குழந்தைக்கு மட்டும் நேரும் அரிட்டம்.

தாய் தந்தை பிள்ளை - அரிட்டம்

பால்வெண் மதியும் தன்னுடனும் பயில் சென்மத்தும் பாவருரில்
வாழும் குழந்தைக்கு அரிட்டமதாம், இரவி அஞ்சில் அதற்கேழில்
சாலச் செவ்வாய் சனி நிற்க தகப்பன் சிறுவன் இரண்டும் சாம்
தேளும் தேய்பிறை பாவர் நடுவாகில் தாய் சிறுவனும் போம். 18

தொகுப்புரை:

சந்திரா லக்கினத்திலும் சென்ம லக்கினத்திலும் பாபகிரகங்கள் இருந்தால் வாழவேண்டிய குழந்தைக்கு கேடுவருவதாகும்.

சன்ம லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் சூரியனும் அதற்கு ஏழாமிடமாகிய பன்னிரண்டாம் இடத்தில் செவ்வாய் சனி இருந்தால் தகப்பன், பிள்ளை இருவருக்கும் அரிட்டம் நேரும்.

தேய்பிறைச் சந்திரன் பாபகிரகங்களின் நடுவான விருச்சிக ராசியில் இருந்தால் தாய் சிறுவன் இருவரும் இறப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்:

வெண்மதி-நிறைமதி, வளர்மதி, பயில்-கூடிய வாழும் குழந்தை-பிறந்து வளர்ந்து வரும் குழந்தை. தேள்-விருச்சிகம் பாவர்-பாபகிரகங்கள்.

தாயும் சேயும் - அரிட்டம்

போமே ஆறாம் இடப் பிறைக்கு ஏழ் பொருந்தி செவ்வாய் சனி நிற்க
ஆமே தாய் பிள்ளைக்கு அரிட்டம், அடல் சென்மத்தில் பாம்பு சனி
தாம் ஆர் நாலில் சேய் ஏழில் தபனன் உரின் சாற்று மரணம்
கோமார் சனி செவ்வாய் ஏழில் குழவிக்கு அரிட்டம் சொல்லுவாரே. 19

தொகுப்புரை:

ஆறாம் இடத்தில் இருக்கும் சந்திரனுக்கு ஏழில் செவ்வாய் சனி பொருந்தி இருந்தால் தாய்க்கும் பிள்ளைக்கும் அரிட்டமாகும்.

சென்மத்தில் இராகுகேது சனி இவர்களும், நான்காம் இடத்தில் செவ்வாயும், ஏழில் சூரியனும் இருந்தால் குழந்தைக்கு அரிட்டமென்று பெரியோர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

போமே-கெட்டுப்போகும். பிறைக்கு-வளர்பிறைக்கு, ஏழ்-ஏழாம் இடம். ஆமே-ஆகும். அடல்-திட்டமாய். கோமார்-பாபகிரகங்களில் தலைமையான சனி. குழவி-சிறுவயதுக் குழந்தை சிசு.

பாபகிரகங்களும் - அரிட்டமும்

வாரார் முலையாய் சென்மம் எட்டாம் மனைக்கு ஆறு, ஏழு எட்டு வியத்தில்
கூராம் பாவர் தேய்பிறையைக் கூட அதற்கு நான்கு எட்டில்,
ஓரார் பாவர் உரின் குழவிக்கு அரிட்டம் பன்னொன்டொன்பதினில்
காரார் சனி செவ்வாய் பாம்பு கலந்துற்றாலும் கடிது அரிட்டம்.

தொகுப்புரை:

சன்மலக்கினம் எட்டாம் இடம் இவற்றிற்கு ஆறிலும், ஏழிலும், எட்டிலும், பன்னிரண்டிலும் பாபக்கிரகங்கள் தேய்பிறைச் சந்திரனோடு கூடி இருந்தால், அதற்கு நான்காம் இடத்திலும் எட்டாம் இடத்திலும் பாபகிரகங்கள் இருந்தால் குழந்தைக்கு அரிட்டமாகும்.

பதினொன்றிலும், ஒன்பதிலும் - சனி, செவ்வாய், இராகு, கேது இவர்கள் கலந்திருந்தாலும் குழந்தைக்குக் கடுமையான அரிட்டக்கேடு நிகழும்.

அருஞ்சொற்பொருள்:

வார்-கச்சு. -மனை-இராசியிடம். வியம்- விரைய ஸ்தானம், கூராம்-கொடியவராம். ஓரார்-நன்மை செய்வதற்கு அறியாதவர். பன்னொன்டொன்பது-பன்னொன்று. ஒன்பது காரார்-கரிய நிறம் பொருந்திய.

பாலன் தாயுடன் அரிட்டம் பெறல்

கடிய சன்மம்தனில் பிறையும் கமழ் சுக்கிரனும் கலந்து நிற்க,
நெடிய ஏழில் சனி நிற்க, இது அல்லாமல் நீள் சனியும்
கொடிய குசனும் ஒருகாலில் கூடியிருக்க சன்மத்தில்
மடியும் பிறை சுபர் நோக்கா திருக்கில் பாலன் தாயுடனே சாவும் காண். 21

தொகுப்புரை:

சன்மத்தில் பிறைச் சந்திரனும் சுக்கிரனும் கலந்திருக்கவும், ஏழில் சனி இருக்கவும், இது அல்லாமல் சனியும் செவ்வாயும் ஒரே நட்சத்திரத்திரக் காலில் கூடி இருக்க, சன்மத்தில் தசமிக்கு மேற்பட்டதாகக் குறைந்த சந்திரனைச் சுபகிரகங்கள் பார்க்காமல் இருந்தாலும், குழந்தை தாயுடன் இறந்து போகும்.

அருஞ்சொற்பொருள்:

பிறையும்-பிறைச்சந்திரனும், நீள் சனி-அதிக வருடங்கள் ஒரு ராசியில் இருக்கும் சனி. கொடிய குசன்-கெடுதி செய்வதில் கொடியவனான செவ்வாய். ஒரு காலில்-ஒரு நட்சத்திரத்தின் பாகமாகிய காலில், மடியும் பிறை-மறைவை நாடும் தேய்பிறைச் சந்திரன்.

பிதாவுக்கு அரிட்டம்

காணும் கேது கருநாகம் கண்ட நாலில் உற்றிடவே
மாணும் குழவி உறும்மரணம், ஒன்பதாமிடத்தில் இவ்வடவே
பேணும் கிரகம் இருந்தாலும் பலவான் காரி கதிருடனே
பூணி வியத்தில் உற்றிருக்கப் பிறந்தோன் பிதாவுறும் மரணம். 22

தொகுப்புரை:

கேது அல்லது ராகு நான்காம் இடத்திலிருக்க குழந்தைக்கு மரணம் வரும். ஒன்பதாம் இடத்தில் இவ்வாறாக ராகு அல்லது கேது இருக்க, பலவான் சனி சூரியனுடன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, அக்காலத்தில் பிறந்தவரின் தகப்பன் பெறுவான் மரணம்.

அருஞ்சொற்பொருள்:

காணும் கேது கருநாகம்-ஒன்றுக்கொன்று ஏழுக்கு ஏழு எதிரான இராசிகளில் இருந்து பார்வை செலுத்தும் கேது ராகுவாகிய கிரகங்களில், இங்கே கேது காணும் ராகுவும் என்று பொருள் காணலாகும். மாணும்-சிறப்புள்ள, இவ்வடவே-இவ்வாறே. பேணும்-விரும்பி இருக்கும். பலவான்காரி-பலம்பெற்றசனி, பூணி-சேர்ந்து. வியத்தில்-பன்னிரண்டில், பிதா-தகப்பன்.

சேய்க்கு அரிட்டம்

மரணம்அஞ்சில்கதிர்மதியம்மந்தன்செவ்வாயுடன்கூடிக்
கிரணமுடனேஇருந்தானாயின்கேளும்குழவிப்பிதாமரணம்
முறனாம்சுரர்குரு எட்டில்மூறிப்பாவர்உடனிருக்கத்
திறமாம்பாவர்நோக்குமுறச்சேய்க்குஅரிட்டம்செய்திடுமே.23

தொகுப்புரை:

ஐந்தாம் இடத்தில் சூரியன், சந்திரன், சனி, செவ்வாயுடன் சேர்ந்து இருந்தால் குழந்தையின் தந்தை மரணமாவான். மாறாக, சுக்கிரன் எட்டாமிடத்தில் கொடிய பாபகிரகங்களோடு இருந்தாலும், அவர்களுடைய பார்வையைப் பெற்றிருந்தாலும், குழந்தைக்கு அரிட்டம் செய்திடும்.

அருஞ்சொற்பொருள்:

கதிர்-சூரியன், மந்தன்-சனி, கிரணம்-ஒளிமங்குதல், குழவிப்பிதா-குழந்தையின்தகப்பன், முறனாம்-மாறுபாடாக, சுரர்குரு-அசுரரின் குருவாகிய சுக்கிரன். மூறிப்பாவர்-வலிமை பெற்றுள்ள பாபக்கிரகங்கள்.

உரைநடையில், கொடிய கிரகங்கள் பாபிகள் என்றே குறிக்கப்பட்டுள்ளனர். பாவி என்பதும் பாவர்களையே குறிப்பதாயினும், பாவகன் என்னும் சொல்லின் சுருக்கமும் சோதிடக் கலைச்சொல்லாகக் குறிக்கப் பெறுதலின்-பாபி என்னும் வடமொழிக்குரிய தமிழாக்கமாகவே தொடர்ந்து குறிக்கப்பட்டுள்ளது.

தந்தை, சேய் -அரிட்டம்

செய்யும் பரிதிக்கு ஒன்பதனில் செவ்வாய் மந்தனுடன் கூடி,
உய்யும் சுபர்கள் நோக்கமில்லார் உற்ற பிதாவின் மரணம்,
பைய்ய மதிக்கு ஏழு எட்டு நலம் பண்பாமிடத்தில் பாவர்களும்
ஐய்யமறவே இருந்தாராயின் அந்தக் குழவி பிதா இறுமே. 24

தொகுப்புரை:

நன்மை தீமைகளைச் செய்யும் சூரியனுக்கு ஒன்பதாமிடத்தில் செவ்வாய் சனி இருவரும் சேர்ந்திருக்க சுபகிரகங்களின் பார்வை இல்லாதிருக்கும் சாதகரின் பிதா மரணமாவான். சந்திரன் இருக்கும் இடத்திற்கு ஏழு, எட்டு, ஒன்பதாம் இடங்களில் பாபகிரகங்கள் சேர்ந்திருந்தால் குழந்தையும் தகப்பனும் சாவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பரிதி-சூரியன், மந்தன்-சனி, பிதா-தந்தை, உய்யும் சுபர்-குன்றங்களைப் பார்வையால் நீக்கி வாழச்செய்யும் சுபகிரகங்கள். நலம் பண்பாமிடம்-பாக்கியஸ்தானமாகும் ஒன்பதாம் இடம். ஐய்யமற-சந்தேகம் இல்லாமல். குழவி-குழந்தை. இறும்-ஆயுள் முடிவுறும்.

தகப்பன், தாய் - அரிட்டம்

இறுமே பாவக் கிரகமுடன் இருந்த மதியும் கிராணமென
உறுமே சென்மம் எட்டில் உதித்த குழவி உறும் மரணம்,
பெறுமே பருகி கிராணமிதில் பேசும் பாவருடன் கூடச்
சிறுவன், எட்டில் சனி செவ்வாய் சேரில் தகப்பன் தாய் மடிவர்.

தொகுப்புரை:

பாவக்கிரகங்களுடன் இருந்த சந்திரன் கிரணதோஷம் பெற்றிருந்தாலும், அந்தச் சந்திரன் சன்மத்திற்கு எட்டாமிடத்தில் இருந்தாலும், அந்தக் குழந்தை மரணத்தைப் பெறும். சூரிய கிரணத்தில் பாவக்கிரகங்களுடன் கூட எட்டாமிடத்தில் சனி செவ்வாய் இவர்கள் சேர்ந்திருந்தால் தகப்பனும் தாயும் சாவார்கள் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

கிராணமென-இராகு கேது இவர்களில் ஒருவரால், சந்திரன் சூரியன் ஆகிய கிரகங்களின் மேல் சாயல் நிகழும் காலம் கிரகணகாலமாகும். பருதி-சூரியன். பேசும் பாவர் பாவக்கிரகங்கள் என்று சொல்லப்படும் சனி, ராகு, கேது சூரியன் ஆகியவர்களுள் ஒருவர், இருவர் சிறுவனின் தாய்-சிறுவனுடைய தகப்பனும் தாயும்.

27 நட்சத்திரப் பாத பலன்கள்
அசுவினி

சீர்பெறு கோளன் சஞ்சலன் பாவி நற் செறிந்திடும் ரூபமே இல்லான்,
செப்பிய பிலுக்கன் பிறர்தனக்கும் செய்குவன் அசுபதி முதற்கால்,
தார்செறி பிறத்தியார் குணமறிவன் சாதுரியன் நன்மையே புரிவன்,
சாத்திரம்
உரைக்கும் ஞானி தூற்பார்வை தரும் அசுபதி இரு கால்
ஏர்பெறு கணிதவித்தை தன்தொழில் இனிதுளன் புத்தியே புரிவன்
இசைந்திடும்
மூலரோகமும் நற்காரியமும் உள்ளான் மூனாம் கால்,
பேர்செறி உடம்பு வளைவனாம் அதிபத்தியும் சோதிடம் அறிபவன் புரந்தரன்
காமி சத்தியம் உரைப்பான் புகல் அசுபதி நாலாம் காலே. /

தொகுப்புரை:

அசுவினி நட்சத்திரம் முதற்காலில் பிறந்தவன், பொருத்தமாகக் கோள் சொல்லுபவன், மனக்கவலை உடையவன், பாவம் செய்பவன், பொருத்தமான அங்கங்களை உடைய உருவம் இல்லாதவன், குறித்துச் சொல்லப்படும் பகட்டுத்தன்மை உடையவன், அவ்வாறே பிறரையும் செய்விப்பவன்.

இரண்டாம் காலில் (பாதத்தில்) பிறந்தவன், பலவகைப்பட்டாரின் குணங்களை அறிபவன், சாமார்த்தியம் உள்ளவன், தனக்குத் தெரிந்த நன்மைகளைச் செய்வபன், சாத்திரங்களை உணர்ந்த ஞானியைப் போன்றவன், கெடுதியான பார்வையை உடையவன்.

மூன்றாம் காலில் பிறந்தவன், பொருத்தமான கணக்குத் தொழிலை விரும்பிச் செய்பவன், அதில் புத்திசாலியாகச் செயல்புரிபவன், மூலரோகம் உள்ளவன், நல்ல காரியங்களை எல்லாம் நினைப்பவன்.

நான்காம் காலில் பிறந்தவன், பிறரிடம் சண்டையைத் தொடர்பவன், சற்று வளைந்த உடம்பினை உடையவன், அதிக புத்தி உள்ளவன், சோதிடம் அறந்தவன், இந்திரனைப் போன்று போகத்தில் காமி, சத்திய வார்த்தையினைச் சொல்லுபவன்-இவ்வாறாக, அசுவினி நான்கு பாதங்களுக்கும் பொருந்திய மனித இயல்புகளை அறியலாகும். (கால்-பாதம், பகுதி)

பரணி

காலமாம் சிவலை வெகு பராக்கிரமன் கட்டி பலன்ஈகையுமுள்ளான்
கருதிலாசிங்கம் சிவந்திடுரோமன் காணுமேபரணியின் முதற்கால்
கோலமாநிபுணன் ஆலசியன் தர்மன் குணமுள்ள புத்திமான் காமி, கூறிய
சாத்திரம் மிகவறிந்து உரைப்போன் குவலயத்தில் இருகால்
பரணியான்
சாலவாம் கோபி உருண்டிடும் கண்ணன்
தனது நலமானவன் புத்தி சந்தோஷி நெடுவன் மூனாம் காலில்,
சாத்திய பரணியான் அதன்மேல் தூலமாம் கோபி அணர்கள் சாகசன் தொடர்
சேவகத்துளான்
சிறு வீமார்ச்சுனன் துர்ச்சனன் பரணி தோன்று நாற்காலே
சொல்லும். 2

தொகுப்புரை:

பரணி முதற்காலில் பிறந்தவன், வளரும் காலத்தில் சிவந்த மேனியன், மிகுந்த பராக்கிரமம் உள்ளவன், கெட்டியான பலமுள்ள உடம்பை உடையவன், பிறருக்கும் கொடுக்கும் குணமும் உள்ளவன், பகைவர் எதிர்பாராதவகையில் சிங்கம் போல் எதிர்ப்பவன், சிவந்த மயிருடையவன்.

இரண்டாம் காலில் பிறந்தவன், பலவகையில் சாமார்த்தியமுள்ளவன், தாமதமாகச் செயல்புரிபவன், தர்மம் செய்பவன், குணமுள்ளவன், புத்திசாலி, காமமுள்ளவன், உலகிலுள்ள பலவகைச் சாத்திரங்களைக் கற்றுச் சொல்லுபவன்.

மூன்றாம் காலில் பிறந்தவன், மிகுந்த கோபமுள்ளவன், உருண்டையான கண்களை உடையவன், சுயநலமுள்ளவன், புத்தியினாலான மகிழ்ச்சி உடையவன், நெட்டை உருவமுடையவன்.

நான்காம் காலில் பிறந்தவன், மேலே பரணி மூன்று பாகத்திற்கும் சொல்லப்பட்ட குணங்களுடன், அதற்கு மேலாக, ஆதாயம் கருதி கோபிப்பவன், தன்னை விட மூத்தவர்களிடம் சாகசமாகப் பழகுபவன். அரசாங்க உத்தியோகத்தினைத் தொடர்ந்து செய்து வருபவன். பலசாலியாகவும் புத்திசாலியாகவும் பிறரிடம் நடப்பவன், பொல்லாதவன்-இவ்வாறு பரணி நான்கு பாதங்களுக்கும் உரிய மனித இயல்புகளை அறியலாகும்.

கார்த்திகை

சொல்லும் ஆசாரன் வித்துவான் பிரபு
தொண்டு நல்லதயாளன் முன்னாம் சூரன் தூரவளைப்பன்
சத்தரோகி புத்திமான் தோன்றிடும் ஆறவிர் முதற்கால்,
வெல்லும் அவசரப்பிழையன் மனுதரை
வெறுக்கவே கோபமுள்ளான் வெற்றிசேர் பிறத்தியார்தனை
சேர்க்கும் வேண்டிடான் உரைத்த சாத்திரம் இருகால்,
பொல்லாத ஸ்திரீகளிடத்தில் சஞ்சாரன் புத்தியில்
ரணசூரன் கோபி பொருந்திடான் கர்வி பிரமாதமா முடிப்பான்
புகலொரு மூன்றாம் காலில்,
இல்லாத தரித்திரன் கலைகளறி பாணினி
மானத் தாபமே உள்ளான் இசைந்திடா பெருமை துக்கம்
மாரோகி இதுவுளன் இசைந்த நாற்கால் பொருளே. 3

தொகுப்புரை:

கார்த்திகை நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்தவன், பாராட்டும்படியான நல்ல பழக்க வழக்கங்களை உடையவன், பண்டிதன், செல்வவான், தொண்டு செய்வதில் நல்ல தயாளமனம் உடையவன், முன்னின்று காரியம் செய்யும் சூரன், யாரையும் தன்வயப்படுத்துபவன், நிலையான நோய் உள்ளவன், புத்தியுள்ளவன்.

இரண்டாம் காலில் பிறந்தவன், வெற்றி பெறும் அவசரத்தில் பிழை செய்பவன், மக்களிடம் வெறுப்பு தோன்றுமளவிற்கு கோபமுள்ளவன், வெற்றிபெறுவதற்காக மற்றவரைத் தன்னிடம் சேர்க்கும் உபாயம் உள்ளவன். தாழ்ந்து எவரிடமும் எதையும் வேண்டாதவன்.

மூன்றாம் காலில் பிறந்தவன், பொல்லாத பெண்களிடத்தில் தொடர்புடையவன், அறிவில் மிகவும் கெட்டிக்காரன், கோபமுள்ளவன், யாரிடமும் நெருக்கமாகச் சேரமாட்டான், தான் என்ற கர்வம் உள்ளவன், எடுத்த காரியத்தை நல்லமுறையில் முடிப்பவன்.

நாலாம் காலிற் பிறந்தவன், இருந்தும் இல்லாதவன் போன்ற தரித்திரன், சகலங்களையும் அறிந்த பேரறிவாளன், மானத்தைக் காத்துக்கொள்ளும் ஆர்வத்தைப் பெற்றவன், பொருந்தாத பெருமையுடையவன், வருத்தமுடையவன், தொடர்ந்த நோய் உள்ளவன்-இவ்வாறான இயல்புகளை கார்த்திகை நான்கு பாதத்திற்கும் பரிந்து அறிவதாகும்.

உரோகிணி

பொருள்முகுளன்அலைச்சலான்நற்காமி
பிறத்தியார்தனக்குமே துன்பம்பொறையில்லாதரோசன்
மனத்தில்பிடிப்பன பொருந்துவன்ரோகிணி'முதற்கால்,
மருளுயர்சாந்தகுணன்ரோகிஆசாரன்
சத்தியவாக்கிஅமர்ந்ததோர்நாரிமணன்
வாய்சாலன், புருடன்இருகால்பலனே,

குருவருள் கணிதவித்தை சங்கீதன் கூறிய
மந்திரன், அஞ்சுகவான் குலவிய பஞ்சகல்யாணி, தியானி
கொள்கையான் மூன்றாம் பாதம்
இருளிலாதத்துவன் பிறத்தியாருடைமைக் கிச்சைப்
படும் மனத்தான் புத்தியுள்ளவன் இனிய ஸ்திரிலோலன் ரோகிணி
நாலிலாது பலன்மிக அறிந்துரைத்தே. 4

தொகுப்புரை:

உரோகிணி நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்தவன், பொருள் சேர்ப்பவன். அலைச்சல் படுபவன், நல்ல காம இச்சை உடையவன், பிறருக்கும் அதனால் தனக்கும் துன்பம் உண்டாக்குபவன், பொறுமையில்லாத வீராப்பு உடையவன், தன் மனத்திற்குப் பிடித்ததை ஏற்பவன்.

உரோகிணி இரண்டாம் காலிற் பிறந்தவன், இரக்கமும் சாந்தகுணமும் உடையவன், ஏதோ ஒரு நோய் உள்ளவன். தூய்மையான நடை உடை உடையவனன், உறுதியான சொல்லை உடையவன், தனக்கென அமைந்த பெண்ணை மணப்பவன், சொல்சாலம் செய்பவன், ஆண் தத்துவம் உடையவன்.

உரோகிணி மூன்றாம் காலிற் பிறந்தவன், ஆசிரியரின் அருளால் கணக்குக் கல்வியிலும், இசைபாடுவதிலும் சிறப்புடையவன், மந்திரவாதியாகவும் இருப்பான். நல்ல சுகமுடையவன், மெய் வாய் கண் மூக்கு காது ஆகியவற்றை அழகுடன் பெற்றவன், தியானம் செய்பவன், கொள்கை உடையவன்

உரோகிணி நான்காம் பாதத்தில் பிறந்தவன், தெளிவான கருத்தினை உடையவன், பிறரின் உடைமைக்கும் ஆசைப்படுபவன், புத்தியுள்ளவன், பெண் போகத்தில் விருப்பம் மிகவும் உடையவன்-இவ்வாறான பலன்கள் நான்கு பாதங்களையும் அறிந்து தேர்ந்து சொல்லப்படுவதாகும்.

மிருகசீரிடம்

உரைத்திடும் தனவான் சத்துரு சங்காரி
உறுதூல சரீரன் கோபி உண்மை ஆசார ஈனன்
விளைனொடுங்கு மான் தலையன் முதற்கால்,
தரைக்கு நல்வழக்கு உரைப்பன் உத்தேசி சாது
மனோகரம் பெற்றோன் சத்தியவாக்கி ஸ்திரிலோலன் என்றே
சாற்றிடும் இரண்டாம் காலில்
உரைக்கா நகர்க்கிலா உதாரகுணமுளன் சாது
நல்லவன் சந்தோஷ வாக்கி நலம் பெறு புத்தி ஆசான் சீமான்
நாடிய பாதம் மூன்றாம்
துரைக்குளபுத்தி சத்தியன் சாது சொல்லிய
தனம் நற்காமி தொடர் பிறவஞ்சனை சமானன் இனிது
தோன்றும் நாற்பாதமினியே. 5

தொகுப்புரை:

மிருகசீரிட நட்சத்திரத்தில் முதல்பாதத்தில் பிறந்தவன், ஊரில் குறித்துச் சொல்லப்படும் நிலபுலம் உடையவன், பகைவரை அழிப்பவன், பொருந்திய பெருத்த சரீரமுடையவன், கோபமுள்ளவன், உண்மையான ஒழுக்கம் இல்லாத ஈனன், கொம்புகள் ஒடுங்கிய மான்தலையைப் போன்ற தலைச்சாயல் உடையவன்.

மிருகசீரிடம் இரண்டாம் காலில் பிறந்தவன், ஊரில் வழக்கு திறமையாகப் பேசுவபன், திட்டமிடுபவன், பார்ப்பதற்கு சாதுவானவன், மனத்தில் நிம்மதியைப் பெற்றவன், உறுதியான சொல்லை உடையவன், பெண்களைச் சல்லாபம் செய்பவன் என்றே சொல்லலாம்.

மிருகசீரிடம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், சொல்லாமல் நகராமல் உதவிசெய்யும் இரக்ககுணம் உள்ளவன், சாதுவாகவும் இருப்பவன், நல்லவர்க்கு நல்லவன், சந்தோஷமுடன் பேசுபவன், நன்மையைப் பெறுவதற்குரிய புத்திசாலித்தனமும் தலைமையும் உள்ளவன், ஆசிரியனாவான், செல்வந்தனாவான்.

மிருகசீரிடம் நான்காம் பாதத்தில் பிறந்தவன், அதிகாரிகளுக்கு இருக்கும் அதிகார புத்தியுள்ளவன், உண்மை பேசுபவன், சாதுவாகவும் இருக்கும் தன்மை உடையவன், சொல்லியபடி பொருள் பெறும் தனவான், நல்ல காம இச்சையுடையவன், தனக்குப் பிறர் செய்யும் வஞ்சனைக்குத் திடமுடன் ஈடு செய்வபன்-இவ்வகையான பண்புகளை மிருகசீரிடம் நான்கு பாதத்திற்கும் அறிவதாகும்.

திருவாதிரை

இனியநல்லவசனன்குணவான்மகாத்துமா
எவனன்நாரியற்சங்கையிலான்நல்லஆதிரைமுதற்கால்
இயல்பெறும்குணத்துநாளில்

தனியுரைவாய்ச்சாலகன்நிட்டூரன்கர்வி
தானகுரு தீட்சையுமில்லான்தகுதிசேரஸ்திரீகள்சுங்கையே
புரிவன்சாற்றியபாதம்இரண்டில்

குனியநல்வாதரோகமுள்ளோன்கோபிதன்
கிருபையுமில்லான்கோளனாம்அஞ்சுநாரியர்தனக்கே
குணகேடன்காலொருமூன்றாம்
துனியகலவேமுறைஉரைப்பகையான்தோன்றிய
ஈனமாம்மனத்தன்துர்புத்திஊத்தைஉடம்புமேபொல்லாத
துர்ச்சனன்நாற்பாதமென்றே. 6

தொகுப்புரை:

திருவாதிரை நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்தவன், இனிய நல்ல பேச்சுள்ளவன், நல்ல குணமுள்ளவன், எல்லோர்க்கும் நன்மை செய்யும் பெரியோன், அழகுள்ளவன், பெண்களிடத்தில் கூச்சமற்ற பழக்கமுடையவன்.

திருவாதிரை இரண்டாம் காலில் பிறந்தவன், தனக்கென அமைந்த சொல் சாதுரியம் உள்ளவன், தேவையானபோது கொடியவன், கர்வமுடையவன், தானம் பெறும் குருவினிடத்தில் தீட்சை பெறாதவன், தகுதியான பெண்களோடு போகம் செய்பவன்.

திருவாதிரை மூன்றாம் காலில் பிறந்தவன், உடலை வளைக்கும் வாதரோக முன்னவன், எதற்கும் கோபம் காட்டுபவன், மேலோரின் அன்பைப் பெறாதவன், கோள் சொல்பவன், அச்சமாகிய பண்புடைய பெண்களின் நிலையறிந்து சேராத குணம் கெட்டவன்.

திருவாதிரை நான்காம் காலில் பிறந்தவன், அச்சமில்லாமல் வாக்குரை செய்து பகைவனாகும் செயலுடையவன். நினைத்தவாறெல்லாம் செயல்புரியும் கீழ்த்தரமான மனத்தை உடையவன், பிறருக்கு கெடுதி செய்யும் புத்தியுடையவன், திடமில்லாத சரீரத்தை உடையவன், பொல்லாத கொடுமையாளன், தீமைகள் செய்பவன்-இவ்வாறான இயல்புகளை திருவாதிரை நான்கு பாதங்களிலும் பாகுபடுத்தி பிறவியின் குண விசேடங்களை அறியலாகும்.

புனர்பூசம்

என்றும் மெய்தூலப் பிலுக்கன் நற்போகி
இசைந்திடும் செவிடனாம் காமி ஏனமாமயிரன் இனிதாம்
புனர்பூச முதற்கால்
துன்றிய பித்தன் அனுஸட்டன் நன்மை
சோம்பல் ஆசாரமும் இல்லான் துக்கமே நித்தம் புரிகுவன்
இருகால் தோன்றிய நாள் பல மிகவே
அண்டுடன் குஷ்டரோகமும் சார்ந்து அலைச்சலான்
காவியமறிவன் மந்தினி தந்த ரோகமும் தீர்க்கவயது
பதமும் மூன்றே.
நன்றினி பிரியமுள்ளவன் குள்ளன்
நல்லவன் அழகுளனென்றே நாடிய பாதலக்ஷணமறிவன்
நாலாம் பதம் அறிந்துரை தனக்கே. 7

தொகுப்புரை:

புனர்பூச நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன், என்றும் பகட்டான தூலதேகமுள்ளவன், நல்ல போகியும், பிறருக்கு இசைத்திடும் செவிடனைப் போன்றவன், காம இச்சை உள்ளவன், பன்றியின் மயிர் போன்ற மயிரை உடையவன்.

இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் பித்தம் சேர்ந்த உஷ்ணதேகமுடையவன், முதன்மையான மாணவன், நன்மை, சோம்பல் ஆசாரம் ஆகியவற்றில் கவனம் இல்லாதவன், தினமும் ஏதாவது பற்றிய வருத்தத்தினை செய்பவன், இவ்வாறாக புனர்பூசம் இரண்டாம் காலில் பிறந்தவனின் பலன்கள், நாட்கள் பல தொடர்ந்த நிலையில் நிகழும்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பிறரை நெருங்கிக் கூடுவதால் குஷ்டரோகம் வரப்பெறுவான், வீண் அலைச்சல் உடையவன், காவியங்களைக் கற்றவன், மந்தமான செயலுடையவன், பல் நோய் உடையவன். நிறைந்த ஆயுளும் உடையவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், நன்றியுள்ளவன், பிறரிடம் பற்றுள்ளவன், குள்ளமான வடிவமுள்ளவன், யாவருக்கும் நல்லவன், அழகுள்ளவன், என்றே சொல்லலாம். காலடிகளின் சாதுர்யமான இலக்கணமுடைய அழகினைக் கற்றறிந்தவன்-இவ்வாறான இயல்புகளைப் பெற்றவனாவான்.

பூசம்

தணக்குமாம்சூலை நெட்டுரன் கோபி
தர்மன்புத்தியுள்ளதாகிய தீர்க்க வயது துர்க்குணம்தரும்
இனிய பூசம் முதற் கால்.
தினத்தினில் பிரபு சர்வவியாபகன்நல்ல
சனங்களைதாபரித்திடுவான்செப்பிய நிதானன்பிறத்தியார்
சினேகிதன் சேர்ந்திடும் இரண்டாம் பாதமே.
இனத்தினுக்கினியன் அதிகம் புத்திமான்ஞானி
இனியசந்தோஷி அனுகூலன்நினைப்பினால்நல்லகாரியம்
முடிப்பன்இவனொரு மூன்றினுக்காலாம்.
மனக்குறுசண்டைக்காரனாம்வாஞ்சையான்
நாரியர் தன்மேல் மகிழ்ந்திடும்கமனன் பூசம் நாற்காலால்வரும்
பலனறிந்துரைமினே! 8

தொகுப்புரை:

பூச நட்சத்திரம் முதற்காலில் பிறந்தவன், வருத்துகின்ற வயிற்றுநோய் உடையவன், தானென்ற மமதை உடையவன், கோபமுள்ளவன், தர்மம் செய்பவன், புத்திசாலித்தனத்துடன் நிறைந்த வயதுடையவன், கெட்டகுணம் உடையவன்.

பூசம் இரண்டாம் காலில் பிறந்தவன், நல்ல வயதினில் செல்வந்தன், எல்லா வகையிலும் வரிவான அனுபவ அறிவு படைத்தவன், மக்களை நல்ல வழியில் ஆதரித்திடுவான், குறித்து சொல்லப்படும் நிதானமானவன், பிறரிடத்தில் நல்ல சினேகிதமாக இருப்பவன்.

பூசம் மூன்றாம் காலில் பிறந்தவன், தனது இனத்தவருக்கு நல்லவன், பிறர்மதிக்கும் அளவில் புத்தியுடையவன், தீர்க்கமான அறிவுடையவன், இனிமையாக சந்தோஷப்படுபவன், பிறருக்கு நல்லன செய்யும் அனுகூலன், நினைத்து முடிவு செய்வதால் நல்ல காரியங்களைச் செய்து முடிப்பவன்.

பூசம் நாலாம் காலில் பிறந்தவன், மனத்தில் வைத்த குறுகிய புத்தியால் சண்டைக்காரனாகும் தன்மையன், எல்லோரிடத்திலும் பற்றுள்ளவன். விருப்பமுள்ளவன், பெண்களிடத்தில் அவர்கள் மகிழுமாறு நடந்துகொள்பவன்- இவ்வாறான பலன்களை பூசம் நான்கு பாதத்திற்கும் பார்த்துச் சொல்லுதல் வேண்டும்.

ஆயில்யம்

மின்னிய தனமும் பெண்வடிவும் உள்ளான்
மென்மை நற்புத்தி சந்தோஷி மிகு நன்மை நாலுதொழிலுமே
புரிவன் வேண்டும் ஆயில்யத்தின் முதற்கால்,
அன்னியர் ஏவத்தொழிலுமே கேட்பன் அழகுளான்
ஏக்கமும் உள்ளான் ஆசாரன் பொல்லா நடத்தையான் துர்ப்புத்தி
அறிந்திடும் கால் இரண்டாம்

நன்னியஸ்திரீகளைவதைப்பன்ஞானியர்
வசியநிபுணன்நலமிலாவார்த்தைபதகமேஉரைக்கும்நயமிகு
பாதம்முன்றே
பெண்குலைவன்காமிகன்பொல்லாதவருக்கு
இனியோன்புலச்சியர்சங்கைபண்ணுவன்நோய்புணர்ந்திடும்
நான்கதாம்காலே. 9

தொகுப்புரை:

ஆயில்யம் நட்சத்திரம் முதல் பாகத்தில் பிறந்தவன், மிகுந்த செல்வமுடையவன், பெண்ணைப் போன்ற வடிவுச்சாயல் உடையவன், மென்மைத்தன்மை உடையவன், நல்லபுத்தியுடையவன், சந்தோஷ சித்தன், மிகுந்த நன்மைகளைச் செய்பவன், பலவாறான தொழிலைக் கற்றுச் செய்பவன்.

ஆயில்யம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், பிறர் ஏவும் தொழிலைச் செய்பவன், அழகுடையவன், நினைத்ததை அடையாததால் மனத்தில் ஏக்கமும் கொண்டுள்ளவன். நடைமுறையில் தூய்மை ஆசாரன், பொல்லாத செயல்களை உடையவன், கெட்ட புத்தியுள்ளவன்.

ஆயில்யம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், தன்னிடம் வந்த பெண்களை அலைக்கழிப்பவன், ஞானிகளையும் தன்வழிப்படுத்தும் திறமைசாலி, தீயவார்த்தைகளை மனத்தில் வைத்துப் பேசுபவன்.

ஆயில்யம் நான்காம் பாதத்தில் பிறந்தவன், பெண்களை நிலைகுலையச் செய்யும் காமம் உள்ளவன். கெட்டவருக்கு நல்லவன். தாழ்ந்த சாதிப் பெண்களிடம் சல்லாபம் செய்பவன், அதனால் உண்டான நோயாளி யானவன்-இவ்வாறான இயல்புகள் ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவனுக்கு உண்டு என்பதைக் கண்டுரைக்கலாகும்.

மகம்

காலனைப் பார்க்கப் பயமுள்ள சிவந்த கண்ணன்
பேராசையான் யூகி கருதிய செம்பட்டு மயிர் சிம்ம கணம் நாள்
முதற் கால்பாதமே.
போலனும் வந்தியின் நடு வடுவுடையோன்
பொன் பெண் செலவு முளான் சந்தோஷி புறாக்கண்ணன்
காதினில் நோவுளன் பொருந்திய இருகால் பலனே
சாலனாம் பலவான் அதிக ரோகமுளன் சாது
பொல்லாதவன் கடினன் தாமிகவான் சக்காரனே துய்ய தகுதி
கால் முன்றெனச் சொல்லும்
சீலதாம் நாரி பேச்சுகள் கேட்பன் சிரங்கு
நோவு கழுத்தோன் சிந்தையே துக்கம், மதுரமாம் பேச்சு
தெளிந்துரை நாற்பதமாமே. 10

தொகுப்புரை:

மகம் நட்சத்திரம் முதற்காலில் பிறந்தவன், எமனைப் போன்று பார்க்கப் பயமுள்ளவன், சிவந்த கண்ணன், பேராசையுடையவன், மிகவும் சிந்திக்கும் யூகி, கருகிய செம்பட்டை மயிருடையவன்.

மகம் இரண்டாம் காலில் பிறந்தவன், போலித்தன்மையுடையவன், வயிற்றின் நடுவில் வடு உடையவன், பணத்தை (பெண்வழி) செலவு செய்யும் மனம் உடையவன், மனச்சந்தோஷமுள்ளவன், புறாவைப்போல் கூர்மையான கண் பார்வை உடையவன், காதில் நோய் உள்ளவன்.

மகம் மூன்றாம் காலில் பிறந்தவன் சாகசக்காரன், பலமுள்ளவன், அதிக ரோகமுள்ளவன், சாது போன்றவன், பொல்லாதவன், கடின மனம் படைத்தவன், தன்னை உயர்த்திக் கொள்பவன், காரியக் காரன்.

மகம் நான்காம் காலில் பிறந்தவன், பெரிதாகப் பெண்கள் பேச்சினைக் கேட்பவன், சிரங்கு போன்ற நோயும், கழுத்தில் நோயும் உடையவன். சிந்தனையில் வருத்தம் உள்ளவன். பிறர் மெச்சுமாறு இனிமையாகப் பேசுபவன், இவ்வாறான இயல்புகளை மக நட்சத்திரத்தில் பிறந்தவனிடம் காணலாகும்.

பூரம்

ஆ மெனும் தீரன் இன்சொலன் கோபி ஆசாரன்
சவுரியன் சிறுவீடு அச்சுரிய மில்லாதவன் வியாபாரனாம்
ஆகிய பூரம் முதற்கால்.
தா மெனும் உழவுக்குடி செறிதண்ணீர் தாகமும்
கிலேசமும் உள்ளோன் தானுறுசாபம் பிற்பலன் இல்லாதவன்
இருபாத மன்றே.
நா மெனும் குணவான் மேம்பாடுளனே நல்லவன்
கீர்த்தியே பெற்றோன் நாடியமூனாம் பலனென்னும் பொருளை
நாட்டினில் உரைக்கவும் மூத்தோன்
தே மெனும் தூக்கம் குறுவடுவுள்ளான் திரன்
மகம் நிந்தையே புரிவன் தேவரை மறையோர் தூஷணஞ்
சொல்லித் திரிவனாம் நாலாம் காலே. / /

தொகுப்புரை:

பூர நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன், தீரனும், இனிமையாகப் பேசுபவனும், கோபமுள்ளவனும், ஆசாரமுள்ளவனும், சௌகரியமுள்ளவனும், சிறு வீட்டையுடையவனும், நிலைத்த செல்வமில்லாதவனும், வியாபாரம் யாதாயினும் செய்பவனுமாவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், விவசாயம் செய்யும் குடியிலுள்ளவனும், நிறைந்த தண்ணீர் தாகம் உள்ளவனும், கவலையுள்ளவனும், தான் பெற்றுள்ள சாபத்தினால் துன்பப்படுபவனும், பிற்காலத்தில் நன்மைபெறாதவனும் ஆவான்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், தாம் என்ற குணத்தினை உடையவனும், மேலானதன்மை உள்ளவனும், நல்லவனும், புகழைப் பெற்றவனும், ஆவான். பூரம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவனுடைய பலனை நாட்டினில் சொல்வதற்கு முதன்மை பெற்றவனாவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், எதற்கும் கவலைப்படாத தூக்கமுள்ளவனும், சிறு வடுவினை

திரேகத்தில் உள்ளவனும், யாகம் முதலியவற்றைப் பற்றி நிந்திப்பவனும், பிராமணர்களையும் தெய்வங்களையும் மதிக்காதவனும், அதனைச் சொல்லித் திரிபவனும் ஆவான். இவ்வாறான பலன்கள் பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவனுக்கு உரியதாகும்.

உத்திரம்

கண்டெனும்கீர்த்தி மெத்தெனப் பேச்சுக் காரனாம்
கீதமரிவன்சுருதிய தீரன்பந்தமே பிரியன்கனதனமுத்திரன்
முதற்கால்
கொண்டெனும் காமி தரித்திரன் ஊண்மிகல் கொள்ளும்
சஞ்சல சித்தன்கூறிய நித்த சாகசன்புருடன்குலவிய
இருபாத மென்றே
பண்டெழும்பிலுக்கன்விசேட முத்தப்பன்பசுக்
களைமேய்த்திடும்சிறுவன்பாரில் ஆசாரவன்என்றுமூன்றாம்
பதத்தின்பொருள்தனைஉரைத்தே
வண்டெனும்துச்சனன்செய்திடுநன்றிமறந்
திடான்பரியாச முடையோன்வாலிபந்தன்னில்தாய் இறும்
என்றேவழங்குவர்நாலினும் பெரியோர். 12

தொகுப்புரை:

உத்திர நட்சத்திரம் முதற்பாதத்தில் பிறந்தவன், இனிமையாகப் பேசுபவன், அதனால் பெருமையும் பெருமையான பேச்சுக்காரன், சங்கீதம் அறிந்தவன், திட்டமிட்டபடி செய்வதில் வல்லவன். தன்னைச் சார்ந்தவரிடம் பிரியமுள்ளவன், கனவானும் தனவானும் முதன்மை பெற்றவனும் ஆவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், எனக்குத்தானெனும் காமப்பித்தன், தரித்திரவான், மாமிசவுணவில் மிகவும் பற்றுள்ளவன், கவலையுள்ள மனத்தினன், சொல்லும் அளவில் நிலைத்த பாசாங்குக்காரன், மெத்தென நடப்பவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பழமை பேசும் பகட்டுக்காரன், மிகவும் அழுத்தமான மனமுடையவன்,

மாடுமேய்க்கும் செயலில் சிறுமையுடையவன், பார்வைக்கு நல்ல பழக்க வழக்கமுடையவனென்று சொல்லப்படுபவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், சுற்றித் திரியும் கெடுதியாளன், தான் விரும்பியதைச் செய்திடுபவன், நன்றிமறவாதவன், பிறரைப் பரிகாசம் செய்யும் செயலுடையவன், அவனுடைய வாலிப வயதில் தாய் மரணமாவாள் என்றே சோதிடம் அறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்

இவ்வாறான நான்கு பாதங்களுக்கும் அமைந்த பலன்கள், உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவனுக்கு கூறலாகும்.

அஸ்தம்

பெரியதோர் கலகம் பண்ணுவித்திடுவன், பேசிடும் சுவை
யாம் கர்வி பிலுக்கனாசாரன் பசுக்கள் தன்னிடத்தில் பிரியனாம்
அஸ்தம் முதற்கால்.
அரியதோர் குணவான் செய்தினி காரியமறிவனாம்
வாலிபம் தன்னில் அன்னையே மரிப்பள் மெத்தவும் வார்த்தை
ஆடலில் பிரியன் அஸ்தமிரண்டில்
தரியதோர் பொல்லா மனசு வாலிபத்தில் தகப்பனே
இறும் வியாபாரன் தந்திரமறிவன் ஆரோக்கியவான் தரும் பலன்
மூன்றெனச் சொல்லும்
நெரியதோர் நல்நடத்தையும் தாதா நெடுவல்
சந்தோஷ முள்ளான் நெஞ்சமாம் அன்னை ஆசை
மெய்க்கீர்த்தியன் நெருங்கிய நாற்பதமறிந்தே. 13

தொகுப்புரை:

அஸ்த நட்சத்திரம் முதற்பாகத்தில் பிறந்தவன், பெரிய கலகங்களை உண்டு பண்ணுவிப்பவன், பிறர் விரும்பிக் கேட்குமளவில் இனிமையாகப் பேசுபவன். தானென்ற கர்வமுடையவன். போலிப்பகட்டான ஆசாரமுடையவன், பசுக்களிடத்தில் மிகவும் பிரியமுள்ளவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், பிறரிடம் காணமுடியாத அரிய குணத்தை உடையவன், செய்கின்ற காரியத்தை அறிந்து செய்பவன், அவனுடைய வாலிப வயதில் தாய் மரணமாவாள், பிறரிடம் அதிகமாக வார்த்தை ஆடுவதில் பிரியமுள்ளவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், மாற்ற முடியாத பொல்லாத திட்டங்களை மனத்தில் உடையவன், நல்ல வயதில் அவனுடைய தகப்பன் இறப்பான். வியாபாரம் செய்வான், தந்திரமுள்ளவன், ஆரோக்கியமாக வாழ்பவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், நல்ல முறையில் நடத்தையுடையவன், பிறருக்குக் கொடுக்கும் மனம் உடையவன், நெடிய தொடர்ந்த மாறாத மகிழ்ச்சியுடையவன், நெடிய தொடர்ந்த மாறாத மகிழ்ச்சியுடையவன், தாயிடம் மிகுந்த ஆசையுள்ளவன், நல்ல புகழைப்படைப்பவன் இவ்வாறு சேர்ந்த பலன்களை அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவன் பெறுபவனாவான்.

சித்திரை

அறிந்திடும் பொல்லாத காரியம் பண்ண
அறிகுவன் நேத்திர ரோகி ஆக்கிரன் வியாக்கியான் சஞ்சாரன்
ஆகிய சித்திரை முதற்கால்.
பெறுந்தனி வசனன் தேகம் போஷனையான் தரித்திரன்
நெடுவல் சந்தோஷி சஞ்சலன் தவசி இருபதமுரைத்த
தகமையும் பூதலத்துரைத்தோம்
செறிந்திடும் கீர்த்தி பராக்கிரமம் சாஸ்திர வித்து
வானெனும் ஞானி செப்பு நல் நடத்தை அறிவுடையாளன்
திரிபதமெனவரும் பலனில்
எறிந்திடும் புத்தி சத்துரு வாசியன் எதிரிடும்
மறுவலர் தன்னை இனிமையாய் அடக்கும் சோபனமுள்ளான்
நாற்காலெனப் பெற்றே. 14

தொகுப்புரை:

சித்திரை நட்சத்திரம் முதற்பாதத்தில் பிறந்தவன், மற்றவர் தெரிந்துகொள்ளும் கொடிய செயல்களைச் செய்ய விரும்புகின்றவன், கண் நோய் உள்ளவன், தனதாக்கிக் கொள்பவன், பலவாறு விவரித்துப் பேசுபவன் ஓரிடத்தில் தங்காதவன்,

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், பெரிதாகத் தனித்தன்மையுடன் பேசுபவன், தேகத்தை மிகவும் பாதுகாப்புடன் வளப்படுத்திக்கொள்பவன், தரித்திர

முடையவன், நெடியவன் (உயரமானவன்) மகிழ்ச்சியாக இருப்பவன், மனக்கவலையுடையவன், தபங்கள் செய்பவன், இவ்வாறாக இரண்டாம் பாதத்திற்குரிய செயல்களை உலகில் சொல்வோமானோம்,

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், மேன்மேலும் கீர்த்தியுள்ளவன், பராக்கிரமசாலி, சாத்திரங்கள் கற்ற வித்துவான், ஞானி, சொல்லக்கூடிய அளவில் நல்லநடத்தை உடையவன், அறிவு உடையவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், இல்லாமல் செய்யும் புத்தியுடையவன், பகைவரைப் பணிவிப்பவன், குறையுடையவன், எதிர்த்துவரும் பகைவரை இனிமையாகப் பேசி அடக்கும் சாதுர்யம் பெற்றவன்-இவ்வாறான தன்மைகளைச் சித்திரையில் பிறந்தவன் உடையவனாவான்.

சுவாதி

பெற்றிடும்தீரன் சோபனன் ஞானி பிரபுவை
அடைந்து இனித்திருப்பவன் பெருமைசேர் வித்தைப் பிரசங்கி
சாது பேசிய சுவாதியின் முதற்கால்,
உற்றிடும் திடமான வாய்தூரலன் புத்தியுள்ளவன்
காரியம் கெட்டி உண்மையாம் அந்தரங்கத்தில் காமி உறுபவன்
இரு காலென்றே,
குத்திடும் வில்லுத்தொழிலதனைப் பண்ணும் கொடூரனாம்
கலகநற்பிரியன் குடிலவனே பொல்லாத நடத்தையுமுள்ளான்
கூறிய பாதமொரு மூன்றாம்
சொற்றிறன் கோபி கலகமேபிரியன் துர்ச்சனன்
செலவான் காமி சோறனே நாலாம் பாதத்தில் உதித்தோன்
பொருந்து தோற்றிய வடிவமைத்தோளாய் 15

தொகுப்புரை:

சுவாதி நட்சத்திரம் முதற் பாதத்தில் பிறந்தவன், பலனைப் பெறுவதில் கெட்டிக்காரன், தோற்றக் கவர்ச்சியுடையவன், அறிவில் தெளிவானவன், செல்வந்தரை அடைந்து அவர் மதிக்குமாறு நடப்பவன், பெருமை தரும் கல்வி வித்தையினைப் பெற்றவன், பிரசங்கம் செய்பவன், அமைதியாக நடந்து கொள்பவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், பொருந்ததும் திடமானதுமான வாய்ச்சாலம் உடையவன், புத்திசாலி, செய்யும் காரியங்களில் கெட்டிக்காரன், உண்மையானவன், பிறரறியாத நிலையில் அந்தரங்கமான காம இச்சையுடையவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், குறி தவறாது குத்திடும் வில்வித்தை போன்ற செயலைச் செய்பவன், கொடூரனாகவும் இருப்பவன், கலகம் செய்து பார்ப்பதில் மிகவும் பிரியமுள்ளவன், பிறர் குடியைக் கெடுக்கவும் செய்பவன், பிறர் வெறுக்கும் பொல்லாத நடத்தையும் உள்ளவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், சொல் சாதுரியம் உடையவன், கோபமுள்ளவன், கலகம் உண்டாக்குவதில் பிரியமானவன், கொடுமைகள் செய்பவன், மிகுந்த செலவினைச் செய்பவன், காமம் உடையவன், கள்ளத்தனமாகப் பெண்களைச் சேருபவன்-என்ற இயல்புகளை பொருத்தமான வடிவில் அழகுடன் அமைந்த தோள்களை உடைய பெண்ணே! சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவனிடம் காணலாகும்.

விசாகம்

அமைத்திடும் வசனன் கல்விமான் சோதிட மறி
பவனாம் சவுக்கிய முள்ளவன் ஆகிய வித்துவான் வியாபாரி
அமர்ந்தினி விசாகம் முதற்கால்,
தமைப்புகழ் நீதி மந்திரி காமி சாற்றிய
நன்மை நோயாளி சந்தோஷி இனியன் இங்கித மறிபவன்
தன்மையாம் இருபதப்பலனே,
குமைத்திடு பலவான் பலஸ்திரீசோரன் குள்ளனாம்
காரியமறிவன் குணமுள்ளவன் வாய்ச்சாலன் வீழி தண
நோக்கு உண்டு என்னும் மூன்றினுங் காலாம்
நிமைத்திடும் புத்தி தர்மவான் ஞானி நேசமநா
சாரமும் உண்டே, நெடுவல்வாய்ச்சாலன் மகத்து மாப்புதுமை
நிறைத்தெழு நாலெனும் பதமே. 16

தொகுப்புரை:

மகத்துவம் பொருந்திய சிறந்த பதுமையின் அழகெல்லாம் நிறைந்தெழுந்த பெண்ணே!

விசாகநட்சத்திரம் முதற்பாதத்தில் பிறந்தவன், பொருத்தமாகப் பேசுபவன், கல்வியில் சிறந்தவன், சோதிடம் அறிந்தவன், சுக வாழ்க்கை உள்ளவன். தகுதி பெற்ற வித்துவான், வியாபாரம் செய்பவன், பொருமை நோக்குடையவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், தற்புகழ்ச்சி செய்து கொள்பவன், நீதியறிந்தவன், யோசித்துச் செய்வதில் மந்திரி போன்றவன், காமம் உடையவன், சொல்லப்படும் நன்மைகளை உடையவன், ஏதோ ஒரு நோயாளியானவன், மகிழ்ச்சியோடு இருப்பவன், பிறருக்கு இனிமையானவன், சந்தர்ப்பமறிந்து நடந்துகொள்பவன், அமைதியானவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பலவகை சேர்ந்த பலவான், பல பெண்களிடம் கள்ளத்தொடர்பு செய்பவன், குள்ளமானவன், செய்யும் காரியத்தை முன்னதாகவே அறிந்து செய்பவன், குணமுள்ளவன், வாய்ச்சாலத்தில் சிறந்தவன், சிவந்த விழிகளோடு கூடிய பார்வை உண்டு.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், உடனடியான புத்திசாலித்தனமுடையவன், தர்மம் செய்பவன், அறிவில் மேம்பட்டவன், அருவருப்பான நேசங்களை உடையவன், உயரமானவன், வாய்ப்பேச்சில் சாமார்த்தியன்-என்னும் இவ்வாறான இயல்புகளைப் பெற்றவனாவான்.

அனுஷம்

பதமுளநீதி இங்கிதமறிவன் பாரினில் சத்தியவாக்கி
பகரும்ஆசாரன் மந்திரசீலன்
பண்புளன் அனுஷம் முதற்கால்
இதமுள்ளபுல்லாங்குழலினில் பிரியன் சார்ந்தவர்
சாலகன் புத்தி எய்திய சிறப்பன்
அபிமானன் காமி இருபதப் பொருளென உரைக்கும்

விதமுள்ளபுத்திமான் குரலோசைசவுந்திரி
எழுத்துடன் வித்தை சாத்திய திடவான்
எடுப்புமேல் பிரியன் தகமைசேர் மூன்றொரு காலில்
அதமுள்ள விஷவாக்கு அன்பர் துரோகி அண்
ணர்கள் மிகவே உள்ளான் ஆகிய அஞ்சையுடன்
சிறங்குளான் அறிந்திடு நாற்பதம் துணிந்தே. 17

தொகுப்புரை:

அனுஷ நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன், நல்ல பதவியினை உடையவன், நீதிமான், நோக்க மறிந்து பழகுபவன், நாட்டில் உண்மை பேசுபவன், சொல்லக்கூடிய அளவில் ஒழுக்கம் உள்ளவன், மந்திரமேன்மையாளன், பண்புள்ளவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், புல்லாங் குழலிசையில் பிரியமுள்ளவன், தான் சார்ந்தவரிடத்தும் தன்னைச் சார்ந்தவரிடத்தும் அவர்களுக்கு ஏற்ப இருப்பவன், அனுபவ அறிவினைப் பெற்ற சிறப்புடையவன், பிறரிடம் மதிப்புவைப்பவன், காமம் உள்ளவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பலவகையில் அறிவுள்ளவன், மெல்லிய குரலை உடையவன், அழகுள்ளவன், எழுத்துடன் விளங்கும் கல்வி வித்தையில் அனுபவமுள்ளவன், திடமானவன், மேலோங்கி விருத்தியாகப் பேசுவதிலும் (பாடுவதிலும்) பிரியப்படுபவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், கெடுதியான விஷவாக்கு உடையவன். அன்பான நண்பர்களுக்குத்துரோகம் செய்பவன், அண்ணன்மார்களை அதிகமாகப் பெற்றவன், உண்டான அச்சத்திற்கான சிறங்குகளுடையவன்.

இவ்வாறான இயல்புகளை, அனுஷ நட்சத்திரம் நான்கு பாதத்திலும்பிறந்தவர்கட்குத் தனித்தனியே அறியலாகும்.

அஞ்சையுடன்-அச்சத்துடன்

கேட்டை

முனைந்து தானெழுத வல்லவன் கர்வி முழுப்பரியாசனாம்
காந்தி முதல் விளையாட்டு நடத்தை சந்தோஷ முள்ளவன்
கேட்டையின் முதற்கால்,
இனிந்து சங்கீத வாய்சாலன் தானாவெனச் சுகி போகி கலக
மனத்தான் இருந்திடான் நித்தன் அனேகமேயுள்ளான்
இரண்டெனும் கால் வரும் பலனே.
கனிந்து கண்ரோகி பசுக்களும் உள்ளான்
கலகன் எனமேடித்தி காரியப்பித்தன் பிறர்க்கு உதவாமற்
பண்ணும் கருதிய சாது மூன்றாங் கால்,
குனித்தமே கலகப்பிரியனாம் கோபி குரூரமே நித்தமும்
புகல்வோன் குலத்தினில் சவுரியன்
ஆமெனவுவந்தே கூறிடும் ஈரிரு தானே. 18

தொகுப்புரை:

கேட்டை நட்சத்திரம் முதற்பாகத்தில் பிறந்தவன், ஆர்வமுடன், தொடர்ந்து எழுதும் வல்லமை பெற்றவன், தானென்ற கர்வமுடையவன், எப்பொழுதும் பரிகாசம் பேசுபவன், சிறந்த விளையாட்டுடையவன், நடத்தையுள்ளவன், மகிழ்ச்சியாக இருப்பவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், இனிமையான சங்கீதத்தில் விற்பனன், சொல் சாலம் பேசுபவன், தானே அனுபவிக்கும் தன்மையுடையவன், போக சுகமுடையவன், கலகம் செய்யும் மனத்தை உடையவன், நிலையாக இருக்க விரும்பாதவன், நித்திய பலன் விரும்புவன், அனேக தன்மைகளைப் பெற்றவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், நலிந்த கண்நோயை உடையவன், பசுக்களைப் பெற்றுள்ளவன், கலகம் செய்பவன், அற்பமான புத்தியுடையவன், காரியத்தில் சித்தமுடையவன், பிறருக்கு உதவாமல் செய்பவன், விருப்பமுடன் சாதுவாக இருப்பவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், சிறிது வளைந்தவன், கலகம் செய்வதில் பிரியப்படுபவன், கோபமுள்ளவன், கொடுமைகளையே தினமும் சொல்பவன், குலத்தின்

மேன்மையைச் சொல்லிக் கொள்பவன், எதையும் பெற்ற அளவில் மகிழ்பவன் என்னும் இயல்புகளைக் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் பெற்றவனாவான்.

மூலம்

தாளழுங்கி சாப்பிடும் பாஸடதான விறுமாகதியே
புரிவன் சாற்றிய ரோகி உன்மத்த னென்றே
சாற்றுவர் மூலத்தின் முதற்கால்
ஆளெனுமுணர்தல் வித்துவான் சாது வயிற்றில் நோய்
உடையனாம் புத்திமான் மானி பக்ஷி
முள்ளவன் சத்தியவான் வரும் இருகால் பலனன்றே
தேளெனும் பில்லிக் காரனாம் காமி ஸ்திரிகளைப் பிரியமாகக்
கொள்வான் செப்பிய அழகன் சோம்பலான்
என்றே தெளிந்துரை மூன்றிடு காலில்
கேளெனும் பலவான் நிபுணன் சாது கோபமே அடக்குவன்
ஞானி கூறு நோய் கழுத்தில் சத்துரு செயமே
குலவும் நாற்பதமெனும் ஈதே. 19

தொகுப்புரை:

மூல நட்சத்திரம் முதற்பாகத்தில் பிறந்தவன், இருந்து விருப்புடன் சாப்பிடுவன், பாபம் தருவதான கொடிய விலங்கின் செயலைச் செய்பவன், சொல்லப்படும் சரீரரோகமுள்ளவன், பைத்தியக்காரனென்றே சொல்லப் படுபவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், இவனொருவன் என்று உணருமளவிலான பண்டிதன், அமைதியாக இருந்து காரியம் செய்பவன், வயிற்றில் நோய் உள்ளவன், புத்தியுடையவன், மானவுணர்வு உடையவன், யாவரிடத்திலும் பற்றாசையுள்ளவன், சத்தியம் சொல்பவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், தேளைப் போன்று கொடிய பில்லி சூனியம் செய்பவன், காமம் மிகுந்தவன், பெண்களைப் பிரியமாகக் கொள்பவன், அழகானவன், சோம்பலுடையவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், யாரையும் எதிரிட்டுக் கேட்கும் மனபலன் உடையவன், எதையும் சாதிக்கும் வல்லமை நிபுணன், சாதுவாகவும் இருப்பவன், கோபத்தை அடக்குபவன், தெளிந்த அறிவுள்ளவன், கழுத்தில் தெரியும் நோய் உள்ளவன், பகைவரை வெல்லும் தன்மையே பெற்றவன்-இவ்வாறான இயல்புகளை மூல நட்சத்திரத் திற்குரிய நான்கு பாதங்களில் முறையே பிறந்தவர்களிடம் காணலாகும்.

பூராடம்

ஈரெனும் வணக்கம் விவாதமே செய்வன்
இல்லையாம் புத்திரன் சூரன் விழையாம்
வயசு மத்திமம் என்றே எத்த பூராடம் முதற்கால்
சீரிலாயோகி சவுந்தரியோனே சினேகிதர் இல்லை
யாம் தனக்கு திடமுன் வேசிகள்
கமனனாம் பலங்கள் செறிந்திடும் இருபதமென்றே
மாரிலா சுகியன் பாக்கியன் மாதா வாலிபம் தன்
னிலே மரணமாம் பெருரோகி
குணமுளான் மன்னிய வருமெனும் மூன்றுடன் காலில்
பேரில்லாச் சதையில் நோவுகள் திருட்டும் பேச்சு
வாதமும் பலவான் பிதா இறும் கொஞ்ச
வயதினில் துரோகி பெருமை சேர் நாற்காலெனப் பாரே. 20

தொகுப்புரை:

பூராடம் நட்சத்திரம் முதற்பாதத்தில் பிறந்தவன், அரைகுறையான பணிவினைத் தெரிவிப்பவன், எதற்கும் வழக்கு செய்பவன், பிள்ளைப் பேறு இல்லாதவன், திறமையுடையவன், விரும்பும் வயதில்லாத மத்திம வ யதை உடையவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், யோகியைப் போன்றவன், அழகுள்ளவன், இவனுக்கு சினேகிதர் இல்லையாம், தனக்கான திடமான வேசிகளிடம் தொடர்புள்ளவன், விரும்பிய பலன்கள் சேரும் படியானவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், மாற்றமில்லாத சுகபோகமுடையவன், செல்வமுடையவன், அவனுடைய தாய் வாலிப வயதில் மரணமாவாள், வளரும் பெருநோயை உடையவன், குணமுள்ளவன்,

நான்காம் பாதத்தில் பிறந்தவன், குறித்து பேர் சொல்லமுடியாத சதையில் நோய் வலி உள்ளவன், திருட்டுத்தனம் உள்ளவன், பேச்சில் பிறரை அபவாதம் பேசுபவன், பலவான், சிறுவயதிலேயே தந்தை இறக்கப் பெறுபவன், துரோகம் செய்பவன்-இவ்வாறான இயல்புகளைப் பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெறுவார்கள்.

உத்திராடம்

பாரினில் நல்லபுத்தியும் தாதா படிப்புள்ளசாத்
திரமறிவன் பண்புடனாசான் தன்னிலும்
பிரியன் பகர்ந்த உத்திராட முதற்கால்,
பேர்பெறு வாக்குமுள்ளவன் திடவான் பிலுக்கன்
லோபியுமாகிப் பயனாம் கருமம்
ஆகசியம் முடிப்பான் பெருமைசேர் தாளிரண்டெனில்,
கோரினுங் கர்வி பெருமுழியாளன் குரூரனாம்
கலங்கின மனது கோபியே தூலச் சரீரமாம்
வடிவு கொண்டிடு மூன்றெனும் காலாம்,
மேரினும் நல்லதர்மமே முடிப்பன் விசேஷமாம்
காரியம் லோகவியாபாரன் முறைபக்ஷம்
உளன் வேண்டிய நாற்பதம் வந்தே. 21

தொகுப்புரை:

உத்திராட நட்சத்திரம் முதற்பாதத்தில் பிறந்தவன், நாட்டில் நல்லபுத்தியுள்ளவன். பிறருக்குக் கொடுக்கும் ஈகைக்குணத் தாதா(வள்ளல்), படிப்புள்ளவன், சாத்திரங்களை அறிந்தவன், பண்புள்ளவன், ஆசானிடத்தில் பிரியமுள்ளவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், பேர்பெறுகின்ற அளவில் வாக்குச் சாதுர்யம் உள்ளவன், திடகாத்திரமானவன், அற்பத்தனமும் கருமியுமாகி தனக்குப் பயனான செயலையும் ஏமாற்றுதலையும் செய்து முடிப்பவன்,

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், கொல்வதானாலும் கர்வத்தை விடாதவன், பெரிய கண் விழிகளை உடையவன், விகாரவடிவத்தையும் கொடிய மனத்தையும் உடையவன், நிலையில்லாமல்திரியும் மனத்தை உடையவன், கோபியாகவே இருப்பவன், பெருத்த சரீரத்தை உடயையவன், தனி வடிவமான உடலைப் பெற்றவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், செல்வத்தில் உயர்ந்தாலும் நல்ல தர்மங்களைச் செய்பவன், ஆச்சரியப்படும் படியான சிறந்த காரியங்களைச் செய்பவன், உலக அளவில் வியாபாரம் செய்பவன், முறைமையுடைய பந்துக்கள் உறவினர்கள் ஆகியோரிடம் பற்றுள்ளவன்-இவ்வாறான நற்பலன்களை உத்திராடம் நட்சத்திரம் நான்கு பாதங்களுக்கும் முறையாகக் காணுதலாகும்.

திருவோணம்

வந்திடும் புத்தி தூலமெய் போகவானெனும் புத்தி
ரன்தானில்லான்வண்மை உச்சாயி
கலகனாம் கிருவைந்திடுவோன் முதற்கால்,
உந்தியில் விரமக்கியான் ஞானியாம் காமி உளறுதல்
லோபியும் அனேகம் ஊழியக்காரர்
உண்டெனும் புத்தியுள்ளவன் இரு பத மென்றே
தந்திடுங் காமி ரோகவான் போகி தனமுளன்
மென்றெனச் சொல்லும் சந்திடுவேசி
போகவான் தான சீலனாம் மூன்றாம் கால்.
சிந்துர நுதல்வோசையர் விருப்புடையான் சீலவான்
தனவானாகிச் சிறப்புளன் பயிர்களிடும் குடியேரே
செப்பிய நாற்பத வகையே. 22

தொகுப்புரை:

திருவோண நட்சத்திரத்து முதல் பாதத்தில் பிறந்தவன், புத்திசாலியும், தூலசரீரமும், போகத்தில் விருப்புடையவனும், பிள்ளை இல்லாதவனும், எப்பொழுதும் உற்சாகத்துடன் இருப்பவனும், கலகக் காரனும், வீறாப்புப் பேசுவோனுமாவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், உந்தியில் (வயிற்றில்) மாறாத நோய் உள்ளவன். ஞானி, காமம் உள்ளவன், பேச்சு உளறுதல் உடையவன், சிக்கனக்காரன், பல ஊழியர்கள் அவனுக்கு இருப்பார்கள். புத்தியுள்ளவன் ஆவான்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், கொடுக்கும் காமமுள்ளவன், ரோகமுள்ளவன், சதாபோகத்திலிருப்பவன். பணமுள்ளவன், மென்மையாகப் பேசுபவன். பொருத்தமாக நடக்கும் வேசியர் போகத்தில் இருப்பவன், தானம் செய்து பெயர் பெறுபவன், ஆவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், பொட்டழகினை உடைய நெற்றிவேசியர்களிடம் விருப்பமுடையவன், சீலமுடையவன், செல்வனாக ஆகி சிறப்பினைப் பெறுபவன், பயிர்த்தொழில் செய்யும் குடியில் உயர்ந்தவனாகவும் இருப்பவன்.

இவ்வாறான இயல்புகளை திருவோணம் நான்கு பாதங்களிலும் பிறந்தவர்களுக்கு அறிந்து சொல்லுதலாகும்.

அவிட்டம்

வகையில்லாக்காமி பசிதனையுள்ளான் மனத்தினில்
கிலேசன் நிஷ்ரூரன் வாழ் பெரும் தூல சரீரனுமாம்
கறுவல் வருமெனும் அவிட்டம் முதற் கால்,
தயையிலா மனதில் பேதகம் புத்திமான் சத்தியமுளான்
தரித்திரனாம் சாத்திரமறிபவன் உச்சாகமும்
உள்ளோன் தர்மவான் இருபதமென்றே.
திசைதெரி குணவான் குட்டையன் மானிடமுள
நடத்தையும் பெற்றோன் சிவந்திடும் சரீரன்
*சாத்திரமறிவன் செப்பிய மூன்றெனும் கண்ணர்

தொகையில்லாக் கிறுவி குரூரனாம் உடம்பு தூலமே
தனங்களுமுள்ளான் தோசியே மனத்தில்
பேதகம் மயிர்கள் துலக்குவோம் நாற்பதந் தொட்டே. 23

தொகுப்புரை:

அவிட்ட நட்சத்திரத்து முதற் பாதத்தில் பிறந்தவன், வகையில்லாத காமம் உடையவன், பசிதனை நினைக்காதவனும், மனத்தில் சஞ்சலமுடையவனும், கொடியவனும், வளமாகப் பெருத்த ஸ்தூல சரீரனும், கறுத்த நிறமுடையவனும் ஆவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், இரக்கம் இல்லாத மனத்தை உடையவனும், பேதக வஞ்சகனும், புத்திமானும், சத்தியண் உள்ளவனும், தரித்திரனும், சாத்திரங்களை அறிந்தவனும், உட்சாகம் உள்ளவனும் தர்மவானும் ஆவான்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், இன்னமுறை இதுவாகும் என்பது தெரிந்த குணவானும், குட்டையானவனும், மானமுள்ளவனும், திடமான நடத்தையுள்ளவனும், சிவந்திடும் சரீரத்தை உடையவனும், சாத்திரம் அறிந்தவனும் ஆவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், அளவில்லாத வஞ்சனை உடையவனும், கொடுமையாளனும், வளமுடன், பெருத்த சரீரத்தை உடையவனும், தனங்கள் தோன்றிய வடிவுள்ளவனும், அற்பத்தனமுள்ளவனும், மனத்தில் மாறுபடும் சிந்தனைகளை உடையவனும், வேறுபாடு செய்பவனும் மயிர்களை அழகுபடுத்துவோனும் ஆவான்.

இவ்வாறான இயல்புகளை நான்கு பாதங்களுக்கும் பொருந்தியுள்ளதனை பொருத்தமாகக் கண்டு கொள்ள லாகும்.

சதயம்

தொட்டநற் குணவான் அழகுளன் உதாரன் சுகியனே
ஏவி பிறர் பசுக்கள் துவங்கிய பக்தி
யுள்ளவன் சதயம் ஒன்றாங்கால்

பொட் டெனக் கோபமுடையவன்கிலேசி பொருந்து
நற்பேதகம் புரிவான் பிழையனேஈனகுலத்தில்
கொண்டும் பின்புதான் கொடுத்தும் இரண்டாங்கால்,
பட்டெனும் மனத்தாழ்வாய்க் காரியம் முடிப்பன்
பசிவுளன் வயிற்று நோவுண்டு பண்புடன்
பித்தம் சேவுகர் விருத்திப் பயின்றுளான் மெத்தெனும் மூன்றே.
நட்டனை உணர்தல் தேகமுள்ளோன் நலப்பிரியன்
மேலான பெற்றோன் நாடிய கருமம்
முடித்திருக்கும் சுகியன் நாற்பதென்றோர் மறையோர். 24

தொகுப்புரை:

சதய நட்சத்திரத்து முதல் பாதத்தில் பிறந்தவன், எடுத்த காரியத்தை நல்ல முறையில் செய்யும் குணமுள்ளவன், அழகானவன், பிறருக்குக் கொடுக்கும் இரக்கம் உள்ளவன், சுக வாழ்க்கையை விரும்புபவன், பிறரை ஏவிக் காரியம் செய்பவன், பசுக்களிடத்தில் விளங்கிய பற்றுள்ளவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் உடனே கோபப்படுபவன், அச்சப்படுபவன், பொருத்தமான வேறுபாடு செய்பவன், பிழை செய்பவன், ஈன சாதியில் பெண்கொண்டும் பின்பு தான் கொடுத்தும் இருப்பவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், மனத்திற்குத் தாழ்வான காரியத்தை முடிப்பவன், பசியுள்ளவன், அவனுக்கு வயிற்றில் நோயுண்டு, பண்புள்ளவன், பித்தரோகி, அரசாங்கப் பணியில் சேர்ந்து விருத்திபெறும் கல்வியைப் படித்துள்ளவன், எதையும் மெத்தனமாக நினைப்பவன்.

நாலாம் பாதத்தில் பிறந்தவன், நட்பு செய்தவர்களை, உணர்பவன், நல்ல உடற்கட்டுள்ளவன் நலமுடன் வாழப் பிரியப்படுபவன், உயர்ந்த தன்மைகளைப் பெறுபவன், எடுத்த செயலை நிறைவாக முடிக்கும் செயலாளன், சுகவாழ்க்கையுடையவன்.

இவ்வாறான இயல்புகளைச் சதய நட்சத்திரத்து நான்கு பாதங்களுக்கும் பொருந்தப் பார்த்து அறிந்து பலன் காணலாகும்.

பூரட்டாதி

மறையவன் பந்தமுளான் பலவான் மனைவிகள்
பிரியமாய்ச் சேர்ப்பான், மனத்திலுத்தேசி சுகமுள்ளவன்
உயுத்தம் வகை பூரட்டாதியில் முதற்கால்
இறையவ சிரேஷ்டன் மந்திரமறிவன் விப்பிரன்
மனதுமேயொல்கி எவர்க்கும் வணக்கம் காரிய காரியம்
உரைப்போன் இருபதம் சந்தோஷி வானாம்
பொறையெனு நல்ல நடத்தை சேர் வித்துவான் பிறத்
தியாரளவினில் அன்பாய் போசனப் பிரியன்
பித்தரோகியுமாய் புத்தியும் மூன்றெனும் பதமாம்
சிறைவிடு குணவான் சத்தியவழகன் சினேகிதவான்
அவனென்றே செப்பிடும் சுகியன் மனோகரன் சீமான்
சாற்று நாற்பதன் உறுநாளே. 25

தொகுப்புரை:

பூரட்டாதி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன், வேதபிராமணன் சேர்க்கை உள்ளவன், பலமுள்ளவன், மனைவிகளிடத்துப் பிரியமுள்ளவனாகச் சேர்த்து இருப்பான். மனதில் காரிய திட்டம் செய்பவன், சுகவாழ்க்கை உள்ளவன், சண்டையிடும் வகைகளை அறிந்தவன்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், தெய்வ நம்பிக்கையில் முதன்மையானவன், மந்திரங்கள் அறிந்தவன், ஆசாரமுள்ளவன், எதையும் மனத்தில் அடக்கிக் கொள்பவன், யாவருக்கும் பணிவானவன், பல காரியங்களை எடுத்துச் சொல்லுபவன், மகிழ்ச்சியுடன் இருப்பவன்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பொறுமையுடன் நல்ல நடத்தையும் கூடிய வித்துவான், பிறரிடத்தில் அன்பாய் இருப்பவன், சாப்பாட்டில் மிக விருப்பம் உள்ளவன். பித்தரோகம் உள்ளவன், புத்தியுடையவன்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், பிறருக்கு ஏற்பட்ட கட்டுப்பாட்டினை, துன்பங்களை விடுவிக்கும் குணமுள்ளவன், சத்தியத்தை நல்லமுறையில் நிறைவேற்றுபவன், சினேகிதர்களை உடையவன், மற்றவர் அவனொருவன் என்று குறிப்பிடும் அளவில் சிறந்துள்ளவன், வாழ்க்கை உணவு ஆகியவற்றை விரும்புபவன், மனோகரன், செல்வச் சீமான்.

இவ்வாறான தன்மைகளை பூரட்டாதி நட்சத்திரத்து நான்கு பாதங்களுக்கும் வகையாகக் காணலாகும்.

உத்திரட்டாதி

நாடொறும் கோபி சஞ்சலன் தாதா நாடியவுடம்
பெலம் மயிரன் நலம்பெறு சிரேட்டன்
பிரதானன் என்றே நவின்ற உத்திரட்டாதி முதற்கால்
தானெனும் ரோசக்காரனாம் சாது தரித்திரன் நலப்படும்
குணவான் தக்க நல் நடத்தை சர்வக்கியானி
தருமிருகாலப்பலனென்னே
கோளெனும் புத்தி இல்லையாம் பத்தன் கோபி
சந்தோஷியுமானோன் குணமில்லான்
சேம்பட்டுளமயிரோன் கூரினில் முன்றெனும் காலில்
வாளெனும் சொக்கட்டான் மிக ஆடும், மனதினில்
பேதியே உதாரன் வாழும் பயிர் குடியான்
தாமதகுணவான் வரும் சீர்நான்கி லெனும் தேனே. 26

தொகுப்புரை:

உத்திரட்டாதி நட்சத்திரத்து முதல் பாதத்தில் பிறந்தவன், நாள்தோறும் ஏதோ ஒரு வழியில் கோபப்படுபவன், சஞ்சலமனமுடையவன், பிறருக்கு வழங்கும் தர்மவான். உடம்பில் எல்லாவிடத்தும் மயிருள்ளவன், நன்மை பெறுவதில் முதன்மையானவன், முக்கியமானவன்-ஆவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன், தானென்ற அகங்காரன், ரோசக்காரனாகவும் இருப்பான், சாதுவாகவும் இருப்பவன், தரித்திரமுள்ளவன், நன்மையைப் பெறுகின்ற குணத்தினை உடையவன், தகுதியான நல்ல நடத்தையுடையவன், எல்லாம் அறிந்த அனுபவசாலி - ஆவான்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பிறரிடம் கோள் சொல்லும் புத்தி இல்லாதவன், பக்தியுள்ளவன், கோபப்படுபவன், சிலசமயம் மகிழ்ச்சியாக இருப்பவன், செம்பட்டை மயிரை உடையவன் ஆவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், செல்வத்தை அழிப்பதில் வாளைப்போன்ற சூதாட்டத்தினை மிகவும் விரும்பி ஆடுபவன், மனத்தினில் திடமில்லாதவன், உள்ளத்தைக் கொடுப்பவன், வளரும் பயிர்களை உண்டாக்கும் குடியில் வந்தவன், எதையும் தாமதமாகச் செய்பவன் ஆவான்.

இவ்வாறான இயல்புகள் உத்திரட்டாதி நான்கு பாதத்திற்கும் வகைபெறப் பொருந்துவதாகும்.

இரேவதி

தேன்மொழி கலகப்பிரியனாம் நிபுணன் தெரிந்திடும்
வித்துவான் உலவி செப்பிய கிலேசன்
சந்தோஷமுள்ளான் திடம்பெறு ரேவதி முதற்கால்,
தானெனும் சோரன் கோடியே மனசு சவுக்கியன்
கோபியாம் காமி சஞ்சலன் மிருது
சரீரமும் பெறவே தகும் இருகாற் பலனென்றே,
கோளனும் புத்தியில்லாதவன் பாவி குடிலன்
தனமில்லானாம் கூறிய உதாரன் குணங்
களுமில்லா கோளன் ஏயும் காலொரு மூன்றே,
நாளெனும் தீரன் சத்தியவாக்கு நவின்றிடும் குணத்தினில்
கேடன் நாடிய சுகியன் சத்துரு
சங்காரி நலம்பெறும் சூரனாம் நாற்பதமே. 27

நட்சத்திரப் பலன் முற்றும்

தொகுப்புரை:

இரேவதி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன், தேனைப்போன்ற வாக்குடையவன், கலகப்பிரியன், அறிவில் காரியத்தில் நிபுணன், நாடறிந்திடும் வித்துவான், உதவி சொல்பவன், கவலை உள்ளவன், மகிழ்ச்சியுள்ளவன், மனவலிமை பெறுபவன் ஆவான்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் தானென்ற தன்மை உடையவன், வஞ்சகன், பல ஆசைகளை மனத்தில் கொண்டவன், நலமுள்ளவன், கோபக்காரனாகவும் இருப்பவன், காமமுள்ளவன், சஞ்சல புத்தி உடையவன், மென்மையான சரீரத்தை உடையவன், சிறப்பினை பெறுவதற்கான தகுதி உடையவன் ஆவான்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், கோள் சொல்பவன், புத்தியில்லாதவன், பாவம் செய்தவன், குடுத்தனக்காரன், செல்வமில்லாதவன், சொன்னபடி பிறருக்குக் கொடுக்கும் கொடையாளி, குணமில்லாதவன், ஒன்றை ஒன்றாகச் செய்பவன்- ஆவான்.

நான்காம் பாதத்தில் பிறந்தவன், காலத்தில் திறமையானவன், சத்தியவாக்குச் சொல்பவன், குணத்தினில் விசேடமில்லாதவன், விரும்பியபடி சுகத்தை அடைபவன், பகைவரை வெல்பவன், நன்மையினையே பெறும் சூரனாகவும் இருப்பவன் ஆவான்.

இரேவதி நான்கு பாதங்களுக்கும் உரிய இயல்புகளைக் கண்டு பலன் அறியலாகும்.

பிறந்த நட்சத்திரம் தரும் பலன்

(பிறந்த நட்சத்திரத்தினைக் கொண்டு சாதகனின் பொதுவான அடையாளங்கள், குணங்கள், செயல்கள், பாபபுண்ணியங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதற்கு- நட்சத்திரம் தரும் பலன்கள் அடிப்படையானதாகும்.)

சொல்லாதவன், முழங்கால் வலிமையுடனமைந்து பெருமிதமான நடையை உடையவன், என்னும் இத்தகைய இயல்புகளை உடையவனாவான்.

மிருகசீரிடம்

காலைமுழுக்குப் பிரியன்விசாலவிழிமயிரழகன்கல்வியுள்ளான்
கோலியகெட்டிசரீரன்மனசுவர்மம் வெளிவிடான்கூத்தும்பாட்டும்
சாலவும்சஞ்சாரனாம்தாம்பூல நேயன்நினைத்தது முடிப்பான்
வேலாரும்கரன்நெற்றி உயர்ந்திடும்ஞானிமிருக சீரிஷத்துனானே. 5

தொகுப்புரை:

மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்தவன், காலையில் நீராடுவதில் பிரியன், விசாலமான விழிகளை உடையவன், மயிரில் அழகுடையவன், கல்வி உடையவன், உண்டாக்கிக்கொண்ட திடமான உடம்பை உடையவன், மனதிலுள்ள பழிவாங்கும் தன்மையை வெளியிடாதவன், கூத்திலும் பாட்டிலும் மிகவும் பற்றுடையவனாகத் திரிபவன், தாம்பூலத்தில் பற்றுள்ளவன், நினைத்த காரியத்தினை முடிப்பவன், வேலாயுதம் போன்ற ஆயுதங்களை உடையகையன், உயர்ந்த நெற்றியை உடையவன், தீர்க்கமான அறிவுடையவன் இத்தகைய இயல்பினைப் பெற்றிருப்பவனாவான்.

திருவாதிரை

பொய்யது சொல்வான்கீர்த்திமான்தரித்திரன்நெடியன்பொருத்தின்
வெய்யசிலுகன்சுத்தவான்குஞ்சியழகன்இருவிழிசிகப்பன் நோயன்
துய்யபலவான்கோபி உறவு உடையன்உயர்ந்திருக்கும்துண்டமுள்ளான்
ஐய்யமற உலகுதொழ அருமணியாய்விளங்கியவன்ஆதிரையானே. 6

தொகுப்புரை:

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன் பொய் சொல்லுவான், கீர்த்தியுள்ளவன், தரித்திரன் உயர்ந்த சரீரம் உடையவன் (உயரமானவன்) முழங்கால் முழங்கை ஆகிய பொருத்து இடங்களில் நோயுள்ளவன், கொடிய கீலகஞ்செய்பவன், சரீரசுத்தம் செய்துகொள்பவன்,

தலைமயிர் அழகன், இரண்டு கண்விழிகளும் சிவந்திருப்பவன், நல்ல பலமுள்ளவன், கோபமுடையவன், உறவுமிக உடையவன், உயர்ந்துள்ள மூக்கினை உடையவன், யாவருக்கும் நல்லவனாக இருக்கும் சிறப்பினைப் பெற்றவன், என்னும் இவ்வாறான இயல்புகளைப் பெற்றவனாவான்.துண்டம்=மூக்கு, நாசி.

புனர்பூசம்

திருந்திய சொற்சாதுரியனாம்அகங்காரி விசாலபுயன், சிக்கென்ற கள்வன்
வருந்தி நெடுவழி நடப்பன், கடின மொழியன் புண்டரீக மலர்போல்கையன்
பரிந்த குணபுத்திமான் பொய்சொல்லான் பித்த முள்ளவன் பலர்க்கு நேயன்
பொருந்திய ஐந்தாம் வயதில் கால்முடம் பண்ணும் புனர் பூசத்தினானே. 7

தொகுப்புரை:

புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவன், திருத்தமான பேச்சுவன்மை உடையவன், தான் என்ற அகம் படைத்தவன், விசாலமானபுயங்களை உடையவன், சட்டென்று கள்ளத்தவன், வருத்தமாயினும் தொலை தூரம் நடப்பவன், கடினமான வார்த்தைகளை உடையவன், தாமரை போன்ற கைகளை உடையவன், இரக்க குணமுள்ள புத்திமான், பொய்சொல்லாதவன், பித்தமுள்ள சரீரன், பலருக்கு நட்பானவன், ஐந்தாம் வயதில் கால் முடமாவன், என்னும் பலனை உடையவன் இவ்வகையான இயல்புகளைப் பெற்றவனாக (பெற்றவளாக) இருப்பார்கள்.

பூசம்

வாசிஉடையவன் வழக்குச் சொல்வன் கனவான் குத்திர வசனமுள்ளவன்
நேசமுடன் மாதாவை தந்தையை ரட்சித்திடுவன் நெடிய ரூபன்
தேசோமுகன் கனதனவான் கண்மூக்கு அழகன் பசிபொறான் திகழும்சாந்தன்
பூசிமுடிக்கப்பிரியன் குணவான் பாக்கியமுள்ள பூசத்தினானே. 8

தொகுப்புரை:

பூச நட்சத்திரத்தில் பிறந்தவன், குறைபாடுகளை உடையவன், அதனால் வழக்குச் சொல்பவன், பெருமையுடையவன், குதர்க்கமான சொல்லை உடையவன்,

மிகவும் அன்புடன் தாய் தந்தையரைப் பாதுகாப்பவன், உயரமான தோற்றம் உள்ளவன். அழகிய அங்க அழகன், கவர்ச்சியான முகபாவமுடையவன், பெரிய செல்வந்தன், கண்கள், மூக்கு ஆகியவைகளை அழகுடன் பெற்றவன். பசியை பொறுக்காதவன், சாந்தமாக உள்ளவன், வாசனை திரவிய வஸ்துக்களைத் தரிப்பதில் பிரியமுடையவன், குணவான், எல்லா வகையான வளங்களும் உடையவன், என்னும் இவ்வாறான இயல்புகளை உடையவனாவான்.

ஆயில்யம்

செஞ்சொற் சாதுரியன் சத்துரு நேயன் மனதுக்கன் திரிவான் காட்டில்
பஞ்சையைப்போல் நொறுவைத்தின்னும் பன்னனைபிதாவுக் கினியன் புக்தி
யுள்ளான்
வஞ்சமில்லான் எவர்க்கும் ஏளிதம் உரைத்திடும் சுகவான் வலிமையோன்
குஞ்சிமன் விழி புருவம் உசந்து ஒதுங்கியிருக்கும் ஆயிலியத்தோனே. 9

தொகுப்புரை:

ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவன், சரியான சொல் சாமார்த்தியன், பகையை விரும்புவன், மனத்தில் துக்க முடையவன், காட்டில் திரிபவன், மிகவும் தாழ்ந்த வனைப்போல் திண்பண்டங்களை எப்போதும் தின்னும் பராரி, தந்தைக்குப் பிரியமானவன், புத்தியுள்ளவன், வஞ்சமில்லாமல் எவரையும் ஏளனம் செய்யும் சுபாவ முடையவன், வலிமை உள்ளவன், தலைமயிர் வாரி அழகு செய்துகொள்பவன், கண்விழிகள் அகன்றும் புருவங்கள் உயர்ந்தும் ஒதுக்கமாகவும் இருக்கும் தோற்றமுடையவன், என்னும்இவ்வியல்புகளை உடையவனாவான்.

மகம்

இலவு முருக்கலர் விழி தொண்டைத் தூதளைப் செவ்விதழாம்மாதே
பலதிசையில் சஞ்சாரப்பிரியமுளான் மிகுந்த பல கலைகள் கற்கும்
புலவன் முழுக்குப் பிரியன் சுகந்த பரிமளப்பிரியன் பொன்னுமுளான்
வலப்புறத்தில் மறுவன் நீதிமான் அற்ப நித்திரையாள் மகத்தினானே. 10

தொகுப்புரை:

மக நட்சத்திரத்தில் பிறந்தவன், இலவமலர் போலும் விழியையும், செம்முருங்கை மலர்போலும் தொண்டையும், தூதுளைகனிபோலும் சிவந்த இதழையும் பெற்ற பெண்ணே!

இவன் பல திசைகளிலும் சஞ்சாரம் செய்வதில் பிரியமுள்ளவன். மிகுதியாகப் பல கலைகளையும் கற்பவன், புலமை உடையவன், புண்ணிய தீர்த்தங்களில் முழுகப் பிரியமுள்ளவன், மணமுள்ள சந்தனம் போன்ற பரிமளப் பொருள்களை உபயோகிக்கும் பிரியமுள்ளவன். பொன்னாபரணங்களாகிய செல்வமுடையவன். உடம்பில் வலப்புறத்தில் மறு உள்ளவன். நீதியுள்ளவன். அற்பமான தூக்கமுடையவன் - என்னும் இவ்வியல்புகளை உடையவனாவான்.

பூரம்

இதமான வசனமுள்ள கல்விமான் சிவந்திருக்கும் கண்ணாளன்
நிதியதனை வருத்தமாய்த் தேடுவன் வரும் கருமம் நினைவில் காண்பவன்
விதமான வணிகன் தொழில் கடினன் மொழிப்புலவன் நனி விரும்புநெஞ்சன்
பொதுமாதர் தனை வெல்வன் நகை தந்தம் அழகன் பூரத்தினானே. / /

தொகுப்புரை:

பூர நட்சத்திரத்தில் பிறந்தவன், பிறர் விரும்புதற்குரிய தன்மையான சொல் சாதுர்யம் உள்ளவன், கல்விமான், சிவந்த கண்களை உடையவன், செல்வத்தை மிகவும் வருந்தி உழைத்துத் தேடிச் சேர்ப்பவன், வருகின்ற காரியங்களை முன்னரே சிந்தித்து அறிந்து நினைவில் காண்பவன். பலவகைப் பொருள்களை விற்கும் வியாபாரி. எந்தத் தொழிலையும் கடினமாகச் செய்து பலன் காண்பவன், மொழியில் புலவன், பல சிந்தனைகளை உடைய மனத்தினன், வேசிகளை வெல்லும் திறத்தினன், சிரிப்பிலும் பற்களிலும் அழகுள்ளவன் என்னும் இவ்வாறான இயல்புகளை உடையவன்.

உத்திரம்

கையாத மொழி முன்கை வலியன் வித்தையுள் அழகாம் கண் வாயுளான்
மையார் கண்ணார் நேயன் முன்கோபி மறு முகம் மார்பதனில் உள்ளோன்
பொய்யாத சூரன் நீர் ஆடுவான் சிறுபசியன் பொருந்தும் பத்தி
ஒய்யார நடைப்பிரியன் மொழி தருமன் அருக்கியன் உத்திரத்தினானே. 12

தொகுப்புரை:

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவன், பிறர் கேட்டு வெறுப்படையாத சொற்களைப் பேசுபவன், முன் கை வலிமை பெற்றவன், வித்தை கற்றவன் அழகான கண்களையும் வாயையும் உடையவன். அழகிய பெண்ணிடம் நேசம் உடையவன், முன்கோபமுள்ளவன், முகம் மார்பு ஆகிய அங்கங்களில் மறு உடையவன், பொய்யில்லாத சூரன், நீராடுவதில் விருப்பன், அற்ப பசி உள்ளவன், பொருந்திய பக்தி செய்பவன், ஒய்யாரமாக நடப்பதில் விருப்பமுடையவன், நீதியானவற்றைப் பேசுபவன், இயன்றதைக் கொடுப்பவன் என்னும் இயல்புகளை உடையவனாவான்.

அஸ்தம்

வன்புறு தாமதன் கல்விக்குரியன் சிறுபசியன் சனங்கள் வணங்க
இன்பமுறும் குறிப்புடையன் சூரன் கடினன் இனிய புத்தி வாழ்வோன்
பின்வயதில் தனவான் சிலுகன் மார்பகலன் உயரப் பின்கால் நல்லோன்
அன்புடன் நீராடல் குருபத்தியுளன் தரும் மனத்தன் அஸ்தத்தினானே,

தொகுப்புரை:

அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவன், மிகுந்த தாமசமான செயலுடையவன், கல்வி பெறுபவன், அற்ப பசியுடையவன், மக்கள் வணங்க வாழ்பவன், இன்பக் குறிப்பு உடையவன், சமர்த்தன், நெஞ்சழுத்தம் படைத்தவன், நல்ல புத்தியுள்ளவன், பின் வயதில் செல்வம் பெறுபவன், குழப்பம் செய்பவன், அகலமான மார்பை உடையவன், பின்

கால் உயர்ந்துள்ளவன், நல்லவன், விருப்பத்துடன் நீராடுபவன், குருபக்தி உள்ளவன், கொடுக்கும் மனம் படைத்தவன் என்னும் இயல்பான தன்மைகளை உடையவனாவான்.

சித்திரை

பலமுடையசரீரவான்மார்புஅகலன்நடைகடியன்பெரிதுஞ் சொல்வன்
குலவிய நற்குணன் நடைநற்பிரியன் தாமசபுத்தி குருசீல கண்டன்
நிலைமைபொருந்திட வசனன் முமறைவில் மறுவளன்நித்திரையும்அற்பமாம்
செலவு மிச்சன் சவுரியவான் துக்கமுள்ளவன் கோபி சித்திரையினானே. /4

தொகுப்புரை:

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன், பலம் நிறைந்த உடலினை உடையவன், அகன்ற மார்பன், கடினமான நடையுடையவன், நல்ல நடத்தையில் மிகவும் பிரியமுள்ளவன், மிகுந்தசொற்சாதுரியன், பொருந்திய குணமுள்ளவன், சிந்தித்த பின்னர் செயல்படும் புத்தி யுடையவன். தலைமையான நன்னடத்தையில் கண்டிப்பானவன், நிலைமைக்கு ஏற்பப் பேசுபவன், முகத்தில் மறைவான இடத்தில் மறு உள்ளவன், செலவினங்களை நீக்கி மிச்சப்படுத்துபவன், வருத்தம் உடையவன், அற்ப தூக்கமுடையவன், கோபமுள்ளவன் ஆகிய இயல்புகளை உடையவனாவான்.

சுவாதி (சோதி)

எல்லவர்க்கும்வசிகன் போசனப்பிரியன்மறுதொடையிலிருக்க வாழ்வோன்
நல்லது சேர் தேவதாபத்தியுந் தன் இச்சையுளான் ராச சேர்வை
கல்வீமான்அன்னை பிதாவுக் கினியன் விசுவாசி காயங்காகெட்டி
சொல்லு நெறியுளன் கரத்து ஆயுதம் பிடிப்பன் தியாகவான் சோதியினானே

தொகுப்புரை:

சோதி நட்சத்திரத்தில் பிறந்தவர், எத்தகையாரையும் வசியப்படுத்தும் வசீகரம் உடையவர். சுவையான உணவுகளில் அதிக விருப்பம் உள்ளவர். அவர்களது தொடையில் மறு இருக்கும், நன்மையைப் பெறும் தேவதா

பக்தியும் சுதந்திர வாழ்வில் இச்சையும் உள்ளவர். அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர், கல்வியுள்ளவர், தாய் தந்தைக்கு அன்பானவர், யாரிடத்தும் பற்றுதலோடு பழகுபவர். வலுவான தேகம் உள்ளவர். நெறியாளர், கையில் ஆயுதம் பிடிப்பவர், தியாகம் செய்பவர் என்னும் இவ்வியல்புகளை உடையவர்களாவர்.

விசாகம்

சொல்லு முகத்தில் மறு, நேயன், நீதி, துயிலில் பிரியன் சுற்றம்
அரசர்க்கு இனியன் சொல்விடாமனத்தன்
நல்லவசனன் பொறையுடையன் அனநடையார் நேயன் நாடியதோர்
கருமம் வேள்வி தலைமார்பில் அரையில் மறுவுளனாம்
செல்வமுளன் சதுர்வேதன் குணவான் கோபி சேர்வையுளன்
விசாரமிலான் தெய்வ பக்தியுளான்
வில் வாளும் ஏந்துகரன் கயமும் மாவும் மிக நடத்தும்
தியாகியாம் விசாகத்தினானே. 16

தொகுப்புரை:

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன், முகத்தில் மறுவுடையான், நட்பாளன், நீதிமான், நித்திரைப் பிரியன், சுற்றத்தார்க்கும் அரசுக்கும் இனியன், சொல்லைக் காப்பாற்றும் மனமுடையவன், நல்ல வசனமுடையவன், பொறுமையுடையவன், பெண்கள் நேசம் உடையவன், யாகாதிகள் செய்பவன், ஒரு கருமத்தினை திட்டமுடன் நாடுபவன், தலை மார்பு இடுப்பு ஆகிய இடங்களில் மறுவுடையன், செல்வமுள்ளவன், நான்கு வேதங்களை அறிபவன், குணவான், கோபமுள்ளவன், தெய்வசேவையுள்ளவன், விசனமில்லாதவன், தெய்வ பக்தியுள்ளவன், சிறந்த ஆயுதங்களைக் கையில் ஏற்கும் திறனாளன், யானை, குதிரை ஆகியவற்றில் இருந்து நடத்தும் ஆற்றல் உள்ளவன், தியாக சிந்தனையானவன் என்னும் இவ்வாறான இயல்புகளை உடையவனாவான்.

அனுடம் (அனுஷம்)

ஈனமில்லா நற்குணவான் தாம்பூலப் பிரியன் எவரெவரும் புகழ் சதுரன்
இனிய புத்தியுளனாம்
நானில மெல்லாம் துதிக்கும் நீதிமான், தூயன், நயனங்கள்
சிவந்திருக்கும் ராச சன்மானி
மானினையார்க்கு இனியன் மயிர் அழகன் மார்பகலன், மாதா
தந்தைதனை மகிழ்ந்து இரட்சித்திடுவன்
ஆனைபோல் வேகமுள்ளவன் நல்ல சொல்லன் ஐசுவரிய வான்
லோபி அனுசத்தினானே. 17

தொகுப்புரை:

அனுச நட்சத்திரத்தில் பிறந்தவன், நல்ல குணவான், தாம்பூலப்பிரியன், யாவராலும் புகழப்படும் திறமையாளன், மேலான புத்தியுடையவன், மக்களெல்லாம் வணங்கும் நீதிமான், களங்கமில்லாதவன், கண்கள் சிவந்திருப்பவன், அரசாங்க விருதுகள் பெறுபவன், பெண்களுக்கு இனிமையானவன், மயிர் அழகன், அகலமான மார்பினை உடையவன், தாய் தந்தையரை மகிழ்வோடு காப்பாற்றுபவன், யானையைப் போல் பெருமித வேக நடை உள்ளவன். நல்லன பேசுபவன், பெருஞ்செல்வ முடையவன், சிக்கனவான் என்னும் இவ்வாறான இயல்புகளை உடையவனாவான்.

கேட்டை

தாட்டிகன் துஷ்டரிணக்கன் வெகுபொய்யன் உபாயன் தகு
பக்தியுள்ள இரவான் குரூர கோபி
நாட்டிய உள்முச்சுளன் நீராடிடவும் பிரியன் நற்புத்தியுளன்
நெடியன் தமையனை ரட்சிப்பான்
வாட்டமிலா நொறுவைத் தின்பன் மன்னவர்க்கு இனியன்
மயிர்க்கடைவும் விழிசிவப்பும் வலப்பக்க மறுவுமுளன்
கேட்டமொழி திறங்கொள்ளான் பொய்யை மெய்யாக்கிடுவன்
கேள்வியுளன் கபடச் சொல் கேட்டையானே. 18

தொகுப்புரை:

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் பருத்த சரீரமுடையவன், கொடியவரோடு சேர்ந்திருப்பவன், மிகுதியாகப் பொய் பேசுபவன், தந்திரமுள்ளவன், அவனுக்குத் தகுந்த பக்தியுடையவன், பிறரிடம் எதையும் கேட்டுப் பெறாதவன், கொடூரமானவன், கோபமுள்ளவன், உள்மூச்சு விடுபவன், நீராடுவதில் ஆசையுள்ளவன், நல்ல புத்தியும் பெற்றிருப்பவன், உயரமானவன், தனக்கு மூத்தோனை இரட்சிப்பவன், சலிப்பில்லாமல் சிறு தின்பண்டங்களைத் தின்பவன். அரசுக்கு ஆதரவாளன். அடர்ந்து மயிரும் விழிச்சிவப்பும் உள்ளவன். வலது பக்கத்தில் மறு உள்ளவன். கேட்டசொல்லை நம்பாதவன், பொய்யை மெய்போலக் காட்டுபவன். கேள்வியில் விருப்பமுள்ளவன், கபடமான சொல்லை உடையவன்-ஆவான்.

மூலம்

மண்றியநித்திரைப் பிரியன்பிறந்தாருளுன்னிதனாம்வழுவாமல்
செய்கருமம்செய்பக்திமானாம்
திண்டிறல்ஆயுதசீலன், தந்தை தாய்க்கு இனியன்சிந்தை மகிழ்ந்து
இனிதுரையன்சிறந்த தவசீலன்
கண்டது சிறுதின்றித் தின்னப் பிரியவான்லோபி கண் சிவந்து
சிவந்திருப்பன்கல்விமானாம்
முண்டுகளைச்செய்வன்உறமுறையைச்சேறான்முன்கோபி
கொடியன்மூலத்தினானே. 19

தொகுப்புரை:

மூல நட்சத்திரத்தில் பிறந்தவன், தொடர்ந்து தூக்கமுடையவன், தன்னுடன் பிறந்தாருக்குள் நல்லவன், செய்கின்ற செயலை தொடர்ந்து குறைபடாமல் செய்பவன், பக்தியுடையவன், வலிமையான ஆயுதங்களைக் கொண்டு சிறப்படையவன். தாய் தந்தைக்கு நல்லவன், மனம் மகிழ்ந்து இனிமையாகப் பேசுபவன், சிறந்த தவநெறியாளன். பல வகையில் கண்ட சிற்றுண்டிகளை சிறிதும் விடாமல்

தின்பதில் பிரியப்படுபவன். கருமி, கண் சிறுத்தும் சிவந்திருப்போன், கல்விமான், தண்டுமுண்டான செயல்களைச் செய்பவன், உறவினரோடு சேராதவன், முன் கோபமுள்ளவன், கொடுமையாளன் ஆவான்.

பூராடம்

மெய்நெடியன்சிறு நெற்றியான்பரிமளம்மேல்பிரியன்விசாரமுளன்
அரசநண்பன்மேற்கருமம்பார்ப்பன்
செய்யநொறுவைப்பிரியன்மாதாவுக்கினியன்சேர்ந்தவரை
ரட்சிப்பான்சிவந்தசிறுவிழியன்
கைய்கால்விசாலமுளன்சவுந்தரியன்உபாயன்கனவானாம்
வீரியவான்கரங்கள்புயம்வலியன்
பொய்சொல்லான்சஞ்சாரப்பிரியன்மின்னார்க்கினியன்
பொழிதானவானாம்பூராடத்தினனே. 20

தொகுப்புரை:

பூராட நட்சத்திரத்தில் பிறந்தவன், உயரமானவன், சிறிய நெற்றியை உடையவன், வாசனை திரவியங்கள் மேல் பிரியமுள்ளவன், விசனமுள்ளவன், அரசுக்கு நண்பன், உயர்ந்த உத்தியோகம் செய்பவன், நல்ல தின்பண்டங்களில் பிரியமுள்ளவன், தாய்க்கு நல்லவன், தன்னிடம் சேர்ந்தவரை ரட்சிப்பான். சிறுத்துச் சிவந்திருக்கும் கண்களை உடையவன், பருத்து நீண்ட கை, கால்களை உடையவன், அழகானவன், தந்திரவான், செல்வமுடையவன், துணிவானவன், கைகள் புயங்கள் வலிமையுடன் உள்ளவன். பொய் சொல்லாதவன், தேச யாத்திரையில் பிரியமுள்ளவன், பெண்களுக்கு இனியன், வழங்கும் தருமவான், என்னும் இவ்வியல்புகளை உடையவனாகும்.

உத்திராடம்

மங்கைமார்க்கினியன்முகத்தினில்மறுவான்சரீரமும்கெட்டநற்பலவான்
புத்திமான்உயர்ந்தநல்லவசனன்போசனப்பிரியன்தீர்க்கஞ்ஞான்
பத்திமான்உறவுக்கினியன்வர்ம்மிபொருள்வேண்டாத்தூரியன்
உத்தமர்க்கினியன்நிறைந்தசொல்தியாகிஉன்னும்உத்திராடத்தனே. 21

தொகுப்புரை:

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவன், பெண்களுக்கு இனியவன், முகத்தில் மறுவுடையவன், திண்மையான சரீரமுடையவன், நல்ல பலசாலி, புத்தியுள்ளவன், உயர்ந்த மூக்கை உடையவன், நல்ல வார்த்தைகளைப் பேசுபவன், உணவில் பிரியமுள்ளவன், நீருக்கு அஞ்சாதவன், பக்தியுள்ளவன், உறவினர்க்கு இனியவன், வர்மி, பிறர்பொருளை விரும்பாத தூய்மையன், நல்லவர்க்கு நல்லவன், நிறைந்த உறுதியான சொல்லும் தியாகச்செயலும் உடையவன் நினைவில் கொள்ளத்தக்கவன் என்னும் நற்பண்புகளை உடையவனாவான்.

திருவோணம்

தக்கதோர் கல்விமான் ஒரு போக்கன் சடுதில் கோபம் மாறிடுவன்
பக்கமும் முன் பின்னும் பார்த்துமே நடப்பான் பதிவுள்ளங்காலும்சந்திருக்கும்
மைக்கண்ணார்க்கு இனியன் பரிமளப்பிரியன் மயிர்முடி அழகன் உற்சாயி
சிக்கனவானாம் ஏற்பவர்க்கினியன் திகழ் திருவோணத்தினானே. 22

தொகுப்புரை:

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவன், விளங்கும் உயர்ந்த கல்வி உடையவன், தனக்கென ஒரு வகைப்போக்கு உடையவன், விரைவில் கோபம் மாறுபவன், சூழ்நிலையை அறிந்து நடப்பவன், பதிவான உள்ளங்காலில் சந்துஉள்ளவன், அழகிய பெண்களுக்கு இனிமை தருபவன், நல்ல வாசனைப் பொருள்களில் பிரியமுள்ளவன், மயிரழகன், எப்பொழுதும் உற்சாகனாக இருப்பவன், சிக்கனமுடையவன், தன்னிடம் ஏற்பவர்க்கு கொடுப்பவன், என்னும் மேலான தன்மைகளை உடையவனாவான்.

அவிட்டம்

நெறிபெருங்கருமன்தன்சொல்மேலானோன்நின்றவர்க்கஞ்சிடான்பாத்தியாதி
உறுபுறவடி நாசி உசந்திருக்கும் ஒருவர் சொற்பொறான் நல்வுண்பிரியன்
ஸ்ரீகளுக்கு நண்பன் தந்தை தாய்க்கு இனியன் திரவியம் தேடுபவன்
அறிவுடனடங்கிநடப்பன்பிறர்பொருள்வவ்வான்அவிட்டநட்சத்திரத்தானே.

தொகுப்புரை:

அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவன், நெறியான பெரிய தொழில் செய்பவன், தன் சொல் யாவராலும் மதிக்கும் அளவில் மேலானவன், எதிர்த்து நின்றவர்க்கு அஞ்சிடாதவன், பொருள் பாத்தியமுடையவன், புறங்கால் மூக்கு இவைகள் உயர்ந்திருப்பன், ஒருவனது கடுஞ்சொல்லைப் பொறுக்கமாட்டாதவன், நல்ல மாமிச உணவில் பிரியமுள்ளவன், பெண்களுக்குப் பிரியமானவன், யாவருக்கும் நண்பன், தந்தை தாய்க்கு இனியன், செல்வத்தைச் சேர்ப்பவன், அறிவுடன் அடங்கி நடப்பவன், பிறர்பொருளுக்கு ஆசைப்படாதவன் என்னும் தன்மைகளை உடையவனாவான்.

சதயம்

பத்தி இல்லாமல் வெகுளுதல் சொல் பொறாதான் பரைதிலா ரோகவான் இனியன்
புத்திமான் கை கால் வலியன் வாய்முகன் பொய் பொறான் மன்னவர்க் கினியன்
வித்துவான் சூரன் மாதர்க்கு நண்பன் நீராட மிகவும் பிரியன்
சத்துரு செயன் பொன்னுளன் வழக்குரைப்பன் சதய நட்சத்திரத்தானே. 24

தொகுப்புரை:

சதய நட்சத்திரத்தில் பிறந்தவன், பற்றுதல் இல்லாமல் கோபித்துப் பேசும் சொல் பொறுக்காதவன், சொல்லவியலாத ரோகமுடையவன், இனிமையானவன், புத்தியுள்ளவன், கை, கால் வலிமையானவன், அழகிய வாயையுடைய முகத்தன், பொய் சொன்னால் பொறுக்காதவன், அரசுக்கு இனிமையானவன், புலமையுள்ளவன், சூரன், பெண்களுக்கு நட்பானவன், நீராடுவதில் மிகவும் பிரியன், பகைவரை வெல்பவன், பொன்னும் பொருளும் உடையவன், வழக்கு உரைப்பவன் இவ்வாறான இயல்புகளை உடைய வனாவான்.

பூரட்டாதி

பூரட்டாதி பொறான் பிறர் போல் சொல்
வேறிட்டார் வழக்கன் பால் நெய்க்கு அன்பினான்
வாரிட்டார் முலைமாதருக்கு விலாசன்
நேரிட்டார் கல்வி மான் நாசி உன்னதன். 25

தொகுப்புரை:

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன், பிறர் சொல் பொறாதவன், பிறர் போல் சொல் மாறாட்டம் செய்பவரிடம் வழக்கிடுபவன், பால் நெய் ஆகியவற்றில் மிகவும் பிரியப்படுபவன், அழகிய பெண்களுக்கு அறிமுகமானவன், எதிர்த்தாரை வெல்லும் கல்வியுடைவன், அழகிய மூக்கினை உடையவன் ஆகிய இயல்பினை உடையவனாவான்.

பொறான்-பிறர் தன்னைக் குறைவாகப் பேசுவதைப் பொறுக்கமாட்டான், வேறிட்டார்-வேறுபாடான பொய் வழக்குப் பேசுபவர், நேரிட்டார்-தன்னிடம் சொல் வாதம் செய்பவர், நாசி-மூக்கு, உன்னதன்-எடுப்பாக உள்ளவன், நுகரும் நுட்பமுடையவன்.

உத்திரட்டாதி

நித்தம் நீராடி தமருளன் சொன்ன நீதியோன் பிறர்க்கு உபகாரி
வித்தை தாம்பூலப் பிரியன் சஞ்சாரன் விரிவுளகாது மார்பு அகலன்
புத்திமான் மாதர்க்கினியன் சாதுர்யன், பொய்யன் மற்றவர் தொழில்
செய்யான்
உத்தமர்க்கு இனியன் வழக்கினன் பலவான் உத்திரட்டாதினானே. 26

தொகுப்புரை:

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன், நாள்தோறும் நீராடுபவன், பெருஞ்சுற்றத்தினரை உடையவன், சொன்னபடி நீதியுடன் நடப்பவன், பிறருக்கு உபகாரம் செய்பவன், பல வித்தைகளைக் கற்றவன், தாம்பூலப்பிரியன், வெளியூர்களுக்குச் சென்று வரும் சஞ்சாரம் உடையவன்,

விரிந்தகன்ற காதுகள், மார்பு ஆகியவற்றை உடையவன். சிறந்த அறிவுடையவன், பெண்களுக்கு இனியவன், சாமர்த்தியமாக நடந்துகொள்பவன், பொய் பேசுபவன், பிறரிடத்தில் தொழில் செய்யாதவன், நல்லவர்கட்கு எல்லா நன்மையும் செய்பவன், வழக்கிடும் இயல்பு உள்ளவன், பலம் பொருந்தியவன் என்னும் இத்தகைய தன்மைகளை உடையவனாவான்.

ரேவதி

மெல்லியர் இடத்தில் சாலவேபிரியன் மிகு செல்வம்பாதி நாளைக்குமேல்
விளங்கும்
நல்லவன்பிறர்சொல் கேட்பன், நற்குணவான்நயன சிங்காரன் சீமானாம்
சொல்லுரையில்சாதுரியன்அந்தணரைத் தொழும்பத்தியுள்ளான்
புத்தியினான்
இல்லை என்றுரையான் பழிக்குஇடங்கொடாத இயல்பினான்
ரேவதியினானே. 27

தொகுப்புரை:

இரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன், பெண்களிடத்தில் மிகவும் பிரியமுள்ளவன், ஆயுள் காலத்தில் பாதி காலத்துக்கு மேல் மிகுதியான செல்வம் விளங்குமாறு வாழ்பவன், நல்ல குணம் செயல் உள்ளவன், பிறர் சொல்லைக் கேட்பவன், நல்ல குணமுள்ளவன், அழகிய கண்களை உடையவன், செல்வந்தன், பேசும் மொழி நடையில் திறமையுடையவன், அந்தணரை வணங்கும் பக்தியுடையவன், அறிவுடையவன், ஏற்பவர்க்கு இல்லை என்று சொல்லாமல் உதவுபவன், பிறரால் பழிக்கப்படும் நிலைக்கு இடங்கொடாத தூய்மையான இயல்பினை உடையவன் ஆகிய அனைத்துப் பண்புகளையும் உடையவனாவான்.

நட்சத்திரபலன் முற்றும்

இராசிகளில் சந்திரன் நின்ற பலன்

சந்திரன் மேடராசியில் நின்ற பலன்

பன்னிரு ராசிகள் தோறும் சந்திரன் நின்ற பலன்
பகர்வர் மேடத்தில் அம்புலி நிற்கப்பிறந்தான்
மின்னும் விழியுருண்டு சற்றே சிவந்திருக்கும் காமி
மிகதூரம் நடந்திடுவான் சீக்கிர சந்தோஷி
பொன்னை மிகத்தேடி உடனே செலவும் புரிவன்
புசபலன் வீரியன் மடவார் கலவிக்கு வலியன்
சென்னிதனில் மறுவாதல் வடுவாதல் சபலன்
சலங்கண்டஞ்சுவான் முழந்தாள்
செறிபிணிவுள்ளவன் 1

தொகுப்புரை:

மேடம் முதலான பன்னிரண்டு ராசிகளிலும் சந்திரன் நின்ற பலனைச் சோதிடத்தில் சிறந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். அதன்படி மேடராசியில் சந்திரன் இருக்கப் பிறந்தவனது

ஒளி மிக்க கண்கள் இரண்டிலும் விழிகள் உருண்டு சிறிது சிவந்திருக்கும், காமியாக இருப்பான், வெகு தொலைவாயினும் நடக்கும் திடமுள்ளவன், விரைவில் சந்தோஷப்படும் இயல்புள்ளவன், செல்வத்தை மிகுதியாகத்தேடிச் சேர்த்து உடனே செலவும் செய்பவன். நல்ல வலிமையான உடலைப் பெற்றவன், வீரமுள்ளவன், (ஆண்மையுளவன்) பெண்களிடம் கலவி செய்வதில் வலிமை பெற்றவன், தலையில் ஒரு மருவென்னும் அடையாளமோ மாறாது இருக்கும் வடுவாகிய அடையாளமோ இருப்பவன், சபலபுத்தி உடையவன், நீர் நிறைந்த தடங்களைக் கண்டு அஞ்சுபவன், முழங்காலில் தீராத வலுயுள்ளவனும் ஆவான்.

அருஞ்சொற்பொருள்

மேடராசி-மேஷராசி, முதல் ராசி. பகர்வர்-சொல்லுவார்கள். அம்புலி-சந்திரன். மிகுதூரம்- தொலை

வான தூரம். புசபலன்-பராக்கிரமன். மறு-திரண்டுள்ள அல்லது படர்ந்துள்ள மச்சம். வடு-ஆறினபுண்ணிட்ட அடையாளம். செறிபிணி-தொடர்ந்து இருக்கும் நோய். காமி-போகத்தை மிகுதியாக விரும்புவன்.

சந்திரன் கடகராசிக்குரிய ஆட்சிநாதன் அவன் தனது வீட்டிற்குப் பத்தாமிடமாகிய மேடராசியில் சமன் பெற்றவனாக இருப்பதற்குரிய பலன்கள் கூறப்பட்டுள்ளன.

ஒரு நட்சத்திரத்து நான்கு பாதங்களில், அவ்வவற்றில் பிறந்தவர்களுக்கு உரியதான குணநலன்களையும் செயல்களையும் சோதிட நெறியில் கூறியுள்ளதைப் போன்றதாகவே, சந்திரன் இராசிகளில் நிற்பதற்கான பலன்கள் கூறப்பெறுகின்றன.

ஆயினும் நட்சத்திரத்திற்கான பலன்கள் பொதுவானவை. சந்திரன் நின்ற இராசிக்கான பலன்கள் சிறப்பானவை என்பதனாலும், இரண்டு வகைப் பலன்களையும் ஒப்பிட்டறியும் போது திட்டவட்டமாக சாதகனின் அங்க அடையாளம் முதற்கொண்டு யாவற்றையும் கண்டு பலன் கூறலாகும்.

நூலில் ஆசிரியர் ஆண்களுக்கான பலன்களைச் சொல்லியிருப்பது அத்துணையும் உள்ளவாறே ஏற்றமுறையில் பெண்களுக்கும் அமைத்துக்கொண்டு விளக்கம் கூறவேண்டுமென்பது சோதிட சாத்திர அனுபவ விதியாகக் கருதுதல் பொருந்தியதாகும்.

சந்திரன் இடபராசியில் நின்றதின் பலன்

உள்ளமகிழ்ந்தருளும்மதி இடபத்திலிருக்க
உற்பவித்தான்குணம்கிருபைநடையுளன், நல்லரூபன்
தெள்ளியநாசியில்முகத்தில்பக்கத்தில்மறுவாம்
தியாகவான்தொடைவதனம்பரும்இருமலுமாம்
பிள்ளைகள்முந்தியுமுள்ளான்பெண்பெறுபவன்பொறுமை
பெரும்பசியன்இனிதுசொல்லான்பிறகுசந்தோஷிப்பன்
கள்ளவிழியார்திட நண்பருக்குநண்பன்
கண்டதுமத்திமவயதோன்சவுக்கியபாக்கியவான். 2

தொகுப்புரை:

சந்திரன் ரிஷபராசியில் இருக்கப்பிறந்தவன், குணவான், கருணையுள்ளவன், நல்ல ஒழுக்கமுள்ளவன், சௌந்தரியன், தெளிவான மூக்கில் முகத்தில் ஒரு பக்கத்தில் மறு உடையவன், தியாக மனம் உடையவன், தொடையும் முகமும் பருத்து இருப்பவன், இருமலுள்ளவன், பிள்ளைகளை முன்னதாகப் பெற்றுள்ளதோடு பெண்ணையும் பெறுபவன், பொறுமையுள்ளவன், மிகுந்த பசியுள்ளவன், நல்ல வார்த்தை சொல்லாதவன், காரியம் ஆன பிறகு சந்தோஷங் கொள்பவன், கள்ளவிழியராகிய பெண்களிடம் சினேகமானவருக்கு நண்பனாக இருப்பவன், இவனுக்குரியதாகக் கணக்கிட்டுக் கண்டது மத்திம வயது உடையவன், எல்லா நன்மைகளுடன் பாக்கியங்களையும் பெற்றவனாவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

உற்பவித்தான்-பிறந்தவன், கிருபை-கருணை, இரக்கம், நாசி-மூக்கு, மறு-மச்சமாகிய அடையாளம், தியாகவான்-பிறர் நலம் கருதி தன்னலம் பாராது செய்யும் உதவியாளன், முந்தியுமுள்ளான்-முன்னதாகவும் பெற்றுள்ளவன், என்றும் கூறலாம். இனிது-நல்ல வார்த்தை, கள்ள விழியார்-அழகிய பெண். கண்டது-ஆயுளைக் கணிக்கும் சோதிட முறையில் ஆராய்ந்து கண்ட வயது.

சந்திரன் மிதுன ராசியில் நின்றதின் பலன்

வான் மிதுன சசிபலன் மின்னார் மகிழும் சுரதன்
மகிழ் தூதன் சிவந்த கண்ணன் மயிர் சுருண்டேயிருக்கும்
தான் பிச்ச சூதுகள் பெறுவன் அழகன் சத்தியவான்
சாப்பாட்டினில் பிரியன் தருமபுத்திமானாம்
பான்மைசெறி பட்டுடுக்கப் பிரியவான் முகத்தில்
பரிக்கும் மறுவுள்ள பிரியவாக்கி மிகுரசமாம்
தேனனையார் மொழிமடவார் கொண்டாடிப் புகழ்வார்
திடமாயுன்னி நவமாகச் செறிந்திருக்கும் நாசி. 3

தொகுப்புரை:

வான மண்டலத்தில் நிலவும் மிதுனராசியில் சந்திரன் நின்ற காலத்தில் பிறந்தவனுக்குரிய பலனைக் கூறுவோமாயின், அழகிய பெண்கள் மகிழுமாறு இசைந்திருப்பவன், திறமையானதூதுவன், சிவந்த கண்ணன், சுருண்ட மயிரினை உடையவன், மருட்சியுடைமையால் ஏமாற்றப்படுபவன், அழகன், சத்தியம் பேசுபவன், சாப்பாட்டில் மிகவும் பிரியமானவன், தருமம் செய்யும் மனத்தினனாகவும் இருப்பவன், தோற்றப்பார்வை உள்ள (பகட்டான) பட்டாடைகளை உடுத்திக் கொள்வதில் பிரியமுள்ளவன், முகத்தில் பளிச்சென்று தெரியுமளவில் மறு என்னும் மச்ச அடையாளம் உள்ளவன், பிரியமாகப் பேசுபவன், எதையும் மிகவும் ரசிப்பவன், அழகிய பெண்கள் இவனைப் பலவாறு பாராட்டிப் புகழ்வார்கள். எதையும் திடமாகச் சிந்திப்பவன், அழகாக அமைந்திருக்கும் மூக்கை உடையவன்-என்ற இயல்புகளைக் காணலாகும்.

அருஞ்சொற்பொருள்

சசி-சந்திரன், மின்னார்-தோற்றப்பொலிவமைந்த பெண்கள், சுரதன்-புணர்ச்சி வல்லோன். தூதன்-சொன்னபடி சொல்லுபவன், பான்மை செறி-அழகும் மதிப்புமுள்ள, பரிக்கும்-தோற்றப்படும், வாக்கி-வாசகத்தைப் பேசுபவன், ரசமாம்-ரசிகனாம், உன்னி-ஆழ்ந்து நினைப்பவன், சிந்திப்பவன், நலமாக-புதியவடிவழகுள்ளதாக.

சந்திரன் கடக ராசியில் நின்றதின் பலன்

நாசமில்லாக் கடகத்தில் மதியுலவச் செனித்தோன்
மன்னு பலமடவாரை நகைபுரிந்து செய்விப்பன்
வீசி வளைந்தோடி டுவன் மறுவுடையோன்
வீடதிகமாய் அக்கம்படி மேவுவன் மெய்க்கொள்ளா
நேசமுறு மனக்கள்ளன் தேகமுள்ளான்
நிலையில்லாத தனம் படைத்து நீணிலத்திலிருப்பன்
பாசமுள்ளவர்க்கும் பருத்தகழுத்தாளன்
பரவு சமயவுபாயனே பகரவேண்டும். 4

தொகுப்புரை:

குறைவில்லாத கடக ராசியில் சந்திரன் நிற்கப் பிறந்தவன், பொருத்தமான பல பெண்களை சிரிப்பால் இணக்கம் செய்விப்பவன், எதற்கும் கைகளை வீசியபடி வளைந்தோடுவன், உடலில் மறு உடையவன், அதிகமான வீடுகளைக்கட்டி வாழ்பவன், குள்ளவடிவினன், மனத்திலுள்ளதை வெளிக்காட்டாதவன், எங்கும் சஞ்சரிப்பவன், உண்மையில்லாது நட்பு செய்யும் மனக்கள்ளன், நல்ல தேகத்தை உடையவன், அளவில்லாததும் நிலைப்பு இல்லாததுமாகிய செல்வத்தினைப் பெற்று உலகில் வாழ்பவன், தன்னிடத்தில் பாசமுள்ளவர்க்கு பாசமுள்ளவனாக இருப்பவன், பருத்த கழுத்தினை உடையவன், விசேடமாகச் சொல்லக்கூடிய அளவில் சந்தர்ப்பமான உபாயங்களைச் செய்பவன் என்றெல்லாம் சொல்ல வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

நாசமில்லா-கெடுதல் இல்லாத, கடகம்-கடகராசி, செனித்தோன்-பிறந்தவன், மன்னு-நிலைத்ததாக, மடவார்-பருவப்பெண்கள், நகை-கவர்ச்சிச்சிரிப்பு, வளைந்தோடி-பிறர் இணங்க நளினம் செய்பவன், அக்கம்-குறைந்த அளவு, தாழ்த்தல், மேவுவன்-மேலோங்கி நிற்பவன், மெய்கொள்ளா-உண்மையை மனத்தில் கொள்ளாது, மனக்கள்ளன்-உள்ளதைச் சொல்லாமல் பொய்யானதைச் சொல்லும் மனக்கள்ளன், நிலையில்லாத-ஓரிடத்தில் நிலைத்து இல்லாமல் இயங்கும்.

சந்திரன் சிங்க ராசியில் நின்றதின் பலன்

வேண்டிடும் சிங்கத்தில் சந்திரன் இருக்கும் பலன்கள்
மிககொடியன் பெருங்கதுப்பன் மின்னார்க்குப் பகைவன்
நீண்ட மலையில் காட்டில் சஞ்சாரப் பிரியன்
நேயமில்லான் பசிதாகமுடையோன், ஊன்பிரியன்
ஈண்டு தாம்பூலனேயன் மனோதுக்கன் தியாகி
எழில் பராக்கிரவான் தீரபுத்தியுடையோன்
ஆண்ட கர்வித நடையோன் விசாலமுள்ளவதனன்
அற்பகாரியக் கோபியாவனெனச் சொல்லே. 5

தொகுப்புரை:

சிங்க ராசியில் சந்திரன் இருக்கும் காலத்தில் பிறந்தவன், மிகுந்த பொல்லாதவன், பெரிய பிடரியை உடையவன், பெண்களுக்குப் பகைவன், மலைத் தொடர்களிலும் காட்டிலும் திரிந்து வசிப்பதற்குப் பிரியப் படுபவன், யாரிடத்தும் நேசம் இல்லாதவன், பசியும் தாகமும் உடையவன், மாமிச உணவில் பிரியமுள்ளவன், தொடர்ந்து வெற்றிலைப்பாக்கு தின்பதில் விருப்பமானவன், மனத்தில் துக்கமுடையவன், தியாகமுள்ளவன், அழகுள்ள பராக்கிரமம் உடையவன், நிலைத்த உறுதியான புத்தியை உடையவன், தானென்று கொண்ட கர்வமுடைய நடைச்செயலுடையவன், அகலமான முகத்தை உடையவன், அற்பமான காரியத்திற்கும் கோபிப்பவன் என்ற இயல்புகளைக் கொண்டுள்ளவன் எனச் சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்

கதுப்பு-பிடரியோடு கூடிய கழுத்து, மின்னார்-கவர்ச்சியான பெண்கள், சஞ்சாரம்-திரிந்து வாழ்தல், நேயம்-நட்பு, ஊன்-மாமிசம், ஈண்டு-சேர்ந்தாற்போல் தொடர்ந்து, தியாகி-தன்னை மதிக்காமல் செயலாற்றுபவன், பராக்கிரவான்-மிகுந்த ஆற்றலுடையவன், திரபுத்தி-நிலைத்த, மாற்றமில்லாத புத்தி, ஆண்ட-தனக்கென கொண்டு ஆண்டுவந்த, வதனன்-முகத்தை உடையவன்.

சந்திரன் கன்னி ராசியில் நின்றதின் பலன்

சொல்லும்கன்னியில் சோமனும்சூழ்பலன்பகரின்
சுகியன்சத்திய வாக்கிசுரதவகைப்பிரியன்
கல்வியில்சாத்திரவகையில்வல்லவன்மெய்க்கிரீசன்
காயமுன்னித நல்சதையுடன்படும்நற்கருமம்
வெல்லும்மேம்பாடுடையன்தர்மசிந்தை யாளன்
இத்தேசத்தில்சஞ்சாரி மிருதுவாக்குள்ளோன்,
நல்லவர்கள்பலர்கூடி ஆச்சியங்கள்செய்வார்
நாரியெனும்பிள்ளைகொஞ்சம்நவிலுங்காலே. 6

தொகுப்புரை:

சந்திரன் கன்னி ராசியில் இருக்கப் பிறந்தவன், கன்னியர் சுகம் உடையவன், சத்தியவாக்கு உடையவன், கலவி வகையில் பிரியமுள்ளவன். கல்வியிலும் சாத்திரவகையிலும் வல்லவன், உண்மையில் உயர்ந்தவன், உடல் தோற்றம் நல்ல சதையுடன் உள்ளவன். நல்ல செயல்களைச் செய்பவன், வெற்றியடையும் மேம் பாட்டினை உடையவன். தர்மசிந்தனை யாளன், இந்த தேசம் முழுவதும் செல்லும் சஞ்சாரி, மென்மையான வாக்கினை உடையவன், பெரியோர்கள் பலர் கூடி இவனுக்குப் பாராட்டுதல்கள் செய்வார்கள், இவனுக்கு பெண்பிள்ளைகள் சிலவாக இருக்கும்-என்ற இயல்பினை உடையவனாவான்

அருஞ்சொற்பொருள்

சோமன்-சந்திரன், சூழ்பவன்-சார்ந்த பலன்கள், பகரின்-சொல்லுவோமாயின், சுகியன்-கலவியில் சுகவிருப்பன். சாத்திரவகை-கலைகளுக்குரிய சாத்திரவகை கிறீசன்-உயர்ந்ததோற்றமுடையவன், காயம் உன்னிதம்-நல்ல மேலான சரீரம், சஞ்சாரி-காரண காரியமாகப் பயணம் செய்பவன், ஆச்சியங்கள்-பாராட்டுதலோடு கூடிய வெகுமதிகள், நாரி-பெண்.

சந்திரன் துலாம் ராசியில் நின்றதின் பலன்

காலே சோலிடத்தில் சந்திரனிருக்கும் பலன்கள்
கன்னியரைச் செய்திடுவன் கல்வியில் பண்டிதனாம்
மேலே கிஞ்சிதரோகன் சுகியன் நீதியுடையோன்
விப்பிரதேவர்களிடத்துப்பிரியன் வெகுதானன்,
கோலேபோல் இளைச்சையாப் பிறகிருதி நிலையான்
கொள்ளவும் விற்கவும் வல்லான் குலமனைவி உள்ளான்,
வாலே கௌத்தமற் பகைவனாம் அங்கவீணன்
மனதில் சந்தோஷமில்லான் வர்மனாம் கண்டீர். 7

தொகுப்புரை:

சந்திரன் துலாராசியில் இருக்கப் பிறந்தவன், பல கன்னியரைக் கலவி செய்திடுவன், கல்வியில் உயர்ந்த

பண்டிதன், உடம்பின்மேல் சிவந்த படைரோகம் உடையவன், போகத்தில் சுவையுள்ளவன், நீதியுடையவன், பிராமணர் தேவர்கள் ஆகியோரிடத்தில் பிரியமானவன், பவதானங்களைச் செய்பவன், கோல் போன்று இளைத்த அங்கங்களை உடையவன். நிலைப்பாக இல்லாதவன், பொருள்களை வாங்குவதிலும், விற்பதிலும் வல்லவன், தன்குலத்தில் மனைவியைப் பெற்றவன், சோரத்தினால் பிறருக்குப் பகையானவன், அங்கத்தில் குறைவுள்ளவன், மனத்தில் சந்தோஷமில்லாதவன், விடாத உட்பகை உள்ளவன் என்ற இயல்புகளை உடையவனாவான்.

அருஞ்சொற்பொருள்

கோல்-தராசுக்கோல் துலாம் ராசி, செய்திடுவன்-கலவி செய்திடுவன், கிஞ்சிதம்-வெளிர்சிகப்பு, விப்பிரர்-பிராமணர் உயர்ந்தவன், கோலே போல், நெடிதாக கோல் போன்ற-பிரகிருதி-மூலமான அவயவங்கள், குல மனைவி-தனது குலத்தில் முறைமையாக வந்த மனைவி, வாலே-வாலிபச் செயலாலே, வர்மன்-மனத்தில் விடாப்பகையுள்ளவன், கண்டீர்-காண்பீராக.

சந்திரன் விருச்சிகத்தில் நின்றதின் பலன்

கண்டீர் சந்திர பகவான் விருச்சிகத்தில் பலன்கள்
கருதுங்கால் திரண்டமுழங்காலுளனேயாகும்
கொண்டாடும் வாலிபத்தில் பிதாவைப்பட்டோன்
கொடிய சேட்டையன் அச்சங்கொள்வன் நோயாளன்
செண்டாரும் செங்கை மன்னர் பூச்சியங்கள் செய்வார்
சனங்கள் அறியாது ஒளித்துச் செய்வன் பாபத்தை
மிண்டாரும் பட்சி அங்குசம் பிடிக்கும் கையன்
வீழி மார்பும் பருத்திருக்குமெனப்பலன்கள் கூறே. 8

தொகுப்புரை:

சந்திரன் விருச்சிக ராசியில் இருக்கப் பிறந்தவன், திரண்ட முழங்கால்களை உடையவன், வாலிபத்தில் தந்தையை இழப்பவன், கொடிய சச்சரவுகளைச் செய்பவன், அச்சங்கொள்பவன், அரசர் பாராட்டும் அளவில் உள்ளவன்,

மக்களுக்குத் தெரியாமல் மறைத்துப் பாவங்கள் செய்பவன், வலிமையான பறவைகளையும் அங்குசத்தையும் கையில் பிடிக்கும் தகுதியுள்ளவன், அவனது கண்விழிகள், மார்பகம் ஆகியவை பருத்திருப்பவன் என்ற இயல்புகளை உடையவனாகும்.

அருஞ்சொற்பொருள்

கருதுங்கால்-எண்ணும் பொழுது, பிதா-தந்தை, சேட்டையன்-குறும்புகள் செய்பவன், செண்டாரும்-செண்டு என்ற விருதுச் சின்னம் பொருந்திய, மிண்டு-வலிமை, அங்குசம்-யானையை நடத்தும் ஆயுதம்.

சந்திரன் தனுசு ராசியில் நின்றதின் பலன்

கூறு தனுராசியில் சந்திர பகவான் நின்ற பலன்கள்
கூன் முதுகுள்ள பலவான் குலவிய கெம்பீரன்
வீறு நிதிக்கினியன் உச்சாகி சிற்பம் அறிவன்
மிகும் ஆசையுளன் வெல்லும் சொல்லன் வீரியவான்
தேறு பூர்வமாம் பிதா நிதியைச் செலவழிக்கும் தியாகி
புயம் திரண்டு பெருத்திருக்கும் புகல் கவிதை அறிவான்
மாறு செய்தோரை தூஷிப்பன் வசிகரனாம்
மணிகளணிந்திடும் கழுத்தன் வதனமும் நீண்டிருக்கு. 9

தொகுப்புரை:

சந்திரன் தனுசுராசியில் இருக்கப் பிறந்தவன், கூன் முதுகுள்ளவன், பலமுள்ளவன், பிறரிடம் உறவாடி உயர்வு பெறும் திறமையாளன், வீறாப்புடையவன், இருப்பான செல்வத்தை உடையவன் அல்லது காப்பவன், எப்பொழுதும் உட்சாகமுடன் இருப்பவன், சிற்பம் செய்தலை அறிந்தவன், மிகுந்த ஆசையுள்ளவன், பிறரோடு வார்த்தையாடுங் காலத்தில் தன் சொல்லை மேம்படச் செய்பவன், நல்ல வீரியமுள்ளவன், உறுதியாகவும் தெளிவாகவும் பூர்வீக மாகவும் தந்தை வழி வந்தனவுமான செல்வத்தை செலவழிப்பவன், தியாக சிந்தனை உள்ளவன், அவனது புஜங்கள் உயர்ந்து திரண்டு பெருத்திருக்கும், கவிதைகள் எழுதிச் சொல்வதை அறிந்தவன், தனக்கு விரோதமாக

மாறுபட்டுச் செய்வாரைப் பழித்துக் கூறுபவன், பிறரைத் தன் வயப்படுத்தும் இயல்புடையவன், இரத்தின மணிகளுடைய மாலையைக் கழுத்தில் அணிந்திருக்கும் தன்மையுடையவன், அவனது முகம் சற்று நீண்டதாக இருக்கும் இவ்வாறான இயல்புகளை உடையவனாவான்.

அருஞ்சொற்பொருள்

கூன்-உடற்கூனல், கம்பீரம்-தானென்ற செருக்கு, வீறு-வெகுவான, நிதி-பாதுகாப்புச் செல்வம், உச்சாகி-மனத்தெளிவுடையவன், சிற்பம்-சிலைகள், வெல்லும் சொல்-பிறரை வெல்லும்படியான சொல்வன்மை, வீரியம்-ஆண்மைத்தன்மை, பூர்வமாம்- முன்னோர்கள் வழி வழி வந்ததுமான, பிதா-தந்தை, கவிதை-கற்பனையாகக் கட்டிச் சொல்லும் பாடல்.

சந்திரன் மகர ராசியில் நின்றதின் பலன்

நீண்ட மகரச்சசி பலன்தனமுமில்லான்
நிறைக் காவியம் தெரிவோன் நிதியுதவா உலுத்தன்
பூண்ட சௌபாக்கியன் செட்டான சொல்லே புகலும்
காமியாம் கமனன் புயபலவானாவான்
வேண்டிய விச்சைகளுள்ளான் சோம்பன் இங்கிதவான்
மின்னனையார் புகழ் அழகன் மெய்க்கிருபை இல்லான்
ஆண்டகை மனைவியைத் தன்மைந்தரைக் கொண்டாடி
அவனிதனிலிருப்பன் எனவறிந்து உரைசெய்யும். 10

தொகுப்புரை:

சந்திரன் மகர ராசியில் இருக்கப் பிறந்தவன், தரித்திர முடையவன், நிறைந்த காவிய நூல்களைக் கற்றவன், பிறருக்குப் பணவுதவி செய்யாத உலோபத்தன்மை யுடையவன், கருமி, அமைத்துக் கொண்ட சவுரியங்களை உடையவன், அளவாகப் பேசுபவன், காமமுள்ளவன், குறிப்புடன் நடப்பவன், நல்ல சரீர பலம் உள்ளவனுமாவான், விரும்பிய அளவில் பலவித்தைகளை அறிந்தவன், சோம்பலுடையவன், சமயோசித புத்தியுடன் நடப்பவன், பெண்கள் பாராட்டிப் புகழும் படியான அழகை உடையவன்,

உண்மையான இரக்கம் இல்லாதவன், சிறப்பான தனது மனைவி பிள்ளைகள் ஆகியோரை அன்புடன் கொண்டாடி உலகில் இருக்கும் தன்மையுடையவன் என இவ்வாறான இயல்புகளை அறிந்து சொல்ல வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

மகர சசி-மகர ராசியிலுள்ள சந்திரன், தனம்-செல்வம், காவியம்-இலக்கியங்கள், நிதி உதவா-பொருளுதவி செய்யாத, செட்டான-அளவான, புகலும்-சொல்லுவான், இங்கிதவான்-சமயோசிதமறிந்து மற்றவரிடம் இனிமையாகப் பேசி நடப்பவன், மெய்க்கிருபை-உண்மையான இரக்கம், கருணை, அவனி-உலகம்.

சந்திரன் கும்ப ராசியில் நின்றதின் பலன்

செய்யகும்பச் சசிபலன்கள் இடுப்பில் மறுவுளனாம்
சிலகருமம் ஆக்கவும் அழிக்கவும் செய்வன் சிலபேர்
தையலுக்கும் மகட்கும் இச்சையுறும் பாவி கொடியவன்
சரீரங்கள் நீண்டிருக்கும் கால் துடையும் பெரியன்
துய்யகழுத்து நெடியன் பெருமுதுகன் வழிகள்
தொலைவாக நடக்கவும் வல்லன் சந்தனம்
மெய்யில் நரம்புயர்ந்து சிக்கென்ற மயிருளான்
விரவு பெருங்குரியன் என விளம்புவார்கள். //

தொகுப்புரை:

சந்திரன் கும்பராசியில் இருக்கப் பிறந்தவன், இடுப்பில் மறுவுள்ளவன், சில செயல்களை உண்டாக்கவும் அழிக்கவும் செய்பவன், இவ்வாறான அம்சத்தில் பிறந்தவருள் சிலர் மனைவியிடத்தும் மகளித்தும் மிகுந்த இச்சையுடையவ ராவர். பாபங்களான செயல்களைச் செய்வபன், கொடுமை யானவன், உடம்பில் அங்கங்கள் நீண்டதாக இருக்கும். கால்களும் தொடைகளும் பெரியதாக இருக்கும். நல்ல கழுத்துடையவன், உயரமானவன், பெரிய அகலமான முதுகை உடையவன். தொலை தூரத்தையும் நடந்தே செல்வதில் வல்லமை உடையவன், மணமுள்ள சந்தனம் பூக்கள் ஆகியவற்றில் பிரியப்படுபவன், உடம்பில் நரம்புகள்

புடைப்பாக உயர்ந்திருக்கும், சிக்கான மயிரை உடையவன், பெரிய குறியை உடையவன் என்ற இயல்புகளைப் பெற்றவனென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

செய்ய-தெளிவான, சசி-சந்திரன், மறு-மச்சம், சில கருமம்-சில செயல்கள், சில பேர்-இவருள் சிலர், தையல்-மனைவி, சரீரங்கள்-சரீரத்திலுள்ள அங்கங்கள், கால் துடை-காலினது துடைகள், துய்ய-அளவான, பெருமுதுகு-அகன்று பெருத்த முதுகு, சிக்கென்ற-சிக்கல் கொண்டுள்ள விளம்புவார்கள்-சோதிடர்கள் சொல்லுவார்கள்.

சந்திரன் மீன ராசியில் நின்றதின் பலன்

விளம்பிய மீனச் சசிக்குப் பலன் நீரில் பிறக்கும்
மீன் முதற் செந்துக்களின் மேல் பிரியனாவன்
வளம்பெரிய போக போக்கிய வஸ்துக்களினும்
மருவு கிரகங்களினும் மனமுடையனாவன்
உளமதனில் பரதாரவிருப்புடையன் மெய்யழகன்
உற்றகுல மகளிடத்தும் உறவுடையன் சமவான்
இளம்பிறை போல் திருநுதலில் சிந்தூரத்திலகம்
பூசி இலையோரை வென்றே இருக்கும் மடமானே. 12

தொகுப்புரை:

சந்திரன் மீனராசியில் இருக்கப் பிறந்தவன், நீரில் பிறந்து வாழ்வதாகிய மீன் முதலான சீவராசிகளிடத்தில் பிரியமுள்ளவன், வளமை நிறைந்த போக பாக்கிய வஸ்துக்களிலும் கிரகங்களை ஆராய்ந்து அறிவதிலும் மனமுடையவனாவான், பரதார விருப்பமுடையவன், உடல் அழகுடையவன், தன்குலத்தில் மணந்த மனைவியிடத்தில் மிகவும் உறவும் பற்றுதலும் உடையவன். சமத்துவம் உடையவன், இளைய பெண்களைத் தன்வசப்படுத்தி இருக்கும் தன்மை உள்ளவன் என்ற இயல்புகளைப் பெற்றவனாக விளங்குவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

வளம் பெரிய-செல்வம் ஆரோக்கியம் முதலான வளமையில் மிகுந்த வஸ்துக்கள்-பொருள்கள், மருவு கிரகங்கள்-வானத்தில் உள்ள சூரியன் சந்திரன் முதலான ஒன்பது கிரகங்கள் அதனோடு சார்ந்த இருபத்தேழு நட்சத்திரங்கள் ஆகியவற்றை அறிவதில், பரதாரம்-பிறர் மனைவி, குலமகள்-மனைவி, சமவான்-தன்னைப் போல் பிறரை மதிப்பவன், நுதல்-நெற்றி, திலகம்-பொட்டு, மடமானே-மடமை பொருந்திய மானைப் போன்ற பெண்ணே.

சனியீசுவரன் பன்னிரு ராசிகளில் நின்றதின் பலன்

சனி மேடம் விருச்சிகத்தில் நின்றதின் பலன்

மேடத்தில் காரி நிற்கில் வெகுமாயா ரூபி மூர்க்கன்
தேடிடான் உறவு சற்று பிரமிக்கச் சிறிது சொல்வான்
ஓடுதேள் காரிக்கே கண்டுண்டு மெய்க்கிரீசனாவன்
நீடிய தனமுமில்லான் கொலை செய்தே நிற்பன் தானே. /

தொகுப்புரை:

சனன காலத்தில் சனி, மேட ராசியில் நின்றால், மாயா ரூபியும், மூர்க்கனும், உற்றாரை விரும்பாதவனும், பிறரை பிரமிக்கச் செய்யும்சில வார்த்தைகளைச் சொல்பவனும் ஆவான்.

விருச்சிக ராசியில் சனி நின்றால், கண்டனவற்றைத் தூளாக்கிக் கொள்ளும் தன்மையில் தேர்ந்தவன், நிலைத்த செல்வமில்லாதவன், கொலை போன்ற பாபச் செயல்களைச் செய்தே வருந்தி நிற்பவன் ஆவான்.

மேடம் முதலான பன்னிரண்டு ராசிகளில்-சனி, கிரகம், மேடம், விருச்சிகம் ஆகிய இரண்டு ராசிகளில் நின்றதின் பலன் கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டு ராசிகளும் செவ்வாய்க்குரிய ராசிகளாகும். ஆட்சி பெற்று தனது வீட்டில் பலம் பெற்றிருக்கும் செவ்வாயுடன் சனி கூடி நின்றாலோ செவ்வாய் வேறு இராசியில் இருந்தாலோ, அதன் நிலை, பலன் ஆகியவற்றையும் கண்டு சனி நின்றதின் சரியான பலனைக் காணலாகும்.

மேடம் சனியின் நீச ராசியும், விருச்சிகம் சனிக்கு சத்ரு ராசியுமாகும்.

சனி இடப துலாத்தில் நின்றதின் பலன்

நிற்கும் ஓரிடபம் தன்னில் நின்றிடில் திரிலோ லன்னாம்
நற்குணன் மறிக்கை இல்லான் நாரியர் பலரைச் சேர்வான்
முக்கோலில் சவுரி நிற்கில் முதலுள்ளத் தலைவ னாவன்
சற்குணன் பிரக்கியாதி தரும்கிரா மணியும் ஆமே. 2

தொகுப்புரை:

இடப ராசியில் சனி நின்றதின் பலன், பெண்களுக்கு விருப்பமானவனும், நற்குணமுள்ளவனும், மறதி இல்லாதவனும், பல பெண்களைச் சேர்பவனுமாவான்.

துலாம் ராசியில் நின்றதின் பலன், துலாம் சனிக்கு உச்ச ராசியாதலின் முதலீடான செல்வத்தினைக் கொண்டு தலைவனாக உள்ளவன், நல்ல குணமுள்ளவன், புகழ் பெற்றவனும், கிராமத்தலைவனும் ஆவான்.

இடபராசியும் துலாம் ராசியும் சுக்கிரனுடைய வீடுகளாகும். இவ்விரண்டு ராசிகளும், சாதகனின் ஜனன லக்கினத்திற்கு எத்தனையாம் இடங்கள் என்பதனைக் கண்டு எத்தனையாம் பாகதம் என்பதற்குரிய பலன்களுக்கு ஏற்றதாக சனி நிற்பதின் பொதுப் பலன்களாகும். இவற்றில் பொருந்திய இயல்புகளையும் சேர்த்து காண்பது என்பர். இடபம் சனிக்கு நட்பு ராசி-துலாம் உச்சராசியாகும் என்பதனையும் ஈண்டு கண்டுணர்க.

சனி மிதுனம் கன்னி கர்க்கடகம்-நின்றதின் பலன்

ஆனதோர் மிதுனம் கன்னிதனில் சனி அமர்ந்த காலை
தானமாம் புதல்வர் அற்பம் தகைமை எல்லோர்க்கும் நண்பன்
வானுறு நண்டில் காரி மருவில் தாய் மகன் பொன்னில் லான்
மோனமாம் அஞ்ஞியானி பக்கினி பல்லன் மூர்க்கன். 3

தொகுப்புரை:

மிதுனம் கன்னி ஆகிய இரண்டு ராசிகளிலும் சனி இருந்த காலமாயின் தன் வழியாம் பிள்ளைகள் அற்பமாகும். தகுதியுடன் யாவருக்கும் நண்பன் ஆகும்.

வானில் உலவும் கடகராசியில் சனி சேர்ந்திருப்பின் தாய் இல்லாதவன் மகன் இல்லாதவன் செல்வம் இல்லாதவன், மௌனவான், அறியாமை உடையவன், பழுதான பற்களை உடையவன், மூர்க்கத்தனமுள்ளவன் ஆவான்.

சனி சிங்க ராசியில் நின்றதின் பலன்

மூலமாம் சிங்க வீட்டில் முனியுறும் சனிதான் நிற்கில்
சால ஆசாரமில்லான் சுகமில்லான் ஆட்சியானோன்
சீலமாய்க் குலம் விளங்க வந்திடும் சேயுமில்லான்
வேலை வாருதி ஆலத்தை முனிந்தடர் விழியினானே. 4

தொகுப்புரை:

இராசிகளில் மூலமான சிங்கராசியில், கோபத்தையுடைய சனிதான் நிற்கப் பிறந்தவன், மிகவும் ஆசாரமில்லாதவன், சுகமில்லாதவன், தனக்கென அதிகாரமானவன், சிறப்புடைய தனது குலம் விளங்க வந்திடும் பிள்ளையில்லாதவன், அலை நிறைந்த கடலையும், விஷத்தையும் விட அதிகமான தோற்றமுள்ள விழிகளை உடையவன் ஆவான்.

சிங்க ராசி பன்னிரண்டு ராசிகளில் சிறப்பினால் மூலமானராசி, சூரியனுக்கு உரிய ஒரே ராசி. இதில் சனிபகவான் நின்ற காலத்தில் பிறந்தவனுக்கு சனியினால் அமையும் பலாபலன்களே கூறப்பட்டுள்ளன. சிங்கராசி சனிக்குப் பெரும் பகையாக சூரியனின் ராசியாகும் என்பதால் சனி சிங்கத்தில் நிற்கில் நற்பலன் தருவது கடினமாகும்.

சனி தனுசு மீனத்தில் நின்றதின் பலன்

விழி மீன தனுவில் கரிமேவின் மன்னவருக்கன்பன்
மொழியும் சோபனமும் மைந்தர் திரவியமும் உள்ளான்
வழிவசமான பெண்டிர் உள்ளவன் மலர்கண் நோயன்
செழியன் தன் கொடிமேல் பட்சம் செறிந்திடும் சிந்தையானே. 5

தொகுப்புரை:

சனி கிரகம், குருவின் ஆட்சி வீடுகளான தனுசு மீனம் ஆகிய ராசிகளில் நிற்கப் பிறந்தவன், அரசனுக்கு அல்லது

அரசாங்கத்திற்கு அன்பனாக இருப்பவன், நன்றாக எதையும் எடுத்துச் செல்பவன், சுபமான தன்மையுடையவன், பிள்ளைகளோடு செல்வத்தையும் பெற்றவன், வந்து தன்வசமான பெண்டிரை உள்ளவன், விழித்த கண்ணோய் உள்ளவன். செழிப்பானவன், தனது மனைவியின் மேல் மிகவும் விருப்பம் நிறைந்த மனத்தை உடையவன் ஆவான்.

வழிவசமான இடைவழியில் தன்வசமான, மைந்தர் திரவியம்-மக்களால் செல்வம், மொழியும் - சொல்லும் வார்த்தைகளும், செழியன் - திளைப்பானவன்.

சனி மகரகும்பத்தில் நின்றதின் பலன்

சிந்தையாம் மகர கும்பம் செறிந்துதான் காரி நிற்கில்
உந்தியநகரம் பட்டணம் உள்ளான் உறுகண் நோயன்
சந்ததம் தனங்கள் சேர்ப்பன் செலவுள்ளோன் சரீரம் நோதசை
சுந்தரப் பரத்தை நண்பன் பலன்பெறச் சொர்ணம் சேரும். 6

தொகுப்புரை:

சனி ஈஸ்வரன் மகரம் அல்லது கும்பம் ஆகிய ராசியில் நின்ற காலத்தில் (ஆட்சியில் இருக்கப்) பிறந்தவன், பெருகிச்செல்லும் நகரம் அல்லது பட்டணம் ஆகியவற்றில் வாழ்பவன், கண் நோயை உடையவன், எப்பொழுதும் எக்காலத்தும் செல்வத்தினைச் சேர்க்கும் செயல் உள்ளவன், செலவும் செய்பவனாக இருப்பவன், சரீரத்தில் தசை நோய் உள்ளவன், அழகுடைய பரத்தையிடம் மிகவும் நேசமானவன், பலன் பெறுவதற்கு உரியமுறையில் பொன்னைச் சேர்ப்பவன் ஆவான்.

இராசிகளில் சனி நின்ற பலன் முற்றும்

சந்திரனைக் கிரகங்கள் பார்த்த பலன்

மேடச் சந்திரனை

ஆட்டில் வெண்குடைமால் காணில் அதிக வித்தை
பூட்டிய பொன் சேய் காணில் பரவலனாகி வாழ்வன்
கூட்டிய பிருகு காணில் குணவானாம் காரி கள்ளன்
நீட்டிய பதங்கள் காணில் இரணியமில்லை என்னே!

தொகுப்புரை:

மேடராசியிலுள்ள சந்திரனை, புதன் பார்த்தால், அதிக வித்தையும், குரு, அங்காரகன் இவர்கள் பார்த்தால் அரசனைப்போல் உயர்வு பெற்று வாழ்பவனும் சுக்கிரன் பார்த்தால் குணவானும், சனி காணில் கள்ளனும், இராகு கேதுக்கள் காணில் பொன்பொருளைச் சேமிக்காத தரித்திரவானும் ஆவான்.

சென்ன காலத்தில் கணிக்கப்பட்ட இராசி சக்கரத்தில் சந்திரன் நின்ற வீட்டினை பார்க்கும் கிரகங்களினால் உண்டாகும் பலன் கூறப்பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள்

ஆடு-மேடராசி, மால்-புதன், வித்தை-கல்வி முதலான வித்தைகள், பொன்-குரு, சேய்-செவ்வாய், புரவலன்-அரசன், பிருகு-சுக்கிரன், காரி-சனி, நீட்டிய பதங்கள்-நீண்டதாகிய பாதங்களை உடைய ராகு கேது ஆகிய பாம்பின் அங்கங்களைப் பெற்ற கிரகங்கள், இரணியம்-பொன்.

இடபச்சந்திரனை -

என்னரன் விடையில் ஏறும் இராமனைக் குசனும் காணில்
பொன்னிலான் புந்தி கள்ளன் பொன் காணில் புகழ்வர் பல்லோர்
பன்னிய பளிங்கு வேந்தன் பங்குபாதன் பொன்னுள்ளான்
துன்னிய திவாகரன் கண்டிடிலே ஏவிய தொழில் செய்வோன். 2

தொகுப்புரை:

இடப ராசியிலுள்ள சந்திரனை செவ்வாய் காணில் பொன் பொருளை நிலையாகப் பெறாதவனும், புதன் காணில் கள்ளனும், குரு காணில் பலரால் புகழ்ப்படுவோனும் சுக்கிரன் காணில் அரசனும், சனி காணில் செல்வமுடையவனும், சூரியன் காணில் அடிமைத்தொழில் செய்வோனும் ஆவான்.

அருஞ்சொற்பொருள்

அரன் விடை-சிவபெருமானது இடபம், இடபராசி, ஏறும்-சென்றுள்ள, இராமனை-(இரா+மன்) இரவிற்கு மன்னன், சந்திரனை, குசன்-செவ்வாய், பொன்னிலான்-நிலைப்பாகச் செல்வமில்லாதவன், புந்தி-புதன், பொன்-குரு, பன்னிய பளிங்கு-புகழ்பெற்ற சுக்கிரன், பங்குபாதன்-முடவனாகிய சனி, திவாகரன்-சூரியன், ஏவிய தொழில்-பிறரால் ஏவப்பட்ட வேலை.

மிதுனச் சந்திரனை -

வான்தண்டு லோனையால் காண வல்இரும்பு விற்பன்
போனதண்ட புந்தி காணில் மன்னன் பொன்காணின்
மேன்மை பண்டிதனாம் பிருகு பார்க்கில் பயமில்லான்
தான்டறைத் தலரி காணில் தரித்திரம் தங்குமென்னே. 3

தொகுப்புரை:

மிதுனத்திலுள்ள சந்திரனை அங்காரகன் காணில், இரும்பு வியாபாரியும், புதன் காணில் அரசனும், குரு காணின் பண்டிதனும், சுக்கிரன்காணில் பயமில்லாதவனும், சனி காணில் நூல் வியாபாரியும், சூரியன் காணில், தரித்திரனுமாவான்.

அருஞ்சொற்பொருள்

வல் இரும்பு-வலிய இரும்பு, புந்தி-புதன், பொன்-குரு, பிருகு-சுக்கிரன், அலரி-சூரியன்.

கடகச் சந்திரனை -

தங்கியநண்டில் சோமன் தன்னை அக்கிரன்தான் காணில்
பொங்கிய குசலைசெய்து போறான் படை புதன் வித்தை
துங்கமன் பார்க்கில் ஞானி சுங்கன் பார்வைக்கு மன்னன்
செங்கதிர் நோக்கங் கண்ணோய் திறல் சனி இருமல் உயிர்ப்பான். 4

தொகுப்புரை:

கடகத்திலுள்ள சந்திரனை, செவ்வாய் காணில், மேலோங்கிய சாமார்த்தியம் செய்து படையில் போவான்,

புதன் காணில் பலவித்தைகளறிவான். குரு காணில் ஞானவானாவான், சுக்கிரன் பார்க்கில் கண்ணோய் உடையவனாவான். சனி பார்க்கில் இருமல் நோய் காரனாக எப்பொழுதும் இருப்பான்.

அருஞ்சொற்பொருள்

நண்டில்-கடக ராசியில், அக்கிரன்- அங்காரகன், செவ்வாய், குசலை-சாமார்த்தியம், படை-படையில் வீரன், தூங்கமன்-குரு, சுங்கன்-சுக்கிரன், இருமல் உறிர்ப்பான்-இருமல் நோயால் மூச்சுத் திணறல் உடையவன்.

சிம்மச் சந்திரனை -ம்

உய்யரி இந்தைப் புந்தி பார்க்கச் சோதிடநூலோதும்
செய்யபொன்தனவான் வெள்ளி திருட்டி மன்னனாம் காரி
மெய்யுற நோக்கில் நால்விதத்தொழில் விளைப்பன் வெய்யோன்
பையவே காணில் மன்னனாம் பயில் குசன் பாராள்விப்பன். 5

தொகுப்புரை:

சிங்கத்திலுள்ள சந்திரனைப் புதன் பார்த்தால் சோதிடம் சொல்பவன், குரு பார்த்தால் மிகுந்த செல்வமுடையவன், சுக்கிரன் பார்த்தால் மன்னவன், சனி முழுப்பார்வையுறப் பார்த்தால் நால்வகைத் தொழிலைச் செய்பவன், சூரியன் பார்த்தால் மன்னவனாம், செவ்வாய் பார்த்தால் ஊரை ஆளும் அதிகாரியாகச் செய்வான்.

அருஞ்சொற்பொருள்

உய்அரி-கர்ச்சனை செய்யும் சிங்கம், இந்து-சந்திரன், தனவான்-செல்வமுடையவன், வெள்ளி-சுக்கிரன், திருட்டி-பார்வை, காரி-சனி, வெய்யோன்-சூரியன், குசன்-செவ்வாய்.

கன்னி சந்திரனை -ம்

விற்பன மடந்தை இந்தை வேண்டியே கணக்கன் காணில்
நற்புவி புரப்பன் பொன் காணின் சேனாபதியாய் நாட்டும்
முற்பகர் சுங்கன் சால் நிபுணன் சேய் முடவன் வெய்யோன்
கற்பனையுடனே காணில் கன்னியால் பிழைப்புண்டானே. 6

தொகுப்புரை:

வியப்பான கன்னி ராசியில் உள்ள சந்திரனை, விருப்புடன் புதன் காணின், நல்ல ஊரினை ஆளும் அதிகாரியாவான், குரு காணில் படையில் தலைவனாக இருப்பான், சிறப்பாகச் சொல்லப்படும் சுக்கிரன் காணில் மிகவும் நிபுணனாக இருப்பான், செவ்வாய், சனி, சூரியன் இவர்கள் காணில் பெண்ணால் பிழைப்பவனாவான் என்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

விற்பனம்-மேலான தன்மை, மடந்தை-கன்னி ராசி, இந்து-சந்திரன், கணக்கன்-புதன், புரப்பன்-ஆட்சி செய்வான், பொன்-குரு, நாட்டும்-தனது மேன்மையை நிலைபெறச் செய்யும், சால்-மேலான, சேய்-செவ்வாய், முடவன்-சனி, வெய்யோன்-சூரியன், கற்பனை-உண்டாக்கிக்கொண்டு.

துலாச் சந்திரனை -

ஆவன் கோலிடத்திலோனை மால் காணில் அரசனாவான்
மேவிய பொன்னின் பார்வை மிகு சொர்ண வேலைக்காரன்
தாவிய பிருகு காணில் வியாபாரி காரி சேய் வெய்யோன்
மூவர் கண்டிடில் வஞ்சிப்பன் பலரையும் முறைமை போல. 7

தொகுப்புரை:

துலாம் ராசியிலுள்ள சந்திரனைப் புதன் காணின், உயர் அதிகாரியாவான் அரசனைப்போல, குரு காணின் பொன்வேலை செய்பவனாவான். சுக்கிரன் காணின் வியாபாரியாவான், சனி, செவ்வாய், சூரியன் இவர்கள் காணின் பலரையும் தகுதியான முறைமைகளால் வஞ்சித்து வாழ்பவனாவான் என்பர்.

அருஞ்சொற்பொருள்

கோலிடம்-துலாம் ராசியிடம், மால்-புதன், மேவிய-பொருந்திய, பொன்னின் பார்வை-குருவின் பார்வை, சொர்ண வேலை-பொன் வெள்ளி வைரங்கள்

ஆகியவைகளால் உருவாக்கும் வேலை, பிருகு-சுக்கிரன், முறைமை போல-நன்மை செய்பவனைப் போல வஞ்சிப்பான் என்பது.

விருச்சிகச் சந்திரனை -

போலும் தேள் இந்தைக் கண்ட புதனுக்குத் தந்தை இரண்டாம்
மேலுமே குரு திருட்டிக்குப் பிராமண சீவன் வெள்ளி
சாலவே காண வண்ணான் பணி சனி வெய்யோன் சேய்
கோலிய அங்கவீனன் நரித்திரன் குணவேந்தாகும். 8

தொகுப்புரை:

விருச்சிக ராசியில் நிற்கும் சந்திரனைப் புதன் காணின், இவனுக்குத் தகப்பன் இருவர் என்பர். குரு பார்ப்பதாயின் பிராமணனைப் போன்ற தன்மையன், சுக்கிரன் பார்த்தால் துணிகளைத் துவைத்து வெண்மையாக்கும் வண்ணான் ஆவான். ராகு கேதுக்கள் , சனி, சூரியன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் பார்த்தால் உடலில் குறைவு கோணல் உடையவன். நரியைப்போன்ற தந்திரமுடையவன், குணத்தால் சிறந்தவன் என்பன போன்ற தன்மைகளை உடையவன் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

தேள்-விருச்சிக ராசி, இந்து-சந்திரன், திருட்டி-பார்வை, சீவன்-போன்ற மனித உயிர், சாலவே-மிகுதியாகவே, வெள்ளி-சுக்கிரன், கோலிய-கோணலாகிய, அங்கம்-கை, கால் முதலியன, நரித்திறன்-நரியைப்போன்ற தந்திரத்தால் திறமை. குணவேந்தன்-குணத்தில் உயர்ந்தவன்.

'சாலவே காண' என்பது நிறைவான முழுமையான நேர்பார்வை என்ற குறிப்பினைத் தருவதாகும்.

தனுசு சந்திரனை -

ஆம்தனு இராமன் தன்னை புதன் காண அறிந்த ஞானி
போமந்த பொன் காண மன்னனாம் பொருந்து சுக்கிரன் திருட்டிக்கு
சேர்ந்து நின்றாசரிப்பர் பலர்கூடி செவ்வாய் வெய்யோன்
ஏந்திய சனியும் காண இருமலாயிருப்பன் கண்டீர். 9

தொகுப்புரை:

தனுர் இராசியில் இரவினுக்கு அரசனாகிய சந்திரன் நிற்க, அவனை புதன் காண்பதாயின் உலகம் அறிந்த ஞானியாவன். குரு காணின் அரசனாவான், சுக்கிரன் காணின் பலர் இவனைப் பாராட்டும் வகையில் இருப்பான், செவ்வாய், சூரியன், சனி இவர்கள் காணின் நிரந்தரமான இருமல் நோய் உள்ளவனாவான்.

அருஞ்சொற்பொருள்

தனு-தனுர் ராசி, இரா+மன்=இரவிற்கு அரசன் சந்திரன், அறிந்த-உண்மைப் பொருள்களை தத்துவங்களை அறிந்த மன்னனாம்-மன்னனைப் போல் அதிகார உரிமை பெற்றவனாவான். திருட்டி-பார்வை, ஏந்திய சனி-ராசியில் அதன் பலத்தோடு நின்ற சனி பகவான்.

மகரச் சந்திரனை -

கண்டிடு மகரத்து இந்தை கணக்கனும் அரசனும் காணப்
பண்டிதன் சுக்கிரற்குப் பயில்குரு நரேந்திரனாவான்
மொண்டிக்குத் தனவானாவான் முனிரவி தரித்திரன் தான்
மண்டிய குசனும் பார்க்கில் பூபதியாகி வாழ்வன். 10

தொகுப்புரை:

காணப்படும் மகர ராசியிலுள்ள சந்திரனை, புதனும் குருவும் காணின் கல்வியில் பண்டிதனாவான். சுக்கிரன் காணின் பயிற்சி தருகின்ற ஆசிரியனாவான், மக்களில் இந்திரனைப் போன்றவனும்ஆவான். சனி காணின் செல்வவானாவான், சூரியன் காணின் தரித்திரனாக இருப்பான், (அவனோடு கூடிய) செவ்வாய் காணின் பூமியை உரிமையோடு ஆளுகின்றவனுமாவான். செவ்வாய் மட்டும் காணினும் பூபதியாகவே இருப்பவனாவான்.

அருஞ்சொற்பொருள்

இந்து-சந்திரன், கணக்கன்-புதன், நரேந்திரன்-மக்கள் தலைவன் மக்களில் இந்திரனைப் போன்றவன்,

மொண்டி-கால் ஊனமானவன் சனி, மண்டிய-சேர்ந்த.கூடிய, பூபதி-பூவுலகின் தலைவன், நிலங்களுக்கு உரிமையாளன், பெருநிலக்கிழார்.

கும்பச் சந்திரனை

வாழ்கும்பச் சசியை செட்டி காண பூபதியுமாவன்
நீள்குரு நோக்கில் பூமி நிருபர்போல் நீடு வாழ்வன்
சூழ்குசன் இரவி காரி சுக்கிரன் நால்வர் காணில்
தாழ்விலா பரதாரத்தில் தார்ப்பரியங்கள் உள்ளான். //

தொகுப்புரை:

வாழ்க்கையின் சிறப்பினைக் காண்பதற்குரிய கும்பராசியில் உள்ள சந்திரனை, புதன் பார்த்தால் நிலபுலன்களுக்கு அதிபதியாவான், குரு பார்த்தால் பூமியை ஆளுகின்ற அரசனைப் போல நீண்டகாலம் வாழ்வான், செவ்வாய் சூரியன் சனி சுக்கிரன் ஆகிய நால்வர் பார்த்தால் குறைவில்லாத பரதாரத்தினை ஏற்படுத்திக் கொள்ளும் செயல்களை உடையவனாக இருப்பான் என்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

சசி-சந்திரன், செட்டி-புதன், பூமி நிருபர்-பூமியை ஆளும் அரசன், குசன்-செவ்வாய், இரவி-சூரியன், காரி-சனி, தாழ்வலா-குறவைில்லாத, பரதாரம்-மற்றொரு மனைவி, தார்ப்பரியன்-அபிலாசையோடு கூடிய நடத்தைகள்

சூழ் குசன், இரவி, காரி, சுக்கிரன் நால்வர்காணின் என்று கூறப்பெறுவதில் சூழ் என்ற அடைமொழியைக் கொண்டு, இந்த நான்கு கிரகங்களில் தனித்தோ ஒன்றிரண்டு சேர்ந்தோ பார்ப்பதாயின் என்று அறிந்து அவற்றின் கூடிய வலிமையைக் கணக்கிட்டு பரதாரத்தின் முகாந்திரத்தினைக் கூறலாகுமென்று கருதலாம்.

மீனச் சந்திரனை

உள்ள மீனத்தில் இந்தை உறுபுந்தி கண்ட காலை
மெள்ளவே பிரியவாக்கி, வேந்தன், காண வேந்தேயாகும்
தெள்ளிய வெள்ளி காண பண்டிதன் செவ்வாய் வெய்யோன்
கள்ளமாம் காரி மூவர் காணவே பாவியாவான்

திருஷ்டி பலன் முற்றும்

தொகுப்புரை:

மீன ராசியில் உள்ள சந்திரனை புதன் காண்பதாயின் மென்மையான பிரியவசனனும் குரு காணின் அரசனைப் போன்ற உயர்வில் உள்ளவனும், சுக்கிரன் பார்ப்பதாயின் பண்டிதனும், செவ்வாய் சூரியன் சனி ஆகிய மூவரும் நோக்கில் பாவியும் ஆவான்.

அருஞ்சொற்பொருள்

இந்து-சந்திரன், புந்தி-புதன், பிரியவாக்கி-பிறர் பிரியப்படுமாறு பேசும் திறமை உள்ளவன், வேந்தன்-குரு, கள்ளமாம் காரி-கள்ளத்தன்மையை உடைய சனி, மூவர் காணவே-மூவரும் சேர்ந்தோதனித்தோ காண்பதாயின்

ஜனன காலத்தினைக் கொண்டு கணிக்கப்பட்டுள்ள இராசி சக்கரத்தில், ராசிகளில் நின்ற சந்திரனைப் பார்க்கும் கிரகங்களின் பார்வை அளவினைக் கொண்டு பலா பலன்களை உரைப்பதாகும். கிரகங்களின் இடப் பார்வை, அளவான வலிமை ஆகியவற்றைக் காணலாகும்.

அங்கிச பலன்

(இராசியில் கிரக, பாத சேர்க்கை)

அங்கிசை அறியும் தன்மை, அசுபதி முதல் மும்மூன்றாம்
பங்கும் ஒன்பது, ஓர் பங்கில் பாதமும் நான்கு தன்னில்
தங்கிய மேடராசிதான் முதல் மீனராசி மட்டும்
பொங்கிய பதியுள்ளோரை பொருளெனக் கண்டு கூறே. /

தொகுப்புரை:

அங்கிசை என்னும் இராசியில் நட்சத்திர பாகம் அணுகிய முறையினை அறிய வேண்டியது எப்படி யென்றால்,

அசுவினி முதல் ரேவதி வரையிலுமுள்ள 27 நட்சத்திரங்களையும், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன்,

குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களுக்கும், வரிசை முறைப்படி சமனளவில் பங்கிட்டுத்தர, ஒவ்வொருவருக்கும் நட்சத்திரம் மூன்று ஆகும். (9x3=27)

ஒவ்வொரு மூன்று நட்சத்திரங்களுக்கும், நட்சத்திரம் ஒன்றுக்கு பாதம் நான்காக, முறையே பன்னிரண்டு பாதமாக அமையும்.

அப்பன்னிரண்டு பாதங்களையும் மேட ராசி முதல் மீன ராசி வரையிலான பன்னிரண்டு ராசிகளுக்கும் முறையாகத் தந்த நிலையில்

சாதகன் பிறந்த நட்சத்திர பாகப்படி, உதித்த பாதபாகத்தையே ராசியாகவும், அந்த ராசிக்கு உடைய கிரகத்தையோ அந்த கிரகாம்சம் பெற்றதாக வந்துள்ள கிரகத்தையோ அங்கிசவான் என்னும் கிரகாங்கிச நுட்பத்தினை அறிந்து பலன் கூற வேண்டும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

அங்கிசை-இடச்சேர்க்கை, பங்கு-மும்மூன்றான பாகம், பொங்கிய பதி-மேல் தொடர்ந்த இராசி, உள்ளோரை-அந்த ராசியில் உள்ள கிரகத்தினை (இராசிக்கு உரியவனை என்றும் கூறுவர்.)

விளக்கம்:

ஒருவன் பிறந்த நட்சத்திரம் மகம் மூன்றாம் பாதம் என்று வைத்துக்கொள்வோம். இதற்கு அங்கிச உதயராசி அறிவது எப்படியெனில்

மகம் மூன்றாம் பாதம். மகம், பூரம், உத்திரம் மூன்றும் புதனுக்குரியவை. மூன்று நட்சத்திரத்திற்கும் உரிய பாதங்கள் பன்னிரண்டையும், மேட ராசி முதலாகத் தரும் போது, மகம் மூன்றாம் பாதம், மிதுன ராசிக்குரியதாக அமைகின்றது. அந்த வீட்டுக்குரியவன் புதன். எனவே, மகம் மூன்றாம் பாதத்திற்கு அங்கிச ராசி மிதுனம் என்பதும், அவ்வீட்டோன் அதில்

கிரகங்களின் பெயர்	1 சூரிய	2 சந்திர	3 செவ்	4 புதன்	5 குரு	6 சுக்கி	7 சனி	8 ராகு	9 கேது
நட்சத்திரங் களின் பாகுபாடு	அசு பர கார்	ரோகி மிருக திருவா	புனர் பூசம் ஆயில்	மகம் பூரம் உத்தி	அஸ்த சித்தி சுவா	விசாக அனு கேட்	மூல பூரா உ-ம்	திருவோ அவிட் சதய	பூரட் உத்திரட் ரேவதி
பாதம் 3X4=12	12	12	12	12	12	12	12	12	12

உள்ளோன் அங்கிசாம்சம் பெற்றவன் என்பதும் அங்கிச உதய ராசி மிதுனம் என்பதும் பெறப்படும்.

மேடம் லக்னமாகில் அந்த ராசியில் அடங்கிய அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ஆகிய 2¼ நட்சத்திரங்களுக்கும் பின்வரும் விதத்தில் நவாம்சம் அமையும்.

அச்வினி 1ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் மேஷம்
அச்வினி 2ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் ரிஷபம்
அச்வினி 3ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் மிதுனம்
அச்வினி 4ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் கடகம்
பரணி 1ல் ஜனனம் ஆகிய	நவாம்ச லக்னம் சிம்மம்
பரணி 2ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் கன்னி
பரணி 3ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் துலாம்
பரணி 4ல் ஜனனம் ஆகிய	நவாம்சலக்னம் விருச்சிகம்
கார்த்திகை 1ம்	தனுசு

இவ்வாறு மேடராசியின் ஒன்பது அம்சங்களையும் கணக்கிட வேண்டும். கிருத்திகை 2ம் பாதம் முதல் 4ம் பாதம் வரையில் மூன்று நட்சத்திரங்களும் ரோகிணி 4 நட்சத்திர பாதங்களும் மிருகசீர்சம் 2 பாகம் ஆக 9 நட்சத்திர பாகங்களில் ஜனித்தவர்களின் நவாம்ச லக்னம், கிருத்திகை 2ம் பாகம் முதல் (ரிஷபத்தில்) ஜனனமாகில் நவாம்ச லக்னம் (அம்ச லக்னம்) மகரம்.

3ம் பாகத்தில் ஆகில்	நவாம்ச லக்னம் கும்பம்
4ம் பாகத்தில் ஆகில்	நவாம்ச லக்னம் மீனம்
ரோகினி 1ல் ஆகில்	நவாம்ச லக்னம் மேஷம்

ரோகினி 2ல் ஆகில் நவாம்ச லக்னம் ரிஷபம்
ரோகினி 3ல் ஆகில் நவாம்ச லக்னம் மிதுனம்
ரோகினி 4ல் ஆகில் நவாம்ச லக்னம் கடகம்
மிருகசீர்ஷம் 1ல் ஆகில் நவாம்ச லக்னம் சிம்மம்
மிருகசீர்ஷம் 2ல் ஆகில் நவாம்ச லக்னம் கன்னி
மிருகசீர்ஷம் 3 முதல் புனர்பூசம் 3 பாதம் முடிய ஒன்பது நக்ஷத்திர பலன்களுக்கு நவாம்ச லக்னம்
மிருகசீர்ஷம் 3ல் நவாம்ச லக்னம் துலாம்
மிரிகசீர்ஷம் 4ல் நவாம்ச லக்னம் விருச்சிகம்
திருவாதிரை 1ல் நவாம்ச லக்னம் தனுசு
திருவாதிரை 2ம் பாகத்தில் நவாம்ச லக்னம் மகரம்
திருவாதிரை 3ம் பாகத்தில் நவாம்ச லக்னம் கும்பம்
திருவாதிரை 4ம் பாகத்தில் நவாம்ச லக்னம் மீனம்
புனர்பூசம் 1ம் பாகத்தில் நவாம்ச லக்னம் மேஷம்
புனர்பூசம் 2ம் பாகத்தில் நவாம்ச லக்னம் ரிஷபம்
புனர்பூசம் 3ம் பாகத்தில் நவாம்சலக்னம் மிதுனம்
புனர்பூசம் 4ம் பாகம் முதல் ஆயில்யம் 4ம் பாகம் வரையில்

9வது நட்சத்திரமும் நவாம்ச லக்னம்

புனர்பூசம் 4ம் பாகத்தில் ஜனித்திருப்பின் நவாம்ச லக்னம் கடகம்

பூசம் 1ம் பாகத்தில் நவாம்சலக்னம் சிம்மம்
பூசம் 2ம் பாகத்தில் நவாம்சலக்னம் கன்னி
பூசம் 3ம் பாகத்தில் நவாம்சலக்னம் துலாம்
பூசம் 4ல் நவாம்சலக்னம் விருச்சிகம்
ஆயில்யம் 1ம் பாகத்தில் நவாம்சலக்னம் தனுசு
ஆயில்யம் 2ம் பாகத்தில் நவாம்சலக்னம்மகரம்
ஆயில்யம் 3ம் பாகத்தில் நவாம்சலக்னம் கும்பம்
ஆயில்யம் 4ம் பாதத்தில் நவாம்சலக்னம் மீனம்

இவ்வாறே மகம் 1ம் பாகத்தில் பிறந்திருப்பின் நவாம்ச லக்னம் மேடம்

2ம் பாகத்தில் ரிஷபம்
3ம் பாகத்தில் மிதுனம்

4ம் பாகத்தில்	கடகம்
பூரம் 1ம் பாகத்தில்	சிம்மம்
பூரம் 2ம் பாகத்தில்	கன்னி
பூரம் 3ம் பாகத்தில்	துலாம்
பூரம் 4ம் பாகத்தில்	விருச்சிகம்
உத்திரம் 1ம் பாகத்தில்	தனுசு

என்று இந்த அடவில் நவாம்சம் காண்பதும் நல்லதே உண்டு

சூரியன் அங்கிசம்

உடையவனுக்கு உரிய அம்சங்கள்

கூறியதோர் இரவி அங்கிசம் தனக்குக் கோபி
கோலவிழி மெய்சிவப்பன் குலவு சுசியாளன்
தாறுடனே சுருண்டு நீண்டிருக்கும் மயிருடனும்
மிக வயிறு பருத்திருக்கும் சத்தியமொழி பேசிடுவன்
ஆறுதல யாத்திரைப் பிரியன் மோவாய் நீண்டிருப்பன்
அழகன் சினேகிதவான் வெகுபிள்ளை உள்ளவாம்
தேறுகலையுணர் ஞானி தியாகி சாந்தன்
சீமானாகுவன் பித்த தேகமுளன் தானே. 2

தொகுப்புரை:

சிறப்பாகச் சொல்லப்பட்ட சூரியன் அங்கிசத்தில் பிறந்தவனுடைய இயல்புத் தன்மைகளைக் கூறுவோமாயின்

கோபமுள்ளவன், அழகிய விழிகளுள்ளவன், உடல் நிறம் சிவப்பானவன், உறவாடி ரசித்து வருபவன், அடர்த்தியாக சுருண்டு நீண்டு இருக்கும் மயிரினை உடலில் பெற்றவன், பருத்த வயிருடையவன், சத்திய வார்த்தைகளைப் பேசுபவன், புனிதமான ஆறுகள் தெய்வத்தலங்கள் சிறப்பான இடங்கள் ஆகியவற்றிற்கு யாத்திரை செல்லப் பிரியப் படுபவன், மோவாய் நீண்டிருப்பவன், அழகுடையவன், சினேகிதத்திற்குச் சிறந்தவன், மிகுதியான பிள்ளைகளைப் பெற்றுள்ளவன், சிறந்த கலைகளை உணர்ந்தவன், ஞானத்தன்மை உடையவன், தியாகி, சாந்த குணமுள்ளவன், செல்வச்சீமானாவான், பித்த சரீரமுடையவன் என்றெலாம் கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்

இரவி-சூரியன், கோல விழி-அழகான விழிகள், மெய்-சரீரம், குலவு-உறவாடுதல், சுசி-பிரியம், தாறுடனே-நெருக்கமாகவே, மிகவயிறு-அளவிற்குமேலாகப் பெருத்த வயிறு, மோவாய்-மோவாய் கட்டை, அழகன்-தோற்ற அழகுடையவன், சினேகிதவான்-சினேகிதர்களை உடையவன், தேறு-தேர்ந்த, சிறந்த, ஞானி-அறிவில் தெளிவானவன், சீமான்-செல்வந்தன், பித்த தேகம்-பித்தம் அதிகரித்துள்ள சரீரம்.

கருத்துரை:

கோபம், சிவந்த விழி, தேகம், பிரியம், சுருட்டை ரோமம், பெரு வயிறு, நல்ல வார்த்தை, எதிலும் பிரியம், நீண்ட மோவாய், அழகு, நட்பு, தீர்க்க புத்தி, ஞானம், தியாகம், சாந்தம், செல்வன், பித்ததிரேகம், இவைகளை உடையவனாவான்.

சந்திரன் அங்கிசம்

உடையவனுக்குப் பொருந்திய அம்சங்கள்

உள்ளமதி வித்தை செல்வனாம் முகத்தில் மறுவும்
உறும் தீர்க்க சீவன் விழி சிறிய தெனவுரைக்கும்
தெள்ளிய நற்குணன் அழகன் சூரன் தியாகி
சினேகிதன் மந்தன் அறிவுகுன்றாதான் தீரன்
கள்ளமிலான் வாத சேத்தும ரோகதேகன்
கருத்துப்பின் இரக்கமுளோன் நீராடப் பிரியன்
எள்ளளவு மூடன் மோவாய் நீடுற இருப்பன்
இனிய சிரரோமம் நீண்டிருக்கும் கண்டாய்.

தொகுப்புரை:

கிரகங்களில் இரண்டாவதாகவுள்ள சந்திரனது அங்கிசத்தில் பிறந்தவன், கல்விமான், செல்வமுடையவன், முகத்தில் மறுவுடையவன், நீண்ட ஆயுளைப் பெற்றவன், சிறிய கண்களை உடையவன், தெளிவான நல்ல குணங்களை உடையவன், அழகுடையவன், தைரியமுடையவன், தியாகமுடையவன், சினேகிதமுடையவன், காலதாமதஞ்

செய்பவன், அறிவில் குறையாத தன்மை உடையவன், துணிவான செயலுடையவன், கள்ளத்தன்மை இல்லாதவன், வாதநோய் சேத்தும நோய் உள்ள தேகமுடையவன், முன் கோபம் செய்து பின் இரக்கப்படுபவன், நீராடுவதில் பிரியமுள்ளவன், சிறிதளவு மூடத்தன்மை உடையவன், மோவாய்க்கட்டை நீண்டதாக இருப்பவன், அழகிய தலைமயிருடையவன், நீண்டதாகவும் உள்ள அழகிய தலைமயிருடையவன் என்பன போன்ற இயல்புகளை உடையவனென்பதைக் காண்பாயாக.

அருஞ்சொற்பொருள்

மதி-சந்திரன், வித்தை-கல்வி, மறு-திரேகத்தில் இயற்கையாகத் தோன்றியுள்ள சிறு அடையாளம், தீர்க்க சீவன்-நிறைவான உயிர், வயது தெள்ளிய-தெளிவான, சூரன்-திறமையானவன், தீரன்-வெற்றியைக் காண்பவன், வாதம் -வாய்வால் வரும் நோய், சேத்துமம்-சிலேத்துமம், மூடன்-உள்ளவாறு அறியாதவன், மந்தன்-காலத்தில் செய்யாதவன், கருத்து-மாறானதாகச் செய்து, நீடுற-நீண்டதாக, சிரரோமம்-தலைமயிர், கண்டாய்-காண்பாயாக.

கருத்துரை:

கல்வி, செல்வம், மறு நிறைந்த வயது, சிறிய கண்கள், நற்குணம், அழகு, துணிவு, தியாகம், நட்பு, மந்தம், தீரம், மறைக்காமை, வாத சீதள ரோகம், முன் கோபம் பின் இரக்கம், நீராடல், சிறுமூடச்செயல், மோவாய் நீட்சி, தலைமயிர் நீட்சி, ஆகியவற்றைப் பெற்றிருப்பன்.

பிறந்த காலத்தில் சந்திரனது அங்கிசம் பொருந்திய சாதகர்க்கு மேலே கண்ட எல்லா அம்சங்களும் பொருந்தியதாகக் காணல் ஓரளவாகவே பொருந்தும், சில அம்சங்கள் அப்படியே பொருந்தியிருக்கும். மற்றவைகளுள் சிலவற்றின் சார்பான அம்சங்கள் பொருந்தியதாக இருக்கும் என்பதை யூகமாக அறிந்து கூறலாகும்.

செவ்வாய் அங்கிசம்

உடையவனுக்குப் பொருந்திய அம்சங்கள்

கண்ட செவ்வாய் கடுஞ்சொல்லன் பேடிரூபன்
கருதுமொழி திக்குவன் மெய் சிவலை கோபி
சண்டை விரும்புவன் அற்ப நிதி பித்த ரோகி
தரணி திரிந்திடுவன் சித்துணனே யாகும்
மிண்டிய வஞ்சகன் லோபி முதுகில் மறுவுடையோன்
வீரத்துவன் கிலேசன் தீரன் பிரகாசிப்பன்
கெண்டை விழி மானேகேள் துக்கமுள்ளான்
இழிவெஞ்சொல் பொறான் பொய்யான் கீர்த்தியானே. 4

தொகுப்புரை:

சந்திரனுடைய அங்கிசத்தில் பிறந்தவன், கடுமையான சொல்லை உடையவன், பேடி என்னும் ஆணாகப் பிறந்தும் பெண் போன்ற தோற்றமுடையவன், சொல்ல விரும்புவதைத் திக்கிச் சொல்பவன், சிவந்த திரேகமுடையவன், பித்த நோய் உள்ளவன், ஊர் திரியும் தன்மை உடையவன், தின்பண்டங்களை விரும்புபவன், சிறய அளவில் சாப்பிடுபவன், தொடர்ந்த வஞ்சகமுடையவன், கஞ்சத்தனமுடையவன், முதுகில் மறுவுடையவன், வீரதத்துவம் உடையவன், நிலையில்லாத தடுமாறும் சிந்தனை உடையவன், எதிலும் தீரமுடையவனாகப் பாராட்டப்பெறுபவன், துக்கமான மனதை உடையவன், பிறர் தன்னைப் பழித்துக் கூறும் கடுமையான சொற்களைப் பொறுக்காதவன், பொய் பேசாதவன், கீர்த்தியுடையவன் என்றெலாம் பெற்றவன் என கெண்டை மீனைப் போன்ற கண்களை உடைய பெண்ணே கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்

கண்ட செவ்வாய்-கிரகங்களுள் மூன்றாவதாகக் காணும் செவ்வாய், கடுஞ்சொல்-கொடிய சொல், பேடிரூபன்-ஆணும் பெண்ணும் கலந்த வடிவம், திக்குவன்-குழறலான முறையில் பேசுதல் உடையவன், சிவலை-சிவப்பு நிறம், அற்ப நிதி-சொற்பமான செல்வம், தரணி-தேசம், ஊர்,

சித்துணன்-சிறிதளவாகும் தின்பண்டங்களை உண்பவன், மிண்டிய-சேர்ந்த, லோபி-கருமி, கிலேசன்-கவலையோடு கூடிய துன்பம், பிரகாசிப்பன்-பலரறிய விளங்குவான், இழி-தாழ்ச்சியான, கேவலமான, பொறான்-பொறுக்க மாட்டான்.

கருத்துரை:

கடுஞ்சொல், பேடி வடிவம், குழறுவாய், சிவந்த மேனி, கோபம், சண்டை, விருப்பம், வஞ்சகம், கருமித்தனம், முதுகில் மச்சம், வீரசாகசம், கவலைத் துன்பம், தீரம், புகழ், வருத்தம், பழிசொல் பொறுக்காமை, பொய் சொல்லாமை, பெருந்தன்மை இவைகளை உடையவனாவான்.

புதன் அங்கிசம்

உடையவனுக்குப் பொருத்திய அம்சங்கள்

ஆனபுந்தி அங்கிசத்தான் தர்மசீலன் ஐசுவரியன்
வித்தை தருமம் அரிவையருக் கன்பன்
ஞானி இசைத்தமிழோன் பொய்யாத மொழியாளன்
நன்றி மறவான் கசம்போல் நடப்பன் செவ்வியனாம்
காணவித்தையறி ஞானன் பசுமையுள்ளான்
காரியம் சற்றும் வழுவான் கதித்த குணமுள்ளான்
மானமுடன் தேவர்களைச் சந்ததமும் தொழுவன்
மனதுதனில் அச்சமிலான் மகிழ்ச்சியுளனாகும். 5

தொகுப்புரை:

புதன் அங்கிசத்தில் பிறந்தவன், தர்மம் செய்வதில் உயர்ந்தவன், மிகுந்த செல்வமுடையவன், கல்விமான், தருமசீலன், பெண்களுக்குப் பிரியமானவன், ஞானத்தை உடையவன், தமிழிசைப்பாடலில் வல்லவன், பொய்யில்லாத சொற்களைப் பேசுபவன், ஒருவர் செய்த உதவியாகிய நன்றியை மறக்காதவன், யானையைப் போல் அசைந்து நடப்பவன், யாவரும் விரும்பும் தன்மையுடையவன், சங்கீத வித்தையினை அறிந்த ஞானவான், தோற்றத்திற்குப் பசுமையான கவர்ச்சியாக உள்ளவன். தான் மேற்கொண்ட காரியத்தில் வழுவாதவன்,

உத்தம குணமுடையவன், உண்மையான மனத்துடன் தெய்வங்களை எப்பொழுதும் துதிப்பவன், மனத்தில் அச்சமில்லாதவன், எப்பொழுதும் மகிழ்ச்சியுள்ளவன், ஆகிய இயல்புகளைப் பெற்றவனாவான்.

அருஞ்சொற்பொருள்

புந்தி-புதன், தர்மசீலன்-தர்மம் செய்வதில் உயர்ந்தவன், ஐசுவரியன்-நிறைந்த செல்வமுடையவன், அரிவையர்-பெண்கள், இசைத்தமிழோன்-தமிழிசையில் வல்ல தமிழன், கசம்-(கஜம்) யானை, கானம்-இசைச்சுரஞானம், பசுமை-வசீரகத்தோற்றம், கதத்த-மேலோங்கிய, மானமுடன்-உருக்கமுடன், சந்ததம்-எப்பொழுதும்.

கருத்துரை:

தருமன், செல்வந்தன், கல்வி, தருமம், பெண்களுக்கு இனிமை, ஞானி, இசைத்தமிழ்ப்புலவன், உண்மை பேசுதல், அழகு, காணவித்தை, நல்ல தோற்றம், காரியம் செய்தல், நற்குணம், தெய்வ பக்தி, அச்சமின்மை, மகிழ்ச்சி ஆகியவற்றை உடையவன்,

குரு அங்கிசம்

உடையவனுக்குப் பொருந்திய அம்சங்கள்

ஆகிய நல்வித்தையுளான் பொன்போலும் மெய்யன்
ஆண்பெறுவன் சிவந்தகண்ணன் அமைச்சனாவன்
வாகுசெறி கண்சிரோமங்களும் மேல்நோக்கும்
செல்வன் சுசிபரன் மாதவன் தூலதேகி.
மோகமுடன் நீராடி மோவாய் நீண்டிருப்பன்
மொழிமதுரன் விசிட்டமுள்ளோன் உயர்ஞானி அழகன்
போகமிகு சுகவான் நல்லறிவு உடையோன் விஞ்சையன்
பெரும் புத்தியுள்ள குருவங்கிஷத்தில் பிறந்தோன். 6

தொகுப்புரை:

குருவின் அங்கிச காலத்தில் பிறந்தவன், நல்ல கல்வி வித்தையினைக் கற்றவன், பொன் போன்ற நிறமுடைய தேகத்தைப் பெற்றவன், ஆண் பிள்ளைகளைப் பெறுபவன், சிவந்த கண்களை உடையவன், அமைச்சனாகக் கூடியவன், வாகு பொருந்திய கண் புருவ ரோமங்கள்

மேல்நோக்கியதாகவுள்ளவன், செல்வந்தன், எதனையும் ஆர்வமாக ரசிப்பவன், மிகுந்த தவபலன் உடையவன், பெருமித தேகமுள்ளவன், அதிக விருப்பமுடன் நீராடுபவன், மோவாய் நீண்டிருப்பவன். இனிய சொல்லை உடையவன், எல்லாம் அறிந்தவனாக இருப்பவன், உயர்ந்த ஞானி, அழகுள்ளவன், போக இச்சையில் மிகுந்து சுகம் பெறுபவன், நல்ல தீர்க்கமான அறிவுடையவன், பல அபூர்வ வித்தைகளைக் கற்றவன், மேலான அறிவுடை ஆசிரியர் மரபில் பிறந்தவன் ஆகிய இயல்புகளைப் பெற்வனாவான்.

அருஞ்சொற்பொருள்

நல்வித்தை-மேலான கல்வி, வாகு செறி-பொருத்த மான, கண்சிரோமம்-கண்புருவரோமம், சுசிபரன்- ஆர்வ முடன் அனுபவிப்பவன், தூலம்-பெருத்த, மதுரம்-இனிமை, விசிட்டம்-புதுமையானவை, விஞ்சை-புதுமையான கலைகள், வங்கிஷம்-வமிசம், குரு-ஆசிரியர்.

கருத்துரை:

உயர்கல்வி, பொன்மேனி, ஆண்வாரிசு, செங்கண், மந்திரி, மேலெழுந்த புருவரோமம், செல்வம், அனுபவித்தல், தவம், பெரிய சரீரம், நீராடுதல், நீண்ட மோவாய், இனிய சொல், எல்லாம் காணல், சிறந்த ஞானம், மிகுபோகசுகம், நல்லறிவு, புதுமை வித்தைகள் ஆசிரிய மரபு-ஆகியவற்றை உடையவனாவான்.

சுக்கிரன் அங்கிசம்

உடையவனுக்குப் பொருந்திய அம்சங்கள்

பிரபலனாகிய சுங்கன் அங்கிசத்தில் பிறந்தோன்
பெருந் தூலசரீரன் எழில்பெரும் செல்வமுடையான்
மறவான் செய்நன்றி உத்தமன் தருமன் சுகவான்
மகாசூரன் கல்வியுளன் மயிர் சுருண்ட சிரத்தோன்
நிறமுமிகு காந்தியுளன் தர்மம் சினேகன்
நிலவிய காலவளமையுள்ளான் நிகரிலா அழகன்
அறமுதலா போதவான் உறவுவிருப்புளனாம்
அன்பரும் திண்ணிய நன்றே அறிவார் நல்லோர். 7

தொகுப்புரை:

கிரகங்களில் சிறந்த ஆற்றல்களைப் பெற்ற சுக்கிரனது அங்கிசத்தில் பிறந்தவன், பெரிய தூல தேகமுள்ளவன், பலவகையாக விளங்கும் செல்வத்தினை உடையவன், ஒருவர் செய்த உதவியை மறவாதவன், மேலான குணங்களை உடையவன், தருமவான், சுகபோகமுடையவன், சிறந்த திறமை உடையவன், கல்வியில் மேலானவன், தலையில் சுருண்ட மயிருடையவன், நல்ல மேலான நிறத்துடன் கவர்ச்சியான தேகத்தினை உடையவன். தருமம் செய்பவன், சினேகத்திற்கு உகந்தவன், பொருத்தமாகிய காலங்களில் எல்லாவகையான மேன்மைகளையும் பெற்றுள்ளவன், ஒப்பில்லாத அழகுடையவன், தருமம் முதலான தத்துவங்களை போதிப்பவன், உறவு கொள்வதில் விருப்பமுள்ளவன், அன்புக்குரியவர்கள் இவனிடம் நன்றாகப் பொருந்தியுள்ள நன்மைகளை அறிவார்கள், இவற்றை கல்வியில் சிறந்தவர்கள் நன்றாக அறிவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பிரபலன்-விளக்கமானவன், சுங்கன்-சுக்கிரன், தூல சரீரன்-பெருத்த தேகமுடையவன், எழில்-அழகு, வளமை-உத்தமன்-மேலான பண்புள்ளவன், மகாசூரன்-மிகப்பெரிய திறமைசாலி, சிரம்-தலை, காலவளமை-பருவ கால வளர்ச்சி, நிகரிலா-ஒப்பில்லாத, போதவான்-போதிப்பவன், காந்தி-ஒளிரும் தன்மை, திண்ணிய-மிகவும் நெருங்கிப் பொருந்திய.

கருத்துரை:

பெருத்த தேகம், அதிக செல்வம், செய் நன்றி அறிதல், உத்தம குணம், தரும சிந்தனை, சுகபோகம், மிகுதிறமை , கவர்ச்சி, தருமம், நட்பு, காலவளர்ச்சி, மிகுந்த அழகு, தத்துவ போதகன், உறவு விருப்பம், அன்பருக்கினியன் ஆகியவற்றை உடையவனாவான்.

சனி அங்கிசம்

உடையவனுக்குப் பொருந்திய அம்சங்கள்

நல்ல சனி அங்கிசத்தான் கீர்த்தியில்லான்
நவில்வன் பொய் தள்ளாடி நடப்பன் கைவீசி
சொல்லிய மெய்க்குறளன் இராக்கத சூரூபன்
தொடை புறந்தாள் பெருத்திருக்கும் சோதி கரு நிறத்தோன்
அல்லலுறும் தரித்திரவான் இரக்கமில்லான்
அன்னம் மெத்தவும் பொசிப்பான் ஆடை உடை லோபி
வல்ல பெருந்தனம் நீலதேகம் அஞ்சாமனத்தன்
மனதிலே தயவு சற்றும் வைத்திடானே. 8

தொகுப்புரை:

நல்ல கிரகமாகிய சனி பகவானது அங்கிசத்தில் பிறந்தவன்-கீர்த்தியெனும் புகழ் இல்லாதவன், பொய் சொல்லுவான், கைகளை வீசியபடி தள்ளாடி நடப்பான், குறுகிய வடிவமுள்ளவன், (குள்ளன்) அரக்கனைப் போன்ற தோற்றமுடையவன், தொடைகள் புறங்கால்கள் பெருத்து பருத்திருப்பவன், நல்ல கருமையான நிறமுள்ளவன், அவதிப்படும் தரித்திரமுடையவன். இரக்கமில்லாதவன், மிக அதிகமாகச் சோறுதின்பவன், அற்பமான ஆடைகளை அணிபவன், மார்பு தனங்கள் வலிமையாகத் தோன்றும், கருநீல தேகம் உள்ளவன், எதற்கும் அஞ்சாதவன், மனத்தில் ஈவு இரக்கம் கொஞ்சம்கூட வைக்காதவன், ஆகிய இயல்புகளைப் பெற்றவனாவான்.

அருஞ்சொற்பொருள்

கீர்த்தி-புகழ், நவில்வன்-சொல்லுவான், மெய்க் குறளன்-உடம்பு குறுகியவன், சுரூபம்-விகார வடிவம், சோதி-ஒளிர், பொசிப்பான்-சாப்பிடுவான், லோபி-கஞ்சன், தயவு-இரக்கம், தேகம்-உடம்பு.

கருத்துரை:

புகழ் பெறாமை, பொய் பேசுதல், தள்ளாடி நடத்தல், குள்ளமான வடிவு, அரக்க தோற்றம், தொடை புறங்கால் பெருத்திருத்தல், பளிச்சிடும் கருமை நிறம், தரித்திரம், தொல்லைகள், இரக்கமின்மை, மிகுதியாக உண்ணுதல்,

அற்பமான ஆடைகள், வலியதனம், கருதேகம், அஞ்சாமனம், ஈவு இரக்கம் இல்லாமை ஆகிய இயல்புகளை உடையவனாவான்.

கிரகங்களின் அங்கிசத்தால் அறியும் பலன்கள் பாடலில் ஆண்களுக்குப் பொருந்தியதாகச் சொல்லப்பட்டுள்ளன, ஆயினும் அவற்றை பெண்களுக்கு ஏற்றதாக அமைத்துக்கொண்டு, தேர்ந்து சொல்ல வேண்டிய முறையில் அளவோடு கூறுதல் சிறப்புடையதாகும்.

பிறந்த இலக்கினத்தினால் அறியும் ஆயுள் காலப் பலன்கள்

மேடலக்கினம்

நாடிய மேட லக்கின பலன்தான்
ராசபூச்சியன், திரபுத்தி, நகை செய்வன், அடிமை
உயர்ந்த நெலிந்த மெய், தனமுளம், சமர்த்தன்
நீடிய தரும சாத்திரங் கேட்பன்
நீள்கழுத்தோன், நெறி வசனன், நிறை அழகுடையோன்
சத்தியவாதி இளைத்திடு முழந்தாள், நேர்படு மிருகமும் வதைப்பன்
பாடிய அஞ்சில் தீப்பயம், ஏழில்
பத்தினில் கரம், இருபதிலோர் வாய்க்காலில், மேவு வாய்நோய்
காது நோய் இரண்டு பத்திரண்டில் பாம்பால்
நேடிய ஐயைந்தினில் சல கண்டம்
செழித்த நாலேழில் பீளவை, சென்ம லக்கினத்தை
சுபகிரகங்கள் தரிசனை வயது நூறாண்டே. /

வசனம்

மார்கழி மாதம், பூரணையில், வியாழக்கிழமையும் ரோகணி நட்சத்திரமும் கூடிய இராத்திரி பத்து நாழிகையில் தலை வலியால் நிரியாணம்

பாடல்

மார்கழி பூரணை மன்னிய வியாழம்
ஏர்பெறு ரோகணி இரவொரு பத்தாம்
சீர்பெறு கடிகையில் சேர்தலை நோயால்
நேர்பெறப் புகல்வர் நிரியாண மென்றே.

தொகுப்புரை:

மேட லக்கினத்தில் பிறந்தவனது ஆயுட்கால நிகழ்ச்சிகள் வருமாறு. அரசால் மதிக்கப்பெறுதல், திடமான புத்தியுடமை, நகைத்தல், அடிமை, உயர்ந்த நலிந்த திரேகம், செல்வமுடைமை, சாமார்த்தியம், தரும சாத்திரங்களைக் கேட்டல், நீண்ட கழுத்து, சத்தியவசனம், நிறைவான அழகு, சத்தியம் பேசுதல், இளைத்த முழந்தாள்கள், எதிர்ப்பட்ட மிருகத்தை வதைத்தல் ஆகியவற்றைப் பெற்றவனாக இருப்பன், இவனது,

ஐந்தாம் வயதில் தீயால் பயம், ஏழாம் வயதிலும் பத்தாம் வயதிலும் சுரநோயால் பயம், இருபதாம் வயதில் வாய்க்காலில் அபாயம், வாயில் நோய், காது நோய் ஏற்படுதல், இருபத்திரண்டாம் வயதில் பாம்பால் கண்டம், இருபத்து ஐந்தாம் வயதில் ஜல கண்டம், இருபத்தெட்டாம் வயதில் பிளவை நோய் ஆகியவை ஏற்படும்.

சென்ம லக்கினத்தை சுபகிரகங்கள் பார்த்தால் வயது நூறு ஆண்டாகும்.

இந்த லக்கினத்தான், மேற்சொல்லிய நிறை வயதளவில், மார்கழி மாதத்தில், பௌர்ணமி திதியும் ரோகணி நட்சத்திரமும் கூடிய வியாழக்கிழமை இரவு பத்து நாழிகைக்குள் தலைநோயால் மரணமாவானென்று பெரியோர் சொல்லுவர்.

குறிப்பு:- ஜனன லக்கினத்தைக் கொண்டு ஒருவனுடைய ஆயுள் கால பலன்களைச் சொல்லுவதாக இப்பாடல் விளக்கம் தருகின்றது. ஆயினும்

ஜனன லக்கின ராசிக்குரிய கிரகத்தின் நிலைகளுடன், ஜனன லக்கினத்தில் அப்பொழுது உள்ள கிரகத்தின் நிலைகளையும், லக்கின ராசிக்குரியவன் சென்றுள்ள ராசி

இடத்தின் பலன்களையும், அந்த ராசியையும் லக்கின ராசியையும் பார்க்கும் கிரகங்களால் ஏற்படும் பலன்களையும், கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், நீச்சம், பகை இவற்றால் அறியப்பெறும் பலாபலன்களுடன், அக்காலத்தில் நிகழும் தசாபுத்திகளால் அறியப்பெறும் பலன்களையும், ஒரு சேர கவனமுடன் பார்த்தறிந்து கொண்டு

மேலே சொல்லியுள்ள மேட ராசி லக்கினமானதற்குக் கூறியுள்ள பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஆயுள் பலன்களை, ஒப்பிட்டுப் பார்த்தறிந்து, பொருத்த மானவற்றைத் திட்டமாகவும், மற்றவற்றைப் பொதுவாகவும் கவனமுடன் எடுத்துரைத்தல் வழக்காகும்.

இவ்வாறே, தொடரும் இராசி லக்கினங்களுக்குரிய பலன்களையும் பொருத்திப் பார்ப்பது முறைமையாகும்.

இடப லக்கினம்

ஆண்டிடும் இடப லக்கினம் பரமர்க்கு
அன்புறுபூசை சத்தியவான் அற்ப போசனவான்
தூலதேகத்தின் அடிமையாளன் புளிப்பிரியன்
வேண்டிய கணிதன் வஸ்திராபரணன்
மெல்லிய செவியினன் திரபுத்தி விரும்பி குழவிபோல்
விளையாடி வெற்றியாய் பிறர் பொருளை கொள்வன்
தூண்டிடும் இருமலுள்ளன் பெறும் மைந்தர்
சொல் விரும்புவன், வயதஞ்சில் சுசிபயம் கழுத்தில்
பிணி பதினாறில் துலங்கு பத்தொன்பதில் இருமல்
தாண்டிய இருபதுடன் இருபத்தேழு
தன்னிலே சுரம் சுபகிரகத்தானுமே பார்க்க வயது
எழுபத்தேழு தரையினில் வாழ்ந்தினிதிருப்பன். 2

வசனம்

இந்த லக்கினத்தான், ஆவணி மாதம், சுக்கில பட்சம் திரயோதசியில், உத்திராட நட்சத்திரம் கூடிய திங்கள்கிழமை சாயங்காலம், சுர நோயினால் நிரியாணம் பெறுவான்.

பாடல்

ஆவணி முற்பக்கத் திரயோதசி
மேவுநல் லுத்திராடமும் திங்கள்
தாவறு சாயங்கால வேளையினில்
ஓவறு சுரத்தால் நிரியாண முறுமே.

தொகுப்புரை:

இடப லக்கினத்தில் பிறந்தவனுக்குரிய ஆயுள் காலப் பலன்களாவன:

அன்புடன் பூசை செய்தல், சத்தியம் பேசுதல், அற்பமான உணவு சாப்பிடுதல், பெருத்த தேகம், அடிமை ஆட்களை உடைமை, புளிப்பில் பிரியம், வேண்டிய கணக்குகளில் வல்லமை, பட்டாடை, ஆபரணங்களில் பிரியம், மென்மையான காதுகள், புத்தியுடமை, தான் விரும்பிய குழந்தையைப்போல் விளையாடும் தன்மை, விருப்புடன் பிறர் பொருளைக் கொள்ளுதல், தொண்டையில் மருவித்தூண்டும் இருமலை உடைமை, தனது பிள்ளைகளின் சொற்களைக் கேட்பதில் விருப்பம் ஆகியவற்றைப் பெற்றவனாக இருப்பதோடு

ஐந்தாம் வயதில் நெருப்பினாலும், பதினாறாம் வயதில் கழுத்தில் கட்டியாலும், பத்தொன்பதாம் வயதில் ஈளை இருமலினாலும், இருபது இருபத்தேழாம் வயதுகளில் சுரநோயாலும் பயம் உண்டாதலோடு, ஜனன லக்கினத்தை சுபகிரகங்கள் பார்த்தால் எழுபது வருஷம் வாழ்ந்திருந்து, ஆவணி மாதம் வளர்பிறை திரயோதசி திதி, உத்திராட நட்சத்திரம் கூடிய திங்கள் கிழமை சாயுங்காலத்தில் சுரநோயினால் நலிந்த நிலையில் மரணமாவான் என்று கூறப்பெறும்.

மிதுன லக்கினம்

இனியதோர் மிதுனபலன் புகழுடையோன்
இலச்சையுமுளான் வெகு கவடி இயலுமாசாரபரன்
இரு சொல்லன் இயற்றுவன் விரதம் நல்வசனன்
புனிதமாய்த் தனது காரியம் பார்ப்பான்
பொருந்திய பித்தரோகியுமாம் பொருந்திடும் சாமள
வண்ண மெய்யாளன் புகலும் மூன்றில் அபமிருத்தாம்
நன்றியும் ஓரைந்தில் அக்கினி பயமாம்
நாலிரண்டில் ஆயுதபீடை நன்னிய பத்தில் சத்துரு
பயமாம் நாடும் ஈரொன்பதில் வாதம்
தனிமையாம் இருபத்தெட்டினில் கண்ணோய்
தரும் சுபகிரகமே பார்க்கில் தக்கதோர் வருடம்
அறுபதும் ஐந்தும் தரையினில் இருப்பனென்றுரைப்பர். 3

வசனம்

ஆவணிமாதம், சுக்கில பக்ஷத்தில் சதுர்த்தசியில், வெள்ளிக்கிழமையில், திருவோண நட்சத்திரத்தில் இரவு காலத்தில் பதினான்கு நாழிகைக்குமேல் மார்பு நோயால் மரணமாவானென்று அறிஞர் கூறுவார்கள்.

பாடல்

சிங்கமதி முற்பக்கச் சதுர்த்தசி
பொங்கு வெள்ளி புணரு திருவோணத்தில்
மங்குல் பன்னான்கின் மார்பு நோயாலே
தங்கு நிரியாணம் எனச் சாற்றே.

தொகுப்புரை:

மிதுன லக்கினத்தில் பிறந்தவனுடைய பலன்களாவன:

புகழ்பெறுதல், கூச்சப்படுதல், மிகுந்த கபடம், முடிந்த அளவில் ஆசாரம், இருவிதச் சொல், விரதம் நோற்றல், நன்றாகப் பேசுதல், நல்ல முறையில் தனது காரியங்களைப் பார்த்தல், நிலையான பித்தரோகம், பொருந்திய வெளிர் நீல தேகம், மெய் பேசுதல் ஆகிய தன்மைகளுடன்,

மூன்றாம் வயதில் அபாயத்தால் மரணபயம், ஐந்தாம் வயதில் நெருப்பால் பயம், எட்டாம் வயதில் ஆயுதத்தால்

தீங்கும், பத்தாம் வயதில் பகையாளியால் தீங்கும், பதினெட்டாம் வயதில் வாத நோயும், இருபத்தெட்டாம் வயதில் கண்ணோயும் நிகழ்வதாகும்.

மிதுன லக்கினத்தைச் சுபகிரகங்கள் பார்த்தால், அறுபத்தைந்து வயது சீவித்திருப்பான். இறுதிக் காலத்தில்

ஆவணி மாதம் சுக்கிலபட்சத்தில், சதுர்த்தசி திதியில், திருவோண நட்சத்திரம் கூடிய வெள்ளிக்கிழமையில், இரவு ஆதினான்கு நாழிகைக்கு மேல் மார்பு நோயால் மரணமாவான் என்று கூறப்பெறும்.

கடக லக்கினம்

உரைசெறி கடக லக்கின பலன்கள்
உடலமே சிவப்புள்ள சமத்தன் உரமொடு நடப்பன்
வேசையர் கமனன் உயர் நவதானிய தனவான்
குரு விசுவாசன் பிதாவினுக்கிசையான்
குறிமறு கண்டிடா விடத்தில் கூறுவர் சிலநாள்
தரித்திரன், வயதும் குலவிய ஐந்தில் ஈரெட்டில்
இருபதில் இருபத்தைந்தில் இந்நாளில்
எய்திடும் பயமிருத்திகளும் இனியகோள் சன்ம
லக்கினம் பார்க்கில் இருந்து தொண்ணூறு மட்டும் உலகில்
பரவிய மாசி சுக்கில பட்சம்
பஞ்சமி புந்திவாரத்தில் பண்பொடு மிருக சீரிட
நடுவதனில் பரமபதம் அடைந்திடுவன். 4

தொகுப்புரை:

நல்ல இராசி என்று சொல்லப்படும் கடக ராசியில் பிறந்தவன் பெறும் பலன்களாவன:

சிவந்தமேனி, சாமார்த்தியம், அழுத்தமான கால்நடை, வேசையர் பழக்கம், உயர்ந்த உளுந்து பயிறு முதலான நவதானியத்தால் செல்வம், குருவிடத்தில் விசுவாசம், தந்தை சொல் கேளாமை, கண்ணால் பார்க்க முடியாத அங்கத்தில் மறு மச்சம், கொஞ்சநாள் தரித்திரம் முதலானவற்றை உடையவனாக இருப்பவனாவான்.

இவனுடைய ஐந்தாம் வயதிலும், 16, 20, 25 ஆம் வயதுகளிலும் எதிர்பாராமல் ஏற்படும் ஆபத்துகளினாலும் மரணபயம் ஏற்படும்.

பிறந்த கடகராசியை சுபகிரகங்கள் பார்த்தால் தொண்ணூறு வயது வரையில் வாழ்ந்திருப்பான்.

கடைசிகாலத்தில், மாசி மாதம், சுக்கில பட்சம், பஞ்சமி திதி, மிருகசீரிட நட்சத்திரம் கூடிய புதன்கிழமை, நட்சத்திர காலத்தின் நடுவில் மரணமாகி பரமபதம் அடைந்திடுவான்.

சிம்ம லக்கினம்

அடைவொடு சிங்க லக்கினப் பலன்கள்
சாலவும்புசித்திடுவன்அர்ச்சனைபுரிவன்தரும
சிந்தனையினான்அனுதினம்பெரும்பசியாளன்
திடமுறும்பத்தில்வியாதிவந்தவுடனே
தீர்ந்திடும்தொழில்செய்பிரியன்செப்புமோர்அஞ்சு
பத்துஇருபத்தேழ்செறிவயதில்சுரம்வந்து
புடைதனில்மருவிமுப்பதுநாளும்
போனபின்தீரும்லக்கினத்தை புண்ணியர்காணில்எண்பது
வயதும்பூமியிலிருந்துபங்குனியில்
வடவறும்அமரபக்கபாட்டிமையில்
மன்னும்அத்தத்தில்வெள்ளிநண்பகலில்மதிநதிமுடித்த
சடையன்பொற்பாதத்தில்வாழ்வான்என்றுஓதுமாதவரே. 5

தொகுப்புரை:

சிங்க லக்கினத்தில் பிறந்தவன் பலன்களாவன:

மிகுதியாகச்சாப்பிடுதல், அர்ச்சனைகள்செய்தல், தருமசிந்தனை, தினமும் பெரும் பசியாளனாக இருத்தல், பத்தாம் வயதில் நோய் வந்து உடனே தீர்ந்திடுதல், தொழில் செய்வதில் விருப்பம், ஐந்து, பத்து, இருபத்தேழு ஆகிய வயதுகளில் சுரநோய் உண்டாகி உடலில் ஒரு பாரிச நோயுடனிருந்து முப்பது நாள் சென்ற பின்னர் சுகமாதல்,

இவனது லக்கினமாகிய சிங்கலக்கினத்தை, சுபகிரகங்கள் பார்த்தால் எண்பது வயது வரையில் பூமியில் வாழ்ந்து, பங்குனி மாதம் அமரபட்சம் பாட்டிமையில் அந்த நட்சத்திரம் கூடிய வெள்ளிக்கிழமை நண்பகலில் சிவனடி சேர்ந்து வாழ்வான் என்பதாம்.

கன்னி லக்கினம்

மாதெனும் கன்னி லக்கினபலன்கள், மகிழ் தருமன்
தரித்திரவான் மாசில் ஆசாரமுள்ள பல தருமவகை
அறிந்திடுவன் பின் வயதில்
மீதெனும் தனங்கள் தேடுவன் ஐந்தில் விளங்கிய
அக்கினிப் பயமாம் விளங்கிய பத்தில் சுரம்
பதினெட்டில் மேவிடு அம்மை நோய் என்ப
மேவு நல்லோர் எய்தினும் காணினும் வயது
எழுபத்தேழினில் திருந்தும் வையாசியினில் குறைபக்கத்தினில்
சதுர்த்தசி தன்னில் இசைந்திடும் சித்திரை நாளில்
கோதுறு குன்மவியாதியினால் குறி
நிரியாணமே யாகும் குலவு சர்க்கரை கற்கண்டு
தேன்போல் கூறுசொற்கொவ்வைவாய் கொடியே 6

தொகுப்புரை:

கன்னி லக்கினத்தில் பிறந்தவனுக்குரிய பலன்கள்:

மகிழ்ச்சி, தருமம் செய்தல், தரித்திரமாதல், குற்றமில்லாத ஆசாரமுடையனாதல், பலவகை தருமங்களை அறிதல், பிற்பட்ட வயதில் செல்வத்தினைச் சம்பாதித்தல்.

ஐந்தாம் வயதில் தீயால் மரணபயம், நன்றாக விளங்கிய பத்தாவது வயதில் சுரம் கண்டு நோதல், பதினெட்டாம் வயதினில் அம்மைநோயால் துன்பப்படுதல் ஆகியவற்றைப் பெறுபவனாக இருப்பான்.

சுபகிரகங்கள் லக்கினத்தைச் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஏழுபத்தேழு வயதுடையவனாக இருப்பான். எழுபத்தேழாம் வயதில், வைகாசி மாதம், தேய்பிறை சதுர்த்தியில் சித்திரை நட்சத்திரம் கூடிய நாளில் வயிற்றுக் குன்ம நோயால் மரணமாவான் என்பதை, சர்க்கரை கற்கண்டு தேன் கூட்டியதைப் போன்ற சொற்களையும் கோவைப்பழம் போன்ற வாய் இதழினையும் கொடி போன்ற சாயலையும் உடைய பெண்ணே அறிந்து கூறுவாயாக.

துலாம் லக்கினம்

கொடியனாம் காரிக்கு உச்சனாம் துலாத்தோன்
குறித்திடு மனைவியர் இருவோர் குமரர்கள்
குல அபிமானி கூறு சம்பத்துள தனவான்
படியில் வாழ் மன்னர்க்கு இனிய நற் தகவான்
பரிமள கந்த பூப்பிரியன் பந்துக்களுடையன்
தரும சிந்தனையினான் பரவும் ஏழாண்டில் நோய் தீயால்
கடிய ஈராறாண்டில் விகுழி பத்தொன்பான்
கருதலரால் பகையுளதே கண்டதோர் இருபத்தெட்டில்
கண்டம் கருது நாற்பத்திரண்டினிலும்
நெடிய நல்லோர்கள் லக்கினம் காண
எண்பதோடைந்துமே நின்று தேள் குறை திதி ஆறில் நிறை
கதிர் வாரம் விருத்தி யோகத்தில் நீளுதயத்தில் நீங்குவனே. 7

தொகுப்புரை:

கொடியவனாகிய சனிக்கு உச்ச ராசி இடமாகிய துலாம் ராசியில் பிறந்தவனுக்கு உரிய பலன்களாவன:

இரண்டு மனைவியர் உண்டு, பிள்ளைகள் உண்டு, குல அபிமானி, சொல்லக்கூடிய அளவில் பொன் பொருளாகிய சொத்துக்களை உடையவன், நாட்டினை ஆட்சி செய்யும் மன்னருக்கு இனியனும் தகுதி பெற்றவனுமாவான், மணமிகுந்த வாசனை திரவியங்கள் மலர்கள் ஆகியவற்றில் பிரியமுள்ளவன், உறவினர்களை உடையவன், தருமம் செய்யும் மனமுடையவன், இவனுக்கு

ஏழாவது வயதில் தீயினால் நோயும், பன்னிரண்டாம் வயதில் அம்மை நோயும், பத்தொன்பதாம் வயதில் கொடியவரால் பகையும் உண்டாகும். காணப்பட்ட இருபத்தெட்டாம் வயதில் உயிருக்கு கண்டம் ஏற்பட்டு நீங்கும். இவ்வாறான கொடிய தீங்கு வயது நாற்பத்திரண்டிலும் ஏற்படலாகும்.

சுபகிரகங்கள் லக்கினத்தைப் பார்க்கக் கூடிய வயது எண்பத்தைந்து வரை நிகழும், கார்த்திகை மாதம், தேய்பிறை, சஷ்டி திதி, ஞாயிற்றுக்கிழமை, விருத்தியோகத்தில், அதிகாலையில் மரணம் ஏற்படும் என்பர்.

விருச்சிக லக்கினம்

நீங்கருந் தேளாம் லக்கின பலன்கள்
நேசனாம் தந்தை தாயிடத்தில் நித்தமும் மனைவியரிடத்துப்
பிரியன் நிரந்தரம் இனிய சொற்பகர்வன்
பாங்குடன் தொடுத்த காரியம் முடிப்பன்
பரவு நாலாண்டினில் கழுத்தில் பயிலும் நோய் ஐந்தில்
களங்களீரைந்தில் பன்னிரண்டில் பதினெட்டில்
ஓங்கு அக்கினியில் பயம் நாற்பதில் உற்ற
சன்னிவாதம் வெஞ்சுரங்கள் உத்தமர் சென்ம லக்கினம்
காணில் ஒருபது குறை நூறாண்டு
தீங்குறும் ஆனி சுக்கில பட்சத்தில்
துவாதசி சனிக்கிழமை திகழ் விசாகத்தில் அந்தி வேளையில்
திண்ணமாய் வரும் நிரியாணம். 8

தொகுப்புரை:

விருச்சிக லக்கினத்தில் பிறந்தவனுக்குரிய பலன்களாவன:

தந்தை தாயிடத்தில் நேசம், மனைவியிடத்தில் பிரியம், இனிய சொல் பேசுதல், எடுத்த காரியத்தினைப் பாங்குடன் முடித்தல் உடையவனாவன்.

நான்காவது வயதில் கழுத்தில் நோய், ஐந்தில் மார்பில் நோய், பத்து பன்னிரண்டு, பதினெட்டு ஆகிய வயதுகளில் மிகுந்த நெருப்பால் பயம், நாற்பதாவது வயதில் சன்னி வாதத்துடன் கொடிய சுரம் ஏற்படும்.

சுபகிரகங்கள் சென்ம லக்கினத்தைப் பார்த்தால் தொண்ணூறாண்டு வாழ்வான். ஆனி மாதம் சுக்கில பட்சத்தில் துவாதசியும் விசாக நட்சத்திரமும் கூடிய சனிக்கிழமை சாயங்கால வேளையில் மரணமாவான்.

தனுசு லக்கினம்

ஆணியெனும் தனுசு லக்கின பலன் மூத்தானுக்கும்
அணி இளையோர் இருவருக்கும் அஞ்சுவான், புகழோன்
பேணிய நற்பேசுவான் சத்துருவை அறிவான் பெரிது
வித்தையின் வயதில் பெருஞ் செல்வம் பெறுவான்,

நாணி அச்சப்படுவன் நடுவயதிலே தான்
நான்முன்றில் பதினைந்தில் நாலெட்டில் நாற்பான்
காணும் நேத்திரரோகம் அஞ்சும் சுபர்காண
எழுபத்தேழாம் கருது நெரியானமென கற்றபடி கூறே. 9

தொகுப்புரை:

தனுசு லக்கினத்தில் பிறந்தவனது ஆயுட்கால பலன்களாவன:

தனக்கு மூத்தோனுக்கும் இளையவர்களுக்கும், அஞ்சுகின்ற தன்மை, புகழுடையவன், விரும்பியநல்ல போகமுடையவன், தனக்கு மாறுபட்ட சத்துருவை நன்றாக அறிந்து கொள்பவன், பெரிய கல்வி வித்தைகளால் வாலிப வயதில் பெரும் செல்வத்தைப் பெறுபவன். குறைகளுக்கு நாணி அச்சப்படுபவன், மத்திம வயதில் சிறப்பாக இருப்பவன்.

இவனது 12, 15, 32, 40 ஆகிய வயதுகளில் கண்நோய்கள் ஏற்பட்டு குணமாகும். லக்கினராசியை சுபகிரகங்கள் பார்த்தால் வயது எழுபத்தேழாகும். விரிச்சிக லக்கினத்தான் பொல, எழுபத்தேழாவது வயதில் மரணமாவான் என்று அறிஞர் கூறுவர்.

மகர லக்கினம்

கண்ட சுறா லக்கினம் காணாவிடத்தில் மறுவாம்
கண்கள் நீண்டிருக்கும் கமழ் மலர்ப் பிரியன்
மண்டு திரிபுத்தி அபிமானி சுகபலவான்
வணம் சிவலை பட்சிகொல்வான் மனையாளுக்கினியன்
மிண்டு துயரான் பத்தாண்டில் சுரம் நாலெட்
டாண்டில் விதேசகமனன் முப்பத்தேழ் சர்ப்பபயம்
பண்டு சுபக்கோள் நோக்க வயது அறுபத்தேழு
பாரிடத்தில் உறைவனென்ப தறிந்து உரை செய்வாரே. 10

தொகுப்புரை:

மகர லக்கினத்தில் பிறந்தவனுக்குரிய பலன்கள்:

சரீரத்தில் காணாத இடத்தில் மறு இருக்கும், கண்கள் நீண்டிருக்கும், மணமுள்ள மலர்களில் பிரியம், சேரும்

மாறுபட்ட [illegible]கள், யாவரிடத்தும் அபிமானம், நல்ல திரேக பலம், சிவந்த நிறம், பறவைகளைக் கொல்லுதல், மனைவிக்கு இனிமை, அதிக வருத்தம் ஆகியவற்றை உடையவன்.

இவனது பத்தாவது வயதில் சுரநோய், முப்பத்திரண்டாம் வயதில் தேசப் பிரயாணம், முப்பத்தேழாம் வயதில் பாம்பால் விஷ பயம் ஏற்படும்.

இலக்கினத்தை சுபக்கிரகங்கள் பார்த்தால் வயது அறுபத்தேழாகும் என்ற விபரங்களை அறிந்து சொல்லுவார்கள்.

பூசமாதம் குறைபக்கம் பஞ்சமி
ஆதில் உத்திரட்டாதி அருக்கன் நாள்
வீசு காலையில் மென்கொன்றை சூடிய
தேசிகன் அடி சேர்வது திண்ணமே.

மகர லக்கினத்தில் பிறந்தவன், அறுபத்தேழாவது வயதில் தை மாதம் தேய்பிறை பஞ்சமிதிதியில், உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமை காலையில் சிவபெருமான் திருவடிகளை அடைவான் என்பர்.

கும்ப லக்கினம்

பரிந்த கும்ப லக்கினத்தான் தன்னையே புகழ்வான்
பழிப்பன் மற்றோர் தம்மை குள்ளன் அற்ப வித்தை
தெரிந்த பித்த சரீரவான் செய்நன்றி மறப்பன்
செங்கண்ணன் சுகமுள்ளான் ஸ்திரீகளுக்கு நண்பன்
பொருந்து பதினோராண்டில் சுரமாம் பத்தொன்பான்
புரிந்த சளிவாத சுரம் புண்ணியர் பார்த்தருளின்
அருந்தும் வயது எண்பது சித்திரை ஐந்தாம் திதியில்
ஆதிரை பொன் வாரத்தில் அந்தி நேரமடைவான் / /

தொகுப்புரை:

கும்ப லக்கினத்தில் பிறந்தவனுக்குரிய ஆயுள்காலப் பலன்களாவன:

தன்னையே புகழ்ந்து பேசுபவன், பிறரை இகழ்ந்து பேசுவான், குள்ளமானவன், அற்ப கல்வியும் வித்தையும்

உடையவன், தெரியும்படியான பித்தரோக சரீரமுடையவன், ஒருவர் செய்த உபகாரத்தை மறப்பவன், சிவந்த கண்களை உடையவன், சுகமான வாழ்க்கையில் இருப்பவன், பெண்களுக்கு நண்பனாக இருப்பவன், ஆவான்.

இவனது பதினோராம் வயதில் சுரநோயால் துன்புறுவன், பத்தொன்பதாம் வயதில் மிகவும் சளிவாத சுரத்தினால் அவதிப்படுவான்.

பிறந்த சென்மலக்கினத்தை குரு போன்ற புண்ணிய கிரகங்கள் பார்த்தால், இவன் அனுபவிக்க வேண்டிய வயது எண்பது ஆகும்.

இவண் சித்திரை மாதம், பஞ்சமிதிதியும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய வியாழக்கிழமை அந்தி நேரத்தில் மரணமடைவான் என்று சோதிட கணிப்பால் கூறுவார்கள்.

மீன லக்கினம்

அந்தமுறு மீனலக்கினத்தான் தனவான் சூரன்
அழகிய மெய்யன் ஞானி அகோரி இருதாரன்
கந்த மலர்ப்பிரியன் தண்கண் கிருபையாளன்
காதுநோய் பிறருடமைக்கு ஆசிப்பன் கண்டெழுந்து சமையத்தில்
முந்து சமயத்து அன்பன் பல்லூண் அருந்து மூர்க்கன்
முன் நான்கில் இருபதினில் மூளும் மிகச்சுரமே
நொந்து இருமல் எழுநான்கில் சுபக்கோ[illegible]க்கிடினே
நூறாண்டு நுவல் கும்பத்து அடைவே. 12

தொகுப்புரை:

மீன லக்கினத்தில் பிறந்தவனுடைய பலன்களாவன:

செல்வமுடையவன், சூரன், அழகான தேகத்தை உடையவன், ஞானமுள்ளவன், மிகுந்த கோபமுள்ளவன், இரண்டு மனைவிகளை உடையவன், மணமுள்ள மலர்களில்

பிரியன், குளிர்ந்த கண்களை உடையவன், பிறரிடத்தில் கிருபை செய்பவன், காதுநோய் உள்ளவன், பிறர் பொருளின் மேல் பிரியம் கொள்பவன், நல்லோரை கண்ட நேரத்தில் எழுந்து மரியாதை செய்பவன், முற்பட்ட தெய்வ சமயத்தினிடத்து அன்பு செலுத்துபவன், பலவகையான உணவுகளைப் புசிப்பவன், பிடிவாதத் தன்மையில் மூர்க்கனாக இருப்பவன் ஆவான்.

இவனது பன்னிரண்டாவது இருபதாவது வயதில் ஏற்படும் கடுமையான சுரத்தினால் பாதிக்கப்பட்டு நலம் பெறுவான். இருபத்து எட்டாவது வயதில் இருமல் நோயினால் நலிந்து தேறுவான். இவனுக்குரிய மீன லக்கினத்தை சுபகிரகங்கள் பார்க்குமானால் நூறாண்டு வாழ்வான். கும்ப லக்கினத்தானைப் போல கடைசி நாள் இவனுக்கு ஏற்படும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

இலக்கினத்தில் கிரகங்கள் நின்ற பலன்

சூரியன் சந்திரன் லக்கினத்தில் நின்ற பலன்

லக்கினத்து இரவி நிற்கில் நாடிய சிவந்தரூபன்
தொக்கவே நீண்ட மெய்யன் உஷ்ட்டனன் பித்தரோகி
மிக்கவே சசிக்கு இளைத்த மெய்யன் மூச்சதிகன் துய்யன்
தக்கநல் வசனன் புத்தித்தகுவன் பிறர்க்கின்பவானாவான். /

தொகுப்புரை:

ஒரு பிறந்த கால லக்கின ராசியிடத்தில் சூரியன் நின்றால், நல்ல சிவந்த மேனியன், அவயவங்கள் நன்றாக அமைந்த நெட்டையானவன் உஷ்ணமான சரீரன், பித்தரோகமுடையவன் ஆவான்.

சந்திரன் இருந்தால், இளைத்த சரீரம் உடையவன், மூச்சு அதிகமாக சுவாசிப்பவன், தூய்மையானவன், தகுதியான நல்ல சொற்களைப் பேசுபவன், தகுந்த புத்தியை உடையவன், மற்றவர்கள் மெச்சும்படி நல்லவனாக இருப்பான்.

இத்தகைய குணங்களையும் தன்மைகளையும் லக்கினத்தில் சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்கள் இருக்கப் பிறந்தவனிடத்துப் பொருந்தியிருக்கும்.

செவ்வாய் லக்கினத்தில் நின்ற பலன்

குசன்உறில்பித்ததேகம்கூறுமுன்கோபிநல்ல
வசனன்சிரேட்டனாவன்வாய்ஈச்சுக்கொட்ட லொத்த
அசனன்நல்லுதரம்தூலமாகும்மெய்யிளைத்திருப்பன்
இசையும்மெல்லெனநகைப்பன்இதயசஞ்சலனாவானே. 2

தொகுப்புரை:

செவ்வாய் லக்கினத்தில் இருந்தால், பித்ததேகம், உடையவன், பதிலைக் கேட்பதற்கு முன்னர் கோபிப்பவன், நல்ல முறையில் வார்த்தையாடுபவன், வாயால் இச்சுக்கொட்டலைப் போன்ற அற்பமான சிரிப்புடையவன், நல்ல வயிறு பெருத்திருப்பவன், சில காலம் தேகம் இளைத்தபடி இருப்பவன், எதனையும் ஏற்றுக் கொள்ளும் பாங்கில் மெல்லென சிரிப்பவன், மனத்தில் சஞ்சலம் கொண்டவனாக இருப்பவன் என்ற தன்மைகளை உடையவனாக இருப்பான்.

புதன், குரு லக்கினத்தில் நின்ற பலன்

பண்புடன்புந்திநிற்கில்பரிகாசவசனம்சொல்வான்
நண்பொடுபிரிய வாக்கிநாடிய ரோகமெய்யான்
விண்குரு தூலதேகம்மெய்யில்சேத்துமரோகத்தான்
கண்தலைமயிர்மேல்நோக்கும்காட்சிமெய்சிகப்புத்தானே.

தொகுப்புரை:

இலக்கினத்தில் புதன் நிற்கப்பிறந்தவன், பரிகாசமாக வசனங்களைப் பேசுபவனும், நட்பு கொண்டவரிடம் பிரயமாகப் பேசுபவனும் விரும்பிய செயலால் சரீரத்தில் ரோகமுடையவனும் ஆவான்.

வானத்தில் திகழும் குரு, இலக்கினத்தில் இருந்தால், சற்று பெருத்த தேகமுடையவனும், உடம்பு முழுவதும் நீர் ரோகமுடையவனும், கண் புருவம் தலை ஆகியவற்றின் மயிர்மேல் நோக்கி இருப்பது போன்ற காட்சியாக இருப்பவனும், சிவந்த மேனியுடையவனுமாவான்.

சுக்கிரன், சனி லக்கினத்தில் நின்ற பலன்

சுக்கிரன் நிற்கில் காந்த சரீரவான் சுகவான் பித்தம்
ஒக்கவே வாதரோகி உருமயிர் கருஞ்சுருட்டை
மிக்கதோர் மணிக்கு நீண்ட மெய்க் கிருசன் கைவீசி
தக்கதோர் அனதனமெய் நீலக்கண்ணன் தள்ளாடியாமே. 4

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சுக்கிரன் நிற்கப் பிறந்தவன், அழகும் கவர்ச்சியுமுடை சரீரமுடையவன், சுகமுடையவன், பித்தரோகம் கூடிய வாதரோகியாக இருப்பவன், காட்சியான மயிர்கள் கருமையாகவும் சுருட்டையாகவும் இருப்பவன், ஆவான்.

மிகப்பெரிய சனி லக்கினத்தில் நிற்கப் பிறந்தவன், நெட்டையான உருவில் மலைபோன்று இருப்பவன், தக்க முறையில் மதிப்பமைந்த ஆபரணத்தினை அணிந் திருப்பவன், நீல நிறமுடைய கண்களை உடையவன், தள்ளாடியபடி நடப்பவன் ஆவான்.

சந்திர லக்கினத்தால் பெறும் பலன்கள்

சந்திர லக்கின பலன்கள்தான் உணருங் காலை
சந்திரன் மெய்ப்பலனறியும் தகைமை தனைக் கேளீர்
எந்த நாளிலும் சசி பெண்கலை நிறைந்தால் ஆணாம்
எழில் நிறைந்த மதிபார்க்க விரும்பு பத்தாமிடத்தில்
வந்த குற்றம் தீருமவை எப்படித்தான் எண்ணில்
மனுநீதி அரசனும்தன் மாநிலத்து உற்றவரைச்
சிந்தை மகிழ்ந்து அருள்புரியும் செயலது போல வந்த
தீதகலும் மதிப்பார்வை சிறந்துள்ளோர்க்கே. 1

தொகுப்புரை:

சந்திரன் செனன காலத்தில் நின்ற சந்திரா லக்கினத்தால் அறியும் பலன்களைக் காண்போமானால், சந்திரனால் உண்மையாக நிகழும் பலன்களை அறிந்து கொள்ளும் முறைமையினைக் கேட்பீர்களாக.

எந்த நாளானாலும் சந்திரன் பெண்கலையாக நிறைந்திருந்தாலும் அப்பொழுது பிறக்கும் குழந்தை ஆணாகும், மற்றும் அழகு நிறைந்த சந்திரனானவன் விருப்புடன் பார்க்கும் பத்தாமிடத்தினால் வரும் குற்றங்கள் எப்படிப்பட்டதாயினும் அவை மாற்றமாகத் தீர்வு பெறும்.

இது எவ்வாறு நிகழுகின்றது என்று எண்ணிப் பார்த்தால் மனுநீதியோடு தனது மக்களை ஆட்சி செய்யும் அரசன், தனது நாட்டு மக்களுக்கு வரும் தீங்குகளைப் போக்கி, மனம் மகிழ்ந்து அருள் செய்யும் செயலைப் போன்று

சந்திரனுடைய பார்வை சிறந்துள்ள சாதகனுக்கு வந்த தீமைகள் யாவும் அகன்று நன்மை உண்டாகும்.

விளக்கவுரை:

ஆசிரியர், முன்னர் சென்ம லக்கினத்தில் நின்ற சந்திரனால் பெறும் பொதுப்பலன்களைக் கூறியுள்ளார், எனவே இப்பாடலால் சந்திரன் ஜெனன கால நட்சத்திரத்திற்குரிய ராசியில் நின்ற சந்திராலக்கினத்தினைக் கொண்டு அறியும் நுட்பமான பலன்களை விளக்கமாகக் கூறுகின்றார் என்பது அறிதற்காகும். இத்தகைய வேறுபாட்டினை அறிந்து கொள்வதற்கென்றே, ஆசிரியர் இப்பாடலின் தொடக்கத்தினை சந்திரலக்கின பலன்தான் என்று புலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருவருடைய செனன காலத்தினைக் கொண்டு பஞ்சாங்க விபரங்களை விளக்கமாகக் கண்டு, கணக்கிட்டு

எழுதப்பெறும் இராசி சக்கரத்தில் இரண்டு ராசி இடங்களும், இரண்டு கிரகங்களும் முக்கியமானவைகளாகக் கருதப்பெறும். அவை சென்மலக்கின ராசியிடம் சந்திரன் அக்காலத்தில் நின்ற ராசியிடம், கிரகங்களில் சூரியனும், சந்திரனும் இரண்டு கண்களாக அமையும், எனவேதான் சென்மம் லக்கினத்தினை விதியென்றும், சந்திரா லக்கினத்தை மதியென்றும் கூறுதல் சோதிட வழக்கு. இதில் மதி நின்ற ராசியை மதித்து லக்கினமாகக் கொண்டு மற்ற ராசிகளுக்குரிய பலாபலனைக்காணும் முறைமை பொதுவழக்காகவும், ஓரளவு பலன்களைத் தருவதாகவும் பின்பற்றப்படுகின்றது. சந்திரனுடைய பார்வை 12ராசிகளுக்கும் செல்லும் என்ற நுட்பம் இப்பாடலால் விளக்கப் பெறுகிறது.

சந்திரனால் பலன்-தொடர்ச்சி 1

உள்ளபடி கலைகுறைந்த மதியானாலும்
ஒன்னார் வீட்டினும் வியம் எட்டுடன் ஆறாமிடத்தும்
மெள்ளெனநின்றிடில் பொன் கேந்திரத்திலுற்றால்
வெண்மதி குற்றம் தீரும் விதம் எவ்வாறெண்ணில்
கள்ளவிழும் பசுந்துழாய் மாலவன்பாலன்பர்க்கு
கனபாவம் தவிர்த்தின்பம் காட்டுதல் போலாகும்
தெள்ளிய நல்லோர் பார்வைபெற்ற சசிகுற்றம்
செங்கருடன் கண்ட விடமெனத் தீர்த்திடுமே. 2

தொகுப்புரை:

ஒருவனுடைய சாதகக் கணிப்பில் உள்ளபடியே தேய்பிறைச்சந்திரன் குற்றம் பெற்றிருந்தாலும் பகைவர் வீட்டிலும் பன்னிரண்டு எட்டு ஆறாம் இடங்களாகிய விரையம், ஆயுள், ரோகம் ஆகிய பலன்களுக்குரிய இடங்களில் ஏதாவதொன்றில் இருந்தாலும், அந்த சந்திரனுக்குக் குருவானவன் கேந்திரத்தில் இருந்தால், அவரது பத்தாவது அருள் நோக்கால் பாபியாகி இருந்த சந்திரன் சுபனாகி நல்ல சுப பாக்கியங்களைச் செய்வான்.

அது எப்படியென்றால், தேன் நிறைந்து விழும் பசுமையான துளப மாலையினை அணிந்துள்ளவனாகிய திருமால், தனது அடியார்களாகிய அன்பர்களுக்கு ஏற்படும் மிகுந்த பாவங்களை எல்லாம் போக்கி நல்ல சுகங்களைக் காட்டுதல் போன்றதாகும்.

மேலும், தேய்பிறைக் குறைவினால் பாபியான சந்திரன் சுபகிரகத்தின் தெளிவான பார்வையினைப் பெற்றால், சுபகிரகத்தின் தன்மையினைப் பெற்று நல்லன செய்வான். எதைப் போல என்றால், செந்நிறமுடைய கருடனால் பார்க்கப்பட்ட பாம்பின் விடம் மாறி நலமாகுமோ அதைப் போன்றதாகும்.

சந்திரனால் பலன்- தொடர்ச்சி-2

தீர்ந்த குற்றமில்லாத மதியுளதாய்ப் பிறந்தோன்
சீலனைவைத்திருக்கச் செய்வானது தன்னில்
நேர்ந்து இடைமாது இன்பக்கொழு நன்மேல் வாஞ்சை
நின்றது போல் ஏற்கும் நேசமதிக்குண்டே
கூர்ந்து கலை நிறைந்த மதி மேடத்தில் நிற்கில்
குற்றமிலார் அம்மதியைக் கூசாமல் பார்க்கின்
ஆர்ந்த சிறுவன் தனக்கே ஆறெட்டாண்டென்றே
அறைவர் சோதிடத்துத் துண்மை அறிந்தோரே. 3

தொகுப்புரை:

குற்றம் தீர்ந்த வளர்பிறைச் சந்திரன் இயங்கும் காலத்தில் பிறந்தவன், சீவனோடு வாழ்ந்திருக்கச் செய்யும் தன்மை அந்த சுப சந்திரனுக்கு உண்டாகும்.

அது எப்படியென்றால், சிவபெருமானது இடது பாகத்தில் சக்தியாகிய உமாதேவியானவள் இருந்து, தனது இன்பக் கணவனிடத்தில் மிகுந்த வாஞ்சை வைத்திருப்பதைப் போல்

கலை நிறைந்த சந்திரன் மேடராசியில் இருக்க, சுபகிரகங்கள் அந்த சந்திரனைப் பார்த்தால், சந்திரனது பார்வையால் பிற ராசிகளினால் காணும் குற்றம் நீங்க, சாதகன் 48ஆண்டளவும் வாழ்ந்திருப்பான் என்று, சோதிடக் கலையின் உண்மையினை அறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சந்திர லக்கினம் - விதிமுறை

சந்திரன் இருந்த வீடு சந்திர லக்கினம் ஆகும். இன்னும் ஒருவிதம், உதயாதி நாழிகை அஞ்சு அஞ்சாக கழிக்க-மேட முதலாக எண்ணிப் பார்த்து கண்டது சந்திராலக்கினம்.

சந்திரா லக்கின பலன் முற்றும்

சிலர் சந்திரன் இருக்கும் வீடே சந்திராலக்கினம் என்பர். ஆனால், சென்ன காலத்தில் சென்ற நாழிகையை மேடம் முதலாக ராசிகளுக்கு ஐந்தைந்தாகக் கொடுத்து வருகின்ற மிச்சம் பொருந்திய வீடே சந்திராலக்கினமென்று சிலர் சொல்லுவார்கள்.

பாடல்

சந்திரன் இருந்த வீடு சந்திர லக்கினம் என்பர்
அந்தமான் சில்லோர் சென்ற நாழியை இராசியொன்றுக்கு
குந்தியே ஐந்தைந்தாகக் கொடுத்துவந்திட்ட மிச்சம்
முந்திய மேடமாதி எண்ணியே மொழிவர் சில்லோர்.

முக்குணவேளை - அறிதல்

வேளைகள் அறியத் திங்கள் வியாழன் சாத்விகமாகும்
நீளும் சுக்கிரன் செவ்வாய்க்கு நின்ற ராசதமேயாகும்
வாளைநேர் கண்ணாய் புந்திமந்தன் செங்கதிர் வாரந்தான்
நாளும் தாமதமாங்களை நாழிகை நான்க தாமே. 1

தொகுப்புரை:

திங்கள், வியாழன் சாத்விக வேளையும், வெள்ளி, செவ்வாய் ராஜஸ வேளையும், புதன், சனி, ஞாயிறு தாமஸ வேளையும் காலை நான்கு நாழிகை அளவும் இருக்கும்.

சாத்விக வேளையில் பிறந்தவனுக்குரிய பலன்

பரவு சாத்விக வேளைக்குப் பளிங்கு காண் நிறமுமுள்ளான்
விரவு நல்லறிவு புத்தி விதரண ஞானமுண்டாம்
குரவர்மேல் பத்தியுள்ளான் கொடுமைசேர் துன்பமில்லான்
விரவுறு இன்பமெல்லாம் வரும் அவன்தனக்கு மாதே. 2

தொகுப்புரை:

சொல்லப்பட்ட சாத்விக காலத்தில் பிறந்தவன், பளிங்கு நிறத்தனும், நல்லறிவும், புத்தியும், உத்தமமான யோசனையும், ஞானமும் உள்ளவன், ஆசிரியர் இடத்தில் மிகவும் பக்தியுள்ளவன், கொடுமை சேர்ந்த துன்பமில்லாதவனும் ஆவான். இவனுக்கு பலவகையான இன்பங்களெல்லாம் வரும் என்று பெண்ணே அறிவாயாக.

இராசச வேளையில் பிறந்தவனுக்குரிய பலன்

அன்பு ராசத வேளைக்கே செனித்தவன் அறிவுமுள்ளவன்
இன்பத்திலாசைப்பற்று இயலும் நல்லுரைக் கர்பாளன்
பொன்புவிகலைகளிந்தப் புவிக்கு உபகாரமுள்ளான்
துன்பம் அற்று அரசநீதி செலுத்துவோன் சுகமுள்ளான். 3

தொகுப்புரை:

இராசத, (ராஜஸ) குண காலத்தில் பிறந்தவன் அறிவு உள்ளவனும், இன்பத்தில் ஆசையும் பற்றும் உள்ளவனும், இயன்ற அளவில் நல்ல செய்திகளைக் கற்பவனும், பொன், மண், கலைகள் ஆகியவற்றைப் பெற்றும் கற்றும் மக்களுக்கு உபகாரியாக இருப்பவன், துன்பம், இல்லாமல் நீதியாய் அரசு செலுத்துவோனும் சுகமுள்ளவனுமாவான்.

தாமச வேளையில் பிறந்தவனுக்குரிய பலன்

வலிய தாமச வேளைக்குள் வந்து சென்மித்தான் செய்கை
பொலிவன் நித்திரை எப்போதும் புரிந்துளான் பொய்யே சொல்வான்
நலியவே மயக்கம் சோம்பு நண்ணிய மந்தனாவான்
பலகலை அறிவுமில்லான் பாவ சிந்தனையனேயாவன். 4

தொகுப்புரை:

தாமச குண காலத்தில் பிறந்தவன் செய்கையைச் சொல்லுவோமானால், எப்போதும் தூங்கு மூஞ்சியாக இருப்பவனும், பொய்யை சாதுரியமாகப் புரிந்து சொல்பவனும், உடம்பை நலிவிக்கும் மயக்கம்

சோம்பேறித்தனம், ஆகியவற்றுடன் மந்த புத்தி உடையவனும் பல கலை கல்வி ஆகியவற்றில் அறிவு இல்லாதவனும் பாவம் செய்யும் சிந்தனை உள்ளவனும் ஆவான்.

வேளையின் உட்பிரிவுப் பலன்

(சாத்விகம்)

இருந்து சாத்விகத்தில் சாத்விகம் துறவு சாந்தி
வருத்திடாவகை உற்சாகி, மற்றதில் ராசசம் தான்
திருத்திய தான சிந்தை சிறந்திடும் சாந்தமுள்ளான்
பொருந்திய தாமதத்தான் போதவே மந்தனாவான்.

தொகுப்புரை:

சாத்வீக வேளையின் உள்பிரிவான சாத்விக குண காலத்தில் பிறந்தவன், துறவியும், சாந்த குணமுடையவனும், பிறரை வருத்தாத வகையில் தான் உற்சாகமுடையவனும் ஆவான்.

சாத்வீகத்தில் ராசஸகுணத்தில் பிறந்தவன், தருமியும் சிறந்த சாந்த குணம் உடையவனுமாவான்.

சாத்வீகத்தில் தாமச குணத்தில் பிறந்தவன், மிகவும் மந்த புத்தி உடையவனாக இருப்பான்.

(ராசசம்)

தக்க ராசசத்தில் ராசஸம் பெறின் தருமனாகும்
ஒக்கவே அதனில் தாமதம் பெறில் இகழ்ச்சியுள்ளான்
சிக்கெனப் பாவம் செய்யும் சிந்தையனாவன் கண்டீர்
மிக்க சாத்வீகமாயின் மெய்ஞானம் இரக்கம் உண்டாம். 6

தொகுப்புரை:

தக்க ராசசத்தில் ராசச குண காலத்தில் பிறந்தவன், தருமம் செய்பவன், அதில் தாமத காலத்தில் பிறந்தவன், இகழ்ச்சியுடையவன், நினைத்தபடி பாவம் செய்யும் சிந்தனையுடையவன்.

அதில் சாத்வீகத்தில் பிறந்தவன், மெய்ஞ்ஞானியும், இரக்கமுள்ளவனும் ஆவான்.

(தாமதம்)

ஈறு தாமதத்தில் தாமதம் பயம் இகழ்ச்சி பாவம்
கூறு நித்திரை மயக்கம் குரித்ததில் ஆசை யாவன்
வேறு ராசதம் களிப்பு வெகுளி உண்ணாதது உண்டல்
சிறு சாத்வீகம் செவ்வை அறிவின்றி வருத்தம் செய்யும்.

தொகுப்புரை:

தாமதத்தில் தாமத குண காலத்தில் பிறந்தவன், பயம், இகழ்ச்சி, பாவம், தூக்கம், மயக்கம் பார்த்ததில் நினைத்ததில் ஆசை இவைகளுள்ளவனும்,

தாமதத்தில் ராட்சதனாயின், மகிழ்ச்சி, கோபம், பிறர் சாப்பிடாததைச் சாப்பிடுதல் இவைகளுள்ளவனும்,

தாமதத்தில் சாத்விகனாயின் முழுமையான அறிவில்லாததினால் வருத்தமுடையவனும் ஆவார்கள்.

வேளைகளறியும்படி பார்த்துக் கொள்ளவும்.

கிரகங்களின் உச்ச ராசிப் பலன்கள்

உச்சமெனநவக்கிரகம் இருக்கும் வண்மை
உணர்ந்தறியும் படி மேடகத்துறையும் வெய்யோன்
மெச்சும் இடபத்தில் சந்திரன் மகரச் செவ்வாய்
விரவியதோர் கன்னிதனில் மேவியநற்புதனும்
அச்சமறக் கடகத்தில் அரசனும் வந்திருக்க
அணிமீனராசிதனில் அமர்ந்திடும் சுக்கிரனும்
வச்சிரமாம் துலாம் தனில் காரியெனும் கோளும்
வந்திருந்தால் உச்சமெனவே வழுத்தலாமே. /

தொகுப்புரை:

கிரகங்கள் வளமையுடன் உச்சம் பெற்று நின்று பலன்தரும் ராசிகளை உணர்ந்து யாவரும் அறியும்படியாகச் சொல்வோமானால்,

மேடராசியில்-சூரியனும், இடப ராசியில்-சந்திரனும், மகரராசியில்-செவ்வாயும், கன்னிராசியில்-புதனும்

கடகராசியில்-குருவும், மீனராசியில்-சுக்கிரனும், துலாம் ராசியில்-சனியும்.

வந்திருந்தால் உச்சம் பெற்றவர்கள் என்று சொல்லலாகும்.

உச்சம் பெற்ற சூரியன் சந்திரன் கிரக பலன்

வழுத்திய செங்கதிர் உச்சம்பெற உதித்தோன்தானும்
மன்னவனாம் பிரதாபசாலி மகாபலவான்
பழித்தருளும் நோயுமில்லான் தனதானியம் உள்ளோன்
பலவித வாகனன் உடலில் பழுதுகளும் இல்லான்
செழித்திடு சந்திரன் உச்சம் சுருவேசன் பிரியன்
செல்வகுணம் புத்தி நவதானியமும் சேரும்
விழித்து மயலளித்து மனமுருகனுக்கு மாதர்
வெகுபேரைப் புணரும் வெகுபோகியாகும்.

தொகுப்புரை:

சூரியன் உச்சம் பெற்ற சாதகம் உடையவன், அரசனும் புகழ்பெற்றவனும் மகாபலசாலியும், அற்பமான நோயும் இல்லாதவனும், தனதானியம் ஆகிய செல்வமுள்ளவனும், பலவகை வாகனங்களை உடையவனும், உடம்பில் எத்தகைய குறையும் இல்லாதவனும் ஆவான்.

சந்திரன் உச்சம் பெற்றிருந்தால் கடவுள் பக்தி உடையவனும், செல்வத்தால் செழிப்பான குணமுடையவனும், புத்தியவடையவனும், நவதானியமுடையவனும், பெண்கள் பலரைப் புணரும் மிகுந்த போகமுள்ளவனும் ஆவான்.

செவ்வாய், புதன்
உச்சத்தால் பலன்-தொடர்ச்சி

ஆகும் செவ்வாய் உச்சம் கீர்த்தி பிறர்க்கினியவான்
அவனிதனில் நெடுங்காலம் ஆயுசு பெற்றிருப்பன்
வாகு மகற்பிரதாபி திரவியங்களுள்ளான்
மருவுமிகு புத்திமான் மன்னவனாய் இருப்பன்

மோகமுறு புதனுச்சம் சகல கலை வல்லன்
முறைமை செறி சங்கீதப் பிரியன் வெகுதனவான்
சேகரமாம் புத்திமான் சாத்திரங்கள் வல்லன்
திண்புவிக்கோ ராசன் நூறாண்டிருக்கும் சீமான். 3

தொகுப்புரை:

செவ்வாய் கிரகம் உச்சம் பெற்ற சாதகன் கீர்த்தியுள்ளவன், பிறருக்கு இனிய நல்லவன், பூமியில் நெடுங்காலம் ஆயுசு பெற்று இருப்பான், வாரிசான மகனாகி தகப்பன் பாட்டன் தேடிவைத்த சொத்துக்களுக்கு உரிமை பெற்றிருப்பான், பொருத்தம் மிகுந்த புத்திமான், அரசதத்துவம் உடையவன் ஆவான்.

புதன் கிரகம் உச்சம் பெற்றவன், சகல கலைகளிலும் வல்லவனாக இருப்பன், முறைமை, பொருந்திய சங்கீதத்தில் பிரியமுள்ளவன், மிகுந்த செல்வமுடையவன், பல செய்திகளை அறிந்து மனத்தில் வைத்துள்ள புத்திமான் சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்த வல்லவன், நாட்டில் அரசனைப்போல் இருப்பவன், வயது நூறாண்டு வாழும் செல்வச் சீமான் ஆவான்.

குரு, சுக்கிரன், சனி
உச்சத்தால் பெறும் பலன்

ஆம் அரசன் உச்சத்தில் வெகு சம்பத்து உள்ளான்
அரசன் மிகு போகவான் அணிதனமு முள்ளான்
காமராசனாம் வனிதை வாகனம் வித்தை புதல்வர்
கனமாக மருவும் உபகாரனாக இருப்பன்
பூமலி சுக்கிரன் உச்சம் சந்தானம் வித்தை
புதல்வரால் பேர் மிகவு முள்ளான், காரி உச்சம்
ஏமம் ஆரோக்கியம் தீர்க்காயுள் நல்மைந்தன்
இனிய கிராமம் சேனை இவைகளுண்டாமே. 4

தொகுப்புரை:

குரு உச்சம் பெற்ற சாதகன், மிகுந்த செல்வம் பெற்றிருப்பவன், அரச தகுதி உள்ளவன், மிகுந்த சுகபோகங்களை அனுபவிப்பவன், தான் அனுபவித்தற்குரிய

பலவகையான செல்வமுடையவன், காமலீலையில் மன்னனாம், பெண்கள், வாகனங்கள், பலவகைக் கல்வி வித்தைகள், பிள்ளைகள் ஆகியவை மிகுதியாகத் தன்னைச் சேர்ந்திருக்க அவற்றை வளர்ப்பவனாக இருப்பவன்.

சுக்கிரன் உச்சம் பெற்றவன், வாரிசான பிள்ளைகள், கல்வி வித்தைகள், பிள்ளைகளால் நல்ல பெயர், மிகவும் பெற்றவனாக இருப்பான்.

சனி உச்சம் பெற்றவன், பாதுகாப்புடையவன், நோயில்லாத நல்ல ஆரோக்கியமுடையவன், நிறைந்த வயது உள்ளவன், நல்ல பிள்ளைகளை உடையவன், தன்னை மதிக்கும் ஊர்மக்கள், பாதுகாக்கும் உதவியாளர் ஆகியவைகள் இவனுக்குப் பொருந்தியவைகளாக உண்டாகும்.

கிரகங்கள் ஒன்று, பல-உச்ச பலன்

உள்ளதொரு கிரகம் உச்சமேவில் கிராமணியாம்
உபயம் உச்சம் பெறின் பலவூர்க் கிராமணியுமாவான்
தெள்ளியதோர் ஒருமூன்று கிரகம் உச்சமானால்
செங்கோல் மன்னவனாகி சிறிது அவனி புரப்பன்
நள்ளியதோர் ஈரிரண்டு கிரகம் உச்சமானால்
நவிலொரு மண்டலந்தனக்கு நாயகமேயாகும்
புள்ளிசெறி ஓரைந்து கிரகம் உச்சமானால்
பூலோக நாயகமாம் எனப்பலரும் புகழ்வர் தாமே. 5

தொகுப்புரை:

ஒருவனது சாதக ராசி மண்டலத்தில், ஒரு கிரகம் உச்சமாக இருந்தால், ஓர் ஊருக்கு கிராம அதிகாரியாவான்.

இரண்டு கிரகங்கள் உச்சமானால், பலவூர்களுக்குரிய கிராம அதிகாரியாவான்.

மூன்று கிரகங்கள் உச்சமாகி இருந்தால், குறித்து சொல்லப்படும் மண்டல அளவிலான நாட்டுத் தலைவனாக ஆட்சி செய்வான்.

ஐந்து கிரகங்கள் உச்சமானால், பெரிய நாட்டினை ஆட்சி செய்கின்ற அமைச்சர் தலைவர் போன்ற அதிகாரம் மிகுந்த பதவியுள்ளவனாவான், என்று பலரும் புகழ்ந்து கூறுவார்கள்.

சுபகிரகங்கள் நீசம், பகையானால்-பலன்

புகல்சனனகாலைதனில்சுபகிரகமெல்லாம்
பொருந்தியேநீசசத்துருராசிதனிலே
இகலாய்நின்றிடும்பலன்கள்உரைத்திடவும்கேள்
இருந்ததலந்தன்னைவிட்டுஏகுவிக்கும்தூரம்
விகலுற்றநாசமாம்பேணுதனம்முற்பவிக்கும்
மெய்யதனில்குரூரமாம்வியாதிகள்சம்பவிக்கும்
அகல்மரணதுக்கசோகங்களிவைசெறியும்
அனங்கண்டுசரநடைசொல்லானவிழியாளே. 6

தொகுப்புரை:

சொல்லப்படும் ஜனன கால ராசிச்சக்கரத்தில், சுபகிரகங்கள் எல்லாம், நீச ராசியிலும், சத்துரு ராசியிலும், பகையாய் நிற்பதனால் உண்டாகும் பலன்களைச் சொல்லுகின்றேன்.

அன்னப்பறவை உனது ஒய்யார நடையைப் பார்த்து சரநடை பயிலும் என்று புகழ்ந்து சொல்லப்படுவதற்கு உரித்தான நல்ல விழிகளை உடைய பெண்ணே கேட்பாயாக.

சாதகன் வாழ்ந்திருந்த இடத்தை விட்டு தூரமாகத் துரத்தும், குறைவுதரும் நாசங்கள் பலவுண்டாகும், சேர்த்துவைத்த செல்வங்கள் வீணாகப்போகும், உடம்பில் மிகக் கொடிய வியாதிகள் ஏற்படும். உயிர் நீங்கலாகிய மரணதுக்கமும், மனத்தளர்ச்சியும் ஆகியவை தொடர்ந்து ஏற்படலாகும் என்பதாம்.

கிரக மாலிகா யோக பலன்
(அரியோகம்)

சனன லக்கின ராசிக்கு முன்னும் பின்னும் உள்ள ராசிகளில் வரிசையாக மாலைபோல் தொடர்ந்து கிரகங்கள்

இருந்தால் அதற்கேற்ப யோக பலன்கள் அமையும். எனவே அவ்வாறு கிரகங்கள் அமைந்துள்ளதனைக் கிரக மாலிகா யோகம் என்று கூறுவது வழக்கு.

எண்ணிய லக்கினங்கள் முதலேழு வீட்டில்
இடைவிடாமல் கிரக மாலிகை யென்ன
நண்ணிடில் வல்லரியோக பலன்கள் கூறின்
நலமுளான் உற்சாகி பரநீதி யாளன்
புண்ணிய சம்பன்னன் புத்தியுடைய கோமான்
புகழ் செறியும் பிரசங்கி வித்துவானாம்
திண்ணிய நற்குல விசேடன் நிபுணன் சீலன்
திறல் யோகவானென்றே செப்புவாரே. /

தொகுப்புரை:

எண்ணப்படுகின்ற 12 ராசிகளில், சனன லக்கின ராசி முதலாக, ஏழு ராசிவீடுகளில் இடைவிடாமல் கிரகங்கள் தொடர்ந்து இருந்தால் கிரக மாலிகை எனலாம்.

அவ்வாறு கிரகங்கள் அமைந்திருந்தால் வல்லரியோகம் (வல்ல ரியோகம் என்ற பெயருடைய பலன்கள் நிகழும்)

அப்பலன்களைக் கூறுவோமாயின், நன்மைகளை உடையவன், உற்சாகமுடையவன், மிகுந்த நீதிமான், புண்ணியங்கள் செய்பவன், அறிவுடைய தலைவன், புகழ் மிகுந்த பிரசங்கம் செய்பவன், கல்வியில் வித்துவான், திண்மையான நல்ல குலத்தில் விசேடமானவன், காரியத்தில் நிபுணன், நல்லொழுக்கமுடையவன், நிலைத்த யோகத்தை உடையவன் என்றே சொல்லுவார்கள்.

ஆறு வீடுகளில் - கிரக மாலிகை - பலன்

(சாதாமினியோகம்)

வாருலவு முலையாய் கேள் லக்கினங்கள் முதலா
மாறாமலே ஆறு வீட்டினில் கோளிருக்க
பாருலவும் சதாமினி யோகங்களெனப் பகரும்
பலன்கள் தனையே தெரிந்து பார்க்கும்போது

சீருலவு மன்னவனாம் சுகசரீரன் சீமான்
சினமிலான் கிருபையுள்ளான் சேர்ந்த பிரதாபன்
ஏருளவாக்கி இசைஞானவான் புத்திமானாம்
இனிய தயாபரன் நீதியென்றும் இயம்பும் கண்டீர். 2

தொகுப்புரை:

கச்சு அணிந்த நகில்களை உடைய பெண்ணே கேட்பாயாக! சன்ம லக்கின ராசியிடம் முதலாக ஒன்றுவிடாமல் ஆறு ராசி வீடுகளில் கிரகங்கள் இருந்தால் உலக வழக்கில் நிலவும் சாதாமினி யோகங்கள் என்று பெயர் கூறப்படும்.

அதனால் ஏற்படும் பலன்கள் தனைத் தெரிந்து பார்க்கும் போது சிறப்புள்ள அரச தகுதி உள்ளவனாம். நோயற்ற சுகபோக சரீரமுடையவன், செல்வந்தன், கோபம் இல்லாதவன், பிறரிடத்தில் அன்புள்ளம் கொண்டவன், சேர்ந்த புகழ்பல படைத்தவன், அழகாகப் பேசுபவன், இசை ஞான முடையவன், புத்தியில் சிறந்தவன், எல்லோருக்கும் இனிமையாக ஆதரவு செய்பவன், நீதிமான், என்றெலாம் சாதாமினி யோகத்திற்கான பலன்கள் நிகழும் என்று சொல்லப்படுவதைக் காண்பீர்களாக!

ஐந்து வீடுகளில் - கிரக மாலிகை - பலன்

(பாசயோகம்)

கண்டு லக்கினங்கள் முதல் அய்ந்து வீட்டில்
கருணையுடனே கிரகம் சேர்ந்து நிற்கில்
ஒண்டொடியீர், பாசயோகங்கள் என்றே
உரைப்பர், பலன், மேதாவி உச்சாகி ஆகும்
தண்டமீழும் பலகலையும் தெரிந்துரைகள் பகர்வன்
சகல சனங்களும் புகழத்தான் மிகவும் வாழ்வான்
எண்டிசைகள் புரக்கும் மன்னவரால் பூச்சியாவான்
இனிய தனவான் வீட்டினில் கரும மெல்லாம் பார்ப்பன். 3

தொகுப்புரை:

சிறந்த பொன்வளையல்களை அணிந்த பெண்ணே!

லக்கினம் முதலாக ஐந்து வீடுகளில் கருணையுடனே ஏழுகிரகங்களும் வரிசையாக இருந்தால், பாசயோகம் என்றே சொல்லுவார்கள்.

அதனால் பெறும் பலன்கள், மிகுந்த அறிவுச் சாதுரியம் உடையவன், உற்சாகமாக இருப்பன், தமிழ் வித்துவானாகவும் பலகலைகளையும் அறிந்தவனாகவும் உயர்ந்து விரிவுரைகள் விளக்கமாகச் சொல்பவன், சகலமான மக்களும் தன்னைப் புகழ மிகவும் மேன்மையுடன் வாழ்பவன். நாட்டினை ஆட்சி செய்யும் மன்னரால் பாராட்டப்பெறுபவன், நல்ல செல்வமுடையவன், தன் வீட்டிற்கான செயல்களை யெல்லாம் தானே சிறப்புடன் பார்ப்பவன் என்றெலாம் கூறப்பொருந்தியதாகும்.

நான்கு வீடுகளில் - கிரகமாலிகை - பலன்

(கேதார யோகம்)

பார்க்கில் லக்கினத்தோடு பயில் நான்கு மனைக்குள்ளாக
ஏழுமே கிரகங்கள் நின்றால் இதுவே கேதாரயோகம்
தீர்க்கமாய் கிருசு பண்ணித் தனம் தேடும் திடவான் சுற்றத்
தார்க்கன்பன் சுகவான் ராசபூச்சியன் தகைமையுள்ளான். 4

தொகுப்புரை:

லக்கினம் முதலாகத் தொடர்ந்த நான்கு ராசி வீடுகளில் பொருந்தியதாக ஏழு கிரகங்கள் நின்றால் இதுவே கேதார யோகம் என்பர்.

அதனால் சாதகன் பெறும் பலன்களாவன, மிகவும் திட்டமானதாகப் பயிர்த்தொழில் செய்து செல்வத்தினைச் சம்பாதிக்கும் உறுதியுள்ளவன். தனது உறவினர்கள் அனைவருக்கும் அன்புடையவனாக இருப்பவன், நல்ல சுகசீவனம் உடையவன், அரசாங்கத்தினால் மதிக்கப்

பெறுபவன், நல்ல பண்பு உடையவன் என்பதெல்லாம் பொருந்திய பலன்களாகும்.

கிருசு-கிருஷி, பயிர்த்தொழில், வேளாண்மை

குறிப்பு:

கிரகங்கள் மாலை போல் வரிசையாக லக்கினம் முதலாக, குறிப்பிட்ட எண்ணிக்கையான ராசி வீடுகளில் இருக்க வேண்டுமென்பதனை இப்பாடலில் முதல்வரியில் லக்கினத்தினோடு பயில நான்கு மனைக்குள் என்று கூறுவது கொண்டு அறியலாகும். இம்முறைமை கிரக மாலிகா யோகபலன் காணும் அனைத்தினுக்கும் பொருந்தியதாகும்.

மூன்று வீடுகளில் - கிரக மாலிகை - பலன்

(சூலயோகம்)

உள்ளதோர் மூன்றின் வீட்டில் உற்றிடில் சூலயோகம்
மெல்லவே பலன் அனேக வித்தையுள்ளவன் உற்சாகி
தெள்ளிய போகவானாம் திரவியம் தேடும் செல்வன்
கொள்ளவும் விலைகள் கூறி விற்கவும் குறிப்புள்ளான். 5

தொகுப்புரை:

லக்கினம் முதலாக மூன்று ராசிவீடுகளில் கிரகங்கள் வரிசையாக இருந்தால், சூலயோகமாகும்.

அதனால், சாதகன் பெறும் பலன்களாவன: பலவகையான சிறந்த வித்தைகளைக் கற்றவன், எப்பொழுதும் உற்சாகமாக இருப்பவன், தெளிவான சுகபோகங்களை உடையவன், பொன் பொருள் ஆகியவற்றை முயற்சியால் பெரும் செல்வந்தன், சிறந்த வியாபாரியாக, பொருள்களை விலைக்குக் கொள்ளுதலிலும், இலாபகரமாக விலைகள் கூறி விற்பதிலும் குறிப்புள்ளவன் ஆகிய பலன்களை சூலயோகத்தால் சாதகன் திசாபுத்திகளின் தன்மைகளுக்கும், கிரகங்களின் சஞ்சாரங்களுக்கு ஏற்பவும் நடைமுறையில் பெற்றவனாவான்.

இரண்டு வீடுகளில் - ஏழு கிரகமாலிகை - பலன்

(நீளகயோகம்)

ஆள்சென்மம் இரண்டில் ஏழுகிரகமும் அமர்ந்து நிற்கில்
நீளுக யோகம் என்பார் இதன் பலன் நீதிமான் மிக்கோர்
தாள் தொழுது இறைஞ்சி நிற்கும் சரசவான் தீர்க்க சீவி
கேளிர் சுப கருமன் சென்மத்து ஏழறில் கெவுள யோகம். 6

தொகுப்புரை:

சென்ம லக்கினம் இரண்டாமிடம் இரண்டிலும் எழுகிரகங்களும் நின்றால், நீளுக யோகம் என்பார்கள்.

இதன் பலன், நீதிமான், பெரியோர்களின் தாளைத் தொழுது பணிவுடன் தனது விருப்பத்தினைத் தெரிவித்து நன்மை பெறும் சாதுரியவான், நிறைந்த ஆயுள் உடையவன், சுற்றத்தார்கட்கு நல்லவற்றைச் செய்யும் செயலுடையவன் ஆவான்.

சென்மத்தில் மட்டும் ஏழுகிரகங்கள் பொருந்தி இருந்தால் இவன் கவுளயோகம் என்னும் யோகவானாக இருப்பான்.

இலக்கினத்தில் ஏழு கிரகங்கள் - மாலிகை

யோகமாம் கவுளயோகம் உறுதனம் சற்றுமில்லான்
பாதகமாயிளைத்திருப்பன் செலவுளான் பகரில் சோம்பன்
தோகை கேள், பொல்லான் சிற்பக் காரியத் தொழிற்கு வல்லன்
வாகுடன் புவி சஞ்சார வல்லமை உள்ளனாமே. 7

தொகுப்புரை:

முன்னைய பாடலின் கடைசி அடியால்

குறிப்பிட்ட கவுளயோக மென்பது, லக்கின ராசி இடத்தில் அதாவது ஒரே ராசியில் ஏழு கிரகங்கள் கூடி இருந்தால் உண்டாகும் யோகமாகும்.

கவுளயோகமுடையவன் எந்தவிதமான செல்வமும் இல்லாதவனாவான், அரை உடம்பாக இளைத்திருப்பன்,

அதிக செலவுகளைச் செய்பவன், சொல்லுவோமாயின் அவன் ஒரு சோம்பேறியாவான்.

மயில் போன்ற பெண்ணே கேட்பாயாக! கவுளயோகமெனும் தரித்திரயோக முடையவன் பொல்லாதவனாக இருப்பான். சிற்பக்கலைத் தொழிலில் வல்லவனாக இருப்பான். ஓர் ஊரில் ஓரிடத்தில் தங்காமல் ஊர் சுற்றும் சஞ்சார வல்லமை பெற்றவனாக இருப்பான் என்பதாம்.

கிரகமாலிகா யோகப் பலன் முற்றும்.

யோகவகைகளும் பலன்களும்

புதன், சூரியன், மதி, சூரியன்-யோகம்

விளையும் புதனும் சூரியனும் விரும்பியெட்டில் நான்குஒன்றில்
வளையக் கூடில் மன்னவனாம் மதியும் கதிரும் உடன்கூடி
இளையா தன்ம தனத்தில் இரண்டிலிருக்கக் கீர்த்தியுள்ளான்
கிளையா ரவிபொன் பன்னொன்றில் கேடில் சென்மத்திலுறில் அரசே. /

தொகுப்புரை:

நன்மையை விளைவிக்கும் புதனும் சூரியனும் பகையில்லாமல் நட்புடன் எட்டு, நான்கு, லக்கினம் ஆகிய இடங்களில் கூடியிருந்தால் அரச தகுதியினைப் பெறுவான்.

சந்திரனும் சூரியனும் ஒன்றாகச் சேர்ந்து குறைவில்லாத தன்மதனராசியாகிய ஒன்பதாம் இடத்திலும் இரண்டாமிடத்திலும் இருந்தால் கீர்த்தியுள்ளவனாவான்.

சூரியனும் குருவும் கூடி பதினொன்றில் லக்கினத்தில் இருந்தால் அரசனேயாவான்.

சூரியன், சுக்கிரன், சனி, சூரியன் -யோகம்

அரசே எட்டு ஒன்பதில் பத்தில் அணிசென்மத்தில் இரவி சுங்கன்
சிரசாய் இருக்கப் பூபதியாம் சேரும் சனியும் சூரியனும்
நிறை சேர்ந்து ஒன்றாய் நவம் ஆறில் நிற்கில் கீர்த்திமானாவான்
உரைசேர் மற்றோர் இடத்தில் இவர்கள் உறையில் கூத்தாடியும் ஆவான். 2

தொகுப்புரை:

இலக்கின ராசிக்கு எட்டு ஒன்பது பத்து லக்கினம் ஆகிய இடங்களில், சூரியன் சுக்கிரன் இருவரும் இருக்கப் பிறந்தவன் அரசனாவான்.

சனியும் சூரியனும் சேர்ந்து ஒன்பது ஆறு ஆகிய இடங்களில் இருந்தால் கீர்த்தியுள்ளவனாவான்.

இந்த இரண்டு கிரகங்களும் மற்ற ராசி இடங்களில் இருந்தால் கூத்தாடியாகவும் ஆவான்.

(சனியும் சூரியனும்)

பல ராசிகளில் - பல கிரகங்கள் கூடிய-யோகம்

ஆமாம் வெள்ளி இரவி செவ்வாய்
அணுகிப் பத்தில் பதினொன்றில்
தாமே ஐந்து ஒன்பது இரண்டில்
தரிக்கில் அரசாதிபன் ஆவான்
தோமார் செவ்வாய் இரவி புந்தி
எங்கேயேனும் தொடர்ந்து நிற்கில்
ஓமே செல்வம் படைத்திருப்பன்
உதவான் தமக்கொரு காசும். 3

தொகுப்புரை:

பலன் தருவதில் பொருத்தமான சுக்கிரன் சூரியன் செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஒன்றாகச் சேர்ந்து பத்து, பதினொன்று, ஐந்து, ஒன்பது, இரண்டு ஆகிய ராசி இடங்களில் ஒன்றில் கூடியிருந்தால், அரசுத்துறையில் தலைவனாக இருப்பான்.

குற்றமுள்ள கிரகமென்று சொல்லப்படும் செவ்வாய், சூரியன், புதன் ஆகியோர் சேர்ந்து ஏதாவதொரு இடத்தில் தொடர்ந்து நின்றால், ஆச்சரியப்படும் அளவிற்குச் செல்வத்தினைப் பெற்றிருப்பான், ஆனாலும் ஒரு காசு கூட தனது சுற்றத்தார்க்குக் கொடுத்து உதவமாட்டான்.

பல கிரகங்கள் - கூடிய யோகம்

காசம் பொதிந்த இரவீ குரு
கலை வெண்மதியும் காரி குசன்
நேசமுடனே ஒரு வீட்டில்
நிற்கில் ஆசிலா சூரனுமாகி
தேசந்தன்னில் இருந்த மன்னர்
தேடும் பொருளில் சிந்தை வைத்து
பூசல் புரிந்தே அதுகொண்டு
பூமிக்கரசாய் பொருந்திடுவன். 4

தொகுப்புரை:

மிகுந்த பிரகாசம் பொதிந்துள்ள சூரியன், குரு, வளர்பிறைச்சந்திரன், சனி, செவ்வாய் இவர்கள் நட்புடன் ஒரு ராசி வீட்டில் பிறந்தவன், குறையில்லாத வல்லமை யுள்ளவனாகி, தேசாதிபதிகளான மன்னர்கள் கொண்டுவந்து சேர்க்கும் மதிப்புடைய பொருள்களின்மீது ஆசை மனம் வைத்து கலகம் பல செய்து சாதுரியமாக அந்த அரச செல்வங்களைக் கைக்கொண்டு, நாட்டுக்கு அரசனாகப் பொருந்தியபடி இருப்பான்.

கிரகங்கள் ஐந்து, ஆறு, அல்லது ஏழு என்ற எண்ணிக்கையில் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு வீட்டில் அதுவும் நன்றாக நட்புடன் இருப்பது என்பது அமைந்ததல்ல. எனினும் கிரகங்களில் ஒன்றிரண்டு குறைந்தாலும் நட்பின்றி இருந்தாலும், ராசியிடம் கிரகங்களின் தன்மை பலன் ஆகியவற்றை ஒப்பு நோக்கி அளவிட்டு பலாபலன்களைக் கண்டு உரைக்க வேண்டு மென்பதாகும்.

இராசியில் - கிரகங்கள் கூடிய யோகம்

இருந்த கதிர் சந்திரன் உச்சமெய்தக்
குரு நண்டிலிருக்கத்
திருந்தக் குடத்தில் சனி இருக்க
செவ்வாய் மேதைக்கு ஏழிலுற
பொருந்திலல்ராச யோகமதாம்
பொன்னும் பிருகு முச்சமதாய்
இருந்தால் பூவிற்கரசாகி
இப்பார் புரப்பன் எனச் சொல்லும். 5

தொகுப்புரை:

சூரியன் சந்திரன் இவர்கள் உச்ச ராசியில் இருக்க, குரு கடக ராசியிலும் சனி கும்ப ராசியிலும், செவ்வாய் புதனுக்கு ஏழாமிடத்திலும் பொருந்தி இருந்தால் சாதகனுக்கு ராசயோகம் அமையும்.

குருவும் சுக்கிரனும் உச்சம் பெற்றிருந்தால் பூமிக்கு அரசனாகி ஆட்சி செய்வான் என்று சொல்வாயாக.

முன்னர் சில கவிகளில் அரசனாவான் என்பதற்குரிய கிரகங்களின் சேர்க்கையும் ராசி இடங்களும் கூறப்பட்டதாயினும்

இந்த கவிதரும் விளக்கம், திட்டமாக ஒருவனுக்கு இராசயோகம் அமைவதற்குரிய கிரக-ராசி பொருத்தங்கள் காண்பதற்குத் தெளிவாக அமைந்துள்ளன எனலாம்.

ஆட்சி உச்ச கிரகங்களால் - யோகம்

சொல்லும்மூன்றுகிரகங்கள்
சுகமாய்உச்சமானாலும்
வில்லில்அரசன்மேடத்தில்
வெய்யோன்உச்சமாயிடினும்
நல்லபிருகுபொன்மதியும்
நயந்தேகூடிஏழிலுற
வல்லமையாகப்புவிபுரக்கும்
அரசனாவர்கண்டீரே!

தொகுப்புரை:

குறித்து சொல்லப்படும் மூன்று கிரகங்கள் பகை நீசமின்றி சுகமாய் உச்சராசிகளில் இருந்தாலும்,

தனுசில் குரு ஆட்சியாகவும், மேடத்தில் சூரியன் உச்சமாகவும் இருக்க,

சுக்கிரன் குரு சந்திரன் ஆகிய மூவரும் நயந்தே ஒன்றாக லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் இருப்பார்களானால்,

சாதகன் வல்லமையுடன், பூமியை பாதுகாக்கும் நல்ல அரசயோகத்தினைப் பெறுவானென்பதனைக் காண்பீராக!

பிற தேசத்தில் - யோகம்

கண்ட பாக்கியாதிபனும் கமழும்
வெள்ளி இருவோரும்
மிண்டு சென்மத்து இருந்திடவும்
வேந்தன் பாக்கியாதி மனை
அண்டி உறினும் பிறதேசத்து
அரசாய் தனவான் ஆயியுமே
பெண்டீர் இரண்டை மணந்துலகில்
பிரதாபங்கள் பெருங்குணவான். 7

தொகுப்புரை:

பிறந்த லக்கினத்திற்கு பாக்கியஸ்தானாதிபதி, சுக்கிரன் ஆகிய இருவரும், சன்ம லக்கினத்தில் இருந்தாலும், குரு பாக்கியஸ்தானத்தில் இருந்தாலும், பிறருடைய தேசத்தில் அரச அந்தஸ்துடன் மிகுந்த செல்வம் படைத்தவனாகி, அங்கு இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொண்டு மிகுந்த செல்வாக்குடன் பெரிய குணவானாகவும் இருப்பான் என்பதாம்.

குணமாய் தர்மம் கர்மத்தில்
கூறும் சுபக்கோளுடன் கூடி
மணமார் தர்மத்தில் மருவி
இருக்கில் புவி மன்னவனாம்
உணர்வார் இவர்கள் இருவருடன்
ஓரைந்தாதி யுடன் கூடிப்
புணர்வார் எங்கே இருந்தாலும்
பூமி புரக்கும் புரவலனாம். 8

தொகுப்புரை:

தர்ம கர்மாதிபதி சுபக்கோளுடன் கூடி, சிறப்புடைய தர்மஸ்தானத்தில் சேர்ந்து இருந்தால் நாட்டை ஆட்சிசெய்யும் மன்னவனாவான்.

தர்மாதிபதியாகிய ஒன்பதுக்கு உடையவனும் கர்மாதிபதியாகிய பத்துக்கு உடையவனும் ஆகிய

இருவருடன், ஐந்தாம் இடத்தோனும் கூடிச் சேர்ந்து எந்த ராசி இடத்தில் இருந்தாலும் பூமியை அரசாளும் புரவலனாவான் என்பதாம்.

சகடயோகம்

அகடிலா மன்னனுக்கு ஆறு எட்டொடு வியத்தில்
இகடிலா மதி எய்தி இருந்திடின்
சகட யோகம் இதில் பிறந்தார்க்கெலாம்
விகட துன்பம் விளையும் அரிட்டமே. 9

தொகுப்புரை:

குற்றமில்லாத குரு நின்ற ராசிக்கு ஆறாமிடமாகிய ரோகத்தானத்திலாவது, எட்டாமிடமாகிய ஆயுள் தானத்திலாவது, பன்னிரண்டாம் இடமாகிய விரயத் தானத்திலாவது, வளர்பிறைச்சந்திரன் சென்று இருப்பா ரானால்,

இவ்வாறான கிரகங்களின் அமைப்பில் பிறந்தவர்களுக் கெல்லாம் சகட யோகம் என்று சொல்லப்படும் நிலையில்லாத யோகபலனாக, மிகுந்த துன்பங்களெல்லாம் ஏற்படும். மரண பயமும் உண்டாகும் என்பதாம்.

வாயுயோகம்

புரக்கும் வாயு யோகத்தை
புகலும் புகர்க்கும் காரிக்கும்
நிரைக்கும் திரிகோணங்கள் தன்னில்
நிருபனிருக்க அவர்க்கு அஞ்சில்
பரக்கு மதியும் தானிருக்க
பருதி மதிக்கு கேந்திரத்தினில் இருக்க
விரைகுங்குமம் ஆர் முலை மயிலே
வினவி இதற்குப் பலன் சொல்வாம். 10

தொகுப்புரை:

மணம் நிறைந்த குங்குமச்சாந்தணிந்த நகிலையுடைய மயிலைப் போன்ற பெண்ணே! சுக்கிரனுக்கும், சனிக்கும்,

திரிகோணத்தில் குரு இருக்க, இவர்களுக்கு ஐந்தில் சந்திரனிருந்து, சூரியன் சந்திரனுக்கு கேந்திரத்தில் இருந்தால்-இவ்வாறான கிரக அமைப்பினால் என்ன யோகம் நிகழும் என்று கேட்பார்களானால், இதற்குரிய பலன்களைச் சொல்லுவோம்.

தொடரும் கவியால் ஆசிரியர் வாயு யோகத்திற்கு விளக்கம் தருகின்றார்.

வாயு யோக - விளக்கம்

சொல்லும் விசால நேத்திரங்கள்
துலங்கும் கணித மாரனுமாய்
கல்வியுளனாய் தனவானாய்
கதித்த கீர்த்தி பிரபலமாய்
நல்ல குணமும் தர்மனுமாய்
நாடும் கிரைய விக்கிரைய
வல்லனுமாய், பரதாரம்
வஞ்சித்திருக்கும் வஞ்சனுமாம். //

தொகுப்புரை:

பிறரால் புகழ்ந்து சொல்லப்படும் அளவில் விசாலமான கண்களை உடையவனும், விளங்கும் அளவான அங்கங்களைப் பெற்று மன்மதனைப் போல் விளங்குபவனும், கல்வியறிவில் சிறந்தவனும், செல்வம் மிகவுடையவனும், பெருகிய கீர்த்தியை பிறர் பிரபலமாய் பேசப்படுபவனும், நல்ல குணமமைந்த தர்மவானுமாக இருப்பதோடு,

பொருள்களை விலைக்கு வாங்கவும் இலாபத்துடன் விற்கவும் செய்யும் வியாபாரத்தில் வல்லவனாகவும்

பரதார வஞ்சகனுமாக வஞ்சித்து இருப்பவனுமாக வாயு யோகத்தான் இருப்பான் என்பதாம்.

புதன் யோகம்

வஞ்சமுறும் புதன் யோகம் சென்மத்தில் இறையும்
மன்னவன் கேந்திரத்தில் மதி, மதிக்கு இரண்டில் குசனும்
விஞ்சு குசனுக்கு ஒருமூன்றில் சனி இருக்கும் பலன்கள்
மிகுபல சாத்திரமறிவன் விரவு பராக்கிரமன்
செஞ்சொல் பெறும் உயித்திய சாதுரியன்
மிகுசமர்த்தன் செய்ய நகரம் புரக்கும் சீமானுமாவான்
கஞ்சமுகை தமனிய வெற்பு இபக்கோடு என்னக்
கதித்து விம்மு புளகமுலைக் கன்னியரே கேளாய்! 12

தொகுப்புரை:

தாமரை மொட்டையும், பொன்மலையையும், யானையின் கொம்பையும் ஒப்பதாகக் கதித்து விம்முதலோடு சந்தன மணம் கமழும் நகில்களையும் உடைய கன்னியரே, புதன் போக யோகமாவது யாதெனில் கேட்பீர்களாக!

லக்கினத்தில் குருவும், குருவுக்கு கேந்திரத்தில் சந்திரனும், அந்த சந்திரனுக்கு இரண்டில் செவ்வாயும், அவனுக்கு மூன்றில் சனியும் இருப்பது புதயோகமாம்.

இதன் பலன், பல சாஸ்திரமும் அறிபவனும், பராக்கிரமனும், சொல் ஆற்றலுடன் யுக்தியான சாதுர்யம் உடையவனும், மிகுந்த சாமார்த்தியமாய் செயல்களைச் செய்பவனும், நல்ல ஒரு நகரத்தினை ஆட்சிசெய்யும் சீமானுமாக ஆவான் என்பதனை அறிந்து கொள்ளுவீர்களாக.

சந்திர மங்கள யோக - பாகங்கள்

சந்திரன் செவ்வாய் கூடி சத்தமத்தில் நிற்கில்
சந்திர மங்கள யோகம் தரணி அரசாள்வான்
இந்துயர லக்கினத்தில் கேந்திரத்தில் அரசன் உரிலோ எழில்
கசகேசரியோகம் பூருவ பக்கத்தில்
சுந்தரஞ்சேர் மதியம் இலக்கினம் ஏழு எட்டாமிடத்தில்
சுபக்கிரகம் பார்க்க நிற்க துரைராசயோகம்
பந்தமுற லக்கினத்தில் சசி செவ்வாய் நிற்க
பானு குரு பத்து ஒன்பதில் உறில் ராச யோகம். 13

தொகுப்புரை:

இலக்கின வீட்டிற்கு ஏழாவது வீட்டில் சந்திரனும் செவ்வாயும் கூடி இருந்தால் அது சந்திர மங்கள யோகமாகும். அதன் பலன் நாட்டை அரசாளுவான்.

சந்திரன் உயர்ந்துள்ள லக்கினகேந்திரத்தில் குரு இருந்தால், அழகான கசகேசரி யோகமாகும்.

பூர்வ பட்சத்தில் அழகு சேர்ந்த பூரண் சந்திரன், இலக்கினம் ஏழு எட்டாமிடத்தில் சுபக்கிரகப் பார்வை பெற்று நிற்க, துரைராசயோகமாகும்.

சேர்ந்த முறையில் லக்கினத்தில், சந்திரனும் செவ்வாயும் கூடி நிற்கவும், சூரியனும் குருவும் முறையே பத்தாமிடத்திலும் ஒன்பதாம் இடத்திலும் இருந்தால் அது ராச யோகமாகும்.

சுனபா யோகம்

இவனைனார் தனக்கிரண்டில்
சனியுரில் சுனபை யோகம்
தாமிதமாம் முன்தந்தை தன்
ஆர்ச்சித தனங்கள்தான் இல்லை
காமுறு சிறுவன் தானும்
காசினிக்கு அரசனாகி
தாமிகு தனங்கள் தேடி
தகுதி பெற்றிடுவன் தானே. /

தொகுப்புரை:

சந்திரனுக்கு இரண்டாமிடத்தில், சனி இருந்தால், அது சுனபா யோகமாகும். அதன் பலன், பிதுராச்சித தனம் இல்லாதவனாவான். ஆனால்,

அந்த சாதகன், ஒரு அரசனைப்போல தனது சாதுரியத்தினால் செல்வத்தைச் சேர்த்து எல்லாவகையான தகுதியும் பெற்று உலகில் வாழ்ந்திடுவான் என்பதாம்.

கேசரி யோகம்

வருசசி கேந்திரத்தில் மன்னவன் இருக்கவும் அந்த
அரசன் தன் கேந்திரத்தில் அம்புலி தானும் நிற்கில்
விரவு மற்றிடத்தின் மற்றோர் மேவிய தோஷம் யானை
உருசிங்கம் கண்டவாறாம் ஓது கேசரி யோகம். 15

தொகுப்புரை:

சந்திர கேந்திரத்தில் குரு நிற்கவும், குரு கேந்திரத்தில் சந்திரன் நிற்கவும் ஆனால்,

மற்ற எல்லா ராசி இடங்களில் இந்த இருவரின் பார்வைகள் நிகழ்வதாகும். எனவே, மற்ற ராசிகளிலுள்ள கிரகங்களால் ஏற்படும் துன்பங்கள்

நன்றாக வளர்ந்து உருப்பெற்ற சிங்கத்தினைக் கண்ட யானையைப்போல் நீங்கிவிடுவதாகும்.

இத்தகைய நல்ல பலனை சாதகனுக்குத் தருவது கேசரி யோகமாகும்.

சீயோகம் - (ஸ்ரீ யோகம்)

இரவிக்கு பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் கூடி
இருந்தக்கால் அதுவே சீயோகமென இசைப்பார்
புரவலரால் பூச்சியமும் நால்வகை யோசனைக்கும்
புந்தி நல்லோரெல்லாம் புகழ்ந்தருளும் புகழும்
பரவிய நற்பூமி வெகுபாரம் முழுதும் புரப்பன்
பயிலும் சுக்கிரன் லாபப் பதியுறினும் நன்மை
விரவி திரிகோணங்களாம் ஐந்து ஒன்பானில்
வெள்ளி புதன் குரு இருக்கில் வெகு பவுசு உண்டாம். 16

தொகுப்புரை:

சூரியனுக்கு பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் அதுவே சீயோகம் என்று சொல்லுவார்கள். அதன் பலன்,

அரசரால் பூசிக்கப்படுதல் (பாராட்டப்பெறுதல்) நானாவகையான ஆலோசனைகளில் தேர்ந்துள்ளதால், அறிவில் சிறந்த நல்லவரெல்லாரும் புகழ்ந்து ஆதரவு

செய்யும் புகழுடையானும், அளவில்லாத, பூமிகளை உடையவனாகி அவற்றை திறமையாகப் பரிபாலிப்பவனும், ஆவான்.

சுக்கிரன் பதினோராம் இடத்தில் சேர்ந்திருந்தால், பலவகையான நன்மைகளைப் பெறுபவனாவான். திரிகோண இடங்களில், அதாவது 5, 9, ராசிகளில் சுக்கிரன், புதன், குரு இருப்பார்களாயின், சாதகனுக்கு மிகுந்த கௌரவங்கள் உண்டாகும் என்பர்.

மூலப் பிரதியில் கவியின் முதல் அடியில் இருந்தக்கால துவேசி யோகமென இசைப்பார் என்றுள்ளது. அதுவே என்று பிரிக்காமல் வேசியோகமென்று பிரித்துக் காண்பதால் அப்படியொரு யோக பலன் கவியில் இல்லை.

அங்கிசயோகம்

வடிவுடன் கர்க்கடகத்தில் பிரகசுபதியும் இருந்து
வண்மையுடன் லக்கினத்தில் உற்றிடும் சசியைப் பார்க்கில்
படிமிசையோர் காண்பார்கள் அங்கிசயோகமென்றே
பலனதற்கு வெகு பவுசு பாக்கியம் உரித்தாய்
துடிஇடை மாதர்கள் பலரை விவாகங்கள் புரிந்தே
தொண்ணூறாம் வயசு தொடங்கி வருமளவும்
கடிகமழ் மலரணைமேல் அனுராகம் புரிந்தே
காசினியில் இருப்பனெனக் கருதிடு முன்னூலே. 17

தொகுப்புரை:

குரு கடக ராசியிலிருந்து அருள்பார்வையாக லக்கினத்தில் இருக்கும் சந்திரனைப் பார்த்தால், அதனை ஆங்கிச யோகம் என்று உலகத்தில் உள்ள சான்றோர்கள் காண்பார்கள்.

அதனால் பெறும் பலன்களாவன, மிகுந்த கௌரவம், செல்வம் உடையவனாகவும், அழகான பல பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்பவனாகவும், தொண்ணூறு வயதளவும் சுகபோகவானாக மணம் வீசுகின்ற மலர்ப்படுக்கையின் மேலிருந்து, விரும்பினவற்றை விரும்பியபடியே அனுபவம் புரிந்து, தொண்ணூறு வயதிற்கு

மேலும் உலகில் வாழ்ந்திடுவான் என்று, முன்னைய பழமையான சோதிட நூல்கள் கருதிக் கூறும் பலன்களாகும்.

சந்திரா லக்கினம் கணித்து - இறை யோகம்

உறுசன்மத்தானையில் சென்ற நாழிகையை
ஓரைந்தில் கழித்த பலன் உதையம் முதலாக
பெறும்சசியின்லக்கினமாம் ஓரைலக்கினமும்
பிறந்த சன்மலக்கினமும் பிறை இருந்தவீடும்
மறுவிலா இந்நான்கும் மனை உச்சவீடாய்
வயங்கில் இரையோகம் என வழுத்தலாகும்
கறைஅகலக் கலை நிறைந்த தண்மதியும் போலும்
கமலமலர் போலும் முகக் கன்னியரே கேளாய்! 18

தொகுப்புரை:

ஜென்ம நட்சத்திரத்தில் சென்ற நாழிகையை இராசி ஒன்றுக்கு ஐந்து நாழிகைகளாக உதயமுதலாகக் கழித்துவந்த மிச்சம் எந்த ராசிக்கு வருமோ அதுவே சந்திரலக்கினமாகும்.

அவ்வாறு கண்ட சந்திர லக்கினமும், ஓரா லக்கினமும், சென்மலக்கினமும், சந்திரன் இருக்கும் வீடும் ஆகிய குற்றமில்லாத இந்த நான்கு இராசி இடங்களும் கிரகங்களின் உச்சவீடாக இருந்தால் இறையோகம் என்று சொல்லலாகும்.

களங்கம் நீங்க கலைகள் நிறைந்த பூரண சந்திரனைப் போன்றும், தாமரை மலரைப் போன்றும் அழகிய குளிர்ச்சியான முகத்தினை உடைய கன்னிப்பெண்களே கேட்பீர்களாக! என்பதாம்.

இறை-என்றால் அரசன், கடவுள் என்று பொருள் பெறும். எனவே இறையோகம் என்பது ராஜயோக வகையிலொன்று எனக் காண்க.

உச்சகிரக பார்வையால் - யோகம்

ஓரா லக்கினம் கடிகா லக்கினம் உதித்த சன்மம்
நேராய் இம்முன்றுவீடும் உச்சமாய் நின்றோர் காணப்
பாராளும் ராஜயோகம் இருமனைபார்க்கின் மன்னனாம்
போராய் ஓர் மனையைக் காணில் தனவானாம் பேசுங்காலே. 19

தொகுப்புரை:

ஒருவனுடைய சாதகக் கணிப்பிற்குரிய ஓரைலக்கினம், கடிகை லக்கினம், பிறந்த ஜன்ம லக்கினம் ஆகிய மூன்று இடங்களையும் உச்சமாய் நின்ற கிரகங்கள் காண்பதாயின் அது உவகை ஆட்சி செய்தற்குரிய ராஜயோகமாகும்.

மூன்று லக்கினங்களில், இரண்டு லக்கின இடங்களை உச்சர்கள் காண்பாராயின்-மன்னவனாவான்.

சிறப்பாக உச்ச கிரகங்கள், மேலே குறிப்பிட்ட லக்கின இடங்களில் ஒன்றை மட்டும் பார்த்தால்-மிகுந்த செல்வமுடையவனாவான் என்று பேசப்படுபவனாவான்.

சந்திர - அதிக யோகம்

சோமனுக்கு ஆறு ஏழு எட்டில் சுபக்கிரகங்கள் நின்றால்
பூமலி அதிக யோகம், இதன் பலன் புகலுங் காலை
நேமியான் சவுரியங்கள் நிறை சீவன் பலமுள்ளான்
தீமையாம் பகையை வெல்லும் சேனாதிபதியுமாவான். 20

தொகுப்புரை:

சந்திரன் நின்ற ராசிக்கு, ஆறு, ஏழு, எட்டாமிடங்களில் சுபக்கிரகங்கள் நின்றால், அது அதிக யோகம் எனப்படும்.

அதன் பலன்களாவன, சக்கராயுதத்தினைப் பெற்றுள்ளவனாகிய திருமாலின் அருளால், எல்லாவகையான சௌகரியங்களையும் பெறுவான்.

நிறைந்த ஆயுளுடன் பலசாலியாகவும் இருப்பான். கெடுதி செய்யும் பகைகள் அனைத்தினையும் வென்று நலம் பெறுவான்.

சேனாதிபதியுமாவானாம். இவ்வாறான அதிக யோக பலன்களை சந்திரன் தருவான் என்றும் கூறப்பெறும்.

சந்திர - சுனபா யோகம்

இந்துவுக்கு இரண்டாம் வீட்டில் இனியகோள் இருந்தக்காலே
முந்திய சுனபையோகம் இதன்பலன், மொழியுங்காலை
சந்ததம்தனங்கள் சேர்ப்பன்சாமான்னிய புத்தியுள்ளான்
சுந்தரப்புவிகளெங்கும்துதிக்கவே கீர்த்தி மலரும். 21

தொகுப்புரை:

சந்திரனுக்கு இரண்டாவது வீட்டில் சுபக்கிரகம் இருந்தால், முன்னர் சொல்லப்பட்ட சுனபை யோகமாகும்.

இதன் பலனைக் கூறுவோமானால், எப்பொழுதும் எக்காலத்திலும் செல்வத்தினைச் சம்பாதித்துச் சேர்த்துக்கொண்டே இருப்பான்.

சாதாரணமான புத்தியை உடையவனாக இருப்பான். ஊர்மக்கள், நாட்டு மக்கள் மதித்து வணங்கும்படியான இவனது புகழானது மேன்மேலும் பெருகிவளருவதாகும்.

கவியில் முந்திய சுனபை யோகம் என்று கூறப்பட்டிருப்பதால், முன்னர் 14வது கவியால் சொல்லப்பட்ட சந்திரனாலாகும் யோக பலன்கள் விரிவாக இக்கவியால் சொல்லப்பட்டுள்ளது.

சுனபா யோகம் என்பதை சுனபை யோகம் என்றும் கூறப்பட்டுள்ளது ஒன்றேயாகும்.

கிரக உச்ச - யோகம்

வீஞ்சு புந்திகுரு உச்சம் எய்திடச்
செஞ்சொல் சுக்கிரன் கோலிடைச் சேர்ந்திட
இன்சொல் மேடம் குசனுற எய்தினோன்
அஞ்சிடானவன்நஞ்சுமனம் புவியாள்வனே. 22

தொகுப்புரை:

புதனும் குருவும் உச்சம் பெற்றிருக்கவும் சுக்கிரன் துலாம் ராசியில் நிற்கவும், மேடராசியில் செவ்வாய் இருக்கப் பிறந்தவன் யாவருக்கும் அஞ்சாதவனாவான். கொடிய மனத்தைப் படைத்தவனாகவும் ஆவான்.

புதன் குரு சுக்கிரன் மூவரும் சுபக்கிரகங்களாக இருப்பார்கள். எனவே புதன் கன்னிராசியில் ஆட்சி உச்சம் பெற்றும், கடகத்தில் குரு உச்சம் பெற்றும், மேட ராசியில் செவ்வாய் ஆட்சியுடையோனாக அமைவதால் இவ்வாறான கிரக அமைப்பினால் சாதகன் வலியவனாக இருக்கும் தன்னாண்மை யோகம் ஏற்படுவது குறிக்கப்பட்டது.

சிங்கடாடவி யோகம்

ஆளும்லக்கினத்து ஒன்பதில்ஆனநற்
கோளுறில்சிங்கடாடவி யோகமாம்
தூளிகாற்றென கோபன்சுகமுளான்
நீளும்அற்ப நிதியுடன்பாவனே. 23

தொகுப்புரை:

சாதகனுக்குரிய லக்கினத்தையும், ஒன்பதாமிடத்திலும் சுபக்கோள்கள் இருந்தால், அது சிங்கடாடவி யோகம் எனப்படும்.

அதன் பலன்களாவன: புழுதியை எழுப்பி வேகமுடன் வீசும் மேலைக்காற்றைப் போல, ஆரவாரமான கோபியும், சுகமுள்ளவனும், தொடர்ந்த அற்பமான செல்வத்தை உடையவனும், பாவியும் ஆவான்.

பொதுவாக சுபக் கிரகங்களாகக் கருதப்படுபவை, சந்திரன், குரு, சுக்கிரன், புதன் ஆகியவைகளாகும். இவர்கள் லக்கினத்திற்கு 2, 4, 7, 9, 10, 11 ஆகிய இடங்களில் இருந்தால், அதுவும் நீசமோ பகையோ பெறாமல் இருந்தால், இருக்கும் ராசி அங்கிசத்திற்கேற்றபடி, பூரண பலன், மத்திம பலன், அதம பலன் (சொர்ப்ப பலன்) இவற்றில் அந்த கிரகம் பெற்றிருக்கும் பலத்தினளவே யோக பலன் அமையுமென்பது அறியத்தக்கதாகும்.

இலக்கினா - நற்பலன் யோகம்

பாவமற்றிடு லக்கினபார்த்திபர்க்கு
ஏவும் இரண்டில் சுபர்மூன்றில் எய்திடில்
தாவு நான்கெனும் தானநற் கோளுறில்
கோவுமாகி குலாவி இருப்பனே. 24

தொகுப்புரை:

ஒரு சாதகனுக்குரிய ராசியாதிபதியாகிய கிரகம் பாவமில்லாதிருக்கவும், அடுத்துள்ள இரண்டாமிடத்தில் சுபக்கோளும், தொடர்ந்த மூன்றாமிடத்தில் சுபக்கோளும் இருந்த நிலையில், அடுத்துள்ளதும் சுபத்தானமுமாகிய நான்காம் இடத்திலும் சுபக்கிரகம் இருக்குமானால் சாதகன் அரசனைப்போன்ற தலைமை அதிகார நிர்வாக பதவியிலிருந்து சுகபோகங்களை அனுபவித்து மக்களோடு குலவி நற்பெயருடன் இருப்பான் என்பதாம்

லக்கின ராசி முதலாக வரிசையாக, இரண்டு மூன்று, நான்காம் ராசி இடங்களில் சுபக்கோள்களாகிய சந்திரன் குரு, சுக்கிரன், புதன் ஆகியோர் அமைந்திருப்பது அருமையாயினும், அமைந்திருந்தால் அரச தகுதியினைப் பெறுவான் என்பதும், இதுவுமொரு கிரக மாலிகா யோகமாகும் என்பதும் அறியப்பெறும்.

ராஜயோகம் - பாகுபாடு

குலவும்இரண்டாமிடராசிஉச்சமாகினாலும்
குளிர்மதியோன்பொன்புகர்இவரில்எவர்நின்றாலும்
இல்விதழாய், இரண்டாமிடம்சரமேயாயின்
இராஜயோகத்தில்காலாம், திரமேயாயின்
உலவும்அரை, உபயம்பூரணராஜயோகம்
உரைசெய்யும்இவர்லாபத்துஉரினும்இனிதாகும்
புலவகல நெய்குளித்த வடிவேல்நிகராய்
புவியில்இளையோர்மயங்கப்பொருகயற்கண்ணாரே. 25

தொகுப்புரை:

புலால் நாற்றம் நீங்க நெய்பூசப்பட்ட வேலினைப் போன்ற வடிவுடையதாக, உலகத்தில் வாலிபர்களை மயக்குதலைச் செய்யும் எதிரிட்டு நிற்கும் இண்டு கயல் மீன்களைப்போன்ற கண்களை உடைய பெண்ணே!

இலக்கினத்திற்கு இரண்டாம் ராசியிலுள்ளவன் உச்சனாகிலும், அல்லது அந்த ராசியில் சந்திரன் குரு சுக்கிரன் இவரில் எவர் நின்றாலும், இலவு முருங்கை மரப் பூவிதழைப் போல் சிவந்த வாயிதழ்களை உடைய பெண்ணே. இரணடாமிடம் சரராசியாய் இருந்தால், கால் ராஜயோகமும், ஸ்திர ராசியாயிருந்தால், அரை ராஜயோகமும், உபய ராசியாய் இருந்தால் முழு ராஜயோகமும் ஆகும்.

அல்லது சந்திரன், குரு, சுக்கிரன் இவர்கள் பதினோராம் இடத்தில் இருந்தாலும் இனிய ராஜயோக பலன்களைத் தருவார்கள்.

திரிகோண கேந்திர ராசிகட்கு - யோகம்

ஆம்மூன்றில் பத்து ஆறில் பன்னொன்றில் பாவர்
அமரிலோ உபயசரமான திரிகோணத்தில்
தாம்மூன்று கேந்திரத்தில் உச்சங்கள் தன்னில்
தன் மனையில் சுபர் நிற்க தகு ராஜ யோகம்
தேம்மூன்று கேந்திரத்தில் உச்சங்கள் அன்றியும்
மதிபதி தனையும் சென்மம் ராசிக்கு
ஆம்மூன்றின் பதிதனையும் மற்றோர் பாராமல்
பகைத்த சனி பார்க்கில் சன்னியாசி எனப்பகரும். 26

தொகுப்புரை:

ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, பத்து, ஆறு பதினொன்று ஆகிய இடங்களில் பாவகிரங்களிருந்தால் உபயசரமாகும்.

திரிகோணத்திற்குரிய மூன்று ஸ்தான ராசியிடங்களில், உச்சஸ்தானத்தில் சுபகிரகங்கள் இருந்தால் - அது ராஜயோகமாம்.

திரிகோண ராசிகளாக எண்ணப்படும் மூன்று கேந்திர இடங்களில் (ஒன்றில்) சந்திரன் இருந்த ராசிக்கு உரிய கிரகத்தையும், சென்ம ராசிக்கு மூன்றாம் இடத்தானையும், வேறு கிரகங்கள் பார்க்காமல், சனி மட்டும் பகைத்துப் பார்த்தால் சன்னியாசியாவன் என்று சொல்லப்படும்.

இராசி இடங்களால் - ராஜயோகம்

பகரு மைந்தனுக்கு இரண்டாமிடத்தில் சசியிருந்து
பண்புடன் மூன்றாமிடத்து அரசன் தானும்
சகமரிய வேயிருந்தால் ராஜயோகம்
சன்மலக்கினங்கள் விரிச்சிகமேயாகில்
நிகரில் அந்தமனையை அங்காரகனும் பார்க்கில்
நிலமெலாம் புரந்தருளும் ராஜயோகம்
நகர் கடகலக்கினத்தில் சசிக்கு ஏழ் செவ்வாய்
யுரில் ராஜயோகமென உரைப்பர் நல்லோர். 27

தொகுப்புரை:

சொல்லப்படும் சனிக்கு இரண்டாமிடத்தில் சந்திரன் இருக்க, பண்புடன் மூன்றாமிடத்தில் குருவானவர் இருந்தால் ராஜயோகம்.

சன்மலக்கினம் விருச்சிகமாக இருந்து, ஒப்பில்லாத அந்த லக்கின வீட்டினை செவ்வாய் பார்ப்பதாயின், நஞ்சை புன்செய், மனைகள், கிராமம், ஊர் ஆகியவற்றை உரிமையுடன் புரந்தருளும் ராஜயோகமாம்.

இவையல்லாமல் கடக லக்கினத்திலுள்ள சந்திரனுக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் இருந்தால் அதுவும் ராஜயோகத்தினை தரும் என்று நல்லோர்கள் சொல்லுவார்கள்.

விரிவான ராஜயோகம்

நல்லதோர் கன்னி சென்மலக்கினமாகச் சுங்கன்
மெல்லவே உச்சமாக வில்லிடை வேந்தன் மேவச்
சொல்லிய பாவர்கூடிச் சூழ்ந்திடாதிருக்கின் மன்னனாம்
வல்லதனம் புவியும் மற்ற மன்னர் ராச்சியமும் ஆள்வான். 28

தொகுப்புரை:

நல்லதான கன்னிராசி சென்மலக்கினமாக இருக்க, சுக்கிரன் மீனராசியில் உச்சமாக இருக்கவும், தனுசு ராசியில் ஆட்சி பெற்று இருக்கவும்.

பாபக்கிரகங்கள் இவற்றைச் சூழ்ந்திடாமலும் பாராமலும் இருந்தால் சாதகன் மன்னனாவான்.

நிலைத்த மிகுதியான செல்வத்துடன் தனது பூமியினையும், பிற மன்னர்களின் நாட்டினையும் ஆட்சி செய்வான்.

கன்னியாலக்கினத்திற்கு 4, 7ல் சுபர் நலமுடன் நிற்க, பாபகிரகங்கள் அவர்களைப் பார்க்காமலும், சூழாமலும் இருந்தால் அந்த சாதகன் ராஜராஜயோகனாவான் என்பதாம்!

மிகு ராஜயோகம்

ஆளும்கற்கடகம்சென்மமாகவேஇரவிபொன்னாம்
கோளுமேஉச்சமாகக்குளிர்புதன்வெள்ளிதானும்
நீளுந்தன்வீட்டில்நிற்கநிறைபாக்கியாதிதானும்
மீளும்கேந்திரத்தில்நிற்கவெகுராச்சியம்புரப்பன். 29

தொகுப்புரை:

சாதகன் ஆனுபவித்தற்குரிய நற்பலன்களைத் தருவதற்கான கடக ராசி சென்ன ராசியாக அமைய், அந்த இராசி சக்கரத்தில் சூரியன் மேடராசியில் உச்சம் பெற்றும், கடகராசியில் குரு உச்சம் பெற்றும் இருக்க, தன்மையான பலன்களைத் தகுதியுடன் தரும் புதனும், சுக்கிரனும் அவரவர்க்குரிய இரண்டிரண்டு வீடுகளில் ஆட்சிபெறும் அம்சவீட்டில் நிற்கவும்.

பாக்கியத்தானாதிபாதியாக குரு அமைந்து, 1, 4, 7, 10 என்று குறிக்கும் கேந்திரத்தானங்களிலொன்றில் இருக்கவும், பிறந்த சாதகன் பலராஜ்யங்களை திறமையுடன் ஆளும் தகுதியினைப் பெறுவான். இது மிகு ராஜயோகமாகும்.

கல்வி, ராஜயோகம்

புரக்கும்புதனுந்தான்உச்சம்பொருந்தஇரண்டாம்இடத்தில்வெள்ளி
இருக்கவளரும்பிறை,அரசன்இருவர்கூடிப்பலவானாய்
தருக்கிஇருக்கவெகுபூமிதனக்குமன்னன்தானாகி
பெருக்குமனத்தைப்பிரபலமேபிரசங்கிக்கும்துறையாவான். 30

தொகுப்புரை:

கல்விக்கு ஆட்சிசெய்யும் புதன் கன்னிராசியில் ஆட்சி உச்சம் பெற்றிருக்கவும், இரண்டாமிடம் ராசியிடத்தில் சுக்கிரன் இருக்கவும்,

வளர்பிறைச் சந்திரனும் குருவும் கூடி பலம் பெற்றவர்களாக, நாங்கள் நல்ல பலன்களைச் செய்வோம் என்று அதிகாரத்துடன் இருக்க (அதாவது ஆட்சி உச்சங்களால் பலம் பெற்று குற்றம் இன்றி இருக்க)

சாதகன் அனேக பூமிகளுக்கு மன்னனைப் போல தலைவனாகி, மேலும் மேலும் பெருகிய மனத்தை, அறிவை உடையவனாகி பிரசங்கம் செய்யும் வித்துவானாகப் பிரபலம் பெற்று விளங்கும் தகுதியில் உயர்வாக இருப்பான்.

பரயோகம்

துரையாம் சனி சுக்கிரர்க்கும் நடுவே சோமன்தான் இருந்தால்
உரையான் பரயோகமிதில் பலன்கள் நீதியுளன் போகி
தரையாள் மன்னர் கைப்பொருளை தன்னைக் கொள்வன் குலசேடன்
புரையாசார பாவன் புறகிராமணியும் ஆமே. 31

தொகுப்புரை:

மேலான கிரகமாகிய சனிக்கும் சுக்கிரனுக்கும் நடுவான ராசி இடத்தில் சந்திரன்தான் இருந்தால், சொல்லுவதற்குரிய பரயோகமாகும்.

இதன் பலன்கள், நீதியுள்ளவனாக இருப்பான். பெண்கள் போகம் மிகுதியாகவுள்ளவனாக இருப்பான்.

நாட்டை ஆட்சி செய்யும் அரசர்களுடைய பொருளை (அரசாங்கப் பொருளை) தன்வசப்படுத்திக் கொள்பவன், குலத்தில் குறைபாடுள்ளவன். போலியான ஆசாரபாவனை உடையவன். கிராமப்புற நிர்வாகம் பெற்ற கிராமணியும் ஆவான்.

ராஜராஜயோகம்

உதித்தருளும் சென்மாதிபதி லாபாதிபதி
ஒருமித்து ஐந்தாமிடத்தில் உகந்து நிற்க
விதித்தருள் வாகனத்தாதி மூன்றாம் வீட்டில்
மேவிட, அவ்வீட்டிற்குப் பத்தாமாதி
துதித்த சன்மாதிபனுடனேஐந்தில் மேவ
தோன்றில் இம சேதளவும் புவிக்குள்
கதித்த துரையாய் செங்கோல் செலுத்தி
ஓர் குடைக்குள் காசினி யெல்லாம் புரப்பன் கண்டாய். 32

தொகுப்புரை:

சனன காலத்தைக் கொண்டு உதித்தருளும் சென்ம ராசியாதிபதியாகிய லக்கினாதிபதியும், அதற்குப் பதினோராம் இடமாகிய லாபாதிபதியும் ஒன்றாகச் சேர்ந்து, ஐந்தாமிடமாகிய பூர்வபுண்ணியத்தானத்தில் உறவுடன் நிற்கவும்.

வாகனத்தானாதிபதியாகிய நான்காமிடத்தோன் மூன்றாம் இடத்தில் இருக்கவும், அந்த வீட்டிற்குப் பத்தாமதிபதி சன்ம லக்கினாதிபதியுடன் ஐந்தாம் இடத்தில் இருக்கவும்,

பிறந்தவன், இமயம் முதல் ராமேசுவரம் அளவும் உள்ள இந்திய நாட்டில், மேலான உத்தியோகம் பெற்றவனாக, நேர்மையுடன் ஆட்சி செய்து, ஓர் அரசின்கீழ் நாட்டையெல்லாம் நிர்வாகம் செய்வான் என்பதைக் காண்பாயாக.

நீசபங்க ராஜயோகம்

கண்டருளும் நீசபங்க ராஜயோகம்
காணும்வகை நீசத்தானத்து வேந்தும்
திண்டிறல் சேர்ந்திடும் அவ்வீட்டுக்கு உச்சமான கோளும்
திங்களும் கேந்திரம் தன்னில் சேர்ந்தாராகில்
மண்டியிடு நீசபலனொழிந்து கீர்த்தி
மகராஜ ராஜனென வாழ்ந்திடுவர் பூவில்
கொண்ட பலர் நீசத்தில் இருந்தாலும் ஒருகோள்
கேடில்லா கோளாகில் எல்லாக்கோளும் நன்றாமே. 33

தொகுப்புரை:

நீசபங்க ராஜயோகம் என்பது எவ்வாறு அமையும் என்பதனைக் காணும் வகையானது

இராசி சக்கரத்தில், ஒரு கிரகம் நீசம் பெற்று நிற்கும் ராசியாதிபதியும் அந்த வீட்டில் உச்சம் பெறும் கிரகமும்

சந்திரன் நிற்கும் ராசிக்கு 1, 4, 7, 10 ஆகிய கேந்திரஸ்தானங்களில் சேர்ந்திருப்பார்களாயின்

நீசமாய் இருக்கும் கிரகத்தின் நீசம் கெட்டு நல்ல பலனைத் தரும் கிரகமாகி, சாதகனுக்கு நல்ல புகழுடன் மேலான வாழ்க்கையுடைய அரசனைப் போன்ற யோகத்தினைத் தருவான்.

பல கிரகங்கள் நீசம் பெற்றிருக்க, ஒரு கிரகம் நீசம் பெறாமல் சுபனாக இருந்தாலும் மற்ற கிரகங்கள் நீச்சம் மாற்றம் பெற்று சுபக்கிரகமாகி நீசபங்கராஜயோகத்தினைத் தருவார்கள். (ஒரு கிரகம் - சந்திரன்)

வசனம்: நீசரிருந்த வீட்டதிபருடைய ஆட்சி வீட்டுக்கு அதிபதி, சந்திரகேந்திரத்தில் இருந்தால் நீசபங்க ராஜயோகந்தரும்.

குரு சந்திர யோகம்

கோலே லக்கினமாய்அந்தக் கோலில் சுக்கிரனும் மேவ
மாலை வெண்மதியும் ஆறாமிடத்தினில் மருவி நிற்கச்
சாலவே குரு உச்சத்தில் தங்கியே மதியைப் பார்க்கச்
சீலமெஞ்ஞானியாகி செகமெலாம் புரப்பன்தானே. 34

தொகுப்புரை:

துலாம் ராசியே லக்கினமாக இருந்து, அந்தத் துலாராசியில் சுக்கிரன் இருக்கவும், அதற்கு ஆறாமிடத்தினில் சந்திரன் சேர்ந்து இருக்கவும்

மிகுதியான நன்மைகளைச் செய்யும் குரு கடகராசியில் உச்சனாகத் தங்கியே சந்திரனைப் பார்க்கவுமானால்,

சாதகன் ஒழுக்கமுடைய உண்மையான ஞானியாகி, மக்கள் போற்றும்படியாக உலகத்தை அருளாட்சி செய்வான்.

மாலை வெண்மதி - என்பதனால், பூரண சந்திரன் என்றும் பொருள் கொள்ளலாம். குரு கடகராசியில் உச்சம் பெறுகிறான். எனவே, கடகத்திற்கு துலாம் ராசி நான்காம் இடமாகிறது. குருவுக்கு நான்காமிடப்பார்வை உண்டா எனின் முழுப்பார்வை இல்லை. அரைப்பார்வை என்றறியவும்.

இராஜயோக வகைகள்

தானமெனும் மாதுருத் தானத்தான் அந்தத்
தானத்திலே இருக்கும்தகைமை கேளீர்
வான செவ்வாய் ருசியோகம், புதன் பத்திரயோகம்
மகிழ்குரு வங்கிசையோகம் சுக்கிரனேயாகில்
மானமுளமாளுவயோகம் சனிதனக்கே
வரும்சக்கரயோகம் எனவே வழுத்தலாகும்,
ஈனமற இவர்தம்மிலே ஒருவர் நிற்கில்
இது ராசயோகமென இயம்பலாமே. 35

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு நான்காம் இடமாகிய மாதுர் ஸ்தானாதிபதி, தனது சொந்த ராசி இடத்திலே ஆட்சிபெற்றிருக்கும். நிகழும் பலாபலன்களைக் கேட்பீர் களாக.

மாதுர் ஸ்தானாதிபதி செவ்வாயாகவே அமைந்திருந்தால் ருசியோகம் நடக்கும்புதனாக இருந்தால் பத்திரயோகம் நிகழும், குருவானால் வங்கிசையோகம் வருவதாகும். சுக்கிரனாக இருந்தால் மானாபி மானத்தால் சிறப்பினைத் தரும் மாளவயோகமாகும். சனியாக அமைந்திருந்தால் மாறிமாறிப் பெருகிவரும் சக்கர யோக மாகும்.

இவர்களில் ஒருவர் நான்காமிடத்தில் நன்னிலையில் இருந்தாலும் ராஜயோகமென்றே சொல்லலாம்.

ருசியோகம் - ராசியோக மென்றும் கூறுவர். எக்காலத்திலும் அறுசுவை உணவும், போகமும் உண்டாதல். வங்கிசை யோகம் - சுற்றம், நட்பு, மக்கள் ஆகியோர் பெருகிவரும் யோகம். சக்கரயோகம் - மாறிமாறி பலவகையான போகபாக்கியங்கள் வருவதும் செல்வதும் மற்றொன்று மேலாக வந்துபோவதுமாக நிகழும் யோகம்.

பருபதயோகம்

ஆம்மேடம் எருது சுறாநண்டு கன்னி
ஐந்திடத்தில் கருநாகம் அமைந்து நிற்கில்
பூமேடை தனில் துயிலும் ராஜயோகம்
பெற்றிடுவார் வேறின்னும் புகலக் கேளீர்!
மாறாதே நான்கு கேந்திரத்தும்
இடைவிடாமல் கிரகம் இருந்ததானால்,
தேமேவும் பருபத யோகம் தானாம்
சீமானாகுவன் என்று ராஜயோகம் செப்பே.

தொகுப்புரை:

மேடம், இடபம், மகரம், கடகம், கன்னி ஆகிய ஐந்து ராசி இடங்களில் ஒன்றில் ராகு இருந்தால், சாதகனுக்கு மலர்ப்படுக்கை மீது துயில்கின்ற ராஜயோகம் அமையும். வேறொரு கிரக அமைப்பினையும் சொல்லுகின்றேன் கேளுங்கள். லக்கினத்தினை முதலாவதாக வைத்து எண்ணப்படும் முறையில், 1, 4, 7, 10 ஆகஅமையும் கேந்திர ராசியிடங்களில் இடைவிடாமல் கிரகங்கள் அமைந்து இருக்குமானால், தெய்வ அருள்பெற்ற பருபத யோகம் என்று பெயர் பெறும். அதனைச் செல்வச் சீமானாகும் ராஜயோகம் என்றும் சொல்வாயாக.

இந்த யோகத்தினை, பருவதயோகம், பர்வத யோகம் என்றும் கூறுவர். பருமிகுதியான பதயோகம் பலவகை அனுபோகங்களைத் தரும் யோகம்.

அரச சுக யோகம்

செப்பிய திரிகோணத்தில் திரகோணத்தான் அத்தாதி
தப்பற உச்சமாய்த் தலத்துறில் ராஜயோகம்,
ஒப்புடன் இரவி பக்கமிரண்டினும் உயர்கோளுற்றால்
அப்படி உபயவெண்சாமரை உடையஅரசராமே. 37

தொகுப்புரை:

லக்கினத்திற்குத் திரிகோணராசிகள் என்று கணக்கிடப்பெறும், 5, 9 ஆம் ராசியாதிபதிகள், குற்ற மில்லாமல், உச்சமாகும் இடத்தில் இருந்தால் ராஜ யோகமாம். நட்புடனான ராசியில் இருக்கும் சூரியனுக்கு இருபக்கமும் அமைந்த ராசி இடங்களில், தீங்கில்லாத நிலையில் நல்ல பலன்களைத் தரும் சுபகிரகங்கள் அமைந்திருந்தால்,

ராஜயோகத்தின்படியே, பக்கத்தில் நின்று வெண்சாமரை வீசும் பணியாட்களையுடைய அரச போகத்தினை உடையவனாவான்.

பாற்கரயோகம்

அரசனார் ஏழில் செவ்வாய் ஆறில் பன்னொன்றில் காரி
இரவியும் மூன்றில் நாலில் ராகுவும் இதிலாரேனும்
பரவியே நிற்குமாகில் பாற்கர யோகம் என்னும்
இரவிமுன் பனிபோல் குற்றம் இராது நன்மை எய்துமன்றே. 38

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் குருவும், ஆறாமிடத்தில் செவ்வாயும், பதினோராம் இடமாகிய லாபஸ்தானத்தில் சனியும், மூன்று, நான்கு ஆகிய இடங்களிலொன்றில் ராகுவும், வரிசையான இடங்களில் அமைந்திருப்பார்களானால், அதனால் பெறும் யோகம் பாற்கரயோகம் (பாஸ்கரயோகம்) என்று சொல்லலாகும்.

இதனால் சாதகன் பெறும் பலனாவது, எந்தவிதமான கெடுதிகளோ, தோஷங்களோ கிரகங்களாலும், திசாபுத்தி நிலைகளாலும், ஏற்பட்டால் அவை, சூரியனைக் கண்ட

பனிபோல் நீங்கி, நன்மை பெறும்படியாகச் செய்யுமென்பதாகும். பாற்கரன் - சூரியன்.

வாக்கு யோகம்

ஏய லக்கின மீனத்தோற்கு எழில் தண்டு நண்டு எருத்தில்
நேயமாய் கருங்கோளொன்று நின்றிடில் ராஜயோகம்
ஆய லக்கினமே கும்பம் அதனில் பொன் அணுக, புந்தி
தூய நல்லுச்சமாக துரை நல்வாக்கு அரசாய் சொல்வாய். 39

தொகுப்புரை:

பொருந்திய சென்ம லக்கினம் மீனராசி ஆக இருக்கவும். மிதுனத்திலும், கடகத்திலும், இடபத்திலும் (ஏதாவதொன்றில்)

நட்புடன் ராகு என்னும் கருங்கோள் நிற்பதாயின் அது ராஜயோகப் பலனைத் தருவதாகும்.

உண்டான சென்மலக்கினம் கும்பமாக அதில் குரு சேர்ந்து நிற்கவும், புதன் கன்னியா ராசியில் ஆட்சி உச்சம் பெறவும் பிறந்தவன், நல்ல உயர்ந்த அந்தஸ்து உடையவனாகவும், நல்ல வாக்கு வன்மையும் பலனும் உடையவனாகவும் அரசனைப்போல் இருப்பான் என்று சொல்லுவாயாக.

சுப சீவன யோகம்

சொல்லிய சென்மந்தன்னில் சோமனும் குருவும் கூடி
நல்லதோர் பத்தில் நான்கில் சுக்கிரன் நயந்து நிற்க,
வல்லவர் இவரை உச்சமானதோர் சனியும் காண
வல்லமை அரசர்க் கொப்பாய் வாழ்வன் மானிலத்தின் மீதே. 40

தொகுப்புரை:

குறித்துச் சொல்லப்பட்ட, லக்கினராசியில் சந்திரனும் குருவும் கூடி நிற்க, நல்ல இடமாகிய பத்தாம் இடத்திலோ நான்காம் இடத்திலோ சுக்கிரன் நட்புடன் இருக்கவும் வல்லவர்களாக குரு சந்திரன் சுக்கிரன் இவர்கள் பொருந்தியிருக்கவும் இவர்களை துலாத்தில் உச்சம் பெற்ற சனி பார்ப்பதாயின்

எல்லாவகையான திறமைகளையும் பெற்ற அரசனுக்கு ஒப்பாக உலகத்தில் சாதகன் வாழ்ந்திருப்பான் என்று சொல்லலாகும்.

ஆனாத யோகம்

மாதே கேள் தர்மயோகவியோககர்ம மன்னனோடு
தாதையும் கூடி எந்தத் தலத்தினில் இருந்தபோதும்
ஒதிய ஒருவர் வீட்டில் ஒருவர் மாறாயிருந்த
போதும் ஆனாதையோகம் பொருந்திடும் ராஜயோகம். 41

தொகுப்புரை:

பெண்ணே! கேட்பாயாக, சாதகனின் கர்மயோக பலன்களைக் காண்போமானால், செனனராசிக்குப் பத்தாம் இடத்தைக் கொண்டு சொல்ல வேண்டும். எனவே,

பத்தாம் வீட்டின் அதிபதியாகிய கிரகமும், தாதை எனும் தகப்பனைப்பற்றிய ஒன்பதாம் இராசிக்கு உடையவனும், தங்கள் சொந்த ராசி வீட்டில் இல்லாமல், வேறு எந்த ராசியிடத்தில் இருந்தாலும்,

அல்லது ஒருவர் வீட்டில் ஒருவர் மாறியிருந்தாலும் எதிர்பாராத வகையில் செல்வத்தால் சிறந்திடும் ஆனாதை ராஜயோகமாக அமையும் எனலாகும்.

ஆனாதயோகம் என்பதனையே சுவடியில் ஆனாதை யோகமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம்.

(ஆனா - எதிர்பாராத, பொருந்தாத - யோகம்)

பர்வத ராஜயோகம்

யோகமாம் லக்கினாதிபதி இருந்த வீடுடையோன் உச்சம்
ஆக கேந்திரத்து உற்றாலும் வல்ல பர்வத யோகமாம்
ஏகமாம் மனையோன் தானும் இருந்த அங்கிசத்தானும்
வாகு கேந்திர கோணத்தில் வரின் மன்னர்க்கே மன்னனாவான். 42

தொகுப்புரை:

சென்ன ராசிக்கு அதிபதியான கிரகம் எந்த ராசிவீட்டில் இருக்கின்றானோ, அந்த வீட்டிற்குடைய கிரகம் உச்சனாக,

லக்கினத்திற்கு 1, 4, 7, 10 ஆகிய ராசிகளாகிய கேந்திரராசியில் ஒன்றில் இருந்தாலும், பர்வத யோகமென்று சொல்லுவார்கள்.

ஒற்றை வீடுகளாகிய கடகம், சிம்மம் ஆகிய ராசிகளுக்கு அதிபதிகளாகிய சந்திரன் சூரியன் இவர்கள்

எந்த இடத்தில் அங்கிசம் பெற்றார்களோ அந்த அங்கிசத்து அதிபதி கேந்திர ஸ்தானத்திலாயினும், லக்கினத்திற்கு 5, 9 ஆம் இடங்களாகிய திரிகோண ராசியிலாயினும் இருந்தால், அரசர்க்கெல்லாம் அரசனாகும் பர்வத ராஜயோகம் நிகழும் என்பர்.

பர்வதம் என்றால் உயர்ந்த மலை என்பதாகும். ஒரு சாதக ராசி மண்டலத்தின் இரண்டு கண்களாகக் காண்பது சூரியன், சந்திரன் ஆகிய இரண்டு ஒளிதரும் கோள்களையே யாகும். எனவே பர்வத யோகத்திற்கு அதிபதிகளாக இவ்விருவருமே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பர்வத யோகம்

மன்னிய சென்ம முன்பின் மனைக்கிறை இருவர் கூடி
பன்னு கேந்திரத்திருக்கில் பர்வத யோகம் என்ப
மின்னனையார்க்கு நேயன் வெகுசனவுபாக்கியவான் வேந்தன்
துன்னிய கீர்த்தியோடு துர்க்காதிபதியு மாவான். 43

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு முன்னும் பின்னும் அமைந்துள்ள ராசியிடங்களுக்குரிய கிரகங்களில் இரண்டு கிரகங்கள் சேர்ந்து, கேந்திரத்தானத்தில் இருப்பதும் பர்வத யோகம் என்றே சொல்லப்படும்.

இதனால் சாதகன் பெறும் பலன்கள், பெண்களுக்குப் பிரியமான நட்புடையவனாகவும், அனேக மக்களுக்கு உதவிகள் செய்பவனாகவும், அரசனைப் போல் உயர்வு பெற்றவனாகவும், மிகுந்த கீர்த்தியோடு கோட்டைக்காவலின் தலைவனாகவும் ஆவான்.

துர்க்கம் - கோட்டை கொத்தம். மிகப்பெரிய பொறுப்புள்ள அரசுக்காவல் தலைவனாக ஆவான் என்பதாம்.

தேவேந்திர யோகம்

ஆனதோர் பணம்பாதத்தில் அடுத்த லக்கினத்தில் சோமன்
தானுறு [illegible]த்தில் தமனியன் தானும் மேவ
வானவர்க்கு அரசயோகம், மதிமகன் உச்சமாகக்
கூனவில் அங்கிசத்தில் உச்சத்தில் செங்கோல் வேந்தனாகும். 44

தொகுப்புரை:

பணபரத்தானங்களுக்குரிய பாதத்தில், அடுத்த லக்கினத்தில் சந்திரன் இருக்கவும், கேந்திரத்தில் குரு இருக்கவும் பிறந்தவன் இந்திரயோகம் பெறுவான். புதன் உச்சமாக, தனுர் ராசியில் அங்கிசம் பெறும் காலத்தில் செங்கோல் ஏந்தும் அரசனைப்போல் ஆவான் என்பர். இவ்வாறு கிரகங்கள் அமைந்த சாதகத்தினைத் தேவேந்திரயோக சாதகம் என்று கூறுவர். இதனை பணம்பரத்திலும், லக்கினத்திலும் சந்திரன் இருக்க, குரு அதற்கு கேந்திரத்தானத்திலிருந்தால் இத்தகைய தேவே ந்திர போக யோகம் நிகழும் என்று காணவேண்டும்.

இந்த யோகம் வலிமை பெறுவது புதன் உச்சமாக அமைந்து, தனுர் ராசிக்கு அங்கிசத்திலிருபதாகும் என்பது கவியின் குறிப்பாகும்.

பாதாங்கிச பலத்தால் - யோகம் காணல்

ஆகிய மகத்தின் முதல்பாகத்தில் இரவி
அசுபதியின் முதற்காலில் செவ்வாய்
அஸ்த்த மூன்றாங்காலிடத்தில் புந்தி
அவிட்டமாம் திரயபாதத்தில்
வாகுசேர் அசுபதி உபையத் தாளிடத்து
மருவியே மந்தனார் இருக்க
வண்மைசேர் மூலத்து முதலடிக்கு அரசன்
மருவு ரோகணி இருகாலும்

பாதுசேர் மொழியாய், சித்திரை மூன்றாம்
பதத்திலும் சுக்கிரன் உரையும்
பலத்திரயக் காணம் நவாங்கிசையும்
பரவிய துவாசாங்கிசையும்
மோகமாம் திரியாங்கிசாங்கிசைய ராசி
முதலிந்த வகைக்கெல்லாம் காணும்
முறையினில் வெள்ளி கும்பத்தில் உதித்தோன்
அரசனாம் என்றே மொழிவர் முன்னூல் உணர்ந்தோரே. 45

தொகுப்புரை:

அம்சராசி மண்டலக் கணிப்பில், மக நட்சத்திரத்து முதல் பாதத்தில் சூரியனும், அசுவனி இரண்டாம் பாதத்தில் செவ்வாயும், அஸ்தம் மூன்றாவது பாதத்தில் புதனும், அவிட்டம் மூன்றாவது பாதத்தில் அல்லது அசுபதி இரண்டாம் பாதத்தில் சனியும், மூலம் முதல் பாதத்தில் குருவும், ரோகிணி இரண்டாம் காலிலும், சித்திரை மூன்றாம் காலிலும் (பாதத்திலும்) சுக்கிரன் இருக்கவும், திரேக்காணம், நவாங்கிசம், துவாதசாங்கிசம், திரிசாங்கிசம், ராசிகள் ஆகியவற்றில் எல்லாம், மேலே காணும் முறைகளில் நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் அங்கிசை வகையில் பொருந்தியிருக்கவும், கும்ப ராசியில் சுக்கிரன் இருக்கப் பிறந்தவன், கற்கண்டை ஒத்த இனிய சொல்லை உடைய பெண்ணே! அரசனாவா னென்று முன்னோர் கூறிய சோதிட நூல்களைக் கற்றுணர்ந்த சோதிடப் புலவர்கள் கூறுவார்கள்.

ராசி உச்சக் கிரக யோகம் காணல்

மொழிந்திடும் சிங்கத்து அரசனு மிருக்க
முறையினில் வெள்ளி கும்பத்தில்
முயன்று மால் இந்து உச்சமாயிருக்க
முதலிவர் நால்வரும் அடைவே
ஒழிந்துறாது உச்சம் எய்திட இராச
யோகமாம் கடக ராசியினில்
ஒண்மதி அரசன் கூடவும் ஞாயன்
ஒருவனே ஏழினில் ஏற்க

கழிந்தவாறல்லால் மற்றுள்ளோர் இவரைக்
காணவும்ராச யோகமதாம்
கருதிடும்ஒருகோள் உச்சமாய் மற்றோர்
கமழும்நட்பு ஆட்சியில் இருக்க
வழிந்திடும் கருணை வெள்ளி மீனத்தில்
மன்னவன் காரிவில்லிடத்தில்
மதிரு[illegible]டத்தில் மால் இருக்க
[illegible]ன் மன்னனாகுவனே. 46

தொகுப்புரை:

சிறப்பாகச் சொல்லப்படும் சிங்கராசியில் குரு இருக்கவும், முறையாக சுக்கிரன் கும்பத்தில் இருக்கவும், புதன் சந்திரன் ஆகிய இருவரும் முறையே, கன்னி, இடபம் ஆகிய இராசிகளில் உச்சம் பெற்று இருக்கவும் - இராசயோக பலன் தருவதாகும்.

மற்றும், முதலாவதாக யோக காரகர்களாக இங்கு சொல்லப்பட்ட குரு, சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய நால்வரும் ஒரு சாதகத்தில் குறைவுபடாது, குரு கடகத்திலும், சுக்கிரன் மீனத்திலும், புதன் கன்னியிலும், சந்திரன் இடபத்திலும் உச்சம் பெற்ற நிலையில் இருப்பார்களாயின் குறைவில்லாத ராஜ அந்தஸ்தும் போக பாக்கியங்களும் உள்ளவனாவான்.

மேலும், கடக ராசியில் சந்திரனும் குருவும் கூடியிருக்கவும், அல்லது குரு ஒருவனே ஏழாமிடத்தில் இருக்கவும், மேலே கருதப்பட்ட சுபக்கோள்களுள் ஒருகோள் உச்சஸ்தானத்தில் இருக்கவும், மற்ற மூன்று கிரகங்களும் கெடாமல் நட்பு ஆட்சி ஸ்தானங்களில் இருக்கவும், மேலே சொன்ன நால்வரில் குரு நீக்கமான மூவரும் கடக குருவைக் காண்பதாக அமைவதும் ராஜயோகமாகும்.

சுக்கிரன் மீனத்திலும், குருவும், சனியும் தனுசிலும், கன்னியில் புதனும் இருக்கும் அம்சத்தில் பிறந்தவன் திண்ணமாக அரசநிலையினைப் பெற்று வாழ்வான் என்பதாகும்.

முறை பெறும் அரசயோகங்கள் காணல்

ஆகு வாகனத்தோன் அருளினால் கடகத்து
அரசனும், இரவி மேடத்தில்
அம்புலிமகன் சுக்கிரன் எருது ஏற
அரசர்கள் யோகமென்றுரைப்பார்
வாகுசேர் வெள்ளி லக்கினத்தி லிருக்க
மதி உச்சமாயிருக்க
மன்னவன் கதிரோன் தன்னகத்திருக்க
மருள்நல் அரச யோகமாம்
ஏகமாம் மதிக்கு ஆறு ஏழு எட்டினில்
எழில் புதன் குரு பிருகு இருக்க
இராசயோகமதாம் பாம்பல்லாது
எழுவரும் தன்னகத்து உரின் யோகமாம்
ஏகமால் வெள்ளி உச்சமாய் தனுவில்
முனிவிலா சசியுடன் குருவிருக்க
முந்து தேளிடத்து அங்காரனிருக்க
முறையிறையோகம் என்றுரைப்பார். 47

தொகுப்புரை:

பெருச்சாளி வாகனத்தை உடைய விநாயகப் பெருமானின் அருளினால் அரசயோகப் பல பாதங்களைக் கூறுவோம். கடகராசியில் குருவும், சூரியன் மேடராசியிலும், சந்தினின் மகனெனப்படும் புதனும் சுக்கிரனும் சேர்ந்து இடபராசியிலும் இருப்பார்களானால் அது அரசயோகம் என்று சொல்லுவார்கள்.

இது தவிர, சுக்கிரன் சென்ம லக்கினத்திலிருக்க, சந்திரன் இடபராசியில் உச்சனாக இருக்கவும், குருவும் சூரியனும் அவரவர் சுயஸ்தானங்களில் இருக்கவும், வியப்பைத் தரும் நல்ல அரசயோகமாகும்.

மற்றும், தனி ராசியுடைய சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டு, ஆகிய இடங்களில் முறையே வரிசையாக ஆறில் புதனும், ஏழில் குருவும், எட்டில் சுக்கிரனும் இருக்கவும் - ராஜயோகமேயாகும்.

மேலும், ராகு, கேது, ஆகிய இரண்டு பாம்புகளும் நீக்கமாக மற்ற ஏழு கிரகங்களும் அவரவர்களுக்குச் சொந்தமான ராசி வீடுகளில் இருப்பார்களாயின் - அதுவும் ராஜயோகமாகவே அமையும். இவையல்லாமல், தனித்தனியே புதனும் சுக்கிரனும் கன்னியில் புதனும், மீனத்தில் சுக்கிரனும் உச்சம் பெற்று இருக்கவும், தனுர் ராசியில் நட்பான சந்திரனுடன் குருவும் சேர்ந்திருக்கவும், விருச்சிகராசியில் செவ்வாய் ஆட்சியுடன் அமைந்திருக்கும் அமைப்பில் சாதகம் அமைந்திருப்பது முறையான அரசயோகம் என்று அறிஞர் சொல்லுவார்கள்.

அரச முக சௌந்தர்ய யோகம்

உரைசெரி குருவும்புலி கதிர்உச்சம்
உயர்குசன் புந்தி ஏழிடத்தில்
உரைந்திடச் சனியும்சுறாவுற ராச
யோகம்உச்சம் கதிர்பெறவும்
அரசனும்தனுவிலுரினும், மேடத்தில்
அம்புலி குரு புகரிருக்க
அரசயோகமதாம்எரில்லக்கினமாய்
அம்புலி நிறையும்நண்டேறப்
பரவியவாறு கோளும்அம்மதியைப்
பார்க்க அந்தியத்தில் மன்னவனாம்
பாக்கிய தனலாபாதி சந்திரனும்
பண்பொடு கேந்திரத்தில் இருக்கப்
பிருகு லாபத்தில் ஆட்சியில் இருக்க
பிரபல ராச யோகமாம் மற்றும்
பெருகு மால் வெள்ளி சனியுமே கூடில்
பெறும்முகசவுந்தர்யம்உளனாம். 48

தொகுப்புரை:

புகழ்ந்து சொல்லப்படும் குருவும், அம்புலி என்னும் சந்திரனும், சூரியனும் இவர்கள் உச்ச ராசிகளிலும், செவ்வாயும் புதனும் ஏழாம் இடத்தில் இருக்கவும், சனி மகரராசியில் ஆட்சி பெற்றிருப்பதும் அரச யோகமாம். மற்றும்

சூரியன் மேடத்தில் உச்சம் பெற்றிருக்கவும், குரு தனுசுராசியில் உச்சம் பெற்றிருந்தாலும் அல்லது மேடராசியில் சந்திரன் குரு சுக்கிரன் ஆகியோர் இருந்தாலும் ராச யோகமென்றே ஆகும்.

இடப ராசி லக்கினமாய், சந்திரன் தனது வீடாகி கடகத்தில் இருக்கவும், அந்த சந்திரனை மற்றைய ஆறு கிரகங்களும் பார்க்குமானால், சாதகனது வாழ்க்கையின் அந்தியத்தில் ராச யோக பலனை அனுபவிப்பான்.

லக்கினத்திற்கு பாக்கியாதிபதியாகிய இரண்டாமிடத்தோன், ஒன்பதாம் இடத்தானாகிய தனாதிபதி, பதினோராம் இடத்தானாகிய லாபாதிபதி ஆகியோரும் சந்திரனும் 1, 4, 7, 10 ஆகிய கேந்திரஸ்தானங்களில் இருக்கவும், சுக்கிரன் லாபத்தானத்தில் சுபனாக ஆட்சியில் இருக்கவும் பிறந்தவன், பிரபலமான ராஜயோகத்தினைப் பெறுவான். மேலும்,

புதனானவன் சுக்கிரன் சனி ஆகியோருடன் கூடி, இருப்பானாயின் சாதகன் முகக் கவர்ச்சியழகு பெற்றுள்ளவனாக இருப்பான் என்பதாம்.

நாபியோகம் - பலன்

உள்ளதோர் கடக லக்கின மாக
உயர் குசன் குரு இருவருமாய்
உற்றதோர் மேடம் நண்டு இடத்தோர்
உறைந்திடப் பாவரை ஒழித்துத்
தெள்ளிமையாக உறைந்திடாதிருக்க
சீவ துரகாதிபனாவன்
செய்ய லக்கினம் ஆறு ஏழுடன் எட்டில்
செப்புமித் தலங்கள் நான்கிலும்
கள்ளமாம் பாவரின்றி நல்லோர்கள்
காதலித்து இடைவிடாது இருக்கின்
கருதிய நாபியோகமாம் இதற்கு
கமழ் பலன் மந்திரியாகி

வள்ளலாய் சேனைத்தலைவராய், கலவி
மாதர்கள் பலர்க்கு நாயகனாய்
வாலிப முதலாய் வெகுதனம் படைத்து
வாழ்வரென்றுரைப்பர் மாதவரே. 49

தொகுப்புரை:

...த்தில், லக்கினம் கடகமாக, செவ்வாய் குரு ஆகிய இருவரும் சேர்ந்து மேடம் கடகம் ஆகிய ராசிகளிலொன்றில் பாபகிரகங்களோடு சேராமலும் அவர்களின் பார்வை பெறாமலும் சுபாதிபதிகளாக இருப்பதனால் சாதகன் நிறைந்த ஆயுளுடன் குதிரைப் படைக்குத் தலைவனுமாக ஆவான்.

தூய்மையான சென்ன லக்கினராசி, ஆறாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் ஆகிய நான்கு ராசி இடங்களிலும் பாபக்கிரகங்களில்லாமல் சுபகிரகங்கள் இடைவிடாமல் வரிசையாக இருப்பதனால், அத்தகைய கிரக அமைப்பால் சொல்லப்படுவது நாபியோகமாகும் என்பதாகும்.

இந்த யோகத்தால் சாதகன் பெறும் பலன்கள், மந்திரியாகி, வாரி வழங்கும் வள்ளலாகவும் சேனைத்தலைவனாகவும் இருப்பான். மற்றும்

காமத்துக்குரிய பெண்கள் பலர்க்கு நாயகனாக இருப்பதுடன், வாலிப வயது முதலாக மிகுந்த செல்வங்களையெல்லாம் பெற்று சுகபோக வீரவாழ்வில் இருப்பானென்று சோதிடப் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

மாலா, கத்திரி, கேந்திர - யோகங்கள்

மாதுகேள்! மாலாயோகம் அம்புலிக்கு
மன்னிய பத்தினில் குருவும்
வந்து தான் இருக்கில் தனபதியாகி
மருவு சேனைக்கு அதிபனுமாம்
ஓதிய இரண்டில் இருவரும் ஐந்தில்
உபயரும் கூடியே யிருக்கில்
உரைப்பர் கத்திரி யோகபலன்
தருமமொன்றையும் ஆகவொட்டாது

தீதறும் ஒன்றில் நான்கு பத்து ஏழில்
சேர ஒன்பதின்மரும் இருக்கில்
செப்பிடும் அரசகேந்திர யோகம்
தெரிபலன் மகம் புரிந்திடுவன்
நீதியாய் தனங்கள்தேடி வாழ்ந்திருப்பன்
நேமியில் தமர் முதல் பலரும்
நேயமாய்த் துதிக்கத் தனிமனுசனுமாய்
நிருபர் கொண்டாடவே இருப்பன். 50

தொகுப்புரை:

பெண்ணே கேள்! சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் குரு இருந்தால் அது மாலா யோகமாகும். இதன் பலன், தனபதியாகி சேனையில் சேர்ந்து அதற்குத் தலைவனுமாவான்.

சென்ன லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் குருவும் சந்திரனும் கூடியிருக்கவும், ஐந்தாமிடமாகிய பூர்வ புண்ணியஸ்தானத்தில் உபய ராசிக்குரிய கிரகங்கள் கூடியே இருக்கவுமானால் அதனைக் கத்திரியோகம் என்பர். கத்திரி யோகத்தால் வரும் பலனாவது, எத்தகைய நல்ல காரியங்களையும் செய்யவொட்டாமல் தடை செய்யும்.

தீமையில்லாத லக்கினம், நான்கு, பத்து, ஏழு ஆகிய ராசியிடங்களில், வரிசையாக தனித்தும் கூடியும் ஒன்பது கிரகங்களும் இருந்தால், அது புகழ்ந்து சொல்லப்படும் அரச கேந்திர யோகமாகும்.

இந்த யோகத்தால் சாதகன் பெறும் பலன்களாவன, யாகம் செய்வான் அல்லது செய்விப்பான். நீதியோடு செல்வத்தைச் சம்பாதித்து அமைதியாக சுகமாக வாழ்ந்திருப்பான். நாட்டில், தனது சுற்றத்தார்கள் முதலாக மக்கள் பலரும், நல்ல நேசத்துடன் துதிக்கும்படியாக, யாவரினும் தனிப்படவுயர்ந்த மனிதனாகவும் பெரியோர்களால் பாராட்டப்பெறுபவனுமாக இருப்பான்.

இப்பாடலில் மூன்று யோகங்களுக்குரிய கிரகாம்சங்களுடன் அவ்வவற்றின் பலன்களும் சொல்லப்பட்டுள்ளன.

1. மாலாயோகம் - செல்வம், சேனாதிபதி பலன்

2. கத்திரி யோகம் - எதையும் செய்யவிடாத பலன்

3. அரச கேந்திர யோகம் - யாகம், சுகம், புகழ் ஆகியவற்றைப் பெறும் யோக பலன்.

தீமை செய்யும் யோகங்கள்

இருமைசேர் பத்தில் நான்கினில் கிரகம்
இருந்திடில் விக்கயோகமதாம்
இதன்பலன் தூது நடந்துதான் திரிந்தே
இன்னலால் கலகமிட்டிடுவான்
ஒருமைசேர் சன்மந்தனிலே பாவர்
ஓரேழினில் உத்தமர் இருக்க
ஓதிடு மவை யோகங்கள் பொய் உரைப்பன்
உறுசிறை வெகுதினமிருப்பன்
பருமைசேர் உச்சகேந்திரம் தன்னில்
பாவர்கள் மேவியே இருக்கில்
பாவியாம் குரூர மன்னவனாகிப்
பார்தனக் கரசனாய் இருப்பான்
அருமைசேர் ஒன்று ஐந்து ஒன்பதில் கிரகம்
அணுகில் சிங்கடாடவியோகம்
அதன்பலன் தீர்க்க ஆயுசு உண்டாகி
அம்புவி தன்னில் உற்றிடுவன். 51

தொகுப்புரை:

சாதகனது வாழ்நாளிலும் பின்னரும் அடையும் பலாபலன்களை அறிதற்குரிய கர்மதானமாகிய பத்தாமிடத்திலும், சுபாதிபத்யங்களை அறியும் நான்காமிடத்திலும், குரு சந்திரன் சுக்கிரன் புதன் ஆகிய சுபகிரகங்கள் இருக்குமேயானால், அதனை விக்கயோகம் என்று சொல்லுவர். அதன் பலன், தனக்குத் தொடர்பு இல்லாதவர்களிடம், வலிந்து தூதுபோல் நடந்து சென்று, பலவாறு பலரிடம் திரிந்து, ஒருவருக்கொருவர் பகையுண்டாகுமாறு கோள்மூட்டி அதனால் பலவிதமான துன்பங்களைச் செய்து கலகமும் உண்டாகுமாறு செய்திடுவான்.

சென்ம லக்கினத்தில், பாபக்கிரகங்களாகிய சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்களில் ஒருவரோ பலரோ இருக்கவும், ஏழாமிடத்தில் சுபகிரகங்கள் தனித்தோ கூடியோ நட்புடன் இருக்கவும் இதனை அவயோக சாதகம் என்றுரைப்பர்.

இதன் பலன்களாவது, பொய் சொல்லும் வழக்கமுடையவனாகவும், கடுங்காவற்சிறையில் பல நாட்கள் இருக்கும் தண்டனையைப் பெறுபவனாகவும் இருப்பான் என்பர்.

லக்கினம் முதலாக 4, 7, 10 என்று எண்ணப்படும் கேந்திரஸ்தானங்களில் பாவக்கிரகங்கள் உச்ச கேந்திரமாகவும்பிறவாறும் சென்று இருப்பார்களாயின்

அதன் பலன், மிகுந்த பாபியாகவும், கொடிய மன்னனாகவும் ஆகி நாட்டிற்கு அரசனாக இருப்பான்.

அருமை சேர்ந்த ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய ராசியிடங்களில் சுபகிரகங்கள் இருக்குமானால் அதனை சிங்கடாடவியோகம் என்பர். அதன் பலன்,

சாதகன் நிறைவான ஆயுள் உண்டாகி நலமுடன் உலகில் சீவித்திருப்பான் என்பதாம்.

இதனால் 1, விக்கயோகம், 2. அவையோகம், 3. சிங்கடாடவி யோகம் ஆகிய மூன்றும் கெடுதி செய்யும் யோகங்கள் என்பது அறிவதாகும்.

வஞ்சிர யோகம்

உற்றமெய் லாபமதில் கிரகங்கள்
உறில் இல்லை யோகமாம், உழுவன்
ஒருமை நல்லோர் ஒன்று ஏழினில் இருக்க
உண்மைசேர் வச்சிர யோகம்
மற்றதின் பலன், தீர்க்காயுளும் கீர்த்தி
மன்னிய கிருபை உள்ளவனாம்
மன்னவன் சனி செவ்வாய் கதிர் நால்வர்
மருவி மூன்றாம் இடத்திலிருக்கப்

பெற்றிடில் உச்சாங்கிசம் சுயாங்கிசங்கள்
பெறின் மகராச யோகந்தான்
பெருமையில் நால்வர் சென்மமீதிருக்கப்
பிறை தனது அகத்துறில் புவியில்
குற்றமில்லா மகராசனாம், மெய்யில்
குறைவற நிறைமதி இருக்க
கோளொரு நால்வர் மதிதனைக் காண
கொற்றவனா மெனக் கூறும். 52

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திலும், பதினோராம் இடமாகிய லாபத்தானத்திலும் பாபகிரகங்கள் இருந்தால் சாதகனுக்கு எந்த யோகமும் இல்லை எனலாம். அவன் பாடுபட்டுப் பலனைக் காணும் உழவனாகவே இருப்பான்.

சுபகிரகங்கள் லக்கினத்திலும் ஏழாம் இடத்திலும் இருந்தால் உண்மையான பலன்களைத் தரும் வச்சிரயோகமாம். அதனால் பெறும் பலன், நிறைந்த ஆயுளுடன் கீர்த்தி, பொருந்திய கருணை உள்ளவனாக இருப்பான். மற்றும்

குரு, சனி, செவ்வாய், சூரியன் ஆகிய நால்வரும் சேர்ந்து லக்கினத்திற்கு மூன்றாம் ராசியிடத்தில், உச்சாங்கிசமாகவும் சுயாங்கிசமாகவும் இருக்கப் பெறுவார்களாயின், அதனால் மகராச யோகம் உண்டாகும்.

பெருமையுடன் மேலே கூறப்பட்ட நான்கு கிரகங்களும் சென்ம லக்கினத்தில் இருக்கவும், சந்திரன் தனது சொந்த வீடாகிய கடகத்தில் இருப்பானாயின், சாதகன், உலகத்தில் எத்தகைய குறையும் இல்லாத மகராசனைப்போல இருப்பான்.

குறைவில்லாமல் நிறைமதியாகிய பூரணச சந்திரன் கடகத்திலிருக்க, அவனை மேலே குறித்த குரு, சனி, செவ்வாய், சூரியன் ஆகிய நான்கு கிரகங்களும் பார்ப்பார்களாயின் சாதகன் நிர்வாகத்திறமை பெற்ற வலிமையுள்ள ஆட்சியாளனாக ஆவான் என்று உறுதியாகக் கூறலாகும்.

இழப்பும் பிழைப்பும் தரும் யோகங்கள்

கூறரிமதிசேய்உச்சமாய்ச் சென்மம்
குலவுமில் மிதுனம் மேல்பாரில்
கொற்றவன் சென்மத்து இந்தொடு சனியும்
குசனுமே கூட வில்லதனில்
எரிடக் கதிர் மேடத்துற மன்னாம்
இயைந்த முன்புராதன பூமி
இழந்து போய்விடுவன், இடபலக்கினமாய்
அதில் பிறை சனி குரு வெய்யோன்
பேருடனிருக்கில் ராஜயோக மதாம்
பின்னுமே, கன்னிலக்கினமாய்
பிறைமகன், உச்சமாக நாலிடத்தில்
பிருகு சந்திரன் குரு வீருக்க
வீடு ஐந்தாம் இடத்தினில் சனிசேய்
மேவியே இருவரும் இருக்க
வெற்றிநற் குணங்களுள்ள மன்னவனாம்
மேதினி நீதியாய்ப்புரப்பன். 53

தொகுப்புரை:

சொல்லுதற்கு அரிய சந்திரனும் செவ்வாயும் உச்சம் பெற்றுள்ள நிலையில், சென்ன லக்கினம் தனுசு மிதுனம் இவைகளில் ஒன்றில் ஆகவும், அதற்கு மேல், குரு ஜென்ம லக்கினத்தில் சந்திரன் சனி செவ்வாய் ஆகியோருடன் கூடி இருக்கவும், அல்லது தனுசுராசியில் இருக்கவும், சூரியன் மேடராசியில் இருக்கவும் சாதகன் மன்னனாவான், ஆயினும் முன்னர் பரம்பரையாகவுள்ள புராதன பூமியாகிய நிலபுலன்களை முழுவதும் இழந்து போவான்.

இடபராசி லக்கினமாக, அதில் வளர்பிறைச் சந்திரன் சனி, குரு, சூரியன் இவர்கள் கெடாது இருந்தார்களாயின் ராசயோகமென்றே சொல்லலாம். மற்றும், கன்னி ராசி லக்கினமாக புதன் உச்சமாக, நான்காமிடத்தில் சுக்கிரன் சந்திரன் குரு ஆகியோர் கூடியிருக்க, ஐந்தாம் இடத்தில் சனி, செவ்வாய் ஆகிய இருவரும் சென்று சேர்ந்திருக்கப் பிறந்தவன்,

வெற்றியுள்ளவனும், நல்ல குணங்களுள்ளவனுமாகிய நாட்டுத்தலைவனாவான், அவன் தனது அதிகாரத்தினை நீதிநெறிமுறையோடு செலுத்திப் பாதுகாப்பவனுமாவான்.

பொதுவாக இவ்வாறு பல்வேறுபட்ட கிரக நிலைகளில் சொல்லப்படும் யோக சாதக பாவகங்களில், சென்ம லக்கினத்தினையே ஆதியாகக் கொண்டு மற்ற இடங்களைப் பாடலில் குறித்தபடி எண்ணிக்கை அல்லது ராசியிடத்திற் கானது என்பதனைக் கண்டு அறிந்து பலன் அறிதலாகு மென்பது பொதுவான குறிப்பாகும்.

சந்தான, பூபார - யோகம்

புரக்குமே கன்னி ஆயதில் புதனும்
பொருந்திடப் பத்தினில் சுக்கிரன்
பொன் பிறை மூவர் கூடி யிருக்க
பூபதியாகியும் இருப்பன்
பரக்குமெய் சிங்கமாய் அதில் செவ்வாய்
பரிந்துற, ஏழிடம் தன்னில்
பனிமதி அரசன் இருக்கவே, தனுசில்
பானுவின் புத்திரன் மேவ
இரக்கமாய் மைந்தர்தானும் இல்லாமல்
இப்புவி புரக்கும் மன்னவனாம்
எண்ணிப் பத்தில் சதிபதி பதினொன்று
ஏழில் சனி, லக்கினத்து அரசன்
வருக்கமாய் இரண்டில் புதன் குகன் இருக்க
வாகனம் திரவியம் மருவ
மாநிலம் புரக்கும் நரேந்திரனாவான்
வாள் அயில் போல் விழியாளே. 54

தொகுப்புரை:

வாளைப்போன்ற புருவமும், முருகனின் அயில் என்னும் வேலைப்போன்ற கண்ணும் விழியும் படைத்த பெண்ணே! சென்மலக்கினம் கன்னியாக இருக்க அதில் புதன் பொருந்தி இருக்கவும், பத்தாமிடத்தில் சுக்கிரன், குரு, சந்திரன் ஆகிய மூவரும் கூடியிருக்க, சாதகன் நாடாளும் அரசனாகி இருப்பான். சிங்கராசியில் செவ்வாய் இருக்கவும், அந்த லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரனும் குருவும் கூடி இருக்கவும், தனுசு ராசியில் பானுவின் புத்திரனாகிய சனி

சென்றிருக்கவும், செனனமான சாதகன் புத்திரபாக்கியம் இல்லாதவனாக இரக்கப்படுபவனாக இந்த பூமியை ஆட்சிசெய்யும் மன்னனாக இருப்பான்.

லக்கினத்திலிருந்து எண்ணப்படும் பத்தாம் இடமாகிய சீவனஸ்தானத்தில் சுக்கிரனும், பதினொன்று அல்லது ஏழாமிடத்தில் சனியும், லக்கினத்தில் குருவும், வரிசைப்படும் இரண்டாமிடத்தில் புதனும் செவ்வாயும் இருக்கப் பிறந்தவன்.

உயர்ந்த வாகனங்கள், மிகுந்த திரவியங்கள் உள்ளவனாக, இந்த பூமியை ஆட்சி செய்யும் மக்கள் தலைவனாகும் மன்னவனாக ஆவான் என்று அறிவாயாக.

சென்ன லக்கினம் முதலாகப் பன்னிரண்டு ராசிகளின் அம்சங்களைக் கொண்டு அறியப்பெறும் விளக்கமான பலன்கள்.

முதலாம் இடம் சென்ன லக்கினப் பலன்கள்-பகுதி 1

இரட்டைப்பிள்ளை

ஆடு அரி �ளரில் வெய்யோன் அமர்ந்திடில் மற்றக் கோள்கள்
நாடிய உபைய லக்கினத்திலும் பலமாய் நண்ணில்
கூடிய குழவி இரண்டாம் குசம் ஏழில் கதிரோன் எட்டில்
நீடி உதித்திடில் சரத்தில் மற்றோர் நிற்பதில் பலன்களில்லை. /

தொகுப்புரை:

மேடம், சிங்கம், இடபம் ஆகிய ராசிகளில் ஒன்றில் சூரியன் நிற்கவும், மற்ற கிரகங்கள், தனித்தோ உபய ராசிகளில் பலமாய் இருந்தால், இரட்டைப் பிள்ளை பிறக்கும்.

செவ்வாய் லக்கினத்திற்கு ஏழிலும், சூரியன் எட்டிலும் நிலைத்து இருக்க, மற்றைய கிரகங்கள் சரராசிகளில் நிற்பதானால் எந்தவிதமான புதிய பலன்களும் இல்லை. இயற்கையாகவே ஜனனம் ஏற்படும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

ஆடு-மேடராசி, அரி-சிங்கம், சிங்கராசி. குழவி-பிறக்கும் பிள்ளை. குசன்-செவ்வாய், சரத்தில்-சரராசிகளில், மற்றோர்-மற்ற கிரகங்கள்.

பலன்களில்லை-வேறுபட்ட பலன்கள் சொல்வதற்கு இல்லை.

அரவாம்ச ஜனனம்

சந்திரன்பாவராசிதனில்குசன்திரேக்காணத்தில்
உந்திடில்சசிக்கு இரண்டில்பன்னிரண்டில்நல்லோர்
வந்துதானிருக்கில், பெற்றமகவுடன்பிறக்கும்பாம்பு
செந்திருமாதே, பாம்பாய்ச்செனிக்கினும்செனிக்குந்தானே. 2

தொகுப்புரை:

நிறைந்த இலக்குமி போன்ற பெண்ணே கேள்! ஒருவனது ஜனன கால ராசிச்சக்கரத்தில், சந்திரன் பாபராசியிலும், செவ்வாயானவன் திரிகோணத்திலும் இருக்க, அந்த சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டாம் இடங்களில் சுபகிரகங்கள் இருக்கப் பிள்ளையுடன் பாம்பும் பிறக்குமாம். அவ்வாறில்லாமல், அந்தப் பிள்ளையே பாம்பு அம்சங்களுடன் பிறந்தாலும் பிறக்குமாம்.

அருஞ்சொற்பொருள்

பாபராசிதனில் - லக்கினத்திற்கு 6, 8, 12 ஆம் இடங்களில் ஒன்றில், குசன் - செவ்வாய், திரேக்காணம் - லக்கினத்திற்குத் திரிகோண ராசிகள். செந்திரு - செந்தாமரை மலரிலமர்ந்த இலக்குமி. செனிக்கினும் - பிறந்தாலும்.

ஊரில் தந்தை இருப்பான்

நாலிடத்ததிபன்பாக்கியாதிபன்இலக்கினத்தில்
சாலவேநல்லோர்பார்க்கத்தானுறில்ராசபூசையன்
கோலியசனிஒன்றில், ஏழில்குசனுற, கங்கன்இந்து
மாலவன்ஏற்றில்நிற்கமருவுவான்தகப்பன்ஊரில். 3

தொகுப்புரை:

இலக்கினத்திற்கு நான்காம் இடத்திற்கு உரிய கிரகமும், பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்திற்குரிய கிரகமும், லக்கினத்தில் சுபகிரகங்களின் பார்வைகளைப் பெற்ற நிலையில் இருந்தால், சாதகன் அரசால் மதிக்கப்படும் அந்தஸ்துடன் இருப்பான்.

சனி லக்கினத்திலும், ஏழாமிடத்தில் செவ்வாயும் நிற்க, சுக்கிரன் சந்திரன் புதன் இவர்கள் இடப ராசியில் இருக்கவும் பிறந்தவனுடைய தகப்பன், சாதகன் பிறந்தவூரிலேயே வசிப்பான் என்பதாம்.

சுங்கன் இந்து மாலவன் வியத்து நிற்க என்பதும் பொருத்தமான பாடமாகும்.

அருஞ்சொற்பொருள்

அதிபன் - அந்த ராசிவீட்டுக்கு உடையவன். சாலவே - மிகுதியாகவே. சுங்கன் - சுக்கிரன், இந்து - சந்திரன், மாலவன் - புதன், மருவுவான் - சேர்ந்து இருப்பான்.

தந்தை தேசாந்திரி

பண்ணும்லக்கினத்தை இந்து பாராமல்இருக்க, இந்து
நண்ணியராசிலக்கினம்சராசியாக நவிலுதற்காம்
ஒண்ணியசுதன்சராங்கிசம்பெற உதித்தானாகில்
திண்ணமாய்தகப்பன்தேசாந்திரத்திலே திரிவன்தானே. 4

தொகுப்புரை:

பிறந்த நாளில் சூரிய உதயாதி நாழிகையைக் கொண்டு கணக்கிட்டு அமைக்கும் ராசிலக்கினத்தை சந்திரன் பாராமல் இருக்கவும், அந்த சந்திரன் இருந்துள்ள சந்திராலக்கினம் சரராசியாக அமையவும், சிறந்த செவ்வாயானவன் சரராசியொன்றில் அங்கிசம் பெற்றிருக்கவும், சாதகன் பிறந்தானாயின், இவனது தகப்பன் ஊரை விட்டு நாட்டை விட்டு வேற்று தேசங்களில் தேசாந்திரியாய் திரிவன் என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பண்ணும் - கணக்கிட்டு அமைக்கும். இந்து - சந்திரன், சுதன் - செவ்வாய். தேசாந்திரம் - பிற தேசங்கள்.

தந்தை - பிறதேசத்தில் சிறை

பரிதிக்கு ஓரிரண்டில் பாபகிரகங்கள், பாவராசி
மருவிடில் தந்தை தேசாந்திரத்துறும், பாவர்
ஒருமையாம் பாவராசியுறில், கதிர்க்கு அஞ்சு ஏழு ஒன்பான்
பெரும்பாவர் நிற்கத் தந்தை சிறையுளான் பிறதேசத்தில் 5

தொகுப்புரை:

இராசி சக்கரத்தில், சூரியன் நின்ற ராசிக்கு இரண்டாமிடத்தில் பாபகிரகங்கள் இருந்து அந்த ராசியே பாப ராசியானால், சாதகனின் தகப்பன் பிறதேசத்தில் இருப்பான். அல்லாமல்,

பாபகிரகங்கள், சேர்ந்து பாவராசிகளில் இருக்கவும், சூரியன் நின்ற ராசிக்கு ஐந்து ஏழு ஒன்பது ஆகிய இடங்களிலும் பெரும்பாவ கிரகங்கள் நின்றால், இவனது தந்தை பிறதேசத்தில் சிறைப்பட்டிருப்பானென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பரிதி - சூரியன், பாபகிரகங்கள் - பாவம் என்பதை, பாவம் என்பது, சோதிட முறையில் இராசியங்கம் என்பதாகும். எனவே பாபகிரகங்கள் பாபியாகவுள்ள கிரகங்கள் என்பதாம். பிறதேசம் - வெளிநாடு

குழந்தையின் - நிலைகள்

சேய்க்கு பன்னொன்றில் இந்து சீர்கிலோ குழவிக்கீனம்
ஆக்கிய நல்லோர்காணில் அவனை மற்றோர் வளர்ப்பார்
வீக்கிய பாவர் காணில் வியமதாய்க் குழவியேங்கும்
பாக்கியன் இந்தைக்காணில் தகப்பன்வாழ்பதியில் சென்மம். 6

தொகுப்புரை:

அங்காரகனுக்கு பதினொன்றாம் இடத்தில் சந்திரன் இருந்தால் குழந்தைக்கு ஈனமாகும். அந்த சந்திரனை, சுபகிரகங்கள் பார்த்தால் அந்த குழந்தையை அந்நியர்

வளர்ப்பார்கள். அதே சந்திரனை பாபகிரகங்கள் பார்த்தால், விரையங்கள் உண்டாகி குழந்தையும் துன்பப்படும். பாக்கியஸ்தானாதிபதி சந்திரனைக் காணில், தகப்பனுடைய ஊரில் குழந்தை பிறந்திருப்பதாகும்.

அருஞ்சொற்பொருள்

சேய் - குழந்தை, இந்து - சந்திரன், குழவி - பச்சிளங்குழந்தை, ஈனம்-குறைவு, வியம்-செலவினங்கள், தகப்பன் வாழ்பதி - தகப்பன் வாழும் ஊர்.

குழந்தை பிறந்த இடம்

நீசத் தானத்தில் நல்லோர் நின்று சந்திரனைக் காணில்
பேசுவார் மரத்தின்கீழே பிறந்ததோர் பிள்ளை என்றே
பூசல்செய் பாபர் நீசம் பொருந்தியே சசியைக் காணில்
வேசியர் நீசர் வீட்டில் பிறந்தசேய் எனச் சொல்வாரே. 7

தொகுப்புரை:

சுபகிரகங்கள் நீசத்தானத்தில் நின்று சந்திரனைக் கண்டால், மரத்தின் கீழே பிரசவிக்கப்பட்ட குழந்தை இதுவென்று சொல்லுவார்கள்.

பலவிதமானதுன்பங்களைச் செய்கின்ற பாபகிரகங்கள் நீசம் பெறுகின்ற ராசியில் நீசமாக இருந்த சந்திரனைக் கண்டால், அந்தக் குழந்தை வேசியர் அல்லது நீசமானவர் வீட்டில் பிறந்தது எனச் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

நல்லோர் - குரு, சுக்கிரன் (புதன், சந்திரன்) ஆகிய சுபகிரகங்கல். பூசல் - சண்டை, சச்சரவான துன்பங்கள். சசி - சந்திரன். சேய் - குழந்தை.

உதாரணம்

சுபர் நீசனாகும் இடம் - குருவுக்கு நீசத்தானம் மகரராசி. சுக்கிரனுக்கு கன்னிராசி நீசத்தானம். புதனுக்கு மீனம். சந்திரனுக்கு விருச்சிகம். பாபர் நீசனாகும் இடம் - சனிக்கு நீசத்தானம் மேடராசி சூரியனுக்கு துலாம். செவ்வாய்க்கு கடகம் நீசத்தானம்.

உறவில்லா ஊரில் பிறப்பு

இந்துவும் நல்லோர் ஏகராசியில் இருக்கின் காண்கின்
பந்தமாய் மனிதரில்லாப் பதியிலுற்பவிக்கப் பண்ணும்
சந்திரற்கு ஏழில் காரி தகப்பனுக்கு ஏழில் சேயும்
வந்திடத் தந்தை தாய்க்கு வருந்தியும் அரிட்டமாமே. 8

தொகுப்புரை:

சந்திரன் சுபகிரகங்களுடன் சேர்ந்து ஒரே வீட்டில் இருந்தாலும் அல்லது லக்கினத்தைக் கண்டாலும், சொந்தபந்த உறவு மனிதர்கள் இல்லாத ஊரில் குழந்தை பிறக்கும்படி செய்யும்.

சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சனியும், பிதுர்காரகனாகிய சூரியனுக்கு ஏழாமிடத்தில் செவ்வாயும் வந்திருக்கப் பிறந்த குழந்தையின் தந்தை தாய்க்கு வருத்தமாக அமைவதான முறையில் அரிட்டம் என்னும் கெடுதி ஏற்படும் என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

இந்து - சந்திரன், நல்லோர் - நட்பான சுபகிரகங்கள். ஏகராசி - ஒரே ராசி இடம், காரி - சனி, தகப்பனுக்கு - சூரியனுக்கு. தபனன் என்பதாகக் கொள்ளலாகும்.

குழந்தைக்கு வரும் கெடுதிகட்கு - காரணம்

சவுரிக்கு ஏழிடத்தில் செவ்வாய்தானுறக் குழவிக்கு ஈனம்
பவரிக்கோள் லக்கினாதி பாவரோடிசைந்து ஆறு எட்டில்
உவயிரு பன்னிரண்டில் உற்றிடில் ரோகவானாம்
நுவல் சென்ம லக்கினாதி பலமிலேல் நோய் கொள்வானே. 9

தொகுப்புரை:

சனி நின்ற ராசிக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் இருந்தால் குழந்தைக்குக் குறைபாடு உண்டாகும். பிறவிக்கு உரிய கிரகமாகும். லக்கினாதிபதி பாபகிரகங்களோடு சேர்ந்து, ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய நன்மை செய்யாத இடங்களலொன்றில் இருந்தால் குழந்தைக்கு வியாதி தொடரும். சொல்லப்படும் சென்மலக்கினாதிபதி பலமில்லாதவனாக இருந்தால் கொடிய நோய் உள்ளவனாக இருப்பான்.

லக்கினாதிபதி பாபகிரகங்களோடு சென்ம லக்கினத்திற்கு ஆறில் இருந்தால் வியாதி, சருமரோகங்கள் உண்டாகும். மேற்படி அமைப்பில் எட்டில் இருந்தால் ஆயுளுக்குக் குறைவு காணுமளவில் நோய்கள் உண்டாகும். மேற்படி அமைப்பில் பன்னிரண்டில் இருந்தால், விரையமாகும் நிலையில் அபாயமான நோய்கள் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

சவுரி - சனி, குழவி - குழந்தை, பவரிக்கோள் - சென்மத்திற்குக் காரணமான கோள், ரோகம் - நோய், நுவல் - சொல்லும், பலம் - வலிமை.

மூளி, பேடி பிறப்பறிவது

ஆறுடன் இரண்டிடத்தின் அதிபனும் குசனும், மூன்றில்
வீறுடன் லக்கினத்தின் மேவில் காது அறும், அறாதேல்
சீரிய செவியில் ரோகம் சேரும் நற்கணக்கன் வீட்டில்
பேறுடன் காரி நிற்கின் நபுஞ்சனாய்ப் பிறப்பன் தானே. 10

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஆறாமிடத்தோனும், இரண்டாம் இடத்தோனும் செவ்வாயுடன் கூடி, மூன்றாம் இடத்திலோ சென்ம லக்கினத்திலோ இருந்தால் சாதகனான குழந்தைக்கு காது அறுபடும்.

அப்படி காது அறுபடாவிட்டால், காதில் கொடிய நோய் உண்டாகும். நல்ல வித்யாகாரகன் என்றும் கணக்கன் என்றும் சொல்லப்படும். புதன் வீடுகளாகிய மிதுனம், கன்னி ஆகிய இராசி இடங்களில் ஒன்றில் நட்பானவன் என்ற பெயருடன் பாபகிரகமாகிய சனி நின்றால், ஆண் வடிவில் பெண் தன்மையுடையவனாகவோ, ஆணும் பெண்ணும் கலந்த பேடியாகவோ சாதகன் பிறப்பான் என்பதாம். (அலியாக இருப்பான்.)

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், வீறு - பெருமிதம், செவி - காது கணக்கன் - புதன், நபுஞ்சகம் - ஆண்வடிவில் பெண்தன்மைகளைப் பெற்றுள்ள பேடிப்பிறப்பு, மூளி - செவி இல்லாதவன் மூளி எனப்படுவன்.

பேடியான பிறப்பு

புந்தி வீட்டினில் பிறக்க, புதன் ஆறாமிடத்தில் நிற்க
அந்த ஆறாமிடத்து அதிபன் லக்கினத்தில் நிற்க
நிந்தையாம் அலியுமாவன், நிலவு சன்மாதியோடு
மந்தனும் புதனும் கூடில் வடிவமே குள்ளனாவான். //

தொகுப்புரை:

புதனுடைய ஆட்சி வீடு சென்மலக்கினமாய் இருந்து, புதன் லக்கினத்திற்கு ஆறாமிடமாகிய ரோகஸ்தானத்தில் இருக்கப் பிறந்தவன், பிறர் பழித்துக் கூறுவதற்கு உரியதாகும் பேடிப்பிறப்பினை உடையவனாவன்.

சென்ம லக்கினாதிபதியோடு சனியும் புதனும் கூடி நின்றால் வடிவத்தால் குள்ளனாகவே பிறந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்

புந்தி - புதன், அதிபன் - ராசி இடத்திற்கு உரிய கிரகம், நிந்தை - அவதூறு, கேவலமாகப் பழித்தல், அலி - பேடித்தன்மை, நிலவு - சஞ்சரிக்கும், மந்தன் - சனி, வடிவம் - உடலின் வடிவம்.

குள்ளமான பிறப்பு

வடிவுளதகரில் தேளில் மாலவன் இருக்கவேதான்
முடவன்லக்கினத்தில் நிற்க, மூன்றினில் பிருகு மேவ
உடல்சிறு குள்ளனாவன், உயர்குசன் ஓரையாகில்
அடல்சனி திரேக்காணமாகிடில் சிறையிலொன்றும் /2

தொகுப்புரை:

வடிவமைந்த மேடராசி அல்லது விருச்சிகராசி இரண்டில் ஒன்றில் புதனானவன் இருக்கவும், சென்ம லக்கினத்தில் சனி நிற்கவும், சன்ம லக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் சுக்கிரன் இருக்கவும் பிறந்தவன் உடலில் மிகவும் சிறிய குள்ளனாவான். அன்றி

சென்மலக்கின நிர்ணய காலம் செவ்வாயின் ஓரையாகவும், கெடுதல் செய்யும் சனி திரிகோணத்திலும் இருப்பார்களானால் சாதகன் சிறையில் அடைபட்டிருக்கும் நிலையினைப் பெறுவான்.

அருஞ்சொற்பொருள்

வடிவுள - ஆட்டின் வடிவமாக இருக்கின்ற, தகர் -ஆடு, தேள் - விருச்சிகராசி, மாலவன் - அலியாகிய புதன், பிருகு - சுக்கிரன், ஓரை - இரண்டரை நாழிகையாகக் கணக்கிட்டுச் செல்லும் கால அளவு (2½ நாழிகை = 1 மணி)

ஜனனத்தின் பலவகைப் பலன்கள்
பகுதி - 2

ஒன்று ஏழு எட்டொடு வியத்தில் சசி பாவன்
உத்தமர் நோக்கு அறநிற்கில், உயரும் கேந்திரத்தில்
நன்றியதின்றிப் பிறக்கும் சேய் குருடுதானே
நவில் வியம் எட்டு ஆறாதி பாவர்களேயாகி
வென்றியோடு எங்கிருக்கிலும் துர்ப்பலனேயாகும்
மேவிய சன்மாதிபதிதான் பாபனாகிக்
கொன்றைமுடியோன் அருளாலே வியம் ஆறெட்டில்
கூடின் நன்மையென்றே குறிப்பர் பாவலரே. /

தொகுப்புரை:

லக்கினம், ஏழு, எட்டு , பன்னிரண்டு ஆகிய இடங்களில், சந்திரனாவன் பாபகிரகத்துடன் கூடியிருக்க, அந்தச் சந்திரன் சுபகிரகங்களின் பார்வை இல்லாமல் இருந்தால்

ஜனன கால லக்கின கேந்திரத்தினால் ஆகும் எத்தகைய நன்மைகளும் இல்லாதது ஆகிய நிலை ஏற்படுகின்றது.

அக்காலத்தில் பிறக்கும் குழந்தை குருடாகும். சொல்லப்படும் பன்னிரண்டு எட்டு ஆறு ஆகிய இடங்களுக்குரிய கிரகங்கள் பாவர்களாகி, எங்கே இருந்தாலும் கெட்ட பலன்களைத் தருவதேயாகும்.

சென்ம லக்கினாதிபதி மட்டும் பாபியாகி பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களிலொன்றில். சிவபெருமான் அருளால் சுபரின் பார்வை பெற்றிருந்தால் நன்மையென்றே சோதிடப்புலவர் குறித்துப் பேசுவர்.

துர்ப்பலன்கள்

பாபர்கள் சன்மத்திலும் சன்மாதிபதி
பலமின்றிப் பயில நோய் கேந்திர கோணத்தில்
தீயவர்கள் உற்றால் கோபியாவான், செம்மத்து
இறை நின்ற வீட்டோன் எட்டு ஆறு ஈராறில்
மேவிடில் துயர்ப்பலன். சன்மம் கன்மம் எட்டோன்
மிசைச் சனி இந்நால்வர் திசை எய்தும்போது
மேவிடும் துர்ப்பலர் திசைக்குச் சனி சஞ்சார
வேளைதனில் அரிட்டமென்றே விளம்புமாறே. 2

தொகுப்புரை:

பாபக்கிரகங்கள் சன்மத்திலும், சன்மாதிபதி பலமில்லாமலும் இருந்தால் சாதகர்க்கு நோய் ரோகம் உண்டாகும்.

கேந்திரங்களிலும் திரிகோணராசிகளிலும் பாப கிரகங்கள் இருந்தால் சாதகன் கோபியாக இருப்பான்.

சன்மாதிபதி இருந்த வீட்டுக்குடைய கிரகம் எட்டு ஆறு பன்னிரண்டு ஆகிய பாபஸ்தானங்களில் ஒன்றில் இருந்தால், சாதகனுக்கு தீயபலன்களே நிகழும்.

சன்ம லக்கினாதிபதி, பத்தாமதிபதி, ஆகியவர்களின் திசைகள், எட்டாமதிபதி திசை சனிதிசை ஆகிய இந்நால்வரின் திசைகள் சாதகனுக்கு நடக்கும்போதும்.

மேற்படி கெட்ட பலன்களைத் தருபவனது திசை நடக்கும்போது சனியின் புத்தி சஞ்சார காலத்தில் சாதகனுக்கு அரிட்டம் என்றே சொல்லவேண்டும்.

தீதும் அரிட்டமும்

ஆறில் செங்கதிர் அதற்கு ஏழில் சனி செவ்வாய் நிற்கில்
அரிட்டமாகும் காரி அரவொடு சன்மத்திலும்
வீறுசெவ்வாய் நான்கில் செங்கதிரோன் ஏழில்
மேவிய நாள்தனில் உடனே வியமதாகும்
கூறு சசிக்கு இருபாலும் தீயோர் நிற்கில்
குழவியோடன்னைக் கருட்டம் கூறலாகும்
சீறு கர்க்கடக லக்கினமாய் மூன்று ஆறில் தீயோர்
செம்மையோர் பன்னிரண்டில் தீதென்பாருள்ளோர். 3

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு ஆறாமிடத்தில் சூரியனும், அதற்கு ஏழாமிடத்தில் சனியுடன் செவ்வாயும் சேர்ந்து நின்றால் அரிட்டமுண்டாகும்

சனி ராகுவுடன் சன்மத்திலிருக்கவும், அதற்கு நான்காமிடத்தில் செவ்வாயும், ஏழாமிடத்தில் சூரியனும் அமைந்திருந்தால் தொடரும் சில நாளில் சாதகனுக்கு அரிட்டமுண்டாகும்.

சந்திரனுக்கு இரண்டு பக்கமும் உள்ள ராசி இடங்களில் பாபகிரகங்கள் நிற்பார்களானால் குழந்தையோடு தாய்க்கும் அரிட்டம் கூறலாகும்.

கடக லக்கினமாக இருந்து, அதற்கு மூன்றாமிடத்திலும் ஆறாமிடத்திலும் கொடிய கிரகங்கள் நிற்கவும்,

பன்னிரண்டாம் இடத்தில் சுபகிரகங்கள் இருக்கவும் பிறந்த சாதகமாக இருந்தாலும் தீமைகளே உண்டாகும் என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள்.

ஆரோக்கியமான வாழ்வு

அருள்சென்மலக்கினாதிபதிபாபனாய்வியம்ஆறெட்டில்
மருவின்மெய்தனக்குநன்மைவரும்சவுபாக்கியமுண்டாம்
உருவமாம்லக்கினாதிபதிஉத்தமத்திற்குஅதிபனாகி
பெருமைசேர்ஐந்துஒன்பானில்பலனெனவிரைவில்சொல்வாய். 4

தொகுப்புரை:

அருள் செய்கின்ற சென்மலக்கினாதிபதி பாபியாகி பன்னிரண்டாம் இடத்திலோ, ஆறாம் இடத்திலோ அல்லது எட்டாம் இடத்திலோ இருந்தால் சரீர சுகமும் சௌபாக்கியமும் உண்டாகும்.

இன்ன ராசி என்ற உருவமாகின்ற லக்கினாதிபதி, நல்ல பலன்களைத் தருகின்ற உத்தம ஸ்தானத்திற்குத் தலைவனாகி

பெருமை சேர்ந்த பூர்வ புண்ணியத்தானமாகிய ஐந்தாமிடம், அல்லது ஒன்பதாம் இடமாகிய பாக்கியத்தானம் ஆகியவற்றில் ஒன்றில் இருந்தால் நல்லபலன்கள் விரைவில் உண்டாகும் என்று சொல்லுவாயாக.

உடம்பில் ஊனம்

விரவியதோர்சரீரகாரகனாம்வெய்யோன்
வியம்ஆறு எட்டில்சனி, தன்வீட்டில்உற்றால்
உருவம்குறைந்திடும்அங்கத்துஊனமாகும்
ஒன்பதுபன்னொன்றுஇரண்டில்நின்றாலும்
பரவியதோர்அரிமேடத்துஉரினும்மெய்யில்
பழுதறவேசவுந்தரியப்பானுமாவான்
வரியுலவும்குழல், கொவ்வைமதுரச்செவ்வாய்
மட்டுலவும்செங்கமலரீடத்தின்மாதே! 5

தொகுப்புரை:

மானுட மனிதனின் சரீர காரகனாகிய சூரியன் பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில்

இருக்கவும், சனி தனது வீடுகளாகிய மகரம் கும்பம் ஆகியவற்றில் ஒன்றில் இருக்கவும் பிறந்தவனது உருவம் குறைந்து போதலோடு அங்கத்திலும் ஊனம் உண்டாகும்.

அதே சூரியன், சன்மத்திற்கு ஒன்பது பதினொன்று இரண்டு ஆகிய இடங்களிலொன்றில் நிற்க, சனி சிங்கம் மேடம் ஆகிய ராசிகளில் ஒன்றில் நிற்பதானால், சரீரத்தில் எந்தவிதமான குறைவும் இல்லாமல் மிகுந்த அழகுடன் தேஜசுடன் இருப்பான் என்ற பலன்களை,

வரிவண்டு உலவும் மணமுள்ளகூந்தலும், கொவ்வைப் பழத்தைப் போன்ற சிவப்பு மதுரமும் பொருந்திய இதழும், தேன்பொருந்திய செந்தாமரை மலரிடத்து வீற்றிருக்கும் இலக்குமி போன்ற பெண்ணே, அறிந்து கொள்வாயாக என்பதாம்.

வாழ்வில் உத்தமம்

இடபம் மேடம் நண்டு இம்மூன்று ராசியும்
அடரும் லக்கினமாக அந்த இடந்தன்னிலே
தொடரும் ராவீடாகு உற்று சூழ்ந்திடில்
படரும் உத்தமம் என்று பகர்வரே. 6

தொகுப்புரை:

இடபம், மேடம், கடகம் ஆகிய இம்மூன்று ராசிகளில் ஒன்று லக்கினராசியாக, அதில் ராகு சேர்ந்து இருந்தால் சாதகனுக்கு தொடர்ந்த நன்மைகள் ஏற்படுவதாகும் என்று சொல்லுவார்கள்.

கிரகங்கள் லக்கினத்திலும், பிறராசி இடங்களிலும் நிற்பதானால், அந்தந்த இடங்களின் கிரக பலத்துடன் அதில் உள்ள கிரகத்தின் பலத்தினையும் கொண்டு பலன்களை பாகப்படுத்தி அறிந்து, பார்வைகளின் விசேடங்களையும் சேர்த்துப் பார்த்துப் பலன் கூறுதல் ஒரு பகுதியாகும். மற்றும்

பாடல்களில், மேடம் முதலாகவும், லக்கினம் முதலாகவும் வைத்து எண்ணப்படும் பன்னிரண்டு ராசிகளில், உதாரணமாக,

வெய்யோன் வியம் ஆறெட்டில் உற்றால் என்பதாக 12, 6, 8 ஆகவுள்ள இடங்களை வரிசையில் 1, 2, 3 ஆகச் சொல்லியிருப்பதாக அறிதல் வேண்டும்.

12 ஆகிய 1-முழுமையான பலன், 6 ஆகிய இரண்டு அரைப்பலன், 8 ஆகிய மூன்று கால் பலன் என்ற முறையில் பாகப்படுத்தி, ராசி இடங்களையும் கிரக நுட்பங்களையும் சேர்த்து அறிந்து பலன்களை அவ்வவற்றிற்குப் பொருந்திய அளவில், முறையில் காண்பதும் சோதிட நெறிகளில் ஒன்றாகும்.

பிற்காலத்தில் - சுகம்

பகரும் லக்கினமன் பத்தில் இரண்டினில்
வகையில் நிற்க, வலத்து லாபாதிபதியும்
இகலில் லாபத்தில் ஆண்டு இருந்திட
நுகரும் விஞ்சாதி ஆண்டில் சுகம் தரும். 7

தொகுப்புரை:

சொல்லப்படும் லக்கினராசியாதிபதியான கிரகம், பத்தாமிடம் இரண்டாமிடம் ஆகியவற்றில் ஒன்றில் நிற்க வலிமை பெற்ற நிலையில் பதினோராம் இடமாகிய லாபஸ்தானாதிபதியும் பகையில்லாமல் அந்த லாபஸ்தானத்தில் இருந்திட, சாதகன் அனுபவிக்கும் காலத்தின் பிற்பகுதியில் சுகத்துடன் வாழ்வான் என்பர்.

பத்தாமிடம் சீவனத்தானம். இரண்டாமிடம் வித்தை புத்தியறியும் ஸ்தானம், பதினோராம் இடம் லாபஸ்தானமாகவும் சுகபோக அந்தஸ்து காணும் ஸ்தானமாகவும் அமைவதால் அந்த முறையில் சாதகனுக்குரிய பலன் கூறப்பட்டுள்ளது எனலாம்.

திசைகளில் தீமை

சுகந்தரும் சன்மலக்கினம் சரமாய்த்தோன்றி, லாபத்தின் அதிபனும்
மிகுந்திடும் திரமேல் பாக்கியாதிபனும் விரும்பிய உபயலக்கினமேல்
உகந்திடும் ஏழாம் அதிபதி மூவரின் திசை வாதை செய்யும்
பகர்ந்திடும் மூவர் பதியும் பற்றிய இடங்களும் தீதேயாம். 8

தொகுப்புரை:

சன்மலக்கினம் சரராசியாக இருந்து, லாபாதிபதி திரராசியிலும், பாக்கியாதிபதி உபயராசியிலும் இருக்கவும்,

ஏழாமிடத்துக்குரிய கிரகம் இவர்கள் மூவரின் திசைகளில் சாதகனுக்கு துன்பங்கல் பல செய்வார்கள்.

இந்த மூன்று கிரகங்களுக்குச் சொந்தமான ராசி இடங்களும், இவர்கள் இருக்கின்ற ராசி இடங்களும் சாதகனுக்கு தீங்கான பலன்களைத் தருவதேயாகும்.

மூன்று இடங்கள்:

1. சரராசியில் சன்மலக்கினம் - லக்கினாதிபதி உள்ள இடம்

2. திரராசியாக லாபத்தானம் லாபாதிபதி உள்ள இடம்

3. உபயராசியில் பாக்கியஸ்தானம் - பாக்கியாதிபதி உள்ள இடம்

எனவே லக்கினம் முதலாக ஸ்தானம் 3, அதிபதிகள் உள்ள இடங்கள் 3, ஏழாம் இடத்துக்குரிய கிரகம் 1 ஆக 4 கிரகங்கள் என்பதாயினும், லக்கினம் நீங்கலாக, 11, 9, 7 ஆகிய மூன்று இடங்களும் அதிபதிகளும் பலன் தருபவர்களாகக் கூறப்பட்டுள்ளது.

எட்டாமிடம் - கிரக பலன்கள்

தீதறும் சென்ம காலையில் எட்டில் செங்கதிர் நிற்கில் சுரமாம்,
கோதறு மதியுமுற்றால் சலகண்டம், மஞ்சனூரில் ஆயுத பீடை
சோதியாம் புந்தி வியாதி, பொன் மிருத்தியு, புகர் தரித்திரம்
ஓதிய சனி தாய்க்குறு தோஷம், ஒருவனும் நிற்கவொண்ணாதே. 9

தொகுப்புரை:

சென்ன காலத்தில் லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சூரியன் இருந்தால் சுரநோய் உண்டாகும்.

சந்திரன் எட்டில் நின்றால் - நீரில் அபாயம் உண்டாகும், மஞ்சள்மங்கலவன் என்னும் செவ்வாய் நின்றால், - ஆயுதத்தால் அபாயம், புதன் இருந்தால் - வியாதி, குரு இருந்தால் - ஆயுள் பயம், சுக்கிரனிருந்தால் - தரித்திரம், சனி இருந்தால் - தாய்க்கு தோஷம் பீடை, (ராகு கேதுக்கள் இருந்தால் - பலவகைத் துன்பங்கள்) ஆகையால்,

சனன காலத்தில் எட்டாமிடம் சுத்தமாக இருக்கவேண்டுமென்பது குறிப்பானாலும், எட்டுக்கதிபதி, தனது ஸ்தானத்தில் இருப்பது ஓரளவு நன்மை தருவதாக அமையும், அந்த எட்டுக்குரிய ஒருவன் தன் தானத்தில் நிற்க பிறதோஷங்கள் வலிமை பெறாது என்பதாகும்.

தந்தை மகன் யோகபாகங்கள்

தேவர் தண்ணமுத சந்திரன் முதலாய் செங்கதிர் அளவுமட்டெண்ணி
மேவிய தொகையை மூன்றினால் கழித்து, மீந்தது ஒன்றுக்கு அவன் பிதா
ஏவியது ஆட்சி, இரண்டதேயாகில் இனிய தாதைக்கு இணையாவன்
பூவில் மூன்றாகில் பிதாவினுக்கு அதிகம் புத்திரனென்று அறிந்திடுமே. 10

தொகுப்புரை:

தேவர்களுக்கு அருளமுதமாக விளங்கிய சந்திரன் முதல் சூரியன் இருக்கும் ராசியிடம் வரைக்கும் எண்ணி வந்த தொகையை மூன்றாக (மூன்று மூன்றாக) பாகித்துக் கழித்தது போக, மிகுந்தது ஒன்றானால் - தந்தை ஏவி செயல்படுத்தியபடி மகன் சிறப்பாக இருப்பான்.

மீதமான எண் இரண்டானால் - அன்பான தந்தைக்கு இணையான தகுதிகளுடன் மகன் சிறந்திருப்பான்.

மூன்று மூன்றாகப் பாகித்துக் கழித்தபோது மிச்சமில்லாது மூன்றாம் எண்ணளவில் நிறைவு பெற்றால் - தகப்பனைவிட மகன் அதிக சிறப்பினைப் பெற்ற யோகவான் என்று அறிந்து கொள்ளக்கடவாய்.

மிச்சம் ஒன்றானால் - தந்தை யோகத்தில் மகனிருப்பான்
மிச்சம் இரண்டானால் - தந்தையும் மகனும்
சமயோகவானாகும்
மிச்சமின்றி மூன்றில் நிறைவானால் - தகப்பனைவிட
மகன் மிகுந்த யோகவானாகத் திகழுவான் என்பதாம்.

நிறைந்த ஆயுள்

அறிந்தலக்கினத்து அதிபன் உச்சமே
பெறிந்து கேந்திரம் சேர்ந்து நல்லோருடன்
உறைந்து தூயர் உறைமனை உற்றிடில்
நிறைந்த சீவனவன் பெறுவது நிச்சயம். //

தொகுப்புரை:

கணித்துக் கண்டறிந்த லக்கினராசிக்கு உடையவன் உச்சனாகி சுபகிரகங்களுடன் சேர்ந்து, சுபகிரகம் இருக்கின்ற வீடாகவும் கேந்திரஸ்தானமாகவும் அமைந்த ராசியிடத்தில் இருந்தால்

நிறைந்த ஆயுளைச் சாதகன் பெற்றிருப்பது உறுதியானதாகும்.

லக்கினாதிபதி உச்சனாகி சுபகிரகங்களுடன் கூடி, சுபகிரகமிருக்கின்ற கேந்திரஸ்தானத்தில் இருந்தால் - சாதகன் நிறைந்த வயதினைப் பெற்றவனாவான்.

லக்கினாதிபதி உச்சம் பெற்று சுபகிரகங்களோடு சேர்ந்த நிலையில் 1, 4, 7, 10 என்னும் கேந்திரஸ்தானமானது சுபகிரகத்தின் வீடாக அமைய, அதில் ஒன்றில் இருந்தால் - சாதகன் பூரண ஆயுளுடன் வாழ்வானென்று உறுதியாகச் சொல்லலாகும்.

சீவித சுகபோகன்

நிச்சயமாம் சென்மாதிபதி திரலக்கினத்து
நீடு திரவங்கிசத்தும் அவைதான் கேந்திரமாய்
இச்சையுடன் இருக்கில், அவன் இருந்ததலம் தன்னில்
இனியவெகுபலன் பெறுவன், அவை சுபரங்கிசமாய்

அச்சமற நிற்கில் அவன் சீவிய பரியந்தம்
ஆபரணத்துடன் கூடி அம்புவியில் வாழ்வன்
மெச்சிய சன்மாதி பலமற கேந்திரத்தின்
மேவில் கோபியுமாகி வியாதிமுற்றிடுவன். 12

தொகுப்புரை:

சனன லக்கினாதிபதி இருக்கும் இடம், ஸ்திரமான லக்கினமாகவும் ஸ்திரமான அங்கிசமாகவும், அமைந்து அந்த இடமானது 1, 4, 7, 10 என்னும் கேந்திர ஸ்தானமாகப் பொருந்தி இருந்தால்,

சாதகன் இருந்த ஸ்தலத்திலேயே அவன் மகிழ்வுடன் அனுபவிக்கும் படியான மிகுந்த நல்ல பலன்களைப் பெற்றிடுவான்.

மேலே சொன்ன ஸ்தலத்திலேயே அவன் மகிழ்வுடன் அனுபவிக்கும் படியான மிகுந்த நல்ல பலன்களைப் பெற்றிடுவான்.

மேலே சொன்ன ஸ்தானங்களில் சுபகிரகங்கள் அங்கிசமானால் அவன் ஆயுள்வரைக்கும் ஆடை ஆபரண அலங்காரம் கொள்பவனாக உலகில் வாழ்வான்.

சென்மாதிபதி பலமற்றவனாக கேந்திரத்தில் இருந்தால் கோபியும் வியாதியுள்ளவனுமாக இருப்பான் என்பதாம்.

லக்கினாதிபதி இருக்கும் ராசியிடம், ஸ்திர தானமாகவும், ஸ்திரமான கிரகாங்கிசமாகவும், கேந்திர ஸ்தானமாகவும் இருக்கவேண்டுமென்று அமைகின்றது.

தத்துப் புத்திரன்

உற்றிடும் சென்மத்தாதி ஈரைந்தில் இருக்க
உண்மையுடன் பத்தாதி உறு பலவீனமாய்
பற்றிடும் வியம் ஆறு எட்டில் சுபர் நோக்க நிற்கில்
பயில் தத்து புத்திரனாம் பகரு வெகுவயதே

வெற்றிகொள்ளும்லக்கினத்தின்மிகுபாபரிருக்க
மேயசன்மாதிபதிமிகுபலவானாக
குற்றமுறும்பிணிகொள்வன், சுபர்சன்மம்கண்டால்
குணமாகும், பிணி, வேறு கொடுமையும்செய்யாதே. *13*

தொகுப்புரை:

சனன லக்கினாதிபதி பத்தாமிடத்தில் இருக்கவும், பத்தாம் வீட்டிற்கு உடைய கிரகம், பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களிலொன்றில் சுபகிரகங்களின் பார்வையினைப் பெற்றதாக இருந்தால்,

சாதகன் தக்க வயதில் தத்துபுத்திரனாவான்.

வெற்றியை உடைய லக்கினத்தில் மிகுந்த பாபகிரகங்கள் இருக்கவும், இலக்கினஸ்தான சென்மாதிபதி மிகுந்த பலமுள்ளவனாக இருக்கவும் பிறந்தவன் குற்றமாகச் சொல்லப்படும் நோயினை அடைவான். ஆனால்

சுபகிரகங்கள் சனன லக்கினத்தைப் பார்ப்பதாக இருந்தால், அந்த ரோகம் நாளடைவில் குணமாகும். வேறு கொடுமைகளைக் கிரகங்கள், செய்யாது. நோய் நிவர்த்தி பெற்று இருப்பான்.

தத்துப்புத்திரன் - விளக்கம்

உறவினர்களில் பிள்ளை இல்லாத தம்பதியினர், தங்களின் நெருங்கிய அல்லது உடன்பிறந்த உறவினர் வீட்டில் பிறக்கும் அல்லது வளர்ந்துவரும் பிள்ளைகளிலொன்றைத் தனக்கு வாரிசு உரிமையாக முறைப்படி வாங்கி வளர்த்து ஆளாக்குவது தத்துப்புத்திர முறைமையாகும்.

சோதிடத்தால் தத்துப் பிள்ளையாகச் செல்லும் உறவு அறிதல் எவ்வாறெனில், பாடலின் இரண்டாவது அடியில், சுபர் நோக்க என்று குறிப்பிடும் வாசகத்தினைக் கொண்டும் பிறவாறும் அறியலாகும். அவை:

சென்ம லக்கினத்தினை - சூரியன் பார்த்தால் தந்தை வகையில் உறவினர் என்றும், சந்திரன் பார்த்தால் - தாய்வழி

உறவினர் என்றும், செவ்வாய் பார்த்தால் - சகோதர முறையினர் என்றும், புதன் பார்த்தால் - அம்மான் வழி முறையினர் என்றும், குரு பார்த்தால் - தனக்கு நெருங்கிய, தன்னுடன் சார்ந்த உறவினர் என்றும், சுக்கிரன் பார்த்தால் - மனைவி வழி உறவினர் என்றும் பெற்றோர்கள் தத்துப் பிள்ளையைப் பற்றி அறிதலுக்கு உரிய உபாயமாகும்.

இரட்டைப் பிள்ளை, கருப்பையுடன் பிள்ளை

செய்ய புதனார் பாவர் அங்கிசத்தில் நின்றாலும்
செறிந்தந்த உபய அங்கிசத்தில் நின்றாலும்
ஐயமறவே நிற்கில் பிள்ளை இரட்டையதாம்
ஆம் தனுவே லக்கினமாய்ப் பிற்பாதியாகில்
பைய அதில் நின்றவர் சிங்காங்கிசத்தில்
பரிந்து நிற்க, புதன் சனி அப்பதிதனைப் பார்க்க
துய்ய கருக்கொண்டிருந்த பையும் கூடத்
தோன்றவே சிறுகுழவி தோன்றுந் தானே.

தொகுப்புரை:

சென்ன காலச் சக்கரத்தில், புதன் பாபகிரகங்களின் அங்கிசையில் இருந்தாலும், உபய அங்கிசை இடத்தில் இருந்தாலும், அவ்வாறு புதன் அங்கிசையாளனாக இருப்பதைக் கொண்டு, சந்தேகமில்லாமல் இரட்டைப் பிள்ளையாகச் சாதகன் தோன்றினான் என்று சொல்வதாகும்.

தனுசு ராசியே சென்ம லக்கினமாயிருந்து அதில் பிற்பாதியானால், அதாவது, மூன்று அல்லது நான்காம் பாதமானால், தனுசில் நின்ற கிரகங்கள் சிங்கராசி அங்கிசம் பெற்றதாகவும், புதன் சனி இருவரும் சென்ம ராசியாகிய தனுசு ராசியைப் பார்க்கவும். கிரகங்கள் அமைந்திருந்தால்,

சாதகனான அந்த குழந்தை தாயின் கருப்பையோடு பிறப்பான் (பிறந்திருப்பான்) என்று சொல்லலாகும்.

மறு உள்ள அங்கம் - அறிதல்

தோன்றும் சன்மத்தில் ரவி புதன் வெள்ளி அரசன்
தொடர்ந்தே உற்றிடில் வலம் பக்கத்தில் மறுச்சொல்லே
ஊன்று செவ்வாய் திங்கள் சனிக்கு உலவும் இடப்பக்கத்து
உரை மறுவென்றே உரைப்பக் கேண்மின்

ஏன்ற சுடர்க்கதிபனுற்றால் வயிற்றில், மதிசிரத்தில்
இயல் செவ்வாய்க்கு இருப்பிடத்தில், புதன் பக்கத்தில்
ஆன்ற மறு அரசனுக்கு முகத்தில், வெள்ளி துடையில்
அருஞ்சனிக்கு காலிடத்தில் ஆம்மறுவாமே. 15

தொகுப்புரை:

சன்மலக்கினத்தில் சூரியன் புதன் சுக்கிரன் குரு இவர்கள் இருந்தாலும் அல்லது சன்மம் முதலான இடங்களில் தொடர்ந்து இருந்தாலும் அந்த சாதகனுக்கு உடம்பின் வலது பக்கத்தில் மச்சம் அல்லது மறு என்னும் பருவு உண்டு.

இதைப்போலவே, சன்மம் முதலாக செவ்வாய் சந்திரன் சனி இவர்களிருந்தால் இடப்பக்கத்தில் சாதகருக்கு மறு உண்டு.

அன்றி சென்மலக்கினத்தில் சூரியனிருந்தால் - வயிற்றிலும், சந்திரனிருந்தால் - தலையிலும், செவ்வாயிருந்தால் - இடுப்பிலும், புதனிருந்தால் - கட்கம் பக்கத்திலும், குரு இருந்தால் - முகத்திலும், சுக்கிரனிருந்தால் - துடையிலும், சனி இருந்தால் - கரவிடத்திலும் காலிலும் மச்சம் அல்லது மறு ஏன்னும் பரு அடையாளம் இருக்கும் என்பதனை அறிந்து கூறுவாயாக.

சிறந்த பேச்சாளன், மாலைக்கண்ணன்

மறுவிலாச் செங்கதிர் நின்றிடத் தனுவில் பிறந்தான்
வார்த்தைப் பிரசண்டன் அதிசூரனுமாயிருப்பன்
உறுகலையீனன் தனமுமில்லான், சிங்கத்தில் தானும்
உதித்தவன் இராக்கண்ணிலான், மேடத்தில் இரவி நிற்கப்
பிறந்தவன் கண்டத்திமிராய்த் தனந்திரளார் சிறப்பன்
பிறை வீடே லக்கினமாய் கதிர் இருக்கப் பிறந்த
சிறுவன் விழியுன்னதவான் திரவியவான், கோலே
சென்மமாய் கதிர் நிற்கத் திரவியம் கண் இலான். 16

தொகுப்புரை:

தனுசுராசி சென்ம லக்கினமாக அதில் சூரியனிருக்கப் பிறந்தவன் சாதுரியமான பேச்சாளனும் அதில் மிக்க சூரனுமாக இருப்பான்.

சென்மத்தில் சந்திரன் நீசனாய் இருக்கப் பிறந்தவன் செல்வமில்லாதவனாவன்.

சிங்கராசி லக்கினமாக அதில் சூரியனிருக்கப் பிறந்தவன் மாலைக் கண்ணனாவான்.

மேடராசியே லக்கினமாக அதில் உச்சமாகச் சூரியன் இருக்கப் பிறந்தவன் உடம்பின் வலிமைத் திமிரால் செல்வத்தைச் சேர்த்து சிறந்திருப்பான்.

கடகராசி லக்கினமாக அதில் சூரியனிருக்கப் பிறந்தவன், அழகிய கவர்ச்சியான கண் விழிகளை உடைய செல்வந்தவனாவான்.

துலாம் ராசியே சென்மலக்கினமாக அதில் சூரியன் இருக்கப் பிறந்தவன் செல்வமும் கண்ணும் இல்லாதவன் என்று சொல்லுவார்கள்.

மேடம் முதலாகவுள்ள ராசிகளின் சென்மலக்கினம் அமைய அதில் சூரியன் இருந்தால் பெறும் பலன் கூறப்பட்டுள்ள வகை அறியத்தக்கதாகும்.

கொடிசுற்றிப் பிறத்தல்

கண்ணார் இடபம் தகர் சிங்கம் கண்ட லக்கினமாய்ப்
பண்ணார் சனி செவ்வாய் கூடிபார்க்கில் கொடி இரண்டு உளதாகும்
தண்ணார் செவ்வாய் கண் பார்வைதான் செங்கொடி ஒன்றே சுத்தும்
எண்ணார் சவுரிப் பார்வைக்கே இருக்கும் கரிய கொடி ஒன்றே.

தொகுப்புரை:

இராசி சக்கரத்தின் கண்ணாக உள்ள இடபம் மேடம் சிங்கம் ஆகிய ராசிகளிலொன்று சன்ம லக்கினமாக, சனியும் செவ்வாயும் அந்த ராசியிடத்தில் கூடி இருந்தாலும் பார்த்தாலும், பிறந்த குழந்தை கொடி இரண்டு சுற்றிப் பிறந்ததாகும்.

குளிர்ந்த பூமிகாரகனாகிய செவ்வாய் சன்ம லக்கினத்தைப் பார்த்தால் சிவந்த நிறமுடைய கொடி ஒன்றே சுற்றிக் குழந்தை பிறந்ததாகும்.

இரண்டு ராசிகளுக்கு உரியவனென்று எண்ணுகின்ற, சனி ஒருவனே சன்மத்தைப் பார்ப்பதாயின், குழந்தை கரிய நிறமுடைய கொடியொன்றே சுற்றிப் பிறந்ததாக இருக்கும்.

கருப்பையிலிருந்து வெளிப்பட்டுப் பிறக்கும் போது சில குழந்தைகள் கொடி என்று குறிக்கும் ஒரு பகுதி உடலில் சுற்றிய நிலையில் அமைந்து வரும். அத்தகைய கொடியின் பல நிலைகளை இப்பாடல் அறிதற்கான கிரக அமைப்பினைக் கூறுகின்றது.

தலையில் கொடி சுற்றியிருத்தல்

கொடிய பாம்பினுடன் இரவி கூடி இருக்கின் கொடி தலைக்காம்
நெடிய கன்மம் எட்டாதி நெருங்கில் ரோக சரீரனுமாம்
படிய செவ்வாய் சனி சென்மம் பற்றியிருக்கில் கல்லெரிப்பாம்
உடனே அவன்தன் விழிதனக்கே உறக்கம் மிகுதியுண்டாமே.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் ராகு அல்லது கேதுவுடன் சூரியன் கூடி இருந்தால் கொடி குழந்தையின் தலையில் சுற்றியதாக இருக்கும்.

சென்ம லக்கினாதிபதி எட்டாம் இடத்துக்கதிபதி சேர்ந்திருந்தால் சாதகன் ரோக சரீரமுடையவனாவான்.

செவ்வாயும் சனியும் கூடி சென்ம லக்கினத்திலிருந்தால் கண்ணில் கல்லெரிப்பு என்னும் நோய் உண்டாகும். மற்றும்

தொடர்ந்து சாதகனது கண்களுக்கு பார்வை மங்கும். வெங்கடுப்பு நோய் உண்டாகும்.

இப்பாடல் தரும் கிரகங்களின் பலன்கள், சென்ம லக்கினத்தை முதலிடமாகக் கொண்டு குறிப்பதுடன், கொடி சுற்றல், ரோக சரீரம், கண்ணில் கல்லெரிப்புடன் பார்வை குறையும் நோய் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

உறக்கம் என்பது கண் இமைகள் சேர்ந்த நிலையில் பார்வை குறைவாகும் நோயைக் குறிக்கும்.

பிறந்த கிராமத்தின் அதிகாரி வெளிநாடு செல்வான்

உண்டாகும் சென்மம் திரமாகில் அதில் சென்மத்தோனும் உற
பண்டேசெனித்த கிராமத்தின் பதியாய் இருப்பன் அட்டமத்தான்
மிண்டார் திரமாகில் செனித்த வீட்டின் மாட்டிறப்பன் சன்மம் சரம்
கண்டால் விதேக சஞ்சாரம் காணும் என்றே கருதிடினே. 19

தொகுப்புரை:

பிறவியின் இயல்பினைத் தெரிவிக்கும் சென்ம லக்கினம் ஸ்திரராசியாக இருக்க, அதில் சென்ம ராசிக்கு உடைய கிரகமே இருப்பதாயின்,

சாதகன் முன்னர் ஜனனமான கிராமத்திற்குத் தலைமை அதிகாரியாக இருப்பான். அன்றி

லக்கினத்திற்கு எட்டாமிடமாகிய ஆயுள் ஸ்தானம், வலிமையுடைய ஸ்திரராசியாக அமைந்திருந்தால், சாதகன் பிறந்த வீட்டிலேயே அரிட்டமாவான்.

சென்ம லக்கினம் சரராசியாக அமைந்திருந்தால், சாதகன் வெளிதேசங்களில் பிரயாணம் செய்துவரும் அனுபவத் தினைக் காண்பவனாவான் என்றே கருதலாகும்.

சுதேசம்-தனது தேசம், பரதேசம்-தனது நாட்டினைச் சார்ந்த வெளிதேசங்கள். விதேசம்-விசேடமான கடல் கடந்த தொலை தூர தேசங்கள் எனலாகும்.

வெளிநாட்டில், மலையின்மேல் உத்தியோகம்

சுருதும் சென்மம் உபையமதாய் கண்டார் சிலநாள் விதேசத்தில்
பருதி சென்மாதிபன் ஆகில் பரவும் கிரியில் சஞ்சாரம்
சிரரோகம் சற்றே உண்டென்பர் செவ்வாய் சன்மாதிபதியானால்
உருவாயுதத்தால் அக்கினியால் உறுநோய் காட்டும் உண்மையிதே. 20

தொகுப்புரை:

மானுடப் பிறவியின் விசேடங்களை அறியக் கருதுவதற்குரியதான

சென்ம ராசியானது உபைய ராசியானால், சிலநாட்கள் வெளிதேசங்களில் சாதகன் இருந்து வந்ததாகும்.

சூரியன் சென்ம லக்கினாதிபதியாக அமைந்திருந்தால், துதிக்கவும் புகழவும் தக்கதான மலையில் வாழும் சிறப்பினைச் சாதகன் பெறுவான் மற்றும்

தலைநோய் சிறிது அவ்வப்போது ஏற்படுமென்று சொல்லுவார்கள்.

செவ்வாய், சன்மாதிபதியாக அமைந்தால் சிறப்பாகப் பெயரிட்டுக் குறிக்கும்படி உருவமமைந்த ஆயுதத்தினாலும், நெருப்பினாலும் உண்டான நோயினைச் சாதகன் உண்மையாகவே பெறும்படியாகக் கிரகங்கள் காட்டும் என்பதாம்.

கணிதவித்தை, வியாபாரம், தனவான்
சுபகாரியம் செய்பவன்

உண்மைப்புதன் சென்மாதிபனே உள்ளது, வித்தைக் கணிதமுடன்
வண்மை வியாபாரத் தொழிலே வரும், பொன் வெள்ளி மனையானால்
பண்மைச் சுருதியுணர் தனவான் பாங்கில் செனித்த பதி நீங்கான்
தன்மை பகரலால் சுபகர்மத்தலைவனென்றே சாற்றிடுமே. 21

தொகுப்புரை:

புதன் சென்மாதிபதியாக அமைந்திருந்தால் சாதகன் கணிதவித்தையில் திறமைசாலியான வியாபாரத் தொழிலில் இருப்பவனாக வருவான்.

சென்ம லக்கினம் குரு சுக்கிரன் இவர்களின் வீடானால் மேன்மைதரும் சாத்திரங்களைக் கற்று அதனால் உயர் பதவியும் செல்வமும் உள்ளவனாவான். அதுவல்லாமல்

தான் பிறந்த ஊரை விட்டு நீங்காதவனும், பிறருக்கு இதமான சீதிகளை எடுத்துச் சொல்லும் பண்போடு, ஊர்மக்களுக்கு சுபகாரியங்களைச் செய்து வைக்கும் தலைவனாகவும் விளங்குவான் என்றும் சொல்லப் பெறுவான்.

இப்பாடலால், சென்மலக்கினத்து அதிபன் அதாவது அந்த ராசிக்கு உடையவன் புதனாக இருந்தால், கணக்கு வித்தையில் சாதுர்யமுடையவனாக சிறந்த வியாபாரத் தொழிலில் ஈடுபடுவன்.

சென்மராசி, குரு சுக்கிரன் இவர்களில் இடமானால், தத்துவ சாத்திரப் பண்டிதனாகச் சொந்த ஊரிலேயே உயர்வுடன் இருப்பான். யாருக்கும் இதமான வார்த்தைகளால் பேசும் திறமையால் சுபகாரியங்களுக்குத் தலைவனாகவும் விளங்குவான்.

சென்ன காலத்தில் - தந்தை

சாற்றும் மதி சென்மாதிபனே சரீரகாந்தியுளன் சுகந்தன்
நேற்றிச் சரக்கை விற்றுண்பன், நிலவு சன்மத்தைப் பார்க்கில்
போற்றும் தந்தை அருகிருக்க செனித்தானென்றும் புகல்வார்கள்,
ஆற்றும் சரத்தில் மதியிருக்க, வந்தான் தந்தை அன்றெனவே. 22

தொகுப்புரை:

புகழ்ந்து சொல்லப்படும் சந்திரன் சென்ன ராசியாதிபதியாக அமைந்திருந்தால் சரீர அங்க அழகுக் கவர்ச்சிப் பொலிவுடன் சுகமுள்ளவனும், குற்றமில்லாத உயர் ரகமான பொருள்களை விற்று வாழ்பவனுமாவான்.

சென்ம லக்கினத்தைச் சந்திரன் பார்த்தால், மகன் பிறந்தானென்று பலவாறு போற்றும் இவனது தகப்பன், பிரசவ காலத்தில் தாயின் அருகிருக்க சாதகன் பிறந்தவனென்று மக்கள் சொல்லுவார்கள்.

சரலக்கினத்தில் சந்திரன் இருந்தால், வெளியூர் சென்றிருந்த தந்தை பிரசவத்தின் அன்று வந்து சேர்ந்தான் என்று கூறுவார்கள்.

சென்ன காலத்தில் - தந்தை

எனவே வெள்ளி புதன் நடுவில் இந்து இருக்க வந்தருகே
வினவித் தந்தை இருந்திடுவன், வெய்யோன் சரத்தில் மதிபத்தில்
தனதாயிருக்கப் பிதாவிருக்கும் தலத்தில் சனித்தான் என்பர்
சினமார் சனி சென்மத்து ஏழில் செவ்வாயேனும் பிதாதேசம். 23

தொகுப்புரை:

சனன கால ராசிச் சக்கரத்தில், சுக்கிரனுக்கும் புதனுக்கும் மத்தியில் சந்திரன் இருந்தால், குழந்தை பிறக்கும் சமயத்தில் நல்ல சேதிவினவி தந்தையானவன் அங்கு இருப்பான்.

சூரியன் சரராசியிலும், சந்திரன் பத்திலும் இருக்க, தகப்பன் இருக்கும் இடத்தில் சாதகன் ஜனித்தான் என்பார்கள்.

சனியானவன் சென்மராசியிலும் அதற்கு ஏழாமிடத்தில் செவ்வாயும் இருந்தால், சாதகன் பிறந்தது தந்தை வாழ்ந்த ஊரேயாகும்.

இதனால்குழந்தை ஜனனமான காலத்தில் தகப்பன் சமீபத்திலிருந்து நல்லசேதி கேட்டு வந்தானென்பதும், குழந்தை பிறந்த இடம் தந்தையின் வீடு என்பதும், குழந்தை பிறந்தது தந்தை வாழும் ஊர் என்பதும் அறியப்படுவதாகும்.

விரும்பாத நிலையில் சனனம்

தேசார்மனுஷாலக்கினமாய்செவ்வாய்பார்க்கச்செனித்தவனும்
மாசானக்கரையென்றேவழுத்தலாகும், சனிசெவ்வாய்
தேசார்திரிகோணத்தில்மதிநிற்கப்பிறந்தநேயனையே
கூசான்அன்னைஎறிவாள், இந்தைக்குருநோக்கின்கைக்கொள்வானே. 24

தொகுப்புரை:

அழகு பொருந்திய மனித வடிவுடனமைந்த ராசிகளாகிய மிதுனம், கன்னி, துலாம், கும்பம் இவைகளிலொன்று சென்மலக்கினமாக, அந்த ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கப் பிறந்தவன் மயானத்தைச் சார்ந்த இடத்தில் பிறந்தவனென்றே சொல்லலாகும்.

சனன காலத்தில், சனியும் செவ்வாயும் நட்புடன் கூடியிருக்க, திரிகோண ராசியில் சந்திரன் நிற்கப் பிறந்த சிசுவை, தாயே எறிந்து விடுவதற்கு அச்சப்படமாட்டாள்.

அந்த திரிகோணராசிச் சந்திரனை குரு பார்த்தால் உற்றவன் அந்த சிசுவை எடுத்துக் கொள்வான். (பெற்றவளே குழந்தையை வைத்துக் கொள்வாள்)

பாடலில் வாசக முறைப்படி, கடைசி சொல் கைக்கொள்வாள் என்றிருக்க வேண்டும். சுவடியில் கைக்கொள்வான் என்றிருப்பது ஒரு வகையில் பொருத்தமானதாகக் கொள்ளலாம்.

மனுஷா லக்கினமாய் என்பதற்கு கன்னிராசியைக் குறிப்பாகக் கொள்ளலாம். உற்றவன் - உறவினன்.

கண்டெடுத்து வளர்த்த பிள்ளை

கொள்ளும்பாவமதி சென்மம்குறுக, செவ்வாய்சனிஏழில்
மெள்ளஇருக்கக்குரு நோக்கவிரும்பிஎடுத்தார்வளர்க்கஉய்யும்
தெள்ளும்புதன்பாம்புஅரசன்மதிசேர்ந்துசென்மத்திருந்திடவே
பிள்ளைபிறக்கில்வங்கிஷத்தைக்கெடுப்பானெனவும்பேசுவரே. 25

தொகுப்புரை:

பாபியான சந்திரன் சென்ம ராசியில் இருக்கவும், செவ்வாயும் சனியும் சேர்ந்து சென்மராசிக்கு ஏழாமிடத்தில் இருக்கவும் அவர்களைக் குரு பார்க்கும் அமைப்பில் பிறந்த குழந்தை

பெற்றவனால் கூசாமல் எறியப்பட்ட பிள்ளையைக் கண்டு எடுத்து விருப்பமுடன் எடுத்து வளர்த்தவர்களால், சாதகன் பிழைத்திருப்பான் என்பர்.

புதன், ராகு (கேது) குரு, இவர்கள் சந்திரனுடன் சேர்ந்து சென்மலக்கின ராசியில் இருக்கப் பிள்ளை பிறந்தால், வமிசத்தைக் கெடுப்பவனாவான்.

சென்னம் மீனம், கடகம் - திசாபலன்

பேசும்லக்கினம்மீனம்நண்டில்பிறந்தவர்களுக்கெல்லாம்
பாசமாம்மகாதிசையின்பலன்களைப்பார்க்கும்போது
தேசுறுகரியபாம்பின்திசைவரில்பார்க்கும்காலம்
தூசுபொன்சோபனநற்சுபபலன்பெறுவர்தாமே. 26

தொகுப்புரை:

சென்ம லக்கினம் மீனம் கடகம் இவற்றில் பிறந்தவர்களுக்கெல்லாம், வரும் மகாதிசைப் பலன்களை ஆராய்ந்து பார்க்கும் போது,

சுபஸ்தானத்திலோ, சுபருடன் கூடியோ, சுபரால் பார்க்கப்பட்டோ சென்ன காலத்தில் இருக்கும் ராகுமகா திசை நிகழும் போது,

பட்டாடைகள், பொன்னாபரணங்கள், முதலியன வற்றைப் பெற்றுச் சுகபோகங்களுடன் சுபகாரியங்களைச் செய்யும் பாக்கியங்களையும் பெறுவர் என்று சொல்லலாகும்.

சென்மலக்கினம் மீனம், கடகம், இவற்றில் பிறந்தவர்களுக்கு ராகுமகாதிசை நிகழும்போது, சென்ன காலத்தில் ராகு பெற்றுள்ள தகுதிகளுக்குரிய அளவில், சாதகன் சுகபோக பாக்கிய நற்பலன்களைப் பெறுவான் என்பது அறியத்தக்கதாகும்.

இலக்கினத்தில் உபகிரகங்கள் - பலன்கள்

பேசும் லக்கினம் சசிலக்கினம் அதில் தூமன் இருந்திடவே
வீசும் வாணாள் குறையும், விதிபாதன் இருக்கில் புகழ் நாசம்
மாசில் பரிவேடம் இருக்க மதிபோகும், சுக்கிரசாபனுறில்
பேசின் குலங்கள் நசிக்கும் துசன் மேவில் தனம் போமெனப் பேசுவரே. 27

தொகுப்புரை:

சென்ம லக்கினம், சந்திரா லக்கினம் ஆகியவற்றில் தூமன் இருந்தால் ஆயுள் குறையும், விதிபாதன் இருந்தால் புகழ் நாசமாகும். பரிவேடனிருந்தால் அறிவு மங்கிப் போகும். இந்திரபானு இருந்தால் குலங்கள் நசிக்கும், துசன் இருந்தால் தனம் அழிந்துபோகும் என்று சொல்லுவார்கள்.

கிரகங்களின் உபகிரகங்கள் என்பது, தலைமையான ஒன்பது கிரகங்களுக்கும், அவற்றைச் சூழ்ந்ததாகவும்

சார்ந்ததாகவும் கிரகச் சாயல்கள் உள்ளன. அவற்றையே சோதிடக் குறிப்பில் உபகிரகங்கள் என்று குறிக்கப்படும்.

சூரியனுக்கு - சுவாலாமுகம், சுக்கிரனுக்கு - இந்திரதனு
சந்திரனுக்கு - பரிவேடம் சனிக்கு - குளிகன்
செவ்வாய்க்கு - தூமன் இராகுவுக்கு - வியதீபாதன்
புதனுக்கு - அர்த்தப்பிரகரணம் கேதுவுக்கு - தூமகேது
குருவுக்கு - காலவேகம்

இராகுவின் உபகிரகம் துசன் என்பர்

தூல சரீரவான், தேசசஞ்சாரம்

பேசும்சன்மம்சரராசி பிரியாச்சரத்திலாதிபனும்
பாசஞ்சரத்திலுறத் தோன்றிப் பார்க்கில் தூல சரீரனுமாம்
வீசுலக்கினம்சரமாய் அவ்வீட்டுக்குடையோன்சரத்திருக்க
தேசம் விடுத்து தேசம்சஞ்சாரந் திகழும் எனவே சொல்வாய். 28

தொகுப்புரை:

சன்ம லக்கினம் சரராசியாக இருந்து, அதற்கு அதிபனும் சரராசியில் இருந்து சென்ம லக்கினத்தைப் பார்ப்பதாயின் சாதகன் ஸ்தூல சரீரமுள்ளவனாவான்.

இலக்கினம் சரமாய், அந்த வீட்டுக்கு உடைய கிரகம் சரராசியில் இருப்பதானால் சாதகன் தனது தேசத்தை விட்டு, வெளிதேசங்களில் பிரயாணம் செய்யும் தகுதி உண்டாகும் என்று சொல்லுவார்கள்.

சென்மம் மகரம், கன்னி - கேது திசைப்பலன்

தார்செறி மகரம் கன்னிதனில் பிறந்தவர்கட் கெல்லாம்
பார்செறி மகாதிசையின் பலன்தன்னைப் பார்க்கும்போது
சீர்பெறு கேதுவானதிசைவரும்போது செல்வம்
ஊரதிகாரமாகச் சன்மானம் உண்டாம் கண்டீர். 29

தொகுப்புரை:

மகரம், கன்னி ஆகிய ராசிகளிலொன்றே சென்னகால லக்கினமாகப் பிறந்தவர்களுக்கெல்லாம், முறையாகத்

தொடர்ந்துவருகின்ற மகாதிசைகளினால் உண்டாகும் பலன்களைப் பார்க்கும் போது

சிறப்புப் பொருந்திய கேதுவின் திசையானது சாதகனுக்கு நடக்கும் போது, செல்வம் பலவும் உண்டாகும் ஊர் அதிகாரம் செய்யும் உயர்பதவியுடன் மிகுந்த சன்மானங்களும் உண்டாகும் என்ற நல்ல பலன்களை காண்பீர்களாக.

இரண்டாமிடம் - பலன்கள்

சாதகனின் கண்களைப் பற்றி அறிதல் மற்றும், வித்தை, புத்தி, வாக்கு குடும்பம் - பலன்கள்

எழில் கண்ணாதிபன் தீக்கோளாய் எட்டினில் சனியோடு இந்து
பழிகொள் ஆறாமிடத்தில் பதியவே பானு பூனைக் கண்ணாம்
விழிக்கொள் கோள் பாவனாய் லக்கினத் தாதியை மேவி ஆறு எட்டு
ஒழி வியத்து உரிலோ கெற்பத்துறு குருடாகும் தானே. /

தொகுப்புரை:

அழகு பொருந்திய கண்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான இரண்டாமிடத்ததிபதி, பாபகிரகமாய் இருக்க,

எட்டாமிடத்தில் சனியோடு சந்திரன் கூடி இருக்கவும், குற்றம் காண்பதற்குரிய ஆறாமிடத்தில் நிலையாக சூரியன் இருப்பானாகில் சாதகன் பூனைக் கண்ணனாகப் பிறந்திருப்பான்.

கண்களுக்குரிய நேத்திராதிபதி பாபனாக லக்கினாதிபதியோடு கூடி ஆறு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் இருந்தால், சாதகன் மாதாவின் கற்பத்திலேயே குருடாகப் பிறப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

எழில் - அழகு, கண்ணாதிபன் - கண்களைப் பற்றிய விபரங்களை அறிதற்குரிய இரண்டாமிடத்துக்குரிய கிரகம், தீக்கோளாய் - பாபகிரகமாக, இந்து - சந்திரன், பழிகொள் - ஆறாமிடம் - சாதகனுக்கு ஏற்படும் கடன், தொல்லைகள், பகை, ஆபத்துக்கள், நோய் ஆகியவற்றை அறிதலால் உண்டாகும் பழியினைக் கொண்ட ஆறாமிடம். பதிய - நிலைக்க, பானு - சூரியன், ஒழிவியம் - விரையங்களைத் தருதலைக் காணும் பன்னிரண்டாம் இடம். கெற்பத்துறு - தாயின் கெற்பத்தில் சிசுவைச் சூழ்ந்திருக்கும் கொடிய நிணநீர்களால் பெறும்.

விளக்கவுரை:

லக்கினம் முதலாக எண்ணப்படும் சாதகப்பலன் காணும் முறையில், இரண்டாம் இடம் தனம், குடும்பம், கண்கள், வித்தை, புத்தி, வாகனம், வாக்கு, அணியும் பொன் நவரத்தினங்கள் ஆகியவற்றை அறிதற்குரிய இடமாகும். ஆயினும், மனித வாழ்வில் கண்பார்வை சிறந்ததாக இருத்தலால் இரண்டாமிடத்தின் தகுதி, கிரகம், பார்வைகள், ஆகியவற்றைக் கொண்டு சாதகனின் கண்களைப் பற்றிய அனைத்து விதமான நிலைகளையும் அறியப்படுதலின் இரண்டாமிடம் கண்ணைப்பற்றி அறியும் இடம் என்பது சிறப்பாக அமைந்துள்ளது. நேத்திரம் - கண்.

இரண்டாமிடத்தோன் - சுக்கிரன்
கண்களைப் பற்றிய பலன்கள்

சுக்கிரன் நேத்திராதிபதியெனத் தோன்றி எட்டில்
நிற்க ஓராறில் வெய்யோன் நிற்கில் கண்ணோய் பிற்காலம்
தக்க ஏறு அரி மேடத்தில் சனி குசன் தானுற்றாலும்
மிக்கதாம் அதரத்து ஊனம், எழிற் கொடி சுற்றித் தோன்றும். 2

தொகுப்புரை:

சுக்கிரன் இரண்டாமிடமாகும் கண்ணாதிபதியாக இருந்து, எட்டாமிடத்தில் போய் இருக்கவும், ஆறாமிடத்தில்

சூரியன் இருக்கவும் பிறந்த சாதகர்க்குப் பிற்காலவயதில் கண்நோய் உண்டாகும்.

தகுதியான இடங்களாகும், இடபம், சிங்கம், மேடம் ஆகிய இடங்களில் சனி செவ்வாய் ஆகியோர் இருந்தால் சாதகரின் உதட்டிற்கு ஊனம் உண்டாகும்.

சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் இடபம், சிங்கம், மேடம் ஆகிய ராசியிடங்களில் இருக்கப் பிறக்கும் சிசுவானது கொடி சுற்றியதாகப் பிறக்கும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

ஓராறு - ஆறாமிடம், வெய்யோன் - சூரியன், ஏறு - இடபராசி, அரி - சிங்கராசி, மேடம் - மேடராசி, குசன் - செவ்வாய், அதரம் - உதடுகள், ஊனம் - குறைபாடு, சிதைவு, விகாரம், கொடி சுற்றித் தோன்றும் தாயின் கெற்பத்தில் வளரும் சிசுவிற்கு உயிர்ப்புச் செல்லுதற்குரியதாக கருப்பையுடன் இயற்கையாக அமைந்திருக்கும் கொடிபோன்ற சீவன்தண்டு, குழந்தை கற்ப கோளத்தில் பிறந்து வருங்காலத்தில் உடலில் சுற்றப்பட்ட நிலையில் பிறக்கும் செயலினையே கொடிசுற்றித் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது.

கண்கள் இல்லை, மாலைக்கண் (கண்ராசியிடம்)

லக்கினத்ததிபனோடு இரண்டிடத்ததிபன்சுங்கன்
திக்கெனகூடி மூன்றில் செங்கதிர் நிற்கு மாகில்
ஒக்கவே கண்ணில்லாமல் உதிப்பன், ஆதித்தனல்லால்
மைய்கணாய் பொன் மதியுமுற்றால் மாலைக்கண் ஆகுமென்றே. 3

தொகுப்புரை:

சாதகனின் லக்கினாதிபதியோடு, இரண்டாமிடத்ததிபனும் சுக்கிரனும் ஒன்றாகச் சேர்ந்து நிற்கவும், மூன்றாமிடத்தில் சூரியன் இருக்கவும் இரண்டு கண்களும் ஒளியில்லாமல் பிறந்திருப்பான்.

மூன்றாமிடத்தில் சூரியன் இல்லாமல் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் மாலைக்கண்ணை உடையவனாக இருப்பான் என்றே சொல்லுவர். மை தீட்டப்பட்ட கண்களை உடைய பெண்ணே கேட்பாயாக.

அருஞ்சொற்பொருள்

கங்கன் - சுக்கிரன், திக்கென கூடி - சனன காலத்தில் சேர்ந்து, செங்கதிர் - சூரியன், ஆதித்தன் - சூரியன், பொன் - குரு, மாலைக்கண் - மாலை நேரத்திலிருந்து பார்வை குறைந்து போகும் கண்கள்.

குறிப்பு: இப்பாடலால் பார்வை இல்லாத கண்கள், மாலைக்கண்கள், ஆகியவற்றைப் பெற்றுப் பிறக்கும் சாதக அமைப்பு முறைமை சொல்லப்பட்டுள்ளது.

கண்நோய், குருடு (கண் ராசியிடம்)

குறைவில் நேத்திராதிபதி சுங்கன் லக்கினத்தோனும் கூடி
நிறையும் மூன்றாமிடத்தில் நிற்கில் நேத்திர நோயாகும்
நறைகுழல், லக்கினாதி ரெண்டிடத் ததிபன் வெள்ளி
அறைய ஓரிடத்தில் நிற்கில் அந்தகனாவான் கண்டீர்! 4

தொகுப்புரை:

குறைவில்லாத கண் இடமாகும் இரண்டாமிடத்திற்குரிய கிரகம், சுக்கிரன், லக்கினாதிபதி ஆகிய மூவரும் ஒன்றாகக் கூடி, மூன்றாமிடத்தில் இருப்பார்களானால் சாதகர்க்கு கண்ணில் நோய் உண்டாகும்.

மணம் வீசும் கூந்தலை உடைய பெண்ணே!

லக்கினாதிபதியும், இரண்டாம் இடத்துக் குரியவனும், சுக்கிரனும் ஒன்றாக ஓரிடத்தில் (ராசியில்) நிற்பார்களானால் சாதகன் குருடனாவான் என்பதைக் காண்பாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

குறைவில் - பகை, சீச்சம், பாபர் சேர்க்கை இல்லாமல், நேத்திராதி - கண்ராசியிடத்ததிபதி, சுங்கன் - சுக்கிரன், நேத்திரம் - கண்கள், நறைகுழல் - மணம் பொருந்திய

கூந்தலை உடைய பெண்ணே! வெள்ளி - சுக்கிரன், அறைய - ஒரு வீட்டிடத்தில் சேர்ந்து, அந்தகன் - குருடன்.

இரவுக் குருடு, பிறவிக் குருடு

நேத்திரத் தானத்தாதி சுங்கனாகி
நிறை சென்மாதியைக் கூடி மூன்றில் நின்றால்
நேத்திரரோகம், அந்த நேத்திராதி
நிலவாகிப் புகருடனே இரண்டில் நின்றால்
நேத்திரந்தான் நிசிகடோறும் ஒளி கொடாது
நின்ற கற்கடகந்தனில் உற்பவித்த போதும்
நேத்திரத்தான் மதி சுங்கன் கூடி நின்றால்
நிகழ் பிறவிக்குருடனுமாய் நிற்பன்தானே. 5

தொகுப்புரை:

இரண்டாமிடத்தோன் சுக்கிரனாக இருந்து அவன் லக்கினாதிபதியோடு கூடி மூன்றாமிடத்தில் இருந்தால் கண்ணில் நோய்கள் உண்டாகும்.

கண்ணுக்குரிய இரண்டிடத்தான் சந்திரனாக இருந்து, அவன் சுக்கிரனுடன் இரண்டாமிடத்திலே இருந்தால் சாதகனுக்கு இராத்திரியில் கண் தெரியாது.

கடக லக்கினத்தில் பிறந்தவனாயினும், இரண்டாமாதிபதியும் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருந்தாலே பிறவிக் குருடனாவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

சுங்கன் - சுக்கிரன், நேத்திர ரோகம் - கண் நோய்கள், நிலவு - சந்திரன், புகர் - சுக்கிரன், நிசி - இரவுக்காலம், ஒளி கொடாது - பார்வை இருக்காது. மதி - சந்திரன், பிறவிக்குருடன் - பிறந்ததிலிருந்தே கண்கள் தெரியாத பார்வையில்லாத குருடன்.

குறிப்பு: மனித வாழ்க்கைக்கு முக்கிய அவையவமாகிய கண்களைப் பற்றிய பல வகையான செய்திகளை சோதிடக்கலை வழியே அறிவதனால், கண் ராசி என்றும், நேத்திரத்தான மென்றும் கூறப்பெறும் லக்கினத்திற்கு

இரண்டாமிடத்தினை முதன்மையாகக் கொண்டு கூறவேண்டுமென்பது பொதுவான முறையாகும்.

கண் இடமாகிய இரண்டாமிடத்திற்குரிய கிரகநிலை, முக்கியமாகச் சுக்கிரன் சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்களின் இட அம்சங்களைக் கொண்டே பலன்களை வகைப்படுத்திக் காண வேண்டிய சோதிட முறையினை இதுவரையில் கூறப்பட்டுள்ள பாடல்களினால் அறியலாகும்.

கண்ணோயும், ஒரு கண்ணும்

சிங்கமே நேத்திரத் தானந்தானாகிச்
செங்கதிர் சுங்கன் கூடி சிங்கத் துற்றால்
அங்கவரோடு எந்தத் தானாதிபதியேனும்
அவரவர் தம் காரகராயினும் வந்துற்றால்
தங்கிய பேறிய தமக்கெய்தும் நேத்திரநோய்
தனது பதியாகில் உச்சந்தானாகில் நன்மை
துங்கமதி வியத்துரிலோ விழி ஒன்று ஊனம்
சூரியனும் கூடில் இல்லை சோதி இரண்டே.
(விழியோ இரண்டும் போம்)

தொகுப்புரை:

சிங்கராசி கண்களுக்குரிய இரண்டாமிடமாக இருக்கவும், சூரியனும் சுக்கிரனும் சேர்ந்து அதே சிங்கராசியில் இருக்க, அவர்களோடு எந்த ராசிக்கதிபராயினும் அல்லது அவ்வவர்களுடைய காரகர்களாயினும் வந்து சேர்ந்தால்

குணம் பெறாமல் தங்கியதாகவும், இன்ன கண்நோய் என்று பெயர்பெற்றதாகவும் உள்ள பலவகைப்பட்ட கண் நோய்கள் சாதகர்க்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்.

மேலே சொல்லப்பட்ட காரககிரகங்களுக்கு அவரவர்க்கு உரிய சொந்தமான இராசிகள் ஆட்சியிடமாயினும் உச்சயிடமாயினும் அற்பமான கண்நோய் உண்டாகி நலம் பெறும் கண்கள் நன்றாக இருக்கும்.

சந்திரன் லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் ராசியாகிய வியஸ்தானத்தில் இருந்தாலோ, இரண்டு கண்களில் ஒரு கண்ணின் விழி ஊனமாகும்.

அதே பன்னிரண்டாம் இடத்தில் நின்று சந்திரனுடன் சூரியன் கூடி இருந்தால் இரண்டு கண்களும் ஊனமாகும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

சிங்கம் - சிங்கராசி, செங்கதிர் - சூரியன், சுங்கன் - சுக்கிரன், காரகர் - கிரகங்களுக்குரிய காரககிரகங்கள், பேரறிய - இன்ன கண் நோய் என்று அறிய, துங்கமதி - வளர்பிறை, அல்லது பூரணமான சந்திரன், வியம் - நட்டங்களைக் கணித்துக்காணும் பன்னிரண்டாமிடம், விழி - கண் விழியின் பார்வை, ஊனம் - குறைபாடு, கெட்டுப்போதல், சோதி - கண் ஒளிப்பார்வை.

குறிப்பு: சாதகத்தில் கண்களைப் பற்றி அறிந்து கூறுவதற்கு, இரண்டாமிடம், சிங்கராசி சூரியன், சந்திரன், சுக்கிரன் ஆகியவைகளுடன் காரகர்களின் தன்மைகள் ஆகியவற்றையும் ஒப்புநோக்கிப் பலன் கண்டறிய வேண்டுமென்பதை இந்தப் பாடலும் விளக்கமாக அமைகின்றது என்பது அறியத்தக்கதாகும்.

கண் நோய்கள் - காணல் (பொது)

சோதிலக்கினத்தில் குசன் சூழ்ந்திட
ஓதும் அட்டமத்தான் கேந்திரத்து உற
போத அட்டமத்தில் பாவர் பொருந்திடவே
ஏத நேத்திர நோயும் வந்தெய்துமே. 7

தொகுப்புரை:

நேத்திரங்களைப் பற்றி அறிவதற்கு உரிய இரண்டாமிடமாகிய நேத்திரலக்கினத்தில்,

செவ்வாய் கிரகம் இருக்கவும், அட்டமாதிபதி கேந்திரஸ்தானத்தில் இருக்கவும்

அட்டமஸ்தானத்தில் பாபகிரகங்கள் இருக்கவும் பிறந்த சாதகர்க்கு

கேடு செய்யும் கண்ணோய்கள் வருவதாகும்.

அருஞ்சொற்பொருள்

சோதி - பார்வை ஒளிபெறும் கண்கள், குசன் - செவ்வாய், போத - அவ்வாறான, ஏத - (ஏதம்) குற்றம், நேத்திரம் - கண்கள், நேத்திரநோய் - கண்களுக்கு வரும் பலவகையான நோய்கள்.

குறிப்பு: கண்ணோய்கள் வருவதற்குரிய காரணம், சனன காலத்தில் அமைந்துள்ள கிரக நிலைகளாலும் ஏற்படலாகுமென்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

மாலைக்கண், பிறவிக் குருடு

சேரும் சுங்கன் சென்மாதி திங்கள் கூடி ஆறு எட்டில்
நேரும் வியத்தில் பலமற்றே நிற்கின் மாலைக்கண்ணாகும்
ஏரும் கதிரோன் சென்மாதி இரண்டாமாதி வெள்ளி ஒன்றாய்
கூறும் வியம் ஆறு எட்டிலுறக் கூடில் பிறவிக்குருடனுமாம். 8

தொகுப்புரை:

சுக்கிரனும் சன்மாதிபதியும் சந்திரனும் கூடி, ஆறு எட்டு பன்னிரண்டாம் இடங்களில் பலமற்றிருந்தால், மாலைக்கண்ணாகும்.

சூரியனும் சன்மாதிபதியும் இரண்டாமித்திற் குரியோனும் சுக்கிரனும் ஒன்றாய்க்கூடி பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களில் இருந்தால் பிறவிக் குருடனாவான்.

அருஞ்சொற்பொருள்

சுங்கன் - சுக்கிரன், திங்கள் - சந்திரன், பலமற்று - ராசியிடம், நீச்சம் பகை, பார்வை, சேர்க்கை இவற்றால் பலமற்று, கதிரோன் - சூரியன், வெள்ளி - சுக்கிரன்,

குறிப்பு: மாலைக்கண்ணாகும் என்பதறிவதற்குரிய கிரக நிலைகள் ஆறு எட்டு என்ற ஏறு வரிசையிலும் (6, 8, 12)

பிறவிக் குருடாகும் என்பதறிவதற்குரிய இடங்கள் பன்னிரண்டு ஆறு எட்டு என்று இறங்குவரிசையில் எட்டாமிடம் இடை நிலையிலும் கொண்டு பலன் கூறப்பட்டிருக்கும் நுட்பம் அறியத்தக்கதாகும்.

கண்களுக்கு ஊனம் உண்டாதல்

ஆமே இரவி சுக்கிரன் இரண்டாமாதி சென்மத்தாதிபன் நாலும்
தாமே கூடி அவரவர்கள் தானத்துக்கு ஆறு எட்டு வியத்து
மேவி இருக்கில் அவரவர்கள் திஷ்டிக்கு ஊனமாமென்றே
தோமே சொல்வார் பலபாகம் சுவைகளறிந்து சொல்வாரே. 9

தொகுப்புரை:

சூரியன் சுக்கிரன் இரண்டாமிடத்துக்குரியவன் சென்மராசியாதிபதி ஆகிய நால்வரும்

இவர்கள் தாமே கூடி அவரவர்களுடைய சொந்த ஸ்தானங்களுக்கு,

ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் இருந்தால்,

அவரவர்களுக்குரிய பார்வைக்கு ஊனமாகும் என்பதனைப் பலபாகங்களையும்

அவற்றால் வரும் நன்மை தீமைகளையும் அறிந்து சோதிடப் புலவர் சொல்வார்கள்.

எனவே, இவ்வாறமைந்த கிரகநிலைகளைப் பெற்றுதித்த சாதகருக்கு கண்பார்வைகளுக்கு ஊனம் உண்டாகும் என்பதை இதனால் அறிந்து சொல்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

ஆமே - ஆகும். இரவி - சூரியன், தானத்துக்கு - இடத்திற்கு, வியம் - நஷ்டபாகமறியும் பன்னிரண்டாமிடம்,

மேவி - சென்று, திஷ்டி - பார்வை, ஊனம் - கேடு, தோமே - முடிபாகவே, சுவை - பலாபலன்கள்.

கண்பார்வை - வகை

சொல்லும் பலன் நேத்திரத்தானம் சூழ்ந்தாராதிபரால் பலன்கள்
எல்லோன் செவ்வாய் மேல் நோக்காம், இந்தும் குருவும் சமன் பார்வை
வெல்லும் புதனும் வெள்ளிக்கும் விழிபக்கத்தே நோக்கியிடும்
நல்லகுசன் சனி தனக்கே நயனம் கீழ்நோக்காயிடுமே. 10

தொகுப்புரை:

கண்கள் பற்றிய ஸ்தானமெனும் இரண்டாமிடத்தினைக் கொண்டு, சாதகரின் கண்பார்வையின் வகை விபரங்களைச் சொல்ல வேண்டுமாயின்,

இரண்டாமிடமாகிய கண் ராசியில், சூரியன், செவ்வாய் ஆகியவர்கள் இருந்தால் கண்கள் மேல் நோக்கப் பார்வையாக இருக்கும்.

சந்திரன், குரு இருந்தால் கண்கள் சமனான பார்வையாக இருக்கும்

புதன், சுக்கிரன் இருந்தால் கண்கள் பக்கப்பார்வையெனும் ஓரப்பார்வையாக இருக்கும்.

ராகு, சனி இருந்தால் கண்கள் கீழ்நோக்கிய பார்வையாக இருக்கும்.

அருஞ்சொற்பொருள்

எல்லோன் - சூரியன், இந்து - சந்திரன், வெள்ளி - சுக்கிரன், குசன் - ராகு, நயனம் - கண்கள். கண்கள் - மேல்நோக்கு, சமன் நோக்கு, பக்க நோக்கு, கீழ்நோக்கு என நான்கு வகைப் பார்வைகளைப் பெறும்.

இரண்டாமிடத்தைக் கொண்டு வலக்கண் பார்வைப் பலனையும் பன்னிரண்டாம் இடத்தைக் கொண்டு இடக்கண் பார்வைப் பலனையும் அறிதல் வேண்டும்.

பலவகைக் கண்நோய்களறிய

இடும் சென்மாதிதனை சனி சுண்டிடில் கண்நோயாம் இரண்டாதி
உடன் சூரியனும் கூடி நிற்க மறறும் குளிகனுடன் சனிதான்
அடைந்தே நோக்க நேத்திர நோயாம் அவ்வீடே சலராசியெனில்
தொடர்ந்தே நீர்பரவித் துளிக்கும் அவன்தன் சோதிதனிலே. //

தொகுப்புரை:

கண் ஸ்தானம் என்று குறித்திடும் இரண்டாமிடத்தை முதலாகக் கொண்டு கண்களைப் பற்றிய பலாபலன்களை அறிவதல்லாமல்,

லக்கினாதிபதியைச் சனி பார்த்தால் கண் நோயாம்.

இரண்டாமதிபதியுடன் சூரியனும், குளிகனும் சனியும் சேர்ந்து பார்க்கவும் கண்ணோயே உண்டாகும்.

இரண்டாமிடம் சலராசியானால் சாதகனுடைய கண்களில் நீர் சுரந்து வழிந்து கொண்டேயிருக்கும் நோய் உண்டாகும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

இடும் - குறித்திடும், குளிகன் - சனிக்கு உப கிரகம், துளிக்கும் - துளித்து வழியும், கண் நோய்களில் கண்களில் நீர் சுரந்து, விடாமல் வழிவது ஒரு வகைக் கண் நோயாகும்.

கண்கள் ஊனமாகிப் போதலை அறிய

சோதிரவியும் பாவருடனே சூழ்ந்து பலனற்றே வியத்தின்
மீதிலிருக்க வலக்கண்போம் வீரவும் செவ்வாய் பலனற்றே
ஏதலியத்தில் உறைந்திடிலோ இடக்கண் ஊனம் இவரிருவர்
தீதாம் வயத்தில் கூடிநிற்க தெரியாது இரண்டு திட்டியுமே. 12

தொகுப்புரை:

சோதியுடன் விளங்கும் சூரியன் பாப கிரகங்களுடன் சேர்ந்து, பலமிழந்து பன்னிரண்டாமிடமாகிய விரயஸ்தானத்தில் இருந்தால் சாதகர்க்கு வலது கண் ஊனமாகிப்போகும்.

மேடராசிக்கும் விருச்சிகராசிக்கும் உரிய கிரகமாக விரவி நிற்கும் செவ்வாய் பலமற்றநிலையில், குற்றமாகும் விரயஸ்தானத்தில் இருந்தால் இடது கண் ஊனமாகிப் போகும்.

சூரியனும் செவ்வாயுமாகிய இவரிருவரும் தீமையாகும் விரயஸ்தானத்தில் கூடி நின்றால் சாதகர்க்கு இரண்டு கண்களிலும் பார்வைகெட்டு ஊனமாகிவிடும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

சோதி - பிரகாசமான, ரவியும் - சூரியனும், வியம் - பன்னிரண்டாமிடம், ஏதம் - குற்றம், திட்டி - (திருஷ்டி) பார்வை.

ஊனமும், பிறவிக்குருடும்

திட்டமுடனேசனி செவ்வாய் சேர்ந்து இரண்டு பன்னிரண்டில்
கிட்டி இருக்கில் விழிக்கூனம், கிரணரவி சந்திரன் வியத்தில்
ஒட்டி இருக்கில், விழிநோயாம், ஊரும் அந்தகனாய்ப் பிறக்கும் வகை
துட்டரவி சேய் மதி அரசன் சுங்கன் இவரைவர் எங்குறினும். 13

தொகுப்புரை:

சனியும் செவ்வாயும் சேர்ந்து இரண்டு பன்னிரண்டு ஆகிய இடங்களிலிருந்தால், கண்களுக்கு ஊனம் உண்டாகும்.

சூரியன், சந்திரன் ஆகிய இருவரும் பன்னிரண்டாம் இடமாகிய வியஸ்தானத்தில் சேர்ந்து இருந்தால் கண்களில் நோயுண்டாகும்.

சூரியன், செவ்வாய், சந்திரன், குரு, சுக்கிரன் ஆகிய ஐந்து கிரகங்களும் (சேர்ந்து) எந்த ராசியிடத்தில் இருந்தாலும்

பிறக்கும் போதே கண்ணில்லாத குருடனாகப் பிறந்திருப்பான் என்பது சோதிடத்தால் அறியும் வகையாகும்.

அருஞ்சொற்பொருள்

கிட்டி - ஒன்றாகச் சேர்ந்து, கிரணரவி ஒளிக்கிரணங்களை, கதிர்களை உடை சூரியன், ஓட்டி - கூடி, ஊரும் - வழியைத் தடவிச் செல்லும், அந்தகன் - பிறவிக்குருடன், சேய் - செவ்வாய்.

பன்னிரண்டாம் இடத்தை முக்கிய ஸ்தானமாகக் கொண்டு அதில் தனித்தும் கூடியும் நிற்கும் கிரகங்களின் தன்மையினைக் கொண்டு ஊனம், நோய் அந்தகம் ஆகியவற்றைக் காணும் உபாயத்தினை இப்பாடல் தெரிவிக்கின்றது.

பிறவிக்குருடு, கண் எடுக்கப்படுதல்

எங்கோன் இரவி வெள்ளி பலனில்லாமல் இருக்க அவருடனே
பொங்கும் சென்மாதிபன் கூடில் பொருந்தும் பிறவி அந்தகனாம்,
தங்கும் ஐந்தாம் ஆறாம் அதிபதிகள் தானும் சன்மந்தனில் இருக்க
சுங்கன் இரண்டாதியைக் கூடில், சொல்கண்டுபிடுங்கப்படும் கண்டீர்!

தொகுப்புரை:

சூரியன் சுக்கிரன் இருவரும் பலனில்லாமல் இருக்க அவர்களுடனே சென்மாதிபதியாகிய லக்கினாதிபதி கூடியிருந்தால் பிறவியிலேயே குருடனாவான் என்பதைக் கூறுதற்குப் பொருத்தமாகும்.

ஐந்து ஆறு ஆகிய இடங்களில் அதிபதிகளாகிய கிரகங்கள் சென்ம லக்கினத்தில் இருக்கவும், சுக்கிரன் இரண்டாமிடத்து அதிபனைக் கூடியிருந்தால், சாதகனின் கண் பிடுங்கப்படும் என்பதைச் சொல்வாயாக.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், வெள்ளி - சுக்கிரன், பலனில்லாமல் - நீசனாகவோ பகையிடத்தோ, பாபகிரகங்களுடனோ, சுபர் பார்வையில்லாமலோ பலன் இல்லாமல் இருக்க, சன்மம் - சன்ம லக்கினம், சுங்கன் - சுக்கிரன், கண்டீர். இவ்வாறான கிரக நிலைகளைக் கண்டறிந்த சேசிடர்களே, சொல் - சொல்வீர்களாக.

கண்நோய்களுக்கு கிரக காரணம்

காணும் நேத்திரரோகம் இனிக் கதிர் சேர்மதியும் காரியிவர்
வேணும் இரண்டில் ஆறு எட்டில் வியத்தில் நிற்க ரோகமிகத்
தோணும் இரண்டில் பன்னிரண்டில் சோமன் பரிதி கூடுகினும்
பூணும் எட்டில் இரண்டதனில் பொல்லாரிருக்கக் கண்ணோயே. 15

தொகுப்புரை:

சூரியனோடு சேர்ந்த சந்திரன் சனி ஆகிய மூவரும் இரண்டு ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் இருக்க மிகுந்த கண்நோய் உண்டாகும்.

இரண்டு பன்னிரண்டாம் இடங்களில் சந்திரனும் சூரியனும் கூடியிருந்தாலும்

அல்லது எட்டு இரண்டாமிடங்களில் பாபகிரகங்கள் இருந்தாலும் கண்ணோய்கள் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

கதிர் - சூரியன், காரி - சனி, சோமன் - சந்திரன், பரிதி - சூரியன், பொல்லார் - சனி, செவ்வாய், ராகு, கேது (சுக்கிரன்) ஆகிய பாபகிரகங்கள் கண்ணோயே காணும்

நேத்திரதானப் பொதுக்குறிப்பு

வேல்விழி மாதே, விளம்பு வலக்கண்
சால இரண்டதாம் இடங்கொண்டும்
ஏலும் இடக்கண் ஈராறாலும்
நேரும் சுப அசுபங்களை நேர்ந்தே.

வேல்போலும் கண்களை உடைய பெண்ணே! இரண்டாமிடத்தைக் கொண்டு வலக்கண்ணைப் பற்றியும், பன்னிரண்டாம் இடத்தைக் கொண்டு இடக்கண்ணைப் பற்றியும் உண்டாகும் நன்மை தீமைகளை அறிந்து சொல்வாயாக என்பதாம்.

இதுவரையில், நேத்திரப்பலன் முற்றும். மேல் இரண்டாமிடத்தால் அறியப்படும் கல்வி, வாக்கு, தனம் ஆகியவை பற்றி அறியும் முறைகள் தொடரும்.

வாக்குப் பலன் - ஊமை, நல்வாக்கு

வாக்குத் தானாதியோடு குலவிய புதனும் கூடி
வரும் சென்மம் மூன்று ஆறில் மருவிடில் ஊமை
ஆக்கும் அவருடன் எந்தத்தானாதி அவரவர் காரகர்
ஊக்கமற அவரவரும் ஊமையாகியே வருத்துவர். 16

வேறு

வாக்குத் தானாதியோடு புதனும் கூடி
வரும் சென்மம் மூன்று ஆறில் மருவில் ஊமை
ஆக்கும் அவருடன் எந்தத் தானத்தாதி
அவரவர்தம் காரகரகளாகினும் வந்துற்றால்
ஊக்கமுற அவரும் ஊமையாவர்
உற்றவர்தம் பதியாகில் உச்சமாகில்
வாக்கு ஊனமற மொழிவன் கண்டீர் கண்டும்
வனமுறு முக்கனியுமென வழுத்து மாதே. 16

தொகுப்புரை:

இரண்டாமிடத்தால் கண்களைப் பற்றி அறிவதுடன் மேலும் அறியும் படியான வாக்கு பற்றிய பலாபலன்களை அறியும் விதத்தில்

வாக்குஸ்தானாதியாகும் இரண்டாம் இடத்து அதிபதியாகிய கிரகத்தோடு, புதனும் கூடி, சென்மம் மூன்று ஆறாம் இடங்களில் இருக்க ஊமையாகும்.

இவர்களோடு வேறுஸ்தானங்களுக்குரிய கிரகங்களோ அன்றி அவரவர்களின் காரகர்களோ கூடியிருந்தாலும் ஊமையாவார்.

இவ்வாறு கூடிய கிரகங்கள், சேர்ந்துள்ள ராசியிடம் அவரவர்க்கு ஆட்சியானாலும், உச்சமானாலும், சாதகன் முக்கனிகளின் ரசம்போன்ற இனியவாக்குடன் விளங்குவான் என்று பெண்ணே சொல்வாயாக

அருஞ்சொற்பொருள்

வாக்கு - பேசும் சொல், மருவி - சேர்ந்து, உற்றவர் - அந்தந்த தானத்தைச் சேர்ந்தவர். உரிமையுடையவர், தம்பதி - தமது சொந்த ராசியிடம், வாக்கு ஊனமற - சொல் குன்றமில்லாமல், வழுத்தும் - திட்டமாகக் கூறும். மாதே - பெண்ணே.

ஊமையாதலை - அறியும்படி

குடும்பத் தானாதியோடு குலவிய புதனும்கூடி
உடன்பட ஆறான்தானத்து உற்றிடில் ஊமையாகும்
இடும்புறும்மூணாமாதிலக்கினத்ததிபன்தானும்
திடம்பெறக் கூடில் ஊமையாகியே திரிவன்தானே. /7

தொகுப்புரை:

குடும்பஸ்தானம் என்றும் கூறப்பெறும் இரண்டாவது ஸ்தானாதிபதியோடு நட்புடன் புதனும் கூடி, ஆறாவது இடத்தில் சேர்ந்திருந்தால் ஊமையாவான்.

துன்பத்தைத் தரும் மூன்றாம் இடத்தோனும் லக்கினாதிபதியும் வலிமையுடன் சேர்ந்திருந்தாலும் சாதகன் ஊமையாகியே உலகில் திரிவன் என்பதாம்

அருஞ்சொற்பொருள்

குடும்பத்தானம் - லக்கினத்திற்கு இரண்டாமிடம், குலவிய - நட்பாகிய, உடன்பட - சேர்ந்து இருக்க, ஆறான் - ஆறாம் இடத்தோன், இடும்பை - துன்பம், திடம்பெற - வலிமைபெற

இரண்டாமிடத்தால் குடும்பநிலைகளையும் கண்டு கூறலாகும் என்னும் பலன்வகையினை இப்பாடல் குறிக்கின்றது. கண், வாக்கு, குடும்பம் - இரண்டாமிடம்.

ஊமை - பெற்றோரிடத்தும் காணல்

மாதவன்மன்னனோடு வாக்குத்தானாதி கூடிக்
கோதற வியம்ஆறு எட்டில்குலாவினா லூமையாவன்
ஓதியதந்தைதாய் மற்றோர் தானந்தனக் கிவ்வாறு
நீதியாய் இருக்கில் ஊமைநிச்சயமென்று கூறே. 18

தொகுப்புரை:

புதனுடன் வாக்குத்தானாதிபதியும் கூடிப் பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய பாபஸ்தானங்களில் இருந்தால் ஊமையாவான்.

தந்தை தாய் மற்றவர்கள் ஸ்தானங்களுக்கும் இப்படியே இருந்தாலும் (அவர்கள்) நிச்சயம் ஊமையென்றே கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்

மாதவன் மன்னன் - புதனாகும், கோதற - குற்றமில்லாமல், குலாவினால் - சேர்ந்திருந்தால், மற்றோர் - அம்மான்சகோதரசகோதரி பாவகங்களால் அறியப்படுவோர், நீதியாய் - மேலே சொன்னபடியாக,

பாடலின் முதல் அடியின் முதற்சொல் மாதவன் மன்னன் என்று இருக்கின்றது. இதில் பாடமாற்றமாக, மாதுலமன்னன் என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றுக்குப் புதன் என்று பொருள் கொள்ளப்படுவது, புதன் வித்யாகாரகனாக இருப்பதைக் கொண்டு கூறப்பட்டுள்ளது. எனினும், மாதவன் - சிறந்த தவத்தையுடையவனாகிய,

மன்னன் - குருபகவான் என்றும், மாதுலமன்னன் என்ற பாடமாயின், அம்மான் ஸ்தானமாகிய மூன்றாமிடத்தானுடன் குருவும் என்றும் அர்த்தம் செய்ய முடிகின்றது. இவ்வாறான கிரக அமைப்பில் பார்த்தாலும் பலன் ஒன்றேயாகும்.

ஊமையாம் என்பதை அறிய

கூறிய லக்கினாதி சுக்கிரன் கூடி ஆறு எட்டு
எறிய வியத்தில் நிற்க ஊமையாம், இரண்டாமாதி
பேறுடன் அவரைக் கூடில் ஊமையாம் பின்மற்றோரும்
சீறிடாதவரைக் கூடில் ஊமையாய்த் திரிவன்தானே. 19

தொகுப்புரை:

லக்கினஸ்தானாதிபதி சுக்கிரனுடன் கூடி, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் நின்றால் ஊமையாம்.

இரண்டாமிடத்துக்குரியவன் லக்கினாதிபதி சுக்கிரன் ஆகியோருடன் கூடி 6, 8, 12 ஆம் இடங்களிலொன்றில் இருந்தாலும் ஊமையாம்.

மேலும் மற்ற கிரகங்கள் சுக்கிரனைக் கூடி 6, 8, 12ல் இருந்தாலும் ஊமையாய்த் திரிவன் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மற்றோர் - சுக்கிரன் அல்லாத பிறபாபகிரகங்கள், சீறிடாது - பகையாகாமல்,

குறிப்பு: இப்பாடல், வாக்குஸ்தானமாகும். இரண்டாம் இடத்திற்குரிய கிரகம், லக்கினாதிபதி, சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்கள் சேர்க்கையும், பாபஸ்தானங்களுமே ஊமையாக இருப்பதைக் கண்டறிவதற்குரிய மூலமாக அமைந்திருப்பது குறிப்பிடப்படுகின்றது.

விளக்கம்: கண் ஸ்தானமாகக் கணிக்கப் பெற்ற இரண்டாமிடம், வாக்குஸ்தானமாகவும் பலன்தரும் முறையினை 16, 17, 18, 19 ஆகிய நான்கு பாடல்களால் உணர்த்தப்பட்டது.

வாக்கு என்பது பேசுதல், பேச்சு ஒருவருக்கு வாயில் அமையாமல் போவதையே ஊமை எனப்பட்டது.

ஊமைத்தன்மை ஒரு சாதகனுக்கு எப்படி அமைந்தது? பிறப்பிலேயா? பிறந்த பின்னர் வளரும் காலத்தில் வந்தவாதம் முதலான நோயினாலா? எதிர்பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியினாலா? பிறப்பிலிருந்தும் நோயினாலும் நாக்குப் பிறழாமல் சொற்கள் குளறும் தெத்துவாய்த்தன்மை **ஆகியவற்றைச்** சோதிட முறையால் அறியும் நுட்பங்கள் கூறப்பட்டுள்ளன. அவை குறிப்பாக ஓரளவிட்டுச் சொல்லுமிடத்து

1. பெரும்பான்மையும், வாக்காதிபதி லக்கினாதிபதியுடனும் சுக்கிரனும் கூடிய நிலையில் பாபஸ்தானங்களிலொன்றில் இருந்தால் பிறவி ஊமையென்பதும்,

2. மேற்படி கிரகங்கள் ரோகாதியிடத்திலோ, கூடியோ இருந்தால் நோயால் வந்தது ஊமையென்பதும்.

3. மேற்படி கிரகங்கள் எட்டாமாதிபதியுடன் கூடி இரண்டாமிடத்தில் இருக்கவும் ஆறாமாதிபதி பார்க்கவும் இருந்தால் அதிர்ச்சியால் வந்த ஊமைத்தன்மை என்பதும்

4. வாக்காதிபதிரோகாதிபதியோடு சேர்ந்து வாக்குத் தானத்தைப் பார்த்தாலோ, சென்மத்திலிருந்தாலோ குளறுவாயாக அமைந்திருக்கும் என்பதும் அறியப்படும்.

கல்வி, வித்தை, காணுமிடம் இரண்டாமிடம்

பொன் புதன்எட்டின் கோவும் பொருந்தியே கேந்திரத்தில்
பின்திரிகோணம் எரில் பெற்றிடும் வித்தை லாபம்
இன்பமாய் இவர் எட்டு ஆறில் இருந்திடில் வித்தை இல்லை
அன்புசேர் கணக்கன் உச்சமாகினால் வித்தை கூறே. 20

தொகுப்புரை:

பொன் என்றும் பெயர்பெறும் குருவும், வித்தியா காரகனாகிய புதனும், எட்டாமிடத்தின் அதிபதியாகிய கிரகமும் பொருந்திய நிலையில் கேந்திரஸ்தானத்தில் அல்லது திரிகோண ராசியில் சென்றிருந்தால் கல்வி வித்தைகளில் லாபமுண்டாகும்.

குரு, புதன் எட்டாமிடத்தோன் ஆகிய இவர்கள் மூவரும் எட்டாமிடம் ஆறாமிடம் ஆகிய இடங்களில் இருந்தால் கல்வி வித்தை இல்லை என்பதாகும்.

கணக்கனாகும் புதன் உச்சனாக இருந்தால் வித்தை பல உண்டாகும் என்று கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்

பொன் - குரு, எட்டின்கோ - எட்டாமிடத்திற்கு அதிபன், வித்தை - கல்வி கலைகள் முதலியன, கணக்கன் - புதன்.

சாதகனுக்கு கல்வி, வித்தைகளாகிய பிறகலைகள் உண்டா இல்லையா என்பதை அறிய இப்பாடல் விளக்கம் தருகின்றது.

சங்கீத வித்துவான், மொழிப்புலவன்

இரண்டாம் அதிபதி சுக்கிரனாகில் கானவித்தை
கூறிய புதனும் ஏழாம் அதிபனும் குருவும் கூடி
பேறுடன் திரிகோணம் கேந்திரம் பிடித்திட்டாலும்
வீரிய தனது வீட்டும் இரண்டிலும் இருந்தாலும் வித்துவானாமே. 21

தொகுப்புரை:

இரண்டாமிடத்திற்குரிய கிரகம் சுக்கிரனாக இருந்தால் சங்கீத வித்தை உடையவன்.

புதனும் ஏழாமிடத்தோனும் குருவும் கூடி திரிகோணம் கேந்திரம் ஆகிய இடங்களில் இருந்தாலும், தங்களின் சொந்த வீட்டிலோ இரண்டாமிடத்திலோ இருந்தாலும் கல்வி வித்தை உடையவனாவான். (சிறந்த வித்துவானாக இருப்பான் என்றும் கூறலாம்.)

அருஞ்சொற்பொருள்

அதிபதி - ராசிக்கு அதிபதி. கானம் - இசை, சங்கீதம், வீரிய - சிறந்ததான, வித்துவான் - மொழிப்புலவன்.

கூறிய புதனும் ஏழாம் அதிபனும் குருவும் கூடி
பேறுடன் திரிகோணங்கள் கேந்திரம் பிடித்திட்டாலும்
வீரிய தனது வீட்டும் விரும்பி இரண்டாம் வீட்டும்
சீறிடா திருந்தபோது, திடவித்து வானுமே.

என்ற பாடலும் கல்வி, வித்தைகள் அறிவதற்குரியதாகும்.

சோதிடம் சொல்ல வல்லவன்

ஆன கேந்திரத்தில் புந்தி இருக்க ரெண்டாம் வீட்டாதித்
தானுமே உச்சமாகத் தகும் பிருகு உபயம் மேவ
ஊனமில் மூன்றில் நல்லோர் உற, வெள்ளி உச்சமாக
மானிலத்து உதித்தகாலை சோதிடம் வழுத்த வல்லான். 22

தொகுப்புரை:

சனன கால சாதகக் கணிப்பில் இராசி மண்டலத்தில், லக்கினத்திற்கு கேந்திரஸ்தானமொன்றில் புதன் இருக்கலாம். இரண்டாமிடத்திரியவன் உச்சனாக இருக்கவும், சுக்கிரன் உபயராசியில் இருக்கவும்

குற்றமில்லாத மூன்றாமிடத்தில் சுப கிரகங்கள் இருக்கவும், சுக்கிரன் உச்சம் பெற்றவனாகவும் பிறந்தவன் சோதிடம் சொல்ல வல்லவனாவான்.

அருஞ்சொற்பொருள்

புந்தி - புதன், பிருகு - சுக்கிரன், உபயம் - உபயராசி, வெள்ளி - சுக்கிரன், வழுத்த - சொல்ல

ஒருவன் சேதிடக் கலையைக் கற்று, சோதிடம் சொல்வதில் வல்லவனாக விளங்குகிறான் என்றால், அவனுடைய சன்ம சாதகத்தில் கிரகங்கள் அமைந்துள்ள இடங்கள் தகுதிகள் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் விளக்குகின்றது.

தர்க்க சாஸ்திரம் வல்லவன்

வல்லர் ரெண்டிடமாம் குரு சுக்கிரன்
செல்லு மூலத் திரிகோணம் உச்சமாய்
அல்ல பாபர் அணிகளாகி நோக்கா வீடில்
நல்ல தர்க்கம் படிப்பன் நலம் பெற. 23

வல்ல ரெண்டிடத்தோன் குரு சுக்கிரன்

தொகுப்புரை:

குருவும் சுக்கிரனும் வல்லமையுடைவர்களாகக் கூடி இரண்டாமிடத்தில் இருக்கவும் (வல்லமையுடைய இரண்டாமிடத்தோன் குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள்)

மூலத் திரிகோணராசிகளில் உச்சம் பெற்றிருக்கவும்

இவர்கள் அல்லாத கிரகங்களில் பாபகிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ இல்லாது இருந்தால்

மிகவும் நன்மைகளைப் பெறுவதற்கான வித்தையான தர்க்க சாத்திரங்களைப் படித்து மேன்மை பெறுவான்.

அருஞ்சொற்பொருள்

வல்லர் - பலன் தரவல்லவராகிய கிரகங்கள், பாபர் - செவ்வாய், சனி, ராகு , கேது ஆகிய பாப கிரகங்கள், அணிகள் - அருகில் உள்ளவன்.

இலக்கணத்தில் வல்லவனாவான்

நலம் செறிந்த இரண்டாம் வீட்டாதிபனும்
குலம் செறிந்த குருவும் பலமதாய்
பலம் நிறைந்த சுக்கிரன் பார்க்க நின்றிடில்
புலம் செறிந்த இலக்கணம் பேசுவான். 24

தொகுப்புரை:

கல்வி, வித்தை, புத்தி ஆகிய நலங்களையும் காண்பதற்குரிய இரண்டாம் வீட்டுக்குடையோனும், தகுதியில் நிறைந்த குருவும் பலம் பெற்று இருப்பதோடு

நிறைந்த வாக்கினைச் சிறப்பாகத் தருவதில் வல்லவனாகிய சுக்கிரனின் பார்வையினைப் பெற்றவர்களாக இருப்பார்களாயின்

அறிவாற்றல் மிகுந்த மொழி இலக்கணத்தினை விரிவாகக் கற்றுணர்ந்து விளக்கமாகப் பேசுவதில் வல்லவனாவான்.

அருஞ்சொற்பொருள்

குலம் - மேன்மை, புலம் - அறிவு, இலக்கணம் - மொழி இலக்கணம்.

இரண்டாமிடத்துக் குடையவனும், குருவும், பலம் பெற்று, சுக்கிரனின் பார்வையினையும் பெறுவார்களாயின் - சாதகன் திறமையுடன் மொழி இலக்கணத்தில் வல்லவனாக இருப்பான்.

தமிழ் தெலுங்கு மொழிகளில் வித்துவான்

பிறக்கினைகேர் திரிகோண கேந்திரத்துள்
பிரியமுடன் புதன்நிற்கில் தமிழ் வித்தை பெருகும்
திரக்கமிலாது உயர் செவ்வாய் ஒன்றிருந்தகாலைத்
தெலுங்கு வித்துவானாவான்கருங்கோளேநிற்கில்
நிரக்கவேதுருக்கர் ஆரியர் பாஷைக்கு
நிபுண வித்துவானாவான், வெள்ளி குரு மேலில்
திரக்கனமாம் சாத்திரங்கள்தனக்கும்வல்லன்
திடவித்துவான்என்றே செப்பலாகும்.

தொகுப்புரை:

சனனகால சாதகக் கணிப்பில், புதன் திரிகோணராசியிலோ அல்லது கேந்திர ராசியிலோ இருந்தால், இருக்கும் ராசியிடம் ராசிநாதன் பார்வை இவற்றைக் கொண்டு தமிழ்மொழிக் கல்வியில் எந்த அளவில் உயர்வு பெற்றிருப்பானென்று அறியலாகும்.

அவ்வாறே திரிகோண கேந்திரங்களில் செவ்வாய் இருந்தால் தெலுங்கு மொழியில் வித்துவானாவான்.

அந்த திரிகோண கேந்திரஸ்தானங்களில் ராகு இருந்தால் துருக்கு பஷையாகிய உருதுவிலும், ஆரியர் பாஷையாகிய பிராகிருதத்திலும் சாமர்த்தியமான வித்துவானாவான்.

மேலே கூறிய திரிகோணம் கேந்திரம் ஆகிய ராசிகளில் சுக்கிரனும் குருவும் இருப்பார்களானால்

பலவகையான பிரிவுகளை உடைய வேதாகம சாத்திரங்களில் தனக்கென வல்லமையுடையவனாக இருப்பான், திறமையான வித்துவான் என்றே சொல்லப்பெறுவான் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

பிரக்கினை சேர் - ஐந்தாமிடமும், நான்காமிடமுமான பாகுபாடுகள் சேர்ந்துள்ளதாகிய, திரிகோணம் கேந்திரம் ஆகிய ஸ்தானங்கள்.

பிரியமுடன் - நட்புடன், திரக்கமிலாது - தடைபெறாமல், உயர்செவ்வாய் - ஆட்சி பெற்ற செவ்வாய், கருங்கோள் - ராகு, துருக்கர் பாஷை - உருது, ஆரியர் பாஷை - பிராகிருதபாஷை, திரக்கனம் - பலபிரிவுகள் கூடிய

லக்கனத்திற்கு திரிகோரராசிகள், கேந்திரராசிகள் ஆகியவற்றில்

புதன் குறையின்றி இருந்தால் - தமிழ்ப்புலவன்

செவ்வாய் குறையின்றி இருந்தால் - தெலுங்கு வித்துவான்.

ராகு குறையின்றி இருந்தால் - உருது, பிராகிருத வித்துவான்.

சுக்கிரன், குரு குறையின்றி இருந்தால் - சகல சாஸ்திரங்களில் வித்துவான் என்றறியலாகும்.

கணிதம், வேதம், தர்க்கம் - வித்துவான்

ஆகும் இரண்டாம் அதிபனும் புதனும் உச்ச
மாயிருக்க, சன்மத்தில் அரசன் நிற்க
ஏகனாய்ச் சனி எட்டிலுற, கணித வித்தை
இவனுக்கு கோபுராங்கிசத்தில் மந்தனிருக்க
வாகுடன் அங்காரகன் அங்கிசத்தில் அரசன் நிற்க
மறை; ஓதுவான், இரண்டாமாதிக் கதிராக
தாகமுடன், செங்கதிரைத் தமனியரும் காண
தர்க்க சாத்திரம் படிக்கும் தாட்டிகனாம் கண்டீர்! 26

தொகுப்புரை:

லக்கினத்திற்கு இரண்டாமிடத்து அதிபனும் புதனும் உச்ச கிரகங்களாக இருக்க, சன்மத்தில் குரு இருக்க, தனியனாக சனி எட்டாமிடத்தில் இருக்கப் பிறந்தவன் கணித வித்தையில் வல்லவனாவான்.

இரண்டாமிடத்ததிபதியாகிய இவனுக்கு, கோபுராங் கிசம் என்னும் இடத்தில் (ஏழில்) சனி இருக்க, செவ்வாயின் அங்கிசத்தில் குரு நிற்கப் பிறந்தவன் வேதங்களை ஓதுவானாவான்.

வித்தைக் குரிய இரண்டாமிடத்தான் சூரியனாக இருக்க, அந்த சூரியனை விருப்பமான பார்வையுடன் குருவும் பார்க்கப் பிறந்தவன் தர்க்க சாத்திரங்களைப் படிப்பதில் நல்ல பயிற்சியுடையவனாவான் என்பதைக் கண்டு சொல்லுவீர் களாக.

அருஞ்சொற்பொருள்

அரசன் - குரு, கோபுராங்கிசம் - ஏழுக்கு ஏழாமிடம் என்பர். மறை - வேதம், கதிர் - சூரியன், தமனியன் - குரு, மந்தன் - சனி, படிக்கும் - படித்துக் கூறும்.

ஆறு சாத்திரங்களும் அறிந்த புகழோன்

கண்ட சன்ம லக்கினத்தில் சுக்கிரன் பொன் இருவர்
கலந்து நிற்க, வேந்தனும் நற்கதிரோன் தானும்
மன்றிய சிங்காங்கிசத்தில் ஏறி நிற்கவும்
மற்றும் சுக்கிரன் கடகாங்கிசத்தில் மன்ன

அண்டியிந்தப்படியிருக்கச் சனித்தானும்
அவனியில் சாத்திரம் ஆறும் அறிந்து கூறி
எண்டிசை எங்கும் பரவும் கீர்த்திமானாகி
இருப்பனெனக் கலைவல்லோர் இயம்புவாரே. 27

தொகுப்புரை:

சன்ம லக்கினத்தில் சுக்கிரனும் குருவும் இருவரும் கலந்து நின்றாலும்,

குருவும் சூரியனும் சிங்க அங்கிசமென்னும் சூரியாங்கிசம் பெறவும்

சுக்கிரன் கடக அங்கிசமென்னும் சந்திராங்கிசம் பெற்று, இவ்வாறாக கிரகங்கள் பொருத்தமாக நிலைத்திருக்க

பிறந்தவன், உலகில் ஆறு சாத்திரங்களையும் கற்றறிந்து விளக்கமுடன் சொல்லுதலால், எட்டுதிக்கும் புகழ் பரவும் கீர்த்திமானாகி இருப்பான் என்று, சோதிடக் கலையில் வல்ல புலவர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பொன் - குரு, வேந்தன் - குரு, மன்ன பொருந்தியிருக்க, அவன் - உலகம், கீர்த்தி - புகழ், இயம்புவார் - புகழ்ந்து சொல்லுவார்கள்.

செல்வமுடைய - புலவனாவான்

வாரேறு முலையாய் கேள், சன்மந் தன்னில்
மதிமகன் சூரியன் குருவும் மகிழ்ந்து கூடில்
சீரேறும் தனம்படைத்தார் தலைவனாவான்
செங்கதிர் சுக்கிரன் புந்தி திங்கள் சனி அரசன்
பாரோர்கள் அறிய ஒரு வீட்டில் கூடில்
பரிமளிக்கும் வித்தைப் பிரபலனுமாவான்
தாரேறும் புயவலியான் தனவானாவான்
சாந்த குணவானுமாய் தரையில் வாழ்வான். 28

தொகுப்புரை:

கச்சணிந்த தனபாரங்களை உடைய பெண்ணே கேட்பாயாக!

சன்ம லக்கினத்தில் புதனும் சூரியனும் குருவும் பகையில்லாமல் கூடி இருந்தால், சிறப்பு வளரும் செல்வம் படைத்தார்க்கும் தலைவனாவான்.

சூரியன், சுக்கிரன், புதன் சந்திரன், சனி, குரு இவர்கள் ஒரு ராசியிடத்தில் சேர்ந்து கூடியிருந்தால்

பரிமளிக்கும் வித்தைப் பிரபலனுமாவான், சரீரவலிமையால் தனவானாவான். சாந்த குணமுள்ளவனுமாக உலகில் வாழ்வான் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மதிமகன் - புதன், சீர் ஏறும் - செல்வம் பெருகும், புந்தி - புதன், திங்கள் - சந்திரன், அரசன் - குரு, தரையில் - உலகத்தில்

கவிதை மன்னனாவான்

சனி இல்லாத அறுவர் தானுமே கூடி
புனிதமாய் இருக்க, புதல்வனாய்க் கவிதை
இனிதென உரைத்து எண்டிசை எங்கும்
மனுவுடன் நீதி மன்னவன் ஆகுவனே. 29

தொகுப்புரை:

சனி கிரகம் நீங்கலாக மற்றைய குரு, சுக்கிரன், சூரியன், சந்திரன், புதன், செவ்வாய் ஆகிய ஆறு கிரகங்களும் சேர்ந்து, சுபராசிகளில் இருக்க,

சாதகன் இளமைக் காலத்திலிருந்தே இனிமையான கவிதைகளைக் கவிகளாக இயற்றிக் கூறும் கவி மன்னனாக ஆவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

புனிதமாய் - குறையில்லாமல், புதல்வனாய் - இளமைக் கவிஞனாய், எண்டிசை எங்கும் - நாடு முழுவதும், நீதி - அறநெறிகள், மன்னவன் - கவி அரசன்.

இரண்டாமிடத்தால் - வித்தைப் பலன் முற்றும்

இரண்டாமிடத்தால், தனமாகிய செல்வ பாக்கிய பலன் அறிதல் தனபலன்

சென்மாதிபதிக்கு இரண்டாமிடத்தில் நல்லோர்
திறல் மூன்றாமிடத்தில் தீயோர் நாலில் நல்லோர்
நன்மார்க்கமுடனிருந்தால், தனவான், சென்ம
லக்கினத்தோனும் உபயத்தில் நண்ணினும் பொன்னுளனாம்
சன்மார்க்கமுடன் அந்த தனபாவத்தில்
தகும் பாக்கிய லாபாதி தரிக்கில் பார்க்கில்
துன்மார்க்கமற அளகைக் குபேரன் போலத்
தொலைவிலாத் தனம் படைப்பானெனச் சொல்வார் சால. 30

தொகுப்புரை:

சென்மாதிபதிக்கு இரண்டாமிடத்தில் சுபகிரகங்களும், மூன்றாமிடத்தில் பாபகிரகங்களும், நான்காமிடத்தில் சுபகிரகங்களும் குறைவுபடாமல் நன்மையுடன் இருந்தால் தனவானாவான்.

சென்ம லக்கினத்திற்குரிய கிரகம் உபய ராசியில் இருந்தாலும் பொன்னும் பொருளும் உடையவன்,

அந்த தனத்தானத்தில் பாக்கியாதிபதியும், லாபாதி பதியும் இருந்தாலும் பார்த்தாலும்

அளகாபுரிக்குரிய குபேரனைப் போல செல்வ முடையவனாமென்று மிகவும் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

திறல் - வலிமை, தீயோன் - சனி ராகு கேது முதலியோர், நாலில் - நான்காமிடத்தில், நன்மார்க்கம் - பகை நீசம் தீயோர் பார்வை இல்லாத சுபர்களாகிய நிலை, நண்ணினும் - சேர்ந்தாலும், குபேரன் - தேவர்களில் நிறைந்த செல்வத்திற்கு அதிபதியானவன் பெயர். சால - மிகுதியாக.

இரண்டாமிடத்தை அடிப்படையாகக் கொண்டு, கிரக நிலைகளை அளவிட்டு, பணக்காரன், பொன்னும்

பொருளும் படைத்த சீமான், குபேர சம்பத்து உடையவன் என்ற செல்வ நிலைகளின் வகையினைத் திட்டமாக அறியும் முறையினை இப்பாடல் உணர்த்துகின்றது.

தரித்திர யோகம், தனயோகம்

சாதகன் லக்கினம் முதலாய் லக்கினாதிபதி
தானிருந்த வீடளவும் எண்ணிக் கண்ட
ஓதுதொகை லக்கினாதிபனைத் தொட்டே
உடனெண்ணிக் கண்டமனை பாபர் வீடேல்
ஏதமுறும் தரித்திர யோகங்களாகும்
இனிமை உள்ளோர் வீடாயின் தனவானாவன்
போது சென்மம் தனக்கு ஐந்து ஈராறு இரண்டு
புனிதர் மனையாகில் பொன்னுளனேயாவன். 31

தொகுப்புரை:

சாதகன் பிறந்த லக்கினராசி முதலா, லக்கினாதிபதி சென்று இருக்கும் ராசி வீட்டளவும் எண்ணிக்கண்ட தொகையைக் கொண்டு

லக்கினாதிபதி உள்ள வீட்டிலிருந்து முறையாக எண்ணிவரும்போது, எந்த வீட்டில் எண்முடிகின்றதோ

அந்த ராச வீடு பாபர் வீடானால், தரித்திர யோகமாகும்.

பாபர் வீடாகாமல் அந்த ராசி சுபர் வீடானால் தனவான் யோகம், மற்றும் சென்ம லக்கினத்திற்கு ஐந்தாமிடம், பன்னிரண்டாமிடம், இரண்டாமிடம் சுப கிரகங்களின் வீடுகளாக அமைந்தால் மிகுந்த செல்வம் உள்ளவனாக ஆவான்.

அருஞ்சொற்பொருள்

உடன் எண்ணி - வரிசையாக எண்ண, மனை - கிரகங்களுக்கு உரிய சொந்த வீடு, ராசி, ஏதம் - குற்றம், இனிமையுள்ளோர் - சுபகிரகங்கள், புனிதர் - சுபர்.

அரச செல்வம் உடையவன்

ஆவன் நன்சென்மத்தில் சனியும், அடுத்த நான்கில் அம்புலியும்
மேவும் ஏழில் செவ்வாயும், விளங்கு பத்தில் வெய்யோனும்
கோவும் புதன் சுக்கிரன் தானும் கூடியொரு வீட்டினில் இருக்க
பூவுக்கரசாய் தனவானாய் பொருந்தி வாழ்வான் கண்டீரே!

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சனியும், சனிக்கு அடுத்த நான்காமிடத்தில் சந்திரனும், ஏழில் செவ்வாயும், பத்தில் சூரியனும்

குரு, புதன், சுக்கிரன் இவர்கள் மூவரும் கூடி ஒரு வீட்டிலும் இருக்கப் பிறந்தவன்

அரசனைப்போல் செல்வவளம் உடையவனாகப் பொருந்தி வாழ்வான் என்பதனைக் காண்பீராக!

அருஞ்சொற்பொருள்

அடுத்த நான்கில் - சனி உள்ள வீட்டிலிருந்து நான்காவது வீட்டில், கோ - குரு, பூ - பூமி.

தீய கோள்கள் தரும் நற்பலன்

கண்டுமொழி, ஆறுஎட்டில்கருதுமூன்றில்பன்னொன்றில்
மிண்டர்இருந்துலக்கினத்தைப்பாராதிருக்கின்மிகச்செல்வம்
கொண்டுவாழ்தற்கனுசாரிகுலவீஎனன்நால்வரும்நீசம்
இன்றியிருக்கநீசர்மனைஅணுகில்தனவான்ஆயிடுவான். 33

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு 6, 8, 3, 11 ஆகிய இராசிகளில் கொடிய கிரகங்கள் இருந்து லக்கினத்தைப் பாராதிருக்கின் சாதகன் மிகுந்த செல்வத்தை உடையவனாவான்.

இவ்வாறு உண்டாகும் செல்வத்தினைக் கொண்டு வாழ்வதற்குரிய அனுசரணையாக, மேலே மிண்டர் என்று குறிப்பிட்ட சனி, ராகு, கேது, செவ்வாய் ஆகிய கொடிய கிரகங்கள் நால்வரும், நீசம் பெறாமல் இருக்கவும், நீச்சம் பெற்றுள்ள பிற கிரகங்கள் உள்ள இராசியில் சேர்ந்திருந்தாலும்

அச்செல்வ வாழ்வினைப் பெற்றதோடு சிறந்த செல்வனாகவும் ஆவான் என்று கிரகங்களின் இவ்வாறமைந்த கிரக நிலைகளைக் கண்டு சொல்வாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

கண்டுமொழி - ஆராய்ந்து கண்டு சொல், கருது மூன்றில் - பல பலன்களைக் கருதும் மூன்றாமிடத்தில், மிண்டர் - பாப கொடிய கிரகங்களாகிய சனி, ராகு, கேது, செவ்வாய் ஆகியோர். அனுசாரி - அனுகூலமானவர், ஈனன் - பாப கிரகங்கள், மனை - இராசியிடம்.

கண்டுமொழி என்று ஆசிரியர் தரும் குறிப்பால் 6, 8 ஆம் இடங்கள் நிறைந்த வலிமையும், 3, 11ஆம் இடங்கள் குறைந்த வலிமையும் உள்ள இடங்களாகக் கண்டும் பலன் சொல்ல வேண்டுமென்பது பெறப்படும்.

கிரகங்களால் - பெருகும் செல்வம்

ஆவாரிந்து லக்கினத்துக்கு அதிபன் உச்சனாயிடினும்
மேவ அலது நீசர்மனை வீரும்பி இருக்கத் தனவானாம்
தேவர்தொழும் சந்திரனுடனே உச்சக்கோள்கள் சேர்ந்திடினும்
தாவும் குடும்பன் உச்சமனைதக்கோர் நிற்கத் தரும் செல்வம். 34

தொகுப்புரை:

சந்திரன் நின்ற லக்கினத்தானத்திற்கு அதிபனான கிரகம், உச்சம் பெற்றிருந்தாலும், அல்லது நீசம் பெற்று கிரகத்தின் வீட்டில் விரும்பி இருந்தாலும் சாதகன் தனவானாக ஆவான்.

தேவர்கள் வணங்கும் சந்திரனுடனே உச்சம் பெற்ற கிரகங்கள் சேர்ந்திருந்தாலும்,

இரண்டாம் இடமான குடும்பாதிபதியின் உச்சராசி எதுவோ அந்த இடத்தில் சாதகனுக்குச் சுபாதிபதியாகவுள்ள கிரகங்கள் நிற்பதாயின் மேலும் மேலும் செல்வம் தருபவராவார் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

இந்து - சந்திரன். மேவ - பொருந்த, தாவும் குடும்பன்-பல நற்பலன்களைத் தரும் குடும்பத்தானமாகிய இரண்டாமிடத்ததிபதி, உச்சக்கோள் - உச்சம் பெற்ற கிரகம், தக்கோர் -சுபகிரகங்கள்.

சந்திராலக்கினத்தினையும் சந்திரனையும் கொண்டும், உச்சம் பெற்றுள்ள கோள்களின் வீடுகளில் சுப கிரகங்கள் நிற்பதைக் கொண்டும் சாதகன் பெறும் செல்வ பலன் இக்கவியால் குறிக்கப் பெறுவது திட்டமாகப்பலன் கூறுவதற்கு உரியதாகும்.

இளமையில் - குபேர சம்பத்து

செல்வம்தரும்பத்தாம்அதிபதிபனும், சென்மாதிபனும்
வல்வந்த குடும்பாதிபனும் வளர்அங்கிசை மன்னும்
செல்வந்திகழ் கேந்திரம்தனில் செம்மைசுபர்காணில்
நல்வளஞ்சேர்வயதில்தனபதியாகவும்நண்ணும், 35

தொகுப்புரை:

செல்வத்தினைத் தரும் பத்தாம் இடத்திற்கு உடையவனும், சென்ம லக்கினாதிபதியும், வலிமை பெற்ற இரண்டாமிடத்தோனாகிய குடும்பாதிபதியும், பொருந்தி இருக்கின்ற வீட்டோன் அங்கிசாதிபதியும் கேந்திரத்திலிருக்க, அவர்களைச் சுபகிரகங்கள் கண்டால்,

நல்ல வளமை சேர்ந்த வயதில் குபேர செல்வத்தினைப் பெற்றவனாகவும் இருப்பதனைக் கொடுப்பது பொருந்தியதாகும்.

அருஞ்சொற்பொருள்

பத்தாம் இடத்ததிபன் - சென்ம லக்கினத்திற்குப் பத்தாமி_த்திற்குரிய கிரகம், வல் - வலிமை, அங்கிசை - கூடிநிற்கும் நிலை, மன்னும் - பொருந்திய, செம்மை சுபர் - குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய சுபர்கள். நல்வளஞ்சேர் வயதில் - பால்யவயதில், தனபதி - குபேரன்.

வாலிபவயது காலத்தில் குபேரனைப் போன்ற செல்வம் வரும் என்று சொல்லும் பலனுக்குரிய கிரகநிலைகள்

10, 1, 2 ஆகிய இடத்து அதிபர்கள் சேர்ந்துள்ள இடத்து அதிபனும் கூடி அங்கிசமான இடம் கேந்திரத்தானமாக அமைந்து, அவர்களை சுப கிரகங்கள் பார்த்தால் குபேர சம்பத்து உடையவனாவான் என்பதாம்.

அண்ணன், தாய், மாமன் வழி பொன்னும் பொருளும் வரும்

நண்ணும்சென்மத்தாதிபன்நவில்மூன்றாபனும்
ஒண்ணிப்பலமாகப்புருஷக்கோள்உற, நோக்க
வண்ணந்தரு மூன்றாதிபன்மருவ, பதிகாண
அண்ணன், சிறுவன்தாய், பரமாமன்பொன்னும்வருமே. 36

தொகுப்புரை:

பொருந்தும் சென்மத்தானாதிபதியும், மூன்றாம் வீட்டிற்குடையவனும், தகுதிபெற்ற நிலையில் பலம் பெற்றிருக்க,

அவர்களை, ஆண் கிரகங்களாகிய சூரியன், புதன், குரு ஆகியோர் சேர்ந்திருந்தாலும், அல்லது பார்த்தாலும்,

சகோதரபலன், அம்மான், பொன்னாபரணம் ஆகிய பலவகைப்பட்ட பலன்களைத் தரும் மூன்றாம் இடத்திற்குரிய கிரகம், ஆண் கிரகங்களைச் சேர்ந்து நிற்க,

ஐந்தாம் இடத்ததிபன் மூன்றாமிடத்தோனைப் பார்க்கவும் இருக்குமாயின்

சாதகனின், அண்ணன், தாய், தாயுடன் பிறந்த அல்லது பிறமுறையிலான மாமன் ஆகியோரின் பொன்னும் பொருளும் கிடைக்கும் பாக்கியம் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

நண்ணும் - பொருந்து, ஒண்ணி - தகுதியாகி, புருஷக்கோள் - ஆண்கிரகங்கள். மருவ - சேர, பதி பூர்வபுண்ணியத்தானாதிபதியாகிய ஐந்தாமிடத்தோன், பரமாமன் - முறைமைக்குரிய மாமன்.

மூன்றாமிடத்தோன் அவர்களோடு சேரவும், ஐந்தாமிடத்தோன் பார்க்கவும் என்று காணுதல் பொருந்தும்.

முழுமை, அரை, கால் அளவுகளில் செல்வயோகம்

வரும் சென்மலக்கினத்தும் மாமதி இருந்த வீட்டும்
இருபுறம் தன்னில் நல்லோர் இருந்திடில் தனவானாவான்
ஒருமனை தனக்குள் உற்றால் ஓதிய பலனில் பாதி
தருமொரு புறத்தில் நிற்கில் தனமும் கால் பாங்கதாமே. 37

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கும், சந்திரன் இருந்த வீட்டிற்கும் இரண்டு பக்கங்களிலுள்ள ராசி இடங்களில் தொடர்ந்து சுபகிரகங்கள் இருந்தால் சாதகன் நிறைந்த செல்வங்கள் உடையவனாவான்.

சன்மலக்கினம், சந்திரன், நின்ற ராசி ஆகிய இரண்டிடங்களில் ஒன்றினுக்கு இருபக்கமும் சுப கிரகங்களிருந்தால் முன்னர் சொல்லப்பட்ட தனபலனில் பாதி அளவினைப் பெறுவான்.

மேலே சொல்லப்பட்ட இரண்டிடத்தில் ஒன்றிற்கு ஒரு பக்கம் மட்டில் சுபகிரகங்கள் தொடர்ந்திருந்தால் கால் பங்குதான் செல்வம் உண்டாகும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மாமதி - சந்திரன், வீடு - ராசியிடம், இருபுறம் - இரண்டு பக்கங்களிலும், நல்லோர் - சுபகிரகங்கள், ஒருமனை - சன்மராசி இடம், சந்திரன் நின்ற ராசியிடம் ஆகியவற்றுள் ஒரு ராசியிடத்திற்கு.

தமையன் சொத்து வருவதாகும்

பாங்கதாகும் மூன்றாமிடப் பார்த்திபன்
ஓங்கும் ஒன்பதாம் ஆதியுடன் உற
ஈங்கிவர்க்கும் இனிய சினேகமாய்
ஆங்குறத் தமையன் பொன் அணுகுமே. 38

தொகுப்புரை:

தகுதி உடையதாகும் மூன்றாம் இடத்திற்கு உரிய கிரகம், சிறப்போங்கிய ஒன்பதாம் இடத்துக்கு உரிய கிரகத்துடன் சேர்ந்து

இந்த இரண்டு கிரகங்களுக்கு நட்பான கிரகத்தின், ராசியில் பொருந்தி இருக்க

சாதகனுக்கு தனது தமையனுடைய சொத்துக்கள் கிடைக்கும் பலனைப் பெறுவான்.

அருஞ்சொற்பொருள்

பாங்கு - தகுதி, பார்த்திபன் - ராசிக்கு உரிய கிரகம், ஒன்பதாம் ஆதி - ஒன்பதாம் பாக்கியாதிபதி, உற - நிற்க, சினேகம் - நட்பு, தமையன் - மூத்த சகோதரன், பொன் - பொன்னும் பொருளும், அணுகும் - தானே வந்து சேரும்.

மூன்றாமிடம் சகோரதஸ்தானம். ஒன்பதாமிடம் பாக்கியஸ்தானம் இவைகளின் நட்பு ராசிகள் நட்பு நிலைகள் இடங்கள் ஆகியவற்றைக் கொண்டு தேர்வு செய்து பலன் காண்பது இப்பாடலால் அறியப்பெறும்.

செல்வம் சேரும் வகை அறிதல்

அணுகி நிதிசேர் வகையா பவனால் தாதையர் பொன்
அன்னைக்கு அம்புலி செல்வ மாயானால் தனது பொருளே
நணுகும் புதனால் பகைவர் பொருள், அரசன் தன்னால்
நல்லுறவோர் நிதி, கங்கனார்க்கு மனையாரால்
பணமருவும் காரியினால் அடிமையுள்ளோர் பொருளும்
குணமொடு லக்கினம் சோமன் தனக்கும் பத்தாகும்
குடி வீட்டுக்குடையோனைக் கொண்டு பலன் கூறே. 39

தொகுப்புரை:

சாதகனுக்குச் செல்வம் சேரும் வகை முறையினைக் கூறுவதானால், சந்திரன் நின்ற ராசிக்குப் பத்தாம் வீட்டுக்கு அதிபதியினைக் கொண்டே பொருத்தமான அளவில் கூற வேண்டும்.

சந்திரனுக்குப் பத்தாம் இடத்தோன் சூரியனாயின் தகப்பன் செல்வமும், சந்திரனாயின் தாயின் செல்வமும்,

அங்காரகனாயின் தான் தேடிய செல்வமும், புதனாயின் பகைவர் பொருளும், குருவானால் நல்ல உறவினர் சேர்த்துவைத்த செல்வமும்,

சுக்கிரனாயின் மனைவிவழிச் செல்வமும், சனியானால் அடிமையாக ஊழியம் செய்தோர் செல்வமும், தன்னைப் பண்பொடு மதித்துப் பழகியவரின் பொன்னும் பொருளும் வந்தடையும் என்பதாகும்.

குணமொடு லக்கினம் சோமன் தனக்கும் பத்தாகும் குடி வீட்டுக்குடையோனைக் கொண்டு என்று பாடலில் கூறப்பெறுவதால் லக்கினத்தினைக் கொண்டு கூறுவது ஒருவாறு அமையுமாயினும், சந்திராலக்கினத்தினைக் கொண்டே கூறுவது சிறப்புடையதாகும் என்பது அறிவதாகும்.

கூரியலாபாதிபதியோன்பத்தாம்அதிபனுடன்
கூடினால்பழையதனம்குறுகவந்துசேரும்
பேறுடன்பத்தாமாதிபாக்கியத்துஉற்றிடினும்
பெருமைசெறிபத்தாதிபிரபலநற்கோளாய்
வீறுடன்உத்தமர்மனையிலுற்றால்தருமத்துடனே
விரவுபிரயாசமறவேநிதியும்படைப்பன்
ஈறில்குருதனம்சேரும், பத்தாதிமெலிந்தே
இருக்கில்ஒருவரைச்செயித்துஎய்தும்பொருள்அற்பம். 40

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு 11 ஆம் இடத்ததிபதியாகிய லாபாதிபதி, 10ஆம் இடத்தானோடு சேர்ந்திருந்தால் முன்னோர்களால் தேடப்பட்ட செல்வம் ஓரளவு வந்து சேரும்.

பத்தாம் இடத்திற்குரிய கிரகம் ஒன்பதாம் இடத்தைச் சேர்ந்திருந்தாலும்

பத்தாமிடத்திற்குரிய கிரகம் பிரபல நற்கிரகமாய் சுபகிரகங்கள் வீட்டில இருந்தாலும், தரும சிந்தனையோடு பலவகையான பிரயாசை இல்லாமல் தன் முயற்சியால் செல்வத்தினைப் பெறுவான்.

பத்தாம் இடத்திற்குரிய கிரகம் குருவானால் வயதான காலத்தில் பொருள் சேரும்.

பத்தம் இடத்தோன் பலமில்லாமல் இருந்தால் ஒருவரை அடக்கியதால் அற்ப பொருள் கிடைக்கும் என்பதாம்.

நான்காம் அடியின் பிற்பகுதி ஒருவரை செயித்து என்று சுவடியில் உள்ளது. இதனை, ஒருவரைச் சேவித்து என்றும் கொள்ளலாம்.

யாகாதி செயல், காரகத்தார் வழி செல்வம் பெறல்

பொருள்சேரி பத்தாம் அதிபன்பிரபல உத்தமனாய்
பொருந்திய பத்தினில் இருக்க யாகாதி கருமம்
அருளுடனேபுரிந்து தனந்தேடி இனிதிருப்பன்
அமர்மூன்றாமாதிபலமாக, சென்மத்தோன்
மருளும்துர்ப்பலனாக லாபாதிமூன்றில்
மருவில், உடன்பிறந்தவர் தன்செல்வம் வந்து சேரும்
தெருள்சன்மம்சந்திரலக்கினத்திருந்தார் வகையில்
சேர்ந்தவர்யாரோஅவர்பொன்சேரும்இவன்தனக்கே. 41

தொகுப்புரை:

பத்துக்குடையோன் பிரபலனாயும் சுபனாயும் பத்தினில் இருந்தால் யாகாதி கிரியைகளால் தனந்தேடி சுகமாயிருப்பான்.

மூன்றாமிடத்திற்குடையோன் பலவானாய், சன்மாதிபதி துர்ப்பலனாய், லாபாதிபதி மூன்றாமிடத்தில் இருக்க, கூடப்பிறந்தவர் செல்வம் வந்து சேரும்.

தெளிவான சன்மலக்கினம், சந்திராலக்கினம் ஆகிய இரண்டு இடங்களிலும் இருக்கின்ற கிரகங்களுக்குரிய காரகத்திற்குரியவர்களுடைய செல்வம் சாதகனுக்கு வந்து சேரும்.

அருஞ்சொற்பொருள்

பொருள் செறி - பலவகையான பலன்களுக்குரிய, தெருள் - தெளிவான, லக்கினத்தில் இருந்தார் - இருலக்கினங்களிலும் எந்த காரக கிரகர் இருக்கிறார்களோ, அவர் - அந்த உறவினர் அல்லது மக்களின், பொன் சேரும் - செல்வம் சாதகனுக்கு வந்து சேரும்.

சன்மம், சந்திரா லக்கினத்தில் இருக்கும் காரக கிரகங்கள் அறிய, சூரியன் - பிதுர்க்காரகன், தந்தைவழி. சனி - வாரிசு இல்லாதவர் வழி. சந்திரன் - மாதுர்காரகன் தாய்வழி. ராகு - பாட்டவன் வழி. செவ்வாய் - சகோதரகாரகன் சகோதரன் கேது - பாட்டிவழி. புதன் - வித்தியாகாரகன் கல்வி வழி என்பது அறிந்து பலன் கூறலாகும். குரு - புத்திரகாரகன், மக்கள் வழி சுக்கிரன் - களத்திரகாரகன், மனைவி வழி.

புதையலாக வரும் செல்வம்

தனம் சேரும் வகை ஒன்பதாம் அதிபன் திசையில்
தகும் பத்தாதிபன் புசிப்பில் அப்போ கோசாரத்தில்
இனஞ் சேர் நான்காதிபதிபன் பத்தாமிடத்தில் இருக்க
இயல் பத்தாம் அதிபனுக்கு நாலாம் ராசியினும்
கனஞ் சேரும் குசனுடைய கேந்திரத்திலேனும்
கலந்து நிற்கப் புராதனமாம் காணி மனையதனில்
முனஞ் சேர் பத்தாமதிபன் திக்கில் நிட்சேபம்
முதல் கொண்டு வாழ்வரென மொழிவர் தக்கோர். 42

தொகுப்புரை:

சாதகர்க்குச் செல்வம் சேரும் வகையினைக் கூறுவோமாயின்

ஒன்பதுக்குடையோனாகிய பாக்கியாதிபதி திசையில், பத்தாமிடத்துக்குடையோன் நடப்பில் (புத்தியில்) அக்காலத்தில் நான்காமிடத்தோன் பத்தாமிடத்தில் இருக்க, பத்தாமாதிபதிக்கு நான்காம் ராசியிலும்

அங்காரகனுடைய கேந்திரத்திலும் கலந்து இருக்க, புராதனமாகும் நிலம், வீட்டுமனை ஆகியவற்றில்,

முன்னர் சொல்லப்பட்ட பத்தாமிடத்து கிரகத்திற்குரிய திக்கில்

புதையலாகப் பொருள்களை எடுத்துக்கொண்டு சாதகர் வாழ்வாரென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

புசிப்பு - புத்தியில், கோசாரம் - அன்றைய நிலையில் ராசிகளில் கிரகங்கள் சஞ்சரித்து நிற்கும் நிலை, புராதனம் - மிகப் பழமையான செல்வம், நிட்சேபம் - புதையலான பொருள், காணி - நிலம், விளை நிலம்.

ஒன்பதாம் இடத்தோன் திசையில், பத்தாமிடத்தோன் புத்தி நடக்கவும், அக்காலத்தில் நடக்கும் கோள் சாரத்தினி நல்ல நடப்புப் பலன் நிகழவும்.

நான்காம் இடத்தோன் பத்தாமிடத்தில் நிற்கவும், அந்த பத்தாமிடத்தோனுக்கு நான்காம் ராசியிலாயினும், செவ்வாயின் கேந்திரத்திலாயினும் மேலே கண்ட ராசி கிரகங்கள் கலந்து நிற்கவும் பத்தாம் இடத்தோன் திக்கில் கூடிய காலத்தில் - சாதகர்க்கு நிலம் அல்லது வீட்டு மனையில் புதையல் கிடைக்கும் என்று அறியப்பெறுகின்றது.

9 - கிரகங்களுக்குரிய திக்குகள்

சூரியன்	-	நடுவான இடம்
சுக்கிரன்	-	கிழக்கு
சந்திரன்	-	தென்கிழக்கு
செவ்வாய்	-	தெற்கு
இராகு	-	தென்மேற்கு
சனி	-	மேற்கு
கேது	-	வடமேற்கு
குரு	-	வடக்கு
புதன்	-	வடகிழக்கு

பலவகைச் செல்வம் பெற்றவன்

தக்க இடபத்தில் மதி, விருச்சிகத்தில் அரசன்
தானிருக்கில் தனவானாகும், சுக்கிரன் வீட்டில் அரசன்
மிக்க சுறாவில் குசனும் இருக்க வளர் பிறையும்
வேந்தனுடனே கூடப் புதன் அரசன் கூடி
நிற்க லக்கினந்தன்னில் சுக்கிரனும் இருக்க
நிறைந்த தனவான் கல்விநிபுணனு மாயிருப்பன்
சுக்கிரன் உச்சம் பெற லக்கினத்து அரசன், நிறைந்து
சோமனைப் பாவர்கள் காணில், துலங்கு தனம் படைப்பன். 43

தொகுப்புரை:

தகுதியான இடபராசியில் சந்திரனும், விருச்சிகத்தில் குருவும் இருந்தால் தனவானாகும்.

சுக்கிரன் வீட்டில் குருவும், மகரத்தில் குருவுடன் கூடியும், புதனும் குருவும் கூடியிருக்கவும்.

லக்கினத்தில் சுக்கிரன் இருக்கவும் நிறைந்த செல்வம் உடையவனாவான். கல்வியில் நிபுணனுமாக இருப்பான்.

சுக்கிரன் உச்சம் பெற்றிருக்கவும், லக்கினத்தில் குருவோடு கூடி நிற்கும் சந்திரனைப் பாபகிரகங்கள் காணில் பலவாறு விளங்கும் செல்வங்களைப் பெற்றவனாவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மதி -சந்திரன், அரசன் - குரு, சுறா - மகர ராசி, குசன்- செவ்வாய், சோமன் - சந்திரன், துலங்கு - விளங்குகின்ற தனம்.

மாமன், மாமியார், மருமகன் – செல்வம் வரும்

படைத்த ஒன்பதாம் அதிபன் ஆறில் நிற்க
பண்புடைய மாதுலன்தன் பொன் பரிந்து சேரும்
எடுத்த ஒன்பதாமதிபன் பொன்னாகி ஆறில்
இருந்தால் மாமிக்கு இசைந்த பொருள் சேரும்
தொடுத்த அஞ்சாமாதிபதியும் சுபனாய் பாக்கியத்தில்
சூழ்ந்திருக்கில் புத்திரிக்குத் துலங்குமணம் சூட்டி
அடுத்திருக்கும் மருமகன் தேடிய தனங்களெல்லாம்
அடைந்து சுகவானாகி அம்புவியில் வாழ்வான். 44

தொகுப்புரை:

ஒன்பதுக்குடையவன் ஆறாமிடத்திலிருக்க மாமன் செல்வம் வலிய வந்து சேரும்

ஒன்பதுக்குடையவன் குருவாக அமைந்து அவர் ஆறாமிடத்தில் இருந்தால் மாமியாருக்கு உரிய செல்வப் பொருள்கள் வந்து சேரும்.

ஐந்தாம் இடத்திற்குரிய கிரகம் சுபனாய் பாக்கியத்தானமாகிய ஒன்பதாமிடத்தில் இருந்தால் பெண்ணுக்குத் திருமணம் செய்து, மருமகன் தேடிய செல்வங்களை எல்லாம் தான் அடைந்து சுகவானாகி உலகில் வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

அதிபன் - ராசிக்கு உடையவன். மாதுலன் - தாய்மாமன், பொன் - குரு, புத்திரி - மகள், அடுத்திருக்கும் - தன்னையடுத்து வாழும், அம்புவி - உலகம்.

இப்பாடலால், மாமன், மாமியார், தனது மருமகன் ஆகியோரின் பொன்னும் பொருளும் ஆகிய செல்வங்கள் வந்தடையும் கிரக நிலைகள் கூறப்பட்டுள்ளன.

பகைவர், நட்பினர், பாட்டன் பாட்டி - சொத்து சேரும்.

அம்புவியில் குருவும் பத்தாம் அதிபதியும்
அன்புறுநற் சுபனுமாய் லக்கினாதிபதிக்கு
இன்பமுறு மித்துருவாய் இவருடன் வெய்யோனும்
இசைந்திருக்கில் பிதாநிதியம் எய்துவன் தனக்கே
விம்ப மதியும் கூடில் அன்னை செம்பொன் மேவும்
மேதினிமைந்தன் கூடில், மேலவர் பொன் சேரும்
நம்பிய மால் கூடில் மித்துரு தனமாம் அரசன்
நண்ணியுறின் பிராதா பொன்தான் நயந்து சேரும். 45

தொகுப்புரை:

குருவும் பத்தாம் இடத்திற்குரிய கிரகமும் சுபகிரகங்களாக, லக்கினாதிபதிக்கு இன்பமுள்ள

நட்புகிரகங்களாக இருக்கவும், இவர்களுடன் சூரியன் நன்முறையில் சேர்ந்திருந்தால் சாதகனின் தகப்பன் தேடிய செல்வத்தினைப் பெறுவான்.

இவர்களுடன் சந்திரன் கூடியிருந்தால் தாயின் பொன்னும் பொருளும் முறையாக வந்தடையும்

செவ்வாய் கூடியிருந்தால் பகைவரின் செல்வம் வந்து சேரும்.

புதன் கூடியிருந்தால் நட்பானவரின் செல்வம் வரும்.

குரு சேர்ந்திருந்தால் பாட்டன் பாட்டி தேடிய சொத்துக்கள் நன்முறையில் வந்து சேரும்.

அருஞ்சொற்பொருள்

அம்புவி - அழகிய உலகம், மித்துரு - நட்பு, வெய்யோன் - சூரியன், பிதா - தகப்பன், மேதினி மைந்தன் - பூமியின் புத்திரன் செவ்வாய், மேவலர் - பகைவர், மால் - புதன், மித்துரு - நட்பினர், பிராதா - பிதாமகன் - மாமா - பாட்டன் பாட்டி.

குரு பத்தாம் இடத்தோன் இவர்கள் சுப கிரகங்களாக சென்மாதிபதிக்கு நட்புடன் இருக்கவும் - இவர்களுடன் மற்ற கிரகங்கள் தனித்து நட்புடன் சேர்வதற்குரிய பலன்கள் **கூறப்பட்டுள்ளதை அறிவதாகும்.**

பிரதாப - என்று கொண்டால், அறிவுப் பிரதாபத்தால் வரும் கொடைப்பொருள் - எனலாம்.

சார்ந்தோர், ஈனத் தொழிலாளர் செல்வம் வரும்

சேரும் சுக்கிரன் கூடில் தெரிவையர்
ஆறுமாஞ் சனியிற்கு அடுத்தோர் பொருள்
கூறு பாம்புகள் கூடின் ஈனத் தொழில்
சார்வே புரிவார் தனம் சாருமால். 46

தொகுப்புரை:

45 ஆம் பாடல் தரும் பலனோடு தொடர்ச்சியான பலன் கூறும் பாடல் இதுவாகும்.

சென்ம பராசிக்கு பத்தாம் இடத்தோன் குருவுடன் நட்புடன்கூடி, லக்கினாதிபதிக்கு பகையாகாமல் இருக்க

இவர்களுடன் சுக்கிரன் கூடியிருந்தால் பெண்கள் வழி செல்வம் சேரும்.

சனி கூடினால் - தன்னை அடுத்துவந்தவர் செல்வம் சேரும்.

ராகு, கேது ஆகிய பாம்பு கிரகங்கள் கூடியிருந்தால் ஈனமான தொழில் செய்வாரின் செல்வம் வந்து சேரும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

தெரிவையர் - பெண்கள், அடுத்தோர் - தன்னைச் சார்ந்து வந்திருந்தவர், ஈனத்தொழில் - இழிவான தரக்குறைவான தொழில்.

புதையலாலும், கல்வியாலும் பொருள் சேரும்

சாரும்பத்தாம்அதிபன்சுபக்கோளாகி
தக்கோர் வீட்டில்பிறையும்அரசன்தான்ஒன்றிச்
சேரும், பொன்னவன்நீசம்அத்தமனமாகித்
தீயோர்வீட்டினில்இருக்கத்திரவியங்கள்இல்லான்
நேரும்பத்தாமதிபன்நான்காமிடத்திருக்க
நிட்சேபம்கண்டெடுப்பான், நிறைந்தகல்வியாலும்
பாரினில்மேவியதமரோரார்தங்களாலும்
பரிவுடனேபொன்சேரும்என்றேபரிந்துகூறும்.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்குப் பத்தாம் இடத்திற்குடையவன் சுபக்கிரகமாக, தகுந்த நட்புக் கிரகத்தின் வீட்டில் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் பொருள் சேரும்.

குரு நீசம் அஸ்தமனம் பெற்று தீயோர் வீட்டினில் இருந்தால செல்வம் இல்லாதவனாவான்.

பத்தாம் இடத்திற்குரிய கிரகம் நான்காம் இடத்தில் இருந்தால் புதையல் கண்டெடுப்பான்.

அதுவல்லாமல், கல்வியாலும் கற்றுத்தரலாலும் தானாகவே பொருள் வந்து சேரும்.

என்றே விருப்புடன் பலன் கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்

சாரும் - பொருந்திய, தக்கோர் - நீசம், பகை இல்லாத கிரகம், பொன்னவன் - குரு, நீட்சேபம் - புதையல் பொருள், பாரினில் - உலகத்தில், தமர் - சுற்றத்தார்.

பத்தாம் இடத்திற்குரிய கிரகம் நான்காமிடத்தில் இருந்தால் - புதையல் கண்டெடுப்பான் என்பது பொதுவிதியாகும். இதன் நுட்பம், பத்தாமிடத்தில் சுபகிரகங்கள் இருக்கவும், பாக்கியத்தானாதிபதி லாபாதிபத்யம் பெற்றிருக்க அவரை சுபர் காண்பதாயினும் - புதையல் கண்டெடுக்கும் பாக்கியம் உண்டாகலாம் என்ற சோதிட கிரக நிலைகளைக் கொண்டு பலன் கூறலாகும்.

தந்தையின் சொத்து இல்லை

கூறும் இரண்டாமிடம் கேந்திரத்தினில்
வீறு மன்னவன் மேவி இரண்டாதிபன்
ஊறும் ஆறு எட்டு ஈராறு வியத்துறில்
ஏறு தந்தை தனம் சற்றும் இல்லையே. 48

தொகுப்புரை:

தனஸ்தானமென்றும் கூறப்பெறும் இரண்டாமிடத்திற்கு கேந்திரத்தானங்களில் குரு இருக்கவும்,

இரண்டாமிடத்திற்குடையவன் ஆறு, எட்டு பன்னிரண்டு ஆகிய இடங்களில் ஒன்றில் இருக்கவும்

கிரகங்கள் அமைந்திருந்தால் சாதகனுக்கு தந்தையால் தேடப்பட்ட செல்வம் சிறிதளவும் இல்லை என்று கூறலாம்.

அருஞ்சொற்பொருள்

மன்னவன் - குரு, மேவி - சென்றிருக்க, ஊறும் - தொடர்ந்தமைந்துள்ள, ஈராறு - பன்னிரண்டாம் இடமாகிய விரையத்தானம், தனம் - செல்வம், சற்றும் - சிறிதளவும்.

தந்தை செல்வம் சேராது, தானே தனவானாவான்.

சாலமதி தனக்கு இரண்டில் சனிதான் நிற்கில்
சந்திரனார் தனக்கு நான்காம் வீட்டாதி
மேலவர்களுடன் கூடிக் கேந்திரங்கள்
மீதிருந்தால் தந்தை பொருள் வேற்றோர் கொள்ளப்
பாலருக்குச் சேராது, பாலன்தானும்
பாக்கியவானாகி வெகு பணங்கள் தேடி
ஞாலமதில் கீர்த்தியாதிபனாம் ராச
ராசரைச் சேவித்திருப்பன் பலன்தானாகுமே. 49

தொகுப்புரை:

சந்திரன் நின்ற ராசிக்கு இரண்டாம் வீட்டில் சனி இருக்கவும், சந்திரன் நின்ற ராசிக்கு நான்காம் வீட்டதிபன், சுபகிரகங்களுடன் கூடி கேந்திரத்தானத்தில் இருந்தால்,

சாதகனுடைய தந்தை தேடிய பொருளை உறவினரல்லாத பிறர் கைப்பற்றிக் கொள்ளுவர். சாதகனுக்குச் சேராது போகும்.

ஆனால், சாதகன் தன்முயற்சியால் செல்வவானாகி, மிகுந்த பொன்பொருள் பணத்தை தேடிப் பெற்று

உலகத்தில் நல்லபுகழ் பெற்றவனாக அரசரிடம் உத்தியோகத்தில் நிலைத்து இருப்பவனாவான்.

இதுவே இவ்வாறமைந்த கிரகநிலையால் அறியும் பலனாகும்.

அருஞ்சொற்பொருள்

மதி - சந்திரன், வீட்டாதி - வீட்டுக்குரிய கிரகம், மேலவர் - சுபகிரகங்கள், வேற்றோர் - அன்னியர், பாலருக்கு - ஆணோ பெண்ணோ ஆகிய சாதகர்க்கு. ஞாலமதில் - உலகத்தில்

தந்தையின் செல்வம் இல்லை, வெளிநாட்டில் செல்வன்

மேகு நாலாமாதி விரவு கேந்திரங்கள் தன்னில்
ஆதவன் இருக்க வேதான் அந்த நான்காம் இடத்தில்
ஓதிய நல்லோர் மேவில், உறுபிதா தனத்திற்கான
பாதியும் இவனுக்கில்லை பரதேசத்திடையில் செல்வன். 50

தொகுப்புரை:

மேன்மையான நான்காம் இடத்திற்குரிய கிரகம் இருக்கும் கேந்திரத்தானத்தில், சூரியன் கூடியிருக்கவும்

நான்காம் இடத்தில் சுபகிரகங்கள் இருந்தாலும்

தன்னுடைய தந்தையின் செல்வத்தில் பாதியளவு அல்லது ஒரு பங்கு கூட சாதகர்க்கு இல்லை என்றாகும்.

சாதகன் வெளிதேசத்தில் செல்வனாக இருப்பான், தேசாந்திரியாக இருப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

விரவு - அடுத்துத் தொடரும், ஆதவன் - சூரியன், நல்லோர் - சுபகிரகங்கள், மேவில் - இருந்தாலும், உறுபிதா - தனக்குரிய தந்தை, பாதியும் - ஒரு சிறு பங்கும், பரதேசம் - வெளிநாடு

நான்காம் இடமாகிய மாதுர்ஸ்தானத்தினைக் கொண்டு பலன் கூறப்பட்டுள்ளது. நான்காம் இடமே கேந்திரத் தானமாகத் தொடர்ந்து எண்ணிக் கொள்ளப்படுவதால், கேந்திராதிபத்ய பாத்தியக் குறைவினால் தந்தை செல்வம் இல்லை என்பதாயினும், நான்காமிடம் சுபாதிபத்யத் தன்மையினால் வெளிநாட்டில் சுகவாழ்வும், செல்வமும் பெற்றிருப்பான் - என்பதாம்.

உள்நாட்டில் செல்வ வாழ்க்கை

இரண்டாமாதி தான்மிகவே இருந்து கேந்திரமேறி மிகக்
கொண்டே தனத்துக் காரகனும் குலவி உச்சமாகி இவர்
மிண்டாயிருக்கத் தனந்திரளாய் விளங்கி இருப்பான்
பண்டே ஆயிரம் பொன்தேடிப் பதியிலிருப்பான் எனச் சொல்லும் 51

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டதிபன் கேந்திரமேறி இருந்தாலும், தனத்துக்குரிய காரககிரகம் அவனுடன் சேர்ந்து உச்சமாயிருக்கவும் பிறந்த சாதகன்

தனது சுயமுயற்சியால் செல்வத்தினை மிகுதியாகச் சம்பாதித்து தனது நாட்டிலேயே விளங்கி இருப்பான் எனச் சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

தான் மிகவே - அந்த கிரகந்தான் வலிமை பெற்றவனாய், மிண்டாய் - உச்சபலனாய், பதியிலிருப்பான் - தனது தேசத்திலேயே இருப்பான்.

விளக்கம்:

சென்ம லக்கினத்திற்கு தனஸ்தானாதிபதியாக அமையும் இரண்டாம் வீட்டோன், கேந்திரத்தில் நிற்கவும், தனாதிபதியான காரகன் உச்சம் பெற்றிருந்தாலும் சாதகன் சுய முயற்சியால் ஆயிரமாயிரமாகச் செல்வத்தினை திறமையுடன் சம்பாதித்து தனது நாட்டிலேயே சிறப்புடன் வாழ்ந்திருப்பான் என்பதாம்.

இலட்சாதிபதியாக வாழ்பவன்

சொல்லும் இரண்டாமதிபதி சூழ்ந்து லாபத்திலிருக்க
வெல்லும் லாபன் பாக்கியாதிபதி விரும்பி இரண்டில் உற்றிடவே,
நல்ல குணமும் தருமனுமாய் நான்கு லட்சம் பொன்தேடி
அல்லல் அறவே வாழ்ந்துண்டே அவனி தன்னில் இருந்திடுவான். 52

தொகுப்புரை:

இரண்டாமிடத்திற்குரிய கிரகம் லாபஸ்தானத்திலும், லாபத்தானாதிபதியும் பாக்கியாதிபதியும் நட்புடன் கூடி இரண்டாமிடத்தில் இருக்கவும்

சாதகன் நல்ல குணத்துடன் தருமவானாக நான்கு லட்சம் பொன் சம்பாதித்து உலகில், எத்தகைய துன்பங்களும் இல்லாமல் சுகசீவனமுடையவனாக இருப்பான் என்பதாம்

அருஞ்சொற்பொருள்

லாபத்தில் - 11ஆம் இடத்தில், லாபன் - லாபத் தானாதிபதி, பாக்கியாதிபதி - ஒன்பதாம் வீட்டதிபதியான கிரகம், உற்றிட - அடைந்திருக்க, தருமனுமாய் - தருமம் செய்பவனாய், பொன்தேடி - பொன்னை தன் முயற்சியால் சம்பாதித்து, அல்லல் - துன்பங்கள், அறவே - ஒன்றுமில்லாமல், வாழ்ந்து உண்டே - நல் வாழ்க்கை, வாழ்ந்து சிறந்த உணவுகளை உண்டு, அவனி - உலகம்

கோடீசுவரனாக ஆவான்?

இருந்த வில்லே லக்கினமாய் இதிலே குருவும் தானுறவே
பொருந்து துலாத்தில் சனி உச்சன் புகல்லாபாதி நாலிடத்தில்
திருந்தியிருக்கத் தனந்தேடி மனுவாம் நீதி தவறாமல்
தெரிந்தே பலரை ரெட்சித்து சென்ம பொன் கோடி யான்வருமே. 53

தொகுப்புரை:

தனுசு சென்மலக்கினமாக, அந்த தனுசு லக்கினத்தில் குரு இருக்கவும், பொருந்திய துலாம் ராசியில் சனி உச்சம் பெற்றவனாயும்,

லாபத்தானாதிபதி நாலாம் இடத்திலும் குறையில் லாமல் இருந்தால்,

சாதகன் செல்வத்தினை அறிவுத்திறனால் தேடிச் சேர்த்து, நீதி தவறாமல் சுகவாழ்வினைப் பெற்று, தனக்குத் தெரிந்த பலரைப்பாதுகாத்து, ஆயுளளவும் அனுபவிக்கத் தக்கதான பொன்னையும் பொருளையும் கோடி கோடியாகச் சேர்த்து வாழ்வான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

வில் - தனுசு லக்கினம், குரு உற - குரு சேர்ந்திருக்க, லாபாதி - பதினோராம் இடத்ததிபதி, திருந்தி - குறையில்லாமல், பலரைத் தெரிந்தே - உதவியை நாடும் பலரைத் தெரிந்தெடுத்து, ரெட்சித்து - அவர்கள் குறைகள் தீர

பொருளுதவி செய்து பாதுகாத்து, சென்ம பொன் - ஆயுசு அளவும் செலவழிக்கத் தக்க செல்வம், கோடி - கோடி என்ற அளவில் மதிப்பமைந்த செல்வம்.

கோடி அளவில் பொருள் சேர்த்து, சுகவாழ்வுடன் தக்கவருக்குக் கொடுத்துப் பாதுகாத்து வாழும் வாழ்க்கையினை - அறிந்து கூறுதற்கு இப்பாடல் விளக்கம் தருகின்றது.

தேவலோக சம்பத்தினை - ஆள்வான்

வருமேதனுசு குடம்மீனம்வாழும்கன்னிஇடபமுடன்
புரமேய்நற்கோளிருந்தமனைபுகுந்தால்தேவர்க்குஅரிதாய
திரமேயோகம்நவகோடிசெம்பொன்தேடிராச்சியங்கள்
புரந்தேஆள்வன், லக்கினம்ஒங்கித்தனுசில்பிறந்திடவே. 54

தொகுப்புரை:

தனுசு, கும்பம், மீனம், கன்னி, இடபம் ஆகிய ராசி இடங்களில் ஒன்றில் சுபகிரகங்களில் ஒருவர் இருப்பாரானால்,

சாதகன் தேவர்களுக்கும் அரிதான திறம் பெற்ற யோகமுடையவனாக, பொன்னையும் மதிப்புடைய பொருள்களையும் ஒன்பது கோடியுடையான் என்ற சிறப்புப் பெயருடன்,

நாட்டினை பாதுகாத்து ஆட்சி செய்வான் இத்தகைய குபேர சம்பத்துடைய வாழ்க்கையானது சாதகனின் சென்ம லக்கினம் தனுசாக அமைந்திருந்தால் நிகழ்வதாகும்.

அருஞ்சொற்பொருள்

குடம் - கும்பம், நற்கோளிருந்த மனை - சுபகிரகம் ஒன்று இருந்த ராசியிடம், திரமே யோகம் - குறைவு படாத யோகம், நவகோடி - ஒன்பது கோடி செல்வம், புரந்தே - பாதுகாத்தே,

இப்பாடலால் அறியப்பெறும் கோடீஸ்வரனாகும் யோகம், தனுசு, கும்பம், மீனம், கன்னி, இடபம் ஆகிய

ராசிகளில் ஒன்றில் ஒரு சுபக்கோள் இருந்தால் மட்டும் உண்டாகுமா? என்பதைச் சிந்தித்துப்பார்க்கின்

நான்காம் அடியில் லக்கினம் தனுசில் உண்டானால் என்று கூறும் நுட்பத்தினைக்கொண்டு 3, 4, 10, 6 ஆகியதாக தனுசிலிருந்து காணும் ராசிகளையும் அவற்றிலுள்ள கிரகங்களையும், பார்வையிடங்களையும், முன்னர் கூறப்பட்டுள்ள முறைகளையும் தனாதிபதியுடன் பூர்வத்தினையும் கண்டு கூறலாகுமென்று காணப்படுகிறது.

விரும்பும் சுவை அறிதல்

இலகும் இரண்டில் மூன்றிடத்தில் இரவியுறில் கார்ப்புடன் சுடுகை
நிலவுக்குச் சீதளத்துவர்ப்பு, நீரு குசர்க்கு குளிர்மைகைப்பே
அலகு புதற்குச் சலமுமேயாம், பொன்னுக்கு மதுரம்அழல்
கலகச் சனிக்கே கஷாயம், தண்சமற் சுக்கிரற்குப் புளிகுளிர்ச்சி. 55

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு இரண்டாமிடத்தில் அல்லது மூன்றாமிடத்தில் சூரியன் இருந்தால் - காரத்துடன் சூடான உணவை விரும்புவான்

சந்திரன் இருந்தால் - குளிர்ந்த துவர்ப்புடைய கசப்பான சுவையை விரும்புவான்

செவ்வாய் இருந்தால் - குளிர்ச்சியுடைய கசப்பான சுவையை விரும்புவான்

புதன் இருந்தால் - நீர் வடிவான சுவையை விரும்புவான்.

குரு இருந்தால் - இனிப்பான சூட்டுடனான உணவுச் சுவையை விரும்புவான்.

சனி இருந்தால் - பல பொருள் சேர்த்து காய்ச்சிய நெடிவாடை வீசும் சுவையை விரும்புவான்.

சுக்கிரன் இருப்பானாயின் - புளிப்பும் குளிர்ச்சியும் பொருந்திய சுவையை விரும்புவான் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

இரவியுறில் - சூரியன் இருந்தால், கார்ப்பு - காரம், சுடுகை - சூடானவை, சூடு படுத்தப்பட்டவை, குசர்க்கு -

செவ்வாய்க்கு, கைப்பு - கசப்பு, சலம் - சுவைநீர், மதுரம் - இனிப்பு.

இரண்டாமிடம் பலன் முற்றும்.

மூன்றாம் இடம் - பலன்கள்

சென்மலக்கினத்திற்கு மூன்றாம் இடத்தினால் அறியப்படும் பொதுவும் சிறப்புமான பலன்கள் - உடன் பிறந்தவர்கள், காரிய வெற்றி, காதணிகள் முதலான ஆபரணங்கள், சகோதர விருத்தி - ஆண், பெண் முதலானவைகளாகும்.

துலங்கும் மூன்றாமிடம் தன்னால், துணைவர் பலனைச் சொல்லுங்கால்
இலங்கும் மூன்றாமதிபதியும், இருந்தார், கண்டார், தமைக்கொண்டும்
நல்ங்கொள் உச்சம் பகை நீசம் நட்பும் அறிந்தே உரைசெய்யப்
பலன்கொள் பெண் ஆண் கிரகங்கள் பார்த்துத் துணைவர் பலன் சொல்லே.

தொகுப்புரை:

விளங்கும் சென்ம லக்கினத்திற்கு மூன்றாம் இடத்தினைக் கொண்டு உடன் பிறந்த சகோதரர் பற்றிய பலன்களைச் சொல்லுவதானால்,

மூன்றாம் ராசிக்குரிய கிரகத்தினைக் கொண்டும், அந்த மூன்றாம் வீட்டில் இருக்கும் கிரகத்தினைக் கொண்டும், மூன்றாம் வீட்டினைப் பார்க்கும் கிரகங்களைக் கொண்டும்,

இவ்வாறமைந்த கிரகங்களின் உச்சம், பகை, நீசம், நட்பு ஆகியவற்றையும் அறிந்து சிந்தித்து பலன் கூறும்போது

மூன்றாமிடத்துக் கிரகம், அவரோடு கூடியுள்ள கிரகம் ஆகியவற்றிற்குரிய பெண் ஆண் இனத்தினையும் கண்டே சகோதர நற்பலனைக் கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்

துணைவர் - உடன் பிறந்தவர், இருந்தார் - மூன்றாம் இடத்தில் இருந்த கிரகம், பலன் கொள் - சகோதர பலனை கொள்ளுதற்குரிய ஆண் பெண் கிரக நிலைகள்

ஆண் பெண் கிரகங்கள்

ஆண்	பெண்	அலி
சூரியன்	சந்திரன்	புதன்

செவ்வாய்	சுக்கிரன்	சனி
குரு	இராகு	கேது

முன், பின் சகோதரங்கள்

சொல்லும் குசன் மூன்றாமிடத்தில் இருக்கில் பார்க்கில் துணைவர் அற்பம்
வெல்லும் பதினொன்றில் குசனும் மேவில் மூத்தோன் மிகவுண்டாம்
வல்ல ரெண்டாமிடத்தில் சேய்மருவில் உடனே வரும் துணைவன்
நல்ல மும்மூன்றாய்ப் பார்த்து நாரியாள் இத்தனை உன்னே. 2

தொகுப்புரை:

செவ்வாய் மூன்றாமிடத்தில் இருந்தாலும், பார்த்தாலும் சகோதரபாக்கியம் அற்பமாகும்.

செவ்வாய் பதினோராம் இடத்தில் இருப்பானாயின் தனக்கு மூத்த சகோதரன்கள் பலர் இருப்பார்கள்.

செவ்வாய் இரண்டாமிடத்தில் இருந்தால் உடனே இளைய சகோதரம் பிறக்கும்.

மூன்றாமிடத்திலிருந்து மும்மூன்றாய் ராசிகளைக் கணக்கிட்டு 3, 6, 9, 12 ஆகிய நான்கு இடங்களுக்குரிய ராசி கிரகங்களில் பெண் கிரகங்களை அறிந்து பெண் சகோதரம் இத்தனை என்று சிந்தித்துச் சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், இருக்கில் பார்க்கில் - செவ்வாய் மூன்றாம் இடத்தில் இருந்தாலும், மற்ற இடத்திலிருந்து மூன்றாமிடத்தினைப் பார்த்தாலும், மூத்தோன் - மூத்த சகோதரங்கள், மருவில் - சேர்ந்தால், நாரி - பெண்.

சகோதர பலனை அறிந்து கூறுவதற்கு ராசிகளில் மூன்றாமிடமும், கிரகங்களில் செவ்வாயும் திட்டமாகக் குறிப்பிட்டிருப்பது தெளிவாகும்.

சகோதரர் பங்கு மனை - சேரும்

உன்னும் மூன்றாம் இடத்து அதிபன் குசன்
நன்ன நாலாம் அதிபனும் கூடினும்
தன்ன மூவரும் நான்குறத் தன்துணை
அன்னர் பங்கு மனைவந்து சேருமே. 3

தொகுப்புரை:

மூனறாம் இடத்துக்குரிய கிரகமும், செவ்வாயும், நான்காமிடத்துக்குரிய கிரகமும் ஆகிய மூன்று கிரகங்களும் நான்காம் இடத்திலிருந்தால்,

சாதகர்க்கு தனது சகோதரருடைய பாத்திய பங்கு மனையும் வந்து சேரும்.

அருஞ்சொற்பொருள்

உன்னும் - சிந்திக்கும், குசன் - செவ்வாய், நன்ன - சேர, தன்ன - இவ்வாறான, தன்துணை அன்னர் - தனது சகோதரராக உள்ளவர் ஆகி இருப்பவர். பங்கு மனை - பாகமாகவுள்ள மனை.

மூன்றாம் இடமும் அதற்குரிய கிரகநிலையும் செவ்வாயும் அமைந்துள்ளதனைக் கொண்டு முன்னர் கூறப்பட்ட பாடலில் சகோதரபலன் கூறப்பட்டிருந்த கிரக முறைமைகளுடன்

நான்காம் இடத்திற்குரிய கிரகமும் சேர்ந்திருந்தால் உண்டாகும் பலனே சகோதரபாத்தியமுள்ள பங்கு மனையும் சாதகர்க்குக் கிடைப்பதாகும் என்று காணும் பலனாகும்.

இளையோர், மூத்தோர் - அரிட்டம் காணல்

சேரும் செவ்வாய் புடத்தை வைத்துக்கொண்டு
செய்ய கருங்கோள் புடத்தை எடுக்கில் அப்போ
நேரும் அந்தராசியில் பொன் மருவும் போது
நிற்கும் இளையோர்க்கு அரிஷ்டம் கருங்கோள் தன்னை
பாரும் அந்த புடத்தில் அங்காரகனை வணங்கி
பண்பொடு நின்றிடும் ராசிதனில் அரசன் வந்தால்
ஊரும் உற்றாரும் அறியச் சேட்டன் பார் விட்டே
பரகதி அணுகுமென உரைசெய்வாயே. 4

தொகுப்புரை:

சாதகன் பிறந்த கால நேரத்தில் கணக்கிடப்படும் ராசிமண்டல கிரகாம்சங்களில்,

செவ்வாய் நிற்கும் ஸ்புடத்தைக் கணித்து, அதில் ராகுவின் ஸ்புடத்தை கணிப்பிடும்போது, அப்பொழுது உண்டாகிற ராசியில் குரு வரும்போது, இருக்கின்ற இளைய சகோதரனுக்கு கண்டமாகிய அரிட்டம் உண்டாகும்.

ராகுவை அந்த ஸ்புடத்தில் சஞ்சாரம் செய்யும் கால நிலையைக் கண்டு, அதே ஸ்புடத்தில் அங்காரகனையும் அந்த ராசி ஸ்புடத்தில் வருங்காலத்தினையும் அறிந்து, அந்த ராசியில் குரு சஞ்சாரமாக வரும் காலத்தில், ஊராரும் உறவினரும் அறிய மூத்த சகோதரனுக்கு அரிட்டம் ஏற்படும் என்று சொல்வாயாக.

அருஞ்சொற்பொருள்

புடம் - ஸ்புடம், கிரகக் கணிப்பு. கருங்கோல் - ராகு, அரிட்டம் - கண்டம், அரசன் - குரு, ஊரும் - ஊர்மக்களும், சேட்டன் - மூத்தவன்.

இத்தனைச் சகோதரர் என்றறிதல்

உரைசெறி மூன்றாமாதிலாபாதி பதிக்கே
உறவாக மூன்றாதி உயர்பிரபலமாய்
வரவுடன் மித்திரருடனே கூடியலாப
மதில் இருக்க அவருடனே வந்து கூடி
திரமுடனே இருந்த தொகைப்படி துணைவர் உண்டாம்
திரிபூமானெனக் கிரகச் செயலறிந்து பகர்மின்!
கரியகுழல் மதிவதனம் காவியக்கண் இனிய
கனி அமுதம் போலும் மொழியாம் கன்னியரே. 5

தொகுப்புரை:

மூன்றாம் இடத்திற்குடையவன், பதினோராம் இடமாகிய லாபத்தான கிரகத்திற்கு நட்பாகவும், பிரபலனாகவும் இருந்து, நட்புடைய கிரகங்களுடன் கூடி லாபஸ்தானத்தில் இருந்தால்

அவருடனே எத்தனை கிரகங்கள் வந்து சேர்ந்துள்ளார்களோ அத்தனை சகோதரர்கள் உண்டாகி,

மூவுலகினை ஆள்பவனைப் போன்று இருப்பா னென்று கிரகங்களின் செயலறிந்து

கரிய கூந்தலும், சந்திரனைப்போன்ற முகமும் நீலோற்பல மலரைப் போன்ற கண்களும், இனிய கனியையும் அமுதத்தையும் போன்ற மொழியையும் உடைய கன்னிப்பெண்ணே - சொல்வீராக.

அருஞ்சொற்பொருள்

லாபாதி - 11ஆம் இடத்ததிபதி, மித்திரர் - நட்பான கிரகங்கள், திரிபூமான் -மூன்று உலகத்துக்கும் அரசன், காவி - நீலோற்பலமலர், வதனம் - முகம், மொழி - சொல்.

இளைய சகோதரியின் நிலையறிதல்

ஆர்கடகம் தேள்மீனம் லக்கினத்தைக் கண்டே
அன்புடன்நவபாகம் பண்ணஐந்தாம்பங்கில்
பாரிலுதித்தான்பின்னேபிறந்தகன்னிக்குப்
பக்குவம்எப்படிஎனில்?அக்கடகமாயின்
நாரிவெகுதூலகாயம்முடையவளாவாள்
நவில்தேளாகில், பேய்போல்கால்குறுகிப்பருத்துச்
சேரவுருக்குலைந்திருப்பாளாம், மீனமாகில்
செய்யகால்முடமாகித்திரிந்திடுவள்என்னே! 6

தொகுப்புரை:

கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய லக்கின ராசிகளை ஒன்பது பங்கு செய்து, அவற்றில் ஐந்தாம் பங்காகிய பிறந்த சாதகனுக்குப் பின்னர் பிறந்த சகோதரியின் நிலைமை எப்படி? என்றால்

(ஐந்தாம் பங்காகுமிடம்) கடகமானால் பருத்த உடம்புள்ளவள் என்றும், விருச்சிகமானால் பேய்போல் கால்குறுகிப் பருத்து விகாரமாயிருப்பவள் என்றும், மீனமானால், நன்றாக இருந்த கால் முடமாகி நடப்பவள் என்றும் - சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்

தேள் - விருச்சிகம், நவபாகம் - ஒன்பது பங்கு, பக்குவம் அப்பெண்ணின் நிலைமை, தூலகாயம் - பருத்த உடம்பு, செய்யகால் - நன்றாக இருந்த கால்

விளக்கம்:

கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவற்றிலொன்றில் பிறந்தவனுக்கு, லக்கின நாழிகையை ஒன்பது பங்கு பண்ணும் போது, செனித்த வேளை ஐந்தாம் பங்கானால் இவனுக்கு அடுத்தாற்போல் பிறந்தது பெண்ணென்றும்

அப்பெண் கடகமாயின் - தூல சரீரமென்றும்

விருச்சிகமாயின் - விகார உருவுள்ளவளென்றும்

மீன மாயின் - முடமாயிருப்பள் என்றும்

கண்டு கூறுதல் ஒரு நெறிமுறையாகும்.

சகோதரர் உண்டாகும் காலமறிதல்

என்னும்மூன்றாம்அதிபதிபுடத்தில்ஏற்றிடுசெவ்வாய்புடத்தையும்கூட்டத்
துன்னிரண்டுராசிகுருவும்காலம்துணைஉற்றிடும்இப்புடம்கூட்டி
மின்னியராசிஅங்கிசைமட்டமாய்மேஷாதிமுதற்கொண்டெண்ணி
அன்னியதுணைவர்தொகைவரும்பாவர்அணுகவீழிநோக்க
அழிந்துபோமே 7

தொகுப்புரை:

மூன்றுக்குடையோன் ஸ்புடத்தில் செவ்வாயின் ஸ்புடத்தையும் கூட்டி வந்த ராசியில் குரு சஞ்சாரம் செய்யும் காலத்தில் சகோதரர் உண்டாகும்.

இவ்வாறாகக் கூட்டிய ராசிக்குடையவன் அங்கிசை பெற்றுள்ள இடம் வரைக்கும், மேடராசியை முதலாகக் கொண்டு எண்ணிப்பார்க்க, எத்தனை எண் வருகின்றதோ அத்தனை சகோதரர் உண்டென்பது ஏற்படும்.

ராசி அங்கிசத்தினால் பாலகிரகங்கள் சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் சகோதரங்கள் பிறந்து இறந்து போவார் என்று சொல்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

புடத்தில் - ராசிக்கணிப்பில், துன்னிரண்டு ராசி - சேர்ந்த இரண்டு ராசியிடத்தும், துணை - இளைய சகோதரம் உண்டாகும், அங்கிசை மட்டாய் - அங்கிசையான ராசி அளவும், அன்னிய - தன்னோடு சார்ந்த, விழிநோக்க - பார்க்க.

ராகுதிசையில் - நேரும் பலன்கள்

ஆறாமிடத்திலாய் அமைந்த கருங்கோள்
வீறாயிருக்க மேவும் அவன் திசையில்
பேறாய் வரினும் பெலமுள்ள சகோதரம்
நீறாய் உயிர்விடும் நேமியோராயவே. 8

தொகுப்புரை:

சென்மராசிக்கு ஆறாம் இடத்தில் ராகு கிரகமானது பலம் பெற்றிருக்க, அந்த ராகு திசையானது சாதகர்க்கு நல்ல பலன்களைத் தருவதாக வந்தாலும்

நல்ல நிலையில் வாழும் அவனது சகோதரங்கள், நிலமையில் தாழ்ந்து யாவரும் அறியும்படியாக மரண மடைவர் என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

கருங்கோள் - ராகு, வீறாய் இருக்க - பலம் பெற்றிருக்க (ஆட்சி பெற்றிருக்க) பேறாய் வரினும் - சாதகனுக்கு நன்மைகள் சிலவற்றைத் தரும் திசையாக வந்தாலும்.

சென்ம லக்கினத்திற்கு ஆறாமிடத்தில் ராகு வலிமை பெற்றிருக்க, அவனது திசை நிகழும் காலத்தில் சாதகனுக்கு மற்றைய கிரகங்களின் அனுகூலத்தினால் சில நன்மைகள் வருவதாக காணப்படினும், உடன் பிறந்த சகோதரங்களுக்கு ஆகாத காலமாக அமையும் என்று அறியப்பெறும்.

காதணி முதலான ஆபரண பலன்

ஒண்டு தேவகுரு மூன்றில் இருக்க பலமாயுற நோக்க
மூன்றாமாதி பலவானாயிருக்க, மூன்றில் உச்சமுற
தோன்று கர்ணபூஷணங்கள் குடியிருப்பான் சுகமாக
ஆன்ற கர்ணாபரணத்தை அளிப்பானிவரென்றறையவே. 9

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் சுபக்கோளாகிய குரு இருந்தாலும், சுபக்கோள்கள் பலம் பெற்று அவ்வீட்டைப் பார்த்தாலும், மூன்றாமிடத்தில் உச்சம் பெற்ற கிரகம் இருக்கவும்,

காதணி முதலான ஆபரணங்கள் அணிந்திருப்பான் சுகவாழ்க்கையுடன்

இவ்வாறு ஆபரணத்தை அளிப்பவர் சொல்லப்பட்ட கிரகங்களே என்று அறிஞர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

தேவகுரு - குரு, கர்ணம் - காது, பூஷணம் - அணியும் பொன்னாபரணங்கள். சூடி - அணிந்து. ஆன்ற - அவ்வாறான

விளக்கம்:

மூன்றாமிடத்தில் குரு இருக்க, அல்லது பலம்பெற்று மூன்றாமிடத்தைப் பார்க்க, மூன்றுக் குடையவன் பலம் பெற்றிருக்க, மூன்றாமிடத்தில் உச்சமான கிரகம் இருக்க

இவ்வறான கிரகங்களின் அமைப்பின் பலனாகச் சாதகன் காதணி முதலான ஆபரணங்களைச் சிறப்புடன் அணிந்து சுகமாக இருப்பான் என்பதாம்.

காதணி வகை அறியும் திறன்

அறையும் மூன்றில் சுக்கிரனும் அமர்ந்தால் முத்துக் கடுக்கனுமாம்
இறைவனிருக்கில் அபரஞ்சி, இரவி செவ்வாய்க்கு ரத்தினங்கள்
அறையும் புதற்கு கஞ்சச்சரம் வர்ணம் அணியும் இதுவல்லால்
நிறையும் மதி உற்றிடில் சகலாபரணம் பெறுவர் நிச்சயமே. 10

தொகுப்புரை:

சிறப்பாகச் சொல்லப்படும் மூன்றாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் முத்துக்கள் அணிந்திருப்பார்.

மூன்றாமிடத்தில் குரு இருந்தால் பொன்னாலான பொற்பூ அணிந்திருப்பார்

சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் இரத்தினங்கள் பதித்த காதணி அணிந்திருப்பார்

புதன் மூன்றாமிடத்தில் இருந்தால் பசும் பொன்னாலாகிய வளையம் அணிந்திருப்பர். மேலும் பலவிதமான தோற்றமுடைய காதணிகளையும் அணிவர் இவையல்லாமல்

சந்திரன் மூன்றாமிடத்தில் இருந்தால் காதணியுடன் சகல ஆபரணங்களையும் அணிந்திருப்பார் என்பது உறுதியான பலனாகும்.

அருஞ்சொற்பொருள்

அறையும் - எடுத்துக் கூறும், கடுக்கன் - காதில் அணியும் நகை வகையிலொன்று, இறைவன் - குரு, அபரஞ்சி - பொற்பூ.

காதணியின் வகை அறிதல்

நிச்சயமாய் காரியுறில் திருமேனிக்கடுக்கன்
நீள் கருங்கோள் நீலம், செம்பாம்புக்குச் சிவப்பாம்
அச்சமற மூன்றாதி இருக்கின்ற வீட்டுக்
காதி பலவானாயிருந்தால் அணிசெவிப்பூண் உளதாம்
உச்சிதமாய் இவையெல்லாம் இடக்காதுக்கு என்ப
உயரும் லாபாதிபதி உறைந்தருளும் வீட்டோன்
இச்சையுடன் கேந்திரத்தில் நல்லோர் கண்டிடவே
இருக்கில் வலச்செவி வளம்பூண் இயம்புவர். //

தொகுப்புரை:

மேலே 10ஆம் பாடலால் குறிப்பிடப்பெறும் மூன்றாமிடத்தில், சனி இருந்தால், காதில் தெய்வவுருவம் அமைந்த கடுக்கன் அணிந்திருப்பார்

மூன்றாமிடத்தில் ராகு இருந்தால் - நீலம் பதித்த காதணி, கேது இருந்தால் - இரத்தினம் பதித்த காதணி (சிகப்பு)

மூன்றாம் இடத்தோன் சென்றுள்ள ராசியிடத்திற்கு உரிய கிரகம் பலம் பெற்றிருந்தால் - செவிப்பூண்

மேலான மதிப்புடைய இத்தகைய காதணிகளெல்லாம் இடக்காதுக்கு அணியப்பெறுவர் என்பர்.

லாபத்தானாதியாகும் 11ஆம் இடத்தோன் சென்று சேர்ந்துள்ள ராசியிடத்துக்குரிய கிரகம், விருப்பமாக கேந்திரஸ்தானத்தில் இருக்கவும், அந்த கிரகத்தை சுபர் பார்ப்பார்களாயின் வலச்செவியில் அணியும் மதிப்பமைந்த அணியினை விபரமாகக் கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

காரி - சனி, திருமேனி - தெய்வவுருவம், கருங்கோள் - ராகு, செம்பாம்பு - கேது, இச்சை - விரும்பி, வளம் பூண் - மதிப்புடைய காதணிவகை.

காதணிகளின் பலன் முற்றும்.

உண்ணும் பாத்திரம் இவையென்றறிதல்

எண்ணி ரெண்டாமாதி லாபம் மூன்றாதி
இதமில்லா பாவிகள் கண்டிடத் தனியே நின்றால்
உண்ணவும் நற்கலம் இல்லான், உகந்த ரெண்டாம் வீட்டில்
உயரும் செங்கதிரோன் பெற்று உலகிலுள்ளோர் காண
நண்ணியதோர் சனி மேவ, ரெண்டாம் வீட்டாதி
நண்பொடு மூன்றாமிடத்தில் நயந்து நிற்க
பண்ணுடனே சுபர் பார்க்கில் வரும் வெள்ளிக் கலமே
பாவக்கோள் விழிநோக்கப் படைப்பது வெண்கலமே. 12

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தோன், லாபத்தானாதிபதி, மூன்றாம் இடத்ததிபதி இம்மூன்று, கிரகங்களில் தனியே உள்ள ஒரு கிரகத்தைப் பாப கிரகங்கள் நோக்கினால் (பார்த்தால்) சாதகன் உண்ணுவதற்குரிய நல்ல பாத்திரம் இல்லாதவனாவான்.

தனத்தானமென்று கூறும் இரண்டாம் ராசி வீட்டில் வளரும் சூரியன் சனி இருவரும் விருப்புடன் நிற்கவும், நட்புராசியாகிய மூன்றாமிடத்தில் இரண்டாம் இடத்தோன்

நிற்கவும், சுபகிரகங்கள் பார்வை பெற்றால் சாதகன் வெள்ளிக்கலத்தில் உண்பான்.

மேலே குறிப்பிட்ட கிரகங்களை பாபகிரகங்கள் பார்த்தால் அவனுக்கு கிடைப்பது வெண்கலத்தட்டேயாகும்.

அருஞ்சொற்பொருள்

லாபம் - 11ஆம் இடத்தோன், உகந்த - விரும்பிய, செங்கதிர் - சூரியன், பண்ணுடன் - விருப்புடன், கலம் - உண்ணும் பாத்திரம். வெண்கலம் - வெண்கல உலோகத்தாலான உண்ணும் பாத்திரம்

உண்ணும் பாத்திர வகையறிதல் முற்றும்.

நான்காம் இடம் பலன்கள்
தாய், வாகனம், பூமி, சுற்றம், சுகம், கல்வி, இருப்பிடம், வணிகம்

வாகனம்

சசிவாகனாதிசன்மத்தாதி இம்மூவர் கூடில்
அசுவவாகனம்உண்டாகும்அவருடன்வெள்ளிகூடில்
வசையிலாம்தோளியுண்டாம், வாகனத்தாதி
ஒசிவின்றி வியத்திலின்றி உற்றிடில்தண்டிகைபரிந்தே.

தொகுப்புரை:

சந்திரன் வாகனாதிபதியாகிய நான்காம் இடத்து அதிபதி, சென்ம லக்கினாதிபதி ஆகிய இம்மூவரும் கூடி (சுபத்தானத்தில்) இருந்தால் குதிரை வாகனம் உண்டாகும்.

இம்மூன்று கிரகங்களுடன் சுக்கிரன் சேர்ந்திருந்தால் தண்டிகை வாகனம் அமையும்.

வாகனத்தானாதிபதி குறையின்றியும், பன்னிரண்டாம் இடமாகிய விரயத்தானத்தைச் சேராமலும் நட்பு சுபத்தானங்களிலொன்றிலிருந்தால் பல்லக்கில் ஏறிச் செல்லும் அந்தஸ்து உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

சசி - சந்திரன். அசுவம் - குதிரை, வெள்ளி - சுக்கிரன், வசையிலா - குற்றமில்லாத, தோளி - ஆட்கள் தோளில் சுமந்து செல்லும் தண்டிகை வாகனம். ஒசிவு - குறைவு இல்லாமல்.

இப்பாடலால் சாதகன் பெறும் வாகனங்கள் குதிரை, தண்டிகை, பல்லக்கு என்று கூறப்பட்டுள்ளன. இவை தனிப்பட்ட ஒரு சிலருக்கே பொருந்துவதாயினும்

காலத்திற்கேற்ப பொருத்தமான நவீன வாகனங்களைப்பலனில் கூறலாகும்.

கனகதண்டி, பூச்சக்கரக்குடை - பெறுவர்

பரிவுடன்பாக்கியாதிபதிவாகனத்தானத்தில்
குரு சுக்கிரன்தன்னோடும்கூடியிருந்தால்நோக்குற்றால்
கருதியகனகதண்டி, கைவரும், இவரோடு இந்து
பிரியமாய்நிற்கில்பூச்சக்கரக்குடை பெறுவர்தானே. 2

தொகுப்புரை:

விருப்பமுடன் பாக்கியத்தானாதிபதி, நான்காம் இடமாகிய வாகனத்தானத்தில், குரு, சுக்கிரன் ஆகியோருடன் கூடியிருந்தால், அல்லது பார்த்தால், சாதகன் திட்டமாக எண்ணியபடியே பொன்னால் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையினைப் பெரும் பாக்கியம் வந்தடையும்.

இவ்வாறானகிரகங்களோடு, சந்திரன் நட்புடன் சேர்ந்து நின்றால், பூச்சக்கரக்குடைபிடித்த அந்தஸ்தினைப் பெறுவர் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

பரிவுடன் - விருப்புடன், பாக்கியத்தானாதிபதி - ஒன்பதாம் இடத்து அதிபதி, கருதிய - எண்ணிய, பூச்சரக்குடை - உயர்ந்த தகுதியிலுள்ளார் பவனிவரும் காலத்தும், சபையில்

வீற்றிருக்கும் போதும் மேலாகப் பிடிக்கப்படும் தொங்கல்கள் சூழ்ந்த மதிப்புடைய பட்டுக்குடை.

கனக தண்டியும், பூச்சக்கரக்குடையும் உயர்ந்த தலைமையான அதிகாரமும் தகுதியும் பெற்று அரசனைப் போன்ற பதவியினை அல்லது தகுதியினைப் பெற்றாருக்கே அமையு மென்பதாம்.

இத்தகைய உயர்ந்த விகுதி விருதுச் சின்னங்கள் தேசத்தலைவருக்கும், சமயத்தலைவருக்கும் பொருந்துவதை அறிந்து பலன் கூறுதல் நுட்பமாகும்.

சாமரை, சிங்காதனம் - பெறுவன்

பூச்சக்கரக்குடை தந்தாரோடு பொருந்தி ஏழதிபன் நிற்கில்
வீசு சாமரை உண்டாகும், மிகு பாக்கியத்தோன் நான்கோன்
பாசமாய் பத்தினில் நிற்கப் பத்தாதிபன் கன்மத்தில்
நேசமாய் நிற்கில் சிங்காதனமுடன் இருப்பன் பாரில்.

தொகுப்புரை:

ஒன்பதாமாதி நான்காமிடத்தில் குரு சுக்கிரனோடு கூடி இருக்கவும் அல்லது நான்காமிடத்தைப் பார்க்கவும், இருக்கும் கிரகாம்சத்தில் சந்திரனும் கூடியிருந்தால் தண்டிகையுடன் பூச்சக்கரக்குடையினையும் பெறும் பாக்கியம் உண்டாகும் என்பதை மேலே இரண்டாம் பாடல் குறிக்கின்றது. இவ்வாறு

பூச்சக்கரக் குடை பெறுவதற்கமைந்த கிரகாம்சத்தோடு ஏழாம் இடத்துக்குரிய கிரகம் சேர்ந்திருந்தால் சாமரை வீசப்பெறும் பாக்கியம் உண்டாகும்.

பாக்கியாதிபதி நான்காமிடத்தோன் இவர்கள் இருவரும் உறவாய், பத்துக்குடைய கன்மராசியில் நட்பாய் இருக்க, உலகில் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி செய்யும் அரச போகத்தில் இருப்பவனாவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

பொருந்தி - சேர்ந்து, வீசு சாமரை - பணியாட்கள் பக்கத்திருந்து வீசும் கவரிச்சாமரை, பாக்கியத்தோன் - ஒன்பதாம் இடத்ததிபதி, கன்மத்தில் - பத்தாமிடத்தில், நேசமாய் - நட்புடன், சிங்காதனம் - அரசன் அமரும் மதிப்பமைந்த ஆசனம், பாரில் - உலகத்தில்.

கனக தண்டிகையும் யானை வாகனமும்

பரவு வாகனாதிபதி பாக்கியத்தில் நிற்கப்
பாக்கியத்தானாதிபதி கேந்திரத்தைப் பற்ற
இருவர் நிற்கும் மனை நல்லோர் இருக்கும் வீடாய்
இனிய சுபக்கிரகத்தோடு இசைந்து கூடில்
வீரவு லக்கினாதிபதி வாகன கேந்திரத்தில்
மேவினும் கனகதண்டிகையும் மிகுதனமும்
மருவு மதயானைவாகனங்களும் உண்டாக
வரங்கொடுப்பன் வாகன காரகன் சுக்கிரனே. 4

தொகுப்புரை:

போற்றுகின்ற நான்காம் இடத்தோனாகிய வாகனத்தானாதிபதி ஒன்பதாமிடத்தில் இருக்கவும், ஒன்பதாம் இடத்தோனாகிய பாக்கியாதிபதி 1, 4, 7, 10 ஆகும் இடங்களாகிய கேந்திரத்தானமொன்றில் இருக்கவும்

இவ்வாறாக இரண்டு கிரகங்களும் நிற்கும் வீடுகள் சுபகிரகங்களின் வீடாகவும், இனிய சுபகிரகத்தோடு நட்புடன் கூடியிருக்கவும்

லக்கினாதிபதி நான்காம் இடத்தில் இருக்கவும் பிறந்தவன் கனகதண்டிகையும் மிகுந்த செல்வமும் பெற்று, யானை வாகனங்களும் உண்டாக

வாகனாதிபதி வரம் கொடுப்பான் என்பதுடன், வாகன காரகன் சுக்கிரனாவான் என்பதனையும் அறிந்து பலன் கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்

வாகனாதிபதி - நான்காம் இடத்தோன், பற்ற - இருக்க, மனை - ராசி வீடு, வாகன காரகன் - வாகனங்களைத் தருவதற்குரிய காரண கிரகம்.

தண்டிகை பெறலும், இல்லாது நடத்தலும்

சுக்கிரன்நான்காதியுடன்கூடினாலும்
துலங்கும்இவர்இருவருமே கேந்திரத்திலுற்றாலும்
திக்கெனநான்காதிசசியுடன்லாபத்துஉறினும்
திரள்பலவாகனம்உண்டு, தீதகலநான்கில்
தக்கபிரகஸ்பதிஇருக்க வாகனத்தான்
தன்னுடன்சுக்கிரன்கூடில், தண்டிகைஉண்டாம்
மிக்கசுங்கனார்வாகனாதியாகி
மேவுசென்மாதியைக்கூடில்வெறும்சஞ்சாரமேயாம். 5

தொகுப்புரை:

சுக்கிரன் நான்காதிபதியுடன்கூடியிருந்தாலும் இவர்கள் இருவரும் கேந்திரத்தில் இருந்தாலும், நான்காம் ராசிக்கு அதிபதி சந்திரனுடன் கூடி லாபத்தானமாகிய பதினோராம் இடத்தில் இருந்தாலும் மிகுந்த பலவகையான வாகனாதிகளைப் பெறுவான்.

குற்றமில்லாமல் குரு இருக்கவும், நான்காமாதி பதியுடன் சுக்கிரன் கூடியிருந்தால் தண்டிகை உண்டாம்.

குற்றமில்லாமல் குரு இருக்கவும், நான்காமாதி பதியுடன் சுக்கிரன் கூடியிருந்தால் தண்டிகை உண்டாம்.

சுக்கிரன் வாகனாதிபதியாயிருந்து, சென்மாதிபதியைக் கூடில், வாகனங்கள் எதுவும் இல்லாமல் வெறும் கால் நடைச்சஞ்சாரியாக இருப்பதேயாகும்.

அருஞ்சொற்பொருள்

இருவரும் - சுக்கிரன், வாகனாதிபதி இருவரும், சசி - சந்திரன், லாபம் 11 ஆம் இடம், தீதகல - நீசம், பகை இல்லாமல், பிரகஸ்பதி - குரு, சுங்கன் - சுக்கிரன், வெறும் சஞ்சாரம் - கால்நடை உடையவன்.

பலவகை வாகனங்கள் உண்டு

சாரமுறும் சோமனுக்கு மூன்றில் சுக்கிரனும்
தானிருக்கச் சுக்கிரனார் தனக்கு மூன்றில்
வீரமுறு மதியிருக்க அன்றியேதான்
வினவி ஒருவரை ஒருவர் பார்த்து நிற்கில்
பாரமுறும் குடும்பத்தானத்தை நல்லோர் பார்த்தாலும்
பார்த்து லக்கினத்தைப் பார்க்கினும் வாகனங்கள்
சேரும் மிகவென்றே நல்லோர் சொன்னார்
சிலைப்புருவக் கயல் கண்விழித் தெரிவை நல்லாய். 6

தொகுப்புரை:

வில்போன்ற புருவமும், கயல் மீனைப் போன்ற கண்விழிகளும் உடைய பெண்ணே!

சந்திரன் நின்ற ராசிக்கு மூன்றாமிடத்தில் சுக்கிரன் இருக்கவும், அல்லது சுக்கிரனுக்கு மூன்றாமிடத்தில் வளர்பிறைச் சந்திரன் இருக்கவும் இவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து நின்றாலும்,

குடும்பத்தானாகிய இரண்டாமிடத்தை சுபகிரகங்கள் பார்த்தாலும், அல்லது சுபகிரகங்கள் லக்கினத்தைப் பார்த்தாலும் பலவகை வாகனாதிகள் மிகுதியாக வந்து சேரும் என்று சோதிடத்தினை நன்றாகக் கற்றவர் சொன்னார் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

சாரமுறும் - இரண்டேகால் நட்சத்திரப்பாகையில் ராசிகளில் தொடர்ந்து சஞ்சாரம் பெறும், வீரமுறு - பலமுள்ள, மதி - சந்திரன், சிலை - வில், கயல் - ஒருவ கைச் சிறுமீன் தெரிவை - பெண்.

வாகனம் தண்டிகை - வரும்

நாலிடத்ததிபன்தானும் லக்கினத்து உறில் பல்லக்கின்
மேல் ஊரும் செல்வம் எய்தி மேதினி தன்னில் வாழ்வோர்
கோலிய இலக்கணத்தில் குருவுற அவனை நல்லோர்
சாலவும் பார்க்க மேலாம் தண்டிகை மருவும் வாகாய். 7

தொகுப்புரை:

நாலாமிடமாகிய வாகனத்தானாதிபதி சென்ம லக்கினத்தில் இருந்தால், பல்லக்கின் மேலமர்ந்து செல்லும் செல்வத்தினைப் பெற்று உலகில் சிறப்புடன் வாழ்வார்.

இலக்கினத்தானத்தில் குரு இருக்கவும் அவரை சுபகிரகங்கள் நேர்முகமாகப் பார்க்கவும் அமைந்திருந்தால், தண்டிகை வந்துசேரும் வாகனப்பலனை அடைவாய் என்று சொல்லுக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

உறில் - அடைந்து இருந்தால், ஊரும் - ஏறியமர்ந்து செல்லும், மேதினி - உலகம், சாலவும் - உச்சப் பார்வை, மருவும் - தானேவரும்.

நான்குக்குடைய கிரகம் லக்கினத்திலிருந்தால் பல்லக்கு ஏறத்தக்க செல்வம், லக்கினத்தில் குரு இருக்க அவரைச் சுபர் பார்க்க தண்டிகை ஏறிச் செல்லும் பாக்கியம் வரும்.

நிறைந்த நிலபுலனுக்கு - அரசன்

வாகனாதி மருவுமனை முத
லாக ஈரைந்தகத்துக் கதிபனும்
ஏக, வீட்டுக்கிறைவனைக் கூடில்
போகவான்வெகுபூமிக்கு அரசனே. 8

தொகுப்புரை:

வாகனாதிபதியான நான்குக்குரியவன் இருக்கும் வீட்டிற்குப் பத்தாம் இடத்திற்குரிய கிரகம், லக்கினாதிபதியைக் கூடினால் போகவானாகவும், மிகுந்து பூமிக்கு அரசனாகவும் இருப்பான்.

அருஞ்சொற்பொருள்

வாகனாதி - வாகனத்தானாதிபதி, மருவும் - சென்று இருக்கும், ஈரைந்திற்கதிபன் ஏக வீட்டுக்கிறைவனைக் கூடில் - பத்தாம் இடத்திற்குரியவன், முதலாவது இடமாகிய லக்கினத்திற்குரியவனோடு கூடினால், போகவான் -

பெண்களின் சுகபோகம் முதலான போகங்களைப் பெறுபவனாவான். பூமிக்கு - தேசத்திற்கு - அரசன்.

வாகனாதிபதியோடு சூரியன் கூடி செவ்வாயின் ராசியில் சுபனாக இருந்தால் சுபகிரகங்கள் பார்த்தால், பசு, காளை, கன்று இவைகளுடைய விவசாயியாய் வண்டி வாகனம் உடையவனாக இருப்பான். சுக்கிரனும் சூரியனும் சேர்ந்து சுபத்தானத்தில் இருந்தால் நிலபலமுடைய விவசாயியாயிருப்பான்.

யானை, பல்லக்கு, குடை விருது உண்டு

அரசே கேள்! வாகனத்தானத்தாதி நின்ற ராசி
அன்பொடு நல்லோர் வீடாய், பண்பான கேந்திரனாய்
உரைசெரியச் சனித்தசிறு குடிசையும்ஆடாங்காம்
உகந்தருள்அன்னைக்கு இன்பம்உண்டாம்வாகனத்தோன்
வரிசையாய்ச் சனி குருவாகில் மதகயம் தண்டிகையாம்
வளர்கலை மாமதியாகில் பூச்சக்கரக்குடையாம்
விரைசெறி சுக்கிரனாகில், பல்லக்கு உண்டு இரவி
மேலில் எருதாம், புதற்கு வீரகு கட்டுப் பல்லாக்கே. 9

தொகுப்புரை:

நான்கினுக்குடையவன் நின்ற ராசி சுபர் வீடாய், அந்த இடம் நான்காமிடத்திற்குக் கேந்திரத்தானமாக அமைந்தால்

சாதகன் பிறந்தது குடிசை வீடாயினும் சிறந்த கட்டுமான முடைய வீடாக உண்டாகும்.

அவனது தாயாருக்கு இனிய மகிழ்ச்சி உண்டாகும்.

நான்காமிடத்துக்குரிய வாகனத்தோன் சனியாகவோ, குருவாகவோ இருந்தால் யானையும் தண்டிகையும் உண்டாகும்.

வளர்கலைச் சந்திரனாக இருந்தால் பூச்சக்கரக்குடை உண்டாம்

சுக்கிரனாக இருந்தால் பல்லக்கு உண்டாம். சூரியனாக இருந்தால் எருதாம்.

புதனாக இருந்தால் அழகிய கட்டுப்பல்லாக்கு உடையவனாவான்.

அருஞ்சொற்பொருள்

ஆடரங்கம் - மிகப்பெரிய கட்டுமான வீடு. அரங்கம் - நடனமாடும் கூடம், மதகயம் - யானை, இரவி - சூரியன், எருது - காளை, விரகு - சாமர்த்தியம்.

[illegible].

பலன்தரு வாகனாதி பண்புறு புடத்தினோடு
கலந்து சுக்கிரன்புடத்தைக் கூட்டியே கண்டராசி
நலந்தன்னில் அரசன் வந்து தான்செறி கேந்திரத்தும்
நலந் திரிகோணம் மேவில் நலனறி வாகனம் உண்டென்பார். 10

தொகுப்புரை:

நல்லபலனை தருகின்ற, நான்காம் வீட்டோனாகிய வாகனத்தானாதிபதிக்குரிய ராசியிடஸ்புடத்தோடு, சுக்கிரன் ஸ்புடத்தையும் சேர்த்துக் கூட்டிய கணக்குடன் எண்ணிக் கண்டராசியில்

குரு வந்திருக்கவும், அப்படி உள்ள ராசியிடம் கேந்திரமாகவோ திரிகோணமாகவோ பொருந்தினால்

பலனுடைய வாகனம் உண்டென்பார் (நாற்கால் சீவன் உண்டென்றும் கொள்ளலாம்)

அருஞ்சொற்பொருள்

ஸ்புடம் - சென்மகாலத்தில் கிரகங்கள் உள்ள ராசிகளை நிச்சயப்படுத்தும் நிலை, அரசன் - குரு, மேவில் - அடைந்திருந்தால்,

குருவானவர் மேலே கண்ட எண்ணிக்கையிடத்தில் இருப்பது, அந்த ராசியிடம் கேந்திரமாகவோ

திரிகோணமாகவோ அமையின், சுபரின் பார்வையும் ஏற்பட்டால் கேந்திரமாயின் ஆடுமாடுகளை மிகுதியாகப் பெற்றிருக்கும் பலனும், திரிகோணமாயின் பசுக்கள் பலவற்றை உடையவனாகவும் இருப்பான் என்றும் நூலோர் கூறுவர்.

வாகனம் உண்டு, அரச செல்வம் பெறுவான்

பலர் புரக்கும் சுக்கிரற்கு மூன்றில் ஏழில்
பண்புடன் சந்திரனிருக்க, சசிக்கு ஏழ்மூன்றில்
நலம்மருவும் சுக்கிரனார் இருக்கவேதான்
நண்பொடு வாகனம் உண்டு, நான்காமாதி
நிலவு நல்லோருடன் கூடிச் சந்திரகேந்திரத்தில்
நிற்கில் வாகனம் உண்டு, நிதியும் மிகத்தேடி
உலகில் நெடுநாள் அரசன்போல் வாழ்வான்
உணர்புத்திமான் என்றே, உரைக்கலாகும். //

தொகுப்புரை:

பலருக்கும் அருளும் தன்மை பெற்ற சுக்கிரன் நின்ற ராசிக்கு மூன்றாமிடத்திலோ ஏழாமிடத்திலோ நட்புடன் சந்திரன் இருக்கவும்.

அந்த சந்திரனுக்கும் ஏழாமிடத்திலோ மூன்றா மிடத்திலோ நன்மை பொருந்திய வாகனம் உண்டாகும்.

நான்காம் இடத்திற்கதிபதி, சுபகிரகங்களுடன் கூடி, சந்திரனுக்குக் கேந்திரமாகிய தானங்களில் நிற்கில் வாகனம் உண்டாகும். மற்றும் செல்வம் மிகுதியாகச் சேர்த்து, உலகத்தில் நெடுநாள் அரசனைப்போல் வாழ்வான்.

சாதகன், நன்மை தீமைகளை உணர்ந்த புத்திமான் என்றே கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்

புரத்தல் - அருளல், பாதுகாத்தல், சசி - அந்த சந்திரனுக்கு, நிதி - பெருஞ்செல்வம், உணர் - வாழவேண்டிய நியதிகளை உணர்ந்த

மிகுதியான குதிரைகள், அரச வேகம் - உள்ளவன்

உரைத்திடும் நாலாமாதி லக்கினாதி
யுடன்கூடி தீயோர்களுடனும் கூடி
நிரைத்தொரு வீட்டினில் இருக்க, அந்த வீடு
நீடு சென்மாதிக்குச் சமன் வீட்டில் ஆயின்
நிரைத்த பரிவாகனங்கள் உள்ளவன் பத்திமானாம்
நண்புடனே மன்னவரை என்னாளும் சேவிப்பன்
திரைத்திடும் சென்மாதிபதி நான்காதி நல்லோர்
இவர்மூவர் கேந்திரத்திலிருக்க இன்பமுண்டாம். 12

தொகுப்புரை:

நான்குக்கு உடையவன் லக்கினாதிபதியுடனும் பாவர்களுடனும் கூடி ஒரு வீட்டினில் இருக்க,

அந்த வீடு சென்மாதிபதிக்கு உச்சவீடாக அமையின் மிகுதியான குதிரைவாகனங்கள் உள்ளவனாகவும் புத்திமானாகவும் இருப்பான்.

திட்டமாகக் காணும் லக்கினாதிபதி நான்காமாதிபதி சுபக்கிரகம் ஆகிய மூவர் கூடி கேந்திரத்தானத்தில் இருந்தால் நல்ல கூகபோக இன்பமுடன் வாழ்வானாவான். அரசியல் அதிகாரியாவான்.

அருஞ்சொற்பொருள்

தீயோர் - பகை, பாபகிரகங்கள், நிரைத்து - ஒன்றாகச் சேர்ந்து, சமன் - சமனான கிரகம், அல்லது ஆட்சியிடம், உச்சத்தானம், பரி - குதிரை, திரைத்திடும் - திட்டமாகக் குறித்திடும்.

யானை வாகனம், அழகிய மனையாள் - சேரும்

ஆம் இரவிமதி நல்லோர் மூவரும் கூடி
அன்பொடு கேந்திரத்து இருக்கின் ஆனை சேரும்
நீமமொடு சென்மமாதி பத்தாம் ஆதிபனும்
நிறைந்த சுபருடன் கூடி, கேந்திரத்தில் நிற்கில்
வாமமுறு மதகரி வாகனம் சேரும், பருவ
மான சவுந்தரிய மனையாள் மருவுமரிவினனாம்
தீமையிலாச் சென்மாதி லாபாதி நல்லோர்
சேர்ந்து கேந்திரத்திருக்கில் சிந்தூரம் உண்டாமே. 13

தொகுப்புரை:

சூரியன், சந்திரன், சுபர் இமமூவரும் ஒன்றாய்க் கூடிக் கேந்திரத்தில் இருந்தால் யானைகளை உடையவனாக இருப்பான்.

சென்மாதிபனும் பத்துக்குடையோனும் சுபருடன் கூடிக் கேந்திரத்தில் நிற்கில் சிறந்த யானைவாகனம் உடையவனாக இருப்பான்

மற்றும் நல்ல பருவமும் அழகும் பொருந்திய மனையாளைச் சேர்ந்து மகிழும் அறிவினனாக இருப்பான்.

தீமையில்லாத சென்மாதிபதி லாபத்தானாதிபதி சுபகிரகம் இவர்கள் சேர்ந்து கேந்திரத்தில் இருந்தால் யானைகளை உடையவனாக இருப்பான் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், மதி - சந்திரன், ஆனை - யானை, வாமம் - அழகு, சவுந்தரியம் - பேரழகு, லாபாதி 11ஆம் இடத்தோன், நல்லோர் - சுப கிரகங்களில் ஒன்று, சிந்தூரம் - யானை.

இத்தகைய தான வாகன நற்பலன்கள் சிறப்பாகவும் தவறாமலும் நடப்பதானால் தீமையில்லாது சென்மாதிபதியும் வாகனத்தோனும் அமைய வேண்டும்.

அரசரால் வெகுமதிகள் பெறுவான்

உண்டாம் விப்பிரதுரையால் அதிக தனமுடையன்
உறு சென்மாதி நல்லோர் சேர்ந்து கேந்திரத்து இருக்கில்
மிண்டாம் சென்மாதி பத்தாம் அதிபனொடும்
விரும்பிய நல்லோர்தாமும் மேவி நிற்க
வண்டாரும் குழல் மடவாய்! அரசராலும்
மாணிக்கவகை சேரும், மன்னவரைச் சேவித்தே
கொண்டாடும் சத்திர சாமரைகளுள்ள
கோமானாகுவனென்றே கூறுவாரே. 14

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதி சுபகிரகங்களுடன் சேர்ந்து கேந்திரத் தானத்திலிருந்தால்

மேலான உயர் அதிகாரிகளால் தகுதியும் செல்வமும் உண்டாகும்.

வலிமை பெற்ற சென்ம லக்கினாதிபதி பத்தாம் இடத்தோனுடன் கூடிய நிலையில், நல்ல கிரகங்களுடன் பொருந்தி நிற்க,

வண்டு பொருந்தும் மணமுள்ள கூந்தலை உடைய பெண்ணே!

அரசராலும் நவரத்தின வகைகள் சேரும், மன்னரிடத்து உயர் பதவியினைப் பெற்றவனாய், மக்களால் மதிக்கப்பெறும் தகுதியில் குடைசாமரைகள் உள்ள கோமானாகுவனென்றே கூறுவாரே.

அருஞ்சொற்பொருள்

விப்பிரதுரை - மேலான பதவியிலுள்ளவர், மிண்டாம் - வலிமை பெற்ற சேவித்தே - அரசில் உயர்பதவி, சத்திரம் - பட்டுக்குடை.

அரசனாவான், சகல வாகனமும் வரும்

கூறும் சென்மாதி பத்தாமிடத்தில் நிற்க
குலவு பத்தாதிபன் நாலாமிடத்தில் கூட
வீறுடன் நாலாம் அதிபன் உச்சமாகில்
வேந்தனாகுவன், சுகவான் வெகு லீலாவினோதன்
பேறுடன் பத்தாம் அதிபன் நாலில் நிற்கப்
பெருமையுடன் நாலாதிபதி பத்தினில் நிற்கத்
தேறு சென்மாதி உச்சமாக மேவ
சகல வாகனம் சேரும் மன்னவனே. 15

தொகுப்புரை:

சன்மாதிபதி பத்திலும், பத்தாதிபன் நான்கிலுமிருந்து, அதில் நான்காதிபன் உச்சமானால், அரசனாவான்.

சுகவானாக இருப்பான், சகலலீலா விநோதனாகவும் இருப்பான்.

பத்தாம் அதிபன் நாலாமிடத்தில் நிற்க, பெருமையுடன் நாலாமிடத்தோன் பத்தாமிடத்தினில் நிற்கவும், சென்மாதிபதி உச்சமாக இருக்கவும் சகல வாகனங்களும் சேரும். மன்னனாகவும் ஆவான்.

அருஞ்சொற்பொருள்

சென்மாதி - சென்ம லக்கினாதிபதி, வீறுடன் - வலிமையுடன், சுகவான் - சுக வாழ்க்கை உடையவன், சகலவாகனம் - யானை, குதிரை, முதலிய வாகனங்கள்.

மன்னன், உற்பத்தித் தொழில் - ஆவன்

மன்னிய ரெண்டாமாதிபன் லாபத்தில் இருக்க
மற்றும், அந்த லாபாதி வந்து ரெண்டில் இருக்க
உன்னிய நாலாம் அதிபன் உச்சமாக
உயர் சகல வாகனங்களுள்ள வேந்தனாவன்
சொன்ன இரண்டாமதிபன் லாபாதிபதி இருவர்
தொடர்ந்து ரெண்டாம் இடத்திலிருக்கச் சூழ் பத்தாம் அதிபன்
பின்னும் உச்சமாயிருக்க அயன்தொழிலுண்டாய்
பேருலகில் வாழ்வரெனப் பேசுவர் நூல்வல்லோர். 16

தொகுப்புரை:

இரண்டாமிடத்துக்குரிய கிரகம் பதினோராம் இடமாகிய லாபத்தானத்தில் இருக்கவும்

அந்த லாபத்தானாதிபதி இரண்டாமிடத்தில் இருக்கவும்

நான்காமிடத்தோனாகிய வாகனாதிபதி உச்சமாக இருக்கவும் பிறந்த சாதகன் சகல வாகனங்களும் பெற்றுள்ள அரசனாவான்.

மேலே சொல்லப்பட்ட இரண்டாமிடத்தோன் லாபத்தானாதிபதி இருவரும் (2+11) தொடர்ந்து இரண்டாம் இடத்திலிருக்கவும், பத்தாம் இடத்தோன் உச்சமாக இருக்கவும் பிறந்த சாதகன்,

புதிதாகப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில் உண்டாகி, அதனால் உலகில் செல்வம் செல்வாக்குடன் வாழ்வானென்று

சோதிட நூல்களில் வல்லவர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

மன்னிய - நிலையான, லாபத்தில் 11ஆம் இடத்தில், அயன்தொழில் - உற்பத்தி செய்யும் தொழில், நூல்- சோதிட சாத்திரங்கள்.

மாதாவைப் பற்றி அறிதல்

அன்னைதன் தானத்தாதிபதி அஷ்டமந்தாதிக் காரி
தன்னுடன் கூடில் பின்சகோதரமாம்
அன்னைக்கு, அஞ்சில் சொன்ன ஒன்பானில்
மன்னிய காரிமேவின் மாதாவுக்கு அரிட்டம் சொல்லே
மின்னிய நற்கோள் உச்சம் எய்திடின் மேவிடும் நல்லாய்,

தொகுப்புரை:

மாதாவைப் பற்றிய பலன்களை அறிவதும் நான்காமிடமேயாகும். எனவே,

தாய் வீட்டுக்குரிய கிரகம், அட்டமத்தானத்தோன், சனி ஆகியோருடன் கூடியிருந்தால் தாய்க்கு, ஒரு சகோதரி (சாதகனுக்குச் சிறியதாய்) ஏற்படும்.

நான்காம் இடத்திற்கு ஐந்தாமிடத்தில் ஒன்பதாமிடத்தில் சனி இருந்தால், தாயாருக்கு கண்டம் சொல்லலாம்.

மேலே சொன்ன ஐந்து ஒன்பதாம் இடங்களில் சுபகிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால் தாயார் நலமுடன் வாழ்வாரென்பதாம்.

அருஞ்சொற்பொருள்

அஷ்டமத்தாதி - எட்டாமிடத்துக்குரிய கிரகம், அன்னை - தாய், அன்னைக்கு - நான்காமிடத்திற்கு, பின் சகோதரம் -

தனக்குப் பின்னர் மணம் செய்யப்பெற்ற சகோதரி , காரி - சனி.

அன்னைக்குத் தீங்கு - காணல்

நூல்இரண்டுஏழிடத்தில்அதிபராய்நண்ணுமூவர்
நாலிரண்டேழிடத்தில்சனிகுசனுடனேநண்ணில்
நாலிரண்டுஏழல்செவ்வாய்நண்ணிடில், காரிபார்க்க
சாலஅன்னைக்குஅரிட்டம்சாற்றுவாய்சனியைக்கொண்டே. 18

தொகுப்புரை:

நான்கு இரண்டு ஏழு ஆகிய இடங்களுக்குரிய கிரகங்கள் மூவரும்

அவரவருக்குரிய இடங்களில் முறையே சனி செவ்வாய் ஆகியவற்றுடன் சேர்ந்திருந்தாலும்

அல்லது அந்த 4, 2, 7 ஆகிய இடங்களில் அந்தஸ்தானங்களுக்குரியதாக நின்ற கிரகங்களுடன் செவ்வாய் கூடி இருந்தாலும்

அந்த செவ்வாய் நின்ற ஸ்தானத்தினைச் சனி பார்க்க மிகவும் தாய்க்குக் கண்டம் என்று,

சனியைக் கொண்டு திட்டாக அரிட்டம் கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்

நூல் - நான்காவது இடம், **அதிபர்** - அந்த வீட்டுக்குவர், குசன் - செவ்வாய், காரி - சனி, சால - மிகவும், அன்னை - தாய், அரிட்டம், - கண்டம்.

தாயைப்பற்றிய விபரங்களைப்பார்த்துச் சொல்லுவதற்குரிய இடம் சென்மராசிக்கு நான்காம் இடம் என்பதாயினும், பலன் காணும்போது, மாதாகாரகன், குடும்பாதிபதி, ஏழாமாதிபதி, ஆகியவர்களைக் கொண்டும் சனி, செவ்வாய் ஆகிய தீய கிரகங்களின் சேர்க்கை, பார்வை ஆகியவற்றைக் கொண்டும் தீர்க்காயுள், அரிட்டம் ஆகியவற்றைச் சாதகனின் திசாபுத்திகளின் பலாபலன்களை ஆராய்ந்து ஒப்புநோக்கிப் பலன் கூறுவாயாக என்று கூறப்பெறுதல் உண்டாம்.

பிள்ளையைப் பிறர் வளர்ப்பர்

சனி குசர்க்கு ஐந்து ஏழு ஒன்பான் தனில் சசியுறில் தாய் நில்லாள்
இனிய பொன் பார்க்கில் நிற்பாள், லக்கினத்து இந்து நிற்கில்
முனிபவர் இந்தை நோக்க, முந்தும் ஏழிடத்தில் செவ்வாய்
தனியுற வந்த பிள்ளைதனைப் பிறர் வளர்ப்பர் காணும். 19

தொகுப்புரை:

சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் நின்ற இடங்களுக்கு ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய இடங்களில் சந்திரனிருந்தால் தாய் இறப்பாள்.

குரு பார்த்தால் அரிட்டத்திலிருந்து தாய் உயிர் மீள்வாள்.

சென்ம லக்கினத்தில் சந்திரனிருக்க பகையான கிரகங்கள் சந்திரனைப் பார்க்கவும், ஏழாமிடத்தில் செவ்வாய் தனியாக இருக்கவும் பிறந்த பிள்ளையை அந்நியர் வளர்ப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், சசி - சந்திரன், தாய் நில்லாள் - தாய் இறப்பாள், நிற்பாள் - உயிர் பிழைத்து இருப்பாள், முனிபவர் -தீமை தரும் கிரகங்கள்.

சென்ம லக்கினத்திற்கு நான்கில் குரு இருந்தால் தாய்க்கு ஆகாது என்பது பொதுவிதி. இதற்கு மேலும் இப்பாடலில் கிரகங்களின் நிலைகள் கூறப்பட்டுள்ளன. மற்றும் குரு பார்த்தால் குறை தீரும் என்று பலன் கூறுவது, குரு எந்த இடத்திலிருந்து எத்தகைய பார்வை செலுத்தினால் என்பதைப் பார்த்து, ஏற்றபடி பலன் காண்பர்.

தாய் தந்தைக்கு அரிட்டம்

கதிரவற்கு இரண்டில் பன்னிரண்டில் காரி நிற்க
மதி தனக்கு இரண்டில் பன்னிரண்டில் மந்தன் நிற்க
கதிர் குசன் கூட மற்றும் காரி சந்திரனைக் கூட
அதிபனாம் தந்தை தாய்க்கும் அரிட்டம் என்று உரைகள் பண்ணும் 20

தொகுப்புரை:

சூரியன் நின்ற ராசிக்கு இரண்டு பன்னிரண்டாமிடங்களில் சனி நிற்க

சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டாம் இடங்களில் சனியும் நிற்க

சூரியன் செவ்வாய் கூடி நிற்க, மற்றும் சனியும் சந்திரனும் கூடி நிற்க

இவ்வாறாகக் கிரகங்களின் நிலைகள் அமைந்திருந்தால் சாதகனின் தந்தை தாய் இருவருக்கும் அரிட்டமுண்டாகும் என்று சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

கதிரவன் - சூரியன், காரி - சனி, மதி - சந்திரன், மந்தன் - சனி, அதிபனாம் - குடும்பத்திற்குத் தலைவனாகும். அரிட்டம் - கண்டம்.

இப்பாடல் தரும் கிரகங்களின் நான்கு வகை அமைப்பினையும் தனித்தனியே அறிந்து அவ்வவற்றிற்கு ஏற்ப அறிந்து அரிட்ட நிலைகளை ஆராய்ந்து கூறவேண்டும்.

தாய்க்கு அரிட்டம் காணும் - வகை

பன்னிரண்டினில் இரண்டினில் சன்மத்திலிருந்து
பாவருடன் சசி கூடி நிற்கப் பயந்த அன்னைக்கு அரிட்டம்
அன்னையாதிபன் திசையில் மாதுரு தானத்துக்கு
ஐந்து ஒன்பானில் காரி அணுகிடில் அரிட்டமதாம்
மன்னிய மாதுரு தானத்துக்கு அட்டமத்தில்
மந்தன் நாலாமதிபனுடன் மருவியுரில் அரிட்டம்
என்னு நான்கதிபனுடனே செவ்வாயேனும்
இரவியதாகிலும் கூடில், விடாநோய்புந்தியினில். 21

தொகுப்புரை:

1. சென்மத்திற்கு பன்னிரண்டு இரண்டு (சென்மம்) இவைகளில், பாபகிரகங்களுடன் சந்திரன் கூடியிருந்தால், தாய்க்கு கண்டமாகும்.

2. மாதுர்ஸ்தானாதிபனின் திசையில் மாதுஸ்தானமாகிய நான்காமிடத்திற்கு ஐந்து ஒன்பதாம் இடங்களில் சனி வரின் தாய்க்கு அரிட்டமாம்.

3. மாதுர்ஸ்தானத்திற்கு, எட்டாமிடத்தில், சனி நான்காம் இடத்தோனுடன் சேர்ந்திருந்தால் தாய்க்கு அரிட்டம்

4. நான்காமிடத்தோனுடன் செவ்வாய் அல்லது சூரியன் இருவரில் ஒருவர் கூடி நிற்க, புதன் திசையில் தாய்க்கு விடாத தீராத நோய் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

பாவர் - பாபகிரகங்கள், மாதுருதானம் - நான்காமிடம், காரி - சனி, அட்டமம் - எட்டாமிடம், புந்தியில் - புதன் திசையில்.

திட்டமான - அரிட்டம்

புந்தியும் நாலாதிபனும் தீயோர் வீட்டில்
புகழ்க்கோள் நோக்குஅற வருநாள் அரிட்டமாகும்
சிந்தையுடன்நான்காதியுடன் தனாதி
சேர்ந்து எங்கே நிற்கினும் பொன்சேதம் அன்னைக்கு
அந்த நான்காதியுடன் காரி செவ்வாய் அணுகில்
அவர் திசையில் அன்னைக்கு அரிட்டமாகும்
வந்து செவ்வாய் நாலில் உற, சனியும் இந்தும்
மருவி எங்கே நின்றாலும் மரணம் மற்றங்கதே. 22

தொகுப்புரை:

புதனும் நான்காம் இடத்திற்குடையோனும் பாவர்கள் வீட்டில் சுபர் பார்வை இல்லாதிருக்க நேரிட்ட காலத்தில் தாய்க்கு அரிட்டம் உண்டாகும்.

நான்காமிடத்துக்குடையோனோடு தனாதிபதியாகிய ஒன்பதாம் இடத்தோன் சேர்ந்து எங்கே இருந்தாலும் அன்னைக்குப் பொன் சேதமாம்.

நான்காதிபதியுடன் சனி செவ்வாய் சேர்ந்தால் அவர்கள் திசையில் அன்னைக்கு அரிட்டம் உண்டாகும்.

செவ்வாய் நான்காமிடத்தில் நிற்க, சனியும் சந்திரனும் சேர்ந்து எந்த இடத்தில் நின்றாலும் அங்கு கண்டம் தாய்க்குத் தவறாது ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்

புந்தி - புதன், தீயோர் - கொடிய கிரகங்கள், புகழ்க்கோள் - சுப கிரகம், நோக்கு அற - பார்வை இல்லாது நீங்க, தனாதி - ஒன்பதாம் இடத்தோன், காரி - சனி, இந்து - சந்திரன், மருவி - சேர்ந்து, நிற்பாள் - உயிர் பிழைத்து இருப்பாள், முனிவபர் - தீமை தரும் கிரகங்கள்.

சென்ம லக்கினத்திற்கு நான்கில் குரு இருந்தால் தாய்க்கு ஆகாது என்பது பொதுவிதி. இதற்கு மேலும் இப்பாடலில் கிரகங்களின் நிலைகள் கூறப்பட்டுள்ளது. மற்றும், குரு பார்த்தால் குறை தீரும் என்று பலன் கூறுவது, குரு எந்த இடத்திலிருந்து எத்தகைய பார்வை செலுத்தினால் என்பதைப் பார்த்து ஏற்றபடி பலன் காண்பர்.

இதுவும் அதுவே

அத்தமதாய்மாதுருதானாதி வியத்திலுற நான்கில்
மெத்தும்கலைவெண்மதி இருக்க, ஏழில்காரி மேவினும்
புத்திசெரி சுக்கிரற்கு ஏழில் பூமி சுதனும் பொருந்தி நிற்கில்
சித்தமன்னைக்கு அரிட்டம் சேரும், நற்கோள் செறியின்நன்றாம். 23

தொகுப்புரை:

நான்காம் இடத்திற்குரிய கிரகம் அஸ்தமனம் பெற்று, விரையத்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் இருக்கவும்.

நான்காமிடத்தில் வளர்பிறைச்சந்திரன் இருக்க, அதற்கு ஏழாமிடத்தில் சனி இருக்கவும்

சுக்கிரன் நின்ற ராசிக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் சென்று இருக்கவும் அமையுமானால்

தாய்க்கு கண்டம் வந்து சேரும். சுபக்கோள்கள் மேலேகண்ட கிரகங்களுடன் சேர்ந்து நின்றால் தாய்க்கு நற்பலன் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

அத்தமனம் - கிரகங்கள் வலிமையிழக்கும் ராசியிடங்கள், வியம் -12ஆம் இடம், பூமி சுதன் - பூமிக்கு மகன் செவ்வாய், நற்கோள் - சுபகிரகங்கள்.

இ[illegible]வும் - அதுவே

செறியும்இரவியுடன்காரி சேர்ந்து குடும்பத்தினில்இருந்தே
அறியும்மூன்றாம்அதிபனையும்அன்னைப்பதிநான்காமிடமும்
பிரியமறவேசனிபார்க்கப்பெலமற்ற இந்தோடுஅரவுஇருக்க
மறுதீக்கோள்நான்காதிஉச்சமானாலும்போம்மாதாவே. 24

தொகுப்புரை:

சூரியனும் சனியும் சேர்ந்து குடும்பத்தானமாகிய இரண்டாமிடத்தில் இருக்கவும்

மூன்றாமிடத்திற்குரியவனையும் தாய் ஸ்தானமாகிய நான்காமிடத்தினையும், தீயபார்வையாக சனி பார்க்கவும்.

பலமில்லாத சந்திரனோடு ராகு கேதுக்களில் ஒன்று கூடியிருக்கவும்

பாபகிரகங்களும் நான்காமதிபதியும் உச்சம் பெற்றிருக்கினும், மாதாவுக்கு கண்டம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், காரி - சனி, குடும்பத்தானம் - இரண்டாமிடம், அன்னைப்பதி - நான்காமிடம், இந்து - சந்திரன், அரவு - ராகு, கேது, மறு - குற்றமுள்ள

இதுவும் அதுவும்

மாதா பதியில் சசி வெள்ளி மாநாகம் மூன்றுற, அதற்கு ஏழ்
மீதான மைந்தின் காரியுற, வெய்யோனுடன் மூன்றாதி ஐந்தில்
தீதாய் இருக்கச் சனியவனைத் தெரிந்து பார்க்க குடும்பத்தை
ஏதான் அங்காரகன் பார்க்க, ஈன்றாள் அரிட்ட மெனச் சொல்லே. 25

தொகுப்புரை:

மாதுர் ஸ்தானத்தில் சந்திரன் சுக்கிரன் ராகு ஆகிய மூவரும் சேர்ந்து நிற்கவும்

அதற்கு ஏழாமிடத்திற்குரியவனாகிய சனி நிற்கவும், சூரியனுடன் மூன்றாமிடத்தோன் கூடி பகையாய் ஐந்தாமிடத்தில் நிற்கவும்

அவர்களைச் சனி உச்சப்பார்வையால் பார்க்கவும், குடும்ப ஸ்தானத்தைச் செவ்வாய் பார்க்கவும் கிரகங்கள் அமைந்திருந்தால்

பெற்ற தாய்க்கு அரிட்டம் என்று சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்

மாதாபதி - நான்காமிடம், மாநாகம் - ராகு, காரி - சனி, வெய்யோன் - சூரியன், குடும்பத்தை - இரண்டாமிடத்தை ஏதான் - தகுதியால், ஈன்றாள் - பெற்றதாய்.

மாதாவிற்கு அரிட்டம் காண்பதற்கே இதுவரையில் கிரக விதிகள் கூறப்பட்டுள்ளதாயினும், மாதா நிறைந்த நலமும் ஆயுளும் பெற்றிருப்பார் என்பதற்கு

நான்காம் வீட்டுக்குரிய கிரகம் ஆட்சிபெற்றதாக சந்திரன் சுக்கிரன் ஆகிய கிரகங்கள் நட்புராசிகளில் இருக்கவும், குருவின் பார்வை நான்காமிடத்தும் 8, 12ஆம் இடங்களிலும் பெற்றதாக அமைந்தால் மாதா நிறைந்த ஆயுளுடன் இருப்பார் என்பதாகும்.

அன்னைக்கு அரிட்டம் இல்லை

சொல்லார் மேடலக்கினத்துக்கு அன்னைபதியில் சுங்கன்புதன்
உல்லாசங்கள் பெற நிற்க, அதற்கு அரசனுற, சசிக்கு
பொல்லால் ஏழில் சனியிருக்க அன்னைக்கு அன்னை போம், உச்சம்
நல்ல மதியும் நல்லோரும் அன்னைக்கு அரிட்டம் நல்கூரே. 26

தொகுப்புரை:

சென்ம லக்கினம் மேட லக்கினமாக, அதற்கு நான்காம் இடமாகிய கடகராசியில் புதனும் சுக்கிரனும் பலம் பெற்றிருக்க

அந்த ராசிக்கு ஏழாமிடத்தில் குரு நிற்க, சந்திரன் நின்ற ராசிக்கு ஏழாமிடத்தில் பொல்லாதவனாகிய சனி இருப்பதானால்,

தாயினுடைய தாய், சாதகனின் பாட்டியார் கண்டம் பெறுவாள்.

இடப ராசியில் உச்சம் பெற்ற சந்திரனும், வளர்பிறைச் சந்திரனும், சுபத்தானங்களில் பகையின்றி நின்ற சுபக்கிரகங்களும் தாய்க்குத் தீங்கு செய்ய மாட்டார்கள்.

அருஞ்சொற்பொருள்

அன்னைப்பதி - நான்காமிடமாகிய மாதுர் ஸ்தானம், சுங்கன் - சுக்கிரன், அரசன் - குரு, பொல்லார் - சந்திரனுக்குப் பகையானவர், நல்கார் - தரமாட்டார்கள்.

சசிக்கு பொல்லார், ஏழில் சனியிருக்க - என்ற பாடல் தொடருக்கு, சந்திரனுக்கு பகைவருடன் சனி ஏழாமிடத்தில் இருக்கவும் என்றும் சந்திரனுக்குப் பகையானவர் சனியுடன் கூடி ஏழாமிடத்தில் இருக்கவும் என்றும், விளக்கம் காணலாம். பலன் மேலே சொல்லப்பட்டதேயாகும்.

சில நாள் அன்னை இருப்பாள்

நல்கார் சனி செவ்வாய் இரண்டும் நான்காம் இடந்தன்னைப் பார்க்கில்
ஒல்காதிருக்கில் காரகனும் ஒசிவாய் விரையம் உற்றிடவே
சொல்வார் அன்னைதனக்குறுநோய் சினந்தே அரவும் சேர்ந்துற்றால்
நில்லா என்னை, பொன்னோக்கில் நிற்பள் சிலநாள் நிலத்தே. 27

தொகுப்புரை:

சனியும், செவ்வாயும் கூடி நான்காம் இடத்தைப் பார்த்தாலும், (சனியும் செவ்வாயும் இரண்டு நான்கு இடங்களைப் பார்த்தாலும்) இருந்தாலும், மாதுர் காரகனாகிய சந்திரன் வியத்தானத்தில் இருந்தாலும் அன்னைக்கு உண்டான நோயைச் சொல்வார்கள்.

இவர்களன்றி பகையுடன் ராகு கேது சேர்ந்திருந்தால் அன்னை இறப்பாள்

இவர்களைக் குரு பார்த்தால் சிலகாலம் அன்னை வாழ்ந்திருப்பாள் என்பர்.

அருஞ்சொற்பொருள்

நல்கார் - நன்மை செய்யார், ஒல்காது - பொருந்தாது, சினந்தே - பகையாகியே, அரவு - ராகு கேது, பொன் - குரு. நிற்பன் - வாழ்ந்திருப்பன்

சென்ம லக்கினத்திற்கு இரண்டு, நான்காம், இடங்களையும், நான்காமிடத்துக்குரிய கிரகத்தினையும், சந்திரனையும் குரு பார்ப்பதாயின், மாதா பலகாலம் வாழ்வாள் என்பதையும் கொண்டு, அரிட்ட பலன் கூறுவதும் உண்டென்பர்.

கணவ னால் தீங்கினை அன்னை பெறமாட்டாள்

நிலத்தில் நான்காம் இடந்தனக்கு இரண்டாம் இடத்தில் இருந்தவர்கள்
பலத்தை குடும்பாதிபன் பலத்தைப் பெற்றதாயும் பலன் பெறுவாள்
நலத்த நாலாமதிபன் உச்சம் நண்ணியான் அங்கிசத்திலிருந்தால்
குலத்துக்கொழுநன் தண்டிப்புக்கு உள்ளாகாள் அக்கெடியளே. 28

தொகுப்புரை:

சென்மராசிக்கு நான்காம் இடத்திற்கு இரண்டாம் இடத்தில் இருந்தவர்கள் பலத்தையும், குடும்பாதிபன் பலத்தையும் மாதுர் ஸ்தானாதிபதி பெற்றிருந்தால் தாய் தீர்க்காயுளுடன் நலமாயிருப்பாள்

நான்காம் இடத்திற்குரியவன், உச்சம் பெற்றிருக்கும் கிரகத்தின் அங்கிசத்திலிருந்தால், தனது கணவனது தண்டிப்புக்கு எக்காலத்தும் அன்னை பெறமாட்டாள்.

அருஞ்சொற்பொருள்

நிலத்தில் - சென்மலக்கினத்துக்கு, குடும்பாதிபன் - இரண்டாம் இடத்தோன், உச்சம் நண்ணியான் - உச்சஸ்தானத்தினைப் பெற்ற கிரகம், கொழுநன் - கணவன்.

சாதகனின் தாய், தனது கணவனது தண்டனைக்கு உள்ளாகாள் என்பதான பலன் கூறப்பெறுவதால், தண்டனை பெறுவதற்குரிய நிலையினை உடன்படாள் என்றும் கூறுவர்.

அன்னைக்கு அரிட்டகாலம் அறிதல்

கொடியகதிர் ஆதவன்புடத்துக்குள்அம்புலியைத்தான்வாங்கி
படியும்இராசிதனில்அரசன்பற்றுங்கால்நிரியாணம்
கடியமதியின்புடத்துக்குள்காரிபுடத்தைத்தான்வாங்கி
நெடியராசிதனில்காரிவரும்நாள்அன்னைநிரியாணம். 29

தொகுப்புரை:

துன்பத்தை விளைவிக்கின்ற கதிரை உடையசூரியன் எந்த நட்சத்திரத்தில் எத்தனையாம் காலில் உள்ளான் என்ற அம்ச ஸ்புடத்தில்

சந்திரனின் ஸ்புடத்தை கணித்து வாங்கியபோது, அந்தராசியில் குரு சஞ்சாரம் செய்யும் கோள் சார காலத்தில் தாய்க்கு அரிட்டம் நேரும்.

சந்திரன் நின்ற ஸ்புடத்தில் சனியின் ஸ்புடத்தை எடுத்துக் கணக்கிடும் போது அமையும் ராசிகளில் சனி

இரண்டரை வருடம் கோள் சாரமாகச் சஞ்சாரம் செய்யும்போது அன்னைக்கு அரிட்டம் உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

கதிர் ஆதவன் - கதிரை உடைய சூரியன், ஸ்புடம் சென்ன காலத்தில் கணிக்கும் கிரகாம்சம், அம்புலி - சந்திரன், நிரியாணம் - மரணம், காரி - சனி

இராசிகளில் குரு சஞ்சாரகாலம் வருடம் 1, சனியின் சஞ்சாரகாலம் - வருடம்2.

அன்னைக்கு அரிட்டம் - தொடர்ச்சி

ஆணி மதியம் தனக்கு ஏழில் செவ்வாய் உறில் அன்னைக்கு அரிட்டம்
காணியாம் மாதுருத்தானம் கடகமாக பிறை நிற்கில்
பூணும் வயது பூரணமாம், பொல்லார் இரண்டு புறமீருக்க,
ஏணு மதியம் நடுவீருக்க அன்னைக்கு அரிட்டம் இசைந்திடுமே. 30

தொகுப்புரை:

ஆதாரமான சந்திரனுக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் இருக்குமானால் அன்னைக்கு அரிட்டம் என்பர்.

மாதுர் ஸ்தானமாகிய நான்காமிடம் கடக ராசியாக இருக்க, அதில் சந்திரன் இருந்தால், அன்னைக்கு அமைந்த வயது நிறைந்த வயதாகும்.

மாதுர ஸ்தானத்திற்கு இரண்டு பக்க ராசிகளிலும் கொடிய கிரகங்கள் இருக்கவும், நடுவில் சந்திரன் இருக்கவும் அமைந்தால் தாய்க்கு அரிட்டம் உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

ஆணி - ஆதாரமான, அரிட்டம் - கண்டம், காணியாம் - நிலையானதாம், பிறை - சந்திரன், பூரணம் - நிறைந்த வயது, பொல்லார் - கொடிய தீய கிரகங்கள், இசைந்திடும் - வந்துசேரும்.

இப்பாடலில் சந்திரனை நான்காமிடத்தில் ஆதாரமாகக் கொண்டு அன்னைக்குப் பூரண ஆயுளும் அரிட்டமும் திட்டமாகக் கூறப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும்.

தாய் தந்தைக்கு ஆகாத பிள்ளை

இசைந்த அன்னை பிதுர் தானத்து இறைவர் காரி ரவியுடன் கூடி
அசைந்திடாது எட்டு ஆறு வியத்திலும் நீசமாகவுமே
நிசந்தான் உறவே இருக்கின் தாய் நின்ற தந்தை இருவருக்கும்
கசந்தே பிரியமில்லாத கடின மைந்தனும் கண்டீர். 31

தொகுப்புரை:

நான்காமிடமாகிய மாதுர் ஸ்தானத்துக்கும், ஒன்பதாமிடமாகிய தந்தை (பிதுர்) ஸ்தானத்திற்கும் உரிய கிரகங்கள்

சனி, சூரியன் ஆகிய கிரகங்களுடன் சேர்ந்து, நிலையாக எட்டு, ஆறு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும், நீசம் பெற்று இருந்தாலும்

சாதகன், தாய், தந்தை இருவருக்கும் வெறுப்புடன் பற்றாசையும் இல்லாத கடின மனதுடைய மைந்தனாக இருப்பான் என்பதனைக் காண்பீர்.

அருஞ்சொற்பொருள்

பிதுர் - தந்தை, இறைவர் - அந்தந்த ராசிகளுக்குரிய கிரகங்கள், காரி - சனி, வியம் 12 ஆம் இடம், உறவே - சேர்ந்து இருக்கின், கசந்தே - வெறுப்படைந்தே, மைந்தன் - மகன்.

தாய், தந்தை இருவரும் வெறுப்படைந்து, பிரியமில்லாது உள்ள மகன் என்றும், தாய் தந்தையரை வெறுத்து அவர்களிடம் பிரியம் வைக்காத கடின மனதுடைய மகன் என்றும் பொருள் கொள்ளும்படியாக பாடலில் சொற்களின் நிலைகள் உள்ளன.

தாய் தந்தை இருவருக்கும் அரிட்டம்

கண்ட அன்னை பிதுர் தானக்கடவுள் இசைந்து எங்கே உறினும்
மண்டும் இரவி மதிகூடி மாதா தந்தை தானத்தில்
அண்டியிருக்கின் பிதாவுடனே அன்னைக்கு எய்தும் அனுமரணம்
பண்டுநான்கு ஒன்பதுக்கு இறைவர் பலத்தால் பாலன் பரிவு சொல்வாம்.32

தொகுப்புரை:

அன்னை தந்தை ஸ்தானாதிபதிகள் வேறு எங்கே இருந்தாலும், சூரியனும், சந்திரனும் கூடி மாதா பிதா ஸ்தானங்களில் இருந்தாலும், மாதா பிதா இருவரும் மரணமடைவார்கள். தந்தையுடனே அன்னைக்கும் மரணம் ஏற்படும் என்பர்.

இனி நான்கு ஒன்பதாம் இடங்களில் கிரகங்களின் பலாபலத்தினைக் கொண்டு சாதகனுடைய நிலைகளைச் சொல்லுவோம்.

அருஞ்சொற்பொருள்

பிதுர் - தந்தை, தானக்கடவுள் - அந்த ராசியிடத்துக்கு உரிய கிரகம், இசைந்து - ஒன்றாகச் சேர்ந்து, இரவி - சூரியன், அனு - நெருக்கமான காலத்தில், நான்கு - நான்காமிடம் மாதுர் ஸ்தானம், ஒன்பது - பிதுர் தந்தை ஸ்தானம். பாலன் - சாதகன், பரிவு - பற்றிய செய்திகள்.

தந்தை தாய் மகன் மகிழ்ந்திருப்பர்

சொல்லும்நான்கு ஒன்பதுக்கு இறைவர் தொடர்ந்து தன பாக்கியலாபத்தில்
அல்லல் அறவே இருதாலும் அடைவே உச்சம் கேந்திரத்தும்
வெல்லும் திரிகோணங்களிலும் மேவில் தந்தை தாய் மைந்தர்
எல்லை யில்லாச் சந்தோஷம் எய்தி இருப்பார் எனப்பாரே. 33

தொகுப்புரை:

சொல்லப்படுகின்ற நான்காமிடம் ஒன்பதாமிடம் ஒன்பதாமிடம் இரண்டு ராசிகளுக்கும் உரிய கிரகங்கள்

தொடர்ந்தாற்போல் 2, 9, 11 ஆம் இடங்களாகிய தனம் பாக்கியம் லாபம் ஆகிய ஸ்தானங்களில், குறைவு பெறாமல் இருந்தாலும்

உச்சம் கேந்திரம் திரிகோணம் ஆகிய இடங்களில் இருந்தாலும்

தந்தை தாய் மகன் ஆகியோர் அளவில்லாத மகிழ்ச்சியினை அடைந்து வாழ்ந்திருப்பார்கள் என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

இறைவர் - ராசி இடங்களுக்குரிய கிரகங்கள் தனம் - இரண்டாமிடம், அல்லல் அறவே - துன்பமில்லாமல் குறைவில்லாமல், அடைவே - வரிசை பெற, மேவில் - சென்றிருந்தால், எய்தியிருப்பர் - அடைந்திருப்பர்.

தாய்க்கு அரிட்ட காலம்

மூன்றாம் அதிபதியும் மூரிச் சனியுடனே
தோன்றியைந் தாமிடத்தில் சூழ்ந்திடினும் - ஆன்ற கதிர்
ஆறைந்து நாலிடத்து உற்றா லவன்தாய் போம்
கூறைந்தாம் ஆண்டில் குறித்து. 34

தொகுப்புரை:

மூன்றாம் இடத்துக்குரிய கிரகம் சனியுடன் கூடி ஐந்தாமிடத்தில் இருக்கவும்.

சூரியன், சென்மராசிக்கு ஆறு, ஐந்து நான்கு ஆகிய இடங்களிலொன்றில் இருந்தாலும்,

சாதகன் பிறந்த காலத்திலிருந்து ஐந்தாவது ஆண்டில் தாய்க்கு அரிட்டம் நேரும் என்று குறித்துக் கூறுவர்.

பிரசவித்துத் தாய் மரிப்பாள்

என்பார் ஒன்பான் அதிபதி இனிய பலமிலனாய் சன்மாதி
முன்பா நான்காமாதிபதி மூவர் பலன்கள் அற்றிருக்க
அன்பாய் ஈன்றதாய் உதரத்து அணுகும் கர்ப்பத் தந்நாளில்
வன்பாய் வருந்தி மரிப்பளென வகுத்தார் கருதி வல்லோரே. 35

தொகுப்புரை:

சென்மத்திற்கு ஒன்பதாம் அதிபதி வலிமையன்றி இருக்கவும், சன்மராசிக்கு உரிய கிரகமும், மாதுர் ஸ்தானமாகிய நான்காம் இடத்திற்குரிய கிரகமும்

ஆகிய மூன்று கிரகங்களும் பலமற்றிருப்பார்களே யானால், சாதகனின் தாயானவள் அவனைக் கர்ப்பத்திலிருந்து பிரசவித்த நாளிலேயே கொடிய வலியால் வருந்தி இறந்து போவாள்.

என்று சோதிட சாத்திரத்தில் வல்லவர்கள் இன்னதற்கு இது பலன் என்று வகுத்துக் கூறியுள்ளார்கள்.

அருஞ்சொற்பொருள்

இனிய பலமிலனாய் - நல்ல பலன் பெறாமல், ஈன்றதாய் - பிரசவித்த தாய், வன்பாய் - மிகவும் கடுமையாக, சுருதி - சோதிட சாத்திரங்கள்.

சுவடியிலுள்ள வசனக்குறிப்பு, மாதுர் தானாதிபதி உச்சமாய் இருந்தாலும், மாதாவுக்கு அற்ப ஆயுசு. பதிமூன்றாம் பாட்டு நிரியாணம்.

மாதா பிதா உடன்கூட்டை ஏழுவர்

இந்து சேய் ஆறாமாதி இவர்களும் கூடி நான்கில்
வந்துதான் இருக்க, ஈன்ற மாதாவும் சோரம் போவாள்
அந்த நான்கு ஒன்பது ஒன்றின் அதிபர்கள் கோணம் கூடி
நந்து கேந்திரத்தின் மேவ, மாதாவுடனே தந்தையுடன் மரணம். 36

தொகுப்புரை:

சந்திரன் செவ்வாய் ஆறுக்குடையவன் ஆகிய மூவரும் கூடி நான்காமிடத்தில் வந்திருந்தால் தாய் சோரம் போவாள்.

நான்கு ஒன்பது சென்மம் இவற்றிற்குரிய அதிபர்கள் ஒன்றாகச் சேர்ந்து திரிகோணத்திலோ, கேந்திரத்திலோ இருந்தால் தாய் தந்தையுடன் மரிப்பாள் என்பர்.

அருஞ்சொற்பொருள்

இந்து - சந்திரன், சேய் - செவ்வாய், ஈன்ற மாதா - பெற்ற தாய், கோணம் - திரிகோணராசிகள்.

மாதுருத்தான பலன் முற்றும்.

வாழும் மனையைப் பற்றிய பலன்கள்

மனை - மாடக்கூடமனை - உண்டாகும்.

பத்து நான்காதிபன் செவ்வாய் ஆறு எட்டில் பன்னிரண்டில்
உத்த நீசத்தானத்தில் உறில் ஒரு பங்கு மனையும் இல்லான்
மற்றிவர் பெலவானாகில் மனை பங்கு லாபம் உண்டாம்
பெற்ற நாலதிபன் உச்சம் பெறில் மாடக்கூடம் உண்டாம். 37

தொகுப்புரை:

பத்தாமிடத்தோனுடன் நான்காமிடத்ததிபன் செவ்வாயுடன் கூடி, ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தீய இடங்களில் (நீச்சம் பெறும் இடத்தில்) இருப்பார்களாயின் சாதகனுக்கு வாழும் மனையில், ஒரு பங்குகூட கிடைக்காது.

மற்றும் மேலேகண்ட மூன்று கிரகங்களும் பலம் பெறும் ஸ்தானங்களில் இருப்பார்களாயின், மனையில் பங்கும் பிறமுறையில் லாபங்களும் ஏற்படும்.

இவ்வாறமைந்த நாலாமிடத்தோன் உச்சனாக ஆகியிருந்தால் மனையை, மாடக்கூடங்களுடன் வெகுவாகக் கட்டி வாழ்வான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

ஆறு, எட்டு, பன்னிரண்டு - 6, 8, 12 ஆகிய ஸ்தானங்கள் பொதுவாக தீய பலன்களைத் தரும் இடங்களாக அமையும், உறில் - அடைந்திருந்தால், மற்றிவர் - பத்து நான்காம் இடத்தோனும் செவ்வாயும், மாடக்கூடம் - மாடங்களும் கூடங்களுமாக அமைந்த பெரிய வீடு.

பங்கு பேராசையால் மனை பாழாம்

கூடமாளிகை சிங்காரம் கொடுப்பான் நான்கதிபன் நான்கில்
நீடி வாழ்ந்திட அன்னோனை நெருங்கி நின்றவர்கள் தாமே
நாடும் நல்லோர்களாயின் நன்மனை, பாவராயின்
ஊடியே வீடுபாழாய்க் கிடக்குமென்று உரைவழங்கும் 38

தொகுப்புரை:

மனையைப் பற்றிய விபரங்களைத் தரும் செவ்வலக்கினத்திற்கு நான்காமாதிபதி, அதே நான்காமிடத்தில் சுபனாக இருக்க, அவரை நெருங்கியிருந்த கிரகங்கள் சுபகிரகங்களாக அமைந்தால் மாடமாளிகையில் நெடுங்காலம் வாழும் நற்பயனைப் பெறுவான்.

கூடியிருந்தவர்கள் பாவர்களாயினும், பாபகிரகங்கள் பார்த்தாலும், மனையில் வாழ்பவர்கள் பேராசையால் மன ஒற்றுமையில்லாமல் கலகம் உண்டாகி, குடியில்லாத வெறும் மனையாய் பாழாகிக் கிடக்கும் என்று சொல்லப்படும்.

அருஞ்சொற்பொருள்

சிங்காரம் - நவீன ஒப்பனைகள், நீடி வாழ்ந்திட - நீண்ட காலம் வாழ்ந்திட. அன்னோனை - அந்த நான்காமிடத்தோனை, நன்மனை - நல்லவீடாக அமையும், ஊடியே - ஒற்றுமை இல்லாமல் பகையாகி.

நான்கிற்குடைய கிரகம் நான்கிலிருக்க அழகான பெரியமனை அமையும். அந்த நான்கோனைச் சுபர் பார்க்க அல்லது கூட நல்ல பெரிய மனை அமையும், பாவர்கள் பார்த்தாலோ கூடினாலோ அந்தமனை பாழாகும். சுவடியிலுள்ள வசனம் : நான்காம் அதிபதியுடனும் நான்காம் இடத்திலும் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தனவோ அத்தனை இடங்களில் வீடு கட்டுவான். நல்லோர்கள் எத்தனையோ அத்தனை வீடுகள் நன்றாக இருக்கும். பாவிகள் எத்தனை பேரோ அத்தனை வீடுகள் பாழாகிப்போகும்.

பங்கு மனை பறிபோகும்.

வழங்கு நான்காமதிபதியும் வளர்சத்துரு நீசத்திலுற
ஒழுங்கும் வியத்தாதிபன்தனத்திலுற, சென்மாதி செங்கதிரும்
முழங்கு நாலாதிபன்கூட, நல்லோர் நோக்கமுறாதிருக்க
தழங்கும் பங்கு மனைகளெல்லாம் தானும் பறிபோம் தப்பாதே. 39

தொகுப்புரை:

நான்காமாதிபதி பகை வீட்டிலோ அல்லது நீசம் பெறும் ஸ்தானத்திலோ இருக்கவும்.

விரையத்தானமாகிய பன்னிரண்டுக்குடையவன் தனத்தானமாகிய ஒன்பதாமிடத்திலும்

சென்ம லக்கினாதிபதி சூரியன் ஆகியோர் நாலாம் அதிபனுடன் கூடியிருக்கவும், இவர்களை சுபகிரகங்கள் பாராதிருக்கவும் பிறந்தவனுடைய பங்காகும் மனைகளெல்லாம் பிறர் பற்றிக்கொள்ளப்பறிபோகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

வளர் சத்துரு - நிலைத்த பகை கிரகம், வியத்தாதிபன் - பன்னிரண்டாம் இடத்துக்குரிய கிரகம், செங்கதிர் - சூரியன், பங்குமனை - பங்காகப் பெறவேண்டிய மனைகள். பறிபோம் -பிறருக்குப் பறிபோகும்.

பங்காளி பங்கு மனையும் - சேரும்

தப்பாது ஆறாமதிபதியும் தான் பத்து ஏழில் இருந்திடவே
ஒப்பாம் சென்மந்தனில் செவ்வாய் உறையச் சுபகோளுறப் பார்க்க
இப்பார் தன்னில் சத்துருவாய் யிருப்பார் பங்கு உள்ளதெல்லாம்.
செப்பார் முலையாய், அவன் தனக்கு சேரும் திண்ணம் திறனாலே. 40

தொகுப்புரை:

ஆறுக்குடையான் பத்தாமிடம் அல்லது ஏழாமிடம் இவற்றிலொன்றில் இருக்கவும்,

சென்மலக்கினத்தில் செவ்வாய் இருக்கவும், அவனை சுபகிரகங்கள் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும்

பங்காளி அல்லது பகையாய் இருக்கும் உறவினர்க்கு உள்ள பேங்கான மனை பூமி எல்லாம்

செப்பு போன்ற தனத்தினை உடைய பெண்ணே!

சாதகன் தனக்கு தப்பாது உண்மையாக, திண்ணமாகவே வந்துசேரும்.

அருஞ்சொற்பொருள்

தப்பாது - பொய்யாகாது, உறைய - இருக்க, இப்பார் - இந்த உலகில், சத்துரு - பகைவர், அவர் தனக்கு - சாதகனுக்கு, திண்ணம் - உறுதியானது.

வீடுகள் கட்டி இழந்திடுவான்

நாலாம் இடத்தின் அதிபனும் லக்கினாதியுடன் வடி
மேலாய் நாலிலுறில் நல்லொருவன் வீட்டிலிருந்து மிக வாழ்வான்
சேலால் நாலாமதிபனுடன் சேரும் பாவர் எத்தனையோ
மாலாய், கேளத்தனை வீடு கட்டிச் சேதம் வழங்குவனே. 41

தொகுப்புரை:

மயக்கும் அழகுடைய பெண்ணே கேள்! மனையைப் பற்றி அறியப்பெறும் நான்காம் இடத்தின் அதிபன் லக்கினாதிபதியுடன் சேர்ந்து இருந்தால்

சாதகன், நல்லவனொருவன் வீட்டிலிருந்து சுகவாழ்வுடன் இருப்பான், மற்றும்

நாலாமிடத்தோனுடன் சேர்ந்துள்ள பாவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை வீடுகளைக் கட்டி, பின்னர் பிறருக்கு வழங்கி விடுவான். விரையம் செய்திடுவான்.

அருஞ்சொற்பொருள்

அதிபன் - இடத்திற்குரிய ராசிநாதன், நல்லொருவன் - நல்லவன் ஒருவன், மாலாய் கேள் - பெண்ணைப் பார்த்துச் சொல்லும் பெண்பால் விளி, வீடு - மனை வீடுகள், சேதம் - விரையம்.

பூர்வீக மனைப் பங்கு இல்லை

வழங்கும் லக்கினமன் பலனின்றியே
முழங்கும் ஆறில் முன்னாலில் உறைந்திடில்
தழங்கும் சன்மத்தனைப் பாவர் கண்டிடில்
பழங்குவாழ் மனைப் பங்கும் இல்லான் என்னே!

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதி, பலமில்லாமல் ஆறாமிடத்திலோ பன்னிரண்டாமிடத்திலோ இருக்கவும்.

சன்ம லக்கினத்தைப் பாவகிரகங்கள் பார்க்கவும் அமைந்திருந்தால்,

பூர்வீகமான மனையில் எத்தகைய பங்கும் இவனுக்கு இல்லை என்று திட்டமாகக் கூறு

அருஞ்சொற்பொருள்

லக்கினமன் - லக்கினராசிக்கு உரிய கிரகம், முன்னாலில் - 3 × 4 = 12. பன்னிரண்டில், உறைந்திடில் - இருந்தால், பழங்கு வாழ் மனை - முன்னோர்கள் தேடிவைத்து வாழ்ந்திருந்த மனையில், பங்கு - பங்குபாகம்

லக்கினாதிபதி பலமில்லாமல் ஆறு பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் இருக்க, சன்மலக்கினத்தைப் பாவர் பார்த்தால் பூர்வீக மனையில் பங்கில்லாதவனாவான்.

பல வீடுகள் கட்டி வாழும் சமர்த்தன்

பங்கமில் வியத்தின் மன்னன் பரிந்து இரண்டாமிடத்தில்
தங்க, நல்வீடு கட்டிச் சகல பாக்கியமும் சேர்ப்பன்
இங்கித வியத்தோன் தன்னோடு எத்தனை கிரகம் கூடியதோ
சங்கம அத்தனை வீடு கட்டுவன் சமர்த்தன் தானே. 43

தொகுப்புரை:

பன்னிரண்டாமிடத்திற்குரிய கிரகம், விரும்பி இரண்டாமிடத்தில் குறையின்றி தங்கியிருந்தால், நல்ல அமைப்புடன் வீடுகட்டிச் சகல பாக்கியமும் சேர்ப்பான்.

அதே வியத்தானத்திற்குரியவனோடு எத்தனை கிரகங்கள் கூடி இருக்கின்றதோ கூடிய அத்தனை எண்ணிக்கையில் நல்ல வீடுகளைக் கட்டும் சாமார்த்தியனாவான்.

அருஞ்சொற்பொருள்

பங்கமில் - குறைபெறாத, மன்னன் - ராசி நாதன், இங்கிதம் - குறிப்பமைந்த தன்மை, வியத்தோன் 12ஆம் இடத்தோன்.

பங்கமில் வியத்தில் மன்னன் பரிந்து இரண்டாமிடத்தில் என்ற தொடருக்கு மேலே கண்ட பொருளல்லாது

குறையில்லாமல், பன்னிரண்டாம் இடத்திற்குரிய கிரகம் குருவாக, அவர் இரண்டாமிடத்தில் தங்கி இருந்தால் என்றும் அமைத்துக்கொண்டு பொருள் கூறுவதுண்டு மன்னன் - அரசன், வேந்தன், குரு.

வாழும் தேசநிலை இப்படியெனல்

தானமாம் சென்மவீடு சரமெனில் பரதேசத்தில்
ஆனதோர் ஸ்திரமாயின் அமருவன் தன் தேசத்தில்
ஈனமிலா உபயமாயின் பரதேசத்திடையில் பாதி
ஊனமில் சுதேசம் தன்னில் பாதிநாள் உறைவன் கண்டீர்! 44

தொகுப்புரை:

இராசிகளின் அம்சத்தில் முக்கிய இடமாகக் கருதப்படும் சென்மலக்கின வீடு சரமாக இருந்தால் வெளிதேசத்தில் வாழ்பவனாவான்.

சென்ம லக்கினம் ஸ்திரராசியானால் தன் தேசத்தில் பாதிநாளும், தனது தேசத்தில் பாதிநாளும் வாழ்பவன் என்பதனைக் கண்டுணர்ந்து சொல்வீர்.

அருஞ்சொற்பொருள்

தானமாம் - முக்கிய ஸ்தானமாம், பரதேசம் வெளிநாடு, உறைவன் - வாழ்ந்திருப்பன்

சென்ம லக்கினம் சரராசியானால் வெளிநாட்டிலும் ஸ்திரமானால் தனது நாட்டிலும் உபயமானால் அங்கும் இங்கும் வாழ்பவனாவான்.

வாழும் மனையிடம் அறிதல்

கண்ட பன்னிரண்டாம் வீடு கருதும் நல்லோர் வீடாயின்
திண்டிறல் நகரந்தன்னைத் தேர்ந்து அருகுற இருப்பன்
பண்டு சூத்திரர் தம் வீடாய் லாபாதிக்கு உறவுமாயின்
மண்டு சூத்திரர் இருக்கும் மனைக்கு அருகிருந்து வாழ்வன். 45

தொகுப்புரை:

இலக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீடு, சுபகிரகங்களின் வீடானால், பெரிய நகரத்தில் நன்முறையில் சிறந்த மனையில் வாழ்வான்.

அந்த பன்னிரண்டாம் வீடு சூத்திர கிரகத்தின் வீடாக இருக்கவும் அந்த வீட்டின் கிரகம் லாபாதிபதிக்கு உறவாக இருக்கவும் அமைந்தால் சூத்திரர் மனைக்கு அருகில் வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

நல்லோர் - சந்திரன், புதன், குரு, சுக்கிரன், திண்டிறல் நகரம் - பெரிய நகரகம், சூத்திரர் வீடு - சூத்திர கிரகத்தின் வீடு, லாபாதிபதி - 11ஆம் இடத்ததிபதி

கிரகசாதி பிராமண சாதி - குரு, சுக்கிரன் (சந்திரன்) சத்திரிய சாதி - சூரியன், செவ்வாய், வணிக சாதி - சந்திரன், புதன், சூத்திர சாதி - சனி, (சுக்கிரன்) தாழ்ந்த சாதி - இராகு, கேது.

அவரவர்க்கு உரிய மனை அமையும்

இருந்த பன்னிரண்டாமாதி ஈன்றதாய் துணைவர் தந்தை
பொருந்திய மனைவி மக்கள் தானத்தில் போய் நின்றாலும்
திருந்தும் அத்தானத்தாதி தன்னுடன் சேர்ந்துற்றாலும்
அருந்துணையான் வீடும் அவரவர் தமக்கேயாகும். 46

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடத்திற்குரிய கிரகம், 4, 3, 9, 7, 5 ஆகிய தானங்களிலொன்றில் சேர்ந்திருந்தாலும்

அன்றி, அந்த ராசி நாதனுடன் சேர்ந்தாலும் தன்னுடைய சகோதரர் வீடு முதலின அவரவர்களுக்குரிய வீடேயாகும்.

அருஞ்சொற்பொருள்

துணைவர் - சகோதரர், அத்தானத்தாதி 12ஆம் இடத்தோன் நின்ற ராசிக்குரியவன்

விளக்கம்:

சென்ம லக்கினத்திற்கு - நான்காமிடம் தாய்ஸ்தானம், மூன்றாமிடம் - சகோதரஸ்தானம், ஒன்பதாமிடம் தந்தைஸ்தானம், ஏழாமிடம்- மனைவி ஸ்தானம், ஐந்தாமிடம் - புத்திரஸ்தானம்.

சூரியன்	- தந்தைக்காரகன்	- சிம்மராசி
சந்திரன்	- தாய்க்காரகன்	- கடகராசி

மற்றும் நான்காமிடத்திலுள்ள கிரகத்தினையும், அந்த நான்காமிடத்தோன் உள்ள ராசி இடத்தினையும் அவர்களைப் பார்க்கும் கிரகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தே, சாதகனுடைய அனுபவத்திற்கான பிறப்பின் சுகானுபவங்களின் ஏற்றத்தாழ்வுகளை அறிந்து கூறலாகும்.

ஐந்தாம் இடம் - பலன்கள்

புதல்வர், மனம், புத்தி, மானம், மாமன், பாட்டி, பூர்வ புண்ணியம்

மாமன் பாட்டிக்கு - அரிட்டம்

ஐந்திற்கு ஐந்தில் கார் மதியம் அங்காரகனோடு இரவியுறில்
துஞ்சும் மாமன், சுபர் நோக்கில் துன்பமில்லை பூசத்தில்
விஞ்சும் பாதம் நடுவிரண்டில் அன்னைக்கு அன்னை வியமாகும்
வஞ்சிப் பிழைக்கில் நோய் அரிட்டம் மாமன் தனக்கே வரும் கண்டீர்.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஐந்தாமிடமாகிய பூர்வ புண்ணியஸ்தானத்திற்கு ஐந்தாமிடத்தில்

சனி, சந்திரன், செவ்வாய் இவர்களோடு சூரியனும் சேர்ந்திருந்தால், மாமன் இறப்பான்.

சுப கிரகங்கள் அவர்களைப் பார்த்தால் எத்தகைய துன்பங்களும் இல்லை எனலாம்.

சாதகன் பிறந்தது பூச நட்சத்திரத்தில் நடுவிரண்டு பாதமானால் (2, 3) தாய்க்குத் தாய் (பாட்டியார்) இறப்பாள்.

சுபகிரகங்களின் சேர்க்கையோ, பார்வையோ ஏற்பட்டிருந்தால், அவள் பிழைத்திருப்பாள் ஆயினும் நோயாளியாகவே இருப்பாள்.

அவள் பிழைக்கில் (பாட்டியார்) மாமனுக்கே அரிட்டமுண்டாகும் - என்பதைக் காண்பீராக.

அருஞ்சொற்பொருள்

காரி - சனி, மதியம் - சந்திரன், இரவி - சூரியன், துஞ்சும் - இறப்பான், வியமாகும் - அரிட்டமாவாள், வஞ்சி - பாட்டியார், ஐந்திற்கு ஐந்தில் - பத்தாமிடத்தில்

நல்ல பிள்ளைகளைப் பெறுவர்

மருவும் சென்மலக்கினத்தில் வாழும் சென்மாதிபனோடு
அருளும் ஐந்தாமிடத்தில் அதிபன் அணுகில் பார்க்கில் அன்புடனே
ஒருவர் தமது பதியினில் மற்றொருவர் மாறாகவும் நிற்கில்
பெருமைப் புதல்வர் தமைப் பெறுவர், பிறந்தால் நமனுக்கு அஞ்சாரே. 2

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் இருக்கும் சென்மாதிபதியோடு, ஐந்தாமிடத்துக்குரிய கிரகம் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும்,

மற்றும் ஒருவருக்கு ஒருவர் பரிவர்த்தனையாக மாறி நின்றாலும்

பெருமை தரும்படியான பிள்ளைகள் பிறப்பார்கள். அப்படிப் பிறந்தவர்கள் எமனுக்கு அஞ்சார்கள்.

அருஞ்சொற்பொருள்

மருவும் - பொருந்தும், அணுகில் - சேர்ந்தால், மாறாக - ஒருவர் ராசியில் மற்றொருவர் மாறாக, பெருமைப் புதல்வர் - பெற்றதால் பெருமை தரும் பிள்ளைகள், நமன் - எமன், அஞ்சார் - அஞ்ச மாட்டார்கள்.

அன்னை முதல் அனைவர் தோஷம் - காணல்

ஐந்தாம் இடத்திலும் அவரால் தோஷம்
அணுகும்வகை, சனி குழவிக்கு, அருக்கன் தந்தைக்கே
துஞ்சாத மதிக்கு அன்னை, புதனால் அன்னை
சுற்றமதற்க, அரசனால் தந்தை சுற்றமாகும்
நஞ்சாரும் கரியகோள் சுதற்கு, செவ்வாய்
நண்ணிடில் அம்மானுக்கு தோஷமாகும்
மஞ்சாரும் குழல்மடவாய்! அரசன் ஐந்தில் வந்திடில்
சந்தானம் மத்திபமுதிக்கும் தானே.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் இருக்கும் கிரகத்தினால் தோஷம் வருவது யார்யாருக்கு என்றால்

சனி ஐந்தாமிடத்தில் இருந்தால் குழந்தைக்கும், சூரியனிருந்தால் தந்தைக்கும், சந்திரனிருந்தால், தாய்க்கும், புதன் இருந்தால் தாய் வர்க்கத்தாருக்கும், குரு இருந்தால் தந்தை வர்க்கத்தாருக்கும், ராகு இருந்தால் பிள்ளைகட்கும், செவ்வாய் இருந்தால் மாமனுக்கும், தோஷமாகும் துன்பங்கள் உண்டாகும்.

இவையல்லாமல், கருமேகத்தினைப் போன்ற கூந்தலை உடைய பெண்ணே!

குரு ஐந்தாமிடத்தில் இருந்தால் சந்தானம் என்னும் புத்திரபாக்கியம் அற்பமாகும்.

அருஞ்சொற்பொருள்

தோஷம் - தீங்கு தரும் தோஷம், குழவி - குழந்தை, அருக்கன் - சூரியன், கரிய கோள் - ராகு, சுதற்கு - பிள்ளைக்கு, அம்மான் - மாமன், அரசன் - குரு, சந்தானம் - பிள்ளை பாக்கியம்.

புத்திரர் - அற்பம் - இல்லை

உதிக்கும் ஒன்று ஐந்தாமாதி உற்ற ஒன்று ஐந்தில் உறாமல்
மதித்தோர் நோக்கமின்றேல் மகவில்லை, சுபர் அங்கிசத்தில்
பதித்துறில் மகவுண்டாம், பயில் ஐந்தாமதிபன் மூன்றில்
விதித்திடும் படியே நிற்கின் மேவு பத்திரர் அற்பம். 4

தொகுப்புரை:

சென்ம லக்கினம் ஐந்தாமிடத்துக்குரியவன் ஆகிய இருவரும், அவரவரின் சொந்த ஸ்தானங்களில் இல்லாமலும்,

அந்த ராசிகளைச் சுபர் பாராமலும் இருந்தால் பிள்ளை பாக்கியம் இல்லை எனலாம்.

அவர்கள் இருவரும் சுப கிரகங்களின் அங்கிசத்தில் இருந்தால் புத்திரர்கள் உண்டாகும்.

ஐந்தாமிடத்துக்குரிய கிரகம் மூன்றாம் இடத்தில் இருந்தால் புத்திரர் அற்பமாகும்.

அருஞ்சொற்பொருள்

உதிக்கும் - சென்ம லக்கினமாகத் தோன்றும், உற்ற - அவரவர்க்குரிய, உறாமல் - இல்லாமல், பதித்து உறில் - நிலையாக இருந்தால், மகவு - பிள்ளை விதித்திடும் படியே - சென்ன காலக் கணிப்பில் கிரகங்களை ராசியில் விதித்திடும்படியே.

புத்திரப்பேறு உண்டு இல்லை - என்றதால்

புத்ரத்தானத்தாதி ஏகனாகி புதன் வீட்டில் இருக்கில் புத்திரர்தான் இல்லை
பத்தியுடன் சுபர்கூடில் பிறந்து சாகும், பாவருடன் கூடில் பாலரில்லை
ஒத்தை கும்பரிடபத்தானுக்கேஉறுதலையில்லைஎன்றேஉரைப்பார் பின்னும்
சத்தமம் உச்சம் நீசம் மண்டில் மூத்தாள் தனக்கில்லை குழவி
அங்கிசத்திலுண்டாம் 5

தொகுப்புரை:

புத்திரத்தானத்தாதியான ஐந்தாமிடத்ததிபன் தனியாக புதன் வீட்டில் இருந்தால் புத்திரப்பேறு இல்லை.

அவருடன் சுபர் கூடியிருந்தால் பிள்ளை பிறந்து இறந்து போகும்.

அவருடன் பாபகிரகங்கள் கூடியிருந்தால் பிள்ளைபாக்கியம் இல்லை

ரிஷபம் கும்பம் ஆகிய ஸ்தானங்களில் புத்திரத்தானத்தாதி இருப்பினும் பிள்ளை இல்லை என்பர்.

ஏழாமிடம் உச்சமாகவோ நீசமாகவோ அமைந்தால் மூத்தாளுக்கு குழந்தை இல்லை. சுபர் அங்கிசத்தில் பிள்ளை உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

புத்திரத்தானத்தாதி - ஐந்தாமிடத்தோன், ஏகனாகி தனியாக, மண்டில் - சேர்ந்தால், குழவி - குழந்தை.

இதுவும் அதுவே

புத்திரத்தாதி ஏகனாய் புதன் வீடேறில்
புத்திரர் இல்லை நல்லோர் கூடிடிற் பிறந்து சாவர்
ஒத்திடு பாபர் சேரின் மகவில்லை, எருது கும்பம்
வித்தகை ஓரையார்க்கு மகவில்லை விளம்புங்காலே. 6

தொகுப்புரை:

புத்திரத்தானத்தாதி ஏகனாய் புதன் வீட்டில் இருந்தாலும் புத்திரர் இல்லை.

நல்லோர் சேர்ந்தாலும் பிறந்து சாவார்கள்.

பாவர் சேரினும் பிள்ளை இல்லை. ரிஷபம், கும்பம், ஆகிய ஓரையோர்க்கும் புத்திரர் உண்டாவதில்லை என்பர்.

அருஞ்சொற்பொருள்

ஏகனாய் - தனியனாக, எருது - ரிஷபராசி, விளம்புங்கால் - ஆராய்ந்து சொல்லும் போது.

மூத்தாளுக்கில்லை, இளையாளுக்குண்டு

விளம்பும்ஏழாமிடத்தோன் மேவு உச்ச நீசமின்றிக்
களங்கமில்லாதிருக்கின் கருது மூத்தாளுக் கில்லை
இளங்கொடியாளுக்கு உண்டாம், ஏழுளோன் உச்ச நீசம்
வளம் பெரும் அங்கிசத்தின் மருவிடின் மகவுண்டாமே. 7

தொகுப்புரை:

ஏழாமாதிபதி உச்ச நீசங்கள் இல்லாமல் இருந்தால் மூத்தாளுக்குப் புத்திரர் இல்லை. இளையாளுக்குப் புத்திரர் உண்டு.

ஏழாமிடத்தோன் உச்ச நீச அங்கிசத்திலிருந்தால் பிள்ளைப் பேறு உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

களங்கமில்லாமல் - குற்றமில்லாமல், கருது - மூத்தாள் - சொல்லப்படும். மூத்த மனைவி, இளங்கொடியாள் - இளைய மனைவி, ஏழுளோன் - ஏழாமிடத்திலுள்ள கிரகம், மகவு - குழந்தை.

தந்தை மகன் - பகையுண்டாம்

ஐந்தாமிடத்தில் செங்கதிரோன் அரவு கூடித் தனித்திருக்கின்
மஞ்சார் குழலீர்! தந்தைக்கும் மகனுக்கும் வகை பகையே
செஞ்சாலிகளும் திரவியமும் சேதமுண்டாம் திறமையுடன்
துஞ்சாதிருந்த தலங்கள் விட்டுத் தூரப் போவது இலக்கணமே. 8

தொகுப்புரை:

கருமேகம் போன்ற கூந்தலை உடைய பெண்ணே!

ஐந்தாமிடத்தில் சூரியன் இருக்க, அவனுடன் ராகு அல்லது கேது கூடி இருந்தால் தகப்பனுக்கும் மகனுக்கும் பகை உண்டாகும்.

அதனால் நெல் முதலான தானியங்களும் திரவியமும் சேதமுண்டாகும்.

தந்தையும் மகனும் பகைமை இல்லாமலிருந்தாலும், இருந்த இடம் விட்டுப் பிரிந்து தூரமான இடத்தில் போய் வாழ்வது அமைப்பானதாக இருக்கும்.

அருஞ்சொற்பொருள்

செங்கதிர் - சூரியன், அரவு - ராகு, கேது, மஞ்சு - மேகம், வகை பகை - பலவகையில் பகை, செஞ்சாலி - நெல், தூரம் - வெகு தொலைவான இடம், இலக்கணம் - பொருத்தமான முறைமை.

தந்தைக்குப் பின் மைந்தர்

லக்கினாதிபதிக்கு நாலாதிபன்
நோக்க நல்லுளவாகவும் தானுறின்
தக்க தந்தை தனக்குப் பின்மைந்தர்கள்
மிக்க பூமியில் மேவுவர் காணுமே. 9

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதிக்கு நான்காமிடத்தோன் லக்கினாதிபதியை நோக்கினும் அல்லது நட்புறவாக இருப்பினும்.

தந்தையானவனுக்குப் பின்வாரிசாக உரிய பிள்ளைகள் பூமியில் இருப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்

நாலாதிபன் - லக்கினாதிபதி எங்கு இருக்கின்றானோ அந்த ராசிக்கு நான்காவது இடத்துக்கு உரியவன்.

நல்லுறவு - நல்ல நட்பு, மேவுவர் - அமைந்திருப் பார்கள்.

ஆண் பெண் பிள்ளைகள் இல்லை

காணும் இலக்கினத்தில் செவ்வாய் தனக்கு ஏழில் காரி பின்னும்
கோணு முந்நான்கில் வெய்யோன் இப்படிக் குலவி நின்றால்
ஆணுடன் பெண்ணுமில்லை அஞ்சாதி பாவனாய் ஏழில்
பூண் ஏழோன் பாவியாய் ஐந்திலுற்றிடில் புதல்வரில்லை. 10

தொகுப்புரை:

லக்கினத்தில் செவ்வாயும், அவனுக்கு ஏழாமிடத்தில் சனியும், பன்னிரண்டாமிடத்தில் சூரியனும் இருந்தால், ஆண் பெண் ஆகிய புத்திரர் இல்லை.

ஐந்தாமிடத்துக் குரியவன் பாவியாய் ஏழாமிடத்திலிருக்கவும் ஏழாமிடத்தோன் பாவியாய் ஐந்தாமிடத்திலும் மாறி இருந்தாலும் புதல்வர் இல்லை.

அருஞ்சொற்பொருள்

ஏழில் - ஏழாமிடத்தில், காரி - சனி, முந்நான்கில் - பன்னிரண்டாமிடத்தில், வெய்யோன் - சூரியன்.

கிரக அமைப்பு - தொகைப்படி பிள்ளைகள்

புத்திரத்தானத்தாதி பொருந்து அங்கிசையைத் தொட்டு
மெய்த்து லக்கினம் மட்டுமெண்ணி மேவியே கண்ட லக்கம்
எத்தனையோ தானம் அந்தத் தொகைப்படி இனியமைந்தர்
சித்தமாய் பெறுவரென்றே தெரிந்தவர் உரைசெய்வாரே. 11

தொகுப்புரை:

புத்திரத்தானாதிபதியாகிய ஐந்தாமிடத்தோன், பொருந்தியுள்ள அங்கிசைத்தானம் முதலாக, சென்ம

லக்கினம் வரையில் எண்ணிக் கண்ட தொகை எத்தனையோ, அத்தனைப் பிள்ளைகளைப் பெறுவர் என்று சோதிட நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் அறிந்து கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

அங்கிசை - சேர்ந்துள்ள இடம், லக்கம் - இலக்கம், தொகை, சித்தமாய் - உண்மையாக, திட்டமாக.

அலி யோகங்கள்

உரைசெறி அலியோகங்கள் ஒன்மதிக்கு ஏழில் வெய்யோன்
பரவியேதான் நின்றாலும் பயில் சனிக்கு ஏழில் புந்தி
திரமுடன் நின்றபோதும், தீதிரட்டை ராசி தன்னில்
இரவி மேவிட செவ்வாய்ப் பார்த்திடில் அலியோக மூன்றாம். 12

தொகுப்புரை:

1. அலியோகங்களைப் பற்றிச் சொல்லுவதாயின் சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சூரியன் நின்றாலும்

2. சனிக்கு ஏழாமிடத்தில் புதன் நின்றாலும்

3. தீதாகும் இரட்டை ராசியில் சூரியன் இருக்க அவனை செவ்வாய் பார்த்தாலும்

அலியோகமாக இம்மூன்று வகை கிரக நிலைகளும் தருவதாக அமையும்.

அருஞ்சொற்பொருள்

வெய்யோன் - சூரியன், புந்தி - புதன், இரவி - சூரியன், அலி - ஆணும் பெண்ணும் கலந்ததான பிறப்பு.

1. சந்திரனுக்கு ஏழில் சூரியன் நின்றாலும்

3. சனிக்கு ஏழில் புதன் நின்றாலும்

3. இரட்டை ராசியில் சூரியன் இருக்க அவனைச் செவ்வாய் பார்த்தாலும் அலியோகம் என்பர்.

இதுவும் அலி சாதகம்

மூன்றும் பின்னுதையராசி முதல் ஒற்றையாய் அதற்குள்
நான்ற இந்து உற்றபோதும் இரண்டை ஒற்றையிலும் இந்து
தோன்றிடச் செவ்வாய்புந்தி பார்க்கினும் சோமன் காரி
ஆன்ற அங்கிசமும்லக்கினமாயிடின் அலியுமாமே. 13

தொகுப்புரை:

முதற்பாடலில் அலியென்பதற்குரிய கிரகாம்சங்களாகச் சொல்லப்பட்ட மூன்று பகுதிகளுடன்

சென்ம லக்கினமாகும் உதயராசி முதலாக அமைந்த ஒற்றையான ராசியில் சந்திரன் இருந்தாலும்

இரட்டை ராசியிலோ ஒற்றை ராசியிலோ சந்திரன் இருக்கவும், அவனை செவ்வாயோ புதனோ பார்க்கவும் இருந்தாலும்,

சந்திரன் சனி இவர்களின் அங்கிசத்தானம் லக்கினமாக அமைந்திருந்தாலும் அலியாகும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

ஒற்றை இராசி, இரண்டை இராசி என்பது பன்னிரண்டு ராசிகளில் மேடம் முதலான பொதுத்தன்மையிலும், சாதக லக்கினம் முதலான கணிப்புத்தன்மையிலும் எண்ணிக் கண்டு பலன் காண்பர்.

பொதுவாக

ஒற்றை இராசிகள்: மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஆறுமாகும்

இரட்டை இராசிகள்: இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறுமாகும்.

புத்திரர் இல்லை

அலி, அட்டமாதிபதி அஞ்சாம் இடத்திலிருக்க அஞ்சாம்
வலிய வீட்டதிபன் எட்டில் மருவ சுபர் நோக்கின்றேல்
நலிய புத்திரருமில்லை, நவில் அஞ்சாம் அதிபன் தானும்
மெலிவதாய் வியம் ஆறு எட்டில் மேவினும் இல்லை மைந்தர். 14

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தோன் ஐந்தாம் வீட்டிலிருக்கவும், வலிமை பெற்ற ஐந்தாம் வீட்டதிபன் எட்டில் இருக்கவும், இவர்களைச் சுபகிரகங்கள் பாராதிருந்தால் புத்திர பாக்கியம் இல்லை.

சொல்லப்பட்ட ஐந்தாமிடத்ததிபன் வலிமையின்றி பன்னிரண்டு, ஆறு, எட்டு ஆகிய இடங்களிலொன்றில் இருந்தாலும் புத்திரர் இல்லை என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

அலி - ஆணும் பெண்ணுமில்லாத பேடிப் பிறப்பு, மருவ - சேர, நவில் - சொல்லப்பட்ட, வியம் - பன்னிரண்டாம் இடம், மைந்தர் - பிள்ளைகள்.

தத்துப் பிள்ளையாய் வாழ்வன்

மைந்தர் தானங்கள் காரி புந்திதன் மனையதாக
அந்த வீடதனைக் காரி குளிகனோடு அமரில் பார்க்கில்
சுந்தரத் தத்தனாவன் சுபர் பலமுடனே ஐந்தில்
வந்திட ஐந்தோன் நோக்கம் அற்றிடில் தத்தாய் வாழ்வான். 15

தொகுப்புரை:

புத்திரஸ்தானங்கள் சனியினுடைய வீடாகிய, மகரம், கும்பம், புதனுடைய வீடாகிய மிதுனம், கன்னி இவைகளில் ஒன்றாக அமையவும்

அந்த வீட்டினைச் சனி குளிகனோடு சேர்ந்து இருந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும் நல்ல முறையில் தத்துப் பிள்ளையாவன்.

சுபகிரகங்கள் ஐந்தாமிடத்திலிருக்க, அந்த ஐந்தாம் இடத்தோனின் பார்வை இல்லாமல் ஐந்தாமிடம் இருந்தாலும் தத்துப் பிள்ளையாகவே வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

மைந்தர் தானங்கள் - சென்ம லக்கினம் எதுவோ அதற்கமைந்த ஐந்தாவது ஸ்தானங்கள், காரி - சனி, புந்தி - புதன், அமரில் - இருந்தால், தத்தாய் - பிறர் ஏற்று வளர்க்கும் பிள்ளையாய்.

பெண் பிள்ளைகள் பிறக்கும்

வாழ்மீன லக்கினத்துக்கு ஐந்தினில் மன்னன் உச்சம்
தாழ்விலாது இருக்கில் பெண்கள் தன்னையே பெறுவன், ஐந்தோன்
நீள் குசன் ஆறாமாதி மூவரை நேயமில்லார்
சூழவே பார்க்கில் சத்துருக்களால் சுதற்குப் பீடை 16

தொகுப்புரை:

மீன லக்கினத்திற்கு ஐந்தாமிடமாகிய கடக ராசியில் குரு உச்சம் பெற்ற நிலையில் குறைவில்லாது இருக்கின் பெண் பிள்ளைகளையே பெறுவான்.

ஐந்தாமிடத்தோன் செவ்வாய், ஆறாமாதி ஆகிய மூவரையும் நட்பில்லாத கிரகங்கள் இராசிகளில் ஆங்காங்கு இருந்து பார்த்தால்,

பார்க்கும் பகையான கிரகங்களின் திசா புத்திகளில், சஞ்சார காலங்களில் புத்திரர்க்குப் பகையானவர்களால் அபாயம் ஏற்படலாகும் எனலாம்.

அருஞ்சொற்பொருள்

மன்னன் - குரு, தாழ்விலாது - பகைவராலோ நீசராலோ பார்வை பெற்றதால் வரும் குறைவில்லாமல், குசன் - செவ்வாய், நேயம் - நட்பு, சுதற்கு - புத்திரனுக்கு, பீடை - துன்பம், நோய், அபாயம்.

குழந்தை தேவதையால் வாடும்

பீடில் ஐந்தாம் அதிபனாம் ஐந்தினில்
நீடு பாவருடன் கூடி நின்றிட
நாடி நோக்குற நல்ல குழவியும்
வாடும் தேவதை வஞ்சனையாலுமே. 17

தொகுப்புரை:

பெருமையற்ற நிலையில் ஐந்தாம் இடத்தோன் அந்த ஐந்தாமிடத்தில் நல்ல பாபகிரங்களுடன் கூடி நின்றாலும்.

பாப கிரகங்களுடன் ஐந்திலேயே கூடி நிற்கும் ஐந்தாமாதிபதியைப் பிற இடங்களிலிருக்கும் பாப கிரகங்கள் நாடி நோக்கினும்

நல்ல வளர்ப்புடன் திடமாக இருந்த குழந்தை கொடிய தேவதையின் சேட்டையால் நலிவடைந்து மெலிந்து வாடும் என்பது அறியத்தக்கதாகும்.

அருஞ்சொற்பொருள்

பீடில் - (பீடு இல்) பெருமை அல்லது வலிமை இல்லாத, பாவர் - செவ்வாய், சனி, ராகு, கேது, நாடி - நேர் பார்வையாக நாட்டம் பெற்று, குழவி - குழந்தை, வாடும் - சோர்ந்து போகும், தேவதை - கொடிய தேவதை, வஞ்சனை - தீய பார்வையாகிய வஞ்சனையான கோபம்.

பிறந்ததும், கருவிலுள்ள பிள்ளை இறக்கும்

வஞ்சனை நாலினில் அன்பிலர் வந்திட ஐந்தினில் மன்னனும்
விஞ்சிய காரியோடு அங்குற, வியமதில் அன்பிலர் மிண்டியும்
தஞ்சமெனும் சிறுமைந்தனும் தாய் கரம் தன்னில் இறந்திடும்
அஞ்சி நவந்தனில் வந்துறும் ஐயர் வெகுண்டிடவும் கெடும். 18

தொகுப்புரை:

நான்காமிடத்தில் நல்லன செய்யாது வஞ்சனை செய்திடும் பாவகிரகங்களும் வந்திட

ஐந்தாமிடத்தில், குருவும் சனியோடு சேர்ந்து இருக்கவும்

பன்னிரண்டாமிடத்தில் பாபகிரகங்களும் இருந்தால்

தாயின் கையிலேயே பிள்ளை இறந்திடும், மற்றும்

ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகிய ராசிகளில் வருவோர் பாபியோகி கோபிக்கவும் பிள்ளை கெற்பத்திலேயே இறக்கும் - என்பர்.

அருஞ்சொற்பொருள்

அன்பிலர் - பாபகிரகங்கள், மன்னன் - குரு, வியம் - பன்னிரண்டாமிடம் மிண்டியும் - கூடி இருப்பினும், நவம் - ஒன்பதாமிடம், ஐயர் - கிரகங்கள், வெடிகுண்டிடவும் - கோபங்கொள்ளவும், பகையான நிலையில் இருக்கவும், பார்க்கவும்.

பெண் பிள்ளையே பெறுவர்

கேடறும்புத்திரநாதனும்கிளர்மதிசுக்கிரன்மூவரும்
கூடிமடந்தைராசியில்கோதைஅங்கிசைமீதினில்
நீடிஇருந்திடுவோர்களைநேயமிலார்விழிநோக்குறில்
நாடியபெண்பிள்ளையேபெறும்நூவலர்கண்டறிவார்களே. 19

தொகுப்புரை:

கேடில்லாத புத்திரஸ்தானாதிபதியும், சந்திரனும் சுக்கிரனும் ஆகிய மூவரும் சேர்ந்து பெண் ராசியொன்றில் அல்லது பெண் கிரகராசியங்கிசையில் இருக்கவும்.

அந்த மூன்று கிரகங்களையும் அவர்கட்குப் பகைவரான கிரகங்கள் பார்ப்பார்களாயின், விரும்பிய பெண் பிள்ளையினையே பெறுவர் என்று.

சோதிடம் சொல்வதில் வல்லவர்கள் கிரக நிலையைக் கண்டு அறிந்து கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

புத்திர நாதன் - ஐந்தாமிடத்தோன், மடந்தை ராசியில் - பெண் ராசியில், நேயமிலார் - பகையான கிரகங்கள்

பெண் ராசிகள் : இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்.

பெண் ராசி அதிபர்கள்: சுக்கிரன், சந்திரன், புதன், செவ்வாய், சனி, குரு காரகன் - குரு.

சில பிள்ளைகள் உண்டு

வார்சடையார் முடிமேலுறை மாமதிமேவும் மனைக்குமே
ஏர்பெறும் சென்ம மனைக்குமே, எண்ணி ஓரைந்து தலத்தையும்
பாரினில் உத்தமரானவர் பார்வையுறில் சில பாலராம்
காரி முதல் கொடுபாவரே காணில் இலைச் சிறுபாலரே. 20

தொகுப்புரை:

சந்திரன் இருக்கும் ராசியிடத்துக்கும், சென்ம லக்கின ராசியிடத்துக்கும் இடையே உள்ள ஐந்து ராசியிடங்களைச் சுபகிரகங்கள் பார்த்தால் - சில பிள்ளைகள் உண்டு எனலாம்.

சனி முதலான பாபகிரகங்கள் பார்த்தால் அதுவும் இல்லை என்பர்.

அருஞ்சொற்பொருள்

வார்சடையோன் - சிவபெருமான், மாமதி - சந்திரன், மனை - ராசியிடம், தலம் - ராசியிடம், பாரினில் - உலகத்தில், உத்தமரானவர் - சுபகிரகங்கள், சில பாலர் - சில பிள்ளைகள், காரி - சனி, கொடுபாவர் - கொடிய பாவர்கள், காணில் - பார்த்தால், இலை - இல்லை.

வாலிப வயதில் பிள்ளை பிறந்து வளரும்

பாலர் பிறந்திறும் ஐந்திலே பாராரு கேது பரிந்துறில்
பாலர் பிறந்திறும் அஞ்சிலே பாழ் கருநாகம் அமர்ந்துறில்
சீல சென்மாதி ஐந்தாமிடம் சேர, ஐந்தாவதாதிடம் பெற
வாலிபந்தன்னில் மைந்தரும் வந்து பிறந்து வளர்ந்திடும். 21

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்தில் கேது இருந்தால் பிள்ளைகள் பிறந்து இறப்பார்கள்.

அதே ஐந்தாம் ராசியில் ராகு இருந்தாலும் அதே பலன்தான்

சென்மலக்கினாதிபதி ஐந்தாமிடத்தில் இருக்க, அந்த ஸ்தானாதிபதி வலிமை பெற்று இருந்தால் சாதகனுடைய வாலிப வயதில் பிள்ளைகள் பிறந்து வளருவர்கள் என்று கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பாலர் - குழந்தைகள், கருநாகம் - ராகு, திடம்பெற - ஆட்சி, உச்சம் பெற, வலிமை பெற, ஐந்தாவதாதி - புத்திரஸ்தானாதிபதி, வாலிபந்தன்னில் - வாலிப வயதில்

பிள்ளைகள் சமர்த்தராக இருப்பர்

வளரும் சென்மாதிபதியும் ஏழற, மற்று நாலாதி ஏழாதியும்
கிளர் மகிழ்ந்தொரு வீட்டுற, கேடற வோரிடரண்டாதியும்
தளர்வறவே சென்மத்துறத்தான் வருமைந்தர் சமர்த்தரா
உறா இரண்டிறை ஐந்தினில் உற மகவு உண்டு இறை பார்வையே. 22

தொகுப்புரை:

சென்மாதிபதி ஏழாமிடத்திலும், நான்குக் குடையவனும் ஏழாமிடத்தோனும். ஒரே வீட்டிலும் இருக்க

இரண்டாம் இடத்திற்குரிய கிரகம் சன்மராசியில் இருக்கவும் பிறக்கும் பிள்ளைகள் சாமர்த்தியசாலிகளாக இருப்பர்.

இரண்டாமிடத்துக் கிரகம் ஐந்தாம் இடத்தில் இருக்கவும், அந்த ஐந்தாமிடத்தினை குரு பார்ப்பதானால் சாதகனுக்கு புத்திர பாக்கியம் உண்டு என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

கேடற - கெடுதல் இல்லாமல், தளர்வறவே பலக்குறைவில்லாமல், சமர்த்தர் - சாமர்த்தியமானவர், மகவு - குழந்தைகள், இறை - குரு

ஐந்தாமிடம் குரு ராசியிடமாயினும் குரு இருந்தாலும், குரு பார்த்தாலும் - குழந்தைப்பேறு உண்டு என்பர்.

11ல் குருவரும் காலம் - பிறப்பான்

பாரினில் ஐந்தாம் அதிபதி பண்புடன் நின்ற புடத்தையும்
சூரியதேவர் புடத்தையும் தொகையோடு கூட்டிய ராசியில்
தார்புனையும் புயராசனும் தகைமையுடன் வரும் காலமே
வீரியவானொரு மைந்தனும் மேவுவன் அம்புவிமீதிலே. 23

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தோன் இருக்கும் ஸ்புடத்தையும், சூரியன் இருக்கும் ஸ்புடத்தையும் கூட்டிய தொகை ராசியில், குருவரும் காலத்தில், வீரியவானாக ஒரு பிள்ளை பிறப்பான்.

அருஞ்சொற்பொருள்

பாரினில் - உலகத்தில், ஸ்புடம் - நின்ற ராசியிடத்தளவிலான கணக்களவு, தொகை - கூட்டிய எண், தார் புனையும் புயராசன் - மன்னன் என்று சொல்லப்படும் குரு, வீரியவான் - திடமானவன், மேவுவன் - பிறப்பான், அம்புவி - அழகிய உலகம்.

ஒவ்வொருவருக்கும் புத்திரன் உண்டாகும் காலத்தினை இப்பாடல் குறிக்கின்றது.

புத்திரனுக்கு கண்டம் வரும் காலம்

மீதில் அஞ்சாதி புடந்தனில் இரவிமகன்தனை வாங்கியே
போதுறு ராசியில் மன்னுறும்போது இறுமே சிறுபுத்திரன்
கோதறு மன்னன் உறும்ராசியில் குளிகனை வாங்கிய ராசியில்
ஏதமில் சனிவரும்போது இராதேகம் மரித்திடும் பாலரே. 24

தொகுப்புரை:

புத்திரஸ்தானாதிபதியாகிய ஐந்தாம் இடத்தோன் நின்ற ஸ்புடத்தோடு, சனி நின்ற இராசியிடத்தையும் பார்த்து, அந்த ராசியில் குரு வரும்போது புத்திரனுக்கு கெண்டமுண்டு என்பர்.

சாதகனின் தந்தைக்கு மேலான - பிள்ளைகள்

அறிந்திடும் பரிதி கேந்திரந்தன்னில் அம்புலி இருந்திடப்பிதாவில்
அற்பமாம் புதல்வர் தரித்திடும் சசிதான் அணுகியே பணபரத்திருக்கில்
செறிந்திடுந்தந்தை தனக்கிணை சுதனாம், திங்கள் ஆபோக்கிலியத்தில்
சேர்ந்திடில் பிதாவிலக புத்திரனாம், செங்கதிரோனுறும் பதிக்கே.

நிறைந்தருள் ஐந்து ஏழு ஒன்பது வியத்தினில் உற, நிலவு உறுமனைதான்
நீடுநட்பு ஆட்சி உச்சமாயிருக்க நிருபனும் மதிதனைக் காண
உறைந்திடும் தந்தைக்கு அதிகமாம் செல்வம்உள்ளபுத்திரனெனச்சொல்லும்
உலவும் அம்மதியைச் சுக்கிரன் காணில் உணர் வெகு போகவானாமே. 25

தொகுப்புரை:

சூரியன் எந்த ராசியில் இருக்கின்றானோ அந்த ராசியிலிருந்து கணக்கிடும் கேந்திரத்தானத்தில் (1, 4, 7, 10) சந்திரன் இருந்தால், சாதகனின் தகப்பனார் எத்தனை பேரோடு பிறந்துள்ளாரோ அதில் குறைந்த அளவில் பிள்ளைகள் பிறக்கும்.

சந்திரன், சூரியன் நின்ற ஸ்தானத்திற்கு பனபரம் என்னும் இடத்தில் இருந்தால், தந்தை எத்தனை பேருடன் பிறந்தானோ அத்தனைப் பிள்ளைகள் உண்டு.

லக்கின கேந்திர ஸ்தானங்களாகிய 1, 4, 7, 10 ஆம் இடங்களுக்குப் பக்கத்து வீடாகிய 2, 5, 8, 11 ஆகிய இடங்கள் பணபர ஸ்தானங்களாம்.

பணபர ஸ்தானங்களுக்குப் பக்கத்து வீடுகளாகிய 3, 6, 9, 12 ஆம் இடங்கள் ஆபோக்கிலிய ஸ்தானங்களாகும்.

சூரியன் இருக்கும் ஸ்தானத்திற்கு ஐந்து ஏழு ஒன்பது பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் சந்திரன் நட்பு ஆட்சி உச்சம் ஆகிய நிலைகளில் இருக்க, குருவானவர் அந்த சந்திரனைக் காண, தந்தைக்கு அதிகமாம் செல்வம் உள்ள புத்திரர்கள் உண்டு என்று சொல்லப்படும்.

அவ்வாறு அமைந்துள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்தால் அனுபவிக்கும் மிகுந்த சுகபோகங்களைப் புதல்வர்கள் பெறுவார்கள் எனலாம்.

அருஞ்சொற்பொருள்:

பரிதி - சூரியன், அம்புலி - சந்திரன், பிதாவில் - பிதாவைக் காட்டிலும், சசி - சந்திரன், பணபரம் - லக்னத்திற்கு 2, 5, 8, 11 இடங்கள், சுதன் - மகன், திங்கள் - சந்திரன், ஆபோக்கிலியம் 3. 6. 7. 12 ஆம் இடங்கள், நிலவு - சந்திரன், நிரூபன் - குரு, போகவான் - செல்வ சிறப்புடன் சுகபோகவான்.

இப்பாடல் எட்டு அடிகளாகச் சுவடியில் எழுதப்பெற்றுள்ளது. சாதகனின் தந்தையைக் கொண்டு சாதகனின் பிள்ளைகளைப் பற்றிய பலன்கள் தொகுப்பாகக் கூறப்பட்டுள்ளன.

பண்பான பிள்ளைகள் பலவுண்டு

போகமாம்ஐந்தாமதிபன்லாபாதிபொருந்தியேமித்துருவாக
வாகுசேர்ஐந்தாமதிபன்உச்சமாய்வளம்பெறுசுபனுமேயாகி
மேகமாய்லாபத்தலத்தினில்இருக்கமுறைதவறாதபுத்திரர்கள்
ஆகவேபாலருண்டுஅவருடன்கூடும்அத்தனைப்புதல்வருண்டாமே. 26

தொகுப்புரை:

ஐந்தாமிடத்திற்குரிய கிரகமும் லாபாதியாகிய பதினோராம் இடத்திற்குரிய கிரகமும் நட்பு கிரகங்களாக இருக்கவும்

இவர்களில் ஐந்துக்குரிய கிரகம் உச்சனும் சுபகிரகமுமாக அந்த லாபஸ்தானத்தில் இருந்தால்

தந்தை சொல் தவறாத முறைமையுடன் நடக்கும் பிள்ளைகள் பலருண்டு.

ஐந்தாமதிபனுடன் சேர்ந்துள்ள கிரகங்கள் எத்தனையோ அத்தனை நல்ல பிள்ளைகள் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

மித்துருவாக - நட்பாக, லாபத்தலம் - பதினோராம் இடம், பலருண்டு - பிள்ளைகள் உண்டு, அவருடன் கூடும் - புத்திரஸ்தானாதிபதியுடன் சேரும்.

மிருகத்தன்மையுள்ள பிள்ளைகள்

ஆமெனும் ஐந்தாதிபதியன் ஆதித்தன் அணுகிலோ வெகுபிள்ளை
ஓமெனும் ஐந்தாம் அதிபனும் பாம்பும் ஒக்கவே எட்டினில் கூடில்,
தேமெனும் தத்து புத்திரனாவான், திருந்தும் அஞ்சாதிபனுடனே
தோமெனும் பாம்பும் இரவியும் கூடில் தோடர் மிருகங்கள் போலிருப்பர். 27

தொகுப்புரை:

ஐந்தாம் இடத்துக்குரிய கிரகம் சூரியனும் சேர்ந்து சுபத்தானத்திலிருந்தால் வெகு பிள்ளைகள் உண்டாகும்.

ஐந்தாமிடத்து அதிபனும் ராகுவும் சேர்ந்து எட்டாமிடத்தில் இருந்தால் பிறர் தத்தெடுத்து வளர்க்கும் பிள்ளையாவன்

குறையில்லாத ஐந்தாமாதியுடன் ராகுவும் சூரியனும் கூடி இருந்தால், எருமை போன்ற தன்மையும் செயலும் பெற்ற பிள்ளைகள் இருப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்

ஆதித்தன் - சூரியன், அணுகில் - சேர்ந்தால், வெகுபிள்ளை - அதிகமான பிள்ளைகள், பாம்பும் - ராகுவும்.

பாட்டன் தந்தை மகன் - விரோதம்

இருந்திடும் மிதுனலக்கினமாக இனியகோலிடத்தினில் குசனும்
பொருந்தியே இருக்கில் இவன்முன்னோன்புகழ்பெறு தந்தை மூவருக்கும்
வருந்திய விரோதம் விளைந்திடும் பொல்லா வஞ்சகராவர் மாநிலத்தில்
திருந்தி இப்படியல்லாமலேயிருக்கில் தினம் உறவாகி வாழ்ந்திருப்பர். 28

தொகுப்புரை:

சென்மலக்கினம் மிதுனமாகவும், நல்ல துலாம் ராசியில் செவ்வாயும் அமைந்து இருந்தால்,

சாதகன், அவனது, தந்தை, பாட்டன் ஆகிய மூவருக்கும் வருந்தும்படியாகிய விரோதம் விளைந்திடும், பொல்லாத வஞ்சகர்களாக ஒருவருக்கொருவர் இருப்பார்கள்.

மிதுனராசி லக்கினமும் துலாத்தில் செவ்வாயும் இல்லாமலிருந்தால் இவர்கள் மூவரும் உறவாக வாழ்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

இனியகோல் - நல்ல துலாம் ராசி, குசன் - செவ்வாய், இவன் - சாதகன், முன்னோன் - பாட்டன் முதலானோர், தந்தை - தகப்பன், விரோதம் - பகை, திருந்தி - மாறாக, தினம் - நாளும் எப்பொழுதும்.

மகன் சுகமாகத் தனந்தேடி வாழ்வான்

இருந்த பத்தாம் இறைவன் அஞ்சாதிபன்
பொருந்தி மித்துருவாய் புண்ணியனுமாய்
பரிந்த உத்தமர் வீட்டுறப் பாலனும்
வருந்திடான் தனந்தேடி வழங்குவான். 29

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்குப் பத்தாமிடத்துக்குரிய கிரகமும், ஐந்தாமிடத்திற்குரியவனும் நட்புடையவராயும் சுப கிரகங்களுமாகவும் நல்ல சுபகிரகத்தின் வீட்டில் சேர்ந்து இருப்பாரானால்

பிள்ளையானவன் செல்வத்தினைத் தேடிச் சேர்ந்து வருந்தாமல் வாழ்வதோடு பிறருக்கும் வழங்கும் ஈகைக்குணம் உடையவனாகவும் இருப்பான்.

அருஞ்சொற்பொருள்

பொருந்தி - சேர்ந்து, மித்துரு - நட்பு, புண்ணியன் - நல்லது செய்யும் சுபகிரகம், உத்தமர் - சுபகிரகம், பாலகன் - சாதகனின் மகன், வழங்குவான் - பிறருக்கும் கொடுப்பான்.

பத்துக்குடையோனும், ஐந்துக்குடையோனும் நட்புடன் சுபராய் சுபர் வீட்டிலிருந்தால், பிள்ளையானவன் செல்வத்தைச் சம்பாதித்து அனுபவிப்பதோடு பிறருக்கும் கொடுப்பவனாக இருப்பான்.

அந்நியரிடம் பிள்ளை வளர்வான்

வழங்கிய அஞ்சாமாதி குசனும் கூடி
மந்தன் நோக்குற அஞ்சில் மருவி நிற்கில்
முழங்கிடவே தத்து புத்திரனுமாவான்
முயலைந்தாமாதி குசன் சனி அம்சத்தில்
தழங்குறவே சனி பார்க்க நிற்கில் அந்நியர்கள்
தம்மிடத்தில் போய் வளர்வன், சனி அம்சத்தில்
அழுந்திடவே இரவிதானேறி அஞ்சில்
அருங்குழவி இல்லை யென்றே அறைவார் நல்லோர். 30

தொகுப்புரை:

ஐந்தாமிடத்துக்குடையோனும் செவ்வாயும் கூடியதாக, சனியின் பார்வையைப் பெற்று ஐந்தாமிடத்திலேயே இருந்தால் தத்துப் புத்திரனாவான்.

ஐந்தாம் இடத்து அதிபதி, செவ்வாய் அல்லது சனியின் அம்சத்தில் சனி கூடி நிற்கவோ அல்லது பார்க்கவோ அமைந்திருந்தால் அன்னியரான உறவினரிடத்தில் போய் வளர்வான்.

சனியின் அம்சத்தில் நன்றாகச் சூரியன் சென்று ஐந்தாமிடத்தில் நின்றால் குழந்தை இல்லையென்றே நல்லோர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், மந்தன் - சனி, மருவி - சேர்ந்து, அழுந்திடவே - திட்டமாகவே, இரவி - சூரியன், குழவி - குழந்தை, அறைவார் - திட்டமாகச் சொல்லுவார்கள்.

பரவிஷயம், கருசுரோணிதம்

நல்லதோர் அஞ்சாமாதி இரவி அங்கிசமேளறி
அல்லலார் சனி கண்டிட அஞ்சிடத்தில் அமர்ந்திடில் பரவிஷயத்தால்
வல்லமை புதல்வனுளனென மொழிவன், மற்றும் ஐந்தாமிடம் தன்னில்
சொல்லிய குசனும் காரி அங்கிசத்தில் சூழ்ந்திடக் கரு சுரோணிதமாம். 31

தொகுப்புரை:

ஐந்தாமிடத்துக்குரிய கிரகம், சூரியன் சனி இவர்கள் அங்கிசத்திலேறி சனியின் பார்வையில் ஐந்தாமிடத்தில் நின்றால், சாதகன் - புத்திரன் அந்நிய விஷயமெனக் கூறுவர், மற்றும்,

ஐந்தாமிடத்தில் செவ்வாயும் சனியின் அங்கிசத்தில் இருந்தால் கர்ப்பமான கரு கலைந்து போகுமென்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், அங்கிசம் - கிரகராசியில் சென்றிருந்தால், பரவிஷயம் - பிறப்பு வேறான விபரம், குசன் - செவ்வாய், காரி - சனி, கரு - கர்ப்பமான கரு, சுரோணிதம் - கலைந்து வெளிப்படும் போக்காகும்.

ஒரே பிள்ளை, பிள்ளை உதவான்

ஆனலக்கினத்தில் சந்திரனிருக்க ஆறினில் சுங்கன் உற்றிடவும்
தானுறும் புதல்வன் ஏகனாம், இரவி சந்திரன் இருவரும் கூடி
ஊனமில் இனிய கேந்திரத்திருக்கில் உரிமை செய்யான் பிதாவினுக்கே
ஈனமில் மரண தகன காலங்கள் இரண்டெனும் உபயராசிக்கே. 32

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சந்திரனும், ஆறாமிடத்தில் சுக்கிரனும் இருந்தால் சாதகனுக்கு ஒரே பிள்ளை இருக்கும்.

சூரியனும் சந்திரனும் கூடி சுபமான கேந்திரஸ்தானத்தில் இருக்கவும், அந்த கேந்திர ராசி உபய ராசியானால் சாதகனின் மரண காலத்திலும் தகன காலத்திலும் மகன் கடமைகள் செய்வதற்குப் பயன்படாமல் போவான்.

அருஞ்சொற்பொருள்

சுங்கன் - சுக்கிரன், ஏகனாம் - ஒரே பிள்ளையாம், ஊனமில் - குற்றமில்லாத, உரிமை செய்யான் - கரும உரிமைக்கடன்களைச் செய்யாதவனாவான்.

நாகசாபம் பிரதிட்டையால் - புத்திரர்

நல்லவர் பாராதிருக்க ஐந்தாம் வீட்டில்
நாடும் ஐந்தாமதிபனுடன் நண்ணியேனும்
வல்லகரும் பாம்பிருக்க, நாக சாப
வகையினால் மைந்தரில்லை, மறித்து நாகம்
ஒல்லையுடன் பிரதிஷ்டை செய்யில் மைந்தர்
உண்டாம், உயரும் கேந்திரகோணத்தில் குளியன் சனி
வல்ல சுபகிரகத்தின் பார்வையற நிற்கில்
மைந்தரில்லை, செப யோக வகையினால் மைந்தருண்டாம். 33

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஐந்தாவது வீடாகிற புத்திர ஸ்தானத்தை சுபகிரகங்கள் பாராதிருக்கவும், அந்த ஐந்தாம் வீட்டதிபன் ராகுவோடு சேர்ந்திருந்தால் சாதகனுக்கு நாக சாபத்தினால் குழந்தை இருக்காது. ஆயினும், இதை அறிந்த உடனே கல்லில் நாகர் சிலை செய்து பிரதிஷ்டை செய்தால் நாகதோஷம் நீங்கி புத்திரபாக்கியம் உண்டாகும்.

கேந்திரம் திரிகோணம் ஆகிய இடங்களில் குளியன் சனி இருக்கவும், அவர்களைச் சுப கிரகங்கள் பாராதிருந்தால் பிள்ளை இல்லை. ஆயினும் சாதகன் செபம் தவம் செய்துவந்தால் புத்திரர் உண்டாவார்.

அருஞ்சொற்பொருள்

நல்லவர் - சுபகிரகங்கள், நண்ணி - சேர்ந்து, கரும்பாம்பு - ராகு.

மகவில்லை - யாக கர்மம் செய்

உண்டாம் ஐந்தாம் வீட்டோன் ஆறாமாதி
உடன்கூடி நல்லோர் கண்ணுறாமல் நிற்க
அண்டாத சத்துரு சாபத்தினாலே
ஆனதொரு மகவில்லை, ஐந்தாம் வீட்டில்
மிண்டாக ஐந்தாதி இருக்க நல்லோர்
விழிப்பார்வையறத் தீயோர் மிகவும் நோக்கிக்
கண்டார்களெனில், தெய்வ சாபத்தினாலே
காளையர்களில்லை ஓமம் கர்மம் செய்வாய். 34

தொகுப்புரை:

ஐந்தாம் வீட்டோன் ஆறாம் வீட்டோனுடன் கூடி இருக்கவும், இவர்களை சுபகிரகங்கள் பாராமல் இருந்தால்,

நெருங்காத கொடிய பகைவரின் சாபத்தினால் சாதகனுக்கு பிள்ளைப்பேறு இல்லை.

ஐந்தாம் இடத்தில், வலிமையுடன் அந்த ஸ்தானத்திலேயே இருக்கவும், அவரை சுப கிரகங்கள் பார்க்காமல், பாப கிரகங்கள் மட்டும் பார்த்திருந்தால், சாதகனுக்கு தெய்வசாபத்தினால் ஆண் பிள்ளைகள் இல்லை.

ஆனால் தெய்வ சாபம் நீங்க, ஓமங்கள் பிராயச்சித்தமான கர்மங்கள் செய்வானாயின் ஆண் பிள்ளை பிறக்கும் என்பர்.

தாய் சாபம் - பிள்ளை இல்லை

செய்யவொரு நாலிடத்தில் தீயோர் நிற்கச்
சேரு மைந்தாம் அதிபனுடன் சனியும் கூட
பைய்யவே பன்னிரண்டாம் இடத்தில் பாபர்
பற்றி நிற்கத் தாய்சாபம் பாலரில்லை
ஐயமற ஓமங்கள் செபங்கள் தானம்
அன்புடனே செய்விக்கும் அவர் தமக்கு
துய்ய திருமைந்தர் பலருண்டாமென்று
கூறுதி கலை ஆகமங்கள் சொல்லுந்தானே. 35

தொகுப்புரை:

நல்லதான நான்காமிடத்தில் பாபகிரகங்கள் நிற்கவும், புத்திரஸ்தானதிபனுடன் சனியும் சேர்ந்து பன்னிரண்டாம் இடத்தில் இருந்தாலும், மற்றும் பாபகிரகங்கள் சேர்ந்து இருந்தாலும் சாதகனின் தாயின் சாபக்கேட்டினால் குழந்தை இல்லையாகும்.

சந்தேகமில்லாமல், தெய்வசாந்திக்கான ஓமங்கள், மந்திர செபங்கள், தான தருமங்கள் அன்புடனே செய்துவரும் சாதகனுக்கு,

நல்ல பிள்ளைகள் பலர் உண்டாகுமென்று, வேதமும் சாஸ்திரக்கலையும் ஆகமமும் தெளிவாகச் சொல்லுகின்றன.

அருஞ்சொற்பொருள்

செய்ய - தூய்மையான, தீயோர் - பாபகிரகங்கள், ஐயமற - சந்தேகம் நீங்க, மைந்தர் - ஆண் பெண் பிள்ளைகள்

ஐந்தாமிடத்தோனுடன் சனியும் கூடி எங்கிருப்பினும், பன்னிரண்டாமிடமாயினும் அதில் குரு சுபனாக இருந்து ஐந்தாமிடத்தையோ அல்லது மேலே கூறியுள்ள இருவரையோ பார்த்தால் தாமத காலத்தில் பிள்ளைகள் உண்டாகும்.

வம்சாவழி இல்லாமல் போகும்.

சொல்லும்இரண்டில்பன்னிரண்டில்சுபக்கோள்பாபர்மனையாகில்
வெல்லும்பாக்கியாதிபதிவியத்தில்இருக்கஓரைந்தில்
நில்லும்பாவர்சென்மாதிநின்றேஅத்தமனமாகி
ஒல்லிற்கூடில்குலநாசம்உண்டாம்புத்திரர்தானும்இல்லை. 36

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடம் பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்கள் பாபகிரகங்களின் வீடுகளாகி அவற்றில் சுபகிரகங்கள் இருந்தாலும்,

பாக்கியாதிபதி பன்னிரண்டாமிடத்தில் இருக்கவும்

ஐந்தாமிடத்தில் பாபர்கள் சென்மாதிபதியோடு அஸ்தனமாகிக் கூடி இருக்கவும் அமைந்த சாதகமாக இருந்தாலும்

சாதகனுக்குப் பிள்ளை இல்லாமல் குலம் அற்றுப்போகும்.

அருஞ்சொற்பொருள்

மனை - கிரகவீடு, குலநாசம் - வமிசவிருத்தி இல்லாமல் போகும். அத்தமனம் - கிரகங்கள் சூரியனுடன் நெருங்கி இருத்தலால் தங்கள் ஒளியை இழக்குமிடம்.

புதல்வர் - இல்லை

தானும் சென்மம் வியம் எட்டில் சனி சேய் பாபர் உறநிற்க
மானே. புதல்வர்தான் இல்லை, வளம்சேர் புந்தி சுக்கிரனும்
ஆன பத்தில் ஓரெட்டில் மருவும் ஐந்தில் எட்டாதி
ஊனபாபர் சன்மாதி உற்றே பத்தில் புதல்வரில்லை. 37

தொகுப்புரை:

மானின் சாயல் பெற்ற பெண்ணே!

சென்ம லக்கினம் பன்னிரண்டாமிடம் எட்டாமிடம் இவற்றில், சனி செவ்வாய் ஆகிய பாவிகள் இருந்தால் சாதகனுக்கு பிள்ளைப் பேறு இல்லை.

புதன் சுக்கிரன் ஆகியோர் பத்தாமிடத்திலும் எட்டாமிடத்திலும் இருக்க, எட்டாம் ராசிக்குடையோன் ஐந்தாம் ராசியிலும்

குற்றமான பாபகிரகங்கள், சென்மாதிபதியுடன் சேர்ந்து பத்தாமிடத்திலும் இருந்தாலும் பிள்ளைகள் இல்லை.

அருஞ்சொற்பொருள்

வியம் - 12 ஆம் இடம், சேய் - செவ்வாய், புந்தி - புதன், ஓரெட்டில் - எட்டாமிடத்தில், எட்டாதி எட்டுக்குடையோன்,

புத்திர சேதம் ஏற்படும்

புதல்வர் காரகன் புடத்தில் பொருந்தும் ஐந்தாதிபன்புடமாம்
இதனைக் கூட்டும் இராசிதனில் ஏதமற்ற குரு வருங்கால்,
மதலை உற்றிடும், இப்புடங் கூட்டி வருராசி அங்கிசை மட்டும்
சிதவிலா மேடமுதலெண்ணச் சேய் பாவர்தான் காணச் சேதம். 38

தொகுப்புரை:

புத்திரகாரகனென்னும் குரு நின்ற ஸ்புடத்தோடு, புத்திர ஸ்தானாதிபதியின் ஸ்புடத்தையும் கூட்டிக் காணும் ராசியில் குற்றமற்ற குரு வருங்காலத்தில் புத்திர உற்பத்தி உண்டாகும்.

மேலே கூட்டிக் கண்ட இராசி அங்கிசையை (எண்ணினை) மேடராசி முதல் எண்ணிக் கண்ட ராசிகளில் செவ்வாயின் ராசி இடம் வரினும், பாபகிரகங்களின் ராசிமனை வரினும் கண்டால் - புத்திர சேதம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

காரகன் புடத்தில் - காரக கிரகம் சென்ம ராசியிலிருந்து நிற்குமிடம் வரையில் எண்ணிக்காணும் தொகையில், ஏதமற்ற - குற்றமற்ற, மதலை - குழந்தை, சேய் - செவ்வாய்.

வாரிசுக்கு ஒரு பிள்ளை இருக்கும்

தேசம்அஞ்சினில்சிறந்தமதியுறில்
நீதிஒருபிள்ளைநேமியிலுறும்
போதும்மற்றதுபிழைப்பதுதானில்லை
வேதமுற்றவர்ஓதினர்என்பவே. 39

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு ஐந்தாமிடத்தில் குற்றமற்ற சந்திரன் இருந்தால் சாதகனுக்கு உலகில் பெயர் சொல்ல ஒரு பிள்ளை மட்டும் மிஞ்சியிருப்பான்.

மற்ற பிள்ளைகள் பிழைப்பது இல்லை என்று வேத சாத்திரங்களை முழுவதும் கற்ற சான்றோர்கள் சொன்னார்கள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

தேசம் - ராசி இடம், மனை, சிறந்த மதி - நல்ல வளர்பிறைச் சந்திரன், நேமியிலுறும் - உலகில் இருப்பான். ஓதினர் - சொன்னார்கள்.

ஐந்தாமிடத்தில் சந்திரன் இருந்தால் ஒரு பிள்ளை இருந்து பெயர் விளங்குவான். மீன லக்கினமாக இருந்து ஐந்தாமிடம் கடக ராசியில் சந்திரன் இருந்தால் ஒரே பிள்ளை

தேசாதிபதியாக விளங்குவான். சகோதரர்கள் இருக்க மாட்டார்கள்.

மகனைப் பிறர் வளர்ப்பார்

ஒன்பதாம் வீட்டுக்கு உடையவன்குருவாய்
இன்பமாய்சனி எய்தி நோக்கிடவும்
அன்பு புந்தியோ டாதவன் எங்குறில்
பின்புதான்அய்யனைப் பிறத்தியார் வளர்ப்பார். 40

தொகுப்புரை:

ஒன்பதாம் வீட்டுக்குரிய கிரகம் குறைவாக, அவரை சனி பார்க்கவும், புதனும் சூரியனும் பிற ராசிகளில் எங்கே இருந்தாலும்

சாதகனின் பிள்ளைகளை அந்நியர் வளர்ப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்

இன்பமாய் சனி - குறை பெறாத சனி, புந்தி - புதன், ஆதவன் - சூரியன், எங்குறில் - எங்கே இருந்தாலும், பின்புதான் - தகப்பன் அல்லது தாய் இல்லாத பிள்ளையைத் தான் அல்லது, அக்குழவி பிறந்தபின்பு, அய்யன் - மகன், புத்திரகாரகனாகிய குரு- புத்திரஸ்தானாதிபனாகிய குரு, 9மிடத்தில் புதன் சூரியனோடு எந்த ராசியிலிருந்தாலும் இதே பலன் அமைகிறது.

பன்னிரண்டு வயதுக்குள் போகும் – வசனம்

அஞ்சாம் வீட்டுக்கதிபன்நீசனாயிருந்
தாலும் ஆறு எட்டு பன்னிரண்டாம்
அதிபர்களுடனேகூடினாலும், சுபர்
திருஷ்டியிருந்தால்முத்த பிள்ளைகள்
பன்னிரண்டு வயதுக்குள் போகும்.

பாடல்

ஐந்தின் வீட்டிற் கதிபதி பாவனாய்
வந்தாரெட்டுப் பன்னிரண்டின் மன்னரோ
டுந்தினாலுஞ் சுபர் திருஷ்டி யுற்றிடில்
நந்தும் பன்னிரண் டாண்டினில் நாசமே. 36

தொகுப்புரை:

ஐந்தாம் வீட்டுக்குரியவன் பாவியாக வந்து ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களுக்குரிய கிரகங்களுடனே கூடியிருந்தாலும், சுபரின் பார்வையினைப் பெற்றாலும், பன்னிரண்டு வயதளவில் புத்திரன் மறிப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மன்னரோடு என்பதை 6, 8, 12 ஆம் இடங்களின் கிரகங்களோடு, உந்தினாலும் - சேர்ந்தாலும், திருட்டி - பார்வை.

மன்னரோடு என்பதை 6, 8, 12 ராசியிடங்கள் அதிபரோடு என்றும் குருவோடு என்றும் பொருள் கொள்வதாயினும் பலன் பொருந்துவதாகும்.

மறை சொல்லும், புதல்வரில்லை

புத்திரன் ஏழாமாதி பொருந்தும் கேந்திர கோணத்தில்
உற்றிடும் பலவானாகி ஓங்கு ஓராதிபன்தானும்
சித்தமாய்க் கூடினாலும் தரிசனைப் பார்வையாலும்
சுத்தமாய்ப் புதல்வரில்லை எனமறை சொல்லுந்தானே. 42

தொகுப்புரை:

புத்திரஸ்தானாதிபதியாகிய ஐந்தாம் இடத்துக்குடையோனும், ஏழாமிடத்தோனும் கேந்திரத்திலாவது திரிகோண ராசியிலாவது பலவானாக இருக்கவும்

பெருமையுடைய ஆறாமிடத்தோன் அவர்களைப் பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும், சாதகனுக்குச் சுத்தமாய்ப் புத்திர பாக்கியம் இல்லை என்று சோதிட சாத்திரங்கள் சொல்லும்.

அருஞ்சொற்பொருள்

புத்திரன் - புத்திரஸ்தானாதிபதி, பலவானாகி - ஆட்சி உச்சம் பெறும் பலவானாகி, தெரிசனை - நல்ல பார்வை, சுத்தமாய் - திட்டமாக, மறை - சோதிட நூல்கள்.

ஐந்து ஏழு ஆகிய இடங்களுக்குரிய கிரகங்கள் குறையில்லாமல் இருக்க அவர்களைக் குரு பார்ப்பதானால் புத்திரர் உண்டு என்றும் கூறப்பெறும்.

ஐந்தாமிடப் பலன் முற்றும்

ஆறாமிடப் பலன்கள்

பகை நோய், கடன், வழக்கு, இரணம், சோரம்
தண்டனை, பிரதாபம், வலிமை, தைரியம், வழக்கில் வலிமை

கூறும் ஆறாமிடத்தில் குறித்திடும் பலன்கள், ஆரில்
வீறு நல்லோர்கள் தானும் மேவிடில், ஞாதியாளர்
பேறுடன் வழக்கிட்டுள்ள பெருந்தனம் பிரித்துத் தாவென்று
ஏறி அம்பலத்தே நிற்பர், எதிரிக்கே வலிமை என்னும். /

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஆறாமிடத்தினால் அறியப் பெறும் பலன்களைச் சொல்லுவோமானால்,

ஆறாமிடத்தில் வலிமையுள்ள சுபகிரகங்கள் இருப்பார்களாயின், பங்காளிகள் சாதகனின் சார்பிலுள்ள பெருஞ்செல்வத்தினைப் பங்கு பாகமாகப் பிரித்துத் தாவென்று நீதிமன்றத்தில் வழக்கிட்டு நிற்பார்கள்.

அந்த பங்காளிகளாகிய எதிரிகளுக்கே நீதிமன்றத்தில் உரிமையான வலிமை ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்

குறித்திடும் - இன்ன பலன்கள் என்று சொல்லப்படும். வீறு நல்லோர்கள் - வலிமை பெற்ற சுபகிரகங்கள், ஞாதியாளர் - பங்காளிகள், பேறுடன் - தனக்கு உரிமையுண்டு என்ற பெயருடன், அம்பலத்தே ஏறி - நீதிமன்றத்திலே வழக்கிட்டு, எதிரிக்கே - அந்த பங்காளிகளுக்கே, வலிமை - பாகம் கிடைப்பதற்குரிய சான்று வலிமை.

ஆறாம் இடத்தின் பலன்கள் பொதுவாக நல்லது அல்லாத பலன்களாகவே காணப்படினும், ஆறாம்

இடத்தோனையும், ஆறாமிடத்தில் நின்றோனையும், ஆறாமிடத்தோனுடன் கூடியவர்களையும் பார்வைகளையும் கொண்டு சாதக பாதகங்களைக் கூறுவர்.

பங்காளிகளைப் படியச் செய்வான்

என்னும் புவியிலுள்ளயாவர்க்கும் வலியனாவான்
துன்னிய விகாதமேதான் சொல்லுவார் எவர் கண்டாலும்
மின்னிய ஞாதியோரை மெலியவே பண்ணிவைப்பன்
கன்னியே, ஆறில் நல்லோர் காதலித்து இருந்தக்காலே. 2

தொகுப்புரை:

கன்னிப் பெண்ணே கேட்பாயாக!

ஆறாமிடத்தில் சுபகிரகங்கள் நட்புடன் இருந்தால், சாதகன் இந்த பூமியிலுள்ள யாவருக்கும் வலியவனாக இருப்பான்.

ஆனால், அவனை யார் பார்த்தாலும் அவனைக் குறித்து தகாத பகையான வார்த்தைகளையே சொல்லுவார்கள்.

சாதகனிடத்தில் ஆர்ப்பாட்டம் வீம்பு வார்த்தை காட்டிய பங்காளிகள், வழக்காளிகளை பயன் பெறாமல் தாழ்ந்து போகும்படியாகப் பண்ணிவைப்பான்.

அருஞ்சொற்பொருள்

புவி - உலகம், வலிமை - மேம்பாடு, துன்னிய - தொடர்ந்ததான, விகாதம் - முறைகேடு, பழிப்பு - ஞாதி - வழக்கு செய்த, பங்காளிகள், மெலிய - தாழ்ந்துபோக, காதலித்து - விரும்பி.

ஆறாமிடத்தில், சுபகிரகங்கள் யார் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை அறிந்து கிரகங்களுக்குப் பொருந்திய பலனைக் காணவேண்டும்.

பகைவருக்கு இடிபோன்றவன்

காதல் ஆறாமிடத்தில் கடினராம் தீக்கோள் நிற்கில்
ஓது பொல்லார்க்குப் பொல்லாங்குரைத்து வேலவனைப் போல
ஏதிலார் தங்கட் கெல்லாம் இடியென வலியனாகி
பூதலத்து எவரும் வந்து புகழ்ந்திடப் பொருந்தி வாழ்வான். 3

தொகுப்புரை:

ஆறாமிடத்தில் தீங்கு செய்பவராம் பாபகிரகங்கள் இருந்தால், தனக்குத் தீமை செய்வோருக்கு அவர்கள் அடங்கும்படியான கடின வார்த்தைகள் உரைப்பான்.

முருகுப் பெருமானைப் போன்று, தன்னுடைய பகைவருக்கெல்லாம் இடியைப் போன்று வலிமை பெற்றவனாகி

உலகில் எத்தகையாரும் தானே வந்து தன்னைப் புகழ்ந்திட அவர்களோடு சேர்ந்து வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

கடினர் - தீமை செய்வதில் வல்லவராகிய பாபகிரகங்கள், பொல்லார் - பகைவர், ஏதிலார் - தனக்கு மாறானதைச் செய்பவர், பூதலம் - உலகம்.

ஆறாமிடத்தில் பாபகிரகங்கள் இருப்பின் பகைவரை அடக்கி ஆளும் தைரியத்தினையும் அறியலாம் எனும் பலனும் இப்பாடலால் அறியப் பெறும்.

சத்துருக்கள் வணங்கி நிற்பார்

பொருந்து சிங்கத்தைக் கண்டே புடைபடும் இடபம் போல
இருந்த சத்துருக்களெல்லாம் இரந்து கைகூப்பி நிற்பார்
திருந்திய குபேரன் போலும் செல்வமுண்டாகப் பாரில்
வருந்திடாது இருப்பன், ஆறில் மருவு தீக்கோளினாலே. 4

தொகுப்புரை:

ஆறாமிடத்தில் பாபகிரகங்கள் இருந்தால், சிங்கத்தைக் கண்டு நடுங்கி ஓடுங்கும் யானையைப் போல

சாதகனின் பகைவர்கள் பயந்து ஒடுங்கி இரந்து வேண்டி இருகை கூப்பி வணங்கி நிற்பார்கள்.

மேலான குபேரனைப் போன்று செல்வம் உண்டாகவும், உலக வாழ்க்கையில் வருந்தாமலும் இருப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

பொருந்து - தனக்கு நேரே பொருந்திய, புடைபடும் - அஞ்சி நடுங்கும், இடபம் - யானை, இரந்து - தாழ்ந்து வேண்டி, பாரில் - உலகில், மருவு - சேர்ந்துள்ள

ஆறாமிடத்தில் தீய கிரகமிருந்தால் சாதகனுக்கு ஏற்படும் வலிமையும் வாழ்வும் இப்பாடலால் அறியப்பெறுவதாகும்.

தண்டனை இல்லை, விஷங்கள் தீண்டாது

கோளினில் கரிய நாகம் கூறும் ஆறாமிடத்தில் நிற்கில்
தாளினில் தளைகள் பூண்டே தடைபடும் காவல் இல்லை
நாளுமே பலரும் போற்ற நண்ணிடும் கீர்த்திமானாய்
தேள்முதல் விடங்கள் சற்றும் தீண்டிடா திடவானாவான். 5

தொகுப்புரை:

கிரகங்களில் கருநாகம் என்று பெயர் பெறும் ராகு கிரகம் ஆறாமிடத்தில் நின்றால், விலங்கிடப்பட்டு காவலில் இருக்க மாட்டான். எக்காலத்திலும் பலரும் புகழ்ந்து போற்றும் கீர்த்திமானாக இருப்பான். சாதகனை தேள் முதலான விஷங்கள் சிறிதும் தீண்டாது. திடவானாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்

கோள் - கிரகம், கரிய நாகம் - கரிய நிறமுடைய பாம்பாகிய ராகு, தளைகள் - விலங்குக்கட்டு, காவல் - அரசுக்காவல், நண்ணிடும் - தானே வந்திடும், விடங்கள் - விஷப்பூச்சிகள், தீண்டிடா -கடிக்காது.

நல்லோர் காண மந்திரியாவன்

திடமுறு ஆறாமாதி பாவனாய் குடும்ப கேந்திரத்தும்
வடிவுறு நல்லோர் காண மருவின், மந்திரியுமாகி
படிமிசை எவரும் போற்றப் பயில் பிரதாபனாகி
கொடியவர் தமக்கும் நன்றே கூறுவன், குணவானாவான். 6

தொகுப்புரை:

திடம் பெற்ற தைரியஸ்தானாதிபதியாகி ஆறாமிடத்து அதிபதி, பாவியாகி, இரண்டாமிடத்திலோ அல்லது 1, 4, 7, 10 ஆகிய கேந்திர ஸ்தான மொன்றிலோ இருக்கவும், அந்த ஆறாமிடத்தோனை சுப கிரகங்கள் பார்த்தால் அல்லது சேர்ந்தால் சாதகன் மந்திரிப் பதவியுடைவனாக உலகத்தில் எல்லா மக்களும் போற்றும் படியான புகழ் பெற்றவனாகி, தனக்குப் பகைவர் ஆனவர்க்கும் நன்மையான நல்ல புத்திமதிகளைக் கூறுவன். அத்தகைய குணவானாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்

குடும்பம் - இரண்டாமிடம், வடிவுறு - குறையில்லாமல் நிறைவு பெற்ற, படி - உலகம், எவரும் - எல்லோரும், பிரதாபம் - புகழ்.

ஆறாமிடத்தோன் பாபியாகி கேந்திரத்தில் இருக்கவும் சுபர் பார்க்கவும் மேலே நல்லபலன் கூறுவதாயினும், கேந்திர தோஷத்தினால் அரச தண்டனை, பகைவரால் தீங்கு போன்றவைகளும் ஏற்பட வாய்ப்பு ஓரளவு இருக்கும் என்று பிற நூல்கள் கூறுகின்றன.

கண்டம் வரும் வகைகள்

ஆறாகும் வீட்டதிபன் லக்கினத்தாதிபனும்
அணி கதிரோனுடன் கூடில் சுரகண்டமாகும்
பேறாய் இந்துடன் கூடில் சலகண்டம், குசன் பால்
பெருமையுடன் கூடில் ஆயுதவிரணகண்டம்

தூறானசனி கூடில் நீசர்தன்னால் கண்டம்
சோரராலும் வரும் கண்டம், சுங்கன் கூடினால்
வீறாகும் மடவரால் கண்டம், கண்டங்கேள்
வீடஅரவைக் கூடில் விஷப்பாம்பால் வரும்தான். 7

தொகுப்புரை:

ஆறாம் இடத்திற்குரியவனும், லக்கினாதிபதியும், சூரியனும் கூடி இருந்தால் சுரநோயினால் கண்டம், மேலே குறித்தவர்களோடு சந்திரன் கூடியிருந்தால் சல கண்டம் அதாவது ஆறு குளமாகிய நீர்நிலைகளில் கண்டம் ஏற்படும். அவர்களோடு செவ்வாய் கூடினால் ஆயுதங்களினால் ரணம் ஏற்பட்டுக் கண்டம் உண்டாகும்.

அணிகளோடு சனி கூடினால் நீசரால் கண்டம் வரும், கள்வராலும் கண்டம் நேரும், அவர்களோடு சுக்கிரன் கூடினால் துணிவுள்ள பெண்ணால் கண்டம் ஏற்படும். அவர்களோடு இராகு கேது கூடினால் விஷப்பாம்புகளினால் கண்டம் வரும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

கதிரோன் - சூரியன், கண்டம் - இறப்பு நேரும்படியான நிகழ்ச்சி, சலகண்டம் - தண்ணீரில் கண்டம், குசன் - செவ்வாய், தூறான - தீங்கான, நீசர் - அற்பர், சோரர் - கள்ளர், சுங்கன் - சுக்கிரன், வீறு - தைரியம், அரவு - ராகு கேது.

ஆறாம் வீட்டோன், லக்கினாதிபதி இருவரும் கூடி இருக்க இவர்களோடு உள்ள கிரகங்களால் காணும் கண்டங்களின் விபரம் கூறப்பட்டுள்ளது.

விஷ பாஷாண உணவால் கண்டம்

அறந்திகழும் சென்மம் நாலாதி ரெண்டும்
அட்டமத்தாதியைக் கூடினாலும் ஆரில்
உறைந்திடினும் முண்டிய சீரணத்தால் கெண்டம்
உற்றிடும் லக்கின வாகனாதியோடு

செறிந்து சனியுறில் விஷ பட்சணத்தால் கெண்டம்
செப்பிய நாலாதியுடன் சனியும் சேர்ந்து
பிறந்திடும் லக்கினத்தாதி வீட்டில் நிற்கப்
பெறில் விஷ பாஷாண கெண்டம் பேசும் சாதகமே. 8

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதியும் நான்காமிடத்திற்குரியவனும் ஆகிய இருவரும், அட்டமாதிபதியைச் சேர்ந்தாலும் அல்லது ஆறாமிடத்தில் இருந்தாலும், சாதகனுக்கு அஜீரண நோய் வயிற்றில் உண்டாகி மரணம் ஏற்படும். லக்கினாதிபதி வாகனாதிபதி ஆகியவர்களோடு சனி சேர்ந்து லக்கினத்தில் இருந்தாலும் விஷமான பலகாரங்களைச் சாப்பிட்டதால் மரணம் ஏற்படும்.

நான்காமிடத்தோனுடன் சனி சேர்ந்து லக்கினத்தில் நின்றால், விஷம் பாஷாண பொருள்களைச் சாப்பிட்டதால் மரணம் ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்

உறைந்திடினும் - நின்றால், முண்டிய - சீரணமாகாது நோயாகி வலித்த, வாகனாதி - நான்காமிடத்தோன், கண்டம் - காரண காரியத்தால் மரணம்.

பந்தனத்தால் கண்டம்

சாதக லக்கினத்தாதி வாகனாதி தாம்
இருவருடன் பாம்புதானும் கூடில்
ஓதில் உறுபந்தனத்தால் மரணம் நல்லோர் வீடாய்
உதித்த லக்கினாதி ஓரேழு எய்த
நீதியுடனே ஏழதிபன் லக்கினத்தில்
நிற்கில், அவன் தாதையுடன் நின்றோன் தாயாம்
பேதையனுமரணம் பண்ணுவான் தானென்று
பேசினர் சாதக நிபுணப் பெருமையோரே. 9

தொகுப்புரை:

லக்கினாதிபதியுடன் வாகனாதிபதியாகிய நான்காமாதிபதி இவர்களுடன் ராகுவும் கூடி இருந்தால் வரும் கெண்டம் எதுவென்று சொல்வோமானால், எதிர்பாராமல்

நேரும் மூச்சடைப்பினாலோ, பகைவர் செய்யும் இறுக்கமான கட்டினாலோ மரணம் ஏற்படும்.

மேலே சொல்லப்பட்ட கிரகங்கள் நின்ற ராசி சுபர் வீடாக இருக்கவும், லக்கினாதிபதி ஏழாமிடத்தில் இருக்கவும், ஏழாமதிபதி லக்கினத்தில் நின்றால்,

சாதகனின் தகப்பனுடன் பிறந்தோனாவது அவரின் தாயாவது எதிர்பாராத நிலையில் மரணம் அடைவார்கள் என்று, சாதக சாத்திரங்களில்வல்லமை பெற்றவர்கள் பேசினார்கள்.

அருஞ்சொற்பொருள்

வாகனாதி - நான்காம் இடத்தோன், பாம்பு - ராகு, உறுபந்தனம் - நேர்ந்த கட்டுத்தடை, தாதையுடன் நின்றோன் - தந்தையுடன் நிற்கும் மாற்றாந்தாய் மகன், தாயாம் பேதை - தாயாகிய பெண்.

சித்தப் பிரமை, இரணம் உண்டாகும்

பெருமை செறி ஆறாம் அதிபனோடு
பெரும்பாவர் கூடி லக்கினத்தில் எட்டில்
அருமையுடனுறில் சித்தப் பிரமை கொண்டே
அங்கத்திலும் விரணமாகும், பின்னும்
உரிமையுள்ள அவரவர்கள் தானங்கள் எட்டில்
உற்றிடில் இந்நோயென்றே உரைக்க வேண்டும்
இருமை செறி தந்தை தாய் பிதாமகர் மைந்தர்
இவர்க்கு மனைவியர் தமக்கும் எனச் சொல்வாரே. 10

தொகுப்புரை:

ஆறாமிடத்திற்குரிய கிரகத்தோடு பாபகிரகங்கள் கூடி லக்கினம் எட்டாமிடம் இவ்விடங்களில் இருந்தால் சாதகன் பயித்தியமாகிய சித்த பிரமை கொண்டு உடம்பில் ரணங்கள் உண்டாகத் துன்பப்படுவான்.

மேற்சொல்லப்பட்ட கிரகங்கள் அவரவர்களுடைய ஆட்சி வீடுகளுக்கு எட்டாமிடத்தில் இருந்தாலும் தந்தை, தாய், பாட்டன், புத்திரர், மனைவி யாவருக்குமே சித்தப் பிரமை நோய் உண்டாகுமென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

பெரும்பாவர் - ராகு, சனி, சித்தப்பிரமை - மனநோய், பைத்தியம், அங்கம் - உடம்பின் பகுதிகள், தானங்கள் - ஸ்தானங்கள், ராசியிடங்கள், இருமை செறி - இம்மை மறுமைக்கு கூடிய, இவர்க்கு - அவர்களுக்கு

அலியின் சாதகம்

ஆண் பெண் தன்மைகள் சேர்ந்துள்ள பிறப்பு

இரவியும் சசியும் ஒருவருக்கொருவர் இசைந்து பார்த்திடில் அலியாம்
பரவிய சனியும் புதனும் ஏய்ந்தபடி விழி நோக்குறில் அலியாம்
வரவீடு செவ்வாய் இரட்டை ஒற்றையினில் வந்து சூரியனுடன் மருவ
விரவிய மதி ஆண் அங்கிசத்தில் ஏற வெள்ளி வீடாகவும் அலியாம், 1

தொகுப்புரை:

சூரியன் சந்திரன் இருவரும் ஒருவருக்கு ஒருவர் பார்த்துக் கொண்டால் - சாதகன் அலியாம்

சனியும் புதனும் அப்படியே ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டாலும் - அலியாம், செவ்வாய் ஒற்றை இரட்டை ராசியிலொன்றில் சூரியனுடன் இருக்க, இடபம், துலாம் ராசிகளிலொன்றில் சந்திரன் இருந்தால் அலியாவான்.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், சசி - சந்திரன், ஏய்ந்தபடி - மேலே சொல்லியபடி, இரட்டை ஒற்றை - இரட்டை ஒற்றை ராசிகள், மருவ - கூடியிருக்க, வெள்ளி - சுக்கிரன்

இதுவும் அலி சாதகம்

ஆகிய சன்மத்தினில் மதியிருக்க ஆதவன் புதன் சனி மூவர்
வாகுசேர் இரட்டை ராசியிலிருக்க, மற்றுமிம் மூவர்கள் தனையும்
மோகமாய் அங்காரகனுமே நோக்க, முகிழ்முலை மாதரை இகழ்ந்தே
ஏகமாம் குறியற்று அன்னவர்களாவர் என்பது திண்ணம் என்றுரைக்கும். 2

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சந்திரன் இருக்கவும், சூரியன் புதன் சனி ஆகிய மூவரும் இரட்டை இராசியில் இருக்கவும், இம்

மூவர்களையும் விருப்பமாய் செவ்வாய் பார்க்கவும் பிறந்தவன் பிறப்பில் ஒரே இனத்தன்மையில்லாமல், அழகிய பெண்களை பழித்து இகழ்ந்து பேசும் பேடித் தன்மையினைப் பெற்ற இனமாவான் என்பதனை உறுதியாக நூலறிந்தோர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

மதி - சந்திரன், ஆதவன் - சூரியன், இகழ்ந்தே - பரிகாசம் செய்தே, ஏகமாம் குறியற்று - ஆண், பெண் என்ற ஒரு தன்மையில்லாமல், அன்னவர் - அலியானவர், திண்ணம் - உறுதியானதாம்.

ஏழாவது இடம் - பலன்கள்

களத்திரம் (மனைவி) மோகம், யோகம், மனைவி இன்ன இனம் என்றறிதல்

சாதமுறும் காலையில் சுக்கிரன் தன்னோடு
தக்க பிரகசுபதி கூடில் விப்பிரகன்னியாம்
சோதி ரவி குசன் கூடில் சத்திரிய மயிலாம்
சோமனார் சுதன் கூடில் வயிசியகுலத் தோகை
பூதலமேல் சனி கூடில் சூத்திரக் கன்னிகையாம்
பொருமிரு பாம்புடன் கூடில் புலையர் குலத்துதித்த
பேதையர்களுடன் கூடி அனுராகம் புரிந்து
பிரியாமலிருப்பரெனப் பெரும் வரிசை பெறவே. /

தொகுப்புரை:

ஒரு மனித சீவன் பிறந்த காலத்தினைக் கொண்டு கணித்து எழுதப்பெறும் சாதகத்தில் பன்னிரண்டு ராசிகளிலமைந்த ஒன்பது கிரகங்களில், ஏழாவது இடமாகிய களத்திரஸ்தானத்தில் உள்ள கிரகங்களைக் கொண்டு இவர்க்கு இன்ன இனத்திலுதித்த களத்திரம் அமையும் என்பதை,

சுக்கிரனுடன் குரு கூடியிருந்தால் பிரமாணப் பெண்ணும்

ஒளி நிறைந்த சூரியனுடன் செவ்வாய் கூடியிருந்தால் சந்திரியப் பெண்ணும்

சந்திரனுடன் அவனது குமாரன் எனப்படும் புதன்கூடியிருந்தால் வைசியப் பெண்ணும்

சனி கூடியிருந்தால் சூத்திரப் பெண்ணும், ராகு கேது இவைகளில் ஒருவர் கூடியிருந்தால் தாழ்ந்த சாதிப் பெண்ணும் மிகுந்த சீதனங்களுடன் அமைவர்

அருஞ்சொற்பொருள்

சாதமுறும் - சாதகம் அமையும் பொழுது, பிரகசுபதி - குரு, சோமனார் - சந்திரன், சுதன் - மகனான புதன்.

பலவிவாகம் செய்வன் களத்திரத்திற்குக் கெடுதியுண்டு

வரிசைபெறு களத்திரத்தானாதிபனைக் கூடி
வாழ் கிரகம் எத்தனை உண்டு அத்தனை மின் மணப்பன்
உரிய களத்திர காரகன், அதிபன் சுபமாய்
உற்றிடின் நற்கோள் காண்கில் உத்தமம் மற்றிவர்தாம்
அரியிடத்தும் வியமுறினும் பாவர்களே காண
அமர்ந்திடினும் மத்திமமாம் அரவு செவ்வாய் இருவர்
பிரியமுடன் களத்திரத்து உற்றிடின் மடவார்க்கு ஆனி
பெருகு சுபக்கோள் நோக்கம் பெற்றிடின் உத்தமங்கள். 2

தொகுப்புரை:

களத்திரஸ்தானாதிபதியோடு எத்தனை கிரகங்கள் கூடி இருக்கின்றனவோ அத்தனை விவாகங்கள் செய்வான்.

களத்திரகாரகன் ஸ்தானாதிபதி சுபனாய் இருந்தாலும், சுபர்களால் காணப்பட்டாலும் களத்திரம் உத்தமமானதாகும்.

மேலே சொல்லிய கிரகங்கள் சிம்மத்திலோ, விரையத்திலோ இருக்கவும், பாபகிரகங்கள், அவர்களைப் பார்த்தால் மத்திமமான மணம் நிகழும்.

ராகு செவ்வாய் இருவரும் நட்பாக களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தில் இருந்தால் மனைவிக்கு கெடுதியுண்டாம்.

ஆனால் அவர்களை சுபர்காணின் உத்தமமாக அமையும்.

அருஞ்சொற்பொருள்

வரிசை - லக்கினத்திலிருந்து வரிசையில் ஏழாமிடத்தைப் பெறும் ராசி, மின் - அழகிய மனைவி, அரி - சிங்கம், அரவு - ராகு, மடவார் - மனைவி, ஆனி - கெடுதி, உத்தமம் - பொருத்தமாக அமையும்.

பலபேரைக் கூடி ஒரே விவாகம்

களத்திரலக்கினாதிகலந்துதன் மனையில்நிற்கில்
கிளத்தியாய்ப்பலரைக்கூடில்கிடைப்பது ஒன்றேவிவாகம்
களத்திரக்குடும்பத்தாதிகனபாபர்வெள்ளிகூடில்
வளத்தியாய்மூன்றுஒன்றுஆறில்மருவிடின்மனைவிக்கீனம். 3

தொகுப்புரை:

களத்திரஸ்தானாதிபதி லக்கினாதிபதியுடன் கலந்து தன் வீட்டிலேயே இருந்தால், சாதகன் பலவகையில் பல பெண்களைக் கூடியவனாக இருக்கினும் அவனுக்கு மனைவி கிடைப்பது ஒருத்தியேயாகும்.

களத்திராதிபதியும், குடும்பாதிபதியும், பாவகிரகங்களுடனும் சுக்கிரனுடனும் கூடினாலும், மூன்று ஒன்று ஆறாமிடங்களிலொன்றில் இருந்தாலும் மனைவிக்கு ஈனம் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

மனை - ராசி வீடு, கிளத்தியாய் - வெளிப்படையாகவே, பலரை - பல மாதரை, கனபாபர் - மிகுந்த பாபகிரகங்கள், வெள்ளி - சுக்கிரன், ஈனம் - குறைபாடு.

இப்பாடலில் 1, 7க்குரிய கிரகங்கள் சேர்ந்து ஏழாமிடத்தில் இருக்கவும். சுக்கிரனுடைய பார்வையைப் பெறவும் இருந்தால் ஸ்திரீலோலனாக ஒரு விவாகம் மட்டும் நிகழும் என்று கூறலாகும்.

விவாகம் இல்லை

ஈனமில் லக்கினாதி ஏழாமாதிபனும் கூடித்
தானமாம் வியம் ஆறு எட்டில்தான் உறில் விவாகமில்லை
ஆன ஏழிடந்தான் சுத்தியாய் ஏழாமாதிபனோடு
ஊனமில் பலர்கூடி ஒருத்தியென்றுரை வெள்ளிக்கே. 4

தொகுப்புரை:

லக்கினாதிபனும் ஏழாமிடத்தோனும் கூடி பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் இருந்தால் சாதகனுக்குத் திருமணம் இல்லை.

ஏழாமிடம் சுத்தியாய் அந்த ஏழாமிடத்தானோடு குறையில்லாத கிரகங்கள் பலர் கூடியிருந்தால், ஒருத்தியே மனைவியாவாள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

ஈனமில் - குறைவில்லாத, தானமாம் - ராசி இடங்களாம், வியம் - விரையஸ்தானம், சுத்தியாய் - பாபகிரகங்களோ தீயவர் பார்வையோ இல்லாததாய், ஊனமில் - நீசம் முதலான குற்றமில்லாத

தானமாம் வியம் ஆறு எட்டில் தான் உறில் என்று இரண்டாவது அடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1, 7க்குரிய கிரகங்கள் கூடி மூன்று இடத்திலும் இருப்பதில்லை. ஏதோ ஒரு இடத்தில்தான் இருப்பது அமையும். எனவே 12, 6, 8 ஆகிய இடங்களில் எந்த இடம் அமைந்துளதோ அந்த ராசியின் பொதுப்பலனை அடிப்படையாகக் கொண்டு களத்திரபலனையும் அறிந்து பலன் காண்பர்.

விதவையை மணப்பான்

வெள்ளி சேய் ஏழினில் நிற்கில் விதவை மாதரை மணப்பன்
ஒள்ளிய மதி சேய் ஆயாமதிபனோடு உற்று நான்கில்
தெள்ளிதாய் நிற்கிலேனும் சென்மம் ஒன்பான் நாலு ஆறும்
வள்ளலின் நால்வர் கூடில் மற்றுமோர் விஷயமுண்டாம். 5

தொகுப்புரை:

சுக்கிரனும் செவ்வாயும் கூடி களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தில் இருந்தால் விதவைப் பெண்ணை விவாகம் செய்து கொள்வான்.

சந்திரனும் செவ்வாயும் ஆறாமிடத்தோனுடன் சேர்ந்து நான்காம் இடத்தில் இருந்தாலும்

சென்மம் ஒன்பது நான்கு ஆறு ஆகிய இடங்களுக்குரிய நான்கு கிரகங்களும் சேர்ந்து (12, 6, 8 ஆகிய இடங்களில் ஒன்றில்) இருந்தாலும் மனைவி நடத்தையில்லாத விஷயமாவாள்.

அருஞ்சொற்பொருள்:

வெள்ளி - சுக்கிரன், சேய் - செவ்வாய், தெள்ளிதாய் - தெளிவாக, சென்மம் - லக்கினம், வள்ளலின் - பலன் தரும் தன்மையுடன், மற்றுமோர் விஷயம் - வேறொரு செய்தியாகும்.

மாதர் பலர், மாதருக்கு இனியன்

ஏழாம் வீட்டினிற் க்திபன் சரத்தில் நிற்கில்
இருமனைவி திரத்தினில் இருக்க நன்றே
தாழ்விலா உபயத்தில் இருக்கின் மாதர்
சாவின்றிப் பலருளராம் தானத்தாதி
வாழிடம் நோக்கிய கோளால் பலன்கள் கூடும்
மற்றும் லக்கனத்தாதி சுங்கன் வீட்டில்
சூழ்கினும் சுங்கனைக் கூடில் சுங்கன் பார்க்கில்
தூய ஸ்திரீலோல னெனவே சொல்லலாமே. 7

தொகுப்புரை:

ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்திற்கு உடையவன் சரத்திலிருந்தால் இரண்டு மனைவியர் உண்டு.

திரத்தினில் இருந்தால் நன்மையாம், குறைவில்லாத உபயத்தில் இருந்தால் சாவில்லாமல் பல மனைவியருண்டு.

ஏழாமிடத்தோன் இருக்கும் இடத்தைப் பார்க்கும் கிரகங்களுக்கு ஏற்ப களத்திர பலன்கள் கூடும்.

லக்கினாதிபன் சுக்கிரன் வீட்டில் இருந்தாலும் , சுக்கிரனோடு சேர்ந்து இருந்தாலும் அல்லது சுக்கிரன் லக்கினாதிபதியைப் பார்த்தாலும்,

நல்ல மேன்மையான பெண்களைசம்போகம் செய்யும் சாதுரியம் படைத்தவன் என்று சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்:

மாதர் - மனைவியர், தானத்தாதி - ஏழாம் இடத்தோன், கோளால்- கிரகங்களால், சுங்கன் - சுக்கிரன், தூயஸ்திரி - குறைவில்லாத பெண்கள்.

மனைவி இல்லை - புத்திரர் இல்லை

சொல்லும்ஏழாமிடத்தில்இந்து சுக்கிரன்
மெல்லமேவினும்மிக்கசனிகுசன்
அல்லல்தீரவுறின்அனைத்தும்மனையாளுமே
இல்லை, வந்ததேல்இல்லை புதல்வரே. 8

தொகுப்புரை:

சிறப்பாகச் சொல்லப்படும் ஏழாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்து இருந்தாலும் அல்லது

சனியும் செவ்வாயும் சேர்ந்து ஏழாமிடத்தில் இருந்தாலும்

எக்காலத்தும் சாதகனுக்கு மனைவி இல்லை எனலாம், ஒரு சமயம் விவாகம் ஏற்பட்டால் பிள்ளை இல்லாமல் போகும்.

அருஞ்சொற்பொருள்:

இந்து - சந்திரன், மேவினும் - ராசியில் இருந்தாலும், குசன் - செவ்வாய், அல்லல் தீர - பகை இல்லாமல், அனைத்தும் - எக்காலத்திலும்.

மணப்பான் - பிரிந்து போவாள்

இல் ஏழு இரண்டாமாதி சுக்கிரன் இவர்கள் மூவர்
பொல்லாரோடெய்தி ஆறில் எட்டில் பன்னிரண்டில் போந்து
சல்லாபமுடன் நின்றோர்கள் தம்முடன் பாவர் கூடில்
சொல்லாரும் தோகைக்கு மாலை சூட்டுவன், தோகை நில்லாள். 9

தொகுப்புரை:

ஏழாமிடத்தோன், இரண்டாமிடத்தோன், சுக்கிரன் இவர்கள் மூவரும் பாபகிரகங்களோடு சேர்ந்து ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் உல்லாசத்தோடு நட்புறவாக இருக்கும்போது, அவர்களோடு பாபிகள் வந்து சேரும் காலத்தில் ஒரு பெண்ணை விவாகம் செய்வான். ஆனால் அப்பெண் பிரிந்து போவாள்.

அருஞ்சொற்பொருள்:

இல் - இராசியிடம், பொல்லார் - பகைவர், பாபிகள், போந்து - சென்றிருக்க, சல்லாபமுடன் - நட்புறவான நயப்புடன், தோகை - பெண், மாலை சூட்டுவன்- மணம் செய்வான், நில்லாள் - சேர்ந்து இருக்கமாட்டாள், இறப்பாள், பிரிந்து போவாள் என்பதே சரியானதாகும்.

வேசியர் விரும்புபவன்

நின்று இரண்டோடு ஏழாமாதி நிறைந்த கேந்திர கோணத்தில்
ஒன்றியே இருக்கில் ஏக தாரமாம், உற்ற அன்னோர்
வென்றிகொள் பிருகு பாவருடன் கூடி, மெய் ஆறு எட்டில்
குன்றிடாது இருக்கில் வேசிக் காந்தனாம் கூறுங்காலே. 10

தொகுப்புரை:

இரண்டு எழுக்குரிய கிரகங்கள் கேந்திரம் திரிகோணங்களில் சேர்ந்திருந்தால் ஒரே தாரமாகும்.

மேலே கூறிய இரண்டு கிரகங்களும், சுக்கிரனோடும் பாபிகளோடும் கூடி, லக்கினம், ஆறாமிடம், எட்டாமிடம் ஆகியவற்றிலொன்றில் குறைபெறாது இருப்பார்களானால்,

சாதகன் வேசியர் விரும்பும் சல்லாபமுடையவனாவான் என்று கூறப்பெறும்.

அருஞ்சொற்பொருள்:

ஒன்றியே-ஒன்றாகச்சேர்ந்தே, ஏகதாரம்- ஒரே மனைவி தான், பிருகு - சுக்கிரன், மெய் - லக்கினம், குன்றிடாது - நீசம் பெறாது பலம் குறையாமல், காந்தன் - விரும்புவன்.

ஒரே தாரம் - பெறுவன்

கூறிய ஏழாமாதி குடும்பாதி பதியினோர்கள்
ஏறியே திரிகோணத்தும் கேந்திரந்தனிலும் நிற்கப்
பேறுடன் அவர்தம் வீட்டில் பிரியமாய் இருக்கத்தானும்
வேறுமோர் தாரம் வேண்டான் விரும்புவன் ஏகதாரம். //

தொகுப்புரை:

பெண்ணிசைந்திடும் ஏழாமிடத்தோன் குடும்பாதி யுடன் கூடி கேந்திரத்திலோ திரிகோண ராசியிலோ நிற்பது அவரவர்களின் வீடாக இருக்க ஆட்சியுடன் இருப்பார்களாயின்

சாதகன் வேறுமோர் தாரம் வேண்டான், ஒரே தாரத்தினையே விரும்புவான்.

அருஞ்சொற்பொருள்:

பேறுடன் - அவரவரின் ஸ்தானம் என்ற பெருமையுடன் உள்ள வீட்டின், தாரம் - மனைவி, ஏகதாரம் - ஒரே தாரம், ஒரே மனைவி.

மனைவிக்கு கெடுதியுண்டாகும்

தார காரகனும் ஏழாம் அதிபனும் தனித்தும் கூடியும்
ஆரவே பாவர் மத்தியத்துற ஏழில் பாபர் இதமுடன்
சேரவே இவரைப் பாவர் செறிய நோக்குற இருந்தால்
பாரியர் தனக்கரிட்டம் பண்ணுமென்றறிந்து கொள்ளே. 12

தொகுப்புரை:

களத்திர காரகனும் ஏழாம் இடத்து அதிபனும் தனித்தும் கூடியும் இருந்தாலும்

பாபகிரகங்கள் இவர்களுக்கு மத்தியிலிருந்தாலும், ஏழாமிடத்தில் பாவிகல் நன்றாகச் சேர்ந்திருந்தாலும்

மேலே கூறப்பட்ட இரண்டு கிரகங்களையும் பாவிகள் முழுப்பார்வையுடன் நோக்கினும்

சாதகனின் மனைவிக்குக் கெடுதி உண்டாகுமென்று அறிந்து கொள்வாயாக.

அருஞ்சொற்பொருள்:

தாரகாரகன் - களத்திர காரக கிரகம் சுக்கிரம், ஆரவே - இருக்கவே, செறிய - நேராக, அரிட்டம் - கெடுதி.

மனைவி துன்பமுற்று இறப்பாள்

கொள்ளுநற்காரி வெய்யோன்கூடி கன்னியிலேநிற்க
தெள்ளிதாய்அந்த வீடும் சென்மலக்கினமேயாக
மெள்ளவேஅரசன்தானும் மீனத்தில் மேவிநிற்க
துள்ளியமனைவிதானும்துன்பமுற்றுஅரிட்டமாமே. 13

தொகுப்புரை:

சனியும் சூரியனும் கூடி கன்னிராசியில் நிற்கவும், தெளிவானதாக அந்த கன்னியா ராசியும் சாதகனின் சென்ம லக்கினமாக இருக்கவும்

குருவானவர் மீன ராசியில் சென்றிருக்கவும் அமைந்த சாதகமானால், நன்றாக இருந்த மனைவி துன்பமடைந்து அரிட்டமாவாள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

காரி - சனி, தெள்ளிதாய் - தெளிவாக, அரசன் - குரு, அரிட்டம் - இறந்து போதல்.

சனியும் சூரியனும் கூடி கன்னியில் இருக்கவும், அந்த வீடு சென்ம லக்கினமாகவும், குரு மீனத்திலிருந்தால் களத்திரம் துன்பப்பட்டு அரிட்டமாவாள்.

மணம் செய்யாத வஞ்சனையான்

ஆம்லக்கினத்துக் கேழில் அம்புலி தனக்கும் ஏழில்
பூமலி நல்லோர் பார்வை பொருந்திடில் உண்டாம் பெண்டிர்
தீமையாம் கடினபாவர் திருட்டி, உண்டானபோது
மானனையார்கள் தம்மை மணந்திடா வஞ்சனாமே. 14

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழிலும், சந்திரனுக்கு ஏழாமிடத்திலும் சுபகிரகங்களின் பார்வை அமைந்திருந்தால் மனைவி வாய்ப்பாள்.

தீமையைத் தருகின்ற கொடிய பாபகிரகங்களின் பார்வை ஏற்பட்டிருந்தால் அழகான பெண்ணை மணக்காதவனாகி வஞ்சனை செய்பவனாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

அம்புலி - சந்திரன், நல்லோர் - சுபகிரகங்கள், கடினபாவர் - சனி ரகு போன்ற பாபர், திருட்டி - பார்வை, மானனையார் - மானைப் போன்ற அழகிய பெண்கள் வஞ்சனை - ஏமாற்றுதல்.

இந்தப் பாடலால், சாதகனுக்கு மனைவி உண்டென்பதும், கொடிய கிரகங்களின் பார்வைப் பலனால் பெண்களை மணம் செய்யாமல் வஞ்சனை செய்பவன் என்பதும் அறியப்படும்.

மனைவியர்க்கு ஈனம் உண்டாம்

ஆமே ஏழாம் அதிபன் தாரகாரகன் நீசமாகித்
தாமிவர் வியம் ஆறு எட்டில் தானுற மனைவிக்கு ஈனம்
வாம சுக்கிரன் வாழ் வீட்டில், மன்னவன் வியம் ஆறு எட்டில்
ஏமமற்று இருக்கில் கொண்ட மனைவியர் யார்க்கும் ஈதே. 15

தொகுப்புரை:

களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திற்கு அதிபன், களத்திரகாரகன் இருவரும் நீசமடைந்து, பன்னிரண்டு ஆறு

எட்டு ஆகிய இடங்களில் இருந்தால் மனைவிக்கு கெடுதி ஆகும்.

சுக்கிரன் இருக்கின்ற வீட்டிற்கு பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களிலொன்றில் குருவானவர் பலமில்லாமல் இருந்தால், சாதகன் மனைவிகள் யாவருக்கும் கெடுதியே உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஆமே - ஆகும், தாரகாரகன் - களத்திரகாரகனாகிய சுக்கிரன், ஈனம் - கெடுதி, வாம - அழகிய, வீட்டில் - வீட்டிற்கு, மன்னவன் - குரு, வியம் - விரையஸ்தானம் பன்னிரண்டாம் இடம்.

திருமணம் நிகழும் தேசம்

ஈறிலாஏழாமாதிஏகமாய்பாவர்வீட்டில்
தூயதாய்நிற்கில்பார்க்கில்கல்யாணம்தூரதேசம்
வீரதாம்களத்திராதிசுபாங்கிசம்மேவில்கிட்டல்
பேருடன்திசைகள்ஏழும்அதிபரைப்பிடித்துச்சொல்வாம். /6

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடமாகிய களத்திரஸ்தானாதிபதி தனியாக பாபகிரகத்தின் வீட்டில் குறையில்லாமல் இருந்தாலும் பார்த்தாலும், சாதகனுக்கு தூர தேசத்தில் திருமணம் ஆகும்.

சிறப்பமைந்த களத்திராதிபதி சுபகிரகத்தின் அங்கிசஸ்தானத்தில் இருந்தால் சமீப தேசத்தில், ஊரில் திருமணம் நிகழும்.

திருமணம் நிகழும் திக்கு திசையினைத் திட்டமாகக் கூற வேண்டுமாயின், களத்திரஸ்தானாதிபதியினைக் கொண்டே சொல்லப்படும்.

அருஞ்சொற்பொருள்:

ஈறிலா - குறைவில்லாத, ஏகமாய் - தான் ஒருவனாக, சுபாங்கிசம் - சுபர் வீட்டில் சேர்ந்திருந்தால், கிட்டல் - அருகாமையான ஊர், பேருடன் - பெயருடன்.

சாதகனுக்குரிய ராசிசக்கரத்தில் ஏழாமாதிபதி இருக்கும் இடத்தைக் கொண்டு, திருமணம் நிகழும் தேசமுள்ள திக்கு திசைகளை அறியும் உபாயம், தொடரும் பாடலால் விளக்கப்படுகிறது.

திருமணம் நிகழும் திக்கு, திசை

வாமசூரியன்கிழக்கு, மன்னு சுக்கிரற்கு கன்னி
பூமிசேய்தனக்குத் தெற்கு, பெரும்பாம்பு நிருதியாகும்
தாமத சனிக்கு மேற்கு, சசிக்கு வாயுவின்திக்காகும்
நேமமாம்வடக்கு புந்தி நிருபர்க்கு ஈசானதிக்கே. 17

தொகுப்புரை:

ஏழாம் வீட்டோனைக் கொண்டு திருமணம் நிகழும் திசையினை அறிவதாவது

சூரியனாயின் - கிழக்கும், சுக்கிரனாயின் அக்கினி திசையும் (தென் கிழக்கு)

பூமி புத்திரனாகிய செவ்வாய்க்கு தெற்கும், ராகு கேதுக்களுக்கு நிருதியும் (தென் மேற்கும்)

சனிக்கு மேற்கு திசையும், சந்திரனுக்கு வாயுதிக்கென்னும் வடமேற்கும்

புதனுக்கு வடக்கும், குருவுக்கு ஈசானியமென்னும் வடகிழக்கும்

திருமணம் நிகழும் திக்கு திசைகளென சொல்லப்படும்.

ஏழாம் வீட்டோனைக் கொண்டும், ஏழாம் வீட்டில் உள்ள கிரகத்தினைக் கொண்டும் சிந்தித்துத் திசைகளை அறிதல் வேண்டும்.

மற்றும், ஏழாமிடத்தோன் நின்ற திக்கிலே விவாகம் கூடும். சந்திரனுக்கு ஏழாமிடமும் பார்த்துச் சொல்லவும்.

விரும்புவன் நாலுகால் பெண்ணே!

திக்கெனவே ஏழோன் வியத்தில் ஆறு எட்டில் செறிந்த பாவனாயிருக்க
தக்கவன் தனைப் பார்த்தவர்கள் அத்தனைக்குத் தாரமாம் களத்திராதிபனும்
ஒக்கவே பாவருடனுற ஏவிலோ கரும்பாம்புற, அதற்கும்
மிக்க கேந்திரத்தில் பாவர் பார்த்திருக்க விரும்புவன் நாலுகால் பெண்ணே!

தொகுப்புரை:

களத்திராதிபதியாகிய ஏழாமிடத்தோன் பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் மிகுந்த பாபியாக இருக்க, அவனை பார்த்த கிரகங்கள் எத்தனையோ அத்தனைத் தாரமுண்டாகும்.

களத்திரஸ்தானாதிபன் பாபிகளுடன் கூடியிருக்கவும், ஏழாமிடத்தில் ராகு இருக்கவும்

அதற்குக் கேந்திரஸ்தானத்தில் பாவர் இருந்து ராகுவைப் பார்க்க அமைந்திருந்தால், சாதகன் நான்கு கால் பெண்ணை விரும்புவான்.

அருஞ்சொற்பொருள்:

தக்கவன் தனை - அந்த ஏழாமிடத்தோனை, கரும்பாம்பு - ராகு, ஒக்கவே - ஒன்றாகச் சேர்ந்தே நாலுகால் பெண்ணே - நாலு கால்களை உடைய பெண் மிருகம், பிராணி.

இப்பாடல் மிருக சேர்க்கையில் விருப்பமுடையவன் என்பதைக் குறிக்கின்றது. கிரகங்களுக்குரிய மிருக சாதிகளைக் கொண்டு இன்ன மிருகமென்பதனையும் குறிப்பார்கள்.

மனைவி வாலிபத்தில் இறப்பாள்

பெண்ணிசைந்திடும் ஏழாமிடத்ததிபன்
பேரொளிக் கதிருடன்கூடில்
எண்ணிசைந்திடும் எட்டு ஆரினில் வியத்தில்
இருக்கில் வாலிபத்திலே மனையாள்

விண்ணிசைந்திடுவள், களத்திராதிபனும்
மிக்க நற்கோளுடன்கூடில்
பண்ணிசைந்தருளும்மனைவி, தீக்கோளைப்
பார்த்திடில் பாவியாய் இருப்பாள். 19

தொகுப்புரை:

ஒருவருக்கு அமையும் களத்திரத்தை நிர்ணயம் செய்யும் ஏழாமிடத்தின் சூரியனுடன் கூடி இருந்தாலும்

எண்ணுக்குரிய எட்டு ஆறு பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் இருந்தாலும், அவன் மனைவியானாவள் வாலிப வயதிலே பரலோகம் போய் விடுவாள்.

களத்திரஸ்தானாதிபதி மிகவும் நல்ல சுபகிரகத்துடன் கூடியிருந்தால், நல்ல உத்தமமான பெண் மனைவியாக இருப்பாள்.

களத்திரத்தானாதிபதி தீய கிரகங்களைப் பார்ப்பதாயின், அமையும் மனைவி பாவியாக இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

பேரொளி - மிகுந்த பிரகாசமுடைய சூரீயன், கதிர் - சூரியன், மிக்க நற்கோள் - குரு, தீக்கோளை - சனி ராகு கேது ஆகியோரை.

அருஞ்சொற்பொருள்:

சூரியனும் புதனும் கூடி ஏழாமிடத்தில் இருந்தாலும் களத்திரதோஷம் காண்பதும் உண்டென்பர்.

விதவைப் பெண்ணைக் கூடுவான்

பாவியாம்சனி ஏழாமதிபனாகிப்
பன்னிரண்டு ஆறு இருநான்கில்
மேவிடில் விதவை நாரியைச் சேர்வன்
மிக்க ஏழாமிடத்து அதிபன்
நாஇரண்டான பாம்பொடும் கூடி
நாடி எட்டு ஆறினில் வியத்தில்
தாவியே இருக்கில் ஈனமாம் குலத்தில்
தையலைச் சேர்வனென்றுரைக்கும். 20

தொகுப்புரை:

பாவியாகிய சனி ஏழாமிடத்துக்கு அதிபனாக இருந்து, பன்னிரண்டு ஆறு எட்டு ராசி இடங்களில் இருந்தால்,

விதவைப் பெண்ணைச் சேருவான், ஏழாம் இடத்தோன் ராகுவோடு கூடி எட்டு ஆறு பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் இருந்தால்

ஈனசாதிப் பெண்ணைச் சேர்வானென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

இருநான்கு - எட்டாமிடம். நா இரண்டான - நாக்கு இரண்டாகப் பிரிவான பாம்பு, தையல் - பெண்

இரண்டாமிடம் ஏழாமிடம் ஆகிய இடங்களில் சூரியனும் செவ்வாயும் குளிகனோடு இருந்தால் விதவையைக் கூடுவான். சூரியன் சுக்கிரன் குளிகன் இவர்கள் கூடி ஏழாமிடத்தில் இருந்தாலும் ஏழாமிடத்தோனைப் பார்த்தாலும் முறை தவறி சேரும் பாவியென்றும் கூறுவார்கள்.

மனைவியை பிறருக்களித்து உண்பான்

உரைக்கும் ஏழாதிகாரி வாழ்மனை உற்றிட, காரிதான் பார்க்க
இருக்கவே ஏழிடத்துக் கொன்பதாம் அதிபன் எட்டிலாயினும் சனி வீட்டில்
பெருக்கவே இருக்கிலவன்குல மனைவியைப் பிறர்தமைச் சேர்ந்தவரவர்கள்
பொருள்களைவாங்கிவரச் சொல்லி புசிக்கும் புண்ணியவானெனப்புகலும்.

தொகுப்புரை:

ஏழாமிடத்துக்குரிய கிரகம் வாழுகின்ற இடத்தில் சனிதான் பார்க்கவும், அல்லது சேர்ந்து இருக்கவும் அமைந்ததோடு

ஏழாமிடத்திற்கு ஒன்பதாமதிபன் எட்டாமிடத்தி லாயினும் சனி வீட்டிலாயினும் நன்றாக இருப்பானாயின்

அவன் தன் மனைவியைப் பிறர் சேரவிட்டு, அவர்களிடம் பொருள்களை வாங்கிவரச்சொல்லி வயிறு வளர்க்கும் செயலுடையவனெனச் சொல்லப்படும்

அருஞ்சொற்பொருள்:

மனை - ராசி, இடம், காரி - சனி, குலமனைவியை - தனது மனைவியை, அவர்கள் பொருள்களை - மனைவியைச் சேர்ந்த அந்நியரின் பொருள்களை, வாங்கிவரச் சொல்லி - மனைவியை வாங்கி வரச்சொல்லி,

ஏழுக்குடையோன் சனி வாழ்மனையில் இருந்தாலும் (என்றும் பாடமாக்கி) அவனைச் சனி பார்த்தாலும் கூடி இருந்தாலும்,

ஏழுக்கு ஒன்பதாமதிபன் எட்டிலிருந்தாலும் சனி வீட்டிலிருந்தாலும், சாதகன் தன் மனைவியை அந்நியரிடம் விட்டு, அவர்களது பொருள்களை மனைவி வழி வாங்கிவரச் செய்து வாழும் அற்பனாக இருப்பான்.

திர, உபய ராசிகளால் மனைவியர் பலன்

புகலும்ஏழாதிபிரபலனாகிப்
பொருந்தும்மித்துருக்களைக் கூடில்
இகலிலாலாபத்தானத்திலிருக்க
இருந்தபேர்தொகைப்படி மனைவி
திகழுடனுளதேல், அந்த லாபந்தான்
திர உபயங்களேயாயின்
சுகமுடன்இருப்பள்சரமெனில்சிறிது
தோகையர்க்கு அரிட்டமேசொல்லும். 22

தொகுப்புரை:

சென்னலக்கினத்திற்கு ஏழாமிடத்தோன் தனது நட்புறவு கிரகங்களைக் கூடி, குற்றமில்லாத லாபத்தானமாகிய பதினோராம் இடத்தில் இருக்க, உண்டு.

அந்த லாபஸ்தானமானது ஸ்திர உபயராசிகளாக இருந்தால் மனைவிகள் சுகமுடன் இருப்பார்கள். சர லக்கினமானால் சிறிது கெடுதிகள் அவர்கட்கு உண்டாகுமென்று சொல்லப்படும்.

அருஞ்சொற்பொருள்:

புகலும் - சொல்லப்படும், மித்துருக்களை - நட்பு கிரகங்களை, இகலிலா - பழிப்பில்லாத, தோகையர்க்கு - மனைவிகளுக்கு

வெகு மனைவியர், ரட்சிக்க மாட்டான்

சொல்லிய கன்னி லக்கினமாகச்
சோமனும் சனியும் கேந்திரத்தில்
மெல்லவே இருக்க, சத மனைவியரை
மிகுமணம் புரிந்து பூபதியாய்
வல்லவனாவன், ஏழிற் சுக்கிரனும்
மருவு சென்மத்தினில் குருவும்
அல்லல் அற்று இருக்கின் மனைவியர்
வெகுவாம் அவரையும் ரட்சிக்கமாட்டான். 23

தொகுப்புரை:

கன்னிராசி சென்ம லக்கினமாக, சந்திரனும் சனியும் கேந்திர ஸ்தானங்களில் நன்முறையில் இருப்பார்களாயின்

நூறு மனைவியரை மேலான மணம் புரிந்து பூமிக்கு அதிபதியாகவும், சகல வல்லமை படைத்தவனாகவும் சாதகன் இருப்பான்.

ஏழில் சுக்கிரனும் சன்மத்தில் குருவும் குற்றமற்று இருந்தால் மனைவியர் அனேகராவர். ஆனால் அம்மனைவிகளை ரட்சிக்கமாட்டான்.

அருஞ்சொற்பொருள்:

சோமன் - சந்திரன், சத மனைவியர் - நூறு மனைவியர், பூபதி - நாடாளும் மன்னன், அல்லலற்று - பிற கிரகங்களின் தீமை இல்லாமல், ரட்சிக்க - பாதுகாக்க

இப்பாடல் அரச தகுதியுடையவனின் களத்திர பலன் உணர்த்துவதாகும்.

மனைவி, மக்களை விரட்டிடுவான்

மாட்டினிற்கிறை சுக்கிரன்குசன் சோமன்
மன்னவன் இரவியோடு ஐவர்
ஈட்டி ஓரிடத்தில் கூடிடில் மனைவி
இல்லாமலே பிணியனாய்த் திரிவான்
நாட்டும் இந்து ரவி புதன் சனி வெள்ளி
நயந்துறில் மனைவி மக்களையும்
ஓட்டிவிடும் தேசாந்திரந்தன்னில்
உறு பிணியுடன் அலைந்தலைவன். 24

தொகுப்புரை:

இடப ராசிக்கு உரியவனான சுக்கிரன், செவ்வாய், சந்திரன், குரு, சூரியன், ஆகிய ஐந்து கிரகங்களும் ஒரு ராசியில் சேர்ந்து இருந்தால் மனைவி இல்லாமலேயே நோயுடையவனாகத் திரிவான்.

சந்திரன், சூரியன், புதன், சனி, சுக்கிரன் ஆகிய ஐவரும் கூடி இருந்தால், மனைவி பிள்ளைகள் ஆகியவர்களைத் துரத்திவிட்டு தேசாந்திரங்களில் நோயாளியாக அலைந்து திரிவான்.

அருஞ்சொற்பொருள்:

மாட்டினிற்கு இறை - ரிஷப ராசிக்கு உடைய கிரகம், குசன் - செவ்வாய், ஈட்டி - சேர்ந்து, நயந்துறின் - ஒன்றாகச் சேர்ந்து இருப்பின், தேசாந்திரம் - வெளி ஊர்கள், நாடுகள்.

பிரியமாய் நல்ல பெண்ணை மணப்பன்

அலைவறும் சன்மத்ததிபன், செறிந்த
அங்கிசாதி பன்தன் அகத்தில்
நிலைமையாம் மனைவி குரு வரும் காலம்
நிச்சயம் மணம் புரிந்திடுவன்
நலமுறும் சென்மந்தன்னகும் ஓரேழாம்
ராசி அங்கிசந்தன்னில் குருவும்
பலமுடனே வந்தணுகிய போதுப்
பிரியமாய்க் கொள்வன் நற்பெண். 25

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபன் இருக்கும் ராசியிடத்து அதிபனது வீட்டில் குரு சஞ்சாரமாக வரும் காலத்தில் நிலைமையாக இருக்கும் மனைவி தனை நிச்சயம் திருமணம் செய்வான்.

நலம் பொருந்திய சென்மலக்கினத்திற்கு ஏழாமிட அங்கிசத்தில் பலமுடன் குரு வரும்போது

பிரியமாக நல்ல பெண்ணை மணப்பான்

அருஞ்சொற்பொருள்:

அலைவறும் - உறுதியான, செறிந்த - போயுள்ள, அங்கிசாதிபன் - அந்த ராசியிடத்ததிபன், அகத்தில் - ராசி வீட்டில், பலமுடனே - பலம் பெற்றவனாக, வந்து அணுகிய போது - குரு சஞ்சாரமாக ஓராண்டளவில் நிற்க அந்த ராசிக்கு வந்தபோது, நற்பெண் - நல்ல பெண்.

குரு அம்சத்தில் நிச்சயம் மணம் நடக்கும் என்பதும், குருவின் சஞ்சார ராசியினால் நல்ல மனைவி அமைவள் என்பதும் அறியப்பெறும்.

களத்திரம் இத்தனை என்றறியும் காலம்

பெண்கொள்ளும் காலம், சந்திரன் இருந்த
பெரும்பதிக்கிறைவன் நற்புடமும்
பிறையுறை மனைக்கே ஏழாமிடத்ததிபன்
பெற்றநற் புடத்தையும் கூட்ட
பண்கொளும் எந்த ராசியோ அந்தப்
பதியிலப்பதி திரிகோணமாய்
பற்றியே அரசன் உற்றிடும் காலம்
பயில மணம் புரிவன், அக்குருவும்
எண்கொளும் உச்சாங்கிசம் பெறின் மனைவி
இனியன் ஈர்ங்கோதையும் சிவப்பாம்
இரணியன் தனுவாங்கிசத்துறின் மனைவி
இரண்டு மீனாங்கிச மேறில்
தண்கொள் மூனாம், மித்திராங்கிசத்து ஒருத்தி
சத்துரு அங்கிசம் அவனேறில்
தையல் நோய், நீசாங்கிசத்தினில் அரசன்
தரிக்கில் ஈனம்குலக் கொடிக்கே. 26

தொகுப்புரை:

சாதகன் மணம்புரியும் நற்காலத்தினை நன்கறிந்து முறைப்படி கூறவேண்டுமாயின்

சந்திரன் இருக்கும் வீட்டுக்குரிய கிரகத்தின் ஸ்புடத்தையும், அவனிருந்த வீட்டுக்கும் ஏழாமிடத்தோன் ஸ்புடத்தையும் கூட்டி வரும் எண்ணுக்கு வருவது எந்த ராசியோ அதற்கு திரிகோண ராசியில் குரு சஞ்சாரமாக வருங்காலத்தில் சாதகன் மணம் செய்வான்.

அக்குருவும் வந்து நிற்கும் திரிகோண ராசி உச்சாங்கிசமாக அமைந்தால் திருமணம் புரியும் மனைவி நல்லவளாகவும் அழகுடையவளாகவும் சிறப்புடையவளாக வும் இருப்பாள்.

குருவானவர் தனுர் ராசியில் அங்கிசம் பெற்றவராக அமைந்திருந்தால் இரண்டு மனைவியரும்

மீன ராசியில் அங்கிசத்து ஏறினால் ஒரு மனைவியும்

சத்துருவாகும் பகை ராசி அங்கிசத்து ஏறின் வரும் மனைவி நோயாளியாகவும்

குரு நீசம் பெறும் ராசியே மேலே குறித்த கணிப்பின் படியான திரிகோணராசி அங்கிசமாயின் மனைவி

ஈனகுலத்தன்மையுடையவளாக அமைந்திருப்பாள் என்பதும் சொல்லப்படும்.

குருவானவர் மேலே குறிப்பிட்டுள்ளபடி கணக்கிடும் ராசிக்கு திரிகோணத்தில் சிறப்பாகவும், மற்ற இடங்களாயின் பொதுவாகவும் சிந்தித்து, குரு கிரகத்தின் நிலையினையும் அறிந்து பலன் காண்பது குறிப்பிடத்தக்கதாகும். பாடல் கடைசி வரியில் "ஈனம் குலக் கொடிக்கே" என்பதும் அறிந்து கூறுவதாகும்.

மனைவியின் கெண்டம் அரிட்டம் காலமறிதல்

கொடியிடையாய் கேள்! இரண்டிடத் ததிபன்
குண குணகார நற்புடத்தில்
குலவிய யமகண்டன் புடத்தினை வாங்கி
குறித்த ராசியில் குரு வரும் நாள்
துடியிடை மனைவிக்கு அரிட்டமாம் இன்னும்
சொல் இரண்டாதிபன் புடத்தில்
சூழ்ந்திடும் குளிகன் புடத்தையே எடுத்து
தோன்றிய ராசியில் சனியும்
வடிவுடன் வருநாள் களத்திரந் தனக்கு
வரும் நிரியாண மென்றுரைக்கும்
திண்ணம் ஏழாம் அதிபதி புடத்தில்
வரும் காலம் மிருத்துவை எடுக்கப்
பிடிபடும் ராசி அந்த ராசிதனக்கே
பெற்றிடும் மாதம் அந்நாளில்
பிறைநுதல் திலக முகமதி கருங்கண்
பெண்ணணங்கே எனப் பேசும். 27

தொகுப்புரை:

கொடிபோன்ற இடையையுடைய பெண்ணே கேட்பாயாக.

சென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்திற்குரிய கிரகத்தில் குணகுணாகார ஸ்புடத்தில், குலவிய எமகண்டன்ஸ்புடத்தினைச் சேர்ந்து கணக்கிட்டுக் குறித்த ராசியில் குரு வரும் நாளில் மனைவிக்கு அரிட்டம் உண்டாகும்.

இரண்டுக்குடையோன் ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை எடுத்து கணக்கிட்டு எண்ணி வருகின்ற ராசியில், சனிவரும் நாளில் களத்திரத்திற்கு மரணம் உண்டாகும்.

ஏழுக்குடையோன் ஸ்புடத்தில் காலமிருத்தியாகிய கிரகத்தின் ஸ்புடத்தினைக் காண, அதற்குரியதாக வரும் ராசிக்குரிய மாதத்தில் அந்த நாளில் மனைவிக்கு கெண்டம் உண்டாகுமென்று

பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியும், அதில் அழகிய பொட்டும் இட்டுள்ள பூரண சந்திரனைப் போன்ற முகமும் கரிய அழகிய கண்களையும் உடைய பெண்ணில் பதுமை போன்றவளே, இவ்வாறாக சோதிடக் கணிப்பின் பலன்பேசும் என்பார்கள்.

அருஞ்சொற்பொருள்

குணகுணகாரம் - ராசிக்குரிய கிரகத்தின் தன்மையும் காரக நிலையும், ஸ்புடம் - சென்ம ராசியிலிருந்து குறிப்பிடும் கிரகம் உள்ள ராசியளவும் கணக்கிடும் எண்ணளவு, நிரியாணம் - மரணம், மிருத்து - காலன், மரணகாரகன். மாதம் அந்நாளில் - மாதமும் அம்மாதத்திற்குரிய கிரகத்தின் பெயருடைய நாளும், யமகண்டன் - மாரக கிரகம்.

கிரகங்களால் வரும் மனைவியின் செயல்கள்

பேசிய இரண்டாம் இடந்தனில் இரவி
பெரிதுறில் விடம் புசித்திடுவள்
பிறை குறைந்திருக்கில் சலத்தினால் கெண்டம்
பின்குசம் உறில், அனல் குளிப்பள்
பாகமாம் புந்தி பாவரைக் கூடில்
பசிதனைப் பொறுத்து ஒறுத்து இருப்பாள்
பாவரை அரசன் கூடிடில் மகிழ்நன்
பரிகலந்தனை வெறுத்திடுவள்
நேசமாம் பிருகு பாவரைக் கூடி
நின்றிடில் விடம் புசித்திடுவள்
நிறைசனி இருந்தால் வியாதியாயிருப்பன்
நீண்டதோர் பாம்பு இருவகையும்
தேசுடன் கூடில் பாச பந்தனத்தால்
சீவனை ஒழிக்கவே துணிவள்
தெரிந்த நல்லோர்கள் பார்வை உண்டாயின்
தீர்க்கவே சீவன் பெருந்திருவே. 28

தொகுப்புரை:

இரண்டாமிடத்தில் சூரியனிருந்தால் மனைவி விஷம் சாப்பிடுவாள்.

அதில், தேய்பிறைச்சந்திரன் இருந்தால் மனைவிக்கு நீரினால் கெண்டம் உண்டாகும்.

அதில் (இரண்டாமிடத்தில்) செவ்வாய் இருந்தால் நெருப்பினால் கெண்டம் ஏற்படும்.

புதன் பாவகிரகங்களோடு கூடி இருந்தால் மனைவி பசியைப் பொறுத்துக் கொள்ளும் தன்னையே வருத்திக் கொள்பவளாக இருப்பாள்.

பாபகிரகங்களை குரு கூடி இருந்தால் கணவன் சாப்பிடும் பாத்திரத்தில் உண்ணமாட்டாள்.

நட்பு ராசியில் இருக்கும் சுக்கிரன் பாபகிரகங்களோடு இருந்தால் மனைவி விஷத்தைச் சாப்பிடுவாள்.

சனியின் ராசியாகி அதுவே இரண்டாமிடமாகவும் அதிலே சனியும் இருந்தால் மனைவி மாறாத வியாதியுள்ளவளாகவே இருப்பாள்.

அதேஇரண்டாமிடத்தில் ராகு, கேது ஆகிய பாம்புகளில் ஒன்றிருந்தால் மனைவி கணவன் மீதுள்ள பாசத்தின் விடாத பிணைப்பினால் உயிரைவிடத் துணிவாள்.

மேலே சொல்லிய களத்திர தோஷங்கள், இரண்டாமிடத்தைச் சுபகிரகங்கள் பார்ப்பதாயின், சூரியனைக் கண்ட பனிபோல் நீங்க மனைவி தீர்க்காயுளுடன் லெட்சுமிபோல் உடன் வாழ்வாள்.

ஏழாமிடத்தைக் கொண்டு அறியும் பலன்கள்.

திருவளர் மதி சுக்கிரனும் ஏழிடத்து
செறிந்து அத்தமனமாய் இருக்கில்
சலத்து உயிரிழப்பள் ஏழிடம் தன்னில்
செங்கதிரிருக்க வந்தியளாம்
மருவும் சூரியனும் தூமனும் கூடில்
மனைவியை மருவிடா வஞ்சன்
மன்னு சக்கிர சாபன் உறில் மரிப்பன்
வளர்ப்பரி வேடமுற்றிடிலோ
சருவியே சண்டைக்காரியாய் இருப்பள்
தக்கதோர் குசனுறில் வந்தியள்
தகைமைசேர் விதிபாதனுறில் கர்ப்பம்
தரித்திடாமல் கலைந்திருப்பள்

ஒருமையாய் நிறைந்த மதியும் ஓரேழில்
உற்றிடின்மைந்தரும் குணமும்
உள்ளமெல்லியளை மணந்து இனிதிருப்பன்
உண்மைஎனஉணர்ந்திடுமே. 29

தொகுப்புரை:

சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்து களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தில் அஸ்தமனமாயிருந்தால் மனைவி தண்ணீரில் கெண்டம் ஏற்பட்டு உயிரிழப்பாள்.

ஏழாமிடத்தில் சூரியன் இருந்தால் மனைவி மலடியாவாள்.

ஏழாமிடத்தில் சூரியனும் தூமனும் கூடியிருந்தால் மனைவியைச் சேராத வஞ்சகனாவான்.

ஏழாமிடத்தில் சூரியனுடன் சக்கிரசாபன் இணைந்திருப்பின் மனைவி இறந்து போவாள்.

ஏழாமிடத்தில் சூரியனுடன் பரிவேடம் பொருந்தியிருந்தால் மனைவி சண்டைக்காரியாக இருப்பாள். ஏழாமிடத்தில் சூரியனுடன் விதிபாதன் கூடினால் மனைவி கர்ப்பம் தங்காதவளாவாள். அதனால் உடல் கலைந்திருப்பாள்.

ஏழாமிடத்தில் நிறைந்த சந்திரன் இருந்தால் புத்திர பாக்கியமும் நல்ல குணமும் பொருந்திய பெண்ணை திருமணம் செய்து சுகமாக இனிதிருப்பான்.

இவ்வாறாக களத்திர ஸ்தான பலன்களை அறிந்து உணர்ந்து கொள்வீராக.

அருஞ்சொற்பொருள்

செறிந்து - ஒன்றாகச் சேர்ந்து, சலத்து - தண்ணீரில், செங்கதிர் - சூரியன், வந்தியள் - மலடி, மெல்லியள் - நல்ல பெண்.

இப்பாடலில் சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்தில், இராசி சக்கரத்தில் ஸ்புடம் செய்துள்ள கிரகங்களைக் கொண்டு சாதகன் அவனுக்கு அமையும் அல்லது அமைந்துள்ள மனைவி ஆகிய இருவரின் முக்கியமான பலன்கள் கூறப்பட்டுள்ளன.

ஏழாமிடத்தில் சூறைவில்லாத சந்திரன் இருந்தால் சகல பாக்கியங்களும் உடைய மனைவி அமைவாள் என்பது அறியத்தக்கதாகும்.

ஏழாமிடம் - மேலும் காணும் பலன்கள்
(களத்திர தோஷம்)

உணர்ந்திடும் புந்தி ஏழினில் இருக்க
உருப்பெறும் புதல்வனைப் பெறுவள்
உற்ற ஏழாதி இரவி தூமனுமே
உடன் செறிந்து ஏழினில் இருக்க
மணந்திடும் மிகுதி மனைவி அத்தனையும்
மரிக்குமென்றுரைப்பர், ஏழிடத்தில்
மன்னு தூமாதி ஐவரில் ஒருவர்
வந்திடக் களத்திரத்திற்கு ஆனி
அனைந்திடும் சசி லக்கினத்துக்கு ஏழும்
அப்படியே பலனெனஅறிக
ஆனதோர் மதி தன் அங்கிசத்து ஏறி
அன்புடன் ஏழிடத்திருக்க
குணம் திகழும் தார்சுந்தரியாம், நீசர்
குளிர்மனை ஏழிடமாகக்
கோதறு கதிர் அங்கிசமதியாகில்
கொழுநரும் பலரெனக் கூறும். 30

தொகுப்புரை:

வித்தியாகாரகன் என்று அறியப்பெறும் புதன் ஏழாமிடத்தில் இருந்தால் மனைவி அழகான பிள்ளைகளைப் பெறுவாள்.

ஏழாமிடத்துக்குரிய கிரகம் சூரியன் தூமன் இவர்கள் சேர்ந்து ஏழாமிடத்தில் இருந்தால், சாதகன் திருமணம் செய்யும் மனைவிகள் அத்தனைபேரும் இறப்பார்கள் என்று கூறுவார்கள்.

ஏழாமிடத்தில் தூமாதி ஐந்து பேரில் ஒருவரிருந்தால் களத்திரத்திற்கு அபாயம் உண்டாகும்.

சந்திரா லக்கினத்திற்கு ஏழில் தூமாதி கிரக சாயை ஒன்றிருந்தாலும் களத்திரதோஷம் உண்டு என்பதை அறியவும்.

சந்திரன் தன்சுயஸ்தான அங்கிசத்திலிருக்க, அதுவே களத்திரஸ்தானமான ஏழாமிடமாக அமைந்ததனால், சிறந்த குணங்களுடன் பொருந்திய அழகி மனைவியாவள்.

கிரகம் நீசம் பெற்று பலனிழக்கும் ராசியிடம் ஏழாமிடமாகவும், அதில் சூரியனுடன் சந்திரன் அங்கிசமானால் அவளுக்குக் கணவர் பலரெனக் கூறப்படும்.

அருஞ்சொற்பொருள்:

புந்தி - புதன், உருப்பெறும் - வடிவழகினைப் பெற்ற, புதல்வர் - பிள்ளைகள், இரவி - சூரியன், ஆனி - களத்திர தோஷம், கெடுதி, சசி - சந்திரன், தார்சுந்தரியாம் - பூமாலை போன்ற அழகியாம், கொழுநர் - கணவர்.

பாடலில் நான்காவது வரியில் மன்னு தூமாதி ஐவரில் என்பதற்கு விளக்கமாவது

தூமம் முதலான சாயா கிரகங்கள் - 5

1. தூமகேது - உச்சவீடு - சிங்கம்
2. இந்திரதனு - உச்சவீடு - விருச்சிகம், தனுசு
3. பரிவேடம் - உச்சவீடு - மிதுனம்
4. விதிபாதன் - உச்சவீடு - கும்பம்
5. நுட்பம் - உச்ச வீடு - கும்பம்

இரண்டு மணம் செய்வான்

சத்தமம் அட்டமாதி தன்னுடன் பாவரேனும்
ஒத்த உடனந்தத் தானத்து உறுபல பாவரேனும்
சித்தமாய் வியத்தில் மன்னன் சேயுடன் கூடினாலும்
ஒத்தநல் விவாகம் ரெண்டாய் உறுமணம் புரிவான். 31

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடத்தோன் எட்டாமிடத்தோன் ஆகிய இரண்டு கிரகங்களுடன் பாவ கிரகங்கள் கூடியிருக்கவும்

அல்லது அந்த 7, 8 ஆம் இடங்களில் பாவகிரகங்கள் அமைந்திருந்தாலும்

பன்னிரண்டாமிடமாகிய விரையஸ்தானத்தில் குரு செவ்வாயுடன் கூடி இருக்கவும் பிறந்த சாதகன் இரண்டு திருமணம் செய்து கொள்ளுவான்.

ஏழு எட்டாமிடங்களுக்குரியவர்களோடு பாவிகள் சேர்ந்திருந்தாலும், அல்லது அந்த இடங்களில் பாவிகள் இருந்தாலும், பன்னிரண்டில் குரு செவ்வாயுடன் கூடி இருந்தாலும் சாதகன் இரண்டு திருமணம் செய்து கொள்ளுவான்.

அருஞ்சொற்பொருள்:

சத்தமம் - ஏழாமிடம், அந்த தானத்து - அந்த 7, 8 ஆம் இடங்களில், வியத்தில் - 12ஆம் இடத்தில், மன்னன் - குரு, சேய் - செவ்வாய், ஒத்த நல்விவாகம் - மனம் ஒத்த நல்ல திருமணம்.

இரண்டு மணம் செய்து வாழ்வான்

ஏழுடன் இரண்டாமாதி இருவரில் ஒருவரேனும்
தாழ் பலவீனராகத் தானுறில் அந்த வீட்டில்
ஊழ்பெறும் பாவர் நிற்க உறுமணம் இரண்டாய்
வாழ்பவர் புவியிலென்று வழுத்துவர் மறைவல்லோரே. 32

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாம் ராசி நாதன், இரண்டாம் ராசிநாதன் ஆகிய இருவரில்

ஒரு கிரகம் நீசம் பகை ஆகியவற்றுடன் பலமிழந்து நிற்கவும்

மேலே கூறப்பட்ட 7, 2 ஆகிய ராசி இடங்களில் முற்பிறவியின் பலனைத் தரும் பாவகிரகங்கள் இருக்கவும் பிறந்தவன்

இரண்டு திருமணங்கள் செய்து வாழ்பவனாக இருப்பான் என்று சோதிட சாத்திரங்களில் வல்லவர்கள் சொல்வார்கள்.

ஏழு இரண்டுக்குடையவர்களில் ஒருவர் பலவீனராயிருந்தாலும் இரண்டு விவாகம் செய்து கொண்டு வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்:

தாழ் - நீசத்தால் தாழ்ந்து, பலவீனராக - பலமில்லாதவராக, அந்த வீட்டில் - அந்த 7, 2 ஆம் இடங்களில், பாவர் - சனி, செவ்வாய், ராகு, கேது, உறுமணம் - நடக்கும் விவாகம்.

பாவர் நோக்கம் ஏழாமிடத்தில்

வல்லாதி இரண்டில் வெகுபாவர் வந்துற்றாலு மோரேழில்
சொல்லும் பாவர் தானுறினும் சுகமாம், அந்தமனையிலும்
வெல்லு மிந்த மனையோனை விரும்பி பாவர் நோக்குமுற
நல்ல மணங்கள் இரண்டென்று நவில்வர் கணித நாவலரே. 33

தொகுப்புரை:

திறமான பலன்களை அறிவதற்குரியதான இரண்டாமிடத்தில் பாவிகள் வந்திருந்தாலும்

களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திலும் மேலே சொல்லியபடி பாவகிரகங்கள் இருந்தாலும்

ஏழாமிடத்தையும் அந்த வீட்டுக்குடைய கிரகத்தையும் விரும்பி பாவ கிரகங்கள் நோக்கினாலும்

இந்த சாதகனுக்கு இரண்டு திருமணங்கள் உண்டென்றும், சுகமாய் இருப்பானென்றும்

சோதிடக் கணித நூல்களில் சிறந்த நாவலர்கள் சொல்வார்கள்.

அருஞ்சொற்பொருள்:

வெகுபாவர் - மிகுந்த பாவகிரகங்கள், ஓரேழில் - களத்திரத்தானமாகும் ஏழாமிடத்தில், அந்த மனை - அந்த ஏழாமிடத்தில், நல்ல மணங்கள் - நன்மையான திருமணங்கள்.

இரண்டு மனைவிகள் உண்டு

ஏற்றிய சன்மம் இரண்டு ஏழினில் பாவரேனும்
நேர்த்தியாம் களத்திராதி நீசர் அத்தமனமேனும்
வேற்று சத்துரு வீடேனும் விரும்பியே நின்றதாகில்
போற்றுவர் களத்திரங்கள் இரண்டெனப் புகல்வர்தாமே. 34

தொகுப்புரை:

போற்றப்படும் சென்மம் இரண்டாமிடம் ஏழாமிடம் ஆகிய இடங்களில் பாவர் இருந்தாலும்,

களத்திரஸ்தானாதிபதி நீசரானாலும் அத்தமன மானாலும்

களத்திராதிபதி பகைவர் வீட்டில் விரும்பியே இருப்பதானாலும்

போற்றப்படும்படியான மனைவியர் இரண்டு உண்டாகுமென்று அறிவாளிகள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

ஏற்றிய - போற்றப்படும், சென்மம் - சென்ம லக்கினம், சத்துரு - பகைவர், களத்திரம் - மனைவி, புகல்வர் - சொல்வார்கள்.

அனேக திருமணம் செய்வான்

மேவிய களத்திராதி விரும்பு கேந்திர கோணத்தில்
பாவியர் சேத்திரம் நட்பும் பரிந்துற, பத்தோன் கூட
தாவிய ஏழான் அங்கிசைத் தாரிப்பதோர் சேத்திரம் கண்டால்
தேவியும் அனேகமாகத் திடமணம் புரிவான்தானே. 35

தொகுப்புரை:

களத்திரஸ்தானாதிபதி விருப்பமான கேந்திர திரிகோணத்திலும்

பாவகிரகங்களின் வீடுகளிலும் நட்புடன் இருக்கவும்

களத்திராதியுடன் பத்தாம் இடத்திற்குரியவன் கூடியிருக்க

ஏழாமிடத்தோன் உள்ள இராசியிடத்திலிருந்து தன்னுடைய சுயஸ்தானத்தினைப் பார்த்தால்

சாதகனுக்கு மனைவியர் அனேகராகப் பல திருமணங்கள் செய்வான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

சேத்திரம் - ராசிமனையிடம், தேவி - மனைவி, திடமணம் - முறையான திருமணங்கள்.

தேவியும் அனேகமாகத் திடமணம் புரிவான் என்னும் வாசகத்தின் விளக்க நுட்பம், மனைவிஸ்தானத்தில் பலவகையில் அனேகர் இருப்பதோடு, முறையான திருமணத்தினால் மனைவியும் இருப்பாள் என்று கொள்ளலாகும். இது அரச வாழ்வுக்குரியதாகும்.

செல்வமுள்ள மனைவி அமைவாள்

ஆனதோர் ஏழிடத்தில் அரசனும் பலமதாகி
ஈனமில் பளிங்குதானும் இருந்திட வலுவதாக
தேனிகர் குடும்பாதிபதி சினேகர் அங்கிசை இருக்க
தானதி ரூபமுள்ளதனபதி நாரி என்றே. 36

தொகுப்புரை:

களத்திரஸ்தானமென்னும் ஏழாம் ராசியில் பலமுள்ளவராக குரு அமர்ந்திருக்கவும்,

குறைவில்லாமல் சுக்கிரனும் வலிமை பெற்ற நிலையில் இருக்கவும்.

நல்ல குடும்பத்தானாதிபதியாகிய இரண்டாமிடத்தோன் நட்பு ராசியில் இருக்கவும்.

மிகுந்த அழகும் சொத்துரிமைகளும் உடைய பெண்ணே மனைவியாக அமைவாள்.

அருஞ்சொற்பொருள்:

அரசன் - குரு, பலமதாகி - ஆட்சி உச்சம் பெற்று, ஈனமில் - குறைவு இல்லாத, பளிங்கு - சுக்கிரன், தேன் நிகர் - இன்பத்தைத் தருகின்ற, சினேகர் - நட்புக்குரியவர் ராசியில், அதிரூபம் - மிகுந்த பேரழகுள்ள, தனபதி - செல்வத்திற்கு அதிபதியான, நாரி - பெண்.

நிறை வயதுள்ளவரை மணப்பான்

ஏயலாபாதிபதி ஏழோன் இருவரும் பலனாய்க் கூடித்
தூய கோணத்தில் இருக்க சுபருடையபார்வையாகில்
நேயமாம் அனேகம் பெண்கள் நிறை சீவனுள்ளவராக
ஆயமேமணங்கள் சூட்டி அவனியிலிருப்பன்தானே. 37

தொகுப்புரை:

பொருந்திய லாபஸ்தானாதிபதியாகிய பதினோராம் வீட்டுக்குடையவனும் களத்திரஸ்தானாதிபதி இருவரும் பலம் பெற்றுக் கூடி

நல்ல திரிகோணராசியிலிருக்கவும், அவரைச் சுப கிரகங்கள் பார்க்கவும் சாதகம் அமையுமானால்,

நல்ல நேசத்துடனிருக்கும் அனேகம் பெண்கள், நிறைந்த ஆயுள் உள்ளவராகவும் இருக்க, அப்படிப்பட்ட பெண்களை மணந்து அனுபவித்து உலகில் நீண்ட நாட்கள் சுகமுடன் இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

ஏய் - பொருத்தமான, பலனாய் - ஆட்சி பெற்றவராய், தூய கோணத்தில் - தீங்கில்லாத கேந்திர கோணத்தில் (திரிகோணத்தில்) நிறை சீவன் - நிறைந்த ஆயுள், அவனி - உலகம்.

தெரிந்த இடத்தில் பெண் கொள்வாள்

இருந்திடும் இரண்டு லக்கினக் கோபுராங்கிசைக்குள்
பரிந்துறும் பத்தாமாதி பண்புடன் ஏழிலுற்றால்
தெரிந்து நற்களத்திரங்கள் திகைக்குமெனக் கொள்வாரென்றே
புரிந்திடும் கணித நூலில் புண்ணியர் ஓதினாரே. 38

தொகுப்புரை:

சிறந்த நற்பலன்கள் இருக்கும் இரண்டாமிடத்தோன் ஏழாமிடத்தோன் ஆகிய இருவரும் சென்ம லக்கினமாகும் உயர்வான அங்கிசை ஸ்தானத்தில் இருக்கவும்.

விரும்பி சீவனத்தானாதிபதியாகிய பத்தாம் இடத்ததிபதி பண்புடன் ஏழாமிடத்தில் இருந்தால்

தெரிந்த இடத்திலிருந்து நல்ல பெண்ணை மணக்கும் பாக்கியம் நிச்சயிக்கப்பெற்று மணப்பான் என்றே

விளக்கம் தரும் சோதிடக் கணித நூல்களின் ஆசிரியர்களாகிய புண்ணியவான்கள் முன்னரே சொல்லிவைத்துள்ளார்கள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

இரண்டு - இரண்டாமிடத்தோன், லக்கின கோபுராங்கிசை - லக்கினமாகிய உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் நிலை, திகைக்கும் - நிச்சயிக்கப்பெறும்

பாயலில், மூன்றாமடியிலுள்ள களத்திரங்கள் என்ற சொல், களத்திரந்தான் என்று இருக்க வேண்டும்.

காரணம் : 2, 7, 10 ஆம் இடங்களின் அதிபதிகள் நல் லக்னத்திலும் ஏழாமிடத்திலும் குறையில்லாமல் இருந்தால் நல்ல மனைவி ஒன்றே அமையும், கிரகங்கள் குறைவுகளுடன் இருந்தால் தாரதோஷமாக அமையும் என்று சொல்லலாம்.

மோகனப் பெண் மனைவியாவாள்

ஓதிய களத்தீராதி உயர் சுபராசி ஏறி
மீது மங்கிசை நல்வீடாய் மேவிட, பளிங்கு தானும்
நீதி இப்படிப் போலாக, நிறையும் பத்ததிபனோடும்
ஓதிய பலவான் கூட மோகனப் பெண்கள் கொள்வான். 39

தொகுப்புரை:

ஏழாமிடம் என்று கணிப்புடன் சொல்லப்பெறும் களத்திரஸ்தானாதிபதி, உயர்வான பலன்களுக்குரிய சுபராசியில் இருக்கவும்.

அவ்வாறு அங்கிசமான ராசி இடம் நல்ல இடமாகவும் நட்பு வீடாகவும் குருவாம்சம் பெற்ற ராசியாகவும் பொருந்தவும்.

சுக்கிரனும் இவ்வாறே இந்த முறையில் நல்ல சுபராசியில் அங்கிசம் பெற்றிருக்கவும்

களத்திரத்தைப் பற்றி அறியப் பெறும் நீதி இப்படியாக அமையவும்

பத்தாமிடத்திற்குரிய கிரகத்துடன், பலம் பெற்ற கிரகம் கூடியதாக அமைந்திருந்தால்

வசீரகத்தன்மையுடைய அழகான பெண்ணை மணந்து கொள்வானென்று சொல்லலாகும்.

அருஞ்சொற்பொருள்:

களத்திராதி - ஏழாமிடத்ததிபதி, சுபராசி - ஏழாமிடத்தோனுக்கு நீசம் பகை ஏற்படாத நல்ல ராசியிடம், மேவிட - பொருந்த, பலவான் - பலம் பெற்ற கிரகம், உச்சம் ஆட்சி பெற்ற கிரகம்.

களத்திரங்கள், பெண்கள் - என்று பாடலில் சொல்லப்படுவது, கிரகங்களின் தன்மை இடம் பெறும் பார்வைகள் சேர்ந்துள்ள கிரகங்கள் ஆகிய சோதிட முறைமைகளைப் பார்த்து, மணம் செய்யப்பெறும் மனைவி ஒருவர், பலர் என்பதை அறிந்து கூறப்பெறும்.

தர்ம சிந்தனையுடைய மனைவி

கொள்ளும்நற்களத்திராதிகுருவுடன்கூடினாலும்
தெள்ளியபார்வையுற்றுத்திடமுடன்பலனானாலும்
மெல்லவேபிருகுதானும்வெகுபலவானாகவுற்றால்
நள்ளியதானதர்மம்உள்ளவள்வருவாள்தானே.

(திடமுளதலமுற்றாலும்வரி - 3)

தொகுப்புரை:

சென்ம லக்கினம் மீனமாக அமையவும் புதன் பாவருடனும் சந்திரன் நீச அஸ்தமனமாய் சத்துருவின் அங்கிசையில் இருக்கவும்

ஏழாமிடத்தில் தூர்த்தராகிய பாவிகள் இருக்கவும் அமைந்த சாதகனுக்கு

வேசி மனைவியாய் வாய்க்க, உயர்ந்த குலமும் அதனால் தாழ்ச்சியை அடையும் நிலையினையும் பெறுவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

மலரவே - விளக்கமாக அமையவே, இந்து - சந்திரன், சத்துருவின் - பகையான கிரகத்தின் ராசியில், களத்திரத்தில் - களத்திரஸ்தானத்தில், குலம் - சாதி

வந்த லக்கினம் தனுசு மீனம் வரவே என்ற பாடவேறுபாடு உண்டு. அதற்கு சென்மலக்கினம் தனுசு மீனமாக வரவும் என பொருளாகும்.

ஆயினும் மீனம் லக்கினமாக வரவும் அதற்கேற்ப புதன் சந்திரன் ஆகிய கிரகங்கள் நிலைமாறி இருப்பதும் பொருந்திய பலனுக்குச் சரியானதாகும் என்று அறியலாகும்.

களத்திரம் சோரமாகும்

ஆமே களத்திராதிபதி அரசனாகிப் பாவருடன்
தீமே பாவராசியிலும் சிறந்தேயிருக்கப் பாவர்களும்
தாமே நோக்கமானாலும் சனி சேய் அங்கிசை உற்றாலும்
போமே சோரம் ரகசியமாய் புறம்புமையாதவள் போகும். 42

தொகுப்புரை:

களத்திரஸ்தானாதிபதி குருவாக, அவர் பாவருடன் சேர்ந்து பாவரின் ராசியிலிருக்கவும்

அந்த குருவை பாவ கிரகங்கள் பார்த்தாலும், சனி கிரகம் செவ்வாயின் ராசி வீட்டில் இருந்தாலும்

மனைவி வெளிப்போகாதவள் போல் இருந்து சோரம் சாமார்த்திய ரகசியமாகப் போவாள் என்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

அரசன் - குரு, தீமே - தீமையைத் தரும், சிறந்தேயிருக்க - நன்றாக இருக்கவும், போமே - போவாள், சோரம் - கள்ளத்தனமான சேர்க்கை, புறம்புமசையாதவள் - வெளிப்பார்வைக்கு நிலை குலையாதவள் போல், போகும் - சோரம் போகும்.

சமர்த்தாய் சோரம் போவாள்

போகும் களத்திராதிபதி புகராய் பாவருடன் கூடி
ஏகும் பாவர் பார்த்திருக்க ஏதிலா சத்துரு அங்கிசையில்
ஆகும் பாவர் அங்கிசையில் அமர்ந்தே இருக்க மறு புருஷன்
தாகமுடனே சேகரித்து சமர்த்தாய் சோரம் செய்திடுவாள். 43

தொகுப்புரை:

களத்திரஸ்தானாதிபதி சுக்கிரனாக, அவன் பாவ கிரகங்களுடன் கூடி இருக்கவும், பாவகிரகங்களில் பார்வை பெறவும் படியாக,

பகைவரின் ராசி வீட்டில் அங்கிசையாகவோ, பாவியரின் வீட்டில் அங்கிசையாகவோ இருப்பதானால்

மனைவி விரகதாகம் மிகுந்தவளாக சந்தர்ப்பங்களை அமைத்துக் கொண்டு சாமர்த்தியமாக பிற புருஷரிடம் சேர்ந்து சோரம் செய்வாள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

புகர் - சுக்கிரன், சத்துரு - பகைவர், அங்கிசை - ராசியிடத்தில் சேர்தல், மறுபுருஷன்- பிறபுருஷன், சோரம் - கள்ள நட்புச் சேர்க்கை

மூன்று பெண்களைக் கொள்வான்

கொள்ளும் லாபாதி களத்திராதி கூடினாலும் பார்த்தாலும்
தெள்ளும் பலவானாகி இவர் திரிகோணத்தில் இருக்கையினால்
உள்ள விவாகம் மூன்றென்றே உரைப்பார் கணித வல்லோர்கள்
கள்ளவிடம் போல் விழிமிரட்டும் கருமென் குழல் திரு காரிகையே. 44

தொகுப்புரை:

கள்ளமுடைய விஷத்தைப் போல் மிரட்சி செய்யும் விழிகளையும், கருத்து மென்மையாகவுள்ள கூந்தலையும் உடைய திருமகள் போன்ற பெண்ணே கேட்பாயாக!

லாபஸ்தானாதிபதியும் களத்திராதிபதியும் ஒன்றாகச் சேர்ந்து இருந்தாலும்

அல்லது ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டாலும்

அல்லது இவர்கள் கூடி பலம்பெற்று திரிகோணராசியில் இருந்தாலும்

சாதகனுக்கு நிகழும் விவாகம் மூன்றாகும் என்றே சோதிடத்தில் வல்லவர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

லாபாதி 11ஆம் இடத்தோன், பலவானாகிய - பலம் பெற்றவராகி, விவாகம் - திருமணம், குழல் - கூந்தல், காரிகையே - அழகிய பெண்ணே!

கணவனுக்குத் தீங்கு செய்வாள்

லக்கினம் தனக்கு ஏழ் தன்னில் வியத்தில் இருந்திடும் சோமன் தானும்
புக்கவே பாவர் அங்கிசையில் பொருந்தியே இருந்த காலை
சுக்கிரன் பாவரோடும் துலக்கவே இருக்க நாரி
கைக்கொள்ளும் புருடனான கணவனைக் கொல்வாள் கண்டீர்! 45

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்தில் அல்லது பன்னிரண்டாமிடத்தில் சந்திரனானவன்

பாவகிரகத்தின் வீட்டில் பொருந்தியே இருக்கவும்

சுக்கிரன் பாவ கிரகங்களோடு கூடி இருக்கவும் அமைந்த சாதகத்தின் பலன்

திருமண நிகழ்ச்சியில் தனது கையைப் பற்றியே புருஷனான கணவனை அப்பெண்ணே கொலை செய்வாள் என்பதனைக் காணுங்கள்.

அருஞ்சொற்பொருள்

ஏழ் - ஏழாமிடம், வியத்தில் - பன்னிரண்டாமிடத்தில், பாவர் அங்கிசையில் - அந்த 7 அல்லது 12ஆம் இடம் பாவர் வீடாக அதில் இருக்க, நாரி - மனைவி

ஏழாம் பாவகம் முற்றும்.

எட்டாவது இடம் – பலன்கள்

ஆயுள், தொடர்ந்த நோய், ஆயுள் காலம், முதலியன
நூறு ஆண்டு காலம் வாழ்வன்.

அட்டமத்து அதிபன் பாக்கியாதிபனாகி நிற்கில்
அட்டமத்து அதிபன் பாவியாகிலும் ஐயமில்லை
அட்டமத்து அதிபன் உச்சமாகினும் ஆனநற்கோள்
அட்டமத்து அதிபன் தன்னைப் பார்க்கினும் நூறு ஆண்டிருப்பன்.

தொகுப்புரை:

அட்டமத்தோன் என்று சொல்லப்படும் சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்திற்குரிய கிரகம் பாக்கியாதிபதியானாலும்

பாவியானாலும், உச்சம் பெற்றவனாக இருந்தாலும், சுபகிரகங்களின் பார்வையைப் பெற்றவனாக இருந்தாலும்

சந்தேகமில்லாமல் சாதகன் நூறு வயதளவும் வாழ்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்

அட்டமம் (அஷ்டமம்) எட்டாவது ராசியிடம், அதிபன் - ராசி இடத்துக்குரிய கிரகம்

இப்பாடல் ஆயுள்ஸ்தானமாகிய எட்டாம் இடத்தையும் அதற்குரிய கிரக நிலையினையும் கொண்டு பொதுவாக கணிப்பில் ஆயுள் பலம் கூறப்படுவதாகும்.

நூறு வயதிருப்பான் என்று கூறுதற்குரியதாக, சென்ம லக்கினாதிபதி, சந்திரன் நிற்கும் ராசியாதிபதி, எட்டாமிடத்தோன், ஆயுள் காரகனாகிய சனி கூட அல்லது பார்வை பெற்று இருந்தால் காலக்கணிப்புடன் நிறைந்த ஆயுள் பலன் கூறலாகும் என்பர்.

முப்பத்திரண்டு வயது

ஆறு எட்டு பன்னிரண்டாம் அதிபரோடும்
அலது இவர் மூவர்க்கு ஐந்து ஒன்பானிலேனும்
வீறிட்ட சனி மேவில் சரீர பீடை
மேவிய எட்டாதிபன் கேந்திரத்திலேனும்
பேறிட்ட சன்மாதிபதியும் துர்ப்பலனாய்
பெறின் நாலெட்டு ஆண்டென்று பேசலாகும்
கூறிட்ட சன்மாதி பலவானாயின்
குலவும் வெகுவயதென்றே கூறலாகும். 2

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஆறு எட்டு பன்னிரண்டாம் இடங்களுக்கு உரிய கிரகங்களோடும்

அல்லது, இம்மூன்று கிரகங்களும் நின்ற ராசிக்கு ஐந்து ஒன்பதாம் இடங்களிலாயினும்

பலமுள்ள சனி இருக்கப் பிறந்த சாதகனுக்கு சரீர பீடை இருக்கும்

எட்டாம் ராசிக்கு உடையவன் கேந்திரத்திலும் லக்கினாதிபதி பலமில்லாமலும் இருப்பாராயின் சாதகன் முப்பத்திரண்டு வயதளவு இருப்பான் என்று பேசலாகும். எட்டாமிடத்தோன் கேந்திரத்திலும்

சன்மாதிபதி பலம் பெற்றவனாகவும் அமைந்திருந்தால் வெகுவயதென்றே கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்:

அலது - அல்லாமல், இவர் மூவர் - 6, 8, 12ஆம் இடங்களுக்கு உடையவர்கள், மேவில் - சென்றிருந்தால், நாலெட்டு - 32 வயது, வெகு வயது - நிறைந்த வயது.

தீர்க்காயுள் பெறுவான்

கூறும் கடகம் முதல் ஆறு ராசிக்குள் குரு இருக்க
வீறு மகரம் முதல் ஆறுக்குள்ளே காரி மே வினாலும்
பேறும் கடக கேந்திரத்தில் பிருகும் புதனும் பெற நிற்கில்
மாறாது உறும் தீர்க்காயுளுடன் வையந்தன்னில் வாழ்வாரே. 3

தொகுப்புரை:

கடகம் முதலாக ஆறு ராசிக்குள் குருவும், மகர ராசிமுதல் ஆறு ராசிக்குள் சனியும், கடக கேந்திரத்தில் சுக்கிரனும் புதனும் சேர்ந்து நின்றால்,

எத்தகைய மாற்றமும் இல்லாமல், நிறைவான வயதுடன் சாதகன் உலகில் வாழ்வான் எனலாம்.

அருஞ்சொற்பொருள்

கடகம் - கடக ராசி, மகம் - மகர ராசி, காரி - சனி, பிருகு - சுக்கிரன், வையம் - உலகம்.

நூறாண்டு வாழ்வான்

வாழும் மகரம் முதல் ஆறின் மந்தன் இருக்க, கடகமுதல்
சூழும் ராசி ஆறுக்குள் சோமனிருக்கக் கேந்திரத்தில்
வீழுமரசன் உறின் தீர்க்கவயதாம், எட்டிற்குள் சனி இருக்க
ஏழும் கதிர் ஓரைகளாக குரு ஏழில் கேந்திரம் நூறாண்டே. 4

தொகுப்புரை:

மகர ராசிமுதல் ஆறு ராசிக்குள் அதாவது மகரம், கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம் ஆகிய ஆறு ராசிகளுக்குள் ஒரு ராசியில் சனி இருக்கவும்

கடக ராசி முதலாக ஆறு ராசிகளுக்குள் ஒரு ராசியில் சந்திரன் இருக்கவும், கடக கேந்திரத்தில் குருவும் (குறைவின்றி) இருந்தால் சாதகனுக்கு நிறைந்த வயதாகும். இதுவல்லாமல்

எட்டாமிடத்தில் சனியும், சூரிய (கதிர்) நல்ல ஓரையில் சென்னமானதும் ஏழாமிடம் கேந்திரமான ராசியில் இருந்தால் சாதகனுக்கு நூறு வயது உண்டு என்றும் கூறலாம்.

அருஞ்சொற்பொருள்

மந்தன் - சனி, சூழும் ராசி - தொடர்ந்து சூழும் ராசிகள், சோமன் - சந்திரன், ஏழும் - லக்கினமாகத் தோன்றும் காலத்தில், ஏழில் கேந்திரம் - ஏழாமிடமே கேந்திரமாக அமைய

தீர்க்கமான வயது

ஆண்டமிதுனம் முதலாறில் அரசன் இருக்க, தனு முதலாய்
தீண்டும் ராசி ஓராறில் திரிகோண கேந்திரந்தன்னில்
நீண்ட புதனும் சுக்கிரனும் நிற்கில் தீர்க்க சீவனுமாம்
பாண்டி அரசன் மீன்கொடியைப் பழித்த கருங்கண் பைங்கொடியே. 5

தொகுப்புரை:

பாண்டிய மன்னனுக்குரிய கொடியிலமைந்த மீன் இலச்சினையினைப் பழித்த கருமையான கண்களையுடைய அழகிய பெண்ணே கேள்!

மிதுன ராசி முதலாக ஆறு ராசிக்குள் குரு இருக்கவும்

தனுசு, ராசி முதல் ஆறு ராசிக்குள்ளும் திரிகோண கேந்திரங்களிலும், புதனும், சுக்கிரனும் இருந்தால் சாதகனுக்கு தீர்க்காயுசாகுமென்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மிதுனம் - மிதுனராசி, அரசன் - குரு, தனுமுதல் - தனுர்ராசி முதலாக, தீர்க்க சீவனுமாம் - நிறைந்த ஆயுளாம், பாண்டி அரசன் - பாண்டியன், பைங்கொடியே - பெண்ணே!

நூறு வயது உடையவன்

கொடியே குரு சுக்கிரன் நான்காமிடத்தில் குடிகொண்டே இருக்க
நெடிய சன்ம லக்கினத்தில் நிலவும் இருக்க இவர்க்கு நடு
கடிய சனியீச்சுரனிருக்க கண்ட வயதாம் ஒரு நூறே
பிடியும் இளம்பேடன்னமும் முன்பின்னே தொடரும் நடையாளே! 6

தொகுப்புரை:

இளம்பெண் யானையின் நடையையும், இளமையான அன்னப் பறவையின் நடையையும் பழிக்கும் அழகிய

நடையை யுடையதால் அவை நடை கற்கப் பின்தொடரும் அழகிய நடையையுடைய பெண்ணே கேள்!

குருவும் சுக்கிரனும் நான்காமிடத்தில் கூடியிருக்கவும்

சென்ம லக்கினத்தில் சந்திரன் இருக்கவும்

இவர்கட்கு நடுவான ராசியில் ஆயுள்காரகனாகிய சனி இருக்கவும் பிறந்த சாதகனுக்கு வயது நூறாகும்.

அருஞ்சொற்பொருள்:

நிலவும் - சந்திரனும், பிடியும் - பெண்யானையும், இளம் பேடு - இளமையான அன்னப்பறவை.

33, 66, 100 வயதிருப்பர்

நடிக்கும் சன்மம் முதல்நான்காமிடத்துள்நாற்கலையும்
படிக்கும் புதன்சுக்கிரன்அரசன்பரிந்தே இருக்கில்சதவருஷம்
துடிக்கும் புதனொன்றே நின்றால் தொடர்முப்பத்துமூன்றாம்
அடிக்கும் வெள்ளிக்கு அறுபத்தாறு, அரசனிருந்தால் நூறாமே. 7

தொகுப்புரை:

சன்மலக்கினராசி முதல் நான்குராசி இடத்துக்குள் புதன், சுக்கிரன் குரு ஆகிய மூவரும் விருப்புடன் சேர்ந்து இருந்தால் சாதகனுக்கு நூறு வயது உண்டாம்.

அவ்வாறில்லாமல் புதன் மட்டும் இருந்தால் முப்பத்து மூன்று வயதளவு இருப்பான்.

சுக்கிரன் மட்டும் இருந்தால் அறுபத்து ஆறு வயதளவும் இருப்பான்.

குரு மட்டும் இருந்தால் நூறு வயதளவும் வாழ்ந்திருப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

சன்மம் - சன்ம லக்கினம், சதவருஷம் - நூறு வருஷம், வெள்ளி - சுக்கிரன், அரசன் - குரு

சென்ம ராசி முதல் நான்காம் ராசிக்குள் தனித்தோ கூடியோ நிற்கும் கிரகங்கள் நிற்கும் ராசியிடத்தில் பெறும் தகுதி, பார்வை ஆகியவற்றையும் நிர்ணயித்து மேலே கண்ட ஆயுள் பலன்களைக் கூறலாகும்.

வயதுகளின் அற்பம், மத்திமம், தீர்க்கம் ஆகிய அளவினை விளக்கமாக, பாடல் 20ல் விளக்கம் தரும்.

வயது ஐம்பத்தெட்டாம்

ஆம் அட்டமத்தின் அதிபனும் அட்டமத்தில் அமர்ந்திருக்கில்
சோமன் பாவருடன் கூடி இரண்டு ஆறு எட்டில் சூழ்ந்திருக்கில்
தாமும் வயது ஐம்பத்தெட்டாம், தருமஞானிதானாவான்
காமன் கணையைப் பழித்து அயிலைக் கடிந்து மருட்டும் கண்ணாளே!

தொகுப்புரை:

காமனுடைய மலரம்பைப் பழித்து, முருகனின் அயிலாயுதமெனும் வேலினைத் தோற்கச் செய்து ஆடவரை மருட்டும் அழகிய கண்களை உடைய பெண்ணே கேள்!

அட்டமஸ்தானத்தின் அதிபதியானவன் தனது அட்டமத்தானத்திலேயே இருக்கவும்

சந்திரன் பாவகிரகங்களுடன் கூடி இரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் இருக்கவும் பிறந்தவனுக்கு வயது ஐம்பத்தெட்டாகும். தரும ஞானவானாகவும் இருப்பான் என்பதை அறிவாயாக.

அருஞ்சொற்பொருள்:

அட்டமத்தின் அதிபன் - எட்டாமிடத்துக்குரிய கிரகம், சோமன் - சந்திரன், கணை - அம்பு, அயில் - அயிலென்னும் பெயருடைய முருகனது வேலாயுதம், கடிந்து - நீங்கி.

அறுபது வருஷம் வாழ்வான்

கண்ணார் கும்பலக்கினமே கண்ட சன்ம லக்கினமாய்ப்
பண்ணார் அதற்கு எட்டாங்கிசையியல் பயிலுமரசன் பரிந்து நிற்க
எண்ணார் பாவர் கேந்திரத்தில் இல்லாதிருக்க இவ்வுலகில்
தண்ணார் வருஷம் அறுபதுக்கும் தானுற்றிடுவர் தப்பாதே. 9

தொகுப்புரை:

கண்ணைப் போன்ற கும்பலக்கினமே கணித்துக்கண்ட சென்மலக்கினமாக இருக்கவும்,

அதற்கு எட்டாவது ராசி அங்கிசையில் குருவானவர் விரும்பி நிற்கவும்,

பலவகைத் துன்பங்களைத் தரும் பாவகிரகங்கள் கேந்திரஸ்தானங்களில் இல்லாதிருக்கவும் பிறந்த சாதகன்

இந்த உலகத்தில் நல்ல நிலையில் வயது அறுபதுக்கும் மேலாகப் பெற்று வாழ்வான் என்னும் சோதிடப்பலன் தப்பாததாகும்.

அருஞ்சொற்பொருள்:

பயிலுமரசன் - அந்த ராசியில் இருக்கும் குரு, கேந்திரத்தில் - கேந்திர திரிகோண ராசிகளில்

கண்ணார், பண்ணார், எண்ணார், தண்ணார் என்ற சொற்கள் பாடலுக்கு ஓசை நயம் பொருந்த எதுகையிடச் சொற்களாக அமைக்கப்பெற்றுள்ளதாம் எனினும், அடுத்து வரும் சொல்லுக்குச் சிறப்பமைக்கவும் பொருந்தியுள்ளன வெனலாம்.

எழுபத்தைந்து வயது வளரும்

தப்பாவில்லே லக்கினமாய்த் தன்னில் குருவும்தான் இருக்க
இப்பால் குசனும் புகரும் பாம்பீவர் மூவருந்தான் கூட
மெய்ப்பார் எழுபத்தைந்தாகும் மவும் பாவர் கேந்திரத்தில்
ஒப்பார் சன்மத்தாதி எட்டிலுறில் ஆண்டு இருபத்தெட்டாமே. 10

தொகுப்புரை:

தனுசுராசியே சென்ம லக்கினமாக அதில் குரு நன்முறையில் இருக்கவும்

இதைச் சார்ந்து, செவ்வாயும் சுக்கிரனும் ராகுவும் கூடி வேறொரு ராசியில் இருக்கவும் அமைந்த சாதகனுக்கு வயது எழுபத்தைந்து வரையில் நிகழும்.

இப்படியல்லாமல், பாவகிரகங்கள் கேந்திரத்திலும், சென்மலக்கினாதிபதி எட்டாமிடத்திலும் இருந்தால் இவனுக்கு வயது இருபத்தெட்டே ஆகும். அதற்கு மேல் இல்லை எனலாம்.

அருஞ்சொற்பொருள்:

வில் - தனுசுராசி, குசன் - செவ்வாய், புகரும் - சுக்கிரனும், பாம்பு - ராகு, ஒப்பார் - ஒப்புதலமைந்த, ஆண்டு - இருக்கும் வருஷம்.

வயது 66, 50 காணல்

எட்டாம் பாவம் அங்கிசையில் இனியோரிருக்கக் கேந்திரத்தில்
மட்டார் பாவர் தாமிருக்க வயதும் அறுபத்தாறாகும்
கெட்டார் சுபர் அங்கிசைதனில் சென்மாதிபதிபனும் இருக்க
எட்டு ஆறில் எட்டாதிபதி இருக்கில் ஐம்பது என்பாரே. //

தொகுப்புரை:

எட்டாம் இடத்தில் பாவகிரகத்தின் அங்கிசையில் சுபகிரகங்கள் இருக்கவும்.

1, 4, 7, 10 ஆகிய கேந்திர ராசிகளில் பாவகிரகங்கள் இருக்கவும்

அமைந்த சாதகனுக்கு வயது அறுபத்து ஆறு என்று சொல்லலாகும். மற்றும்

நீசம் பெற்ற கிரகம் சுபகிரகத்தின் ராசியில் அங்கிசம் பெறவும், அதில் சென்மராசியாதிபன் இருக்கவும்

எட்டாமாதிபதி தனது ஸ்தானத்திலோ (எட்டிலோ) அல்லது ஆறாமிடத்திலோ இருந்தால் சாதகனுக்கு வயது ஐம்பது என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பாவர் - பாபகிரகங்கள், அங்கிசையில் - இருக்கும் ராசியில், இனியோர் - நட்பாகிய சுபகிரகம், மட்டார் - குறையுடைய, கெட்டார் - நீசமானவர்.

பாடல்களில் வயதுகளுக்குரிய இருவேறுவகையி லமைந்த முறைகள் கூறப்பட்டிருப்பதும் பிறவாறான கிரகநிலைகளும் அறிந்து பலன் கூறலாகும்.

வயது இருபத்தெட்டாம்

என்பார்எட்டாமாதிபதியும்லக்கினத்தினதிபனும்
ஒன்பானாதிநற்கோளேஉயிர்போம்தந்தைக்குஅருகில்மைந்தர்
அன்பாயிருப்பன்சன்மத்தில்அரவுகதிர்சந்திரனிருக்க
வன்பாம்வியத்தில்குருவிருக்கில்வயதுஇருபத்தெட்டாமே. 12

தொகுப்புரை:

எட்டுக்குடைய கிரகமும், லக்கினாதிபதியும், ஒன்பதாமிடத்துக்குடையவனும் சுபர்களானால், சாதகனின் தந்தைக்கு மைந்தர்கள் அருகிலிருக்க உயிர்போகும்.

சன்ம லக்கினத்தில் ராகு சூரியன் சந்திரன் இவர்களும், பன்னிரண்டாமிடமாகிய விரயஸ்தானத்தில் குருவுமிருந்தால் சாதகனுக்கு வயது இருத்தெட்டு அளவே ஆகும்.

அருஞ்சொற்பொருள்:

நற்கோள் - சுபகிரகங்களே, அரவு - ராகு, கதிர் - சூரியன், வன்பாம் - குறைவுடைய ஸ்தானமாகும், வியத்தில் - விரையஸ்தானத்தில்.

பன்னிரண்டு வயதில் கண்டம்

ஆகும்லக்கினம்எட்டாதிகூடியே
வாகுகேந்திரத்தில்இருக்க, மற்றெட்டில்
தாகுமேஎவராயினும்தான்உற்றிடின்
ஏகுவன்பன்னிரண்டினில்கண்டமே. 13

தொகுப்புரை:

லக்கினாதிபதியுடன் எட்டாமிடத்தோனும் சேர்ந்தே கேந்திரஸ்தானமொன்றில் இருக்கவும்

ஆயுள் ஸ்தானமாகிய எட்டாமிடத்தில் ஏதேனுமொரு கிரகம் இருந்தால், சாதகன் பன்னிரண்டாம் வயதில் கெண்டத்தால் மரணமடைவான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

வாகுகேந்திரம் - வாகமைந்த கேந்திரத்தில், எவரேனும் - பாபகிரகங்களில் எவரேனும்

மிகுந்த வயது உண்டாம்

கண்ட ஏழு எட்டு ஆறிடத்தில் கதித்த நல்லோர் தாமிருக்க
அண்டின்மூன்றில் பன்னொன்றில் அசுபருற தீர்க்காயுள் உண்டாம்
கொண்ட எட்டாதிபன் உச்சம் கொள்ள, சன்மாதி பன்தானும்
மிண்டி இனியோர் காணக் கேந்திரத்தில் இருக்க வெகுவயதே. 14

தொகுப்புரை:

சென்ன காலத்தில் கண்டராசிச் சக்கரத்தில் ஏழு, எட்டு ஆறு ஆகிய இடங்களில் சுபகிரகங்கள் இருக்கவும்

மூன்று பதினொன்று ஆகிய ராசிகளில் அசுபகிரகங்களும் இருந்தால் தீர்க்காயுள் உண்டாம்

எட்டாமிடத்தோன் உச்சம் பெற்றிருக்க, சென்ம லக்கினத்தோனை சுபகிரகங்களும் காண கேந்திரஸ்தானத்தில் இருந்தாலும் சாதகனுக்கு மிகுந்த வயது உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

கதித்த - நற்பலன் பெருகிய, அண்டின் - அருகானராசியில், அசுபருற - பாவகிரகங்கள் இருக்க, (அசுபர் என்பது சுபர் என்ற பாடபேதத்திலும் உள்ளது) இனியோர் - சுபகிரகங்கள், வெகுவயது - நிறைவான வயது.

100, 64, 8 - வயதுகள் அறிதல்

தேரும் வயதின் அளவு உரைப்பக்கேண்மின்! சன்மாதிபன் தனக்கும்
ஊரும் பரித்தேரோன் தனக்கும் உறவாகில் தீர்க்காயுள் உண்டாம்
ஏரும் சமம் மேன்மத்திமம், எட்டெட்டாண்டே இனிதிருப்பன்
நேரும் பகையதாகில் அற்பநிலத்தினால் எட்டாண்டிருப்பான். 15

தொகுப்புரை:

சாதகனுடைய வயதின் அளவினை கிரகங்களின் அமைப்பினைக் கொண்டு சொல்லக்கூடிய பலனைக் கேளுங்கள்.

சென்ம லக்கினாதிபன் தனக்கும், சூரியனுக்கும் உறவாக இருக்குமானால் தீர்க்காயுள் உண்டு என்றும்,

மேலே கண்ட இருவருக்கும் சமநிலையில் நட்புறவு அமைந்தால் வயது மத்திமம் என்றும் சொல்லப்படும், அறுபத்து நான்கு இனிதாக நிகழ இருப்பான்.

மேலே கண்ட லக்கினாதிபன் சூரியன் இருவரும் பகையாகி நின்றால் அற்பவயதுடையவனாய் எட்டு ஆண்டு வாழ்ந்திருப்பான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

தேரும் - ஆராய்ந்து காணும், ஊரும் பரித்தேரோன் - செல்லும் குதிரைகள் பூட்டிய தேரை உடைய சூரியன் (பரி - வேதமாகிய குதிரைகள்) எட்டெட்டாண்டு -8 × 8 அறுபத்துநான்கு வருடம், அற்ப நிலத்தினால் - குறைந்த வாழ்க்கையினால், தீர்க்காயுள் - 100 வயது.

மரணம் நேரும் நட்சத்திர தெசைகள்

இருக்கும் அற்பவயதுள்ளோன் இறப்பன் விட நட்சத்திரத்தில்
வருக்கமுடன் பூரணவயதோன் மரண வதை நட்சத்திரத்தில்
பெருக்கமுடன் மத்திம வயதோன் பிரத்தியாதாரைதனில்
தருக்கும் அற்பவயதில் அற்பம் சாற்றக் கேண்மின் தரும ஈதே. 16

தொகுப்புரை:

மரணம் ஏற்படும் காலத்திற்கான நட்சத்திரம் யாது என அறிவதானால்

மேலே சொல்லப்பட்ட ஆயுள் பலன்களின்படியே பார்க்க வேண்டும்.

அற்பவயதுள்ளவன் விஷ நட்சத்திரத்திர திசையிலும்

பூரண வயதுடையவன் மரண வதை நட்சத்திர திசையிலும்

மத்திம வயதுடையவன் பிரத்தியாதாரை நட்சத்திர தெசையிலும் மரணமடைவார்கள் என்று சொல்லப்படும்.

அருஞ்சொற்பொருள்:

1. விஷ நட்சத்திரம் - தெசை - சென்ம நட்சத்திரத்திற்கு மூன்றாவது நட்சத்திர தெசை.

2. மரணவதை நட்சத்திரம் - ஏழாவது நட்சத்திர தெசை.

3. பிரத்தியா தாரை - ஐந்தாவது நட்சத்திர தெசை.

இதன் விபரம்:

1. சென்ம நட்சத்திரத்திற்கு 3, 12, 21வது நட்சத்திரங்கள் விஷ நட்சத்திரங்களாகும்.

2. 7, 16, 25வது நட்சத்திரங்கள் மரண வதை நட்சத்திரங்களாகும்.

3. 5, 14, 23வது நட்சத்திரங்கள் பிரத்தியா தாரை நட்சத்திரங்களாகும்.

கிரக அங்கிசையால் - வயதறிதல்

தரும் சன்மாதி பாவரங்கிசை தரிக்கில் வயது அற்பத்தில் அற்பம்
வரு சன்மாதி சுபரங்கிசத்தில் வர அற்பத்தின் மத்திமம்
அருள் சன்மாததனை நல்லோர்காண அற்பத்தில் தீர்க்கம்
உரும் மத்திமம் தீர்க்கம் தனக்கும் உறவு இப்படி கண்டுரை மானே. /7

தொகுப்புரை:

சன்மாதிபதி பாவகிரகத்தின் அங்கிசையிலிருந்தால் வயது அற்பவயது என்னும் வயதளவில் அற்பமாகும்.

சன்மாதிபதியை சுபகிரகத்தின் அங்கிசையிலிருந்தால் அற்பத்தில் மத்திம அளவாகும்

சன்மாதிபதியை சுபகிரகங்கள் பார்த்தால் அற்பவயது நிறைவாக இருக்கும்.

இவ்வாறே மத்திமம் தீர்க்கம் என்று வரப்பெறும் வயதளவிலும் நுட்பமான உளவினை அறிந்து உரைப்பாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

தரிக்கில் - இருந்தால், அற்பத்தில் - மிகக் குறைந்த வயதளவில், அற்பம் - மிகவும் குறைந்த காலமாகும்.

ஓரா லக்கினம் காணல்

கதிரோன் உதயமுதல் சனனகால அளவுக் கடிகைதனை
எதிராக எண்ணி இரண்டரையில் ஈந்தால் ஓரை லக்கினமாம்
சதிராய்ச் சன்மவீடு ஒற்றைதானாகில் சூரியன் முதலாம்
அதிராய் சன்ம வீடு இரட்டையாகில் சன்மமுதல் சரியே. 18

தொகுப்புரை:

சீவன் பிறந்தநாளில், சூரியன் உதயாதி நாழிகை முதல் பிறந்த நேரம் வரையில் கணக்கிட்ட நாழிகையை

2 ½ ஆல் வகுத்துக் கண்டதற்கமைந்த ராசியே ஓரை லக்கினமாகும்.

சனன லக்கினம் ஒற்றை ராசியானால் சூரியன் முதலாகும்.

சென்ம வீடு இரண்டித்த ராசியானால், சென்மராசி முதலாக எண்ணி சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

அருஞ்சொற்பொருள்:

கடிகை - நாழிகை, ஈந்தால் - வகுத்துக் கொண்டால்

ஓரை என்பது இரண்டரை நாழிகைக் கால அளவை உடையது. 2½ நாழிகை கொண்டது 1 மணியாகும்.

சூரிய உதய காலம் முதலாக சனன கால அளவுவரையிலான நாழிகையை இரண்டரையால் வகுத்துவரும் ஈவு எண்ணின்படி லக்கினம் முதலாக எண்ணிக்கண்டது ஓரை லக்கினமாகும்.

அரிட்ட வகை - காணல்

பெறும் திரிகோணங்களில் கேந்திரத்தில் நல்லோர் நிற்கப்
பின்னும் சன்மாதிபன் பொன்னுடன் நான்கில் நிற்க
உறுவது நூறாண்டளவும் உலகினில் மிக வாழ்வார்
உற்ற சன்மம் ஒரெட்டாதிபனும் உடன் கூடி

மறுவுறு ஆறாஆமிடத்தில் சனி பார்க்க நிற்கில்
வாலையிலே அரிட்டமெனவே வழுத்தலாகும்
சிறுகுழவி இலக்கினத்தில் சேய் எட்டில் திங்கள்
செறியும் இவரைக் கார் கண்டால் அரிட்டம். 19

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு திரிகோணராசிகளிலும் (5, 9) கேந்திர ராசிகளிலும் (4, 7, 10) சுபகிரகங்கள் நிற்கவும், மேலும்

சன்மலக்கினாதிபன் குருவுடன் சேர்ந்து நான்காமிடத்தில் நிற்கவும் அமைந்திருந்தால் உலகில் நூறாண்டளவும் வாழ்ந்திருப்பர்.

சன்மாதிபனும் எட்டுக்குடையோனும் சேர்ந்து ஆறாமிடத்தில் நிற்கவும் அவ்விருவரையும் சனி பார்ப்பதாயின் வாலைப்பருவமாகிய இளம் வயதில் இறப்பான் எனலாகும்.

பிறந்த லக்கினத்தில் செவ்வாயும், எட்டாமிடத்தில் சந்திரனும் இருக்க இவர்களைச் சனி பார்ப்பதாயின் சிறிய குழந்தை பருவத்திலேயே அரிட்டமுண்டாகும்.

அருஞ்சொற்பொருள்:

நல்லோர் - சுபகிரகங்கள், பொன் - குரு, சேய் - செவ்வாய்; காரி - சனி.

அற்பம் மத்திமம் தீர்க்கம் - வயதுகளின் விபரம்

மானிடருக்கு அயன் விதித்த ஆண்டை மூன்றாக்கின்
வரும் முப்பான் மூன்றாகும் அ:து அற்பமென்ப
தான் அறுபத்தாறாம் மத்திமம், தீர்க்கம் இதன்மேல்
தாழ்வுற முன்வகுத்திடு பங்கொன்றினை மூன்றாக்கில்
பான்மொழியாய் பன்னொன்றாம் பங்கொன்று தனக்கே
பகர்ந்திடுவாய் அற்பத்திலற்பம் மத்திபம் தீர்க்கம்
ஆனமத்திமம் தீர்க்கத்தை இவ்வாறே பிரித்து
அறிந்திடு நீ, அவரவர்கள் ஆயுளினைக் கண்டே. 20

தொகுப்புரை:

பால் போன்ற மொழியை உடைய பெண்ணே கேள்!

மனிதர்களுக்கு பிரமன் விதித்தவயது நூறாண்டினை, மூன்று பங்காகப் பாகம் செய்தால், ஒரு பங்குக்கு வருவது முப்பத்து மூன்று ஆகும். இந்த முப்பத்து மூன்று வயது அற்ப வயதாகும். இதன்மேல்

அற்ப வயதாகக் கண்ட முப்பத்து மூன்றை, மூன்றாகப் பங்கிட்டால் ஒரு பங்குக்கு வரும் பாகம் பதினொன்றின்படியே

அற்ப வயது -33- இதில்

11 வயதளவு	22 வயதளவு	1 - 33 வயதளவு
அற்பத்தில் அற்பம்	அற்பத்தில் மத்திமம்	அற்பத்தில் தீர்க்கம்

மூன்று பங்கீட்டில் காண்பது, 1 - 11, வயது அற்ப மென்றும், 1 - 22 வயதளவு மத்திமம் என்றும், 1 - 33 வயதளவும் தீர்க்கமென்றும் ஒவ்வொரு வயதளவினையும் பாகித்து அறிதல் வேண்டும்.

உதாரணம்:

மத்திம வயது 66 ஆகும். இதில் அற்பம், மத்திமம், தீர்க்கம் ஆகிய வயதுகளைக் கணக்கிட்டு அறிதல்,

66 : 3 = 22 ஆண்டுகள்

1 - 22 வயதளவு - மத்திமத்தில் அற்பவயது

1 - 44 வயதளவு - மத்திமத்தில் மத்திம வயது

1 - 66 வயதளவு - மத்திமத்தில் தீர்க்க வயது

இவ்வாறே 100 வயதாகும் தீர்க்க வயதிற்கும், கணக்கிட்டுக் காண்பதாகும்.

அருஞ்சொற்பொருள்

அயன் - பிரமன், முப்பான் மூன்றாம் - முப்பத்து மூன்றாம், பான்மொழியாய் - பால் போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணே! ஆயுள் - வயது.

ஆயுதம், கள்ளர், சலம் - கண்டம் அறிதல்

அட்டமாதிபனும்குசனும்கூடி
ஆறுபன்னிரண்டுஇடத்திருக்கில்
துட்டர்ஆயுதத்தால்மரணம்முற்றும்,இனியோர்
சூழ்ந்துகண்டிடப்படுங்காயம்
எட்டினாதிபன்பாம்புடன்வியம்எட்டுஆறு
எய்திடில்கள்ளரால்அரிட்டம்
தொட்டலக்கினம்எட்டாதிசேர்ந்துஉதகம்
சூழ்மனையுறில்சலகண்டம் 21

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தோனும் செவ்வாயும் கூடி ஆறு அல்லது பன்னிரண்டாம் இடத்தில் இருந்தால், துஷ்டரின் ஆயுதத்தால் சாதகனுக்கு மரணம் நேரும். ஆனால்,

சுபகிரகங்கள் அவருடன் கூடி இருந்தாலோ, பார்த்தாலோ ஆயுதத்தால் படுங்காயம் அடைவான்.

எட்டாமிடத்தோன் ராகுவுடன் சேர்ந்து பன்னிரண்டு எட்டு ஆறு ஆகிய பாபஸ்தானங்களிலொன்றில் இருந்தால், சாதகனுக்கு கள்ளரால் மரணமுண்டாகும்.

லக்கினாதிபதி எட்டாமாதியும் சேர்ந்து புதன் வீட்டில் இருந்தால் தண்ணீரில்கண்டம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், துட்டர் - கொடியவர், இனியோர் - சுபகிரகம், பாம்புடன் - ராகுவுடன், உதகம் - புதன் ராசியிடம், சலம் - தண்ணீர்.

வாகணங்களால், சன்னி வாதத்தால் அரிட்டம்

கண்டஎட்டாதிவாகனாதிபனைக்
கலந்துபன்னிரண்டோடுஆறுஎட்டில்
மிண்டியநீசர்சத்துருமனையில்
மேவில்வாகனங்களால்மரணம்

மண்டி எட்டதிபன் காரி அங்கிசத்தில்
மல்கிடின் மரத்தேறி வீழ்ந்து இறப்பான்
அன்றி ஒன்று எட்டோன் நீசராங்கிசம்
புக்கிற் சன்னி வாதமாஞ் சூழும். 22

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தோன் வாகனாதிபனாகிய நான்காமிடத்தோனுடன் சேர்ந்து

பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் இருக்கவும், அந்த இடம் நீசர் இடமாகவோ அல்லது பகைவர் இடமாகவோ இருந்தால் சாதகன் வாகன விலங்குகளால் தாக்கப்பட்டு மரணமடைவான்.

எட்டாமிடத்தோன் சனியின் அங்கிசத்தில் சேர்ந்திருந்தால் சாதகன் மரத்திலேறி வீழ்ந்து இறப்பான், இவையன்றி,

லக்கினாதிபதி எட்டாமாதிபதி நீசகிரகத்தின் அங்கிசத்தில் இருந்தால் சாதகன் குளிர் ஜன்னி வாதநோய் ஏற்பட்டு இறப்பான் என்பர்.

அருஞ்சொற்பொருள்

வாகனாதி - நான்காமிடத்தோன், காரி - சனி, சனி அங்கிசத்தில் - சனியின் இடத்தில், சனியுடன் சேர்ந்து.

பாராங்கல், இடி, குன்ம வியாதி - மரணம்

சூரணாம் காலமிருத்தியோடு எட்டாம்
துறை லக்கினாதியும் கூடிடில்
பாரமாம் கல்லாகினும் இடியேனும்
பட்டு இறந்திடுவன், மற்றின்னம்
சேரவே அட்டமாதி நீசத்தில்
செறிந்து பன்னிரண்டு ஆறு எட்டில்
வீரமாம் சுருங்கோள் நோக்கவே குன்ம
வியாதியால் வியமடைந்திடுவன். 23

தொகுப்புரை:

சாதகனுடைய சென்மராசி நட்சத்திரத்தைக் கொண்டு அறியப்பெறும் மாரக காரக கிரகத்தோடு எட்டாமிடத்தில் லக்கினாதிபதியும் சேர்ந்து இருந்தால், பாராங்கல் விழுந்தோ அல்லது இடிவிழுந்தோ சாதகன் இறப்பான் என்று கூறுவர்.

இவ்வாறு காண்பதல்லால் அட்டமாதிபதி நீசம் பெறும் ஸ்தானத்தில் இருக்கவும், பன்னிரண்டு ஆறு எட்டா மிடங்களை ராகு பார்த்தால் குன்ம வியாதி என்னும் கடுமை யான நீங்காத வயிற்று வலியினால் இறப்பான் என்பர்.

அருஞ்சொற்பொருள்

எட்டாம் துறை - எட்டாவது இடம், பட்டு - தலையில் விழுந்து பட்டு, கருங்கோள் - ராகு.

கை கால்கள் ஊனமுறுதல் - அறிதல்

அடைந்திடும்சன்மத்தாதிபனேனும்
அட்டமத்தாதிபனேனும்
மிடைந்திடும்குளிகன்தன்னுடன்கூடி
வியம்எட்டுஆறுஇடத்தினில்மேவ
நடந்தகால்சுரங்கள்பின்னமேபட்டு
நலிவன்அந்நோயினால்மடிவன்
தொடர்ந்தநல்லோர்கள்வடிவுடன்காணில்
சொல், கைகால்ஊனமுற்றுஇருப்பன். 24

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதியோ அல்லது அட்டாமாதி பதியோ இருவரில் ஒருவர் சார்ந்து நிற்கும் குளிகனுடன் கூடி 12, 8, 6 ஆகிய இடங்களிலொன்றில் இருப்பதாயின்

நன்றாக நடந்த கால்களும் கைகளும் முடக்கமாகி துன்புறுத்தும் கொடிய நோயினால் நலிந்து இறப்பான், ஆனால்,

குளிகனுடன் கூடி பாபஸ்தானத்திலுள்ள மேலே கண்ட கிரகத்தினை சுபகிரகம் முழுப்பார்வையால் காண்பதாக இருந்தால் கை கால்கள் ஊனமடைந்த நிலையில் வாழ்ந்திருப்பான் என்று சொல்வாயாக.

அருஞ்சொற்பொருள்

மிடைந்திடும் - சாயா கிரகமாகச் சேர்ந்திருக்கும், கரங்கள் - நன்றாக இருந்த கைகள், பின்ன மேற்பட்டு - குறைவு ஏற்பட்டு, நலிவன் - வருந்துவான், வடிவுடன் காணில் - முழுப்பார்வையாகக் காணில், இருப்பன் - வாழ்வான்.

அரிட்டம் நோய் உண்டாகும் காலம்

இருந்திடும்சன்மம்தனில்சனிகுளிகன்
இருவரும்கூடியேநிற்க
மருவியவியம்ஆறுஎட்டில்இருந்திருக்க
மன்னுதன்மரணமேயாகும்
பொருந்தும்ஆதித்தன்புடத்தில்எமகண்டன்
புடத்தையும்கூட்டுஇராசியினில்
அருந்தவமன்னன்பொருந்தில்நோய்கொண்டே
அவனியில்துன்பமுற்றிடுவன் 25

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சனியும் குளிகனும் கூடி இருக்கவும்.

தொடர்ந்த பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் சந்திரன் இருந்தால் திட்டமாக மரணமுண்டாகும்.

சூரியன் ஸ்புடத்துடன் எமகண்டன் ஸ்புடத்தையும் கூட்டி எண்ணும் ராசியில் குரு வரும் காலத்தில் வியாதியால் துன்பப்படுவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

ஆதித்தன் ஸ்புடத்தில் - சூரியன் நிற்கும் இராசி எண்ணுடன், ஆதித்தன் - சூரியன், அருந்தவ மன்னன் - சிறந்த தவத்தையுடைய குரு. அவனி - உலகில்.

அரிட்டம் நேரும் காலதிட்டம்

இடும்பை ஆதித்தன்புடத்துடன்குளிகன்
இசைந்திடும்புடத்தையும்கூட்டி
நடந்த ராசியில்சூரியன்வரும்காலம்
நலியதாம்சந்திரன்புடமும்
கடுந்திறன்குளிகன்புடத்தையும்கூட்டி
கண்ட ராசியில்பிறைவருநாள்
அடும்சரம்கடுமாவடுஅரிகுவளை
அயில்கயல்ஆனகண்ணாளே! 26

தொகுப்புரை:

அம்பு, விஷம், மான், மாவடு, கருவண்டு, குவளை மலர், அயில் என்னும் வேல், கயல் மீன் ஆகியவற்றிற்கொப்பான கண்களை உடைய பெண்ணே!

சூரியன் நின்ற ஸ்புடத்துடன், குளிகன் நின்ற ஸ்புடத்தையும் கூட்டிக் கண்ட ராசியில், சூரியன் கோள் சாரப்படி மாதம் ஒரு ராசியாக வரும்போது சாதகனுக்கு நலிவு ஏற்படும்.

சந்திரன் ஸ்புடத்தையும், மிகுந்த வலிமை பெற்ற குளிகன் ஸ்புடத்தையும் கூட்டிக் கண்ட ராசியில் சந்திரன் சஞ்சாரமாக வரும் நாளில் சாதகனுக்கு அரிட்டம் ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்:

இடும்பை - துன்பம், ஆதித்தன் - சூரியன், ஸ்புடத்தையும் - நின்ற ராசி கணக்களவினையும், பிறை - சந்திரன், அடும்சரம் - கொல்லும் அம்பு, கடு - விஷம், மா - மான், வடு - மாவடு, அரி - வண்டு, கயல் - கயல்மீன்.

மாரக காரகன் தெசையில் அரிட்டம்

மரணமார்கண்டம்அறிவது, பத்தாமாதிதுர்பலனாக
கிரணமாரகப்பேர்வரும்திசையதனில்கிட்டியவர்பலனாய்
முரணுறும்இருவர்தமக்குமேவிரோதம்மூண்டிடுபகையதாய்
தரணிவிட்டன்பர்பதியினில்செல்லும்தகையென்றுரைக்கவே. 27

தொகுப்புரை:

பத்துக்குடையவன் கெட்ட பலனைத் தருபவனாக இருக்கவும், மாரகக் காரகனது திசை வரும் காலத்தில்

அப்பொழுது எட்டாமிடத்தில் இருந்தவரின் பலனாக, மேலே கண்ட இருவருக்கும் பகை ஏற்பட்ட நிலையில் ஆகும் காலத்தில் அரிட்டம் உண்டாகும் என்று சொல்லுவர்.

அருஞ்சொற்பொருள்:

முரணுறும் - மாறுபடும், விரோதம் - பகை, தரணி - மண்ணுலகம்.

தூரதேசத்தில் மரணமுண்டாகும்

வேண்டி நான்காம் அதிபதியுடன் மேவும் எட்டாதிபன் தானும்
ஈண்டியே தனது வீட்டினில் இருக்க இறப்பது தந்தை வாழ் பதியில்
தூண்டியே வியத்தில் ஆறு எட்டினில் இருக்கில் தூர தேசத்தில் இறப்பன்
நீண்டுகாதளவும் சென்றுகூர் அயிலை நிகர்த்திடும் கருங்கண் ஆரணங்கே.

தொகுப்புரை:

காதளவும் நீண்டுச் சென்றிருப்பதோடு கூர்மையான அயிலெனும் வேலாயுதத்தைப் போன்ற வடிவமைந்த கருமையான கண்களையுடைய அழகிய பெண்ணே!

சென்ம லக்கினத்திற்கு நான்காம் இடத்தோனுடன், எட்டாமிடத்தோனுடன் சேர்ந்து நான்காமிடத்தில் இருந்தால், சாதகன் தகப்பன் வாழும் ஊரில் அல்லது வீட்டில் இறப்பான்.

பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் இருந்தால் தூர தேசத்தில் இறப்பான் - என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

மேவும் - கூடிய, ஈண்டியே - சேர்ந்தே, தனது வீட்டில் - தனது சொந்த ராசி இடத்தில், தூரதேசம் - வெளிநாடு, அயில் - முருகப் பெருமானது வேலின் சிறப்புப் பெயர், நிகர்த்திடும் - ஒத்திருக்கும்.

சனியின் சஞ்சாரத்தினால் அரிட்டமறிதல்

ஆரணங்கே கேள்! பகலுதித்தானுக்கு கடற்குளிகன் உறை வீட்டிற்கு
ஏரணி ஐந்து ஒன்பதில் சனிவருநாளில் இடுக்கணாம் இரவினில் உதித்தால்
சீரணி குளிகற்கு ஏழிடம் தனக்குத் திரிகோணத்தில் சனிவருநாள்
தாரணி அறியக்கண்டம் என்றுரைப்பர் சாதக நிபுணமாதவரே!

தொகுப்புரை:

அழகிய பெண்ணே!

பகலில் பிறந்தவனுக்கு குளிகன் இருக்கும் வீட்டுக்கும் ஐந்து ஒன்பதாமிடத்தில், சனி சஞ்சாரமாக வரும் காலத்தில் சாதகனுக்கு வெகுதுன்பம் ஏற்படும்.

இரவில் பிறந்தவனுக்கு, குளிகன் நிற்கும் ராசிக்கு ஏழாமிடத்திற்குத் திரிகோணத்தில் சனிவரும் நாளில் கண்டமுண்டாகும் என்று சாதகத்தில் நிபுனரான தவத்தோர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

உறை வீட்டிற்கு - இருக்கும் வீட்டிற்கு, ஏரணி - அழகு பொருந்திய, இடுக்கண் - கொடிய துன்பம், சீரணி - சிறப்புப் பொருந்திய, தாரணி - முறைமையானதாக

கோள்சாரத்தினால், (கோசாரத்தினால்) கண்டம் நிகழும் காலத்தினை இப்பாடல் உணர்த்திற்று.

கோள்சாரத்தில் - கண்டமறிதல்

மாதவ, மேஷமுதல் கருநாகம் வாழ்மனையளவும் எண்ணி
மீதி மீனமட்டும் இருதொகைதன்னில் விளங்கவே
போதவே கழித்து மீந்த லக்கினத்தில் புணர் திரிகோணராசியில்
ஏதமாம் காரி மருவு நாற் கண்டம் இவையெலாம் கோள்சரந்தனக்கே. 30

தொகுப்புரை:

மிகுந்த தவமுடையவரே!

மேஷ ராசி முதல் ராகு இருக்கும் ராசி வீடுவரைக்கும் எண்ணிக்கண்ட தொகையை

ராகு நின்ற ராசி முதல் மீனராசி வரையில் எண்ணிக்கண்ட தொகையால் பெருக்கி,

பன்னிரண்டைக் கழித்து, மீதமாக வரும் எண்ணைக்கொண்டு

சென்மலக்கினம் முதலாகத் தொடரும் 1, 5, 9 ஆம் இடங்களாகிய திரிகோணராசிக்குள் அந்த எண் எந்த அளவில் அடங்கியுள்ளதோ

அதிலடங்கிய திரிகோண ராசிகளில் குற்றமுடைய சனியானவன் கோள்சாரமாக 2 ½ ஆண்டு வரும்போது சாதகனுக்கு கண்டம் ஏற்படும்.

இவைகளெல்லாம் கோள் சாரக்கணக்கால் காணும் பலன்களாகும்.

அருஞ்சொற்பொருள்:

கருநாகம் - ராகு, வாழ்மனை - இருக்கும் வீடு, மீனமட்டும் - மீனராசி மட்டும், காரி - சனி.

இப்பாடலும், 29ஆம் பாடலும் கோள்சாரத்தினால் சாதகனின் அரிட்டகாலம் அறியும் உபாயம் கூறப்பட்டுள்ளது.

மலைமீதிருந்தும், விலங்கினாலும் அரிட்டம்

தனக்கும் ஓர் எட்டாமதிபதியுடனும் தபனனும் குசனுமே கூடி
இனக்கதிர் குசனும் எட்டினில் இருக்க, இருவரும் எட்டிடம் பார்க்க
கனத்துயர் வெற்பில் ஏறி வீழ்ந்திருப்பன் காண் இவரோடு புகர் கூடில்
சினத்துறு விலங்கு பூண்டு கொண்டிருந்து சீவனை விடுத்திடுவார்கள். 31

தொகுப்புரை:

சென்மத்தானம் தனக்கும் எட்டாமிடமாகிய ஆயுள் ஸ்தானாதிபதியுடன் சூரியனும் செவ்வாயும் சேர்ந்து எட்டாமிடத்தில் இருந்தாலும்,

சூரியனும் செவ்வாயும் கூடி எட்டாமிடத்தில் இருந்தாலும், அல்லது வேறு ராசியிலிருந்து எட்டாமிடத்தினை இருவரும் பார்த்தாலும்

மிகுந்த உயரமாகவுள்ள மலையின் உச்சிக்கு ஏறி அதிலிருந்து விழுந்து இறப்பான் என்பதைக் காண்பாயாக.

மற்றும் எட்டுக்குடையவன் சூரியன் அங்காரகன் ஆகிய இருவர்களோடு சுக்கிரன் கூடி இருந்தால், (சூரியன் செவ்வாய் சுக்கிரன் கூடி எட்டிலிருந்தால்)

கோபமடைந்த கொடிய மிருகத்தினால் தாக்கிப் பிடிபட்டிருந்த நிலையில் நலிந்து உயிரைவிட்டிடுவர் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

தபனன் - சூரியன், கதிர் - சூரியன், கனத்துயர் - பெரியதாக உயர்ந்த, வெற்பில் - மலையின்மேல், புகர் - சுக்கிரன்.

கிணற்றிலும், தன்கையாலும் இறப்பன்

வாருறை முலையாய் சனி மதி இருவர் மருவி அட்டமத்தில் இருக்க
காரி சந்திரன் எட்டதிபனைக் கூட கண்டிட கிணற்றில் வீழ்ந்திருப்பன்
கூரிய செவ்வாய் சனி சசி கூடி மூவர் முன்போல் கூடியே இருக்கில்
பாரினில் தன்கையால் உயிர்மாய்ப்பன் பலரும் பழித்திடும்படியே. 32

தொகுப்புரை:

கச்சிறுக்கிய தனங்களை உடைய பெண்ணே!

சனியும் சந்திரனும் சேர்ந்து எட்டாமிடத்தில் இருந்தாலும், அல்லது

சனியும் சந்திரனும் சேர்ந்து எட்டாமிடத்திற் குரிய கிரகத்தினோடு சேர்ந்திருந்தாலும், அல்லது பார்த்தாலும்

சாதகன் கிணற்றில வீழ்ந்து இறப்பான், மற்றும்

செவ்வாய், சனி, சந்திரன் ஆகிய மூவரும் கூடி, எட்டாமிடத்தில் இருந்தாலும், அல்லது எட்டாமிடத்தானோடு சேர்ந்திருந்தாலும், பார்த்தாலும்

உலகில் மக்கள் பலரும் கேவலமாகப் பேசிப் பழித்திடும்படியாக, தன்கையாலேயே உயிரை மாய்த்துக் கொள்வான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

வார் - மார்பில் பெண்கள் அணியும் கச்சு என்று கூறப் பெறும் சிற்றாடை, மருவி - கூடி, காரி - சனி, சசி - சந்திரன்.

மகோதர வியாதி, அக்கினி, ஆயுதத்தால் மரணம்

படிதரும் செவ்வாய் சனி இவர் எட்டில்
பரிந்துறில், லக்கினம் தன்னில்
கொடிய வெய்யோன் இந்து எட்டினில் இருக்க
கொடுமையாய்ச் சலத்தில் வீழ்ந்திறப்பன்
முடவனும் கதிரும் எட்டினில் இருக்க
மூண்டிடும் மகோதர வியாதி
அடல்சனி கதிர் தேய்பிறையும் எட்டுறையில்
அக்கினி ஆயுத மரணம். 33

தொகுப்புரை:

செவ்வாயும் சனியும் கூடி எட்டாமிடத்தில் இருக்கவும், லக்கினத்தில் கொடிய சூரியனும் எட்டாமிடத்தில் சந்திரனும் இருந்தால்,

பகைவரின் கொடிய செயலால் தண்ணீரில் விழுந்து இறந்து போவான்.

சனியும் சூரியனும் எட்டாமிடத்தில் இருந்தால் வயற்றில் மகோதரம் என்னும் கொடிய வியாதி ஏற்படும்.

கொடிய சனியுடன் சூரியனும் தேய்பிறைச் சந்திரனும் கூடி எட்டாமிடத்தில் இருந்தால் நெருப்பினாலோ ஆயுதத்தினாலோமரணம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

படிதரும் - பூமிகாரகனாகும், வெய்யோன் - சூரியன், இந்து - சந்திரன், சலம் - தண்ணீர், முடவன் - சனி, மூண்டிடும்

- உண்டாகிவலுக்கும், அடல்சனி - வலிமைபெற்ற சனி, அக்கினி - நெருப்பு.

உடல் வற்றியும், பாசத்தாலும் இறப்பன்

மரணமார் வகை ஏழ் ஒன்பதில் இரவி
மந்தனும் கூடியே இருக்க
கரணம் ஆறு எட்டில் குசனுற வெய்திற்
கமழ் சுரோணிதம் எலாம் உலர்ந்து
திரணமாய் எலும்புக் கூடதாய் இறப்பன்
தேய்பிறை சனி குசன் எட்டில்
தரணியோரறியப் பாசபந்தத்தால்
தன்னுயிர் மாய்ப்பன் என்றுரைப்பர். 34

தொகுப்புரை:

ஒருவனுக்கு மரணம் ஏற்படும் வகையினை சோதிடத்தால் அறிந்து கூறுவது எப்படி என்றால்,

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடத்திலோ அல்லது ஒன்பதாமிடத்திலோ சூரியனும் சனியும் கூடியிருக்கவும்.

ஆறாமிடத்திலோ எட்டாமிடத்திலோ செவ்வாய் இருக்கவும் - இருந்தால், உடலில் உஷ்ணம் பெருகி சுரோணிதம் என்னும் சீவசத்தெலாம் நாளுக்குநாள் உலர்ந்துமெலிந்து எலும்புக்கூடு போலாகி இறப்பான்.

தேய்பிறைச்சந்திரன் சனி செவ்வாய் மூவரும் எட்டாமிடத்தில் இருந்தால், உலகமக்கள் அறிய, பாசபந்தம் உடையவருக்காக சாதகன் தன் உயிரை மாய்த்துக் கொள்வான் என்றுரைப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்:

ஏழ் - ஏழாமிடம், இரவி - சூரியன், மந்தன் - சனி, காரணம் - ராசி தொடர் முறையில், சுரோணிதம் - தாதுவான இரத்தம்.

விலங்கு பூட்டிய தன்கையால் மரணம்

உரைத்திடும் பாவர் ஒன்பதில் ஏழில்
உரைத்திட அட்டமந்தனில்
நிரைதிரையக்காணாதிபன் இருக்க
நீடும் இம்மூன்று வீட்டினையும்
உதைத்திடு நல்லோர் பார்வை அற்றிருக்க
விலங்குடன் இருந்தவன் தனது
கரத்தினால் சீவன்தனை விடுத்திடுவன்
காணெனச் சொல்லுவர் கண்டாய்! 35

தொகுப்புரை:

பாவகிரகங்கள் ஒன்பது ஏழாம் இடங்களிலும், அட்டமத்தில் திரேக்காணாதிபதியும் இருக்கவும்.

9, 7, 8 ஆகிய இம்மூன்று வீட்டினையும் சுபகிரகங்கள் பாராது இருந்தால், பாவகிரகங்கள் பார்த்தால் - குற்றவாளியாகி விலங்குடன் இருந்தவன் தன் கையினாலேயே தனது உயிரை மாய்த்துக் கொள்வா னென்பதனைக் காண்பாயாக, என்று அறிஞர் சொல்லுவதைக் காண்பாயாக.

அருஞ்சொற்பொருள்:

திரையக்காணாதிபன் - திரேக்காணத்தின் அதிபதி, கரம் - கை, நல்லோர் பார்வை அற்றிருக்க என்பதால் தீய கிரகங்களின் பார்வை பெற்றிருக்கின் என்று பொருள் கொள்ளலாகும்.

மாதா, மாதர் கொடுமையால் மடிவன்

கண்ட லக்கினம் கன்னியாய் அதனில்
கருதிடாப் பாவரும் இருக்க
எண்டிசை புகழ் மீனத்தினில் பாவர்
இருந்திட, அட்டமந்தனில்
மண்டிய பிறையும் சுங்கனும் இருக்கின்
மாதர் செய்வாதையால் மடிவன்
கெண்டை அம்பு அயில் மாவடு விடம் போல்கண்
கிஞ்சுகம் போலும் மென்மொழியாய்! 36

தொகுப்புரை:

கெண்டைமீன், அம்பு, அயிலெனும் வேல், மாவடு, விஷம் ஆகியவற்றைப் போன்ற கண்களையும் கிளியின் பேச்சினைப் போன்ற இனிய மென்மையான மொழியினையும் உடைய பெண்ணே!

கணித்து கண்ட சென்ம லக்கினம் கன்னியா ராசியாக

அதில் நல்லது தராத பாவகிரகங்கள் இருக்கவும்

புகழ்ந்து சொல்லப்பெறும் மீனராசியில் பாவகிரகங்கள் இருந்திடவும்

அட்டமத்தில் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருந்தால்

தாய், மனைவி, பெண்கள் இவர்கள் செய்யும் கொடுமையால் இறந்திடுவான்.

அருஞ்சொற்பொருள்:

எண்டிசை - எட்டுத்திக்கும், மீனத்தினில் - மீன ராசியில், சுங்கன் - சுக்கிரன், கிஞ்சுகம் - பச்சைக்கிளி

மாதர் என்று பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதால், சிறப்பாக மனைவி என்றும் பொதுவாக பெண்கள் என்றும் கொள்ளலாம். மாதா - என்பது பாடமானால், தாய் என்பதாகும். மாதா சுவடியில் இல்லை.

பகைவர் தீயினால் சுட - இறப்பன்

மொழிகதிர் சனி தேய்பிறை குசன் நால்வர்
முயற்சியாய்க் கூடி லக்கினத்தில்
பொழி திரிகோணந்தன்னிலே மேவ
புண்ணியர் கண்டிடாதிருக்கக்
கழிபடும்புகையால் தீயினால் கொள்ளிக்
கட்டையால் மருவலர் சுடவே
அழிபடு மெய்யில் வருத்தமுற்று இறப்பன்
அவன் தலைநாள் விதிவசமாம். 37

தொகுப்புரை:

சூரியன், சனி தேய்பிறைச் சந்திரன் செவ்வாய் இவர்கள் நால்வரும் ஒன்றாகக் கூடி சென்ம லக்கினத்திலோ, அல்லது அதற்குத் திரிகோண ராசியிலோ இருக்கவும்

அவர்களைச் சுபகிரகங்கள் பாராமல் பாவ கிரகங்கள் பார்ப்பதாயின்

சாதகனின் பங்காளிகள், பகைவர், செய்த மிகுதியான விஷப்புகையாலும், தீயினாலும், கொள்ளிக் கட்டையாலும் சுட்டு ஏற்படுத்திய கொடுமையாலும், சரீரத்தில் அழிவுகள் ஏற்பட்டு மிகுந்த வேதனைப் பட்டு இறப்பான், இவ்வாறு நிகழ்வது.

சாதகனின் தலையில் கருவிலேயே பிரமன் விதித்ததின் செயலாகும்.

அருஞ்சொற்பொருள்:

கதிர் - சூரியன், குசன் - செவ்வாய், புண்ணியர் - சுபகிரக்ங்கள், கழிபடும் - மிகுதியானதாகும். மருவலர் - பகையானவர், மெய்யில் - சரீரத்தில், தலைநாள் - கருவுருவாகிய நாள், விதிவசம் - விதியின் நியதிப்படி நிகழ்வதாகும்.

சூனிய குணத்தால் துன்புறுவன்

மருவிய பத்தில் சூரியன் ஆறில்
மங்கலன் வியத்தினில் காரி
விரவிய இரண்டில் கரியகோளிருக்க
மேவலர் சூனிய குணத்தால்
சருவிய குளிசக் கட்டியினால் வருந்திச்
சஞ்சலம் உற்று இருந்தவன்தன்
கருவிகள் பிரிந்தே சோகமுற்றிருப்பன்
காசினியில் அகன்றிடும் காலை. 38

தொகுப்புரை:

பத்தாமிடத்தில் சூரியனும், ஆறாமிடத்தில் செவ்வாயும், பன்னிரண்டில் சனியும், இரண்டில் ராகுவும் இருந்தால்

பகைவரின் சூனிய ஏவலில் குணத்தால், சரீரத்தில் தோன்றிய குளிசக் கட்டியினால் வருந்தி, மிகுந்த கவலை உடையவனாக இருந்தவன்.

கண், வாய், மூக்கு, செவி, உடல் ஆகிய கருவிகள் நாளுக்கு நாள் செயலிழக்கவும், மெலிவுற்று

உலக வாழ்க்கையை விட்டு நீங்கவே இறப்பான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

மருவிய - கூடிய, மங்கலன் - செவ்வாய், கரியகோள் -ராகு. சஞ்சலம் - மனத்தில் தொடரும் துன்பம், கருவிகள் - உடலின் அங்கங்கள் மெய், கை, கால்கள் என்றும் கூறலாம். காசினி - உலகம், சோபம் - துயர்.

இடியினால் இறப்பு ஏற்படும்

காலை ஓரேழில் சூரியன் செவ்வாய் கருதும் எட்டினில், சனி ஆறில்
சாலவே குறைபிறையுறச் சன்மம் தன்னில் ஏழு எட்டினில் புதனும்
சீலமாய் இருக்கில் இடியினால் மடிவன் திரயக் காணாதிபர் தன்னில்
மேல் இருபத்திரண்டுளாம் தனது வீடு லக்கினமென விளம்பும். 39

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சூரியன், செவ்வாய் எட்டாமிடத்தில், ஆறாமிடத்தில் சனியும் தேய்பிறைச் சந்திரனும், சன்ம லக்கினம் ஏழாமிடம் எட்டாமிடம் இவைகளில் ஒன்றில் புதன் ஆகிய முறையில் அமைப்புடன் கிரகங்கள் பொருந்தியிருந்தால், சாதகன் இடியினால் தாக்கப்பட்டு இறப்பான்.

திரேகாண ஸ்தானாதிபர்கள் இவ்வாறு நின்ற இருபத்திரண்டு ராசிக்குள்ளும் காவலக்கினமென்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

குறைபிறை - குறையும் சந்திரன், சன்மம் தன்னில் ஏழு எட்டினில் - சன்மலக்கினம் அல்லது ஏழு எட்டாமிடங்களிலொன்றில், திரயக்காணாதிபர் - திரேக்கண ஸ்புடத்திற்குரிய கிரக பாவங்கள்.

ஆயுளின் கணிப்பளவுகள்

விளம்பும் ஆறு எட்டு பன்னிரண்டதிபர் மேவிய பாவதானாகில்
உளம்செறி அற்பாயுள், சுபர் பார்க்கில் ஓதிய தீர்க்கமா மென்றே
களம்செறி நல்லோர் பலவருமாகில் கண்டது மத்திம வயதே
இளம்பிறைநுதல், வேல்பொரு கயற்கண்ணுக்கு இசைந்திடு
விழியினாரணங்கே. 40

தொகுப்புரை:

மூன்றாம் பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியும், வேல் போன்றும் கயல்மீனைப் போன்றும் உள்ள கண்களுக்குப் பொருத்தமாக அமைந்துள்ள விழியினையுமுடைய அழகு நிறைந்த பெண்ணே கேள்!

சொல்லப்படும் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய ராசிகளின் அதிபர்கள் பாவிகளாக ஆகியிருந்தால் சாதகனுக்கு அற்பாயுளாகும். ஆனால், அந்த மூன்று பாவரான கிரகங்களைச் சுபகிரகங்கள் பார்ப்பதானால் தீர்க்கமான நூறு வயதளவாகும்.

மேலே சொல்லப்பட்ட மூன்று இடங்களிலும் சுபகிரகங்களும் பாவகிரகங்களும் இருப்பதானால் சாதகனுக்குக் கண்டவயது மத்திம வயதாகும்.

அருஞ்சொற்பொருள்:

அதிபர் - ராசிகட்குரிய கிரகங்கள், களம் செறி நல்லோர் பாவருமாகில் - என்பதற்கு களம் - இடம் அதாவது ராசியிடம், செறி - பொருந்தியுள்ள கிரகங்கள் என்பதே பொருளாகும். இதனை, மேலே கண்ட மூன்று கிரகங்களையும் சுபரும் பாவரும் கலந்து பார்க்கும் அமைப்பிருந்தால் மத்திம வயது என்று காணவுமாகும்.

குளிகன் மனையில் சனிவரின் தீமையாம்

நாளெனும் வியம் ஆறு எட்டின் அதிபர் நன்று கேந்திரத்தினில் இருக்கில்
வாள்விழியணங்கே அற்ப ஆயுதான், மத்திமம் பணபரத்திருக்கில்
தாள் செறியணங்கேய் ஆபோக்கிலியம் தானறில் ஆகும் நூறாண்டே
கோளினால் குளிகன் மனைவரும் கூரிகுலவிய நாள்களும் தீதே. 41

தொகுப்புரை:

பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களுக்குரிய கிரகங்கள் 1, 4, 7, 10 ஆகிய கேந்திர ராசிகளில் இருந்தால் அற்பாயுசும்

அவர்கள் பணபரத்தானங்களிலிருந்தால் மத்திம ஆயுசும், ஆபோக்கிலியத்திருந்தால் தீர்க்காயுசும் உண்டாம்.

இவையல்லாமல், வாள்பொன்ற விழிகளை உடைய பெண்ணே!

குளிகன் உள்ள ராசி வீட்டில் சனி 2 ½ ஆண்டு சஞ்சாரமாக வரும் நாட்களும் மைதருவதாகும் என்றறிவாயாக.

அருஞ்சொற்பொருள்:

வியம் - விரையஸ்தானம், கோளினால் குளிகன் - கிரகங்களோடு சார்ந்துள்ள குளிகனாகும் சாயாகிரகம்.

தெசைகளில் கண்டமறிய

தீதெனும் வியம் ஆறு எட்டினிற்கதிபர் இவர்களின் பலன்களுமில்லாத
போதும், தனக்கே அவர்கள் திசையில் பொருந்திய கெண்ட காலமதாகும்
ஈதினில் வியம் ஆறு எட்டினிற்கதிபர் மேவிய திசைகளும் கூடி
ஏதுறு நடக்கும் அவர்திசை அந்தத்து இயல்புடன் கெண்ட காலமாம். 42

தொகுப்புரை:

கெடுதிதரும் பன்னிரண்டு ஆறு எட்டு ஆகிய மூன்று ராசியிடங்களுக்குரிய கிரகங்கள் பொதுவாக நற்பலனைத் தரமாட்டார்களாயினும், அவர்களின் தெசை நிகழும் காலங்களில் மிகுந்த துன்பத்தையும் கெண்டத்தையும் தருவார்கள். இவையன்றி

12, 6, 8 ஆம் இடங்களுக்குரிய கிரகங்கள் சென்று நிற்கும் இடங்களுக்குரிய கிரகங்களின் தெசைகள் நடக்கும் காலங்களின் பிற்பகுதிகளில் கெண்டம் உண்டாகும் காலமாக அமையும் எனலாம்.

அருஞ்சொற்பொருள்:

தீதெனும் - தீமை தருவதாகுமெனும், தனக்கே - அவர்களுக்கே உரிய, கெண்டகாலம் - மரணம் ஏற்படும் காலம், திசைகளும் கூடி - அவர்கள் தெசைகளும் கூடியதாக.

சூரியன்,லக்கினாதிகளால் வயதறிதல்

காலமாம் பரிதிலக்கினாதிகளும் கருதும் மித்துரு வதேயாயின்
தூலமாம் தீர்க்கவயதெனவுரைப்பர், சொல்லியசமம் அதேயாயின்
மூலமாம் மத்திமம், பகையாயின் உறுவது முப்பத்து மூன்றே
கோலமாம் லக்கன நாவங்கிசை பதிக்குக் கூறிய சனிவரின் துன்பம் 43

தொகுப்புரை:

காலத்திற்கான சூரியனும் சென்ம லக்கினாதிபதியும் நட்புறவாக இருப்பார்களானால், சாதகனுக்கு நிலைத்ததாக நூறுவயது உள்ளது என்று சொல்லுவார்கள்.

மேலேசொல்லப்பட்ட இரண்டு கிரகங்களும் சமம் பெற்றிருந்தால் மத்திம வயதென்றும், பகையாக இருந்தால் அமைந்த வயது முப்பத்து மூன்றே என்றும் கூறுவர்.

இவ்வாறாக வயதின் அளவினை காணும் காலத்தில், நவாங்கிசலக்கினத்தில் சனி வரும்போது துன்பம் உண்டாகும் என்று கண்டு கூறுவதாகும்.

அருஞ்சொற்பொருள்:

பரிதி - சூரியன், மித்துரு - நட்பானவர், தூலமாம் - திட்டமாக, சமம் - சமனாகவுள்ள கிரகநிலை, உறுவது - அடையும் வயது, லக்கின நவாங்கிசை பதிக்கு நாமிசலக்கினாதிபதியின் இடத்திற்கு

காலமாம் பரிதி லக்கினாதிகளும் - என்று பன்மையாகக் கூறப்பெறுவதால், சூரியன் சென்ம லக்கினம் சந்திரன் நின்ற லக்கினம் ஆகிய இடங்களின் அதிபர்களுடன் நட்புறவானால் என்றும் விளக்கம் காணலாகும்.

பூரண வயதறியும் - கிரக நிலைகள்

துன்பமே இல்லா உச்சலக்கினத்தைத் தொடர்ந்து முப்பது பங்கதாக்கி
வன்பொடு சூரியன் பத்தாம் பங்கும், மதி மூன்று குசன் இருபத்தெட்டு
இன்பமாம் புதன் மூவைந்து, பன்னேழாம் எழில் குரு, புகர் இருபத்தேழு
முன்பு சனி அஞ்சதிர் பூரணவயதே, முழு நீசம் அற்பமென்று உரையே. 44

தொகுப்புரை:

துன்பமே இல்லாததாக அமைந்த உச்சன் நின்ற லக்கினத்தைத் தொடர்ந்து இராசிகளை

முப்பது பங்காக்கிக் கொண்டு, அதில் சூரியன் பத்தாம் பங்கிலும், சந்திரன் மூன்றாம் பங்கிலும், செவ்வாய் இருபத்தெட்டாம் பங்கிலும், புதன் பதினைந்தாம் பங்கிலும், குரு பதினேழாம் பங்கிலும், சுக்கிரன் இருபத்தேழாம் பங்கிலும், சனி இருபதாம் பங்கிலும் இருப்பதானால்,

சாதகனுக்கு நிறைவாக நூறுவயது உள்ளதாம், உச்ச லக்கினமில்லாமல், அது நீச லக்கினமாக அமைந்தால் வயது அற்பமாகும் என்று கூறுவாயாக.

அருஞ்சொற்பொருள்:

உச்சலக்கினம் - கிரகம் உச்சமாகவுள்ள இராசியே லக்கினமாக இருக்கவும், குசன் - செவ்வாய், அஞ்சதிர் - 5 X 4 = 20. நான்கு ஐந்தில், பூரணம் - நிறைவான வயது.

நட்சத்திரங்களால் அரிட்டமறிதல்

சென்மதாரகைக்கு ஆறு எட்டுநட்சத்திரதிசையதாம்மாரகம், அதனுள்
வன்மம்ஓரெட்டிற்கு எட்டு, ஆறும், இன்னம்வரும்ஆறினுக்கு ஆறுஎட்டாம்
பன்மைதாரகையின்திசையின்திசையில்மாரகமாம், பார்க்கவே
இரட்டியாய்வந்தால்
திண்மைக்காலமாம்அவருடைபுசிப்பில்சேதமேஆகும்கண்டாயே. 45

தொகுப்புரை:

சென்ம நட்சத்திரத்திற்கு ஆறு எட்டாவது நட்சத்திரங்களின் திசைகளிலும்

எட்டாமிடத்திற்கு எட்டாமிடம், ஆறாமிடம், ஆறாமிடத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம் ஆகிய இடங்களுக்குரியதாகும் நட்சத்திரங்களிலும் மரணமுண்டாகும்.

மேலே சொன்ன கணக்கின்படி வரும் நட்சத்திரங்கள் இரட்டைப்படை எண்ணாக அசுபதி முதல் எண்ண வந்தால்

அந்தந்த நட்சத்திரங்களுக்குரிய திசா நாதர்களாகும் கிரகங்களின் திசையில் மரணம் உண்டாகும் என்பதனை கண்டு கொண்டாய்.

அருஞ்சொற்பொருள்:

சென்ம தாரகை - சென்ம லக்கினத்திற்குரியதானதும் பிறந்த காலத்திற்குரியதான நட்சத்திரம், தின்மைக்காலமாம் - திட்டமான காலம் அதுவேயாகும், புசிப்பில் - தெசையில்.

பகைவர் செய்யும் நாகஹோமத்தால் - துன்பம்

கண்ட சன்மம் சரராசியைக் கருதி ஆறாதிபன் பார்க்க
கொண்ட செவ்வாய் லாபத்தில் கூறும் திராசிக்குடையோன்
பண்டே ஒன்பதினில் இருக்கப் பாக்கியாதி திரத்திலுற
உண்டாம் சத்துரு நாகத்தாலே ஓமம் பண்ணவரும் மரணம். 46

தொகுப்புரை:

சென்ம லக்கினம் சரராசியாய், அதை ஆறாமிடத்தோன் பார்க்கவும்

செவ்வாய் பதினோராம் இடமாகிய லாபஸ்தானத்தில் இருக்கவும்

ஸ்திரராசிக்குடையவர்களாகிய சுக்கிரன், சூரியன், செவ்வாய், சனி ஆகியோர் தனித்தோ சேர்ந்தோ ஒன்பதாம் இடமாகிய பாக்கியத்தானத்தில் இருக்கவும்

பாக்கியத்தானாதிபதியாகிய ஒன்பதாம் இடத்துக்குரிய கிரகம், ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகிய ஸ்திர ராசிகளில் ஒன்றில் இருக்கவும்,

கிரகங்கள் அமைந்திருந்தால், சாதகனின் சத்துருவாகிய பகைவர் மந்திரவாதியைக் கொண்டு நாகஹோமம் செய்து ஏவுவதால், சாதகனுக்கு மரணம் வருமென்றே கூறுவர்.

அருஞ்சொற்பொருள்:

சரராசிகள் - மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு ராசிகளும் சரராசியாகும். திர ராசிகள் - இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகிய நான்குமாகும். சத்துரு - சென்மவிரோதி.

சூனியத்தால், அம்மையால் - மரணம்

வரு நாலிடத்தில் லக்கினத்தில் வளரும் கேது குளிகனுடன்
அருள் சேர்ந்திருக்கச் சூனியமும் அபிசாரத்தாலும் உறும் மரணம்
திரளாம் வியத்தில் கேதுவுற, தேடிப்பாவர் மிக நோக்க
புரவே அம்மையால் மரணம், பொன் பார்த்திடிலோ வடுவுண்டாம். 47

தொகுப்புரை:

சென்ம லக்கினராசியிலோ, நான்காம் இடத்திலோ கேது குளிகனுடன் சேர்ந்து பலம் பெற்றிருந்தால் - சாதகன் கொடிய அபிசாரத்தாலும், சூனியத்தாலும் தனக்கே கெடுதி உண்டாகி இறப்பான்.

பன்னிரண்டாம் இடத்தில் கேது இருக்கவும், அவரை பாவிகளாகிய கிரகங்கள் முழுப்பார்வையால் பார்க்கவும், சாதகனுக்கு அம்மையால் மரணமுண்டாகும். ஆனால்

அந்த கேதுவை குரு பார்ப்பாரானால் அம்மை வடு ஏற்பட்டதாகப் பிழைத்திருப்பான் என்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

அபிசாரம் - பிறரால் செய்யப்படும் செய்வினைகள், வியம் - பன்னிரண்டாமிடம், புரவே - பாதுகாப்பு மிக வேண்டியதாகும். பொன் - குரு.

12 இராசிக்கும் நன்மை தீமை மாரகம் - பலன்

லக்கினம், கிரகங்களால் - பலனறிந்து கூறுதல்

சாற்றிய துவாதசமாம் லக்கினம் தன்னை ஓர்ந்து
நேர்த்தியாய் சுபரும் பாவர் நிறை யோகம் மாரகங்கள்
போற்றியே அவர்தம் வீட்டில் பின்பலன் உரைக்கும் நூலின்
தேற்றமே அறிந்து கொண்டு செய்பலன் உரைப்பாய் தானே. 48

தொகுப்புரை:

ஒருவருக்குரிய சாதகத்தின் கணிப்பாகும் பன்னிரண்டு ராசிகளில் நிச்சயிக்கப்பட்ட லக்கினராசியினை அறிந்து,

இராசிகளுக்குரிய கிரகங்கள், இராசிகளில் நிற்கும் கிரகங்கள், ஆகியவற்றாலும் பாவகிரகங்கள் சுபகிரகங்கள் மாரக கிரஹங்கள் யாவர் என்பதனையும்

கிரக நிலைகள், பார்வைகள் ஆகியவற்றைக் கொண்டும் நன்மை, தீமை, யோகம், கெண்டம் ஆகியவற்றைப் பலாபலனாக விளக்கமாக உரைக்கும் சோதிட நூலில்

தெளிவாக உரைக்கப்பட்டிருக்கும் விபரங்களையும் அறிந்து கொண்டும், நீ பார்க்கும் சாதகத்தினால் அறியும் நன்மை தீமை ஆகிய பலன்களைச் சொல்லுவாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

துவாதசம் - பன்னிரண்டு ராசிகள், தேற்றமே - தெளிவானவற்றையே, செய்பலன் - கிரகங்கள் (அளிக்கும்) பலன்கள்.

சாதக நூல்களைத் தெளிவாகக் கற்றுத் தெளிந்து, பார்த்து, சிந்தித்து பலனுரைக்க வேண்டுமென்பதாம்.

மேடத்திற்கு - பாவர் சுபர் மாரகன்

தானுறு மேடத்தோர்குச் சனி புகர் புந்தி பாவர்
வானுறு பரிதிதேவவான் குரு சுபனாம் என்றே
கானுறும் இவர்கள் கூடக் கடினமாம் பலன்கள் அற்பம்
தேனுறும் சுக்கிரன்தன் திசையில் தான் மாரகங்கள். 49

தொகுப்புரை:

மேடராசிக்கு - சனி, சுக்கிரன், புதன் இம்மூவரும் பாவிகளாவர்.

மேடராசிக்கு - சூரியன், குரு இவர்கள் இருவரும் சுபர்களாவர்.

இவ்வாறான சுபர் பாவிகள் ஒன்றுகூடி இருந்தால் உண்டாகும்பலன் அற்பமாகும்.

ஆனால், சுக்கிரன் திசையில் மாரகம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

புகர் - சுக்கிரன், புந்தி - புதன், பரிதி - சூரியன், தேவவான் குரு - தேவர்களின் சிறந்த தேவகுரு.

சுபரும் பாவரும் சேர்ந்து தீதான ஸ்தானங்களில் இருந்தால் அந்தந்த ஸ்தான ராசியின் கிரகம், அவருள்ள ராசியிடம் பார்வைகள், பகை, உச்சம், நீசம், நட்பு நிலைகள்

ஆகியவற்றை முறையாகக் கண்டு பலனறிந்து அற்பபலனா, அல்லது தீதான பலனா என்பதை உரைக்கவே வேண்டும் என்பர்.

ரிஷபத்திற்கு - சுபர், பாவர், மாரகன்

களமேரிஷபசன்மத்தோர்க்கு அரசன்புகர்(சூரியன்)மூவர்
உளவாம்பாவிகள், கதிர்சனியும்உயர்ந்தசுபனாம், யோகங்கள்
வளமார்புகரும்தான், குடும்பமாரகத்தோனாம்பாவி
புளகார்தலையுறுங்கொங்கைபூவைக்குரலாரும்மானே. 50

தொகுப்புரை:

சிலிர்த்தெழுந்த முகப்பமைந்த கொங்கையுடன், நாகனவாய்ப்பறவையின் இனியகுரலையும் உடைய மான்போன்ற பெண்ணே கேட்பாயாக!

ரிஷப ராசியே சென்மலக்கினமானவர்க்கு - குரு, சுக்கிரன், (சூரியன்) மூவரும் பாவர்கள்.

சூரியனும் சனியும் - சுபர்கள், இவர்கள் கூடி நின்றால் சிறந்த யோகங்கள் நிகழும்.

வளமான சுக்கிரன் யோககாரகனாகவும், பாவியாகி மாரகத்தோனாகவும் இருப்பான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

களமே - ராசியிடமே, அரசன் - குரு புகர் - சுக்கிரன், பாவி - யோகனாக இருந்த சுக்கிரனே பாவியாகி இருப்பான்.

புளார் - சிலிர்ப்பு பொருந்திய, பூவை - பறவை

ரிஷபத்திற்கு சந்திரன் கொடிய பாவியாகிறார். பாடலில் சூரியன் என்று இருப்பது சரியல்ல. சசி என்றிருக்க வேண்டும்.

மிதுன லக்கினத்திற்கு

மானேமிதுனலக்கினத்திற்குஅரசன்செவ்வாய்கதிர்பாவர்
தானேசுங்கன்சுபனாக, மதியும்சனியும்அற்பபலன்
வானார்பாவர்திசையதனில்மன்னுமாரகம்சொல்லே
தேனேஅனையமதுரமொழிச்செவ்வாய்முறுவல்சிறுநுதலாய். 51

தொகுப்புரை:

தேன் போன்ற இனிய மொழி பேசும் சிவந்த வாயின் சிரிப்புடன் சிறிய அழகிய நெற்றியினையும் உடைய மான்போன்ற பெண்ணே!

மிதுன லக்கினத்திற்கு குரு, செவ்வாய், சூரியன் மூவரும் பாவராவர்.

சுக்கிரன் சுபகிரகமாகவும், சந்திரனும்,சனியும் அற்ப பலனைத் தருபவராகவும் இருப்பார்கள்.

பாவகிரகங்களின் திசையில் மிதுன லக்கின சாதகருக்கு மாரகம் நேரும் என்று சொல்லுவாயாக.

அருஞ்சொற்பொருள்:

அரசன் - குரு, கதிர் - சூரியன், சுங்கன் - சுக்கிரன், மன்னு - நிலைத்ததாக, மதுரமொழி - இனிமையான சொல், முறுவல்-சிரிப்பு,நுதலாய்-நெற்றியை உடைய பெண்ணே.

கடக, சிங்க லக்கினங்களுக்கு

நுதலும்கடகம்புகர்புந்தி நோய்செய்பாவர், குரு, செவ்வாய்
இதமார்சுபனாம், சேய், யோகம், இருக்கும்பரிதிமாரகனாம்
முதலேசிங்கம்புகர்புந்தி மோதும்பாவர்சேய்சுபனாம்
மதலையோகம்பொன்வெள்ளிமழைக்கோளுடன்மாரகன்மாலே. 52

தொகுப்புரை:

கடக லக்கினத்திற்கு புதனும் சுக்கிரனும் நோயினை உண்டாக்கும் பாவிகளாவர்.

குருவும் செவ்வாயும் சுபகிரகங்கள், செவ்வாயால்யோகமுண்டாகும். சூரியனால் மாரகம் உண்டாகும், மற்றும்

சிங்க லக்கினத்திற்கு சுக்கிரனும் புதனும் பாவிகள், செவ்வாய் சுபன்

குழந்தைப் பருவத்திலேயே யோகம் தரும் கிரகங்கள் குருவும் சுக்கிரனுமாவர். சூரியனும் சந்திரனும் மாரகர்களாவர்.

அருஞ்சொற்பொருள்:

நுதலும் - சொல்லப்படும், புகர் - சுக்கிரன், புந்தி - புதன், சேய் - செவ்வாய், பரிதி - சூரியன், மதலை யோகம் - குழந்தைப் பருவத்திலேயே பெறும் நற்பயனுடைய யோகம்.

கடகம், சிங்கம், ஆகிய இரண்டு லக்கினங்களுக்கும் சுபர் பாவர் யோகர் கூறப்பட்டுள்ளது.

கன்னி, துலாம் ராசிகட்கு – சுபர், பாவர், மாரகன்

மாலே கன்னி சேய் மதி பொன் மன்னும் பாவர், புதன் சுபனாம்
காலே யோகம் புந்தி புகர்கள், மாரகன் சுக்கிரன் பாவி
கோலாம் துலாத்திற்கு சேய் பரிதி குருவும் பாவர், சனி புதனும்
மேலாம் சுபர்கள், மதி புந்தியோகர், மாரகன் செவ்வாயே.

தொகுப்புரை:

கன்னி லக்கினத்திற்கு செவ்வாய், சந்திரன், குரு இவர்கள் பாவிகள், புதன் சுபனாம், புதனும் சுக்கிரனும் யோககாரகர்கள், ஆனால் சுக்கிரன் பாவியாகில் மாரகனாம்.

துலா லக்கினத்திற்கு செவ்வாய், சூரியன், குருவும் பாவகிரகங்கள், சனியும் புதனும் மேலான சுபர்கள், சந்திரனும் புதனும் யோககாரகர், செவ்வாய் மாரகனாவான்.

அருஞ்சொற்பொருள்:

மாலே கன்னி - திருமாலின் அம்சம் பெற்ற கன்னி லக்கினம், சேய் - செவ்வாய், பொன் - குரு, கோலாம் துலாத்திற்கு - தராசின் அடையாளம் பெற்ற துலா லக்கினத்திற்கு, மதி - சந்திரன்.

விருச்சிகம், தனுசு லக்கினத்திற்கு

ஏய தேள் புதன் சேய் பளிங்கே, இயன்ற பாவர் இந்து சுபன்
தூய யோகர் மதி பரிதி, தொடர்ந்த குருவே மாரகனாம்
ஆய தனுசில் புகர் பாவி, ஆரல் பரிதி சுபராகும்
நேய யோகம் புந்தி புகர், நீண்ட சனியும் மாரகனே. 54

தொகுப்புரை:

விருச்சிக லக்கினத்திற்கு புதன், அங்காரகன், சுக்கிரன் பாவிகளாவர், சந்திரன், சுபன், சந்திரனும் சூரியனும் யோககாரகர்கள், குரு மாரகனாவான்.

தனுசு லக்கினத்திற்கு சுக்கிரன் பாவி, செவ்வாய் சூரியன் சுபர், புதனும் சுக்கிரனும் யோககாரகர்கள். சனி மாரகனாவான்.

அருஞ்சொற்பொருள்:

தேள் - விருச்சிக லக்கினம், பளிங்கு - சுக்கிரன், இந்து - சந்திரன், பரிதி - சூரியன், ஆரல் - செவ்வாய், நீண்ட சனி - நீண்ட காலம் ஒரு ராசியில் நிற்கும் சனி, தனுசு லக்கினத்திற்கு புதனும் சூரியனும் சேர்ந்து வரின் ராஜயோக பலன் தருவர் என்பதே சரி. 6 - 11க்கு அதிபதியாவதால் சுபர் அல்ல. தவிரவும் மாரகனும் ஆவார் சனி.

மகரம், கும்ப லக்கினங்கட்கு

மாகம் சுறாவிற்கு குரு செவ்வாய் மதியும் பாவர், புகர் புந்தி
ஆகும் சுபராம், யோகம் அருளும் சுங்கன், மாரகன், சனி
பாகார் கும்பம் குரு மதி சேய் பாவர், சுக்கிரன் சேய் சுபனாம்
தாகார் யோகம் பளிங்கு புதன் தள்ளுமரசன் முன் பாவி. 55

தொகுப்புரை:

மகர லக்கினத்திற்கு - குரு, செவ்வாய், மதி பாவர், புதனும் சுக்கிரனும் சுபர்களாம். யோகம் தருபவன் சுக்கிரன், சனி மாரகனாம்.

கும்ப லக்கினத்திற்கு குரு, சந்திரன், செவ்வாய், பாவர், சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்திடில் தகுதியான யோக காரகர்கள். சுக்கிரனும் சுபனே. 5 - 8க்கு அதிபர், புதன் சுபர் ஆகமாட்டார். மாரகர்கள் குரு நீங்கிய பாவிகளாவர்.

அருஞ்சொற்பொருள்:

புகர், புந்தி - சுக்கிரன், புதன், பளிங்கு - சுக்கிரன், தள்ளுமரசன் - குரு நீங்கிய பாவகிரகங்கள் செவ்வாயும் சந்திரனும்.

மீன லக்கினத்திற்கு

பாவி மீனம்காரிபுதன்பளிங்கு சூரியன்பாவியரே
மேவும் செவ்வாய் மதி சுபராம், விளங்கும் யோகம் குருவால்
தாவுமாரகன் சேய் என்றே, சாற்றும் துவாதச லக்கினத்தை
ஆவலறிந்தே சுபாசுபங்கள் அறிந்து கூறப்பண்பாமே. 56

தொகுப்புரை:

மீன லக்கினத்திற்கு, சனி புதன் சுக்கிரன் சூரியன் பாவிகளாவர்.

செவ்வாயும் சந்திரனும் சுபர்களாம். விளங்கும் யோகம் குருவால் நிகழும்.

தாவுகின்ற மாரகன் செவ்வாய் என்றே சொல்லப்படும்.

பன்னிரண்டு லக்கினங்களுக்கும் உரிய முறையில் சொல்லப்படும் பாவிகள், சுபர்கள், யோகம் தருபவர், மாரகர் ஆகியவற்றை விருப்புடன் அறிந்துகொண்டு சாதகனின் நன்மை தீமைகளை நன்கு அறிந்து சொல்லுவது சோதிடரின் நல்ல பண்பாகும்.

அருஞ்சொற்பொருள்:

காரி - சனி, பளிங்கு - சுக்கிரன், துவாதச லக்கினத்தை - பன்னிரண்டு ராசிகளிலும் வரும் லக்கினஸ்தானத்தை

இரண்டு, நான்கு மாத வயதேயாம்

பண்பாறு அதிபன்லக்கினாதிபாவனாகிப் பலமறவே
நண்பாம் ஏழில் உற்றிருக்க, நல்லோர் காணார் மாதம் இரண்
டென்பார், லக்கினாதிபதிக்கு எட்டில் மிகவே பாவர்களும்
திண்பாய் நோக்கமுற்றிடவே திங்கள் நான்கில் வருமரிட்டம். 57

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஆறாம் வீட்டு அதிபதியும், சென்ம லக்கின ராசியாதிபதியும் பாவியாகி பலமற்ற நிலையில் ஏழாமிடத்தில் இருக்கவும்,

அவர்களைச் சுபகிரகங்கள் பாராதிருந்தால் சாதகனுக்கு வயது இரண்டே மாதமாகும் என்பர்.

லக்கினாதிபதிக்கு எட்டாமிடத்தில் பாவகிரகங்கள் இருக்கவும் அவர்களைப் பாவகிரகங்கள் பார்ப்பதானால் நான்கு மாத அளவே திண்ணமாக வயது இருக்கும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

பண்பு ஆறு - பண்புள்ள ஆறாமிடம், பலமறவே - பலம் இல்லாமல் போகவே, திங்கள் - மாதம்.

ஆறு, எட்டு மாதங்களில் மரணம்

இவன்தன் லக்கினாதிபதியே பாவன் பலமறவே
சுபனே பார்வை வர்சிதமாய் சொல்லும் ஆறு திங்கள் தனில்
தவம் ஆறு எட்டு பன்னிரண்டில் தக்கபாவர் நோக்கும் உற
கவனமுடனே இருநான்கில் காணும் மரணம் கண்டீரே. 58

தொகுப்புரை:

சாதகனுடைய லக்கினாதிபதியே பாவியாய் பலமற்று சுபரின் பார்வை பெறாமலிருந்தால் ஆறுமாதத்திலும்

ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் பாவியரின் பார்வை இருந்தால் கவனமுடனே, எட்டு மாதத்திலும் மாரணம் உண்டாகும் என்பதை காண்பீர்கள்.

அருஞ்சொற்பொருள்:

பாவன் - பாவியாகி, சுபனே - சுபகிரகங்களே, வர்ச்சிதமாய் - கொஞ்சமும் இல்லாததாய், தக்க பாவர் - முழுப்பாவர், கவனமுடனே - கவனமுடனாகவே, கண்டீரே - காண்பீர்களாக.

பத்து மாதம், ஒரு வருடம் - ஆயுள் காலம்

கண்ட அமர பக்கத்தில் காணும் சோமன் எட்டு ஆறில்
கொண்ட சன்மாதி பாவர் கூடி நோக்க ஈரைந்தே
மீண்டும் எட்டில் சென்மத்தில் வந்தே பாவர் தானிருக்க
மிண்டாய் நல்லோர் நோக்க மிலாது மேவின் வருஷம் ஒன்றிலுமே. 59

தொகுப்புரை:

சென்ன காலத்தில் தேய்பிறைச் சந்திரனாக இருந்து, அந்த சந்திரன் ஆறு எட்டாமிடங்களிலொன்றில் இருக்கவும்

சென்ம லக்கினாதிபதி பாவகிரகங்களுடன் கூடியிருந்தாலும், அவனைப் பாவகிரகங்கள் பார்த்தாலும் சாதகனுக்கு பத்தாவது மாதத்தில் கெண்டம் நேரும்.

எட்டாமிடத்திலும் சென்ம லக்கினத்திலும் பாவகிரகங்கள் இருக்கவும் அவர்களைச் சுபகிரகங்கள் பார்க்காமலும் இருந்தால் ஒரு வருடத்தில் மரணம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

அமர பக்கம் - தேய்பிறைக்காலம், சோமன் - சந்திரன், ஈரைந்தே - பத்துமாதமே, மிண்டாய் - வலியராய்

இரண்டு ஆண்டுகள் வாழ்வான்

ஒன்றேகாரி வக்கிரமாய் ஓதும்புந்தி செவ்வாய்
அன்றேஒரு வீட்டிலுறவே ஆறு ஐந்து எட்டுபன்னிரண்டில்
நின்றே, சன்மம்ஓரிரண்டுநிற்க குசன்தான்உற்றாலும்
நன்றேசுபர்கள்நோக்கமிலாது மேவின்வருடமிரண்டினுமே. 60

தொகுப்புரை:

சனி வக்கிரம் பெற்றிருக்கவும், புதனும், செவ்வாயும் கூடி, 6, 5, 8, 12 ஆகிய இடங்களில் ஒன்றில் நிற்கவும் அல்லது

செவ்வாய் மட்டும் சென்ம லக்கினம் இரண்டாமிடம் ஆகிய இடங்களில் ஒன்றில் நிற்கவும், அந்த செவ்வாயை, சுபகிரகங்கள் பார்க்காமலும் இருந்தால் சாதகன் இரண்டு வருடமே வாழ்ந்திருப்பான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

காரி - சனி, ஓதும் - சொல்லப்படும், நன்றே சுபர்கள் - நல்லவர்களாக சுபகிரகங்கள், நோக்கம் -முழு பார்வை.

மூன்று வருடங்கள் - வாழ்வான்

நாளும் செவ்வாய் தனக்கு எட்டில் நண்ணிக் குருவும் தானிருக்க
கேளும் பரிதி செவ்வாயும் கொண்ட மதியைப் பார்த்திடவே
மீளும் சுங்கன் கண்ணாட்டி மேவி நோக்கம் இல்லாத
ஆளும் வருஷம் மூன்றெனவே அறைவர் கணித வல்லோரே. 61

தொகுப்புரை:

செவ்வாய் இருக்கும் ஸ்தானத்திற்கு எட்டாமிடத்தில் குரு இருக்கவும்

சூரியனும் செவ்வாயும் சந்திரனைப் பார்த்திடவும்

சுக்கிரன் கன்னிராசியிலிருந்து பாராதிருந்தால்

சாதகன் உலகில் வாழும் வருஷங்கள் மூன்றேயாகுமென்று சோதிடக் கணிதவல்லுநர்கள் சொல்லுவார்கள்

அருஞ்சொற்பொருள்:

நண்ணி - அடைந்து, கோளும் பரிதி - கிரகமாகும் சூரியன், கங்கன் - சுக்கிரன், கண்ணாட்டி - கண் அசைக்கும் பெண்ணுருவமான கன்னிராசியில், அறைவர் - திட்டமாகச் சொல்லுவர்.

மூன்றாவது வரியிலுள்ள மீளும் சுங்கன் கண்ணாட்டி மேவி நோக்கம் இல்லாத என்பதற்கு கன்னியாராசியில் சுக்கிரன் வந்துள்ள காலத்தில், சுபரின் பார்வை இல்லாதிருந்தால் - என்றும் காணலாகும்.

நான்கு, ஐந்து வருடங்கள் - வாழ்வான்

வல்ல சன்மம் தனக்கு எட்டு வாழும் அதற்கோர் எட்டதனை
நல்லோர் பார்க்க திரிகோணத்தை நாடும் பாவர் ஒரு நான்கே
சொல்லும் சன்மராசிக்குச் சுபக்கோள் திருஷ்டி வர்ச்சிதமாய்
ஒல்லும் பாவர் பார்வையுற ஓங்கு வருஷம் ஐந்தில் சாவாம். 62

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தையும், அதற்கு எட்டாமிடத்தையும் சுபகிரகங்கள் பார்க்கவும்,

திரிகோணராசியில் பாவகிரகங்கள் இருக்கவும் அமைந்த சாதகனுக்கு வயது நான்கு வருஷங்களே என்பர்.

சென்ம லக்கினராசிக்கு சுபர் பார்வை இல்லாமல், பாவகிரகங்களின் பார்வை ஏற்பட்டிருந்தால் சாதகனுக்கு உள்ள வயது ஐந்தில் மரணம் ஏற்படும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

நல்லோர் - சுபகிரகங்கள், ஒரு நான்கே - நான்கு வயதே, சுபக்கோள் - சுபகிரகங்கள், திருஷ்டி - நல்ல பார்வை, வர்ச்சிதம் - இல்லாமல் போதல்.

ஆறு, ஏழு வருடங்கள் - வாழ்வான்

சாமேவியம்ஆறு எட்டில்சனிசூழ்பரிதிராகுமதி
ஆமேஇருக்கச்சுபர்திருஷ்டியல்லால்வயது ஓராறுதரும்
தாமேசன்மத்தின்முன்பின்னும்தங்கிபாவர்இருந்திடவே
போமேநல்லோர்பார்வையிலாப்போதுமரணம்ஏழ்தனிலே. 63

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு பன்னரண்டு ஆறு எட்டு ஆகிய இடங்களில் சனியோடு சேர்ந்து சூரியன் ராகு சந்திரன் இவர்கள் இருக்கவும்.

சுபகிரகங்களின் பார்வையை இவர்கள் பெறாமல் இருந்தால் ஆறு வருடத்திலும்

சென்ம ராசிக்கு முன்னும் பின்னுமுள்ள ராசி யிடங்களில் பாவகிரகங்கள் இருந்து சுபர் பார்வை இல்லாமலிருந்தால் ஏழு வருடத்திலும் மரணம் உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

வியம் - விரையஸ்தானமெனும் பன்னிரண்டாமிடம், பரிதி - சூரியன், மதி - சந்திரன்.

பாடல்களில், பாவர்கள் குறிப்பிட்ட ராசிகளில் ஒன்றில் இருக்கவும், அவர்களைச் சுபர் பாராதிருந்தால் வயது வருஷம் இத்தனையே என்று கூறப்பெறுவதைக் கொண்டு, சுபரின்

பார்வை ஏற்பட்டிருந்தால் வயதில் வளர்ச்சி உண்டு என்னும் பலன் அறிதற்காகும்.

பாலபருவத்தில் அரிட்டமறிதல்

தனிலே சன்மம் சேயும் மதியும் தன்னில் ஒருவர் நின்றாலும்
இனியே நான்கில் பாவர்களும் எட்டில் பரிதி சேய் மதியு
மனைசூழ்ந்திருக்க, இன்னமொரு மதிவீட்டரசன் சன்மாதி
சனிசூழ் பரியுறநல்லோர்தானும் பாராரெனில் மரணம். 64

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் செவ்வாய் சந்திரன் இவர்களில் ஒருவர் நின்றாலும், நான்காமிடத்தில் பாவகிரகங்களும், எட்டாமிடத்தில், சூரியன், செவ்வாய், சந்திரன் ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்து 6, 8, 12 ஆகிய இடங்களிலொன்றில் இருந்தாலும் (சென்ம ராசியைச் சூழ்ந்திருந்தாலும்)

சந்திரன் நின்வீட்டுக்குடையோன் சென்ம லக்கினாதிபதி, சனியோடு சேர்ந்து சூரியன் உள்ள இடத்தில் இருக்கவும், இவர்களைச் சுபர் பார்க்காதிருந்தால் சாதகன் பால பருவத்திலேயே இறப்பான் என்பர்.

சுபரின் பார்வையைப் பெற்றிருந்தால் ஆயுள் வளர்ச்சி உண்டு என்று சொல்லலாம்.

அருஞ்சொற்பொருள்

சேயும் - செவ்வாயும், பரிதி - சூரியன், மனை சூழ்ந்திருக்க - ராசி இடத்தில் சூழ்ந்திருக்கவும்.

எட்டு, ஒன்பது வருடங்கள் - வாழ்வான்

மரணம் சன்மம், மிதுனம் துலாம் வாழும் எட்டில் குரு புசரும்
திரமாய் பாவர் நோக்குமுறத் தெரிந்த வயதும் எட்டுளதாம்
பரிதி மதியு அட்டமஞ்சேர், பண்பாம் கரி பதினொன்றில்
வரவே ஒன்பதில் மரணம் வகையாய் உலகீர் அறிந்திடுமே. 65

தொகுப்புரை:

சென்ம லக்கினம் மிதுனம் அல்லது துலா ராசியாக இருக்கவும், அதற்கு எட்டாமிடத்தில் குருவும் சுக்கிரனும் இருந்த பாவிகளின் பார்வையினைப் பெற்றால் எட்டு வயதளவே தெளிந்த வயதாகும்.

மற்றும் சூரியனும் சந்திரனும் சேர்ந்து எட்டாமிடத்தில் இருக்கவும், சனி பதினொன்றாம் இடத்தில் இருந்தால் ஒன்பது வயதளவே வாழ்வான் என்பதை வகையாக யாவரும் அறியும்படியான தாகும்.

அருஞ்சொற்பொருள்

மிதுனம், துலாம் - மிதுனராசி துலாம் ராசி - இவைகளில் ஒன்றில், திரமாய் - நேர்பார்வைத்திறமாக, காரி பதினொன்றில் வரவே - சனி சஞ்சாரமாக பதினோராம் இடத்திற்கு வரவே, என்றும் கொண்டு பலன் காண்பதாகும். வகையாய் - பலவகையால் ஆயுள் பலனைக் காண்பதாம்.

ஒன்பது வயதளவே வாழ்வான்

அறிந்தே எட்டில் கதிர் புகரும் அரசன் பார்வைதானுமிலாது
செறிந்தே இருக்க, இன்னமொரு செப்புநூலில் சந்திரனை
பிரிந்து பார்க்கும் சேய்பரிதி பின்பு நல்லோர் பாராததால்
இறந்தே இருக்கும் ஒன்பதினில் இனைய கோளின் பலனிதுவே. 66

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் இருக்க

அவர்களைக் குரு பாராதிருக்கவும், மற்றும் நான்காமிடத்தில் சந்திரன் நிற்கவும்

அந்த சந்திரனைச் சூரியனும் செவ்வாயும் பார்க்கவும், சுபகிரகங்கள் பாராதிருக்கவும் நேரிட்டால்

ஒன்பதாவது வயதில் சாதகன் இறந்து போவான். இவ்வாறாகக் கிரகங்கள் அமைந்திருப்பின் பலன் இதுவேயாகும்.

அருஞ்சொற்பொருள்

கதிர் - சூரியன், புகர் - சுக்கிரன், அரசன் - குரு, இன்னமொரு நான்கில் - மேலும் நான்காமிடத்தில், கோளின் - கிரகங்களின்

பத்து, பதினொன்று வயதே வாழ்வான்

இதுவே கேந்திரமேறி இருவர் ராகு கேது இருந்திடவே
அது சூழ் பாவர் நோக்கமுற ஆனபத்தில் உறும் மரணம்
மதிசேர்பரிதி கூடியொரு மனையிலிருக்க சன்மத்தை
துதிசேர் நல்லோர் பாராக்கால், சொல்லும் பதினொன்று வயதே. 67

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு கேந்திரஸ்தானங்களில் ராகு கேது இருவரும் இருக்கவும்

அவர்களை பாவகிரகங்கள் பார்க்கவும் அமைந்திருந்தால் பத்து வயதிலும்

சந்திரனோடு சூரியன் சேர்ந்து ஒரே ராசியிடத்தில் இருக்கவும், சன்ம லக்கினத்தை சுபர் பாராதிருந்தால் (பாவகிரகங்கள் பார்த்தால்) பதினோரு வயதிலும் மரணம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

கேந்திரமேறி - சென்ம லக்கினத்திற்கு 1, 4, 7, 10 ஆம் இடங்களாகிய கேந்திரஸ்தானத்தில் இருக்க, ஒரு மனை - ஒரே ராசியில்

பன்னிரண்டு, பதின்மூன்று வயதளவு வாழ்வான்

வயதே சன்மம் கேது கதிர் மதிதானிருக்கச் சுபர் திருஷ்டி
சயமே இல்லாப் பன்னிரண்டில் சாரும் குழவி இறும் மரணம்
நயமாம் ஒன்றில் எட்டாதி நண்ணியிருக்க ஓராறில்
நியமே நான்கில் சேயுறவே நிற்பன் பதின்மூன்றெனச் சொல்லும் 68

தொகுப்புரை:

சாதகனின் வயதின் அளவினைப் பற்றித் தொடர்ந்து கூறும்போது,

சன்ம லக்கினத்தில் கேது சூரியன் சந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து இருக்கவும், அவர்களைச் சுபகிரகங்கள் பாராதிருந்தால், சாதகன் பன்னிரண்டு வயதளவே வாழ்ந்து இறப்பான்.

சென்ம லக்கினத்தில் எட்டாமிடத்தோன் இருக்கவும் ஆறாமிடத்திலோ, நான்காமிடத்திலோ, செவ்வாய் இருந்தால் பதின்மூன்று வயதில் இறப்பான்.

அருஞ்சொற்பொருள்:

கதிர் - சூரியன், மதி - சந்திரன், திரஷ்டி - பார்வை, சேயுறவே - செவ்வாய் இருந்தால்.

பதினாறு, இருபது - வயதளவே வாழ்வான்

சொல்லும் ஆறு எட்டில் பாவர் சூழ்ந்தே இருக்கச் சன்மாதி
வெல்லும் ஆ போக்கிலியத்தின் மேவி இருந்தால் பதினாறாம்
வல்லோர் அதிபன் சென்மாதி வரவே பரிதியுடன் கூடி
நல்லோர் பாராக் கேந்திரத்தில் நண்ணும் பாவர் நாலைந்தே. 69

தொகுப்புரை:

ஆறாமிடம் எட்டாமிடங்களில் பாவகிரகங்களும், சென்ம லக்கினாதிபதி ஆபோக்கிலியத்திலும் இருந்தால் பதினாறு வயதிலும்

வல்லோர் எனும் சுபராசிக்கதிபனும் சென்மாதிபதியும் சூரியனுடன் கூடி இருக்கவும், அவர்களைச் சுபகிரகங்கள் பாராமல்,

கேந்திரஸ்தானங்களில் பாவகிரகங்கள் இருந்தால் இருபது வயதிலும் மரணமாவான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

சென்மாதி - சென்மலக்கினாதிபதி, பதினாறாம் - பதினாறு வயதே வாழ்வான், வல்லோர் - பலம் பெற்ற கிரகராசி, பரிதியுடன் - சூரியனுடன், நண்ணும் - சேர்ந்திருக்கும்.

இருபத்தேழு வயதளவும் வாழ்வான்

மாசே கன்னி லக்கினமாய் வந்து சனியும் தான் இருக்க
போதே அரசன் வியம் எட்டில் போக இருபத்தாறாகும்
சாதி சன்மம் எட்டதிபன் சனியாய்ப் புடமே தானிருந்தும்
ஓதும் கேந்திரமும் எட்டிலுறவே கேது மூவொன்பான். 71

தொகுப்புரை:

கன்னியாராசி லக்கினமாயிருக்க அதில் சனி இருக்கவும்.

குருவானவர் கன்னிராசிக்கு எட்டு பன்னிரண்டாம் ராசியிலொன்றில் இருந்தால் சாதகனுக்கு வயது இருபத்தாறு உண்டு என்பர்.

சென்மாதிபதியும் எட்டாமிடத்தோனும் சனியின் ஸ்தானமான கேந்திரத்தில் இருக்கவும், கேது அட்டமஸ்தானத்திலும் இருந்தால் இருபத்தேழு வயதளவு வாழ்வான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

அரசன் - குரு, வியம் - பன்னிரண்டாமிடம், சாதி - தனித்தன்மையான, ஓதும் - குறித்து சொல்லப்படம்.

இருபத்தொன்பது வயதளவும் வாழ்வான்

பானு புதல்வன் கேது கும்பாம்பு செவ்வாய் ஒன்று எட்டில்
தேனேயிருக்கப் புகர் புந்தி தேவர் குருவும் கேந்திரமில்
லானே உற்றால் இருபத்தெட்டாகும். எட்டில் கதிர் மூன்றில்
ஊனே மதியும் சனி பாவருடன் நோக்கில் இருபத்தொன்பானே. 72

தொகுப்புரை:

சூரியனின் மகன் என்று போற்றப்படும் சனி, கேது, ராகு செவ்வாய் ஆகிய கிரகங்கள் சென்மலக்கினத்திலோ எட்டாமிடத்திலோ அல்லது இரண்டிடங்களிலோ இருக்கவும்.

சுக்கிரன் புதன் குரு ஆகியோர் கேந்திரராசிகளில் இருந்தால், சாதகனுக்கு வயது இருபத்தெட்டேயாகும். மற்றும்

எட்டாமிடத்தில் சூரியனும், மூன்றாமிடத்தில் தேய்பிறைச் சந்திரனும் இருக்க அவர்களைச் சனி பாவருடன் நோக்கினால் வயது இருபத்தொன்பதேயாகும்.

அருஞ்சொற்பொருள்:

பானு புதல்வன் - சூரியனின் மகன் சனி, கரும்பாம்பு - ராகு, ஒன்று -சென்ம லக்கினம், ஊனே மதியும் - ஊனம் பெற்ற சந்திரன்.

வயது முப்பதின் மேல் வாழ்வான்

ஒன்பான் தேய்பிறை சுபத்தானமுற்றே, அட்டமாதிபதி
அன்பாய் கேந்திரமுற, எட்டிலானபாவர் தானிருக்கப்
பின்பாம் லக்கினாதிபதி பலன்களில்லாது இருந்திடவே
துன்பம் முப்பது என அறிந்து சுகமாய் உரைத்தேன் மிகவாழும். 73

தொகுப்புரை:

தேய்பிறைச் சந்திரன் ஒன்பதாமிடமான சுபர் வீட்டிலும் அட்டமாதிபதி கேந்திரத்திலும், பாவிகள் எட்டிலும், லக்கினாதிபதி பலமில்லாமலும் இருந்தால் முப்பது வயது வரைக்கும் துன்பமாகவே வாழ்வான் என்பதனை அறிந்து சொன்னேன்.

இவ்வாறாகக் கிரகங்கள் அமைந்திருந்தால் மேலும் சிலகாலம் சுகமாய் வாழ்வான் என்று கூறலாம்.

அருஞ்சொற்பொருள்:

ஒன்பான் - ஒன்பதாமிடம், சுபத்தானம் - ஒன்பதாமிடமாகிய சுபஸ்தானம், அன்பாய் - பகையில்லாமல் நட்புறவாக, பின்பாம் - அதற்குமேல், பலன்களில்லாது - நீசம் பெற்றவனாக, துன்பாம் - துன்பமாகும்.

மனைவியாலும், பாம்பாலும் - மரணம்

வாழுநான்கில் சுக்கிரனும், வந்தே எட்டில் பாவருறச்
சூழும் நல்லோர் பார்வையறத் தொடர்ந்தே நிற்க அக்கினியால்
ஊழி மனையாள் தன்னாலும் ஓங்கும் பாம்பின் கடியாலும்
ஆழி உலகோர் தாமறிவதாகும் மரணம் கண்டீரே. 74

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்தில் சுக்கிரனும், எட்டாமிடத்தில் பாவகிரகங்களும் சுபகிரகங்களின் பார்வையற்றிருந்தால், அக்கினியால் மரணமாவான்.

அல்லது, தனது வாழ்நாளளவும் தன்னுடன் இருக்க வேண்டிய மனையாளால் மரணம் ஏற்படும்.

அல்லது, விடம் நிறைந்த பாம்பின் கடியாலும் மரணம் உண்டாகும்.

கடல் சூழ்ந்துள்ள இந்த உலகத்திலுள்ள அறிஞர்தாம் அறியும் சோதிடப்பலன்கள் என்பதைக் காண்பீர்களாக.

அருஞ்சொற்பொருள்:

பார்வையற - பார்வை நீங்கவும், அக்கினியால் - நெருப்பால், ஓங்கும் பாம்பு - விஷம் ஓங்கிய கொடிய பாம்பு, ஆழி - கடல்.

முப்பது, முப்பத்திரண்டு வயதளவேயாகும்

கண்ட இரண்டில் பன்னிரண்டில் காணும் செவ்வாய் சோமனுற
பண்டே ஏழில் எட்டில் கரும்பாம்பும் அரசனுறின் முப்பானாம்
கொண்ட அட்டமாதிபதி கேந்திரமே இலக்கினாதிபதி
வண்டு பலன்கள் வர்ச்சிதமேல் வயது முப்பத்திரண்டாமே. 75

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு இரண்டாமிடத்திலும் செவ்வாயும் சந்திரனும் இருக்கவும்,

ஏழாமிடத்தில் எட்டாமிடத்தில் ராகுவும் குருவும் இருக்கப் பிறந்தவனுக்கு வயது முப்பதேயாகும்.

எட்டாமிடத்தோன் கேந்திரஸ்தானத்தில் இருக்கவும் சென்மலக்கினாதிபதி எந்த பலன்களும் இல்லாது செயலற்று இருந்தால் சாதகனுக்கு வயது முப்பத்திரண்டேயாகும்.

அருஞ்சொற்பொருள்:

சோமன் - சந்திரன், கரும்பாம்பும் - ராகுவும், வண்டு பலன்கள் - நல்ல பலன்கள், வர்ச்சித மேல் - அற்றிருந்தால்

இரண்டில் பன்னிரண்டில் செவ்வாயும் சந்திரனும் இருக்க என்பதற்கு, இரண்டிலோ பன்னிரண்டிலோ ஓரிடத்தில் தனித்தோ கூடியோ என்ற முறையில் பொருள் கொள்ள வேண்டும்.

முப்பத்தாறு வயதளவு வாழ்வான்

ஆமே அரசன் சுக்கிரனும் அணுகிக் கேந்திரந்தான் மேவ
தாமே லக்கினாதிபதி தானும் பாவருடன் கூட
தீமை சூழா போக்கிலியம் தேய்ந்த மதியும்தான் இருக்க
ஆமே மரணம் ஆறாறில் சொல்வர் அறிந்து வல்லோரே. 76

தொகுப்புரை:

குருவும் சுக்கிரனும் சேர்ந்து கேந்திரஸ்தானத்தில் இருக்கவும்

கெடுதி அமையாத ஆபோக்கிலீய ஸ்தானத்தில் தேய்பிறைச் சந்திரன் இருக்கவும், அமைந்த சாதகமானால்

அந்த சாதகன் முப்பத்தாறு வயதளவே வாழ்ந்து இறப்பான் என்று சோதிடக்கணிப்பின் நுட்பத்தினை அறிந்த வல்லோர்கள் கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

அரசன் - குரு, அணுகி - ஒருவரோடு ஒருவர் சேர்ந்து, தேய்ந்த மதியும் - தேய்பிறைச் சந்திரனும், ஆறாறில் - 6 × 6 = 36 முப்பத்தாறு.

37, 38 வயதளவுகள் வாழ்வன்

வல்ல மிதுனம் லக்கினமாய் வாழும் பரிதி தானிருக்க
பொல்லார் இரண்டு பாரிசமும் புக, ஆறு அரசன் முப்பத்தேழ்
ஒல்லும் பாவர் கேந்திரத்தில் உற, சன்மாதி பன்னிரண்டில்
வெல்லும் எட்டோன் லக்கினத்தில் மேவின் முப்பத்தெட்டாமே. 77

தொகுப்புரை:

சென்ம லக்கினம் மிதுனமாக, அதில் சூரியன் இருக்கவும்

அவ்வாறமைந்த மிதுன லக்கினத்திற்கு இரண்டு பக்கமும் பாவகிரகங்கள் இருக்கவும்

சென்ம லக்கினமான மிதுனத்திற்கு ஆறாமிடமாகிய விருச்சிகத்தில் குரு பகையாகி நிற்கவும் அமைந்த சாதகன் முப்பத்தேழு வயதளவே வாழ்வான் மற்றும்

தீமை செய்யும் பாவகிரகங்கள் கேந்திரஸ்தானத்தில் இருக்கவும், சென்ம லக்கினாதிபதி விரையஸ்தானமாகிய பன்னிரண்டில் இருக்கவும்

எட்டாமிடத்தோன் சென்மலக்கினத்தில் இருக்கவும் அமைந்த சாதகன் முப்பத்தெட்டு வயதளவே வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்:

வாழும் பரிதி - முழுமையாக வாழும் சூரியன், பொல்லார் - பாவிகள், இரண்டு பாரிசம் - இருபக்கமும்.

நாற்பது வயதளவும் வாழ்வான்

மேலான் சன்மம் திரராசி மேவும் ஒன்றில் எட்டாதி
சாலவிருக்கச் சுபர் எட்டில் தந்தால் வயது எண்ணைந்தாம்
சேல் எட்டாதி கேந்தரமே, செவ்வாய் லக்கினம் தானிருக்க
கால ஆறில் மூன்றில் சனிகதிர் சூழ, எண்ணைந்தாம் வயதே. 78

தொகுப்புரை:

சென்மலக்கினம் ஸ்திரராசியாக இருக்கவும், அதில் எட்டுக்குடையோன் இருக்க, அவனை சுபகிரகங்கள் பார்த்தால் சாதகனுக்கு வயது நாற்பதளவேயாகும்.

மீனராசி எட்டாமிடமாகவும் கேந்திரமாகவும் அமையவும். செவ்வாய் எட்டாமிடத்தில் இருக்கவும்

ஆறாமிடத்திலோ மூன்றாமிடத்திலோ சனியும் சூரியனும் சேர்ந்து இருக்கவும் பிறந்த சாதகமுடையவன் அதே நாற்பது வயதளவும் வாழ்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

சாலவிருக்க - மிகவும் இருக்க, தந்தால் - பார்வை தந்தால், சனி கதிர் சூழ் - சனியும் சூரியனும் சேர்ந்தாலும், தனித்தனியே இருந்தாலும், எண்ணைந்தே 8 × 5 = 40 நாற்பதே.

ஐம்பது வயது வரைக்கும் வாழ்வான்

வயதே சோமன்லக்கினத்தில் வர்கோத்தமனாய் உறில் பாவர்
நியமே பார்க்க சுபர் திருஷ்டி நேசமில்லா ஆறு எட்டில்
பயமே சென்மம் எட்டாதிபதி அங்கிசையில் பாவருடன
சயமே நிற்க எட்டாதி சன்மத்திலிருக்கில் ஐம்பதுவே. 79

தொகுப்புரை:

ஒரு சாதகனின் வயதைக் கணித்துக் கூறுவதானால்

சந்திரன் சென்மலக்கினத்தில் வர்க்கோத்தமனாக இருக்கவும், அவனைப் பாவகிரகங்கள் நியதியுடன் பார்க்கவும்

சுபகிரகங்கள் பார்வை இல்லாமல் இருக்கவும்

ஆறு, எட்டு ஆகிய இடங்களில் எட்டாமாதிபதியின் அங்கிசை பாவருடன் இருக்கவும்

எட்டாமிடத்தோன் சென்மலக்கினத்திலும் இருந்தால் - சாதகன் ஐம்பது வயதளவே வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்:

சோமன் - சந்திரன், வர்க்கோத்தமனாய் - வர்க்கோத்த ஸ்தானத்திலும் ராசியிலும், அங்கிசத்திலும் சென்மத்தி லேயே சந்திரன் இருப்பவனாய், திருஷ்டி - பார்வை, சென்மம் எட்டாதிபதி - சென்ம ராசிக்கு எட்டாமிடத்தோன், அங்கிசையில் - சேர்ந்துள்ள ராசியிடத்தில்

ஐம்பத்திரண்டு வயதளவே வாழ்வான்

அன்பாம் உபய ராசிக்கு அதிபதி
இன்பமாய் லக்கினத்து இயைந்து உற்றிட
துன்பமதி சனி பன்னிரண்டில் உறில்
பண்பாம் ஐம்பத்திரண்டினில் சொல்லுமே. 80

தொகுப்புரை:

நன்மையாகும் உபயராசிகளாகிய மிதுனம் கன்னி தனுசு மீனம் ஆகிய ராசியிடங்களுக்குரிய கிரகங்களாகிய புதனும் குருவும் (இருவரில் ஒருவர்) குறையின்றி சென்ம லக்கினத்தில் இருக்கவும்.

சந்திரன் சனி இருவரும் பன்னிரண்டாமிடத்தில் இருக்கவும் பிறந்த சாதகன், நன்முறையில் வயது ஐம்பத்திரண்டு அளவு வரைக்கும் வாழ்வான்.

சுபகிரகங்களின் நோக்கம் பெற்றால் மேலும் பலவருடங்கள் வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்:

அதிபதி - ராசிக்கு உரிய கிரகம், இயைந்து - சேர்ந்து, உறில் - இருந்தால், சொல்லுமே - சொல்லப்படும் என்பர்.

ஐம்பத்து நான்கு வயதளவு வாழ்வான்

சொல்லும் சென்மாதி சூழ்ந்த எட்டுற
வல்ல சந்திரன் மனையிற் கதிபதி
வெல்லு சந்திரற்கு எட்டில் மேவிடில்
புல்லர் கூடில் போம் ஐம்பத்து நாலதே. 81

தொகுப்புரை:

சொல்லப்படும் சென்ம லக்கினாதிபன் எட்டாமிடத்தில் இருக்க,

சந்திரன் இருக்கும் வீட்டிற்கு உரிய கிரகம், அந்த சந்திரனுக்கு எட்டாமிடத்தில் இருந்தாலும், அவனோடு பாவிகள் சேர்ந்து இருந்தாலும்

ஐம்பத்து நான்கு வருடங்கள் வாழ்வான் என்பர்.

சுபருடைய பார்வை சந்திரனுக்கு ஏற்பட்டிருந்தால் குறித்த வயதிற்கு மேலும் வாழ்வு உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்:

சூழ்ந்தே - எட்டில் சூழ்ந்திருக்க, சந்திரன் மனையில் - சந்திரன் உள்ள ராசியினுக்கு, புல்லர் - பாவகிரகங்கள்.

ஐம்பத்தாறு வயதில் - கண்டம்

நாலாம் சன்மம் நாடும் தனுசினில்
மேலாய் அரசன் விரும்பி இருந்திடச்
சேலார் ராகுவும் செவ்வாயும் எட்டுறில்
காலம் எழெட்டினில் கன கண்டமே. 82

தொகுப்புரை:

சென்ம லக்கின ராசிக்கு நாலாமிடம் தனுசு ராசியாக இருக்க, அந்த ராசியில் குரு விருப்பமுடன் இருக்கவும்

ராகுவும் செவ்வாயும் எட்டாமிடத்தில் இருப்பார்களானால்,

சாதகனின் ஆயுள் காலம் ஐம்பத்தாறு நிகழும்போது கொடிய கண்டம் ஏற்படும்.

அருஞ்சொற்பொருள்

நாடும் சென்மம் நாலாம் தனுசில் - விரும்பிப் பார்க்கும் சென்மலக்கினத்திற்கு நான்காமிடமாக தனுசு ராசி இருக்கவும், மேலாய் - தனுசு ராசியில், காலம் - வயதிற்கான வருடம், கன கண்டமே - கொடிய பெரிய கண்டமாக அமையும்.

ஐம்பத்தெட்டு வயதளவே வாழ்வான்

கண்டவாறு கருதிடும் எட்டினில்
கொண்ட கோள்களே கூடியது தனில்
மண்டி இருக்கில் வயது ஐம்பத் தெட்டினில்
அண்டர் மாதவர் அறிந்துரைத்தனரே. 83

தொகுப்புரை:

தீய ஸ்தானமென்று கண்டவாறு கருதிடும் எட்டாமிடத்தில்

தீமை செய்வதே கொண்ட பாவகிரகங்களாகிய சனி ராகு - கேது ஆகியோர் சேர்ந்து இருந்தால்

வயது ஐம்பத்தெட்டினில் மரணமாவானென்று தேவர்களைப் போன்ற சிறந்த தவத்தினை உடைய ஞானிகள் அறிந்து சொன்னார்கள்.

அருஞ்சொற்பொருள்

கொண்ட கோள்கள் - எட்டாமிடத்தினைக் கொண்ட பாவகிரகங்களில், சனி ராகு, அல்லது சனி கேது சேர்ந்து இருந்தால்,

மண்டி - சேர்ந்து, அண்டர் - தேவர்களைப்போன்ற, மாதவர்- மிகுந்த தவப்பலனைப் பெற்ற ஞானிகள்.

அறுபது வயதளவு வாழ்வான்

உரைத்திடும் பத்தில் உறுகதிரோனும்
திரைத்த காரி சென்மம் மேவிடில்
புரைத்த எட்டினில் புரவலன் உற்றிட
நிரைத்தே யாண்டு நிற்பன் அறுபதே. 84

தொகுப்புரை:

சென்மலக்கின ராசிக்கு பத்தாம் இடமென்று கணக்கிட்டுச் சொல்லப்படும் இடத்தில், சூரியன் இருக்கவும்

சனி சென்ம லக்கினத்தில் இருக்கவும், எட்டாமிடத்தில் குரு இருக்கவும்

அமைந்த சாதகனுக்கு கூடுதலான வயது வருடம் அறுபதேயாகும்.

அருஞ்சொற்பொருள்

உறுகதிரோன் - இருக்கும் சூரியன், புரவலன் - அரசனான குரு, நிற்பன் - வாழ்ந்திருப்பன்.

அறுபதாண்டிற்கு மற்றுமொரு கோள்நிலை

அறுபதில் இன்ன ஆண்டினில் காரி
நறுமலர்ச் சன்ம நாலினில் சந்திரன்
பறுவெழில் செவ்வாய் பத்தினில் கதிர் குரு
இறு புகர் புந்தி இவருடன் கூடிடில் 85

தொகுப்புரை:

அறுபது வயது என்பதற்கு மேலே கூறியதன்மேல் இன்ன வகையிலும் காணலாகும் என்பதற்கு

சனி மணமுள்ள மலருக்கு ஒப்பான சென்ம லக்கினத்தில் இருக்க

நான்காமிடமான சுகஸ்தானத்தில் சந்திரன் இருக்க

செவ்வாய் பத்திலும், அதில் சூரியன் குரு சுக்கிரன் புதன் ஆகியோர் சேர்ந்து கூடியிருக்கவும்

அமைந்த சாதகத்திற்கு அறுபது வயதளவே கூறப்படும் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

இன்னம் - மேலும், காரி - சனி நறுமலர்ச்சன்மம்- ஒரு சாதகத்திற்கு சென்மலக்கினம் மணமுள்ள மலரின் தன்மையைப் போன்றது என்று விசேடித்துக் கூறப்பட்டுள்ளது. புகர் - சுக்கிரன்.

அறுபத்தைந்து வயது வாழ்வான்

கூடிய எட்டாம் அதிபதி பாவனாய்
நாடிய சந்திரன் நண்ணிடும் கோணத்து
ஆடிய கேந்திரந் தன்னில் கூடில்
ஆடிய அறுபத்தைந்தினில் போகும். 86.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்திற்குரியகிரகம் பாவியாய், சந்திரன் நின்ற ராசிக்கு திரிகோணத்திலோ அல்லது கேந்திரத்திலோ இருந்தால் அறுபத்தைந்து வயதளவு வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

நண்ணிடும் - சேர்ந்துள்ள, கோணத்து திரி கோணத்திலோ, கூடில் - சேர்ந்து இருந்தால், ஆடிய - வயது நிகழ்ந்தது.

எட்டாம் அதிபதி பாவியாய் திரிகோணத்திலோ கேந்திரத்திலோ சந்திரனோடு கூடியிருந்தால் வயது அறுபத்தைந்தளவே நிகழும் என்றும் காணலாகும்.

எழுபதாண்டுகள் வாழ்வான்.

போகிடும் காரி புகுமனை நீசம்
ஆகிய கேந்திர கோணம் ஆகிடில்
மேவிய இலக்கினம் அணுகில் எழுபதே
ஆகிய சுபருடன் அணுகில் எழுபதே. 87

தொகுப்புரை:

ஆயுள் காரகனாகிய சனி இருக்கும் வீடானது நீச்சமாகவும், (மேட ராசியாகவும்)

அந்த ராசி வீடானது கேந்திரம் அல்லது திரிகோணமாகவும் இருக்க

சென்ம லக்கினத்திற்குரிய கிரகம் ஏழாவது இடத்தில் நல்லவர்களாகிய சுபகிரகத்துடன் சேர்ந்து இருந்தால்

சாதகனுக்கு வயது எழுபதுவரையில் நிகழும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

காரி - சனி, புகுமனை - சென்று உள்ளராசியிடம். மனை - இடம், இலக்கினம் ஏழின் - இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில், அணுகில் - சேர்ந்திருந்தால்,

எழுபத்து நான்கு வயது வாழ்வான்

எழுந்திடு லக்கினத்து எய்த நற்கோளுறத்து
அழுந்திய கேந்திரம் சந்திரன் மேவிடில்
அழிந்திடு கோணத்தில் காரி அமர்ந்துறில்
எழும்பிடு செல்வமோடு எழுபதினாலிலே. 88

தொகுப்புரை:

சென்ன கால உதய லக்கினத்தில் சுபகிரகங்கள் இருக்கவும்

பதிவான கேந்திரஸ்தானத்தில் சந்திரன் இருக்கவும்

திரிகோணராசியில் சனி இருக்கவும் பிறந்த சாதகன்

வளர்ந்து வரும் செல்வங்களோடு எழுபத்து நான்கு வயதளவும் மேலும் வாழ்வான் என்பர்.

அருஞ்சொற்பொருள்

எய்த - அடைந்திருக்க, நற்கோள் - சுபகிரகம், அழுந்திய- திட்டமான, அழிந்திடும் - கேந்திரத்திற்கு லோக வரும், எழும்பிடு - மேலும்மேலும் உயர்ந்து வரும்.

எழுபத்தைந்து வயதளவும் வாழ்வான்

நாலாம் செவ்வாய் நாடி ஐந்தினில்
ஏழாம் பரிதி ஏழில் அமர்ந்திட
நீலாங் காரி நீச முற்றிடில்
மாலாய் எழுபத்தைந்து வயதாகும் 89

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு நான்காம் இடத்திற்குரியவன் செவ்வாயாகி

அந்த கிரகம் ஐந்தாமிடத்தில் இருக்கவும்

ஏழாமிடத்திற்குரிய சூரியன் ஏழாமிடத்திலேயே இருக்கவும்

சனி மேடராசியில் நீசமும் பெற்றிருந்தால் எழுபத்தைந்து வயதளவும் வாழ்வானென்று கூறுவர்.

அருஞ்சொற்பொருள்

நாலாம் செவ்வாய் - நாலாம் இடத்திற்குரிய செவ்வாய், பரிதி - சூரியன், காரி - சனி, மாலாய் - வளர்ச்சியாக.

எழுபத்தொன்பது வயது வாழ்வான்

தருணம் அறியும் வகை கேந்திரத்தில்
குருவுடன் மதியும்கூடி இருந்திட
திரள் சுபர் நோக்க தேசத்து அரசராய்ப்
புவியினில் எழுபத்து ஒன்பது பொருந்துமே.

தொகுப்புரை:

சாதகனுக்கு ஆயுள் காலத்தில் முடிவு நேரத்தினை அறிந்திடும் மார்க்கமாவது

சென்ம லக்கினத்திற்கு கேந்திரஸ்தானத்தில் குரு சந்திரனுடன் கூடி இருக்கவும்

அவர்களை சுபகிரகங்கள் பலர் நோக்கவும் அமைந்த சாதகமானால்

அந்த சாதகன் உலகினை ஆட்சி செய்யும் மன்னவனாக எழுபத்து ஒன்பது வயதளவும் இருப்பான் என்று கூறுவது பொருத்தமாகும் வயதளவாம் என்பர்.

அருஞ்சொற்பொருள்

தருணம் - அந்த நேரம், நாள், திரள், சுபர் - கூடிய சுபகிரகங்கள், நோக்க - பார்க்கவும், புவியினில் - உலகத்தில்

எண்பது வயது வாழ்வான்

மேவிய லக்கினவீடுமுதல் ஆறளவும்
தாவிய நல்லோர் தானுற ஏழ்முதல்
பாவர்கள் உறிலே பரதேசத்து அரசாய்
சாவது எண்பதில் என்று சாற்றிடுவாயே! 91

தொகுப்புரை:

சென்ம லக்கினம் முதலாக ஆறு ராசிவரையில் சுபகிரகங்கள் இருக்கவும்,

ஏழாவது ராசிமுதல் மேல் உள்ள ராசிகளில் பாவகிரகங்கள் இருந்தால்,

சாதகன் அந்நிய தேசத்தில் அரசவாழ்வில் இருந்து, எண்பது வயதில் இறப்பானென்று

சோதிடக் கணிப்பின்படி சொல்லுவாயாக என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

வீடு - ராசி வீடு இடம், ஆறளவும் - வரிசையாக ஆறு ராசிகளில், ஏழ்முதல் - ஏழாமிடம் முதலாகப் பன்னிரண்டாமிடம் வரையில்.

எண்பது வயதிற்கு மேலும் ஒரு கணிப்பு

சாற்றிடும் இன்னந்தான் எண்பதினில்
ஏற்றிடு லாபத்து இருந்த அங்கிசாதிபதி
போற்றும் அவ்வீட்டினில் புகில் அதற்குடையோன்
நேற்றிய கேந்திரத்து உறில் நிச்சயமே. 92

தொகுப்புரை:

முன்னர் எண்பது வயதளவிற்குச் சொன்ன கிரகபலன்களைப் போல் மேலும் ஒரு முறைமையினைக் கூறுவோமானால்

சென்ம ராசிக்கு லாபஸ்தானமாகிய பதினோராம் வீட்டுக்குடைய கிரகம் எந்த ராசியில் இடம்பெற்றுள்ளதோ அந்த ராசியிடத்துக்குரிய கிரகம் சரியான கேந்திரஸ்தானத்தில் இருந்தாலும்

சாதகன் எண்பது வயதளவும் வாழ்ந்திருப்பான் என்று நிச்சயிக்கலாகும்.

அருஞ்சொற்பொருள்

இன்னந்தான் - அதற்கு மேலும், புகில் - சென்றிருந்தால், நேற்றிலு - பொருந்திய வலிமை.

தொண்ணூறு வயது வாழ்வான்

நிச்சய எட்டு ஆறு நிலவுடன் சன்மம்
இச்சை நற்குருவும் லாபம் மூன்றினில்
துச்ச பாவர் தொடர்ந்தே இருந்திடில்
அச்சமில் தொண்ணூறு ஆண்டினிலிறுமே. 93

தொகுப்புரை:

சென்ம ராசிக்கு ஆறு எட்டாம் இடங்களிலொன்றில் (குறையில்லா) சந்திரனும்

சென்ம லக்கினத்தில் குறையில்லாத நல்ல குருவும்

லாபத்தானமாகிய பதினோராம் இடத்திலும் மூன்றாமிடத்திலும் பாவகிரகங்கள் தொடர்ந்து இருந்தால்

அச்சமில்லாமல் சாதகன் தொண்ணூறு வயதளவும் வாழ்வான்.

அருஞ்சொற்பொருள்

நிலவு - சந்திரன், சன்மம் - சன்ம லக்கினம், நற்குரு - குற்றமில்லாத குரு, துச்ச பாவர் - தீமை செய்யும் பாவர்.

நூறு வயதளவும் வாழ்வான்

பெறும்சன்மாதிபதி இதுவேபலனாய்
நறுஞ் சுபர் நோக்கவும்நண்ணிக் கேந்திரத்து
உறினேலட்சுமி தொடர்ந்து பூவரசாய்
தெரிந்திடுநூறெனச் செப்பு மாதவனே. 94

தொகுப்புரை:

சென்ம லக்கினாதிபதி நிறைந்த பலவானாக இருக்கஅந்த சென்மாதிபதி நல்ல சுபகிரகங்கள் பார்த்தும் சென்மாதிபதி உள்ள ராசியிடம் கேந்திர ஸ்தான மாகவும்அமைந்திருந்தால், சாதகன் லட்சுமி கடாக்ஷத்தோடு சகல பாக்கியங்களையும் பெற்று அனுபவிப்பதோடு அரசவாழ்வினையும் அடைந்து நூறு வயதளவும் வாழ்ந்திருப்பான் என்று

சோதிடக் கணிதத்தில் வல்லவராகிய மாதவரே சொல்லுவீர்களாகவும்

அருஞ்சொற்பொருள்

இதுவே பலனாய் - ஸ்தானத்திற்குரிய நற்பலனாய், நறும் சுபர் - தீமை செய்யாத நல்ல சுப கிரகங்கள், பூவரசாய் - பூலோகத்திற்கு அரசனாய், செப்பு - சொல்லுவீர்களாகவும்.

ஒன்பதாவது இடம் - பலன்கள்

தகப்பன் (பிதா) தருமம், பாக்கியம், குரு அம்சம்
தந்தைக்கு அரிட்டகாலம்

ஒதும்ஐந்து ஒன்பானாதி கதிருடனேகூட
ஒதிடும்காரி பார்க்க உறும் பிதாவிற்கு அரிட்டம்
ஒதும்ஐந்து ஒன்பானாதிபதி கதிருடனேகாரி
ஒது சேய்இவர்தாம்மூன்றிலுறில் தந்தை உடனேபோமே. /

தொகுப்புரை:

சொல்லப்படும் சென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் இடத்து அதிபதியும், பிதாஸ்தானமாகிய ஒன்பதாமிடத்து அதிபதியும் சூரியனுடன் கூடி இருக்க அவர்களைச் சனி பார்க்கவும் அமைந்தால் தந்தைக்கு மரணம் உண்டாகும்.

மேலே சொல்லப்பட்டபடி, ஐந்தாமிடத்தோனும், ஒன்பதாமிடத்தோன், சூரியன், சனி, செவ்வாய் ஆகிய கிரகங்களுடன் சேர்ந்து மூன்றாமிடத்தில் இருந்தாலும் தந்தைக்கு உடனே மரணம் ஏற்படும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

ஐந்து -ஐந்தாமிடத்தோன், கதிருடன் - சூரியனுடன், காரி - சனி, பிதா - தந்தை, அரிட்டம் - மரணகாலம், சேய் - செவ்வாய்.

ஒன்பதாம் இடத்தின் பலன், சிறப்பாக தந்தையின் அந்தஸ்து, நிலைமை, ஆயுள் ஆகியவைகளைக் குறிப்பதாகும்.

தந்தை மூன்றாண்டு இருப்பான்

உடன்சன்மலக்கினத்துக்கு ஒன்பதில்ஐந்துபத்தில்
முடவன்சேய்ரவிஇந்தமூவரில்ஒருவர்நிற்க
திடமுறுபிதாவுக்குஈனம், சன்மத்தில்செவ்வாய்ஏழில்
அடல்கதிர்க்குஐயம், பொன்னார்க்குஆண்டுமூன்றிலிருப்பன்தந்தை.

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் இடத்தில் ஐந்தாமிடத்தில் பத்தாமிடத்தில் ஏதாவதொன்றில், சனி, செவ்வாய், சூரியன் இவர்கள் மூவரில் ஒரு கிரகம் நிற்பதானால்

சாதகனுடைய தகப்பனுக்கு மரணம் ஏற்படும் என்பர்.

சென்ம லக்கினத்தில் செவ்வாயும், ஏழாமிடத்தில் சூரியனுமிருந்தால் தந்தைக்கு மரணசந்தேகம் ஏற்படும்.

செவ்வாய் சூரியன் இவர்களில் ஒருவரோடு குரு கூடியிருந்தால் தந்தை சாதகனின் மூன்று வயதில் இறப்பான் என்பார்.

அருஞ்சொற்பொருள்

முடவன் - சனி, சேய் - செவ்வாய், ரவி - சூரியன், ஈனம் - நலிவு, ஐயம் - மாரண சந்தேகம், பொன்னார் - குரு.

ஒன்பதாம் வருடம் தந்தைக்கு அரிட்டம்

தந்தை பதியில் சவுரி நிற்கச் செவ்வாய்
தானும் கேந்திரத்து உறில் அரிட்டம் தந்தை
அந்த அவனுக்கு அட்டமத்து சன்மாதியுடனும்
ஆதவன் செவ்வாய் கூடி அணுகில் ஐயர்க்கரிட்டம்
பந்து சன்மத்துக்கு ஐந்து ஒன்பானில் பாவர்
பாம்பு கேந்திரத்திலுறத் தந்தைக்கு ஈனம்
விந்தமலர் நண்பனுக்கு ஏழில் சனி சேய் நிற்கில்
மேலோர் நோக்கு அறநிற்கில் வியம் ஒன்பானே. 3

தொகுப்புரை:

பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தில் சனியும், கேந்திரத்தில் செவ்வாயும் இருந்தால் தகப்பனுக்கு அரிட்டம் உண்டாகும்.

அட்டமஸ்தானத்தில் சன்மாதிபதியுடன் சூரியனும் செவ்வாயும் கூடி இருந்தாலும் தந்தைக்கு அரிட்டம் உண்டாகும்.

சன்ம ராசிக்கு ஐந்து ஒன்பதாமிடங்களில் பாவியான கிரகங்களும், ராகு கேந்திரத்திலும் இருந்தாலும் தந்தைக்கு ஈன முண்டாகும்.

சூரியன் இருக்கும் ராசிக்கு ஏழாமிடத்தில் சனியும் செவ்வாயும் கூடி இருக்க, அவர்களைச் சுபகிரகங்கள் பார்க்காமல் இருந்தால் ஒன்பதாவது ஆண்டில் தந்தைக்கு அரிட்டம் உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்

தந்தைபதி - ஒன்பதாமிடம், சவுரி - சனி, ஆதவன் - சூரியன் , ஐயர் - தகப்பன், விந்த மலர்நண்பன் - தாமரை மலருக்கு நண்பனான சூரியன், மேலோர் - சுபர், வியம் ஒன்பானே - சாதகன் பிறந்த காலத்திலிருந்து ஒன்பதாவது வருடம் தந்தை அரிட்டமாவான் என்பதாம்.

தந்தைக்கு அரிட்டம் உண்டு - இல்லை

ஒன்பானிடத்தில் சனி, ஐந்தில் இரவியுடனே உறுபாம்பு
அன்பாயிருக்கத் தந்தைதனக்கு அரிட்டம், ஐந்தாமாதிபதி
இன்பமுச்சமாயிருக்க, இல்லை அரிட்டம் பிணியாகட்டும்
பொன் பார்த்தருளச் சனி இரவி நின்றார் பிணிபோம் கண்டீரே. 4

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஒன்பதாமிடமாகிய பாக்கியஸ்தானத்தில் சனியும்,

ஐந்தாமிடத்தில் சூரியனுடனே ராகுவும் சேர்ந்திருந்தால் தந்தைக்கு அரிட்டம் உண்டாகும். ஆனால் அவற்றுடன்

ஐந்தாமிடத்தோன் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால் முன் சொன்னபடி அரிட்டமெனும் மரணகாலம் உண்டாவதில்லை. நோயாளியாக இருப்பான்.

மேலே காட்டியுள்ள கிரகங்களில் சனி சூரியன் இருவரையும் குரு பார்க்கும் காலத்தில் நோய் தந்தையைவிட்டு நீங்கும் என்னும் பலனைக் காண்பீர்களாக.

அருஞ்சொற்பொருள்:

இரவி - சூரியன், உறுபாம்பு - சேர்ந்த ராகு, அரிட்டம் - மரணம், பிணி - நோய், பொன் - குரு.

தந்தை சிலநாளிருந்து - இறப்பான்

கண்டசனியும் கதிரோனும் கதித்த ஒன்பானாதிபனும்
அண்டி ஒரு வீட்டினில் இருக்க அய்யர்க் கரிட்டம், வரைப்பொன்
மண்டி நோக்க ஐந்தாதிமனையோன் உச்சமாயிருக்க
மிண்டாய் சிலநாளிருந்து அரிட்டம் மேவும், விடம்போல் விழிமானே. 5

தொகுப்புரை:

சனியும் சூரியனும் ஒன்பதாமிடத்துக்கு உடையோனும் ஒரு வீட்டிலிருந்தால் தந்தைக்கு அரிட்டம் உண்டாகும். ஆனால்,

அவர்களை குரு முழுப்பார்வையால் நோக்கவும் ஐந்துக்குடையோன் உச்சமாயிருக்கவும் அமைந்திருந்தால் சாதகன் பிறந்த காலத்திற்குப்பின் சிலநாள் தந்தை இறந்து இருப்பான் என்பதனை

விஷம் போன்ற விழிப்பார்வையுடன் மானின் சாயலையும் பெற்ற பெண்ணே அறிவாயாக.

அருஞ்சொற்பொருள்:

கதிரோன் - சூரியன், கதித்த - மேலோங்கிய, அண்டி - ஒன்றாகச் சேர்ந்து, மனையோன் - வீட்டிற்குரிய கிரகம், மிண்டாய் - தெம்புடன்

சிலநாளிருந்து அரிட்டம் - என்பதனால், குருவின் உச்சப்பார்வை பெறுவதால் சில மாதங்கள், அல்லது ஓராண்டு காலம் என்று காணிக்கலாகும்.

சனி வரும் நாளில், தந்தைக்கு அரிட்டம்

மானே, பிதுர்க்காரகன் ஒன்பான் மனையாதிபனும் சனியாகி
தானே பாவருடன் கூடித் தரு முந்நான்கு எட்டு ஆறில் உறத்
தேனே பிதுர்ஸ்தானந்தன்னில் செம்பாயிருக்க அம்மனையில்
ஊனே செறியும் சனிவருநாளுடனே தந்தைக்கு உறுமரிட்டம். 6

தொகுப்புரை:

மான் போன்ற பெண்ணே கேள்!

பிதுர்காரகனாகிய சூரியன், சாதகனின் சென்ம லக்கினத்திற்குரிய பிதுர்ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தோன் சனியாக இருக்க, அவனுடன் கூடி,

பன்னிரண்டு, எட்டு, ஆறு ஆகிய பாவஸ்தானங்களில் ஒன்றில் இருக்கவும்,

ஒன்பதாமிடத்தில் கேது இருக்கவும், அமைந்த சாதகத்தில், அந்த ஒன்பதாமிடமாகிய பிதுர்ஸ்தானத்திற்கு

சஞ்சாரமாக சனி வரும் காலத்தில் பல துன்பங்களுடனே தந்தைக்கு கெண்டம் உண்டாகும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

பிதுர் - தந்தை, முந்நான்கு - 3 × 4 = 12 ஆம் இடம். செம்பாம்பு - கேது. அம்மனையில் - அந்த ஒன்பதாமிடமாகிய பிதுர்ஸ்தானத்தில், ஊனே செறியும் - துன்பமே தருவதில் நிறைந்த

தந்தைக்கு அரிட்டம் உண்டு

உறுஞ் சன்மத்தில் செவ்வாயும் ஒன்பானிடத்தில் சனி இருக்க
பெறுந் தந்தைக்கு வரும் அரிட்டம், பிதாத் தானாதிபதியுடனே
குறுஞ் செவ்வாயும் சனி மூவர் கூடியிருக்க நல்லோர்கள்
அறிந் தெங்கேதானிருந்தாலும் ஐயர்க்கு அரிட்டம் என்பர். 7

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் செவ்வாயும், ஒன்பதாமிடத்தில் சனியும் இருந்தால் தந்தைக்கு கெண்டம் உண்டாகும்.

பிதா ஸ்தானாதிபதியாகிய ஒன்பதாமிடத்தானோடு செவ்வாய் சனி ஆகிய மூவரும் கூடியிருக்க

சுபகிரகங்கள் எந்த ராசியில் இருந்தாலும் சாதகனின் தந்தைக்கு அரிட்டம் நேரும் என்பார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பிதாத்தானாதிபதி - ஒன்பதாம் இடத்துக்குரிய கிரகம், நல்லோர் - சுபகிரகங்கள், ஐயர் - தகப்பன், அரிட்டம் - கெண்டம்.

மூன்றாண்டில் தந்தைக்கு கெண்டம்

என்பார் சன்மந்தன்னில் காரி இரவி சசி மூவருமிருக்க
தன்பார் ஐந்தில் சேயிருக்கத் தந்தைக்கு அரிட்டந்தான், பின்னும்
அன்பார் குசன் செம்பாம்பு பரிதி மூவர் கூடப்
பின் சுபர் பாராமல் இருந்தால் மூன்றாண்டில் பிதாவரிட்டம் பேசுவாரே. 8

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் சனி சூரியன் சந்திரன் ஆகிய மூவரும் இருக்க,

ஐந்தாமிடத்தில் செவ்வாய் இருந்தால் தந்தைக்குகெண்டம் வரும் எனலாம், மற்றும்

செவ்வாய், கேது சூரியன், ஆகிய மூவரும் கூடியிருக்க, சுபகிரகங்கள் பாராமல் இருந்தால், தகப்பன் மூன்றாமாண்டில்அரிட்டமாவான் என்று அறிவுடையோர் பேசுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

சன்மம் - சென்ம லக்கினம், காரி - சனி, சசி - சந்திரன், குசன் - செவ்வாய், செம்பாம்பு - கேது, பரிதி - சூரியன், சுபர் - சுபகிரகங்கள்.

ஒன்பதாமிடத்தில் பாவர் மேவ – பலன்கள்.

பேகம் எட்டு ஒன்பது பத்தில் பெரிய பாவருற, ஒன்பான்
நேசமொடு எட்டு ஆறு வியத்தினில் நிற்க, பலன்கள் நீக்கியுற
ஓசை ஒன்பதில் குசனே உலவும் கதிரேல் உற்றிடினும்
வீசும் ஒன்பதினில் பாவர் மேவப் பிதா மெய்யில் பிரியும். 9

தொகுப்புரை:

எட்டு ஒன்பது பத்தாமிடத்தில் பாவிகளும், ஒன்பதாமிடத்தான் எட்டு ஆறு பன்னிரண்டு ஆகிய இடங்களில் பெரிய பாவகிரகங்களுடன் பலம் இருக்கவும்.

ஒன்பதாமிடத்துக்கு உரியவன், நட்போடு எட்டு, ஆறு, பன்னிரண்டு ஆகிய இடங்களிலொன்றில் பலன்களில்லாமல் இருக்கவும்

ஒன்பதாமிடத்தில் செவ்வாயானது சூரியனாவது இருந்தாலும்

அந்த ஒன்பதாமிடத்தில் பாவகிரகங்கள் - மேலும் இருந்தாலும்

சாதகனுடைய தந்தை இறப்பான் என்று கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பேசும் - பேசப்படும், பெரிய பாவர் - சனி, ராகு, செவ்வாய், குசன்- செவ்வாய், கதிரேல் - சூரியனாகிலும், பிதா - தந்தை, மெய்யில் - உண்மையாகவே.

ஒரு வருடத்தில், சில மாதத்தில் தந்தை - நிரியாணம்

பிரியமுடன்ஒன்பதாமிடத்து அதிபன்புடத்தில்
பெறும்குளிகன்தன்னைவாங்கிப் பெற்றிடுராசியிலே
நேரிபயிலும்தமனியனார்தாம்மருவும்காலம்
நிரியாணம், அந்த வருடத்தில் வரும், அவர்தம்
குறிகாணும்படி வெய்யோன்புடத்தை வைத்துக்கொண்டு
குலவும்ஒன்பதாமிடத்தோன்புடமதனைவாங்கி
செரியும்அந்தராசியேமாதங்களாகத்
தெளிந்துபிதாநிரியாணம்தனைஅருளுவீரே. 10

தொகுப்புரை:

விருப்பமுடன், சாதகனது சாதகத்தில் சென்ம லக்கினத்திற்கு ஒன்பதாமிடமாகிய பிதுர் ஸ்தானத்துக்குரிய கிரகத்தின் ஸ்புடத்தில்,

குளிகனை வாங்கிக் கண்ட ராசியில், குரு கோசாரப்படி சஞ்சாரமாக வரும்போது, பிதாவுக்கு கெண்டம் ஏற்படும் வருடமாகும்.

சூரியனின் ஸ்புடத்தை வைத்துக்கொண்டு ஒன்பதாம் இடத்தோன் ஸ்புடத்தை வாங்கி, அதற்குக் கண்ட தொகையை மாதமாகக் கணக்கிட்டு

அந்த மாதத்தில் தந்தை மரணம் அடைவானென்று சொல்லுவீர்களாக.

அருஞ்சொற்பொருள்:

அதிபன் - ராசிநாதன், ஸ்புடத்தில் - எந்த கணிப்பில் அந்த ராசியில் இருக்கின்றான் என்ற எண்ணில், நேரிபயிலும் - நேர்மையாக நடக்கும், தமனியனார் - குரு, நிரியாணம் - மரணம், குலவும் - இணைவானதாகும்.

சாதகன் கருவில் இருக்கும்போதே - தந்தை நிரியாணம்

அருளும் தந்தைக் காரகனை அறிந்து பலன்களுரை செய்ய
பரிதிக்கு இருபுறம் யாரேனும் பாவரிருக்கப் பாவர்களும்
துரிதாய் நோக்கம் இருந்ததனால் சொல்லும் குழவி கருப்பத்தில்
தெரியவிருக்க, பிதா அரிட்டம் செப்பும் கணித வல்லோரே. //

தொகுப்புரை:

அருள் செய்கின்ற தந்தைக்காரகனை அறிந்து அதற்குரியதாகத் தந்தையைப் பற்றிய விபரமான பலன்களைச் சொல்வதற்கு

சாதகத்தில் சூரியன் இருக்கின்ற ஸ்தானத்திற்கு இரண்டு பக்கமும் யாரேனும் பாவகிரகங்கள் இருப்பதோடு,

பிதுர்காரகனாகிய சூரியனைப் பாவகிரகங்கள் பார்வை செய்யும்படி இருந்ததானால்,

குழந்தை தாயின் கெர்ப்பத்திலிருக்கும்போதே தந்தைக்கு அரிட்டம் ஏற்படும் என்று

சோதிடக் கணிதத்தில் வல்லவரே சொல்லுங்கள்.

அருஞ்சொற்பொருள்:

தந்தைக்காரகன் - சூரியன், பரிதி - சூரியன், பாவர் - சனி, ராகு, கேது ஆகியோர், துரிதாய் நோக்கம் - நேர்பார்வை, முழுப்பார்வை, குழவி - குழந்தை, பிதா - தந்தை, அரிட்டம் - மரணம், செப்பும் - சொல்லுவீர்களாக.

ஒன்பதாமிடம் பாக்கிய - பலன்
தந்தையைவிட செல்வன், குருபக்தியுள்ளவன்

உறும் ஒன்பதாமிடத்தோன் வெகு பலவானாகி
உற்ற இடத்து அதிபதி கேந்திரத்தில் பாக்கியவான்
பெறும் தந்தைதனில் அதிகன், கீர்த்திமான், அரசர்
பிரயமுறச் சஞ்சரிப்பான் பிரதாப சாலி
அறிவுறு பாக்கியாதி பிதுர்காரகனைக் கூடி
ஆறிலுறப் பிதாவுரைக் கேட்டருள்வான், ஒன்பான்
பிரியாமல் இருந்த நவாங்கிசத்தாதிபதியைப்
பிதுர்க்காரகன் பார்க்கக் குரு பத்திப் பிரியன் /2

தொகுப்புரை:

ஒன்பதாமிடத்தோன் மிகுந்த பலவானாகி (ஆட்சி உச்சம்) இருக்கவும், அந்த இடத்திற்குரிய கிரகம் கேந்திரத்தில் இருக்கவும் அமைந்த சாதகன் மிகுந்த செல்வபாக்கியம் உள்ளவனாவான்.

அவன் தந்தையைவிட மேலான அந்தஸ்தும் புகழும் பெற்றவனாகி, அரசர்கள் பிரியப்படும் படியான மேன்மையுடன் வாழ்வான், அவனது புகழ் எங்கும் பரவி விளங்குபவனாவான்.

அறியத்தக்க பாக்கியாதிபதியாகிய ஒன்பதாமிடத்தோன் பிதுர்க்காரகனாகிய சூரியனுடன் கூடி ஆறாமிடத்தில் இருந்தால், தகப்பன் சொற்படி நன்முறையில் நடப்பான்.

ஒன்பதாம் வீட்டோன் இருந்த அங்கிசாதிபதியை சூரியன் பார்ப்பானாகில் சாதகன் குரு பக்தியில் மிகுந்த பிரியமுள்ளவனாக விளங்குவான்.

அருஞ்சொற்பொருள்

வெகு - மிகுந்த, உற்ற இடத்து - இருக்கும் இடத் திற்குரிய, பிரதாபசாலி - புகழ்பெற்றவன், பிதா - தந்தை.

எந்த அளவு செல்வம் பெறுவான்

பிரியமுடன் பிறைக்கு ஐந்தாம்வீடு சரமாக
பெருகிய லக்கினத்துக்கு ஐந்தாம் வீடு சரமாய்
நிறையும் பூரணமான அயிஸ்வரியன் என்பார்
நீள்சரமும் திரமாகில் நிகழ்த்து பலன்பாதி
அருமை பெறும் சரத்து உபயமாகில் காற்பங்காம்
அயிச்சுவரியமெனப் பகர்வர் அம்புலிக்கு அஞ்சான் அக்
குருமனை முதற்கொண்டு லக்கினத்துக்கு ஐந்தைக்
குணமுடனே கண்டுபலன் கூறிட வேண்டும். 13

தொகுப்புரை:

பிரியமுடன் ஒருவனது செல்வத்தின் அளவினைக் காண்போமானால்,

சந்திரன் நின்ற ராசிக்கு ஐந்தாம் வீடும், சென்ன லக்கின ராசிக்கு ஐந்தாம் வீடும் சர ராசியாக இருந்தால்,

சாதகன் நிறைந்த முழுமையான செல்வமுடையவ னாவான் என்பார்.

மேலே சொன்ன இரண்டு ராசியிடங்களும் திரமாக இருந்தால் பாக்கிய பலன் பாதியளவாகும்.

அந்த அருமையான வீடுகள் உபயமாக அமைந்தால் கால்பங்கு செல்வமாக அமையும் என்று சொல்லுவார்கள். மற்றும்

சந்திரன் நின்ற ராசிக்கு ஐந்தாம் ராசி குருவின் வீடாக, அந்த ராசியைக் கொண்டும், லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டினைக்கொண்டும் நல்ல முறையில் பலன்களைக் கண்டு ஒருவனுடைய பாக்கியமாகும் செல்வத்தின் அளவினைச் சொல்ல வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

பிறை - சந்திரன், பூரணம் - முழுமை, அயிச்சரியம் - செல்வவளம், பகர்வர் - சொல்வார்கள்.

பூரண பாக்கியம் பெறும் காலம்

வேண்டியதோர் ஒன்பதாம் அதிபதியும் குருவும்
விரும்பி கேந்திரம் திரிகோணங்களிலே மேவில்
ஆண்டகையே பாக்கியவான், இவரிருவருடனும்
அன்புடன் ஒன்பானிடத்தில் அணுகினும் இவர்மூவர்
பூண்டுவரு மகாதிசையில் லாபாதி புசிப்பிலேதான்
பூரணபாக்கியம் சேரும், ஏழாமதிபனைத்
தீண்டிய லாபாதியுறவாய்க் கூடின் நல்லோர்
செறியுமனை உறில் அவர்க்கடிசையில் பாக்கியமே. 14

தொகுப்புரை:

சாதகத்தில் சிறப்பாகக் காணவேண்டிய ஓரிடமாகிய ஒன்பதாம் வீட்டோனும் குருவும் சேர்ந்து கேந்திரம் திரிகோணம் ராசிகளில் இருந்தால், சாதகன் செல்வம் பெற்ற பாக்கியவானாவான்.

ஒன்பதாம் இடத்தோன் குரு ஆகிய இருவருடனும் ஒன்பானிடத்தில் உள்ளவனுமாகிய மூவருடையதாகத் தொடர்ந்து வரும் மகாதிசைகளில் பதினோராம் இடத்தோன் புத்தியில் நிறைந்த செல்வம் சேரும்.

ஏழாம் ராசிக்குரிய கிரகத்தினை லாபஸ்தானாதிபதி நட்புடன் கூடி சுபகிரகங்களின் (ராசி மனையில் இருந்தால், அவர்களின் திசையில் நல்லபலனாகப் பாக்கியங்களைத்) தருவார்கள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

மேவில் - அந்த ராசியில் உள்ளவனோடு சேர்ந்தால், ஆண்டகையே - ஆண்களில் சிறந்தவனாகவே, அணுகினும் - சேர்ந்தாலும், இவர்மூவர் - ஒன்பதுக்குடையவன், குரு, ஒன்பதில் இருப்பவன் ஆகிய மூவர், புசிப்பு - புத்தியில், கடிசை - புத்தியில்.

9-ஆமிடத்தோன் சாதியினரால் - செல்வம் வரும்

மேயலாபாதியும் ஏழாதியும் மித்துருவாய்
மேலோர்கள் வீட்டிலுறச் சன்மாதிபதியும்
ஆயுமிவர்மூவரும் ஒன்றாய்க் கூடியிருக்கில்
அயிச்சுவரியம் சீவிதபரியந்தம் மட்டும் உண்டு என்னும்
நேயமுடன் ஒன்பாதமிடத்ததிபன் சாதி
நிசமறிந்தே அவர் மரபின் நிருபர்களினாலே
தூயசவுபாக்கியங்கள் சேருமென்றே நல்ல
சோதிட நூலினை உணர்ந்தோர் சொல்லுவர் கண்டீரே. 15

தொகுப்புரை:

லாபாதிபதியாகிய பதினோராம் வீட்டோனும், ஏழாமிடத்தோனும் நட்பினராய் கூடி சுப கிரகத்தின் வீட்டில் லக்கினாதிபதியுடன் ஒன்றாகச் சேர்ந்து இருந்தால், சாதகனுக்குப் பெரும் செல்வம் அவனது ஆயுள் காலமளவும் அனுபவிப்பதற்கு உண்டு என்று சொல்லப்படும்.

ஒன்பதாம் இடத்திற்குரிய கிரகத்தின் சாதி நிலையினை அறிந்து, அந்த சாதியில் மேலானவரொருவராலே, குறையற்ற செல்வங்கள் சாதகனுக்குச் சேரும் என்பதனை, சாதகனுக்கு

வரும் நல் திசாபுத்தி நிலைகளை அறிந்து சேரும் என்பதனை, சாதகனுக்கு வரும் நல்ல திசாபுத்தி நிலைகளை அறிந்து

சோதிட நூலினை நன்கு உணர்ந்தோர்கள் சொல்லுவார்கள் என்பதனைக் காண்பீராக.

அருஞ்சொற்பொருள்:

மித்துரு- நட்பு, மேலோர் - சுபகிரகம், சீவிதம் - வாழ்நாள், கிரகசாதி - குரு, சுக்கிரன் - பிராமண சாதி, சூரியன் செவ்வாய் - சத்திரியர், புதன் சந்திரன் - வணிகர், இராகு கேது சனி - சூத்திரர் நீச்சர், சவுபாக்கியம் - நல்ல செல்வம்.

கணவன் மனைவி சுகபோகம் பெறுவர்

கண்டிடு லாபாதிபதி பாக்கியாதிபனும்
களத்திரத் தானத்திருக்கப் பாக்கியலாபந்தான்
மிண்டியதோர் கேந்திரமாய் உச்ச வீடாக
மேவிய ஏழாமதிபன் சுபக்கிரகமாகி
மண்டிய பாக்கியலாபத்தானத்திலிருக்க
வரும் பல பாக்கியம், அவன்தன் மனைவிக்குச் சுகமாம்
திண்டிரலாம் தோளியதாம் இவர்களொடும் சான்றோர்
சேர்ந்திடும் பாவாதியர்க்கு செல்வம் மிகச்சேரும். 16

தொகுப்புரை:

லாபஸ்தானாதிபதியும் பாக்கியஸ்தானாதிபதியும் ஏழாமிடத்தில் இருக்கவும் பிறந்த சாதகனுக்கு பாக்கியம் லாபம் ஏற்படும்.

மேலே சொன்ன ஏழாமிடமானது (கேந்திரமாகவும்) உச்ச வீடாகவும், ஏழாமிடத்தோன் சுபகிரகமாக அமைந்து பாக்கிய லாபஸ்தானத்திலொன்றில் இருக்க சகல பாக்கியங்களும் வரும்.

சாதகனின் மனைவிக்கு எல்லா சுகமும் அமையும்.

கணவனுக்கு நல்ல வலிமையும் காப்பாளரும், மனைவிக்கு நல்ல தோழியரும் ஆகிய இவர்களோடு பெரியோர்களின் நட்பும் சேரும்.

மேலே சொன்னவர்களோடு பாவகிரகங்கள் கூடியிருந்தால் மிகுதியான செல்வம் சேரும் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

களத்திரத்தானம் - ஏழாமிடம், மிண்டிய - முறையாகச் சேர்ந்தாற்போலுள்ள, திண்திறல் ஆம் - மிகுந்த வலிமை ஆகும். தோளியதாம் - தோழியர்தாம். சான்றோர் - பெரியோர்கள்.

பாக்கிய நட்டம், பிச்சை எடுத்துண்பான்

சேரும் ஒன்பானிடத்திருந்த பாக்கியவாதிபனும்
திறல் குருமூவரும் நீசம் அத்தமனம் செறியக்
கூறிய பாவியுமாய்ச் சத்துரு வீட்டில் இருக்க
குலவியும் ஆறு எட்டில் கூடியே நின்றாலும்
நேரு பாக்கிய நட்டம், பாக்கியவாதிபனும்
நிருபனும் நின்றிடு வீட்டோன் நீசம் அத்தமனமாய்
பாரினில் இரப்பான், பாக்கியாதி குருவுடனே
பாவிகள் கூடினும் புசிப்பன் பலிகரத்திலெடுத்தே. /7

தொகுப்புரை:

ஒன்பதுக்குடைய பாக்கியாதிபனும், ஒன்பதில் நின்ற கிரகமும், குருவும், ஆகிய மூவரும் நீசம் அத்தமனம் ஆகிய இடங்களில் இருப்பதோடு பாவிகளுமாய் பகைவரின் வீட்டில் இருக்கவும்.

அவ்வாறு இருக்கும் வீடு சென்மராசிக்கு 12, 6, 8 ஆம் ராசியாக அமைந்திருந்தால்

சாதகனுக்கு உள்ள செல்வமும் நட்டமாகிப்போகும்.

பாக்கியதானாதிபனும் குருவும் இருக்கின்ற வீட்டுக்குடையவன் நீசமாகவோ அத்தமனம் பெற்றோ - இருப்பதோடு, பாக்கியாதிபதி குருவுடனே பாவகிரகங்களோடு சேர்ந்திருந்தால்,

சாதகன் கையில் பிச்சையெடுத்து சாப்பிடும் நிலையை அடைவான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

திறல் குரு - வலிமை பெற்ற குருவும், சத்துரு - பகைவர், வியம் - விரையஸ்தானம், நிருபன் - குருவும், இரப்பான் -

பிச்சை எடுப்பான், புசிப்பன் - சாப்பிடுவான். ஒன்பதாம் இடத்தில் இருந்த பாக்கியாதிபன் என்று காண்க.

மனைவியால் செல்வம் வரும்

எடுத்த பத்தாம் அதிபதி ஏழ்இறை
கடுத்த மித்திராகிப் பலனுடன்
கொடுத்த உத்தமர் வீட்டினில் சூழ்ந்திட
படைத்த பாரியையினால் வரும் பாக்கியம் 18

தொகுப்புரை:

பத்தாம் இடத்துக்குரிய கிரகமும் ஏழாமிடத்துக்குரிய கிரகமும் நல்ல நட்புடன் சேர்ந்து பலன் தருபவர்களாக.

பலனைத் தவறாது தரும் சுபகிரகத்தின் வீட்டில் சேர்ந்திருந்தால்

சாதகன் அடைந்துள்ள மனைவியினால் செல்வங்கள் வரும் என்று கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்:

ஏழ்இறை - ஏழாமிடத்துக்குரிய கிரகம், எடுத்த - மிகவும் நெருங்கிய, மித்திரர் - நட்பினர், உத்தமர் - சுபகிரகங்கள், பாரியை - மனைவி, பாக்கியம் - செல்வம்.

அரச சன்மானம் செல்வம் பெறுவான்

பாக்கியம் சேர்வகை, பிருகு மதி அரசன் கூடி
பத்தாம் இடத்திற்குப் பலன் தனவானாவான்
தேக்கிய சத்திய சனன் கல்வி செறி நிபுணன்
திராஜர் வெகுமானம் செய்ய மகிழ்ந்திருப்பன்
தாக்கிய பொன் சனி புந்தி மதி செவ்வாய் ஐவர்
தானொரு வீட்டினில் இருக்கத் தனவானுமாகி
ஊக்கமுறு முடியரசர் சன்மானம் செய்ய
உலகில் வெகு பாக்கியமும் உண்டாம் கண்ணே! 19

தொகுப்புரை:

ஒருவனுக்குச் செல்வம் சேரும் வகையினைச் சாதகத்தின் வழி அறிய வேண்டுமாயின்

அவனது சாதகத்தில் சுக்கிரன் சந்திரன் குரு இவர்கள் கூடி பத்தாமிடத்தில் இருந்தால் அதன் பலன் மிகுந்த செல்வமுடையவனாவான். மற்றும்

நிலைத்த மாறாத சத்திய வசனனும், கல்விமானும், ராஜவெகுமானம் பெறுவோனுமாக மகிழ்ச்சியுடன் இருப்பான்.

குரு, சனி, புதன், சந்திரன், செவ்வாய் ஆகிய ஐந்து கிரகங்களும் சேர்ந்து ஒரே ராசி வீட்டில் இருந்தால்,

தனவானாகி, விருப்பமுடன் அரசர் சன்மானம் செய்யப்பெறும் மேன்மையனாகி, மிகுந்த செல்வ வானாகவும் ஆவான். என்பதனைக் காண்பீராக.

அருஞ்சொற்பொருள்:

பிருகு - சுக்கிரன், அரசன் - குரு, வசனன் -மெய்பேசுபவன், பொன் - குரு.

வெளிநாட்டில், பிறரால் செல்வம் பெறுவான்

கண்ட பத்தாம் அதிபதி கருதும் உச்சர் வீட்டில் இருந்து
அண்டிப் பத்தாமிடம் பார்க்கில் இவன் பூமியில் உண்டாம் செல்வம்
மிண்டி நீசர் சத்துருக்கள் வீட்டில் இருந்தே மிக நோக்க
அண்டும் தூரதேசத்தும் அந்நியராலும் அயிச்சுவரியம். 20

தொகுப்புரை:

பத்தாம் வீட்டதிபதி உச்சர் வீட்டில் இருந்து, தனது சொந்த இடமாகிய பத்தாமிடத்தைப் பார்த்தால்

சாதகன், பூமியில் உண்டான செல்வமனைத்தும் உண்டாகப் பெறுவான்.

நீசர் சத்துருவின் வீட்டிலிருந்து பத்தாம் இடத்தினைப் பார்த்தால்

தூரதேசத்திலும் அந்நியராலும் மிகுந்த செல்வங் களைப் பெறுபவனாக ஆவான் என்று கூறுவர்.

ஒன்பதாமிடம் நிறைவாகும்.

பத்தாம் இடம் - பலன்கள்

கன்ம பலன்கள் : செய்கருமம், நற்செயல், யாத்திரை, தீர்த்தமாடல், வழிபாடு, ஞானம், யாகாதி செய்தல், வேதாகமம் அறிதல், தருமதானம் செய்தல், கொடியவர் நட்பு, துறவியாதல், குருவாக விளங்குதல்.

நல்ல செயல்களைச் செய்வான்

பத்தாம் இடத்தில் அட்டமத்தோன் பாவருடனே கூடி நிற்க
பத்தாமாதி பலம் பெறவே பாவர் பார்க்கத் துர்க்கன்மம்
பத்தாம் அதிபன் பலவானாய்ச் சுபக்கோளுடனும் பரிந்து ஏழில்
ஒத்த நான்கில் சன்மத்தில் உற நல்கருமம் உளனாவான். /

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்குப் பத்தாம் இடத்தில் அட்டமாதிபதி பாவகிரகங்களுடன் கூடி இருக்கவும், பத்தாம் இடத்துக்குரிய கிரகம் பலம்பெற்று இருக்க, அவனைப் பாவகிரகங்கள் பார்த்தால் சாதகன் ஆகாத தீய செயல்களையே செய்வான்.

பத்தாம் வீட்டுக்குரியவன் பலம் பெற்றவனாய்ச் சுபக்கோள்களுடன் விருப்புடன் சேர்ந்து ஏழாமிடத்திலோ நான்காமிடத்திலோ சென்ம லக்கினத்திலோ ஒன்றில் இருந்தால் நல்ல சுபகாரியங்களைச் செய்துவருபவனாவான்.

அருஞ்சொற்பொருள்

பாவருடன் - பாவகிரகங்களுடன், துர்க்கன்மம் - விரும்பத்தகாத செயல்கள், ஒத்த நான்கில் - கேந்திரஸ்தானங்களில், நற்கருமம் - நல்ல செயல்கள்.

ஏழில் இருந்தால் - குடும்பகாரியங்கள், கேந்திரத்தில் இருந்தால் - சுற்றத்தார், வியாபாரம், வாகனம் இவற்றால் நல்ல செயல்கள், சென்மத்திலிருந்தால் - புகழான செயல்கள்.

தீர்த்தயாத்திரை, தவம், தொழில் - செய்வான்

ஆவன் ஞானி சனிநாலில் அமர்ந்தால், அந்தச் சனி பத்தில்
மேவில் தீர்த்த யாத்திரையை விரும்பித் தவமே விரும்பிடுவன்
தாவும் சன்மாதிபன் பத்தில் தரிக்கில் கன்மமுளன் பத்தில்
கோவும் கன்மகாரகனும் பலமேல் கன்மம் குறைவில்லான். 2

தொகுப்புரை:

சனியானவன் சுகஸ்தானமாகிய நான்காமிடத்தில் இருந்தால் சாதகன் ஞானியாவான்.

அந்தச் சனி பத்தாமிடத்தில் இருந்தால் தீர்த்த யாத்திரை செய்ய தலங்களுக்குச் செல்ல விரும்புவதோடு அதற்குரிய தவ விரதங்களையும் மேற்கொள்ள விரும்புவான்.

சென்ம லக்கின ஸ்தானாதிபதி பத்தாமிடத்தில் இருந்தால் செய்தொழிலில் கருத்துடையவனாக இருப்பான்.

பத்தாமிடத்தில் குருவும், அந்த பத்தாம் வீட்டுக்கு உடையவனும் சேர்ந்து பலம் பெற்றிருந்தால் செய்யும் தொழிலைக் குறையில்லாமல் செய்பவனாவான்.

அருஞ்சொற்பொருள்

ஞானி - ஞானவான், விஞ்ஞானி, தரிக்கில் - இடம் பெற்றால், கன்மமுளன் - தொழில் திறம் உடையவன், கோ - அரசன், குரு, பலமேல் -பலம் மேலாகப் பெற்றிருந்தால்

கன்மம் - தொழில், நல்வினை, தீவினை, குடும்பத்தோரால் தொடர்ந்து செய்துவரும் தொழில்.

கங்கை நதிமுதல் - தீர்த்தமாடுவான்

குறைவில் ஒன்பதாமிடத்தில் கோவும் பலமாய்ச் சுபர் வீட்டில்
உரைய சுபக்கோள் பார்க்க, மதி உகந்து சலராசியிலிருக்க
நிறைந்த கங்காநதி தோறுமாடுவன், பின்னும் நிலவு உச்சம்பெறவே
அறையும் பத்தில் சுக்கிரனுறத் தீர்த்தம் பலவும் ஆடுவானே. 3

தொகுப்புரை:

ஒன்பதாமிடத்தில் குரு பலம் பெற்று சுபர் வீட்டில் இருக்க, அவரை சுபக்கோள் பார்க்கவும்,

சந்திரன் நட்புடன் சலராசியில் இருந்தால், சாதகன் புண்ணியம் நிறைந்த கங்காநதி முதலான புண்ணியநதிகளில் நீராடுவான்.

மேலும் சந்திரன் உச்சம் பெற்று இருக்க, சுக்கிரன் பத்தாமிடத்தில் இருந்தால் பல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடுவான்.

அருஞ்சொற்பொருள்

உறைய - இருக்க, உகந்து - விரும்பி, கோவும் - குருவும், மதி - சந்திரன், நிலவு - சந்திரன், அறையும் - சொல்லப்படும், ஆடுவனே - நீராடுவான்.

சிவபூசைகள் செய்வான்

ஆடிடும்பத்தாமதிபன்சுபருடன்
கூடி மற்றிருபாலுற்ற கொற்றவர்
நீடி நிற்க நிரந்தர அன்பொடும்
தேடியேசிவபூசைகள்செய்வனே.

தொகுப்புரை:

பத்தாம் இடத்திற்கதிபதி சுபகிரகங்களுடன் கூடியிருக்கவும்

அந்த ஸ்தானத்திற்கு இரண்டு பக்கமும் இருக்கும் ராசிகளில் உள்ள கிரகங்கள் பலம் பெற்று இருப்பதனால்

சாதகன் எக்காலத்தும் குறையாத பக்தியோடும் அன்போடும், சிவத்தலங்களை நாடிச் சென்று சிவபூசைகள் செய்வான்.

அருஞ்சொற்பொருள்

ஆடிடும் - கன்மச் செயல்களை நிகழ்த்தும், சுபருடன் - சுபகிரகங்களுடன், இருபால் - இரண்டு பக்கமும், தேடியே - அன்புடன் தேடியே.

நல்ல காரியங்கள் செய்வான்

செய்யசந்திரன்சன்மம்தனக்குமே
துய்யபத்தாம்அதிபதிசூழ்ந்திடும்
மெய்யிலங்கிசையோன்பலமேபெறின்
பொய்யறச் சுபகன்மம்புரிவனே. 5

தொகுப்புரை:

சந்திரன் நின்ற ராசிக்கு பத்தாம் இடத்திற்குடையவன் எந்த கிரகத்தின் அங்கிசையில் இருந்தானோ

அந்த அங்கிசாதிபதி பலம் பெற்று இருப்பானேயானால்

சாதகன் பொய்யில்லாத நல்ல கருமங்களை (தொழிலை) செய்பவனாவான்.

அருஞ்சொற்பொருள்

செய்ய - தூய்மையான, மெய்யில் - உண்மையான, பொய்யற - பொய் நீங்கிய, சுபகன்மம் - நல்ல காரியங்கள்

ஞான, சிவயோகியாவன்

புரிகுசன்சனிபொன்மால்பளிங்குமே
பரிவுடன்ஒரு வீட்டினைப்பற்றிட
அரியசேற்குணசன்மார்க்கனாகிய
தெரியஞானச்சிந்தைச்சிவயோகியாம். 6

தொகுப்புரை:

செவ்வாய், சனி, குரு, புதன், சூரியன்ஆகிய ஐந்து கிரகங்களும் ஒன்றாகச் சேர்ந்து,

யாதாமொரு ராசிவீட்டில் இருந்தால் - சாதகன் அருமையான நல்ல குணத்துடன் சன்மார்க்க நெறியுள்ளவனாகி, உலகமறிய ஞானமார்க்கங்களைப் போதிக்கும் மனமுடைய சிவயோகியாக விளங்குவான்.

அருஞ்சொற்பொருள்

குசன் - செவ்வாய், பொன் - குரு, மால் - புதன், பளிங்கு சூரியன், தெரிய - யாவரும் தெரிய, சிவயோகி - சிவஞானயோகி.

நல்லோரைப் பழித்து தீமை செய்வான்

ஆமெனும் பத்தாதிபன் நற்கோளேயாய்த் தனலாப பாக்கியத்தில்
நேமமாய் உச்ச கேந்திரங்களில் நிற்க, நற்கன்மமே புரிவதாம்
தோமுறும் பாவனாய் நீசம் அத்தமனனாய்ச் சொல்லும் ஆறு எட்டினில் விபத்தில்
தாமுறில் நல்லோர் தம்மையும் பழித்து தக்க துர்க்கன்மமே புரிவன் 7

தொகுப்புரை:

கன்மாதிபதியாகிய பத்தாம் இடத்திற்குரிய கிரகம் சுபகிரகமாக

இரண்டு ஒன்பது பதினொன்று ஆகிய ராசிகளில் உச்ச கேந்திரம் பெற்றிருந்தால் சாதகன் நல்ல செயல்களையே செய்வான்.

பத்தாமிடத்தோன் பாவகிரகங்களில் ஒன்றாகி நீசம் அல்லது அஸ்தமனம் பெற்று சென்மலக்கினத்திற்கு

ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களிலொன்றில் இருப்பதானால் அந்த சாதகன்,

நல்லவர்களையும் பழித்து இழிவாகப் பேசுவதோடு அவர்கட்குப் பல கொடுமைகளையும் செய்வான்.

அருஞ்சொற்பொருள்

நற்கோளேயாய் - நல்ல சுபகிரகமாக, தனம் - இரண்டாமிடம், லாபம் - பதினோராமிடம், பாக்கியம் - ஒன்பதாமிடம். நற்கன்மம் - சுபகாரியம், வியம் - விரையஸ்தானம்.

தனபதியாய் நற்செயல் புரிவான்

புரியும் ஈரைந்தாம் அதிபன் நற்கோளாய் புகழ் பலவானுமாய்
தெரிய உற்றிடில், யாகாதி கன்மங்கள் செய்வன் ஈரைந்திடத்ததிபன்
பரிவுடன் வியத்தானாதியைக் கூடி, பண்புறும் சுபபலமுடனே
அரியதோர் வியத்திலுற தனபதியாய் ஆன நற்கன்மமே செய்வான். 8

தொகுப்புரை:

பத்தாமிடத்திற்குடைய கிரகம் சுபகிரகமாகவும் பலம் பெற்றவனாகவும் பத்தாமிடத்திலேயே இருந்தால் யாகம் தானம் தருமம் ஆகியவற்றைச் சாதகன் செய்வான்.

பத்தாமிடத்தோன் விரையஸ்தானாதிபதியை கூடி சுபனாகவும் பலம் பெற்றவனாகவும், விரையஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் இருந்தால்,

சாதகன் செல்வத்திற்கு அதிபதியாகி செய்யத்தக்கதான சுபகாரியங்களைச் செய்வான்.

அருஞ்சொற்பொருள்

ஈரைந்தாம் - பத்தாம், யாகாதி - யாகம் முதலான நற்செயல் பண்பும் - நட்புடன், தனபதி - செல்வச் சீமான், கன்மம் - நற்செயல்.

மிகப் பெரிய யாகம் செய்ய விரும்புவான்

செய்ய கன்மாதி குருவுமாய் உச்சம் செறிந்த சுக்கிரனுடன்கூடில்
துய்ய யாகாதி கன்மமே புரிவன், சூழ்ந்த கன்மாரியைத்தானும்
பய்யவே குரு சுக்கிரனுமே பார்க்கில் பண்ணுவன் யாகமே பலவு
மெய்ய கன்மாதி குருவுமாய் நல்லோர் வீடுற விரும்புவன் மகமே. 9

தொகுப்புரை:

கன்ம ராசியாகிய பத்தாமிடத்திற்குரிய கிரகம் குருவாக இருந்து,

உச்சம் பெற்ற சுக்கிரனுடன் கூடியிருந்தால் சாதகன் யாகம் முதலிய நல்ல காரியங்களைச் செய்வான்.

பத்தாமிடத்துக்கு அதிபதியை குரு சுக்கிரன் ஆகியோர் பார்த்தால் யாகங்கள் பலவற்றைச் செய்வான்.

பத்தாமிடத்தோன் குருவாக இருக்கவும், அவன் சுப கிரகங்களின் வீட்டில் இருந்தால் மகம் என்னும் மிகப்பெரிய யாகத்தினைச் செய்ய சாதகன் விரும்புவான்.

அருஞ்சொற்பொருள்

கன்மாதி - கன்மஸ்தானாதிபதி, நல்லோர் - சுப கிரகங்களின், மகமே - மகம் என்னும் மிகப்பெரிய யாகத்தினையே.

மூன்று வேதம் அறிவன், மகயாகம் செய்வான்.

விரும்பு சுக்கிரனும் குருவுமே பலமாய், மேவும் வீட்டதிபன் நற்கோளாய்
இரும்பல வானாய் இருக்க, மற்று அவரோடு எத்தனை சுபகிரகங்கள்
பெரும்பல முடனே கூடின இலக்கம் பெருமகம் புரிவனென்று உரைக்கும்
அரும்பு கன்மாதி குருவுமாய்ப் பலமேயாகில் வேதங்கள் மூன்றறிவன். 10

தொகுப்புரை:

சாதகத்தில், சுக்கிரனும் குருவும் பலம் பெற்றிருக்க

அவர்கள் நின்ற ராசிக்குடையவர்கள் சுபகிரகமாகவும் பலம் பெற்றவராகவும் இருக்கவும்

அவர்களோடு எத்தனை சுபகிரகங்கள் பெரும் பலத்துடன் கூடியிருக்கிறனவோ

அந்த எண்ணிக்கையில் பெரிய யாகங்களைச் சாதகன் செய்வான் என்று சொல்லப்படும்.

கன்மஸ்தானாதிபதி குருவாக பலம் பெற்றிருந்தால் மூன்று வேதங்களையும் நன்றாகக் கற்றிருப்பான்.

அருஞ்சொற்பொருள்

மேவும் - சென்றுள்ள, இரும் - பெரிய, கூடின - கூடியிருப்பன், இலக்கம் - எண்ணிக்கை, பெருமகம் - பெரிய மகம் எனும் வேள்விகள் மூன்றறிவன் - ருக், யசுஸ், சாமம் என்னும் மூன்று வேதங்களையும் நன்கு அறிவான். மகம் - யாகம்.

பிறரை ஏமாற்றி - பலன் பெறுவான்

அறியும் கன்மாதி பாவனாம் பாவரகத்தினிலிருந்து கன்மத்தைக்
குறியுடன் பார்க்கில் சூத்திர கன்மம் கூசிடாப்பாவர் துர்க்கன்மம்
நெறியுடன் புரிந்து ஈங்கு இசைபெற நிறைந்திடும் குரூர சாகசமும்
செறியும் அவ்வினையால் சுபபலம் சிறிதாம் தீங்குறு பலன் திரளாமே. 11

தொகுப்புரை:

பத்தாம் வீட்டிற்குடையவன், பாவியாய், பாவகிரகத்தின் வீட்டிலிருந்து

கர்மஸ்தானமாகிய பத்தாமிடத்தைப் பார்த்தால் சூத்திராம்சத்துடன்அருவறுக்கத்தக்க துர்க்கருமங்களை, பிறரறியாவண்ணம் முறையுடன் செய்து நாட்டில் புகழ்பெற இருப்பான், மற்றும்

கொடுமையான சாகசங்கள் மிகுந்த செயல்களால் சுப பலம் சிறியதாகவும் தீமையான பலன் மிகுதியாகவும் இருக்கும்.

அருஞ்சொற்பொருள்:

கன்மாதி - கர்ம ஸ்தானாதிபதி, பாவரகம் - பாவகிரகத்தின் வீட்டில், (சனி, சூரியன், செவ்வாய் மூவரும் ராசியிடமுள்ள கிரகங்கள்) சூத்திர கன்மம் - தந்திரச் செயல்கள், ஈங்கு - இந்த நாட்டில், குரூர - வெறுக்கத்தக்கதான, சாகசம் - பிறர்ஏமாறும்படி நம்பும்படியாகச்செய்யும் போலிச் செயல்கள்.

உபதேசம், வித்தை, ஞானம் பெறுவான்

திரமுறு ஒன்பானாதிபதி குருவாய்ச் செய்ய ஒன்பதியிலக் குருவுறினும்
வரமுறும்பலர்களிடத்து உபதேச வசனமும்வித்தையும் பெறுவான்
உரமுடன்ஒன்பானதிபதி மரபிலுறை உபதேசமும்பெறுவான்
பரமுறுஇவர்கள்உச்சகேந்திரத்தில்பற்றிடில்ஞானமேபலிக்கும். 12

தொகுப்புரை:

காக்கியஸ்தானமெனும் ஒன்பதாம் ராசியாதிபதி குருவாக அமைந்து அந்த குரு ஒன்பதாம் ராசியிலேயே இருந்தால்.

சாதகன் பரம்பெற்ற பலமகான்களிடத்திலே உபதேசமும் வித்தைகளையும் பெறுபவனாவான்.

அவ்வாறு உபதேசமும் வித்தைகளும் தருவது யார் என்றால், வலிமை பெற்ற ஒன்பதாமிடத்தோன் எந்த மரபுடைய கிரகமோ அந்த மரபில் வந்தவரிடம் இவற்றைப் பெறுவான்.

ஒன்பதாமிடத்தோன் உச்சனாகவும் கேந்திரம் பெற்றும் இருந்தால், சாதகனுக்கு ஞானமார்க்கம் பலிதமாகும்.

அருஞ்சொற்பொருள்:

திரமுறு - வலிமை பெற்ற, வசனம் - அறவுரை,வித்தை - சித்தான வித்தைகள், மரபிலுறை - சந்தான முறையில் இருக்கின்ற, பரம்பரையில் வந்த

குரு, சுக்கிரன் - பிராமணமரபு, சூரியன், செவ்வாய் - சத்திரிய மரபு, சந்திரன், புதன் - வைசியமரபு, சனி - வேளாளமரபு, இராகு, கேது - தாழ்ந்த மரபு என்பதாம்.

மேலான தானதர்மங்கள் செய்வான்

பலிக்கும் மேடம் இடபமுடன் பகர்ந்த சிங்கம் பத்தாக
வலிக்கும் சுபக்கோள் நின்றிடினும் மன்னவர் நோக்கு உற்றிடினும்
ஒலக்கும் வேதமதில் சொன்ன உத்தமத் தர்மக்கடனைச்
சலிக்கஎச் செய்வதினைச் சொல்வர் தக்க கணித வல்லோராம். 13

தொகுப்புரை:

மேடம், இடபம், சிங்கம் இந்த ராசிகளில் ஒன்றாகப் பத்தாமிடமிருக்க அந்த ராசியில் சுபகிரகங்கள் இருந்தாலும்

அந்த சுபகிரகங்கள் குருவினுடைய பார்வையினைப் பெற்றிருந்தாலும்

சாதகன், வேதங்களில் சொல்லப்பட்ட மேலான தர்மச்செயல்களை தான் செய்து சலிப்படையுமளவிற்குத் தொடர்ந்து செய்வான் என்று,

சோதிடக் கணிதத்தில் வல்லவர்கள் சொல்வார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பலிக்கும் - மெய்யாகும், பத்தாக - பத்தாமிடமாக, மன்னவர் - குரு, ஒலிக்கும் வேதம் - ஒலி வடிவாயுள்ள வேதத்தில் கூறப்பட்ட, சலிக்க - மனம் சலிக்க கைசலிக்க,

சண்டாளயோகம் உள்ளவன்

ஆகும் சன்ம லக்கினத்தில் அணுகும் ராகும் ஓரேழில்
வேகமுடனேதான் இருக்க, வேண்டும் கேந்திரம் காரிபுகர்
தாகமுடனேபுதன்மூவர் தானுங்கூடச் சண்டாள
யோகமெனவேதான் உரைப்பர் உண்மைகன்மம் அனாசாரம். 14

தொகுப்புரை:

சென்ம லக்கினத்தில் கேது இருக்கவும், ஏழாமிடத்தில் ராகு இருக்கவும்

கேந்திரஸ்தானத்தில், சனி, சுக்கிரன் புதன் ஆகிய மூவரும் சேர்ந்து இருக்கவும் பிறந்த சாதகனுக்கு

சண்டாளயோகம் வரும் என்று சொல்லுவார்கள். இதன் உண்மையான விளக்கம் தகாத பழக்கங்கள் வழக்கங்கள் என்னும் அனாசாரமாகும்.

அருஞ்சொற்பொருள்:

அணுகும் - சேர்ந்திருக்கும், காரி - சனி, புகர் - சுக்கிரன், சண்டாளயோகம் - கொடுமை பாதங்களாகும் பொய் கொலை களவு காமம் ஆகியவற்றை நிகழ்த்தும் யோகம், உண்மை - இதன் உண்மைச் செயல்.

கொடுமையிலும் கொடுமை செய்பவன்

உண்மைபாக்கியாதிபனும்உற்றேசன்மத்து, உறுகதிரும்
வண்மைபெறவே ஓரைந்தில்வந்து, சுபக்கோள்நோக்கமிலாது,
திண்மைஆறில்ஒரு மூன்றில்தீயோர்வந்து தான்உறைய
எண்மையுடனேஅநாசாரநீசகர்மியாவான். 15

தொகுப்புரை:

ஒன்பதாம் ராசிநாதன் சன்மலக்கின ராசியிலும், சூரியன் ஐந்தாமிடத்திலும் வலிவுடன் இருக்கவும், அவர்களை சுபகிரகங்கள் பார்க்காமல் இருக்கவும்

ஆறாமிடத்தில் மூன்றாமிடத்தில் பாவகிரகங்கள் இருக்கவும் பிறந்த சாதகன்

பலவகையான விரும்பத்தகாத அநாசாரத்தில் ஈடுபட்டு அநாசாரச் செயல்களைச் செய்பவனாவான்.

அருஞ்சொற்பொருள்:

பாக்கியாதிபன் - ஒன்பதாமிடத்தோன், கதிரும் - சூரியனும், யோர் - பாவிகள், எண்மை - எண்ணிக்கை, நீசகன்மம் - பாபமான செயல்,

பாக்கியாதிபன் சென்மத்திலும், சூரியன் ஐந்திலும் இருக்க, அவர்களைச் சுபக்கோள்கள் பார்க்காமல் இருக்கவும், ஆறிலும் மூன்றிலும் பாவிகளிருக்கவும் பிறந்தவன் அநாசார நீச செயலுடையவனாவான்.

சந்நியாசியாகி மக்களுக்கு குரு ஆவான்
சந்நியாசி யோகம்

தேசுறு பத்தாமாதி நான்கிடத்தில் இருக்க
செப்பிய நாலாதிபதி திரிகோணத் தெய்தப்
பூதலமும் பாம்பல்லாது ஒரு நான்கு கிரகம்
பொருந்திப் பத்தினில் இருக்கும்போது சந்யாசியுமாம்
ஓசைகொள் நான்காம் வீடுமுதல் பத்தாம் மனைமட்
டோரேழு வீட்டினும் கோள் ஒழியாமல் இருக்கில
காசியனில் வாழ்பவருக்குத் தேசிகனேயாகிக்
கதித்திடு சந்யாசியெனவே கருதல் வேண்டும். 16

தொகுப்புரை:

புகழ்பெற்ற பத்தாமாதிபதி நான்காமிடத்தில் இருக்க, நான்குக்குடைய கிரகம் திரிகோணத்திலும் இருக்க,

ராகுவைத்தவிர மற்றுமுள்ள சூரியன், செவ்வாய், சனி, கேது ஆகிய நான்கு கிரகங்களும் பொருத்தமாகச் சேர்ந்து பத்தாமிடத்தில் இருக்கும்போது, சாதகன் சந்நியாசியாவான்.

மேமே சொன்ன நான்காம் வீடுமுதல் பத்தாம் வீடு மட்டுமல்ல ஏழு ராசிகளிலும், கிரகங்கள் வரிசையாக இருந்தால்,

அந்த சாதகன் உலகத்தில் மக்களுக்கு குருவாகி, புகழ்பெருகும் துறவியாவான் என்றே கருத வேண்டும்.

அருஞ்சொற்பொருள்:

செப்பிய - சொல்லப்பட்ட, பூசையுறும் - தீமைசெய்யும், பாம்பு - ராகு, மனை - ராசியிடம், காசினி - உலகம், தேசிகன் - சமய குரு, கதித்திடு - மேன்மை பெறும், கருதல் - எண்ணுதல்.

மக்கள் புகழும் சந்நியாசி ஆவான்

வேண்டிடு செவ்வாய் இரவி மதிமூவர் கூடி
விரும்பு பத்தாமிடத்தில் இருக்க, மின்னார் பொன்தனக்கும்
ஈண்டியதோர் விரிவில்லாச் சந்யாசியாவான்
இனியபுதன் கதிரோனும் உச்சமாய் இருக்க
தாண்டு வியத்தானத்தில் சுக்கிரன் எய்திடவும்
சனி ஒருவனாகிச் சுக்கிரன் தன்னைப் பார்க்க
பூண்டு வரும் சன்மம் முதல் ஆதியந்தமாகப்
புகழ்ந்திடு சந்நியாசியெனப் போற்றிட வீற்றிருப்பான். 17

தொகுப்புரை:

செவ்வாய் சூரியன் சந்திரன் ஆகிய மூவரும் கூடி பத்தாமிடத்தில் இருந்தாலும், அல்லது குரு அந்த ஸ்தானத்தில் இருந்தாலும்

சாதகன், மேன்மேலும் துறவறத்தில் மாறாத சந்நியாசியாவான்.

புதனும் சூரியனும் உச்சம் பெற்றிருக்க, பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருக்கவும்

சனி தனி ஒருவனாக அந்த சுக்கிரனைப் பார்க்கவும் சாதகம் அமைந்திருந்தால்

அந்த சாதகன் துறவியாகிவரும் நாள் முதலாக ஆயுள்காலம் வரையிலும் மக்கள் புகழும் சந்நியாசி என்று போற்றும்படியாக வாழ்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

இரவி - சூரியன், மதி - சந்திரன், பொன் - குரு, விரிவில்லா - நீங்காத, பூண்டு வரும் - சந்யாசம் பெற்றுவரும் நாள், போற்றிட - புகழ்ந்து பேசிட.

பத்தாமிடம் நிறைவாம்.

பதினோராம் இடம் - பலன்கள்

ஆதாயமான செயல், ஆதாய திக்கு
மிகும் பயிர்த்தொழில், பெருகும் வியாபாரம்

வியம் ஆறு எட்டாதிபன் கூடி மேவினும் தனியேனும்
நயமாய்ப் பாவகத்து உறின், பாவர் நண்ணில் பார்க்கில் லாபமில்லை
சுயலாபாதி உச்சனுமாய்ச் சுபர்மத்தியிலேதான் இருக்கில்
சுயலாபத்தில் சுபரிருக்கச் சாரும் லாபம் திரளாக. /

தொகுப்புரை:

பன்னிரண்டு ஆறு எட்டாமதிபர்கள் ஒன்றாகச் சேர்ந்து பதினோராம் இடமாகிய லாபஸ்தானத்தில் இருந்தாலும்

தனியாகவாயினும் லாபஸ்தானமாகிய பதினோராம் இடத்தில் இருந்தாலும், மேலும் பாவகிரகங்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும் சாதகன் செய்யும் தொழிலோ வியாபாரம் பயிர்த்தொழில் ஆகியவற்றிலோ சிறிதும் லாபமில்லை. மற்றும்

லாபஸ்தானாதிபதி உச்சனாய்ச் சுபகிரகங்களின் மத்தியில் இருந்தாலும், லாபஸ்தானத்தில் சுபகிரகங்கள் இருந்தாலும் சாதகனுக்கு மிகுதியாக லாபம் வந்து சேரும்.

அருஞ்சொற்பொருள்:

வியம் - பன்னிரண்டாமிடம், மேவினும் - லாபத்தானத்தில் இருந்தாலும், பாவகம் - ராசி இடம், சுயலாபாதி 11ஆம் இடத்தோன் சாரும் - வந்து சேரும்.

மிகுந்த லாபம் வரும் அனுபவிப்பான்

திர லாபாதி உச்சத்தில் செறிந்து லாபத்தினில் இருக்க
மரபாய்ச் சன்மதிபன் பலமாய் மருவ, லாபம் வரும் சுகிப்பன்
விரவாய் லாபாதிபன் இருந்த வீட்டுக்கு இறை கேந்திரம்மேவ
உறவோர் அவனைக் கூடக் கண்ணுற லாபங்கள் உண்டாமே. 2

தொகுப்புரை:

பதினோராம் இடத்தோனான லாபஸ்தானாதிபதி தனது சொந்த ராசியிலே உச்சம் பெற்றிருக்க

அந்த லாபாதிபதியோடு சன்ம லக்கினாதிபதி பலம் பெற்றவனாய்ச் சேர்ந்திருப்பதாயின்

சாதகன் செய்யும் செயல்களில் லாபம் வரும். அதனை அனுபவித்து இருப்பான். மற்றும்,

லாபஸ்தானாதிபதி சேர்ந்துள்ள வீட்டுக்குரிய கிரகம் கேந்திரஸ்தானத்திலிருக்க, அவனை உறவான நட்பு கிரகங்கள் பார்ப்பதானால், கூடி இருந்தாலும்

சாதகனுக்குக் கைமேல் பலனாக லாபங்கள் பல உண்டாகும் - என்பர்.

அருஞ்சொற்பொருள்

மரபாய் - முறைமையுடையதாக, மருவ - சேர, சுகிப்பன் - சுகமாக அனுபவிப்பான், இறை - கிரகம், உறவோர் - நட்பாகிய கிரகங்கள், கூட - சேர்ந்திருப்பின், கண்ணுற - தெளிவாக.

லாபம் கொண்டு வரும் திக்கு

உண்டாம், லாபாதிபன் இருந்த திக்கில் பலன்கள் உரை செய்வோம்
தண்டாமரை நண்பன் கிழக்கு, தரும் சுக்கிரற்கு அக்கினிமூலை
கண்டாய் குசன் தெற்கு ஆர்மூலை, காரி மேற்கு, சசி வாயு
கொண்டேயிருக்கும் புதன் வடக்கு, குரு ஈசானம் கொண்டு வரும். 3

தொகுப்புரை:

சாதகனுக்கு லாபம் உண்டாகும் திக்கினை அறிந்து சொல்லவேண்டுமானால்

சாதகத்தில் லாபத்தானத்தின் யாரோ அவனுடைய திக்கைக் கொண்டு அறிந்து கூறுவதேயாகும். லாபாதிபன் உள்ள ராசியின் திக்கைக் கொண்டும் கூறுவதாகும்.

லாபஸ்தானாதிபன் சூரியனானால் - கிழக்கும் சுக்கிரனானால் தென்கிழக்கும், செவ்வாய்க்கு தெற்கும், தென்மேற்கும், சனிக்கு மேற்கும், சந்திரனுக்கு வடமேற்கும், புதனுக்கு வடக்கும், குருவுக்கு வடகிழக்குமாகத் திக்குகளைக் கண்டு லாபம் கிடைக்கும் திக்கினை அறிந்து கூறலாகும்.

அருஞ்சொற்பொருள்

தண்டாமரை நண்பன் - சூரியன், அக்கினி மூலை - தென்கிழக்கு மூலை, தெற்கு ஆர் மூலை - தெற்கோடு சார்ந்த மூலை - தென்மேற்கு மூலை, வாயு மூலை - வடமேற்கு மூலை, ஈசானம் - வடகிழக்கு மூலை.

நால்வர் திசையில் பலதனலாபம் வரும்

வரும்லாபாதிபன்லாபத்தானத்தில்இருந்தோன்
மதிஇரவிஇவர்நால்வர்மகிழ்பலமேபெற்று
பெருமையுள்ளோர்வீட்டில்கதிபதியுமேபலவானாயின்
பெரும்வீட்டுக்கதிபதியுமேபலவானாயின்
கிருசிகம்நன்றாய்ப்பலிக்கும்அயிசுவரியனாவான்
கிட்டியிவர்க்காம்திசையில்கிளர்தனங்கள்சேரும்
தரும்லாபாதிபன்இரவியாகிமதியுடனும்
தான்கூடப்பார்க்கவெகுதனலாபம்உண்டாம்.4

தொகுப்புரை:

லாபத்தானாதிபதியாகிய கிரகம், லாபத்தானத்தில் உள்ள கிரகம், சந்திரன், சூரியன் ஆகிய இவர்கள் நால்வரும்

நிறைவான பலத்தினை உடையவராய், நல்ல சுபராக நட்பாக பெருமையுள்ள கிரகங்களின் வீட்டில் இருக்கும் கிரகங்களோடு கூடியிருக்கவும்

அந்த பெரும் நல்ல வீட்டுக்கு உடைய கிரகமும் பலவானாயின்

சாதகன் விளைவித்த பயிர்கள் நன்றாய் விளைந்து எதிர்பார்த்த லாபம் பலிக்கும். விவசாயியும் மிகுந்த பணக்காரனாவான். மற்றும்

மேலே சொன்ன நான்கு கிரகங்களின் திசைகளில் மிகுந்த செல்வம் சேரும். அன்றிலாபாதிபதி சூரியனாகயிருந்து சந்திரனுடன் கூடியிருந்தாலும், சந்திரனைப் பார்த்தாலும், மிகுந்த பலவகையான தனலாபங்கள் உண்டாகும்.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன், பெரும் வீடு - சுபகிரகத்தின் வீடு, கிருசிகம் - பயிர்த்தொழில், கிட்டுதல் - வரும் காலம்.

லாபாதி நின்ற திசையில் லாபம் வரும்

உண்டானலாபாதிபதியாகும்சசியை
உம்பர்கோனானகுருவும்உகந்து நோக்க
மிண்டானசகல பாக்கியலாபம் சேரும்
மிக்க லாபாதி எவர் வீட்டில் இருந்தாலும்
கொண்டாடும்அவரவர்க்கு வெகுலாபமுளதாம்
குறித்த சென்மாதிபன்லாபத்தானத்தில்குலவ
கண்டாய மொழியாய்லாபாதி நின்ற திசையில்
கூருதியலாபங்கள்வரும்காணும், எனப்புகல்வர். 5

தொகுப்புரை:

லாபத்தானாதிபதியாக அமையும் சந்திரனை குருவானவர் முழுமையாகப் பார்த்தால், சகல பாக்கியங்களிலும் லாபம் வந்து சேரும்.

லாபாதிபதி யார் வீட்டிலுருந்தாலும் அவரின் வர்க்கத்தார்க்கும் வெகுலாபம் இருக்கும்.

குறித்த சன்மலக்கினாதிபதி, லாபத்தானத்தில் இருந்தால், லாபாதிபதி நின்ற திசை வரும் காலத்தில், சாதகன் திட்டமிட்ட லாபங்கள் முறையாக வருவதாகும் என்பதை அனுபவமாகப் பார்க்கலாம் என்று

கற்கண்டினைப் போன்ற இனிமையான சொற்களைப் பேசும் பெண்ணே! அறிஞர் சொல்வார்கள்.

அருஞ்சொற்பொருள்

சசி - சந்திரன், உம்பர்கோன் - தேவர்களின் தலைமை ஆசான், உகந்து - விரும்பி, மிண்டான - அளவில்லாத, உகந்து - விரும்பி, குலவ - இருக்க, கண்டு - கற்கண்டு.

பதினோராம் இடம் நிறைவுறும்

பன்னிரண்டாம் இடம் - பலன்கள்
மேன்மை - தாழ்மை, பலவழிகளில் விரையம்
சயனம், தீதும் நன்றும் காணல்

கூறியவியத்தில் காரி சனி, கதிர், மதி, குரு, சேய், வெள்ளி
ஏறிடில் குழவி பிதா மகன் துணைவர் இல்லான்
ஆறுபேருக்கு அரிட்டம், அப்பதி சரமேல்தீதாம்
மாறிலா அவர்வீடு உச்சம் நன்றென வழுத்துவாரே. /

தொகுப்புரை:

விரையத்தானமெனும் பன்னிரண்டாமிடத்தில், கரியவனெனும் சனி, சூரியன், சந்திரன், குரு, செவ்வாய், சுக்கிரன் ஆகிய இவர்கள் ஆறு பேரும் ஒன்றாகச் சேர்ந்து இருந்தால்

பிள்ளை, தாய், தகப்பன், மகன், சகோதரர், மனைவி ஆகிய ஆறுபேருக்கு அரிட்டம் உண்டாகும். (மேலே சொன்ன ஆறு கிரகங்களில், சிலரோ, தனித்தோ இருப்பின் அவரவரின் காரகமறிந்து பலன் காண்க.)

இவ்வாறு ஆறு கிரகங்கள் சேர்ந்துள்ள பன்னிரண்டாமிடம் சரராசியானால் மேலே சொல்லப்பட்டவர்களுக்கு பலவகையில் கொடிய துன்பங்கள் உண்டாகும்.

அந்த பன்னிரண்டாமிடம் உச்சம் பெறும் ராசியானால் ஓரளவில் நன்மை உண்டாகுமென்றும் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

காரிசனி - கரியனென்னும் சனி, கதிர் - சூரியன், சேய் - செவ்வாய், வெள்ளி - சுக்கிரன், குழவி - குழந்தை, அரிட்டம் - மரணம், உச்சம் - உள்ள ஆறுகிரகங்களில் ஒன்றின் உச்சவீடாக அமைந்தால், வழுத்துவர் - திட்டமாகச் சொல்வார்கள்.

சயன சுகம் பெறுவான்

வார்மைசேர் வியத்தானத்தின் மன்னவன் சுபக்கோளாகிச்
சீர்மைசேர் கேந்திரத்தும் உச்சத்தும் செறிந்து நிற்கில்
ஆர்மைசேர் வியத்தில் நல்லோர் பரிந்து உரில், பார்க்கில் மேலாம்
கூர்மைசேர் பரியங்கத்தில் குலவு பூச்சரங்கள் சூழ. 2

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடமாகிய வியத்தானத்தின் குரு சுபக்கோளாகி, நன்மை சேரும் கேந்திரத்திலும் உச்சத்திலும் இருந்தாலும்,

வியத்தானமாகிய பன்னிரண்டில் சுபகிரகங்கள் குறையில்லாமல் இருந்தாலும் அந்தஸ்தானத்தினைப் பார்த்தாலும்

சிறப்பான மதிப்புடையதும் பூச்சரங்களால் அலங்கரிப்பட்டதுமான சயனக்கட்டிலில் உறங்கும் அந்தஸ்தினை அதாவது சயன சுகத்தினைச் சாதகன் அனுபவிப்பான்.

அருஞ்சொற்பொருள்:

மன்னவன் - குரு, செறிந்து - பொருந்தி, பரியங்கம் - சயனக்கட்டில், குலவு -சூழ்ந்துள்ளதான.

சப்பிரமஞ்சத்தில் சயன யோகம் பெறுவான்

சூழும் செம்பட்டு மெத்தை தூக்க மேற்கட்டி தூபம்
தாழும் சங்கிலியில் தொங்கும் சப்பிரமஞ்சம் மீது
ஏழ நல்லிசை யாழ்கொண்டே ஏந்திழைமார் இசைப்ப
வாழும் மன்னவனாம் என்று வழுத்துவர் மறைவல்லோரே. 3

தொகுப்புரை:

பன்னிரண்டாமிடத்தில் குரு சுபக்கோளாகி கேந்திர உச்சனாக இருக்க, குருவைச் சுப கிரகங்கள் கூடினாலும் பார்த்தாலும்

அந்த சாதகன் நல்ல பட்டு மெத்தை விரிப்பாகவும், மேலே விதான மேற்கட்டியும் விளங்க உத்திரத்திலிருந்து சங்கிலியால் பிணித்துத் தாழ்வாகத் தொங்கும் அசைந்தாடும் சயன மஞ்சமாகிய கட்டிலில் படுத்திருக்க,

நல்ல ஆபரணங்கள் அணிந்த அழகிய இளம் பெண்கள் ஏழிசையாய் இசைத்துப் பாட்டிசைக்க,

வாழும் மன்னவனாக சயனயோகம் பெற்று வாழ்வான் என்று சோதிட நூலில் வல்லவர்களாகிய பெரியோர்கள் விளக்கமாகச் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்

தூக்கம் - தொங்குகின்ற, தூபம் - உத்திரம், சப்பிரமஞ்சம் - சப்பிரமஞ்சமெனும் கட்டில், யாழ் - ஏழு தந்திகளை உடைய வாத்தியம், இசைப்ப - வாத்தியத்தை இசைத்துப்பாட, வழுத்துவர் - சொல்வார்கள்.

தரையில் படுத்து உறங்குவான்.

வல்லத்தோர் வியத்தானாதி மற்றும் எட்டு ஆரில் நிற்க
சொல்லிய சனியும் ராகுவும் சூழ்ந்து பன்னிரண்டில் நிற்க
நல்லவர் பார்வை சற்றும் நயந்திடாதிருக்கில் பாரில்
புல்லது, மெத்தையாக இருவிழி துயில்வன் போந்தே. 4

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடத்துக்குடைய கிரகம் எட்டு அல்லது ஆறாமிடத்தில் இருக்கவும்

சனியும் ராகுவும் சேர்ந்து பன்னிரண்டாமிடத்தில் நிற்கவும்

சுபகிரகங்களின் பார்வை சிறிதும் இல்லாமல் இருந்தால்

உலகில் தரையில் புல்லே மெத்தையாக நன்றாகத் தூங்கும் தாழ்ந்த நிலையினைச் சாதகன் அடைவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்

வல்லதோர் - வல்லமையுடையதான, பார்வை சற்றும் - நல்லவர் பார்வை சிறிதளவும்

நல்லவர் பார்வை சற்றும் நயந்திடாது என்பது சுபகிரகங்களுக்குரிய ¾ ½ ¼ என்ற குறைவான பார்வையும் பெறாமல் என்பதாகும்,

தந்தையின் செல்வத்தினைவிடப் பலமடங்கு பெறுவான்

போந்தெறி பாக்கியத்தானாதி பொருந்து பன்னொன்றின் மேவ
ஏந்தும் பிதுர் லாபாதிபதி இருவர் தமக்கும் உறவாக
ஆர்ந்த பிரிதின் தனம்போல வதிந்து விகிணம், பொன்தேடி
வேந்தனாவான் மைந்தர்க்கும் இயைந்தே இருக்கும் வெகு தளங்கள். 5

தொகுப்புரை:

பாக்கியத்தானாதிபதி பதினோராம் இடத்திலும்,

பிதுர்ஸ்தானாதிபதி (காரகன்) லாபாதிபதி இருவரும் உறவாக இருக்கவும்.

பிறந்த சாதகன், தனது தகப்பன் தேடியுள்ள செல்வத்தை விடப் பலமடங்கு பொன் தேடி, அரசனைப் போல் இருப்பான்.

அவனது பிள்ளைகட்கும் தந்தை சேர்த்த பெருஞ்செல்வம் அனுபவிக்கப் பொருந்தியதாகவே இருக்கும்.

அருஞ்சொற்பொருள்:

மேவ - இருக்க, ஆர்ந்த - தனக்குரிய, தனம் - செல்வம், வதிந்து - பெருகி இருந்ததன் மேல், விகிணம் - பலமடங்கு.

அரச தண்டத்தால் விரையம்

கோல லாபக் குரிசில் வியத்துறை
மேவி அத்தனும் மேவு தனத்துற
ஆலு மேதனத்தாதி பலமறச்
சால மன்னர் தனங்கொள்வர் தண்டமாய். 6

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்குப் பதினோராம் இடத்தோன் விரையத்தானத்திலிருக்க

விரையத்தானத்தானாதிபதி தனத்தானமாகும் இரண்டாமிடத்தில் இருக்க,

அந்த இரண்டாமிடத்தோனாகிய தனத்தானாதிபதி பலமிழந்து இருக்க, அமைந்த சாதகனுடைய செல்வங்கள் எல்லாம் அரசு அபராத தண்டமாய்க் கைக்கொள்வார்கள்.

அருஞ்சொற்பொருள்:

கோல - அழகிய, குரிசில் - ராசியாதிபதி, அத்தனும் - அந்த விரையஸ்தானாதிபதியும், சால - மிகவும், தனம் - செல்வம், தண்டமாய் - தண்டனைக்குரிய அபராதமாக.

சேர்ந்த செல்வம் போகும்

மாய் வியத்தனும் வந்து தனத்துற
ஏய் தானாதி வியற்தனிலே உற
நேய் சென்மாதி நிழீக்கணமன்றின் ஏய்
நூய் தனங்களெல்லாம் துரை கொள்வாரே. 7

தொகுப்புரை:

ஒருவனது அந்தியக்காலத்தினை அறிதற்கு உதவியாகும் விரையஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்துக்குடைய கிரகம், இரண்டாமிடமாகிய தனஸ்தானத்திலும்,

அந்த இரண்டாமிடத்தோன் விரையஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்திலும் இருக்க

சென்ம லக்கினாதிபதி தகுதிபெறாமல் வலிமையிழந்து இருப்பானாயின்

சாதகனுடைய செல்வங்களை யெல்லாம் வலிமை பெற்ற மேலோர் கைப்பற்றிக் கொள்வர்.

அருஞ்சொற்பொருள்:

மாய் - அழிவாகும், தனத்துற - இரண்டாமிடத்தில் இருக்க, உற - சேர்ந்திருக்க, நிரீக்கணம் - அழிதல் (நீச்சமாதல்) நூய் - சிறிது சிறிதாகச் சேர்த்த பெருஞ்செல்வம், துரை - அரசாங்க மேலதிகாரி.

கள்ளர் அரசு, அக்கினியால் செல்வம் போகும்.

கொள்ளும் இரண்டாம் அதிபதியும் குவு நவாங்கி சாதிபனும்
மெள்ளக்கூடிய பலம் அறவும், மெய்யாதிபனும் துர்ப்பலமாய்
உள்ளிருக்க அவன்தேடும் உடைமைப் பொருள்களை உள்ளவெல்லாம்
கள்ளர் அரசு அக்கினியும் கவர்ந்து கொள்வர் கண்டாயே 8

தொகுப்புரை:

இரண்டாம் வீட்டுக்குடையோனானவன் சேர்ந்துள்ள இடத்துக்குரியவனுடன் கூடி பலம் அற்று இருக்கவும்.

சரீரகாரகனாகிய சூரியன் துர்ப்பலமாய் அவர்களோடு சேர்ந்திருக்கவும்

கூடிய சாதகன் தேடும் செல்வம், மாடு, மனை, நிலம் ஆகிய உடமைகளையெல்லாம்

கள்ளரும், அரசாங்கமும், நெருப்பும் அவ்வப்போது பற்றிக் கொண்டு அழிவு செய்வார்கள் என்னும் உண்மையினைக் காண்பாய்.

அருஞ்சொற்பொருள்:

அதிபதி - வீட்டுக்கு உடையகிரகம், குலவு - சேர்ந்துள்ள, மெய்யாதிபன் - சரீரகாரகன் சூரியன், துர்ப்பலம் - கெட்ட பலன் பெற்று, அக்கினி - நெருப்பு.

நகைகள் தானியங்கள் - கைமாறும்

கண்ட பன்னிரண்டாம் இடக்காவலன்
கொண்டலக்கினம் ஏழில் குடிகொள
மண்டு பொன் அணி. தானியம் மாறிடும்
கெண்டைபோல் விழிக் கிஞ்சுக வஞ்சியே. 9

தொகுப்புரை:

சேல் கெண்டையைப் போன்ற விழிகளும், கிளியின் மொழியும், வஞ்சிக்கொடியின் இடையும் பெற்ற பெண்ணே கேள்!

விரையஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தோன்

லக்கினாதிபனுடன் கூடி ஏழாமிடத்தில் இருந்தால்,

சேர்ந்துள பொன் நகைகள், தானியவகைகள் ஆகியவை கைமாறிப்போகும் என்பதை அறிவாயாக.

அருஞ்சொற்பொருள்:

காவலன் - ராசிக்கு உடைய கிரகம், ஏழில் - ஏழாமிடத்தில், கொண்ட லக்கினம் - இடத்தினைக் கொண்ட லக்கினாதிபதி, தானியம் - நெல் முதலான தானியங்கள், மாறிடும் - வலியவரால் கைப்பற்றப்படும், கிஞ்சுகம் - கிளி, வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற பெண்.

ஐம்பதாவது வயதில் - செல்வம் அழியும்

வஞ்சியே பத்ததிபதி பாவனாய்
விஞ்சியே பலனின்றி வியத்துறில்
அஞ்சியே ஐம்பதாம் வயதாய் அவன்
தஞ்சமான தனங்கள் வழுவுமே. 10

தொகுப்புரை:

வஞ்சிக்கொடி போன்ற பெண்ணே!

பத்துக்குடைய கிரகம் பாவியாய்ப் பலமில்லாமல் பன்னிரண்டாமிடத்தில் இருந்தால் (சுபர் பார்வை பெறாமல் பலமற்று இருந்தால்)

சாதகன் ஐம்பதாவது வயதில் அவன் சேர்த்து வைத்திருந்த செல்வங்கள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டு அழிந்துபோகும்.

அருஞ்சொற்பொருள்:

பாவனாய் - பாவியாகி, விஞ்சியே - மிகுதியாகவே, வியந்து - விரையஸ்தானத்தில், தஞ்சமான - அவனிடம் சேர்ந்துள்ள, தனங்கள் - செல்வங்கள், வழுவும் - செலவழிந்து போகும்.

பொல்லாத செயலுக்குப் பொருள் அழியும்

வழுத்தியபன்னிரண்டாம்மனைக்குமன்பாவனாகி
அழுத்தியஅவனைப்பாவர்அணுகியும்பார்த்துநிற்க
முழுப்பொலாப்பாவசிந்தைமுயற்சியால்அவன்பொன்எல்லாம்
இழுக்குறும்தொழில்உள்ளார்க்கேஈந்தவன்கீர்த்திஏற்பான். //

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடத்திற்குரிய கிரகம் பாவியாய் இருக்க, அவனோடு பாவகிரகங்கள் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும்

சாதகன், அளவுக்கு மேலான பொல்லாத பாவங்களைச் செய்யும் எண்ணத்தின் முயற்சியால்,

அவன் சம்பாதித்து வைத்துள்ள செல்வங்களை எல்லாம், கேவலமான தொழில் செய்பவர்களுக்கே கொடுத்து அவர்களால் சொல்லப்படும் பாராட்டினை ஏற்பான்.

அருஞ்சொற்பொருள்:

வழுத்திய - சொல்லப்பட்ட, மனை - ராசிவீடு, அழுத்திய - பாவனாக இருக்கும், முழு - முழுமையான, பொலா - பொல்லாத, பொன் எல்லாம் - செல்வங்கள் முழுவதும், இழுக்குறும் - குற்றமாகும், ஈந்து - கொடுத்து, கீர்த்தி - பாராட்டு, பாவமான செயலைச் செய்யும் எண்ணத்தால், கொடியவருக்குப் பொருள் கொடுத்து, அவர்களின் பாராட்டினைப் பெற்றவனாவான்.

தர்ம வகையில் செலவாகும்

ஏற்கவே பன்னிரண்டில் இரணியன் வெள்ளி தூய
தீர்க்கச் சந்திரன்,, பொல்லாரைச் சேராத புதன் இந்நால்வர்
மார்க்கமாய் கூடினால் தன்ம வகையினால் செலவாம் என்று
ஏக்க நாற்சுருதி வல்ல வேதியர் ஓதினாரே. 12

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடத்தில் குரு, சுக்கிரன், குற்றமில்லாத முழுமையான சந்திரன், பாவிகளைச் சேராத புதன்,

ஆகிய இந்த நால்வரும் குறையில்லாமல் மார்க்கமாய்க் கூடினால்,

சாதகன், தர்மகாரியங்களில் தனது செல்வத்தைச் செலவழிப்பான் என்று

நான்கு வேதங்களிலும் வல்லவர்களாகிய வேதியர்கள் சொன்னார்கள்.

அருஞ்சொற்பொருள்:

இரணியன் - குரு, வெள்ளி - சுக்கிரன், தூய - குறையில்லாத, தீர்க்கம் - முழுமையான, பொல்லாரை - பாவகிரகங்களை, மார்க்கமாய் - சமயமார்க்கமாக, தன்மம் - தருமம், ஏக்க - ஏகம், சுருதி - வேதம், ஏக்கம் - ஒன்றாய் இருத்தல்.

பொருள்தேடி புதைத்து வைப்பான்

ஓதிய பன்னிரண்டாம் அதிபனோடு உற்ற பாவர்
நீதியாய் நல்லோர் வீட்டினில் நிற்கில் நல்லோரைக் கூடில்
தீதறப் பலவானாகத் திகழ் வியத்ததிபன் ரெண்டில்
போதவே செம்பொன் தேடிப் புதைப்பன் மற்றொருவர்க்கீயான். 13

தொகுப்புரை:

பன்னிரண்டிற்குரிய கிரகத்தோடு பாவிகள் சேர்ந்து சுபர் வீட்டில் இருந்தாலும்

சுபருடன் கூடியிருந்தாலும், குறையில்லாது பலம் பெற்றிருக்கும் பன்னிரண்டாமிடத்தோன், தனஸ்தானமாகிய இரண்டாமிடத்தில் இருந்தால்

சாதகன் மிகுதியாகவே பொன்னையும் தேடிச் சம்பாதித்துச் சேர்த்து ஒருவருக்கும் சிறிதளவும் கொடுக்காமல் பூமியில் புதைத்து வைப்பான்.

அருஞ்சொற்பொருள்:

உற்றபாவர் - சேர்ந்த பாவிகள், நீதியாய் - கெடுதியில்லாமல், அற - கெடுதி நீங்கிய, ரெண்டில் - இரண்டாமிடத்தில்

பன்னிரண்டுக்குடையவன் பாவிகளோடு சேர்ந்து சுபர் வீட்டில், சுபருடன் கூடி இருக்கும்படியாக இருக்கவும், பன்னிரண்டாம்வீட்டோன் இரண்டாமிடத்தில் குறையின்றி இருந்தாலும் பொருளைச் சேர்ப்பான், பிறருக்குக் கொடுக்க மாட்டான், புதைத்து வைப்பான்.

கடன் கொடுத்து இழப்பான்

ஆனதோர் பாக்கியாதி தனாதி ஐந்தாமிடத்தும்
ஊனமில் ஐந்தாமாதி ஒன்பதில் இரண்டினில் நிற்க
தானம் இம்மூன்று பேரும் லக்கினம் தன்னில் நிற்க
ஈனமில் அவன் பொன் எல்லாம் கடன் கொடுத்து இழந்து போவான். 14

தொகுப்புரை:

பாக்கியாதிபதி தனாதிபதி இருவரும் ஐந்தாமிடத்தில் இருக்கவும், குறையில்லாத ஐந்தாமிடத்தோன் ஒன்பதாமிடத்திலோ இரண்டாமிடத்திலோ நிற்கவும் இருந்தாலும், அல்லது

இம்மூன்று பேரும் லக்கினத்தில் இருந்தாலும்

சாதகன் தனது செல்வங்களைக் கடன் கொடுத்தே இழந்து போவான்.

அருஞ்சொற்பொருள்:

பாக்கியாதி - ஒன்பதாமிடத்தோன், தனாதி - இரண்டாமிடத்தோன், தானம் - ஸ்தானம், ராசியிடம், இம்மூன்று பேரும் 9, 2, 5 ஆகிய மூன்று ராசிகளுக்குரிய மூன்று கிரகங்களும், லக்கினம் - சென்ம லக்கினம், ஈனமில் - குறையில்லாத செல்வத்தை.

செல்வம் அழியும், பெயரும் கெடும்

வன்புறும் இரண்டாமாதிபதி மார்த்தாண்டனுடனே கூட
இன்புறு வியத்தனாதிபதி இனியர் இரண்டிடத்தினில் நிற்க
துன்புறும் அட்டமத்தில் லாபாதி சூழ்ந்து நிற்கப்
பொன் பலவெல்லாம் சேதம் போய்விடும் புகழுமில்லான். 15

தொகுப்புரை:

இரண்டாமிடத்ததிபன் சூரியனுடன் கூடி இருக்க

பன்னிரண்டுக்குடையோன் சுபருடன் சேர்ந்து இரண்டாமிடத்தில் நிற்கவும்

துன்பம் அமையும் எட்டாமிடத்தில் லாபாதிபதியாகிய பதினோராம் இடத்தோன் சேர்ந்திருக்கப் பிறந்த ஜாதகனின்

செல்வமெல்லாம் சிதைந்து சேதமாகிப் போவதுடன் அவனுடைய நற்பெயரும் இல்லாதவனுமாவான்.

அருஞ்சொற்பொருள்:

மார்த்தாண்டன் - சூரியன், இனியர் - சுபகிரகங்கள், லாபாதி - 11ஆம் இடத்தோன், சேதம் - அழிவு, புகழ் - நற்பெயர்.

மார்த்தாண்டன் என்ற பெயர் சூரியனைக் குறிக்கும் (நிகண்டு)

கருமியாக இருப்பான்

புகழும் வெள்ளியும் பொன்னும் பிறைதனை
மகிழ நோக்கில் மந்தன் துலாத்து உற
நிகழும் லோபத்தனத்துடனே மீயோர்
இகழவே ஒருகாசொன்றும் ஈவிலான். 16

தொகுப்புரை:

புகழ்பெற்ற சுக்கிரனும் குருவும் சந்திரனை சுபப்பார்வையுடன் பார்க்கவும்

சனி துலா ராசியில் இருக்கவும், அமைந்த சாதகன்

உலக மக்கள் பழித்து இகழும்படியாக, ஒரு காசு கூடப் பிறருக்கு கொடுக்காத ஈவு இரக்கம் இல்லாத கருமியாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

வெள்ளி - சுக்கிரன், பொன்னும் - குருவும், பிறைதனை - சந்திரனை, மகிழ நோக்கில் - முழுப்பார்வையாக நோக்கவும், லோபத்தனத்துடன் - லோபியின் செல்வத்துடன், மீயோர் - உலகப் பெரியோர், ஈவு - இரக்கத்தன்மை, இலன் - இல்லாதவனாவான்.

சொத்தினை எந்த வமிசத்தவர்க்கு ஈவான்

ஈதல் ஈவது எவர்க்கென்று உரைப்பது
ஓதும் ஒன்பதாம் வீட்டுக்கு உடையவன்
சாதி வர்க்கத்தவர் தமக்கே நிதியினை
வாதியாமல் மகிழ்ந்து வழங்குவான். 17

தொகுப்புரை:

ஒரு சாதகத்தைப் பார்த்து, அந்த சாதகன் தனக்குரிய சொத்துக்களைப் பிற்காலத்தில் யாருக்குக் கொடுப்பான் என்று ஆராய்ந்து சொல்லவேண்டுமானால்,

ஒன்பதாம் வீட்டுக்குரிய கிரகம் எந்த சாதி இனத்தைச் சேர்ந்ததோ அந்த சாதி இன வர்க்கத்தாருக்கே.

தன்னுடைய செல்வம் அனைத்தினையும் வாதிடாமல் மகிழ்வுடன் கொடுப்பான் என்னும் பலன்தனை அறிந்து கூறவேண்டும்.

அருஞ்சொற்பொருள்:

ஈதல் - கொடுத்தல், ஓதும் - சொல்லப்படும், வீட்டுக்கு - ராசி வீட்டுக்கு, வாதியாமல் - வழக்கு பேசாமல், வழங்குவான் -கொடுப்பான்.

ஒன்பதாம் இடத்துக்குரிய கிரகம் எந்த சாதியை உடையதோ அந்த சாதி இனத்தவருக்குப் பொருளைக் கொடுப்பான் என்பதாம்.

கிரகசாதி: குரு, சுக்கிரன் - பிராமண சாதி, சூரியன், செவ்வாய் - சத்திரிய சாதி, சந்திரன், புதன் - வைசிய சாதி, சனி - வேளாளசாதி, இராகு, கேது - தாழ்ந்த சாதி.

9ஆம் வீட்டோனைக் கொண்டு தந்தை வர்க்கமென்றும், 8ஆம் வீட்டோனைக் கொண்டு மாமன் வகை என்றும், 7ஆம் வீட்டோனைக் கொண்டு மனைவி வர்க்கமென்றும், 3ஆம் வீட்டோனைக் கொண்டு சகோதர வர்க்கமென்றும் ஆராய்ந்து கூறலாகும். ஒன்பதாம் வீடு என்பது பிதுர் ஸ்தானமாதலின் குறிப்பாகத் தந்தை வர்க்கமென்று கூறுவதாகும்.

தருமம் செய்து வாழ்வான்

ஓது கதிரும் தேய்பிறையும் கூடி வியத்திலுற தனத்தை
நீதி அரசர் கைக்கொள்வர், நிலவும் குருவும் வியத்திலுற
போது தனங்கள் மிகத்தேடிப் பொருந்தும் தன்மம் புரிந்தருளி,
மீதி சிறிது தனமிருக்க வாழ்வன் புவியில் வெகுகாலம். 18

தொகுப்புரை:

சூரியனும் தேய்பிறைச் சந்திரனும் கூடி பன்னிரண்டாமிடத்தில் இருந்தால்,

சாதகனுடைய சொத்துக்களை, நீதியைச் செலுத்தும் அரசர் கைக்கொள்வார்கள்,

சந்திரனும் குருவும் பன்னிரண்டாமிடத்தில் இருந்தால்

சாதகன் போதுமான அளவு செல்வங்களைப் பாடுபட்டுத்தேடி பொருத்தமான தர்மங்களைச் செய்த பின்னர்

மீதியாக சிறிதளவு செல்வம் எஞ்சியதாக இருக்க, அதனை அனுபவித்து உலகில் வெகு காலம் வாழ்ந்திருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

கதிரும் - சூரியனும், நீதி அரசர் - நீதி செலுத்தும் அரசு அதிகாரிகள், நிலவு - சந்திரன்.

வைத்த இடம் தெரியாமல் மறப்பான்

காலமாம் வியந்தன்னில் அங்காரகன்
சாலநிற்க, தனித்துக் கண்ணோக்குறில்
ஞாலமிதில் புதைந்திடு நற்பொருள்
வாலைக் கேடறியாமல் மறக்குமே. 19

தொகுப்புரை:

பன்னிரண்டாம் இடத்தில் செவ்வாய் தனியாக இருந்தாலும், அல்லது வேறு இடங்களிலிருந்து நோக்கினாலும்

சாதகன் பூமியில் புதைத்து வைத்த நல்ல பெரும் செல்வத்தினை

வைத்த இடம் தெரியாமல், அவை மண்ணில் கெட்டுப்போகும் என்பதும், தெரியாமல் தேடி அலைந்து மறப்பவனாவான் என்பர்.

அருஞ்சொற்பொருள்:

அங்காரகன் - செவ்வாய், சால - தனிச் சிறப்பாக, கண்ணோக்குறில் - நேர் பார்வை செய்வதாயின், ஞாலம் - மண்ணுலகம், வாலை - வழித்தடம் வைத்துப்புதைத்த இடம், பொருளின் உயர்ந்த தன்மை.

பன்னிரண்டாம் இடம் நிறைவுறும்.

பெண்கள் சாதகம்
வடிவழகும் குணமும் காணல்

திருவனையமடவார்கள்அம்புவியின்மீது
செனித்தபலசாதகத்தின்திறமைகூறும்
கருவுதயகாலலக்கினம்சசிலக்கினமும்
கண்டுவடிவுடன்நிறமும்கருதியிட வேண்டும்
மருவியசத்தமராசியால்அவள்தன்குணமும்
மகிழ்நன்குணமும்தெரிந்து வழுத்தலுமே வேண்டும்
உருவுதயலக்கினத்துஇந்துஇருக்கில்அழகுள்ளான்
ஓரேழில்சசியுறப்பார்த்தால்அழகுள்ளானே. /

தொகுப்புரை:

இலக்குமி போன்ற பெண்கள் உலகத்தில் பிறந்த பல சாதகங்களின் வகையினை அறிந்து கூறுவது எப்படியென்றால்,

சிசு பிறந்தகால சென்மலக்கினத்தையும், சந்திரா லக்கினத்தையும் பார்த்து, அவளுடைய அழகு நிறம் ஆகியவற்றைக் கருதி அறிதல் வேண்டும்.

தொடர்ந்த ஏழாமிடத்தால் அப்பெண்ணின் குணத்தையும், கணவன் அழகுள்ளவனாவான் என்பதுடன் அவன் குணத்தையும் அறியலாம்.

அருஞ்சொற்பொருள்:

திரு - இலக்குமி, மடவார் - பெண்கள், அம்புவி - அழகிய உலகம், செனித்த - பிறந்த, கரு - கருவாகி உருவாகிய சிசு, சசி - சந்திரன், வடிவு - உடலமைப்பின் வடிவம், வழுத்தல் - சொல்லல், இந்து - சந்திரன், பர்த்தா - கணவன்.

அழகி, அணிகள் பணியாட்கள் உடையவள்

உள்ளபிறைலக்கினமும்சென்மலக்கினமும்
உறுமிரட்டையாகில், வடிவுடையமயிலாகும்
தெள்ளியஅம்மனைஇரண்டும்நல்லோர்கள்காணில்
திரளாகப்பணிஅணிவள்செகத்துஅதிரூபியுமாம்

கொள்ளு இருமனையும் ஒற்றையாகில் ஆண்சொரூபி
கூறு நல்லோர் கண்டிடில் நற்குலம் செல்வம் குலவும்
கள்ளமுறும் பாவர் அந்த ராசியிரண்டினிலே
கலந்திருக்கில் கண்டிடில் பொல்லாப் பாவக்கன்னி. 2

தொகுப்புரை:

சந்திர லக்கினமும் சென்ம லக்கினமும் இரட்டை ராசியாக இருந்தால், சாதகி மயில் போன்ற சாயலுடைய அழகியாவாள்.

மேற்சொன்ன அந்த இரண்டு ராசிகளையும் சுபகிரகங்கள் பார்த்தால் அநேகப் பணியாட்களைப் பெறுபவளாகவும் உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருப்பவளாகவும் மிகுந்த அழகுடையவளாகவும் இருப்பாள்.

சந்திரா லக்கினம் சென்மலக்கினம் ஆகிய இரண்டு ராசிகளும் ஒற்றை ராசியானால் ஆண்வடிவமுள்ளவள்,

அவ்விரண்டு ராசிகளையும் சுபகிரகங்கள் பார்த்தால் நல்ல குலம் செல்வம் பொருந்தியவளுமாவாள்.

கள்ளத்தனமுடைய பாவகிரகங்கள் அந்த இரண்டு ராசிகளிலும் இருந்தாலும் பார்த்தாலும் சாதகி பொல்லாத கள்ளத்தனமும் பாபங்கள் செய்பவளும் ஆவாள்.

அருஞ்சொற்பொருள்:

பிறை - சந்திரன், அம்மனை - அந்த ராசியிடங்கள், செகத்து - உலகத்தில், சொரூபி - வடிவமுடையவள், கன்னி - பெண்ணாவாள்.

கலையரசி, ஞானி, அதிரூபி, போகி

கன்னிகேள் சன்மத்தில் பிறை சுங்கன் இருக்கில்
கமழ் பெருமையுடன் சுகியாய் காசினியில் வாழ்வாள்
உன்னும் உதயத்தில் இந்து புதனுமே கூடில்
உணர்வள் பலகலை போகி, ஓதிய நற்குணத்தாள்

இன்னம் சன்மந்தன்னில் புதனும் சுக்கிரனும்
இருந்தக்கால் ஞானி அதிரூபி இனிதுரைப்பள்
மின்னுமொரு மூன்றகத்தில் சுபக்கோள்கள்நிற்கில்
வெகுதனம் நற்குணம் தயவு விரவிசுகமுள்ளாள். 3

தொகுப்புரை:

பெண்ணே கேள்! சன்மலக்கினத்தில் சந்திரனும் சுக்கிரனும் இருந்தால் பெருமையுடன் சுக வாழ்க்கையுடன் உலகில் வாழ்வாள்.

சன்மத்தில் சந்திரனும் புதனும் கூடியிருந்தால் பலகலைகளைக் கற்றவள், போகமுடன் நல்ல குணமுடையவளாக இருப்பாள்.

சன்மத்தில் புதனும் சுக்கிரனும் இருந்தால் ஞானியாகவும், மிகுந்த அழகியாகவும் நல்ல வசனமுள்ளவளாகவும் இருப்பாள்.

சென்மத்திற்கு மூன்றாமிடத்தில் சுபக்கோள்கள் இருந்தால், மிகுந்த செல்வம் நல்லகுணம் தயவுதாட்சண்யம் ஆகியவை பொருந்தியவளாகவும் சுகவாழ்வு உடையவளாகவும் இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

சுங்கன் - சுக்கிரன், சுகி - நல்ல சுகவாழ்வுடையவள், அதி ரூபி - மிகுந்த அழகுடையவள், மூன்றகத்தில் - மூன்றாமிடத்தில், வெகுதனம் - அளவில்லா செல்வம், தயவு - இரக்கம், விரவி - கலந்து.

விதவையாவாள், புத்திரர் அற்பம்

உள்ளபலபாவர் எட்டில் இருந்தக்கால் விதவை
உளதாவ தென்றெனில் ஒரெட்டாம் அதிபன்
தெள்ளிய அங்கிசைக்கு இறைவன் அஷ்டவர்க்கத்தில்
சேர்வருடம் எத்தனையோ அத்தனை ஆண்டதனில்
மெள்ள விதவையுமாவாள், இரண்டினில் நல்லோர்கள்
மேவிலவள் கணவனைத்தான் விட்டு முன் போய்விடுவாள்
கள்ளமுறும் தேள் இடபம் கன்னி எனும்மூன்றில்
கலைமதி மேவில் புத்திரர் அற்பங்காணும். 4

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் பலபாவ கிரகங்கள் இருந்தால் விதவையாவாள்.

எத்தனை வருடத்தில் விதவையாவாள் என்றால் எட்டாமிடத்தோன் இருந்த அங்கிசாதிபதி அட்டவர்க்கப்படி எத்தனை வருடத்தில் சேர்வானோ அத்தனையாவது வருடத்தில் விதவையாவாள்.

இரண்டாமிடத்தில் சுபகிரகங்கள் இருந்தால் கணவனுக்கு முன்னர் இறப்பாள்.

விருச்சிகம், ரிஷபம், கன்னி இந்த மூன்று ராசிகளில் (ஒன்றில்) வளர் சந்திரன் இருந்தால் புத்திரர் அற்பமாய் உடையவளாவாள்.

அருஞ்சொற்பொருள்:

அதிபன் - ராசிநாதன், மேவில் - அடைந்தால், தேள் - விருச்சிக ராசி, கலைமதி - வளர்பிறைச் சந்திரன், அற்பம் - குறைந்த எண்ணிக்கை, ஒன்றிரண்டு எனலாம்.

எட்டாமிடத்தில் பாவகிரகங்கள் இருந்தால் என்பதால், சுபகிரகங்கள் இருந்தால் தீர்க்க சுமங்கலியாக மங்கலமாக இருப்பாள் என்றறியலாகும்.

இல்லத்தரசியாவாள், சந்நியாசியாவாள்

காணியாம் சனியனுமே பலத்திருக்கவேதான்
கணக்கன் மதி பிருகு ஈனக்காரகர் அகத்திருக்க
ஆணி அந்த ராசி ஒற்றையாகவுமே சன்மம்
அடுக்க, மற்றோரொற்றைகளில் அன்புடனே இருக்க
நீணிலத்தில் பிறந்தாள்தன் புருடனுக்கோ அரசாய்
நிருபதியாய்ச் சுவாமியாய் நேசமுடன் இருப்பள்
பேணியதோர் ஏழில் தீக்கோளும் மும்மூன்றில்
பெருமையுள்ளோர்உற சந்நியாசிப் பெண்ணாவாள். 5

தொகுப்புரை:

சாதகியின் ராசிசக்கரத்தில் சனியானவன் பலம் பெற்றிருக்கவும்,

புதன், சந்திரன், சுக்கிரன் ஆகிய மூவரும் பாவகிரகங்களின் வீட்டில் இருக்கவும்

அந்த ராசி ஒற்றை ராசியாகவும் சென்ம ராசியாகவும் இருக்க, மற்ற ஒற்றை ராசிகளில் பிற கிரகங்கள் நட்புடன் இருக்கவும், உலகில் பிறந்த பெண், தன் புருடனுக்கு அரசாகவும், மந்திரியாகவும் தெய்வம் போன்றும் நட்புடனும் இருப்பாள்.

விரும்பத்தக்க ஏழாமிடத்தில் பாவகிரகமும், ஒன்பதாம் இடத்தில் சுபரும் இருந்தால் சந்நியாசிப் பெண்ணாவாள்.

அருஞ்சொற்பொருள்:

கணக்கன் - புதன், பிருகு - சுக்கிரன், ஈனக்காரகர் - தீமை செய்தற்குரிய காரககிரகங்கள், அகம் - ராசியிடம், நிருபதி - தகுதியான நன்மை தரும் யோசனைகளைக் கூறுபவனாய், சுவாமியாய் - தெய்வப்பெண்ணைப் போன்றும், மும்மூன்றில் 3×3 =9 ஒன்பதாம் இடத்தில், சந்நியாசி - துறவி.

அழகி, தொழில் செய்வாள், பாவி

ஆக ரெட்டைராசிதனில் குரு செவ்வாய் புந்தி
அதிபலமாய் இருந்தக்கால் அவனியின்மேல்
வாகுடனே பலகலைகள் அறிந்திடு நற்குணமும்
மாதருக்குள் சிறந்தழகு மயிலுமாகுவளே
சேகரமாய் பரிதி மதி கூடியே நிற்கில்
தெரிந்து பலவிதத் தொழிலையே செய்து சீவிப்பாள்
மோகமுடன் கதிர் செவ்வாய் கூடியுமே நிற்கில்
முழுப்பாவியாவளென்றே மொழிந்திடுவர் பலரும். 6

தொகுப்புரை:

சென்ன காலத்தில் இரட்டை ராசியில் குரு செவ்வாய் புதன் இவர்கள் பலம் பெற்று இருந்தால், உலகில் சிறப்பான பலகலைகளை அறிந்தவளாவாள், நற்குணத்துடன் பெண்களில் சிறந்த அழகுடையவளுமாவாள்.

சேர்ந்தாற்போல் சூரியனும் சந்திரனும் கூடியிருந்தால் பலவித தொழில் செய்து சீவிப்பவளும்

சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் முழுப்பாவியாகவும் இருப்பாள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

ரெட்டை - இரட்டை ராசி, அவனி - உலகம், பரிதி - சூரியன், கதிர் - சூரியன்.

அவசரக்காரி, வஞ்சகி, செம்பு பித்தளை விற்பாள்

பலரும்பணி கதிர் புந்திகண் மருவும்பொழுது எழில்சேர்
பலர்சிந்தனையறிவாள் புகழ்பரவும்சுகசாரீரி
அலரும்கதிர் குரு ஒன்றிடில் அதிவஞ்சனை பாள், முன்
அணுகும் தொழில் அறியாள் அறிவாள், வருகருமம்
மலரம்புய அதிபன் பிருகுடன் வந்துறின், மற்போர்
வனையும் கொடியவள் ஆயுதவகையால் நிதிதேடும்
சலமுண்டிடு கதிர் மந்தனை அணுகும் பொழுது உலகில்
தகு பித்தளை செம்பொடு தரா விற்றுமிருப்பாள். 7

தொகுப்புரை:

சனன ராசிமண்டலத்தில் சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் பலருடைய எண்ணங்களை யூகமாக அறிபவளாவாள். புகழ் பரவும்படியான இனிய பாடகியாகவும் திகழ்வாள்.

சூரியனும் குருவும் கூடியிருந்தால் மிகவும் அதிகமாக வஞ்சனைகளைச் செய்பவளாவாள். சிந்தித்து செயல்படாமல் பின்பு அறிபவளாக இருப்பாள்.

சூரியனோடு சுக்கிரன் கூடியிருந்தால்

வலிந்து காரியங்களை உண்டாக்கும் சண்டைக்காரியாவள், ஆயுதங்களை விற்று செல்வம் தேடுவாள்.

சூரியன் சனியுடன் சேர்ந்திருந்தால் பித்தளை செம்பு தரா முதலான உலோக வகைகளை விற்றுப் பொருள் தேடுபவளாக இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

எழில் - அழகு, சுகசாரீரி - இனிய குரல் உடையவள், அணுகும் தொழில் செய்யும் காரியம், மந்தன் - சனி.

அழகி, இருவர் கணவர், வாகனம் உடையவள்

உய்யும் எருதோடு கோல் இவை உதயமதில் மதியும்
உறையக் குசதிசை எத்திசையுறும் அங்கிசையாகில்
மையுந்திய குவளை செழுமலர்போல் இருகண்ணாள்
வகையும் தொகை அறிவாள், சிலவழி சாலவுரைப்பாள்
எய்யும் சனிதிசையைத் தசமெனும் அங்கிசை என்னில்
இருவர் கணவோர் தாமுளர் என்னும் மடவார்க்கே
மெய் ஐந்தொடு இரண்டாம் வீட்டுக்கிறை இருவர்
மீளிர் கேந்திரம் லாபத்துறவே வாகன முண்டாம். 8

தொகுப்புரை:

ரிஷபம் துலாம் ஆகிய ராசிகளில் ஒன்றில் சந்திரன் இருக்கவும், செவ்வாய் திசை வருங்காலத்தில் செவ்வாய் அங்கிசமானால் அந்த சாதகி வாழ்க்கை வகையுடல் பலன்களையும் நன்கு அறிபவளாகவும் நல்ல நெறிமுறைகளை உரைப்பவளாகவும் இருப்பாள்.

சனி திசை பத்தாவதில் அங்கிசையானால் இரண்டு புருஷரை உடையவளாவள்.

ஐந்து இரண்டாம் இடங்களுக்குரிய கிரகங்கள் கேந்திரத்திலும் லாபத்தானமாகிய 11ஆம் இடத்திலும் இருந்தால் சாதகிக்கு வாகனயோகம் உண்டென்று கூறலாம்.

அருஞ்சொற்பொருள்:

எருது - இடப ராசி, கோல் - துலாராசி, குசதிசை - செவ்வாய் திசை, கணவோர் - புருஷர்கள், வாகனம் - ஏறிச் செல்லும் வாகனங்கள், தசமெனும் - பத்தாமிடத்தோன் என்னும்.

கணவன் நிறை ஆயுளும் அரசபோகமும் உள்ளவன்

உண்டாகிய ஐந்தாமிறை உச்சகுருவாகில்
உணர் வாலிப யவ்வன வுருவமுளனாவான்
நண்டாகிய மனை உற்றிடில் நாரிக்கிசை கணவன்
நரவாகனம் உளனாகுவன், நவிலில் சுக்கிரனாகில்
மிண்டாகிய வெள்ளிக்கிசை பல்லக்குள வேந்தன்
விரவும் சனியாகில் பரி வெண்சத்திரமுள்ளான்
கொண்டாடிய கன்மாதிபன் குரு சுக்கிரன் ஆகில்
கூறு ஐந்தினிலே நின்றுற கொழுநன் சதசீவி. 9

தொகுப்புரை:

செனன லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தோன் உச்சம் பெற்ற குருவாக கடக ராசியிலிருக்கவும், சாதகி வாலிபனும் நல்ல அழகனுமான கணவனை மணப்பாள்.

சென்ம லக்கினம் கடகமாயிருந்து அதில் குரு உச்சம் பெற்றிருக்க சாதகிக்கு அமையும் கணவன், மனிதனால் சுமக்கப்படும் வாகனத்தினை உடையவனாவன்.

ஐந்தாமிடத்தில் சுக்கிரன் குறையில்லாமல் இருந்தால், வலிமையுடைய அந்த சுக்கிரனுக்கு உள்ளதான அம்சத்தில் பல்லக்கு வாகனமுடைய கணவன் அமைவான்.

ஐந்தாமிடத்தில் சனி இருந்தால் குதிரை வாகனமும் வெண்சாமரை வீசப்பெறும் அந்தஸ்தும் உடையவனாவான்.

பத்தாம் வீட்டோன் குரு சுக்கிரனாக இருந்து ஐந்தாம் இடத்தில் இருந்தால் நிறைந்த ஆயுளை உடைய கணவனை அடைவாள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

ஐந்தாம் இறை - ஐந்தாம் இடத்துக்குரிய கிரகம், யவ்வனம் - வாலிப அழகு, நாரிக்கு - சாதகிக்கு, நரவாகனம் - மனித வாகனம், பரி - குதிரை, கன்மாதிபன் - பத்தாமிடத்தோன், சதசீவி - நூறாண்டுகள் வயது உள்ளவன்.

கணவன் நோயாளி, பெற்றோர் பொருள் சேரும்

சீவித்திடு குருகிச்சுரன் ஆறாம் மனை சேரில்
தெரிவைக்கு இசை கணவன் பிணிசெறி மெய்யினனாவன்
பூவைக்கு முந்நான்கில் குரு புரிசுக்கிரன் மேவில்
போந்தேவிடும் அற்பாயுசு புல்லாடன் மெய்யாவன்
பாவைக்குறும் ஐந்தாமிறை பரிவாய் இனியவராய்ப்
பண்பாகிய ஒன்பான்மனை பற்றப் பயில் ஒன்பான்
ஏவுமற்ற மனைக்காயின லாபத்துரின் ஈன்றோர்
எய்தும் பொருள்தான் அவையெல்லாம் இவளுக்காம். /0

தொகுப்புரை:

நீச்சம்பெறாத குரு சுக்கிரன் சென்ன லக்கினத்திற்கு ஆறாம் இடத்தினைச் சேரில், இந்த பெண்ணிற்குக் கிடைக்கும் கணவன் ரோகமுள்ள உடம்பினை உடையவனாக இருப்பான்.

இந்த பெண்ணின் சென்ம லக்கினத்திற்கு பன்னிரண்டாம் இடத்தில் குரு சுக்கிரன் அற்ப ஆயுளுள்ள கணவன் அமைவான், அவன் நலிந்த சரீரத்தையுடையவனாக இருப்பான்.

ஐந்தாமிடத்திற்குரிய கிரகம் நல்ல சுப கிரகமாக ஒன்பதாம் இடத்தில் இருக்கவும், அந்த ஒன்பதாமிடத்திற்குரியவன் பொருந்திய மனையானது லாபஸ்தானமாகிய பதினோராம் இடமாக அமைந்தால், அந்த பெண்ணின் தாய் தந்தை பெற்றுள்ள செல்வங்கள் அனைத்தும் பெண்ணிற்கே வந்து சேரும்.

அருஞ்சொற்பொருள்:

சீவித்திடு - சீவனோடு உள்ள, தெரிவைக்கு - பெண்ணிற்கு, மெய்யினன் - உடம்பை உடையவன், ஏவுற்றமனை - உயர்வான பலன்தரும் ராசி, ஈன்றோர் - தாய் தந்தை, எய்தும் - பெற்றுள்ள

திருமண மகன் அமையும் ஊர்

ஆம் எட்டதிபன் காரியோடணுகி பதினொன்று எட்டு
அமரில் சதவயதாம் அவர் அந்தங்கதமாயின்
போம் அற்பதாய் ஆயுசு, பொன்றும் வியமன்னன்
புரிகேந்திர லாபத் திரிகோணப் பதிபுக்கில்
தாம் எத்தனை பேரோடுரில் ஆம் அத்தனை மனையாள்
தரில் அற்றிடு வியநற்பதி சரமேல் அசலூரில்
நீமத் திரமாகில் தமதூ ரகத்தே தகமணமே
நிறைவாம் உபயம் என்னிலோ நீடும் அதி தூரம். //

தொகுப்புரை:

எட்டாமிடத்திற்குடையவனோடு சனி சேர்ந்து பதினொன்று எட்டாமிடங்களில் இருந்தால் தீர்க்க வயதும்

அவர்கள் அஸ்தமயம் பெற்றிருந்தால் அற்ப ஆயுசும்

பன்னிரண்டாம் இடத்திற்குரிய கிரகம் குருவாகி அவர் லக்கினத்திற்கு கேந்திரம் லாபத்தானம் திரிகோணம் ஆகிய ராசிகளிலொன்றில் எத்தனை கிரகங்களோடு சேர்ந்து உள்ளாரோ, அத்தனையாவது மனைவியாக அமைவாள் என்பதும்,

பன்னிரண்டாம் வீடு சரமாய் இருந்தால் அயலூரிலும், ஸ்திரமானால் சொந்த ஊரிலும், உபயமானால் அதிக தொலைவிலுள்ள ஊரிலும் சாதகிக்குத் திருமணம் நடக்கும்.

அருஞ்சொற்பொருள்:

காரி - சனி, அமரில் - இருந்தால், சதவயது - நூறுவயதாம், வியமன்னன் - விரையஸ்தானத்திலுள்ள குரு, அத்தனை மனையாள் - அத்தனையாவது மனைவியாக அமைவாள்.

மாடிவீடு, பல பிள்ளைகள் உண்டு

தூரமுறும் பன்னிரண்டாம் அதிபன்தானும்
சுபக்கோளாய் பலவானாய்ச் சுகவானாயின்
பாரமனை மேன்மெத்தை மாடங்கூடும்
பரிவுடனே உண்டானஅப்பதியினிலே வாழ்வள்

சேரும் உதயம் திரமாய் ஏழு ஐந்தாம் வீட்டில்
சேர்ந்தவர் எத்தனை உண்டோ அத்தனை சேய் உண்டாகும்
பாரறியச் சென்மம் வாமியமாகின் மூன்றாம்
பதியுற்றார் எத்தனை அப்பாலருளதாகும். 12

தொகுப்புரை:

பன்னிரண்டுக்குடைய கிரகம் சுபனாய், பலம் பெற்றவனாய், பலன் தருபவனாய் அமைந்திருந்தால், மிகப்பெரிய மனையில் மேல்மாடிக் கட்டிடத்தில் தன் விருப்பம்போல் விருத்திசெய்து கொண்டு சுகமாக வாழ்வாள்.

சென்ம லக்கினம் ஸ்திரராசியாய், அதற்கு ஏழு ஐந்தாம் வீடுகளில் சேர்ந்துள்ளது எத்தனை கிரகங்களோ அத்தனை பிள்ளைகள் இப்பெண்ணுக்கு உண்டாம்.

சென்மலக்கினம் ராசி மண்டலத்தில் இடப்பக்கமாக அமைந்திருந்தால், அதற்கு மூன்றாம் இடத்தில் உள்ள கிரகங்கள் எத்தனையோ அத்தனை பிள்ளைகள் இருப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்:

அதிபன் - ராசிநாதன், சுகவானாய் - நல்ல பலனைத் தருபவனாய், பாரமனை - பெரியமனை, பரிவுடனே - விருப்பத்துடனே, அப்பதி - அந்த வீட்டில், உதயம் - சென்மலக்கினம், சேய் - பிள்ளை, பாரறிய- உலகறிய, வாமியம் - இடப்பக்கம், மூன்றாம்பதி - மூன்றாமிடம், பாலர் - பிள்ளைகள்.

பாவி, அதிரூபி, பரபோகமுடையவள்

திரு செவ்வாய் இருமனையும் சனனமதாய் அதனில்
திங்களுறவே செவ்வாய் திரியங்கிசாங்கிசமாய்
பரிவில்லாப் பாவி, சனி திரியங்கிசாங்கிசமாய்
பாலரிலாள், அடிமைப்படுவளெனச் சொல்லும்
குரு திரியாங்கிசமாகில் பதிவிரதையாகும்
குளிமதை அங்கிசம் ஆசாரம் உள்ள கோதை
வீரிவெள்ளி அங்கிசைக்கு மெய் அதிரூபியாய்
வெகுவயதாய் பரபோகம் விரும்பும் இனியவளாம். 13

தொகுப்புரை:

செவ்வாய்க்குரிய மேடம் விருச்சிகம் ஆகிய வீடுகளிலொன்று சென்ம லக்கினமாக, அதில் சந்திரன் இருக்க, லக்கினாதிபதியாகிய செவ்வாய் திரியாங்கிசம் பெற

சனியும் திரியாங்கிசம் பெற அவள் பிள்ளை பாக்கியம் இல்லாமல் அடிமையாகி இருப்பாள்.

குரு திரியாங்கிசம் பெற்றிருந்தால் அவள் சிறந்த பதிவிரதையாக இருப்பாள்.

சுக்கிரன் அங்கிசமானால் அவள் அதிக அழகுள்ள சரீரமுடையவளாய் வெகுவயதாயினும் பரபோகம் விரும்பும் இனியவளாவாள்.

அருஞ்சொற்பொருள்:

இருமனையும் - இரண்டு ராசி இடங்களும், திங்கள் - சந்திரன், குளிமேதை - குளிகன், வெள்ளி - சுக்கிரன், மெய் - சரீரம்.

கொடியவள், ஞானி, இனிய கருத்துடையாள்

இனிய வெள்ளி இருமனையும் சென்மமதாய் அதனில்
இந்து இருக்கச் செவ்வாய் அங்கிசமாயின் கொடியாள்
சனியின் அங்கிசமாகில் கணவனையும் விட்டே
சஞ்சலமாய் வேறொருவன்தனக்குப் பாரியுமாம்
நனி குருவும் அங்கிசமாகில் நற்குணமேயுள்ளாள்
நாடு புதன் அங்கிசத்தினால் வகை ஞானியுமாம்
கனிமொழியாள், சுக்கிரன் அங்கிசமாயின் தன்சொல்
கருத்தினியளாயிருப்பாள், காசினியோர் போற்ற. 14

தொகுப்புரை:

சுக்கிரனுக்கு ஆட்சி வீடுகளாகிய இடபம், துலாம் சென்ன லக்கினமாகவும், அதனில் சந்திரன் இருக்கவும் அதனுடன் செவ்வாய் இருந்தால் அவள் கொடியவளாவாள்.

அதில், சனி அங்கிசமாய் இருந்தால் அவள்தன் கணவனை விடுத்து மனக்கலக்கத்துடன் வேறொருவனுக்குப் பாரியாவாள்.

அதில், குரு அங்கிசமானால் நல்ல குணவதியாக இருப்பாள்.

அதில் புதன் அங்கிசமானால் இல்லற ஞானியாக விளங்குவாள். அன்பு மொழியுடையவளாகவும் இருப்பாள்.

அதில் சுக்கிரன் அங்கிசமாயிருந்தால், எல்லா மக்களும் பாராட்டும் அளவில், யாவருக்கும் நல்ல நெறிமுறைகளை எடுத்துக் கூறுபவளாக இருப்பாள்.

இனியவள், குணவதி, பலரைச் சேர்பவள்

போற்று புதன் இருமனையும் சன்மமதாய் அதனில்
புனிதமதியே இருக்கப் பூசுதன் அங்கிசமாய்
ஏற்றதாய் வேலைசெய்வள், சனி தன் அங்கிசையாய்
இருப்பள் அலிவடிவாக, குருவாகில் இனியாள்
நாற்றிசையென்னும் புதன் அங்கிசை தனக்கேஞானி
நாடு சுங்கன் அங்கிசைக்கு குணமுமுள்ளாள்
தேற்று கடகம் சென்மமதாய் திங்கள் இருக்கச்
செவ்வாய் அங்கிசமாயின் சேர்வள் பலருடனும் 15

தொகுப்புரை:

புதனுக்குரிய மிதுனம் கன்னி ஆகிய இரண்டு வீடுகளிலொன்று சென்மலக்கினமாகவும், அதில் சந்திரன் இருக்க செவ்வாயின் அங்கிசமாயின், மேலான வேலைகளைச் செய்வாள்.

சனியின் நவாம்சமானால் அலிவடிவாக இருப்பாள்

குரு அங்கிசையாயின் இனியவளாக இருப்பாள்.

புதன் அங்கிசையாயின் ஞானியைப்போல் விளங்குவாள்.

சுக்கிரன் அங்கிசையாயின் குணமுள்ளவளாக இருப்பாள்.

கடக லக்கினமாக இருந்து அதில் சந்திரன் இருக்க செவ்வாய் அங்கிசமாயின் கடகத்தின் நவாமிசமாக உள்ளவற்றில் செவ்வாயின் அமிசமாக அமைந்தால் பலருடன் சேர்பவளாக இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

புனிதமதியே - நல்ல சந்திரனே, பூசுதன் - பூமி தேவியின் மைந்தன், பூமிகாரகன் செவ்வாய், அலி - ஆண்பெண் கலந்த வடிவம், சுங்கன் - சுக்கிரன்.

கோபி, சிற்பி, சாது, குணமினியள்

உடன்கடகம் சென்மமதாய் அதில் இந்தும் இருக்க
உயர்சனி அங்கிசையாயின் உறுகணவன் தனையே
திடமுடனே கொல்வதற்குச் சினமாகி இருப்பள்
சேர் புதன் அங்கிசந்தனக்கே சிற்பத் தொழில் செவ்வாள்
அடல் குருவும் அங்கிசையாகில் குணமினியாள், வெள்ளி
அங்கிசையாகில் சாதுவாகியுமே இருப்பள்
மடமயிலே கேள், அங்கிசை என்று உரைத்த வெல்லாம்
வரும் திரங்கிசாங்கிசையாய் மனத்தில் கண்டு உணர்வாய். 16

தொகுப்புரை:

கடகம் சென்மமாய், அதில் சந்திரனிருக்க சனி அங்கிசமானால் கணவனைக் கொல்வதற்கு திடமான கோபத்துடன் இருப்பவளாவாள்.

புதன் அங்கிசமானால் சிற்பத் தொழில் செய்பவளாவள்

குரு அங்கிசையாகில் குணம் பெற்றவளாக இருப்பாள்

சுக்கிரன் அங்கிசமானால் சாதுவாகி இருப்பாள்

மயில் போன்ற பெண்ணே கேள்!

அங்கிசை என்று மேலே சொன்னதெல்லாம், ஸ்திரங்காங்கிசம் என்று மனத்தில் கண்டு உணர்வாயாக.

அருஞ்சொற்பொருள்:

இந்து - சந்திரன், உறுகணவன் - தனது கணவன், சினமாகி - கோபமாகி, வெள்ளி - சுக்கிரன்.

அரசதேவி, ஊழிய அடிமை

உணர் சிங்கம் சென்மமதாய் அதில் இந்து இருக்க
உயர் செவ்வாய் அங்கிசை அனாசாரி
பிணி சனி சுங்கன் இருவர் அங்கிசமேயாயின்
பிறர்முகம் பார்ப்பாள், அரசன் பின்னுறும் அங்கிசைக்கு

தனி அரசர்க்கே தேவிதானாகி இருப்பள்
தக்க புதன்அங்கிசைக்கே சரீரவருத்தமுமாய்ப்
பணிபலவும் செய்தொருவருக்கே அடிமையாகிப்
பரதவித்தே இருப்பளெனப் பகர்வர் தக்கோரே. 17

தொகுப்புரை:

சிங்க ராசி சென்மராசியாகி அதில் சந்திரன் இருக்க, செவ்வாய் அங்கிசையானால், நன்னடத்தை இல்லாதவள்

சனி சுக்கிரன் அங்கிசையாயின் பிறர்முகம் பார்ப்பாள்

புதன் அங்கிசமாயின் ஒருவருக்கு அடிமைப்பட்டு வருந்தி பல ஊழியங்கள் செய்து ஒருவர்க்கே அடிமையாகி, மனம் தத்தளித்து இருப்பள் என்று பெரியோர் சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

சிங்கம் - சிங்கராசி, இந்து - சந்திரன், அனாசாரி - முறைகேடான பழக்கமுடையவள், அரசன் - குரு.

வெகுகாமி, நற்குணத்தாள், மெய்ஞ்ஞானி

தக்க தனு மீனம் இவையே சன்மமாகிச்
சந்திரன்அப்பதியிலுறத்தான்குரு செவ்வாயின்
மிக்க திரியாங்கிசமே ஆகிடில் நற்குணத்தாள்
வீறு சனி அங்கிசமேல் வெகுகாமியாவாள்
சுக்கிரன்அங்கிசையாகில் அரோசிகமாம்புருடன்
தோளணைவள், சோமனார் சுதனாங்கிசைக்குப்
பக்குவ மெய்ஞ்ஞானியாய்ச் சுபகர்மங்கள்
பண்ணுவள்என்றேயுரைப்பர் பாரினில்நல்லோரே. 18

தொகுப்புரை:

தனுசு மீனம் ஆகிய குருவின் ராசிகளில் ஒன்று சென்மலக்கினமாய், அதில் சந்திரன் இருக்க, குரு செவ்வாய் திரியாங்கிசம் பெற்றால் நற்குணம் உள்ளவளாக இருப்பள்.

அதில், சனி அங்கிசமானால் வெகு காமியும்

சுக்கிரன், அங்கிசமானால் தனது அருவருப்புக்குடைய புருடனிடம் மனமில்லாது சேர்பவளாக இருப்பாள்.

அதில் உள்ள சந்திரனோடு புதன் அங்கிசை யானால் மனத் தெளிவமைந்த மெய்ஞ்ஞானியாக இருந்து பலவகையான நல்ல காரியங்களைச் செய்பவளாவள்.

என்றே உலகில் நல்லவர்கள் தெளிவாகச் சொல்லுங்கள்.

அருஞ்சொற்பொருள்:

தனு - தனுசு ராசி, ஆகிடில் - அவ்வாறு அமைந்தால், அரோசிகமாம் புருடன் - அருவருக்கத்தக்க சரீரமும் செயலும் உள்ள புருஷனிடம், சுமன் - புதன், சோமனார் சுதன் - சந்திரனுக்கு மகனெனும் புதன்.

தாதி, கீழ்ச்சாதியனை மணப்பாள்

நல்லசனி வீடிரண்டும் லக்கினமாய் அதனில்
நாடு புதன் தந்தையுயறக் குசனாரங்கிசையேல்
அல்லலுறும் தாதியாம், காரியின் அங்கிசமாய்
அவனியில் கீழ்ச்சாதியரோடு அணுகி மணந்திடுவள்
வல்ல குரு அங்கிசைக்கே பதிவிரதையாவாள்
மகிழ் வெள்ளி அங்கிசைக்கே மலடியாவாள்
சொல்வரிசைப் புதனார் அங்கிசமானால் எப்போதும்
சுகமுடனே கணவனுடன் தோயுமனப்பரிவாள். 19

தொகுப்புரை:

சனியின் வீடுகளாகிய மகரம் கும்பம் இவை செனனலக்கினமாக, அதில் சந்திரன் இருக்கவும் செவ்வாய் அங்கிசமானால், சாதகியானவள் நிலையில்லாது பலவகையில் அல்லல்படும் வேலைக்காரியாக இருப்பாள்.

சனி அங்கிசமாயின், ஊரில் கீழ்ச்சாதியரோடு பழகி கீழ்ச்சாதியானொருவனை மணந்திடுவள்.

குரு அங்கிசையாயின், பதிவிரதையாக இருப்பாள்.

சுக்கிரன் அங்கிசையாயின் மலடியாய் இருப்பாள்.

புதன் அங்கிசமானால் எக்காலத்திலும் சுகத்துடன் தனது கணவனோடு கூடியிருக்கும் மனவிருப்பத்தை யுடையவளாவாள்.

அருஞ்சொற்பொருள்:

புதன் தந்தை - சந்திரன், குசனார் - செவ்வாய், தாதி - பணிப்பெண், அணுகி - நெருங்கி, தோயுமே - சேர்ந்திருக்கும்.

கணவன் நிலைமை, கணவன் இகழ்வான்

பரிவாகச் சனி புதன் ஏழாம் இடத்தினில் நிற்கப்
பயில் குருவுக்கு ஏழ்வீடு பரவு சரமாகில்
திரிவள் அவள் பர்த்தா எந்நாளும் வழி நடந்தே
திரராசிக்கு ஊரைவிட்டுச் செல்லாமல் இருப்பன்
வருராசி உபயமுமாய் சிலநாள் ஊரினிலும்
வழிநடையில் சிலநாளும் வருந்தியுமேதிரிவன்
அரி ஏழாம் இடத்திருக்கப் பாவருமே பார்க்கில்
அவள்மீதில் கொழுநனுக்கு அன்பின்றி இகழ்ந்திடுவன் 20

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு ஏழாமிடமான களத்திரத் தானத்தில் சனியும் புதனும் இருக்கவும்

குரு நின்ற ராசிக்கு ஏழாம் வீடு சரராசியானால், சாதகியின் கணவன் எந்நாளும் நிலையில்லாது வழி நடந்து திரிந்து கொண்டு இருப்பான்.

அந்த ஏழாம் வீடு உபயராசியானால், கணவன் சிலநாள் ஊரிலும் வழிநடையில் சிலநாளும் வருத்தப்படுப வனாகத் திரிவான்.

சூரியன் அல்லது சந்திரன் ஏழாமிடத்திலிருக்க பாவகிரகங்களின் பார்வை அவர்களுக்கு உண்டானால் சாதகியின் புருஷன் அவள்மீது அன்பில்லாது இகழ்ந்து பேசுபவனாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

பரிவாக - விருப்பமாக, பர்த்தா - புருஷன், வழிநடையில் - பயணநடையில்

அமங்கலை, நரைக்கும், பிறர்பாரியாள்

இடு செவ்வாய் கதிர்கூடி எங்கே நின்றாலும்
இவளும் வாலிபந்தன்னில் அமங்கலையேயாவாள்
வடுவாகும் சனி கதிரைக் கூடியே நிற்கில்
மன்னிய தீக்கோள் பார்க்க வாலிபத்தில் நரைக்கும்
கொடுமையுள்ளோர் பலர் ஏழாமிடத்திருக்கில் பார்க்கில்
கொழுநன் வாலிபத்தில் இறப்பன், கொடியர் நல்லோர் கூடில்
சடுதியில் மீண்டு ஒருவனுக்கே பாரியுமேயாகித்
தானிருக்க வேண்டுமெனவே சாற்றல் வேண்டும்.

தொகுப்புரை:

செவ்வாயும் சூரியனும் கூடி லக்கினத்திற்கு எங்கே இருந்தாலும் சாதகி வாலிபவயதில் விதவையாவாள்.

இவ்வாறே, சனியும் சூரியனும் கூடி எங்கே இருந்தாலும், அவர்களைப் பார்க்க சாதகிக்கு வாலிபத்திலேயே நரைக்கும்.

பாவகிரகங்கள் பலர் கூடி ஏழாமிடத்தில் இருந்தாலும் பார்த்தாலும் இவள் கணவன் வாலிபத்தில் இறப்பான்.

பாவிகளும் சுபகிரகங்களும் சேர்ந்து ஏழில் இருந்தால் மீண்டும் வேறொருவனுக்கே பாரியையாகி இருக்கவேண்டுமென்றே சொல்லவேண்டும்.

அருஞ்சொற்பொருள்:

வடுவாகும் சனி - குற்றப்படும் சனி, கதிர் - சூரியன், தீக்கோள் - பாவகிரகங்கள், கொடுமையுள்ளோர் - பாவிகள், சடுதியில் - விரைவில், பாரியை - மனைவி.

கணவன் ஓட்டி விடுவான்
வேறொருவனிடம் இருப்பாள்

வேண்டிடும் பாவக்கிரகம் பலன்களுமே இன்றி
வீரும்பும் ஏழிடத்திருக்க அவரையுமே நல்லோர்
எண்டியேதான் பார்க்கில் அக்கணவன் வேண்டாது
இகழ்ந்து ஓட்டி விட்டிடுவனே, இன்னஞ்சொல்வாம் 6

நீண்ட குசன் வெள்ளியும் தன் அங்கிசத்தில் நிற்க
நிகழ்த்தும் இவர் மாறாகி நிற்கிலும் அவ்வீடு
பூண்டிடும் ஏழாமிட மேயாகில், அவள் வேறோர்
புருடனையே இச்சித்துப் போய்விடுவாள் என்றார். 22

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் பாவகிரகங்கள் பலமில்லாமல் இருக்க, அவர்களைச் சுபகிரகங்கள் பார்த்தால், அவளது கணவன் அவளை வேண்டாது கேவலமாகப் பேசி வெளியே விரட்டி விடுவான். மேலும் சொல்வது யாதெனில்,

செவ்வாயும் சுக்கிரனும் தனது அங்கிசத்தில் நின்று பலன் செய்யும் இவர்கள், ஒருவர் அங்கிசத்தில் ஒருவர் மாறாகி நின்றாலும், நிற்கும் வீடு ஏழாமிடமாகவும் அமையுமேயானால் அவள் வேறோர் புருஷன் மேல் இச்சைப்பட்டு போய்விடுவாள் என்று சோதிடர் கூறுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

விரும்பும் - களத்திரத்தைப் பற்றி அறியும், ஈண்டியே பார்க்கில் - முழுப் பார்வையால் பார்த்தால், குசன் - செவ்வாய், மாறாகி - ஒருவரிடத்தில் ஒருவர் மாறாகி,

மலடி, அவளும் தாயும் பலரைச் சேர்வர்

என்றும் ஏழாமிடத்தில் சனி செவ்வாய் சோமன்
இந்த மூவரும் கூடி இருக்கில் அவம்போவள்
வென்ற சனி செவ்வாயின் வீடே லக்கினமாய்
வீரகு குசன் அங்கிசமாகச் சென்மந்தன்னில்
துன்றும் இருளகற்றும் மதி சுக்கிரனுமிருக்கச்
சூழ்ந்து தீக்கோள் பலரும் தொடர்ந்துமே நோக்க
நின்றிடிலோ மலடியாம் அவளும் அவள் தாயும்
நேமிதனில் பலபேரை நேசித்தே சேர்வள். 23

தொகுப்புரை:

ஏழாமிடத்தில் சனி செவ்வாய்சந்திரன் ஆகிய மூவரும் கூடி இருந்தால் அவள் சோரம் போவாள்,

சனி செவ்வாய் வீடுகளாகிய மகரம் கும்பம், மேஷம், விருச்சிகம் இவைகளிலொன்று சென்ம லக்கினமாக, அதில் செவ்வாய் அங்கிசமாக அந்த சென்மத்தில் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருக்கவும் அவர்களைப் பாவகிரகங்கள் பல இடங்களிலிருந்து பார்க்கவும் அல்லது கூடி நிற்பவும் சாதகம் அமைந்திருந்தால் அவள் மலடியாவள், மற்றும்

அவளும் அவளது தாயும் பலபேரை நேசித்துப் புணரும் குணம் உடையவராவர்.

அருஞ்சொற்பொருள்:

சோமன் - சந்திரன், அவம்போவாள் - சோரம் போவாள், இருளகற்றும் மதி - இருளை நீக்கி ஒளி தரும் சந்திரன், நேமிதனில் - உலகத்தில், சேர்வள் - புணருவார்கள்.

அழகி, கணவனுக்கு இனியள், கணவன் கிழவன்

சேருதய லக்கின அங்கிசத்திற்கு ஓரேழில்
செவ்வாய் சனி இருவர் சேர்ந்துமே நிற்க
நாரி பதந்தனில் பிணிகொண்டிருந்து பரதவிப்பாள்
நாடுமிவர் நல்லோர்கள் அங்கிசையில் நன்றாம்
பாரியதோர் இடை தொடைகள் சோபனமுள்ளவளாய்
பர்த்தாவின் இதயத்தில் பக்ஷமுற இருப்பள்
சாரும் உதயந்தனக்கு ஏழு சனி வீடதாகில்
தாலிதரிப்பவன் கிழவன், சற்குணமில்லானே. 24

தொகுப்புரை:

சென்ன கால லக்கின அங்கிசத்திற்கு ஏழாமிடத்தில் செவ்வாயும் சனியும் சேர்ந்து இருந்தால், சாதகி கால்நோய் கொண்டு மிகவும் பரிதவித்து வருந்துவாள்.

மேலே சொல்லப்பட்ட செவ்வாயும் சனி இருவரும் சுபகிரகங்களின் அங்கிசையில் இருந்தால் நல்லன உண்டாகும், பாரித்து இடையும் தொடைகளும் உள்ள அங்க லட்சணத்தோடு கணவனுடைய மனத்தில் விருப்பமாக இருப்பாள்.

அமைந்த சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடம் சனி வீடாக அமைந்தால் இவளுக்குத் தாலிகட்டுபவன் கிழவனாகவும் குணக்கேடனாகவும் இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

லக்கின அங்கிசத்திற்கு - சென்ன கால லக்கினம் பொருந்திய ராசிக்கு, நாரி - சாதகி, பதந்தனில் - காலில், பாரிய - அழகுடன் திரண்ட, சோபனம் - அழகு, பர்த்தா - கணவன், பக்ஷம் - விருப்பம், தாலிதரிப்பவன்- தாலி கட்டும் மணமாப்பிள்ளை.

கணவன் ஸ்திரீலோலன், அழகன்
பெண்ணாசையான்

சற்குணஞ்சேர் லக்கினத்துக்கு ஏழாகும் ராசி
தரைசுதன் வீடாகி, அவன் தன்னுடைய அங்கிசையால்
சிற்குணமாய் அவள் கணவன், ஸ்திரீலோலனாவான்
செறி பிருகு ராசியாய் அங்கிசமே சேரில்
நற்குணஞ்சேர் சீமானாய் அழகுடையனாவான்
நாடு புதன் அங்கிசையாய் ராசியுமேயாகில்
சொற்கலை ஞானியுமாவன், சோமனுமே ஆகில்
தோகைப் பலருடன் கூடிச் சுகித்து வாழ்ந்திருப்பன். 25

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திற்கு ஏழாம் வீடு செவ்வாயின் வீடாய் அதில் செவ்வாய் அங்கிசமானால் அவள் கணவன் பெண்ணாசை பிடித்த சிற்றின்ப காமுகனாவன்.

ஏழாம் இடம் சுக்கிரனது ராசியாய் சுக்கிரன் அங்கிசமானால் நற்குணமுள்ள செல்வனாகவும் அழகுடையவனுமாக இருப்பான்.

ஏழாமிடம் புதன் வீடாகவும் அதில் புதன் அங்கிசையாகவும் இருந்தால், அவள் கணவன் புலவனும் ஞானியுமாவான்.

ஏழாமிடத்தில் சந்திரன் இருக்கவும் அதுவே சந்திரனுக்குரிய ராசியாகவும் அமைந்தால் அவள் கணவன் பலபெண்களுடன் கூடி சிற்றின்பத்தையே சுகிப்பவனாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

சற்குணம் - நல்ல குணம், தரைசுதன் - செவ்வாய், தரை - பூமி, சுதன் - மகன், சிற்குணம் - அற்பகுணம், பிருகு - சுக்கிரன், சொற்கலை - புலமை, சோமன் - சந்திரன், அங்கிசை - ஒரே ராசியில், இடத்தில் சேர்ந்திருத்தல்.

கிழப்புருடன் அமைவான்

இந்து அசுரகுருவுடனேஏழில் இருக்கக் கிழப்புருடன்
வந்தே பெல்லார் எழிலுற விதவையாவாள் வாலிபத்தில்
தொந்தே கும்பம் தேள் மேடம் துவளும் சுறாமீன் லக்கினமாய்
பந்த மதியும் புகர் கூடின் பாவர் பார்க்கில் விபசாரி. 26

தொகுப்புரை:

சந்திரனும் சுக்கிரனும் ஏழாமிடத்திலிருந்தால் அவள் கிழவனை மணப்பாள்

அந்த ஏழாமிடத்தில் பாவக்கிரகங்கள் இருந்தால் வாலிபத்தில் விதவையாவாள்.

கும்பம், விருச்சிகம், மேடம், மகரம், மீனம் இவை சென்ம லக்கினமாக அவற்றில் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருக்க, அவர்களைப் பாவகிரகங்கள் பார்த்தால் விபசாரியாவாள்.

அருஞ்சொற்பொருள்:

இந்து - சந்திரன், அசுரகுரு - சுக்கிரன், தொந்தே - தொடர்ந்த, பந்தமதி - சேர்ந்த சந்திரன், புகர் - சுக்கிரன்.

கும்பம், தேள் மேடம், சுறா, மீன் லக்கினமாய் என்பதற்கு, இவற்றில் ஏதாவதொரு ராசி சென்ம லக்கினமாகவும் என்று கொள்ள வேண்டும். பிற இடங்களிலும் இவ்வாறே பாகுபடுத்திக்கொள்ளவும்.

சுமங்கலியாக இறப்பாள்

சார எட்டில் பாவர்களும்தானும் இருக்க இரண்டினில்
ஏரும் சுபர்கள் இருந்திட ஓங்கு மரணம் சுமங்கலியாய்
நேரும் ஏழாமிடந்தானும் நிறைந்த புகரின் மனைவியாயின்
பாரோரறிய அனுகூலப் பாவையாவள் கண்டீரே!

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடமாகிய மாங்கல்யஸ்தானத்தில், பாவகிரகங்கள் இருக்கவும், இரண்டாமிடமாகிய குடும்ப பாக்கியஸ்தானத்தில் சுபகிரகங்கள் இருப்பாராயின் இவளுக்கு நீண்ட வயதில் சுமங்கலியாக இறப்பாள்.

ஏழாமிடமாகிய களத்திரஸ்தானமானது நிறைந்த சுக்கிரனுடைய சொந்த வீடாக அமைந்திருந்தால் உலகோர் அறிய பலருக்கும் உபகாரம் செய்யும் அனுகூலப் பெண்ணாக இருப்பாள் என்பதைக் காண்பீராக.

அருஞ்சொற்பொருள்:

சார - பொருந்திய, ஏரும் - நலமான, ஓங்கு மரணம் - நீண்ட வயதில் வரும் மரணம், புகரின் - சுக்கிரனின், அனுகூலம் - இரக்கமுடன் உதவி செய்தல், பாவை - பெண்.

கணவனின் தகுதிகளைக் காணல்

கண்ட ஏழாம் மனை உரைக்கும் கதிரோன் மனையாய் இருந்திடவே
மிண்டே சொல்வான் அவள் கணவன், வினவும் பரிதி அதிலிருந்தால்
கொண்டோன் ஓட்டிவிடுவான் எனக்கூறும், புதனின் மனையாயின்
பண்டே புலவராவர், குரு பண்பாம் மனையிற் குணவானே. 28

தொகுப்புரை:

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்தினைக் கொண்டு சொல்லப்படும் பலன்கள்.

அந்த ராசி சூரியனின் வீடாக இருந்தால், அவள் கணவன் அவளைத் தகாத வார்த்தைகள் பேசி நலியச் செய்பவனாக இருப்பான்.

அந்த ஏழாமிடமாகிய சூரியனின் ராசியில் அதாவது சிம்ம ராசியில் சூரியனே ஆட்சிபெற்றிருந்தால், அவளைக் கொண்ட கணவன் இல்லாத தெல்லாம் பேசி அவளை வீட்டை விட்டே ஓட்டிவிடுவாள் என்று கூறும்,

அந்த ஏழாம் வீடு புதனின் இடமானால் அவள் கணவன் கல்வியில் சிறந்த புலவர் வழியில் வந்தவனாவான்.

அந்த ஏழில் குரு இருந்தாலோ அவர் ராசியாகவோ இருந்தால் கணவன் குணவானாக அமைவான் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

மனை - ராசியிடம், கதிரோன் மனை - சிம்மராசி, மிண்டே - தகாத வார்த்தை, பரிதி - சூரியன், புதனின் மனை - மிதுனம், கன்னி.

சென்ம லக்கினத்திற்கு ஏழாமிடத்தைக் கொண்டு களத்திர விபரம் கூறப்பட்டுள்ளது காண்க.

கணவன் யாத்திரை போவான்

குணமாம் ஏழில் பாவர்களும் கூடிப் பலன்கள் அற்றிடவே
மணமார் நோக்கம் உற்றதனால் மகிழ்நன் அழகில்லாதவனே
இனமார் ஏழே சரமனையாய் இருக்க அதிபன் சரத்திலுற
சினமே சராங்கிசை யாத்திரையாம் திரமேயாகில் தீர்க்கமுளான். 29

தொகுப்புரை:

ஏழாமிடத்தில் பாவகிரகங்கள் கூடிப் பலன்களில்லா திருக்கப் பிறந்தவன் இவள் புருஷன் அழகில்லாதவனாவான்.

அந்த ஏழாமிடம் சரமாகவும் அதற்குரிய கிரகம் சரத்தில் இருக்கவும் அது சர அங்கிசையாய் இருந்தால் கணவன் யாத்திரை போவான்.

அந்த ஸ்தானம் ஸ்திரமானால் கணவன்தீர்க்க வயதுள்ளவனாக இருப்பான்.

அருஞ்சொற்பொருள்:

மணமார் நோக்கம் - நல்லோர் பார்வை, மகிழ்நன் - கணவன், அதிபன் - ராசிக்குரிய கிரகம், தீர்க்கமுளான் - நிறைந்த வயது பெற்றிருப்பான்.

பரபுருட இச்சையுடையவள்

தீர்த்தம் ஏழில் சனி செவ்வாய் செறிந்தால் வீதவை, வாலிபத்தில்
நீர்த்த ஏழில் சுபர் பாவர் நின்றால் கமனம் பரபுருடன்
ஊர்த்த லக்கினம் முப்பாகம் உறைந்தால் திரியங்கிசாதிபதி
ஏர்த்த பலன்கள் ஸ்திரீகளுக்கும் இயல்பாய் அறிந்தே உரைத்திடுக. 30

தொகுப்புரை:

களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தில்

சனி செவ்வாய் இருவரும் இருந்தால் பாலியத்தில் விதவையாவாள்

அந்த ஏழாமிடத்தில் சுபகிரகங்களும் பாவிகளும் கலந்திருந்தால், பரபுருடர்கள் மீது இச்சையுடையவளாவாள்.

சென்ன லக்கினத்திலிருந்து மும்மூன்று ராசிகளாக உள்ள 3, 6, 9, 12 ஆகிய கிரகங்களையும் அறிந்து, பெண்களுக்கு உரிய களத்திர விபரங்களை இயல்பாக அறிந்து சொல்லுங்கள்.

அருஞ்சொற்பொருள்:

தீர்த்தம் - தெளிவானதான, கமனம் - காம இச்சை, லக்கினம் - லக்கினத்திலிருந்து, ஏர்த்த - பொருந்திய.

பிள்ளைகள் மரிக்கும்

உரைக்கும் கதிர் மதியம் அங்கிசையால் ஓங்கும் தன்னில் விபசாரி
நிரைக்கும் செவ்வாய் தானாகில் நீண்ட லக்கினம் அவ்வீடாய்
மரிக்கும் பிள்ளையுள்ளதெல்லாம், வாழும் புந்தியங்கிசையில்
நரைத்த கிழவியானாலும் நாடும் கமனம் பரபுருடன். 31

தொகுப்புரை:

சென்ன லக்கினத்திலோ ஏழாமிடத்திலோ சூரியன் சந்திரன் அங்கிசையானால் விபசாரியாவாள்.

செவ்வாய் அங்கிசமான லக்கினமும் அந்த வீடாக அமைந்தால் இவளுக்குப் பிறக்கும் பிள்ளைகளெல்லாம் இறக்கும்.

புதன் அங்கிசமானால் அவள் கிழவியானாலும் பிற ஆண்களின் சேர்க்கையை நாடுபவளாக இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

கதிர் - சூரியன், மதியம் - சந்திரன், புந்தி - புதன், கமனம் - காம இச்சை, பரபுருடன் - பிற ஆண்கள்.

பரபுருட கமனம் செய்வாள்

புருடக்கிரகம் குரு அங்கிசையில் பிறந்தால் மகவும் தனமுண்டாகும்
குருடப் புகரின் அங்கிசையால் கூறும் யோகம் தனமுளதே
வருடக் காரி அங்கிசையில் வளரும் சனிவீடே லக்கினமாய்
திருடிக்கமனம் பரபுருடன்சிந்தை நோக்க வரும்பலமே. 32

தொகுப்புரை:

சென்ன காலத்தில் ஆண் கிரகங்கள் குரு அங்கிசையில் இருக்கப் பிறந்த சாதகிக்கு பிள்ளைகளும் செல்வமும் உண்டாகும்.

ஆண் கிரகங்களாகிய சூரியன் செவ்வாய், குரு ஆகியவை சுக்கிரனது அங்கிசம் பெற்றிருந்தால் சம்போக சுகமும் செல்வமும் உண்டு.

ஒரு ராசியில் இரண்டரை வருடம் இருந்து மாறிவரும் சனியின் வீடாகிய மகரம் கும்பம் சென்ன லக்கினமாகவும் அதில் புருடக்கோள்கள் சனி அங்கிசமும் பெற்று இருந்தால், பிறர் அறியாத திருடியாய் பிற ஆண்களைப் புணரும் சிந்தையுடையவளாய் செயல்படுபவளாக இருப்பள்.

அருஞ்சொற்பொருள்:

புருடக்கிரகம் - ஆண்கிரகங்கள், மகவு - குழந்தை, காரி - சனி, சிந்தை - மனம்.

பெண்களுக்கு 7, 8, 9 ஆம் இடங்கள்

பலன்கள் உரைக்கும் ஸ்திரீகளுக்குப் பகரும் எட்டாம் இடம் விதவை
துலங்கும் ஏழாம் இடந்தன்னால் சுகமும் மகிழ்நன் பலமறியப்
பிலங்கொள் லக்கினம் அழகறிந்து பேசும், ஒன்பான் புத்திரரும்
தலங்களறிந்தே மிகவுரைப்பார்தானும் கணித வல்லாரே. 33

தொகுப்புரை:

பெண்களுக்கு லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் மாங்கல்ய பலனும்,

ஏழாமிடத்தில் சுகபோகம் கணவன் ஆகிய பலனும்

லக்கினத்தில் பிறப்புடன் சரீர அங்க அழகும்

ஒன்பதாமிடத்தால் புத்திரபாக்கியமும்

ஆகியவற்றை சோதிடக் கணிதத்தில் வல்லவர்கள் ராசி அதன் அம்சம், உள்ள கிரகம், அதன் பார்வைகள் ஆகியவற்றை நன்கு அறிந்தே உரைப்பார்கள்.

அருஞ்சொற்பொருள்:

பகரும் - சொல்லப்படும், மகிழ்நன் - களத்திரனாகிய புருஷன், பிலங்கொள் - திட்டமான பலனைக் கொண்டுள்ள, தலங்கள் - ராசி இடங்கள்.

ஆண் வடிவம் பெற்றிருப்பாள்

வல்ல மதியம் இவள் சன்மம் வருமேல் ஸ்திரீகள் மனையாயின்
நல்ல சுருபம் நோக்கு முறை நாடும் வடிவும் ஆபரணம்
சொல்லும் இவ்வீடு இரண்டு ஒற்றை தோன்றப் புருடக்கிரகம்
ஒல்கிப் பார்க்கப் புருட வடிவுற்றே இருக்கும் இவள்தனக்கே. 34

தொகுப்புரை:

சன்மத்தில் சந்திரன் இருக்க அது ஸ்திரீவீடாயின் சுபரும் பார்த்தால் நல்ல சரீரவடிவம் ஆபரணங்களும் உண்டாகும்.

சென்ன ராசியானது இரட்டை ராசியான பெண் ராசியானாலும் ஆண் ராசியானாலும், புருடக் கிரகங்களாகிய சூரியன், செவ்வாய், குரு இவர்கள் பார்த்தாலும் சேர்ந்தாலும்

அவள் ஆண்வடிவத்தினைப் பெற்றிருப்பாள் என்பதாகும்.

அருஞ்சொற்பொருள்:

மதியம் - சந்திரன், வடிவு - சரீர வடிவம், சொல்லும் இவ்வீடு - பெண்களுக்குப் பலன் சொல்லுதற்குரிய 1, 7, 8,9 ஆகிய வீடுகள், புருட வடிவு - ஆண்வடிவம்.

பெண்கள் ராசி: இடபம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் - 6 ராசிகள். மற்றைய 6 ராசிகள் ஆண் ராசிகளாகும்.

வயதாகியும் வாழ்க்கைப்படாள்

தனமார் குரு சுக்கிரர் சென்மந்தன்னைச் சந்திர லக்கினத்தை
முனமே நோக்க வாலிபத்தின் முற்றும் போக நன்மணமும்
தனிசூழ் மதி லக்கினத்தைச் சனிசேர் பாவர் நோக்கமுற
மனமேசலிக்க தலைநரைத்து வாழ்க்கைப் படாள் இம்மானிலத்தே. 35

தொகுப்புரை:

குரு சுக்கிரர் சென்ம லக்கினத்தையும், சந்திரா லக்கினத்தையும் பார்த்தால், அவள் வாலிபத்தில் விவாகமாகி போக பாக்கியங்களைப் பெற்றிருப்பாள்.

சந்திரா லக்கினத்தை, அதாவது சந்திரன் நிற்கும் ராசியை, சனி செவ்வாய் ஆகிய பாவிகள் பார்த்தால்,

அவள் மனம் சலிப்படைந்து தலையும் நரைத்து, வயதும் ஆகிய நிலையிலும் ஒருவனுக்கு வாழ்க்கைப்படாத அவல நிலையில் உலகில் இருப்பாளென்று கூறுவதாகும்.

அருஞ்சொற்பொருள்:

தனமார் குரு - சுபராகிய குரு, முனமே - சென்ன காலக்கணிப்பிலேயே, சனி சேர் பாவர் - சனி, செவ்வாய், ராகு, கேது ஆகிய பாவர்கள், சலிக்க வெறுப்படைய, வாழ்க்கைப்படாள் - கல்யாணம் ஆகாமல் இருப்பாள்.

விபசாரியாவாள் – அறிந்து சொல்

மானேகங்கன் செவ்வாயின் மனையிருக்க மதிதானும்
ஊனச்சனியின் வீட்டிலுற, ஓங்கும் பாவர் மிகநோக்கி
தானே இவர்கள் லக்கினத்தில் தரித்தால் இவளும் விபசாரி
தேனேய் மொழியாய் சுரிகுழலின் சிந்தை அறிந்து சொல்லுகவே. 36

தொகுப்புரை:

தேனைப் போன்ற இனிய மொழிகளைப் பேசும் பெண்ணே, மான் போன்றவளே கேள்!

சுக்கிரன் செவ்வாயின் வீட்டில் இருக்கவும், சந்திரன் சனியின் வீட்டில் இருக்கவும், பாவகிரகங்கள் இவர்களைப் பார்ப்பதாக அமைந்திருந்தாலும்

அல்லது, சென்ன லக்கினத்தில் செவ்வாய் சனி இவர்கள் இருக்க, இவர்களைப் பாவகிரகங்களாகிய சூரியன் ராகு கேது ஆகியோர் பார்ப்பதாக அமைந்திருந்தால், சாதகியானவள் விபசாரம் செய்யுந்தன்மை உடையவளாக இருப்பாள்.

இந்தப் பலனை சாதகியின் மனத்தை அறியும் ராசியினைக் கொண்டு அளவிட்டு அறிந்து சொல்லுக.

அருஞ்சொற்பொருள்:

சுங்கன் - சுக்கிரன், மனை - ராசி, மதி - சந்திரன், ஓங்கும் பாவர் - முழு பாவகிரகங்கள்.

அழகும் சுகமும் உள்ளவள்

சொல்லும் நவாங்கிசைக்கு ஏழ்மனையும் தொடரும் செவ்வாய்
மனையுளதாய்
வல்ல சனியும் இருந்திடவே வருமே யோனி ரோகமுடன்
நல்ல மதியும் சுக்கிரனும் நயந்தே கூடி லக்கினத்தில்
அல்லலுறவே இருந்ததனால் அழகும் சுகமும் உண்டாகும். 37

தொகுப்புரை:

அம்சராசி, சக்கர லக்கினத்திற்கு ஏழாம் ராசியானது செவ்வாயின் வீடாக அமைய, அவ்வீட்டில் வல்லமை பொருந்திய சனியும் இருந்தால் சாதகி யோனி ரோக முடையவளாக இருப்பாள்.

குறையில்லாத சந்திரனும் சுக்கிரனும் நட்புடன் கூடி நவாம்ச லக்கினத்தில் இருக்கவும், அவ்விருவரும் சுபகிரகங்களாகவும் சுபர்களால் பார்க்கப்படுபவராகவும் இருக்கப் பிறந்தவள் நல்ல அழகு உடையவளாகவும் சுகங்களை அனுபவிப்பவளாகவும் இருப்பாள்.

அருஞ்சொற்பொருள்:

ஏழ்மனை - ஏழாவது ராசியிடம், நயந்தே கூடி - நட்புடன் சேர்ந்து, அல்லறவே - குறைவுகள் பெறாமல்

பண்டிதை, கணவனிடம் அன்புடையவள்

உண்டாம்மதியும்புதனிருவர்உற்றசென்மத்துஇருந்திடவே
பண்டேவித்துவத்தன்மையுள்ளாள்என்றும்பகர்வர்மறைவல்லோர்
'கண்டேபுதனும்சுக்கிரனும்காணும்லக்கினம்உற்சாகமாக
கொண்டமகிழ்நன்பிரியமெனக்கூறும்சௌரியம்உள்ளவளே. 38

தொகுப்புரை:

சென்மகால ராசிச் சக்கரத்திலமைந்த லக்கினத்தில் சந்திரனும் புதனும் இருவரும் இருக்கப் பிறந்தவள், பூர்வ புண்ணியத்தால் பெற்றகல்வி வித்துவத்தன்மை மிகுந்தவளாக இருப்பாள் என்று சோதிடக் கலையை அறிந்த பெரியோர்கள் கூறுவார்கள்.

சென்ன கால லக்கினத்தில் புதனும் சுக்கிரனும் கூடி குறையில்லாது இருப்பார்களாயின், இவள் தன்னை மணந்த கணவன், என்னிடம் மிகவும் பிரியமுள்ளவள் என் மனைவி என்று புகழும்படியாக எல்லாவிதமான குடும்ப நலன்களையும் பெற்றவளாக விளங்குவாள்.

அருஞ்சொற்பொருள்:

உற்ற சென்மம் - சென்ன கால கணிப்பிலமைந்த சென்மலக்கினம், பண்டே - முற்பிறவியிலேயே, பகர்வர் - சொல்லுவார்கள், மகிழ்நன் - கணவன், சௌரியம் - அமைந்த நன்மைகள்.

தனலாபம் பெற்றவள்

உள்ளசுபர்கள்மூன்றுமனைஉற்றசென்மம்முதற்கொண்டு
மெள்ளஇருக்கத்தனலாபம்விரும்பும்சுகமும்அழகும்உள்ளாள்,
துள்ளும்பாவிஎட்டிலுறச்சூழ்ந்தேவிதவையாய்இருப்பாள்
கள்ளவிழியினைஅமுதவிஷம்கருதிநோக்கும்கண்ணாளே. 39

தொகுப்புரை:

கள்ளத்தன்மையுள்ள கண்விழிகளால் அமுதமெனும் காம விடத்தினைக் கருதிப் பார்க்கும் கண்களை உடைய பெண்ணே கேள் ! சென்ம லக்கின வீடு முதலாக மூன்று இராசியிடங்களில் தொடர்ந்தாற்போல் குறையில்லாத சுபகிரகங்கள் பொருந்தியிருந்தால், சாதகி தனலாபம் பெற்றவளாகவும் விரும்பிய சுகத்தை அடைபவளாகவும், அழகுடையவளாகவும் சிறந்து இருப்பாள்.

சென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் கொடிய பாவகிரகம் இருந்தால் விதவையாக வாழ்வாள்.

அருஞ்சொற்பொருள்:

மூன்று மனை - தொடர்ந்து மூன்று ராசியிடங்களில், மெள்ள - குறையில்லாமல், பாவி - சனி, ராகு, கேது.

சில பிள்ளைகளைப் பெறுவாள்

கண்ணாம்எட்டின்அதிபதியும்காணும்ஒருவன்அங்கிசத்தில்
நண்ணிஇருக்கஅவ்வீட்டோன்நயந்தேஎட்டில்இருந்ததனால்
எண்ணும்சுமங்கிலிமரணமென,இனிதாம்கன்னிதேள்இடபம்
ஒண்ணாம்சிங்கம்இதில்நல்மதியம்உற்றால்அற்பபத்திரளே. 40

தொகுப்புரை:

எட்டாமிடத்துக்குரிய கிரகம் வேறொரு ராசியில் இருக்க, அந்த ராசிக்கு உரிய கிரகம் எட்டாமிடத்தில் இருந்தால் பலகாலம் வாழ்ந்து சுமங்கலியாக இறப்பாள்.

கன்னி, விருச்சிகம், ரிஷபம், சிங்கம் இவைகளிலொன்றில் சந்திரன் இருந்தால் சாதகிக்கு சில பிள்ளைகளே உண்டாகும் என்று சொல்லுவார்கள்.

அருஞ்சொற்பொருள்:

கண்ணாம் எட்டில் - பெண்கள் சாதகத்தில் கண்போன்ற ராசியாகிய எட்டாமிடத்தில், தேள் - விருச்சிகராசி, ஒண்ணாம் - ஒற்றை ராசியாம், உற்றால் - இருந்தால், புத்திரர் - பிள்ளைகள்.

மங்கலம் நிறைந்த மனைவாழ்க்கை

சொல்லிய லக்கினத்தும் ஏழாமிடத்தும் பத்திடத்தும் சுபக்கோள்நிற்கில்
நல்ல சுப கிரகங்கள் நயம்பெறவே நோக்குறவே அமைந்த தானால்
வல்லமையாம் வாழ்வினொடு நாய்கனோடு உறும்பயனை நாளும்பெற்றே
கல்வியொடு மங்கலமாய்க் காசினியில் அருந்ததிபோல்வாழ்க்கைநன்றாம்.

தொகுப்புரை:

சொல்லுதற்கு அருமையுடையதான மேன்மையினை உடைய சென்ம லக்கினத்திலும், களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திலும், சீவன கர்ம யோக்யஸ்தானமாகிய பத்தாமிடத்திலும்,

சுபகிரகங்களாகிய குரு, சந்திரன், புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்களுள், ஒருவரோ இருவரோ குறையில்லாமல் சேர்ந்து நிற்கவும்.

அவர்களை சுபகிரகங்கள் நற்பலன் தரும் முழுப்பார்வையினால் பார்க்கவும், அமைந்த சாதகம் பெண்ணிற்கு அமைந்ததானால்,

நிலையான குடும்ப வாழ்க்கையோடு கணவனோடு இயைவதாகிய மேலான பலன்கள் அனைத்தினையும் வாழ்நாளில் பெற்றவளாக,

கல்வியறிவில் மேம்பட்டவளாகவும், நிறைந்த மங்கலப் பெண்ணாகவும் உலகில் அருந்ததியைப்போல் நலமான செல்வங்கள் அனைத்தினையும் பெற்றவளாகவும், நிறைந்த மனைவாழ்க்கை உடையவளாகவும் இருப்பாள் என்பதாம்.

அருஞ்சொற்பொருள்:

சுபக்கோள் - சுபராகிய கிரகங்கள், நாயகன் - கணவன், மங்கலமாய் - மங்கலம் நிறைந்த பெண்ணாக, காசினி - உலகம், நாளும் - வாழ்நாளளவும், நன்மை - நலமுடைய நிறைவான வாழ்க்கையாம்.

சாதக அலங்காரம்

நிறைவாம்

சரசுவதி மகால் நூலக அச்சகம்